D
N74
N74 57
6.1.69

V2,11,31 N74
31N74.57:1
61669

# Tamil Nadu Legislative Assembly Debates

ELEVENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

12*th*, 13*th*, 14*th*, 16*th* *and* 17*th* *August* 1974.

*VOLUME LVII* (Nos. 1 to 5)

TABLE OF CONTENTS.

*Monday,* 12*th* *August* 1974.



| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i—vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly .. .. .. .. .. | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies .. .. | ix—xvi |
| 1. Obituary reference— Thiru P. R. Srinivasa Padayachi, Thiru N. Renga Reddi, Thiru S. T. Subbiah Thiru K. Karuthappa Gounder .. .. | 1—2 |
| 2. Questions and Answers .. .. .. .. | 2—43 |
| 3. Announcements— The Tamil Nadu Cultivating Tenants (Right to purchase Owners' Rights) Bill, 1973 .. | 43—44 |
| 4. No-Cofindence Motion against the Ministry .. | 44—86 |
| 5. Papers laid on the Table .. .. .. | 86—102 |

*Tuesday,* 13*th* *August* 1974.

| | |
|---|---|
| 1. Questions and Answers .. .. .. | 117—153 |

வெளியீடு—29—11—1974]
Issued—29—11—1974]

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1974 ஆகஸ்ட் 12

Monday 12th August 1974

தொகுதி LVII—எண் 1

Volume LVII—No. 1

©
தமிழ் நாடு அரசு
1974
GOVERNMENT OF TAMIL NADU
1974

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

PAGES

*Tuesday* 13*th August* 1974—cont.

2. Announcements—
   (*a*) Business of the House .. .. .. 153
   (*b*) Panel of Chairmen .. .. .. 15.
3. Point of Order—
   Adjournment of House before 1-30 p.m. .. 154—170
4. Government Bills—
   The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Fifth Amendment) Bill, 1974 .. 170—171
5. No-Confidence Motion against the Ministry—*cont.* 171—257
6. Papers laid on the Table .. .. .. .. 257—258

*Wednesday*, 14*th August* 1974.

1. Questions and Answers .. .. .. 263—330
2. Government Bills—
   (*a*) The Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974. 303
   (*b*) The Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of term of office) Third Amendment Bill, 1974 .. .. .. .. 303
   (c) The Madurai City Municipal Corporation (Amendment and Extension of term of office) Second Amendment Bill, 1974 .. .. 304
3. First Supplementary Statement of Expenditure for the year 1974-75 .. .. .. .. 304—310
4. Point of Order—
   Request for statement by Chief Minister for dropping out Thirumathi Sathiavanimuthu from Cabinet .. .. .. .. .. 311
5. No Confidence Motion against the Ministry—*cont.* 311—402
6. Papers laid on the Table .. .. .. 403—404



*Friday*, 16*th August* 1974.

PAGES

1. Questions and Answers .. .. .. 409—443
2. Points of Order—
   (*a*) Postponement of discussion on 'Katcha Theevu' .. .. .. .. .. 443—444
   (*b*) Expunction of supplementary question .. 444—445
3. Personal Explanation—
   By Thiru P. Soundarapandian on Chief Minister's statement on 'Agricultural Income-tax' ... 445—447
4. Government Bills—
   (*a*) The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1974 .. .. .. 447—448
   (*b*) The Tamil Nadu Local Authorities' Laws (Amendment) Bill, 1974 .. .. .. 448
   (*c*) The Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1974 .. .. .. .. 448
   (*d*) The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 .. .. 449
   (*e*) The Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1974 .. 450
   (*f*) The Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1974 .. .. .. 450
   (*g*) The Tamil Nadu Motor Vehicles (Taxation) Amendment Bill, 1974 .. .. .. 451
5. Announcements—
   (*a*) The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 .. .. 449
   (*b*) The Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1974 .. 449
   (*c*) The Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1974 .. .. .. 450
   (*d*) The Tamil Nadu Motor Vehicles (Taxation) Amendment Bill, 1974 .. .. .. 451
   (*e*) Business of the House .. .. .. 509—510

PAGES

*Friday, 16th August* 1974—cont.


6. Government Resolution—
   Increase of Seats in the Assembly and the Lok Sabha .. .. .. .. .. 451—460
7. No Confidence Motion against the Ministry—*cont.* 460—518
8. Papers laid on the Table .. .. .. 518—519


*Saturday, 17th August* 1974.


1. Questions and Answers .. .. .. 531—575
2. Announcement—
   Business of the House ... ... ... 575—576
3. Point of Order—
   Need for Ministers replying relevant supplementaries .. .. .. .. 577—579
4. Government Bills—
   (*a*) The Tamil Nadu Industrial Development (Acquisition and Disposal of Land) Bill, 1974 ... ... ... ... 579—580
   (*b*) The Tamil Nadu Prohibition (Revival of Operation and Amendment Bill, 1974 ... 580
   (*c*) The Tamil Nadu Panchayats (Amendment and Validation) Bill, 1974 ... ... 580
5. No Confidence Motion against the Ministry—*cont.* 581—689
6. Papers laid on the Table .. .. .. 689—690


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

---

### தமிழ் நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

---

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், படச்சுருள் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ் நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி-விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu.*

THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister), in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health), in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes), in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works), in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Progamme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries), in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenues and Waqfs.

8. THE HON. THIRU SI. PA. ADITANAR (Minister for Agriculture), in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Animal Husbandry, Agro-Engineering Wing, Agro-Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Local Administration), in charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

11. THE HON. THIRU K. RAJARAM (Minister for Labour), in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI (Minister for Social Welfare), in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity), in-charge of Electricity, Legislation on Money lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

16. THE HON. THIRU N. RAJANGAM (Minister for Harijan Welfare), in-charge of Harijan Welfare, Indians Overseas and Refugees of Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்.

திரு. என். கணபதி, பி.எஸ்.ஸி., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. செ. கந்தப்பன்.
2. புலவர் சி. பழனிச்சாமி.
3. திரு. கே. பி. கந்தசாமி.
4. திரு. சி. வே. வேலப்பன்.
5. திரு. ஜே. ஜேம்ஸ்.
6. திரு. சோ. அழகர்சாமி.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

### எஸ்டேட் அதிகாரி.

திரு. பால. கு. கந்தசாமி.

6. மாண்புமிகு திரு. செ. மாதவன்: (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத் துறை, வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

8. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு, கூட்டமைப்புக்கள் உள்ளிட்ட மாநில. மாவட்ட வளர்ச்சி வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிமுறைக் கூட்டுறவுச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம்: (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள் அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிசை மாற்று வாரியம்.



12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அநாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் கண்காணிப்புப் பணிகள்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்கு துறை, பால்வள முனைப்புத் திட்டம், தமிழ் நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

16. மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், திரைப் படச் சட்டம்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்). | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 6 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியபுரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எ.. .. .. | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 18 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி. |
| 19 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 20 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம். |
| 21 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 22 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 23 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 24 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை |
| 25 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 இராசாராம், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | சேலம்-2. |
| 27 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ. வ.) |
| 28 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு |
| 29 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 31 இராமநாதன், திரு. சி. | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ வ.). |
| 35 இராமன், திரு. மு. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். (அமைச்சர்). | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. | பெரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. ஈ. உரோ. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, மாண்புமிகு திரு. என். (பேரவைத் துணைத் தலைவர்). | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. | நாங்குநேரி. |
| 44 கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு |
| 45 கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். | பேஸின் பிரிட்ஜ் |
| 48 கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம் |
| 51 கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 54 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்) | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணைநாதன், திரு. சோ. | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. ஆ. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 58 காசிராமன், திரு. நா. | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
| --- | --- |
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகுளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர் |
| 61 கார்த்திகேயன், திரு. வீ. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |
| 63 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி |
| 75 கோபால், திரு. எம். | குன்னத்தூர் (செ. வ.). |
| 76 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டினம் |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை |
| 80 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு |
| 81 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 82 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 84 சதாசிவம், திரு. செ. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை |
| 88 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, திருமதி | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. | இராமநாதபுரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 92 சம்பத், திரு. டி. வி. | செம்பனார்கோவில். |
| 93 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 94 சாரதி, திரு. மா பா. | வேலூர். |
| 95 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 96 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 97 சிவபெருமான், திரு. கோ. | அரியலூர். |
| 98 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 99 சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 100 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 101 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 102 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 103 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 104 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 105 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஓசூர் (செ. வ.) |
| 106 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 107 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 108 சுப்பிரமணியம், திரு. வ. | சிங்காநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 110 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 111 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 112 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 113 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 114 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 116 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 117 சுப்பையா, திரு. வ. ஆர். | கடயநல்லூர். |
| 118 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 119 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 120 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 121 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 122 ஜெயராமன், திரு. இ. | சேலம்-1. |
| 123 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர்.(செ. வ.) |
| 124 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
| --- | --- |
| 125 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 126 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 127 சோனையா, திரு. த. | மானாமதுரை. |
| 128 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 129 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 130 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணாயபுரம் (செ.வ.) |
| 131 டென்னிஸ், திரு. என். | இள்ளியூர். |
| 132 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை–மேற்கு. |
| 133 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 135 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 136 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி |
| 137 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 138 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 139 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 140 துரைசாமி திரு. ஏ. க. | குடியாத்தம். |
| 141 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 142 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 143 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 144 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 145 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 146 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 147 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 148 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 149 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 150 நரசிம்மன், திரு. ஏ. சி. | ஆரணி. |
| 151 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 152 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 153 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.) |
| 154 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டஞ்சத்திரம். |
| 155 நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி. | ஆத்தூர். |
| 156 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 157 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 220 ராஜாராம், திரு. ஜி. .. .. .. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 222 லத்தீப், திரு. எம். ஏ. .. .. .. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. ஏ. .. .. .. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. .. .. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். .. .. .. | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. .. | செங்கற்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. .. .. .. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. .. .. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. .. .. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. .. .. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. .. .. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. .. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. .. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர், எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
3 திரு. கோவிந்த சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

## திங்கட்கிழமை, 1974 ஆகஸ்ட் 12.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

**திருவாளர்கள் பி. ஆர். சீனிவாச படையாச்சி, என். ரெங்கா ரெட்டி, எஸ். டி. சுப்பையா கவுண்டர், கே. கருத்தப்ப கவுண்டர் ஆகியோரின் மறைவு குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்:-

1946-ம் ஆண்டு முதல் 1952-ம் ஆண்டு வரை திருக்கோயிலூர் தொகுதியிலிருந்தும், மற்றும் 1957 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை கடலூர் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராகவிருந்த திரு. பி. ஆர். சீனிவாச படையாச்சி அவர்கள் 13—6—1974 அன்று மறைந்ததைக் குறித்தும்;

1946 ஆம் ஆண்டு முதல் 1953 ஆம் ஆண்டு வரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ் நாடு சட்டமன்ற மேலவையில் உறுப்பினராகவும், மேலும், 1952 ஆம் ஆண்டு முதல் 1953 ஆம் ஆண்டுவரை பொதுப்பணித்துறை அமைச்சராகவும் இருந்த திரு. என். ரெங்கா ரெட்டி அவர்கள் 14—6—1974 அன்று மறைந்ததைக் குறித்தும்;

உடுமலைப்பேட்டை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. எஸ். டி. சுப்பையா கவுண்டர் அவர்கள் 18—6—1974 அன்று மறைந்ததைக் குறித்தும்;

ஒட்டன்சத்திரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. கே. கருத்தப்ப கவுண்டர் அவர்கள் 29—6—1974 அன்று மறைந்ததைக் குறித்தும்;

## திருவாளர்கள் பி. ஆர். சீனிவாச படையாச்சி, என். ரெங்கா செட்டி, எல். டி. சுப்பையா கவுண்டர், கே. கருத்தப்ப கவுண்டர் ஆகியோர் மறைவு குறித்து

[பேரவைத் தலைவர்] [1974 ஆகஸ்ட் 12

இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும்
அன்னாரகளை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் இப்பேர
வையின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில்
மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மௌனமாக
நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம்
மௌனமாக நின்றனர்).

## 2. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

### கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழி

*1 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்று
லாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

தமிழகக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழி ஆக்கும்
திட்டம் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்
களே, தற்போது புகுமுக வகுப்பிலிருந்து பட்டப் படிப்பு நிலை
வரை தமிழ் பயிற்சி மொழியாக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழைப் பயிற்சி
மொழியாக எடுத்துக் கொண்டு பயின்ற மாணவர்களுக்கு வேலை
வாய்ப்பில் முன்னுரிமை அளிப்பதோடு, அவர்கள் கல்வி பயிலும்
போது மானியத் தொகை வழங்கவும் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்
களே, கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு
புகுமுக வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு, அவர்கள் தமிழ்
நூல் வாங்கிக் கொள்வதற்காக ஒவ்வொருவருக்கும் ஐம்பது
ரூபாய் மானியமாகத் தரப்படுகின்றது. பட்டப் படிப்பு படிக்
கின்ற மூன்றாண்டு காலத்திற்கும் தமிழைப் பயிற்சி மொழியாக
எடுத்துப் படிக்கின்ற மாணவர்களுக்கு ரூ. 180 ஆண்டொன்றுக்கு
மானியமாக வழங்கப்படுகிறது. மற்றபடி, எந்தெந்தத் துறை



யிலே தமிழை ஆட்சிமொழியாக முதன்மையாக ஆக்கியிருக்
கிறோமோ அதிலே தமிழ் பயின்றவர்களுக்குச் சலுகை தரப்படு
கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தமிழைப் பயிற்சி மொழியாக
எடுத்துப் படிப்பதென்றால், அது மாணவர்களுடைய விருப்பத்
திற்கு விடப்பட்டிருக்கிறதா? அல்லது அரசாங்கம் கட்டாயப்
படுத்துகிறதா? கட்டாயப்படுத்துகிறதென்றால், எந்தெந்த அடிப்
படையில் கட்டாயப்படுத்துகிறது? ஏன் ஒரு சிலர் மாத்திரம்
கட்டாயப்படுத்தப்பட்டு, மற்றவர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி
கொடுக்கப்படுகிறது? இந்த வேற்றுமையை நீக்க அரசு என்ன
வழிவகை செய்ய உத்தேசித்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்
களே, அரசு எத்தகைய கட்டாயத்தையும் வற்புறுத்தவில்லை.
ஆங்கிலத்தில் பயிலுவதற்கான இடங்களும், தமிழில் பயிலுவதற்
கான இடங்களும் இருக்கின்றன. மாணவர்கள் எந்தப் பயிற்சி
மொழியிலே பயில விரும்புகிறார்களோ அதற்கு அவர்கள்
விண்ணப்பம் செய்யலாம். முதலில் ஆங்கிலத்தின் மூலம் பயிற்சி
பெற விண்ணப்பிக்கிறார்கள். அவ் இடங்களில் ஆள் நிரப்பப்
பட்டதற்குப் பிறகு, 'தமிழ்ப் பயிற்று மொழி வகுப்பில் இடம்
இருக்கிறது. அதில் சேருகிறீர்களா?' என்கிறபோது, தமிழ் மூலம்
பயிற்சி அளிக்கும் வகுப்பில் சேர விருப்பம் தெரிவித்துச்
சேருகிறார்கள். யாரும் கட்டாயப்படுத்தப்படுவதில்லை. ஆகவே, அதில்
இரு சாராரும் படிப்பதற்கு வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, இரண்டு வகையான
பயிற்சி மொழிகள் இருக்கின்ற காரணத்தால் தமிழ்ப் பயிற்சி
மொழித் திட்டம் வெற்றி பெறவில்லை என்பதை அமைச்சர்
அவர்கள் ஒத்துக்கொள்ளுகிறாரா? ஆங்கிலப் பயிற்சி மொழி
என்பது பணக்காரர் பயிற்சி மொழித் திட்டமாகவும், தமிழ்ப்
பயிற்சி மொழி என்பது வசதியற்றவர்கள் பயிற்சி மொழித் திட்ட
மாகவும் இருக்கும் நிலைமை இருக்கிறது. இதை மாற்றி,
கட்டாயமாக, தமிழ்தான் தமிழ்நாட்டில் பயிற்சி மொழியாக
இருக்கும் என்ற சட்டத்தை அரசாங்கம் இயற்றுவதற்கு முன்
வருமா?

THIRU K. S. KOTHANDARAMIAH: Though the States have been reorganised on a linguistic basis, no State has become unilingual. Each State contains people speaking different languages and majority people of the State also want English medium for their children. Therefore, will the Hon. Minister for Education consider the question of increasing English sections?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்போதே ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகள் இருந்து கொண்டிருக்கின்றன. கல்லூரிகளில் புகுமுக வகுப்புகளில் தமிழ் பயிற்சி மொழிக்கான இடங்கள் 23,578 ஒதுக்கப்பட்டிருக்கும் நிலையில், ஆங்கிலப் பயிற்சி மொழிக்கான இடங்கள் 65,636 ஆக இருந்து வருகின்றன. கணிசமான அளவு மிக உயர்ந்துதான் இருக்கிறது. ஆகவே, அதிலே ஒன்றும் இடர்ப்பாடுகள் இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** காகித விலை மிக அதிகமாக ஏறியிருப்பதால் நூல்களின் விலையும் உயர்ந்திருக்கின்றது. ஆகவே, புகுமுக வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு நூலுக்காக ஐம்பது ரூபாய் கொடுக்கும் மானியத் தொகையை அதிகரிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழ்ப் பாட நூல் வெளியீட்டு நிறுவனத்தின் மூலமாக வெளியிடப்படுகிற நூல்கள் அதிக விலை என்று சொல்ல முடியாது. அடக்க விலைக்குத்தான் விற்கப்படுகின்றன. மற்றவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்ததில் தமிழ்ப் பாட நூல் வெளியீட்டு நிறுவனத்தின் மூலம் வெளியிடப்படும் நூல்கள் ஓரளவுக்குக் குறைந்த விலையிலே இருந்துகொண்டு வருகின்றன. வேறு பல மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழில் 460-க்கு மேற்பட்ட கல்லூரிப் பாட நூல்களை நாம் வெளியிட்டிருக்கிறோம். வேறு பல மாநிலங்களில் அந்த அளவுக்கு வரவில்லை. புகுமுக வகுப்பிற்குச் சம்பளம் இல்லாத நிலையில், ஏற்கெனவே ஐம்பது ரூபாய் அளவுக்கு ஊக்குவிக்கும் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. அதை உயர்த்த வேண்டுமென்ற முறையீடு ஏதும் வரவில்லை. முறையீடு வந்தால் பிறகு பரிசீலிக்கலாம்.



**திரு. செ. கந்தப்பன்:** ஆங்கிலம் அல்லது தமிழ் பயிற்று மொழியை மேற்கொள்கிறவர்கள் அந்த மொழியின் மீது இருக்கும் பற்றினால் மேற்கொள்வதில்லை. எந்த மொழியின் வாயிலாகப் பயின்றால் வேலை வாய்ப்பு அதிகமாகக் கிடைக்கும் என்பதை உள்ளத்தில் கொண்டு பெரும்பாலும் பயிற்று மொழி என்பதைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அதை மையமாகக் கொண்டு தமிழகத் தேர்வு ஆணைக் குழுவில் முழுவதும் தமிழிலேயே தேர்வு நடத்தவும், மைய தேர்வு ஆணைக் குழுவில் இந்திக்கு அதிக வாய்ப்பு இருந்தாலும் தமிழிலும் தேர்வு எழுத வாய்ப்புப் பெறும் முயற்சியிலும் அரசு ஈடுபடுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. இப்போதே அந்த முறை ஓரளவு இருக்கிறது என்று கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்லுகிறேன்.

## கல்லூரிகளில் உருது பாடப் பிரிவுகள்

*** 2 வினா.—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறுபான்மையோர் மொழியான 'உருது' எந்தெந்தக் கல்லூரிகளில் போதிக்கப்படுகிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சிறுபான்மையோர் மொழியான 'உருது' 13 கல்லூரிகளில் போதிக்கப்பட வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

## *College text books in Telugu and Malayalam.*

*** 3. Q.—THIRU K. S. KOTHANDARAMIAH:** Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(a) whether there is a proposal to publish college text books in Telugu, Malayalam, etc., languages for the use of Linguistic Minority students of this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அரசாங்கக் கல்லூரிகளில் புகுமுக வகுப்புகளில் தமிழையே பயிற்று மொழியாக்க வேண்டும் என்ற திட்டத்தை நாம் மேற்கொண்டபோது, தனியார்க் கல்லூரிகளில் ஆங்கிலப் பயிற்சி மொழிக்கு இடம் இருக்கிறது, அத்தகைய சூழ்நிலையை எல்லா அரசாங்கக் கல்லூரிகளிலும் கொண்டுவர வேண்டும் என்று, தமிழை மட்டும் நாம் 1970–71-ம் ஆண்டில் ஏற்படுத்திய நேரத்தில் மாணவர்கள் பெரும் கிளர்ச்சி செய்தார்கள். அரசாங்கக் கல்லூரிகள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் தமிழ் மூலம் மட்டுமே கல்வி பயில வாய்ப்பு இருக்கிறது, ஆங்கிலத்தின் மூலம் கல்வி பயில தனி இடம் இல்லாத குறைபாடு இருக்கிறது, என்று பல இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன என்பதைச் சொல்லி மாணவர்கள் பெரும் கிளர்ச்சி செய்ததன் காரணமாக, டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களைத் தலைவராகக் கொண்டு, கிறித்துவக் கல்லூரியினுடைய முதல்வர் திரு. சந்திரன் தேவநேசன் அவர்களையும், திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் இதற்கு ஒரு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். ஒவ்வொரு கல்லூரியிலும் குறைந்தது ஒரு பிரிவாவது ஆங்கிலப் பயிற்சி மொழிக்கு இருக்க வேண்டும். மீதிப் பிரிவுகள் தமிழில் இருக்கலாம் என்று அவர்கள் யோசனை கூறியதற்குப் பிறகுதான், ஆங்கிலப் பயிற்சி மொழிக்கு ஒரு பிரிவும், மற்ற பிரிவுகள் தமிழின் மூலம் பயிற்சி அளிக்கவும் அரசாங்கக் கல்லூரிகளில் இருந்து வருகின்றன. 1967–68-ம் ஆண்டில் புகுமுக வகுப்பில் 6,400 இடங்கள் தமிழ்ப் பயிற்சி மொழிக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. 1973-74-ம் ஆண்டில் 23,578 இடங்கள் தமிழ்ப் பயிற்சி மொழிக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்களுடைய உணர்வையும் பெற்றோர்களுடைய உணர்வையும் மற்றவைகளையும் அனுசரித்துச் செய்ய வேண்டியிருப்பதால் மெல்ல மெல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**புலவர் சி. பழனிச்சாமி:** தலைவர் அவர்களே, கல்லூரிகளில் வரலாறு, பொருளாதாரம் போன்ற பிற பாடங்கள் தமிழில் எடுத்துப் படிக்க ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுகிறது. ஆனால், தமிழ் இலக்கியத்தைப் பாடமாக எடுத்துப் படிக்கிறவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படவில்லை. அவர்களுக்கும் ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுமா?





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருந்துகொண்டு தமிழ் இலக்கியம் படிக்க ஊக்குவிப்புத் தொகை வேண்டுமென்று கேட்கிறார்கள் என்றால், அது அவ்வளவு நல்லதல்ல. ஆங்கிலத்தில் இதுவரை படித்துக் கொண்டிருந்த சில பாடங்களைத் தமிழில் எடுத்துப் படிப்பதற்கு ஊக்குவிப்புத் தொகை தரப்படுகிறது. ஆனால், தமிழகத்தில தமிழ் இலக்கியங்களைப் படிப்பதற்கு ஊக்குவிப்புத் தொகை தருவதென்பது முறையாகாது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தமிழில் பாட புத்தகங்களெல்லாம் சரியான முறையில் கிடைக்காத காரணத்தினால், தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்து பாடங்களைக் கற்பதற்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அதுவன்றி, இப்பொழுது கொடுக்கப்படுகிற 50 ரூபாய் உபகாரச் சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது. அதையும் கூட்டுவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பட்டப் படிப்பு வரையிலும் கலை, அறிவியல் பாட புத்தகங்களை நாம் அதிகமாக வெளியிட்டுக் கொண்டு வருகிறோம். மேலும் மேலும் வெளியிட்டுக்கொண்டு வருகிறோம். மேல் பட்டப் படிப்புக்கான பாடப் புத்தகங்களை வெளியிடும் முயற்சியும் தமிழ்நாடு பாட நூல் வெளியீட்டு நிறுவனம் மேற்கொண்டிருக்கிறது. புகுமுக வகுப்பு படிக்கிறவர்களுக்கு சம்பளம் கிடையாது. அவ்வகுப்புகளில் படிக்கிறவர்கள் புத்தகங்கள் வாங்கிக் கொள்வதற்காக ஊக்குவிப்புத் தொகையாக ஐம்பது ரூபாய் வீதம் தருகிறோம். பட்டப் படிப்பில் படிக்கிறவர்களுக்கு நாம் முழுச் சம்பளமும் தருகிறோம். ஆண்டொன்றுக்கு ரூ. 180 தருகிறோம்.

**திரு. கோ. இளங்கோவன்:** தலைவர் அவர்களே, வரலாறு, பொருளாதாரம் போன்ற பாடங்களை பட்ட மேல் படிப்பில் தமிழில் பயிலுவதற்கான வழிவகைகளை அரசு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது வரலாறு, பொருளாதாரம் போன்ற பாடங்களைத் தமிழில் சொல்லிக் கொடுக்க ஏற்பாடுகள் ஆங்காங்கே செய்யப்பட்டிருக்கின்றன. வணிகப் பாடங்களையும் தமிழில் சொல்லிக் கொடுக்க முயற்சி நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். கிட்டப்பா :** தேசியமொழி வளர்ச்சிக்கென்று மத்திய அரசு ஏராளமான நிதி ஒதுக்கி பெரும் பகுதியும் இந்தி மொழி வளர்ச்சிக்குத்தான் செலவு செய்து வருகிறது. உருது போன்ற இலக்கிய வளம் மிக்க சிறுபான்மையோர் மொழிக்கு மத்திய அரசு உதவித் தொகையைப் பெற அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சிறுபான்மையோர் மொழிக்கென்று உதவித் தொகைகள் தருவதில்லை. ஆனால், இப்போது தெலுங்கு மொழியிலும், மலையாள மொழியிலும், கன்னட மொழியிலும் பாடப் புத்தகங்களை வெளியிடும் பொறுப்பை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே மேற்கொண்டிருக்கின்றன.

Telugu Selections of Prose and Poetry,

Kannada Selections of Prose and Poetry,

Hindi Selections of Prose and Poetry.

என்ற இப்படிப்பட்ட புத்தகங்களை சென்னைப் பல்கலைக் கழகம் தயாரிக்கிறது. பி.ஏ., பி.எஸ்ஸி. பட்டப் படிப்புக்கான புத்தகங்களைப் பல்கலைக் கழகம் தயாரிக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை நாம் கன்னட மொழியிலும், தெலுங்கு மொழியிலும் சிலபல புத்தகங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know whether there is a separate Committee to study and prepare text-books for Minority Languages in Colleges?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதற்கென்று தனிக் கமிட்டி இல்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** நாடு சுதந்திரம் அடைந்த பிறகு உருது மொழி பேசுகின்ற சிறுபான்மை மக்கள் தங்களுடைய தாய் மொழியிலேயே கல்வி பெறும் வசதியைச் சிறுகச் சிறுகத் தமிழ்நாட்டில் இழந்து வருகிறார்கள் என்ற குறை இருந்து வருகிறது. அதை அரசு ஆராயுமா ? தமிழாசிரியர்களில் முதல்





தரம், இரண்டாம் தரம் என்று இருப்பது போல் உருது ஆசிரியர்கள் முதல் தரத்திற்கு உயர முடியவில்லை என்ற குறை இருக்கிறது. அதுகுறித்தும் அரசு என்ன செய்ய இருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆசிரியர்கள் குறையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. விரைவில் முடிவு எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். எந்தெந்தக் கல்லூரிகளில் உருது மொழியில் பயிலுவதற்குப் போதுமான மாணவர்கள் வரும் சூழ்நிலை இருக்கிறதோ அங்கு அதற்கான வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் 13 கல்லூரிகளில் உருது மொழி பயிற்றுவிக்கும் வாய்ப்புக்கள் இருந்து வருகின்றன.

THIRU B. VENKATASWAMY : Sir, in the Telugu Text-books, there are lot of mistakes. May I request the Government to appoint an Expert Committee so as to study and correct all such mistakes and print them in a proper manner?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போது வெளியிடுவதற்கான முயற்சிகளை எந்த அளவுக்குக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதற்கென்று தனிக் கமிட்டி தேவையா என்பதும் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. அவசியப்படுமானால் அரசாங்கம் அதுபற்றிப் பரிசீலிக்கும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, Urdu is being taught in 13 colleges. What is the objection of the Government to have Hindi in Colleges?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சிறுபான்மையோர் மொழியாக இருக்கும் காரணத்தால் உருதுக்கு இடம் அளித்திருப்பது போல் இந்தியில் பயிலும் சிறுபான்மையோருக்கும் வாய்ப்புக்கள் தந்திருக்கிறோம். சென்னையைப் பொறுத்தவரை இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவை. சிறுபான்மையோர் தங்கள் தாய் மொழியிலேயே பயில வேண்டுமென்ற நிலைமை ஏற்படுமானால் அவற்றுக்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

[1974 ஆகஸ்ட் 12

**திரு. எம். ஏ. லத்தீப் :** இப்போது மாநிலம் முழுவதும் உருது மொழி 13 கல்லூரிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். பதின்மூன்று கல்லூரிகளிலே மட்டும் எந்த அடிப்படையில் உருது மொழிக்கான இந்த ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது? ஏன் மற்றக் கல்லூரிகளிலே இதற்கான ஏற்பாடு செய்யப்படவில்லை? இப்போது உருது பயிலுகின்ற பயிற்சி ஆசிரியர்களுக்கான பள்ளிகள் மூடப்பட்டு விட்டன. அவற்றைத் திறக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எந்தக் கல்லூரியிலும் போதுமான அளவுக்கு மாணவர்கள் இருந்தால் உருது மொழி பயிலுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த அரசாங்கம் ஆயத்தமாக இருக்கிறது. அந்த வகையில் தற்போது 13 கல்லூரி களில் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மசூருல்உலூம் கல்லூரி, ஆம்பூரில் பி.யு.சி.-யில் 48 பேர் இருக்கிறார்கள்; டிகிரி முதலாண்டில் 4 பேர்தான் இருக்கிறார்கள்; டிகிரி இரண்டாம் ஆண்டில் 12 பேர் இருக்கிறார்கள்.

சி. அப்துல் அகீம் கல்லூரி, மேல்விஷாரத்தில் பி.யு.சி.-யில் 28 பேர் இருக்கிறார்கள்; பி.எஸ்ஸி. முதலாண்டில் 6 பேர்தான் இருக்கிறார்கள்; இரண்டாம் ஆண்டில் 2 பேர்தான் இருக்கிறார்கள். பி.ஏ. முதலாண்டில் ஒரே ஒரு மாணவர்தான் இருக்கிறார்; இரண்டாம் ஆண்டிலும் ஒரே ஒரு மாணவர்தான் இருக்கிறார். பி.காம்.-ல் 2 மாணவர்கள் இருக்கிறார்கள். அப்படி இருந்தும் அங்கெல்லாம் உருது மொழி பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. சில இடங்களில் போதுமான அளவுக்கு மாணவர்கள் இல்லாத காரணத்தால் வாய்ப்பு ஏற்படுத்தப்படவில்லை.

இஸ்லாமியா கல்லூரி, வாணியம்பாடியில் போதுமான அளவுக்கு மாணவர்கள் இருக்கிறார்கள். பி.யு.சி.-யில் 64 மாணவர்கள் இருக்கிறார்கள்; டிகிரியில் 44 பேர்.

தி நியூ கல்லூரியில் பி.யு.சி.-யில் 62 பேர்; டிகிரியில் 100 பேர் இருக்கிறார்கள்.

அரசினர் கல்லூரி, நந்தனத்தில் பி.யு.சி.-யில் 3 மாணவர்கள்; டிகிரியில் ஒரே ஒரு மாணவர்தான்.



1974 ஆகஸ்ட் 12]

உருது மொழிப் பயிற்சி ஆசிரியர்களைப் பொறுத்தவரை போதுமான அளவுக்கு இருக்கிறார்கள். அப்படிப் போதுமான அளவுக்கு இல்லை என்ற நிலைமை ஏற்பட்டால் எப்போது வேண்டு மானாலும் உருது மொழி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் துவக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது என்று மேலவையிலே பேசும் போது குறிப்பிட்டிருக்கிறேன். எப்போது வேண்டுமானாலும் அதனைத் துவக்கிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

**திரு. பெ. சீனிவாசன் :** இந்தி மொழியைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மைனாரிடி மொழி அந்தஸ்து தரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நம் மேல் ஆதிக்கம் செலுத்தக்கூடிய மொழியான இந்திக்கு மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளுக்குத் தரப்படக்கூடிய அந்தஸ்தைத் தரக் கூடாது என்ற கொள்கையை இந்த அரசாங்கம் வைத்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை மொழிக் கொள்கை 1968-ம் ஆண்டே தீர்மானிக்கப்பட்டபடி தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகள்தான் ஆட்சி மொழிகளாக இருக்கும். மற்றைய மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இருந்தால் சிறுபான்மையோர் என்ற முறையில் அவர்கள் மொழியைப் பயில வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும். குஜாராத் மொழிக்கான பள்ளிக்கூடம் தனியாக இருக்கிறது. வங்க மொழிக்காக இரண்டு பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அதே அடிப்படையில்தான் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு சிறுபான்மை யோர் என்ற முறையில் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த அரசின் கொள்கையில் முரண்பாடு எதுவும் இல்லை.

**திரு. கே. எ. வகாப் :** இந்தியை மெஜாரிடி மொழி என்று ஒப்புக்கொண்டு மத்திய அரசு அந்த மொழியை ஆட்சி மொழியாக வற்புறுத்தி வருகிறது. உருது மொழி மைனாரிடி மொழியாக இருக்கிறது. இந்திக்கு அளிக்கப்படுவது போன்று உருது மொழிக்கும் ஊக்குவிப்புத் தொகை அளிக்க அரசாங்கம் முன்வருமா? உருது மொழியில் பாடப் புத்தகங்களை வெளியிட அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறதா? இல்லையென்றால் அதிலுள்ள சிரமங்கள் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது அகில இந்திய அடிப்படையில், கொள்கை அடிப்படையில் நிர்ணயித்த ஒன்று. இதிலே கட்சிக்குக் கட்சி மாறுபாடான கருத்துக்கள் அவரவர்களுக்கென்று இருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். உருது மொழி பாட நூல்களை வெளியிட வசதி, வாய்ப்புகள் செய்யப்பட்டு வருகின்றன. அரசாங்கப் பாட நூல் நிறுவனம் அப்படிப்பட்ட நூல்களை தனியார் ஒருவரைக் கொண்டு வெளியிட்டு வருகின்றது. ஒருசில உருது நூல்களே தேவையாக இருக்கும் காரணத்தால் அவருக்கே வெளியிடும் உரிமையைத் தொடர்ந்து அளித்து வருகிறார்கள். உருது மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அந்த மொழியிலேயே பயில வேண்டுமென்று விரும்பினால் அதற்கு வாய்ப்பு, வசதிகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன.

### *Anti-mosquito operations in Madras City.*

* 4. *Q.*—THIRU N. K. PALANISWAMY :
THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state the steps taken by the Government to eradicate mosquito nuisance in the City of Madras?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஒரு விவர அறிக்கை @ அவையின்கண் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** சர்க்கார் பல நடவடிக்கைகள் எடுத்தும் இந்தக் கொசுத் தொல்லை போகாமல் இருப்பதற்குக் காரணம் சர்க்கார் இந்தக் கொசுவை ஒழிக்க உபயோகிக்கக் கூடிய மருந்துகள் எபெக்டிவாக இல்லையா அல்லது கொசு, மருந்தைவிட மோர் எபெக்டிவாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இது மாநகராட்சி மன்றம் மூலம் மத்திய அரசின் உதவியோடு நடத்துகிற ஒரு பணியாகும். மாநகராட்சி மன்றம் சரியான திட்டம் வகுத்து செயல்படுத்துகிறது

@ 103-105-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



என்றாலும் கொசு ஒழிப்புப் பணிக்கு பயன்படுத்துகிற மருந்தை தொடர்ந்து பயன்படுத்தும்போது அந்தக் கொசுக்களும், கொசுப் புழுக்களும் அதிக சக்தி வாய்ந்தவையாக மாறி விடுகின்றன. அப்படி மாறிவிடுவதன் காரணமாக இந்த மருந்துகளால் மட்டும் அவைகளை அழிக்க முடிவதில்லை என்ற கருத்தை இதுபற்றிய ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள். வேறு மாற்று யோசனைகள் பற்றி இப்போது அகில இந்திய அளவில் ஆராய்ச்சி நடத்துகிறவர்கள் வேறுவிதமான முறைகள் பற்றி அறிவித்திருக்கிறார்கள்.

THIRU N. DENNIS : Sir, to minimise mosquito nuisance may I know whether covered drainage system will be provided in all the places in the city?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சென்னை நகரில் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏற்கனவே உள்ள கழிவு நீர் கால்வாய்த் திட்டங்களை செம்மைப்படுத்துவதோடு, அவை திருத்தியமைக்கப் படவேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அதை விரிவுபடுத்த வேண்டும் என்று மாநகராட்சி மன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டு அவர்களும் அதை விரிவுபடுத்துவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த முறையில் கொசு உற்பத்தியாவதற்குக் காரணமாக இருக்கின்ற கால்வாய்களை விரைவாகத் தூய்மைப்படுத்துகிற வழி ஏற்படும்.

மற்றொன்று, பக்கிங்காம் கால்வாய் மூலம் கொசு உற்பத்தியாகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. வருகிற ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பக்கிங்காம் கால்வாயை சுத்தப்படுத்துகிற ஒரு விரிவான திட்டத்தை மேற்கொள்வதற்கு தமிழக அரசு அதற்காக திட்டமிட்டு மத்திய அரசின் ஒப்புதலை எதிர்பார்த்து இருக்கிறது.

**திரு. வை. பாலசுந்தரம் :** இந்தக் கொசுக்களை ஒழிப்பதற்காக சில தனியார்கள் தயாரிக்கிற மருந்துகள் இதற்கு சரிவர பயன்படவில்லை, அவை கொசுக்களை ஒழிப்பதற்குப் பதிலாக அவற்றை வளர்க்கவே பயன்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, நம்முடைய அரசிலிருந்தே கொசுக்களை ஒழிப்பதற்கான மருந்தைத் தயாரிக்கிற ஒரு நிலையை உருவாக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இதற்கான மருந்துப் பொருள் மத்திய அரசு சொல்கிற நிலையத்திலிருந்துதான் வரவழைக்கப்படுகிறது. இடையில் ஆந்திராவில் ரெயில்வே ஸ்ட்ரைக் இருந்தகாலத்தில் மட்டும் பம்பாய் பகுதியில் இருந்து வர முடியவில்லை என்று தெரிவித்து வெளியில் வாங்கியதுபோல் ஒரு கருத்து இருக்கிறது. மத்திய அரசு சொல்கிற திட்டப்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Is the Government aware of the fact that there is a canal called 'Malaria Canal' running from Vidhyodhaya School to Adayar through Saidapet? There was a proposal to revet it with cement in 1962. Upto now, nothing has been done. Is there any proposal to revet the canal with cement in order to have free flow of water and to avoid stagnation of water?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாநகராட்சிமன்றம் எந்தெந்த சாக்கடைகளை எப்படி எப்படிச் சரிப்படுத்துவது என்று அவர்கள் தீர்மானித்தால்தான் அதைச் செயல்படுத்த முடியும். அரசு மேற்பார்வையில் உள்ளவை கூவம் திட்டமும், பக்கிங்காம் கால்வாய் திட்டமும்தான். பக்கிங்காம் கால்வாய்த் திட்டத்தை எடுத்துக்கொள்வதுபற்றி அரசு ஆலோசனை நடத்தி அந்தத் திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் மற்ற வாய்க்கால்கள் பற்றி மாநகராட்சி மன்றம்தான் தீர்மானிக்க வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கூவத்தைச் சுத்தப்படுத்துவதற்கு முன்னால் கொசுவை ஒழிக்கவேண்டும் என்று நிபுணர்கள் சொன்னார்கள். அதைக் கேட்காமல் இந்த அரசு கூவத்தைச் சுத்தப்படுத்தத் தொடங்கி கொசுக்களை ஊருக்குள் அனுப்பிவிட்டார்கள். எனவே இந்தக் கொசுக்களின் உற்பத்தியைக் குறைக்க ஏதாவது குடும்பக் கட்டுப்பாடு முறை பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அண்மையில் டப்ள்யூ.எச்.ஓ. மூலம் நடைபெற்ற ஆராய்ச்சியில் இருந்து கொசுக்களை ஒழிப்பதற்கு மருந்துகளைத் தயாரித்து அந்தக் கொசுக்களை ஒழிப்பது என்பது முழு அளவு வெற்றி பெறவில்லை என்று தெரிய வருகிறது. மாறாக ஒரு வட்டாரத்திலிருந்து இன்னொரு





வட்டாரத்திற்கு அவை பரவி திரும்பத் திரும்ப கொடிய நோய்களை உண்டாக்கும் கொசு வகைகள் அதிகமாகிவிடுகின்றன என்பது அறியப்பட்டு கொசுக்களில் ஆண் கொசுக்களை அந்த ஆராய்ச்சி நிறுவனம் வளர்த்து, அந்த ஆண் கொசுக்களை ஏராளமாகப் பெருக்கி அவைகளின் இயல்பான சக்தியில் ஒரு மாற்றத்தைச் செய்து அவைகளை மற்ற பெண் கொசுக்களோடு சேர விடுவதன் மூலம் பெண் கொசுக்கள் முட்டை இடுவதை நிறுத்த ஒரு பெரிய ஆராய்ச்சி நடந்து வருகிறது. இதுபற்றி பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. கொசு உற்பத்தியைக் குறைக்கும் வகையில் ஆண் கொசுக்களின் தன்மையை மாற்றி புது ரக ஆண் கொசுக்களை உற்பத்தி செய்து மில்லியன் கணக்கில் ஒவ்வொரு வட்டாரத்திலும் மற்ற கொசுக்களோடு கலக்கவிடுவதன் மூலம் பெண் கொசுக்களின் ஆற்றல் அழிந்துவிடும் என்ற முறையில் திட்டமிட்டிருக்கிறார்கள். எனவே ஆண் கொசு, பெண் கொசு, ஆராய்ச்சி நிறுவனம் இவை மூன்றும் முடிவு செய்ய வேண்டியது.

### பள்ளிக் குழந்தைகள் மருத்துவ ஆய்வுத் திட்டம்

* 5 வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் Stanley Hospital -ஐச் சுற்றியுள்ள பகுதிகளில் ஒரு School Health Programme 1970-ல் எடுத்துக் கொள்ளப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதனுடைய ரிப்போர்ட் அரசுக்கு வந்து விட்டதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (ஆ) மன்றத்தின் முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

### *Stanley Hospital, Madras.*

* 6. Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal under the consideration of Government to set up additional operation theatres in the Stanley Hospital?

---

@ 105-ம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 ஆகஸ்ட் 12

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

* 7. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal under the consideration of the Government to set up any hand injury treatment unit at the Stanley Medical Hospital in Madras?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கைக்காய சிகிச்சைப் பிரிவு ஒன்று ஏற்கெனவே, சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் நடைமுறையில் செயல்பட்டு வருகிறது.

**திரு. என். டென்னிஸ் :** வேறு இடங்களுக்கும் இது விஸ்தரிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இது ப்ளாடிஸ் சர்ஜரியோடு தொடர்புடையது. ப்ளாஸ்டிக் அன்ட் ரீ-கன்ஸ்ட்ரெக்டீவ் சர்ஜரி-யில், அதில் பயிற்சி பெற்ற ஒருவர்—ஸ்டான்லி மருத்துவ மனையில் உள்ள நிபுணர்—ஒவ்வொரு நாளும் ஐந்து முதல் எட்டு பேர்கள் வரை கையில் விபத்து ஏற்பட்டவர்கள் வருகிறார்கள் என்பதால் அவர்களுக்காக தனிப் பகுதி ஒன்று வைக்க வேண்டும் என்ற கருத்தை அரசுக்குத் தெரிவித்த காரணத்தால் அதற்காக தனியாக இருபது படுக்கைகள் கொண்ட ஒரு பகுதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. சென்னை போன்ற பெரிய நகரங்களில் அப்படி தனிப் பிரிவு ஏற்படுத்தும்போது அது பயன் உடையதாக இருக்க முடியும். அது சென்னையில் இப்போது இருக்கிறது.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** தொழிற்கூடங்கள் நிரம்ப உள்ள கோவையில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு ஊனம் ஏற்படுகிற நிலை அதிகமாக இருப்பதால் கோவை மருத்துவக் கல்லூரியில் இப்படிப்பட்ட ப்ளாஸ்டிக் சர்ஜரி யூனிட் ஒன்றை விரைவில் தொடங்குவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அதற்கான நிபுணரும் தேவை. ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்கிற ஒரு பகுதி இருக்குமானால் அவர்கள் இந்தக் கடமையையும் சேர்த்துச் செய்கிறார்கள். அதிகப்படி எண்ணிக்கையில் கை விபத்துக்கள் ஏற்பட்டவர்கள் வருகிறார்கள் என்றால், அதிக அளவில் கை ஒடிந்தவர்கள் வருகிறார்கள் என்றால் தனிப் பிரிவு ஏற்படுத்தப்படுகிறது. ஆனால்



1974 ஆகஸ்ட் 12]

கை விபத்துக்கள் யாருக்கு ஏற்பட்டாலும் பிற பகுதிகளில், அறுவை சிகிச்சைப் பகுதி, சர்ஜரி பகுதி, ஆர்த்தோபீடிக் பகுதி ஆகிய எந்தப் பகுதியிலும் தகுந்த சிகிச்சை வழங்கப்படுகிறது.

### சின்னாளப்பட்டியில் பின்தங்கிய வகுப்பு மாணவர் விடுதி

* 8. வினா.—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் வட்டம், சின்னாளப்பட்டியில் பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் இல்லம் கட்டப்படுவதற்கென நிலம் ஏதேனும் நன்கொடையாக பெறப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், கட்டடம் எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் :** சின்னாளப்பட்டியில் பிற்பட்ட மாணவர்கள் இல்லம் கட்ட நிலம் வேண்டும் என்று அரசாங்கம் கேட்டார்கள். முப்பது சென்ட் நிலம் வேண்டுமென்று கேட்டார்கள். முப்பது சென்ட் நிலம் சின்னாளப்பட்டி தேவாங்கர் உயர்நிலைப் பள்ளியிலிருந்து இலவசமாகக் கொடுத்தார்கள். ஆனால் அந்த இடம் போதவில்லை. கட்டடம் கட்டும் வேலையை நிறுத்தி விட்டதாகத் தெரிகிறது. மீண்டும் 90 சென்ட் நிலம் வேண்டும் என்று கேட்கப்பட்டு 90 சென்ட் நிலத்தை விடுவது என்று தேவாங்கர் உயர்நிலைப் பள்ளியிலிருந்து ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான அந்த இல்லம் கட்டுவதற்கு ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அந்த நிலத்தை நன்கொடையாகத் தருகிறேன் என்று இயக்குநரிடம் ஒரு வாரத்திற்கு முன்னால் சொல்லியிருக்கிறார்கள். அதை நாங்கள் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இருந்தால் அதன்படி செய்வோம்.

## Electrification of railway lines

*9. Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state.

(a) whether this Government have received any communication from the Centre on the scheme of electrification of railway lines in this State; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) & (இ) மத்திய அரசிடமிருந்து நேரடியாகத் தகவலேதும் வரவில்லை. எனினும், மின்சார ரயில் விடும் திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னை—கும்மிடிப்பூண்டி—கூடூர், சென்னை—திருவள்ளூர் இரயில் பாதைகளை மின்சார இரயில் பாதைகளாக மாற்றும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதென்று தென் பிராந்திய இரயில்வே துறையினர் தெரிவித்துள்ளனர். மின்சார இரயில் விடுவதற்கு தோராயமாக நிச்சயிக்கப்பட்ட கால அளவு 1977 டிசம்பர் திங்களாகும்.

[முற்பகல் 10.30]

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவரவர்களே, மத்திய சர்க்கார் அந்த இரண்டு திட்டங்களையும் கைவிட்டு விட்டதாக சொல்லப்படுகிறது. அந்தப் பணிகளை நம்முடைய சர்க்கார் மூலமாக, குறிப்பாக இந்த சென்னை—திருவள்ளூர் பாதையை மின் இணைப்பு செய்வதற்கு மத்திய அரசை வற்புறுத்துவதற்கு நம் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் பத்திரிக்கையில் வந்த செய்தியைச் சொல்கிறார்கள். நானும் அதைப் பத்திரிக்கையில் படித்தேன். இன்னும் அரசுக்கு அது குறித்து எந்தவிதமான தகவலும் வரவில்லை. இப்போது அரசிடத்தில் இருக்கும் தகவலைத்தான் தந்தேன். அப்படியிருக்குமானால், மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

**திரு. ஆ. பாந்தாமன்:** தலைவரவர்களே, சென்னை-அரக்கோணம் மின்சார ரயில் திட்டம் 1973-74-லேயே விரைவுபடுத்துவதாக மத்திய அரசு கூறி வந்தது. இப்போது இருக்கும் சூழ்நிலையில் அது தாமதப்படுத்தப்படுவதாகத் தெரிகிறது. அதை விரைவு படுத்த நம்முடைய அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, மத்திய அரசை விரைவுபடுத்தச் சொல்லி நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. எஸ். குமாரசாமி:** தலைவரவர்களே, நமக்கு மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், இப்படிப்பட்ட மின்சார ரயில் விடுவதைத் தவிர்த்து, டீசல் இன்ஜின் அல்லது நீராவி இன்ஜின் மூலம் அப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதற்கு தமிழக அரசு மத்திய அரசுக்கு ஆலோசனை கூறுமா? எதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்கு ஆலோசனை கூறுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, மின்சார ரயில் விடுவதற்கு ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு மின்சார உற்பத்தியைக் கணக்கில் எடுத்துக் கொண்டு தான் ஒப்புதல் அளித்து இருக்கிறோம்.

## கிழக்குக் கடற்கரைச் சாலை

*10 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிழக்குக் கடற்கரைச் சாலையில் புதிய பாலங்கள் எங்கெங்கு கட்டப்படவிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** விவர அறிக்கை @ பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, விவர அறிக்கையில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் 40 இடங்களில் பாலங்கள் கட்டப்படவிருக்கின்றன என்ற விவரம் இருக்கிறது. சென்னையிலிருந்து தஞ்சை மாவட்டத்திற்குச் செல்கிற வழியில் சிதம்பரத்திற்கு அருகில் வெள்ளாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்ற வேண்டுகோளை ஏற்று, அது கட்டப்பட விருப்பதாகவும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 75 லட்சம் இந்த கிழக்குக் கடற்கரைச் சாலை மதிப்பீட்டில் சேர்த்து இருப்பதாகவும் செய்தி வந்தது. ஆனால் இப்போதுள்ள நிலையில் அது சேர்க்கப்படவில்லை என்பதை நினைவுபடுத்தி, அதற்கு

@ 106-116-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.

இனிமேலாகிலும் நிதி ஒதுக்கி, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அந்தப் பாலத்தைப் பற்றி தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்து பதில் அளிக்கலாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலைக்கான பணிகள் துவக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அது எப்போது முடிவுறும், இப்போது எந்த அளவுக்கு வேலைகள் முடிந்து இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, பாதை அமைப்பு முறை இன்னும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. பாலங்கள் சில கட்டப்படுவதற்குத்தான் மத்திய அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. அதைத்தான் நாம் இப்போது செய்து கொண்டிருக்கிறோம். பாதை அமைப்பு முறை—அதாவது அலைன்மெண்ட் ஆப் தி ரோட்—இன்னும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. மத்திய அரசிடம் அதை நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

## தாராட்சி கிராமத்திற்கருகே பாலம்

*** 11 வினா.—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், தாராட்சி கிராமத்தருகில் பொதுப் பணித் துறைக் கால்வாயின் மேல் அமையும் சிறு பாலத்தைக் கட்டி முடிப்பதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** திருவள்ளூர் வட்டம் தாராட்சி கிராமத்தில் சுரட்டப்பள்ளி வரவு கால்வாயின் குறுக்கே ஒரு நடைப்பாலம் கட்ட ரூ. 27,700-க்கு பொதுப் பணித் துறை அரசு ஆணை எண். 3736, நாள் 15—12—73-ல் ஒப்புதல் அளிக்கப் பட்டு இவ்வேலைக்கான ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்கொண்டு வேலையைத் துவக்குவதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.





**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கி பல மாதங்கள் ஆகிவிட்டன. மழை காலம் நெருங்கிக் கொண்டிருக்கிற காரணத்தால், ஒரு பக்கத்திலுள்ள மக்கள் மறு பக்கத்திற்குப் போவதற்கு உதவிகரமாக இருக்கும் வகையில், அந்தப் பாலத்தை இந்த ஆண்டே கட்டி முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இந்த ஆண்டு வேலைகள் துவங்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தமும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தக்காரர்களிடம் வேலையும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

## சேலம் உருக்காலைத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு.

*** 12 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் உருக்காலைத் திட்டத்தின் கீழ் தற்போது எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சேலம் உருக்காலையை அமைக்கும் கம்பெனியான "சேலம் ஸ்டீல் லிமிடெட்" என்னும் நிறுவனத்தில் தற்போது 100 பேர் வேலையில் அமர்த்தப் பட்டுள்ளார்கள் என்றும், "ஹிந்துஸ்தான் ஸ்டீல் ஒர்க்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் லிமிடெட்" என்னும் நிறுவனத்தின் கீழ் சுமார் 6,592 பேர் வேலை செய்வதாகத் தகவல் வந்துள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, சேலம் உருக்காலைத் திட்டம் எப்போது வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. முடிகின்ற நேரத்தில் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்க வாய்ப்பிருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வருங்காலத்தில் முதல் பகுதியாக (பேஸ்-ஒன்) 1,561 பேர்களுக்கு வேலை கிடைக்கலாம் என்று தகவல் தந்து இருக்கிறார்கள். முடிப்பது மத்திய அரசின் கையில் இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இதிலும் வேலைக்கு அமர்த்துவதில் 80 சதவிகிதம் அந்த பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாக, இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஆகஸ்ட் 12

உள்ளவர்களுக்குத்தான் வேலை கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறதா? அப்படியானால், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதிலும் வேலைவாய்ப்பு கொடுப்பது என்பது மத்திய அரசின் கையில் இருக்கிறது. நான் இந்த மன்றத்தில் ஏற்கனவே எடுத்துக்காட்டியது போல், மற்ற மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளில், பிற மாநிலங்களில் பின்பற்றி வரும் கொள்கைப்படி, நம்முடைய அரசின் அலுவலர் ஒருவரை அவர்கள் ஏற்றுக்கொண்டு, வேலைவாய்ப்புப் பணிகளைத் தமிழ் நாட்டைச் சேர்ந்த மக்களுக்கு, அந்தந்தப் பகுதியில் வாழும் மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி வருகிறோம்.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவரவர்களே, அமைச்சர் பதிலில் இருந்து சில 'கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனிகள்' தான் ஆட்களை வைத்து இருப்பதாகத் தெரிகிறது. அந்தத் தொழிற்சாலையில் நேரடியாக வேலைக்கு இருக்கும் ஆட்களைப் பற்றிய தகவல் இல்லை. ஆகவே, அந்தத் தொழிற்சாலையில் நேரடியாக எவ்வளவு பேர்களை வேலைக்கு வைத்து இருக்கிறார்கள், இந்தக் கன்ஸ்ட்ராக்ஷன் கம்பெனிகள் எவ்வளவு பேர்களை வேலைக்கு வைத்து இருக்கிறார்கள், அமைச்சர் சொல்லும் கணக்கு எல்லாவற்றிற்கும் சேர்த்தா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏற்கனவே, 100 என்று சொன்னேன்.

**கிராமப் பகுதிகளில் மருத்துவத் தொழில் நடத்த கடன்கள்**

*13 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் டாக்டர்கள் தனியாகத் தொழில் நடத்தக் கடன் உதவி அளிக்கப்படுகிறதா?

**(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?**



1974 ஆகஸ்ட் 12]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.**

(இ) கிராமப் பகுதிகளில் மருத்துவத் தொழில் நடத்த தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் டாக்டர்களுக்குக் கடன் வழங்குகிறது. கடனுதவிக்குக் குறைந்த பட்ச அளவு ரூ. 10,000, உயர்ந்த பட்ச அளவு ரூ. 1,00,000 ஆண்டு ஒன்றுக்கு 7½ சதவிகிதம் வட்டிக்கு மதிப்பிடப்பட்டுள்ள தொகையில் 90 சதவிகிதம் வழங்கப் படுகிறது. இக்கடன் எட்டு ஆண்டுத் தவணைகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். முதல் இரண்டு ஆண்டுகளுக்குக் கடன் தவணைத் தொகைச் செலுத்தப்பட வேண்டியதில்லை.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இந்தக் கடன் வழங்கும் திட்டத்தின் மூலம் நகர்ப்புறங்களில் உள்ளவர்கள் அத்தகைய கடன்களைப் பெற்று ஹாஸ்பிடல் கட்டுகிறார்கள். இப்படிப்பட்ட வசதியைக் கொண்டு கிராமப்புறங்களில் ஹாஸ்பிடல் கட்டுவதற்கு அரசாங்கம் விதியைத் தளர்த்தி ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தக் கடன் திட்டமே கிராமங்களுக்குத்தான். நகரங்களுக்கு இல்லவே இல்லை. முனிசிபல் எல்லையில் கூட கூடாது என்று முடிவு கட்டியிருக்கிறோம். கிராமப்புறங்களில் கட்டுவதற்குத்தான் கடன் கொடுக்கப் படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, மாண்புமிகு. . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, the previous question is impotant and we have been raising our hands.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று 30 கேள்விகள் இருக்கின்றன. அதிலே . . . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The Question Hosur should be informative. The Chair can allow one more supplementary and then pass on to the next question.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 14 கேள்விகள் தான் ஆகியிருக்கின்றன. இன்னும் 16 கேள்விகள் இருக்கின்றன. வினா எண் 14, திரு. பி. வெங்கடசாமி

*Distribution of cement in Saidapet taluk.*

*14 Q.—THIRU B. VENKATASAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government are aware of the hardships of the residents of Saidapet taluk in getting cement permit for house building purposes since the Government have not specified the permit issuing authority; and

(b) if so, the action proposed to be taken in this regard?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள சைதாப்பேட்டை தாலுக்காவில் உள்ளவர்களிடமிருந்து தொழிற்சாலை வேலைகளுக்கில்லாமல் மற்ற வேலைகளுக்குச் சிமிண்ட் கேட்டு வரும் எல்லா மனுக்களையும் இதுவரை செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர்/தலைவர் பரிசீலனை செய்து வந்தனர். சைதாப்பேட்டை தாலுக்காவிலுள்ள மக்களுக்கு ஏற்பட்ட சிரமத்தினை உத்தேசித்து இந்த தாலுக்காவிற்குச் சிமெண்ட் விநியோகிக்கும் வேலை சென்னை தொழில் வணிக இயக்குனருக்கு/தனித் தொழில் வணிக இயக்குனருக்கும் தற்சமயம் மாற்றப்பட்டுள்ளது.

THIRU B. VENKATASAMY : Sir, may I know from the Hon. Minister whether the cement is supplied now liberally to the people there?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நம்முடைய சிமெண்ட் உற்பத்தி பெருக்கம் அடைந்து இருக்கிறது. தமிழ் நாட்டில் நம்முடைய தேவையைப் போல் இரண்டு மடங்கு உற்பத்தி செய்கிறோம். உற்பத்தி செய்யும் அதிகாரம் நம் கையில் இருக்கிறது. மத்திய அரசாங்கம் எவ்வளவு நமக்குத் தருகிறதோ, அதைத்தான் நாம் கொடுக்க வேண்டும். அதை இப்போது நாம் கொடுத்து வருகிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இது போதாது. இதை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு சொல்லப்பட்டதா, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நேரடியாகவும், கடிதம் மூலமும் சொல்லியிருக்கிறோம். சம்பந்தப்பட்ட அமைச்சரோ அதற்கு மேல் கொடுக்க இயலாது என்று கடிதம் எழுதியிருக்கிறார்.

**திரு. முனு ஆதி:** தலைவரவர்களே, சைதை வட்டத்தில் பல மனுக்கள் ஆண்டுக்கணக்கில் நின்று கொண்டிருக்கின்றன. அமைச்சர் சொல்கிறார்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதாக. நான் வேண்டுமானால் பட்டியல் எடுத்துக் கொண்டு வந்து காட்டத் தயாராக இருக்கிறேன். பல பேர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சிலர் மட்டும் பெறுகிறார்கள். அதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். சைதாப்பேட்டையில் மனுக்கள் இப்படி காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம், அதைத் தடுக்க இதுவரையில் எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மொத்தமாகவே சிமெண்ட் பற்றாக்குறை இருப்பதை ஒப்புக்கொண்டு பதில் சொன்னேன். சைதாப்பேட்டையில் உள்ளவர்கள் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சென்று வாங்குவது சிரமமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, புறநகர் பகுதி என்ற முறையில் தொழில் துறை மூலமாகக் கொடுக்கலாம் என்று முடிவு எடுத்து இருக்கிறோம். பற்றாக்குறை இருப்பது உண்மை. எங்காவது தவறு நடந்து இருக்குமானால், சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

*வெள்ள நிவாரண நிதித் திட்டத்தின் கீழ் வேலைகள்*

*15 வினா—**திரு. எஸ். கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாங்கர்பாடி—மங்கநல்லூர், நல்லாடை—செம்பனார் கோவில் இரண்டு சாலைகளையும் செப்பனிட வெள்ள நிவாரணப் பணியிலிருந்து ( Flood Damage works ) தனி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) தரங்கம்பாடி—மங்கநல்லூர், நல்லாடை—செம்பனூர் கோவில் இரண்டு சாலைகளையும் செப்பனிடுவதற்கு வெள்ள நிவாரண நிதியிலிருந்து தேவையான ஒதுக்கீடு செய்து ஒப்புறுதி அளிக்கப் பட்டுள்ளது. முதற்கண், இந்தச் சாலைகளைச் செப்பனிட ரூ. 3,35,400 பெறுமானத்திற்கு ஒன்பது (9) எஸ்டிமேட்டுகள் வெள்ள நிவாரண கோட்ட தனிப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் கேட்கப்பட்டது. எனினும் பின்னர் மேற்கண்ட சாலைகளைச் செப்பனிட ரூ. 3,50,000 பெறுமானத்திற்கு பதிமூன்று எஸ்டிமேட்டுகளாக திருத்தப்பட்டு தஞ்சை மாவட்ட ஆட்சியர் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளார். இந்தத் திருத்தப்பட்ட தொகைக்குட்பட்டு செலவை கட்டுப்படுத்தி வேலையை முடித்திட நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

* 16 **வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 17—12—73 ஆம் தேதியன்று மழையினால் பாதிக்கப் பட்ட திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் அருகேயுள்ள அண்ணா நகர் மற்றும் அம்பேத்கார் நகர் மக்களுக்கு நிவாரண மளிக்கக் கோரி 18—12—1973-ல் முக்கூடல் நகரப் பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து மனு ஏதேனும் பெறப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) முக்கூடல் நகரப் பஞ்சாயத்துத் தலைவரின் மனுவின் கோரிக்கைப்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 58 பேர்களுக்கு, தலா ரூ. 80 வீதம் ரூ. 4,640 நிவாரணமாக வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மற்ற 7 பேர்கள் வாடகை வீட்டில் வசிப்பவர்கள். ஆதலால் நபருக்கு ரூ. 20 வீதம் 7 பேர்களுக்கு ரூ. 140 உடை உதவி மட்டும் வழங்கப்பட்டது.





*Financial resources of Local Bodies*

*17 Q.—THIRU K. M. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Government have accepted the recommendation of the High Power Committee to improve the financial resources of the Corporation of Madras?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இதுபற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

* 18 **வினா.—திரு. வை. பாலசுந்தரம்,**
திரு. சௌந்தரபாண்டியன் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகரசபைகளின் வருவாயைப் பெருக்க யோசனை கூற குழு ஏதேனும் நியமிக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஆம்.

THIRU K. M. SUBRAMANIAM : Since the report has been published two years back and many works are being stopped because of want of finances, when is this Government going to complete its examination of the report and act according to the recommendations of this report or otherwise so that the work of the Corporation will not suffer as it suffers today?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குழு தன்னுடைய அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறது. அந்தப் பரிவுரைகளின்படி இப்பொழுது பலவற்றிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சிலவற்றிற்கு அந்தக் குழு தன்னுடைய முழுக் கருத்தையும் தெரிவிக்காத காரணத்தினால், தாமதமாக இருக்கிறது. விரைவில் இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வை. பாலசுந்தரம் :** பெரிய நகரசபைகள் சொத்து வரியைத் தான் மிகுதியாகப் போட்டு அதன் காரணமாக சொத்து உள்ளவர்களைப் பாதிக்கின்ற அளவுக்கு செய்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, சொத்து வரியை அதிகமாக வசூலிக்காமல் மற்ற வகைகளிலே பொது மக்களிடமிருந்து பெரிய

**திரு. முனு ஆதி :** அண்மையில் சில சினிமா காட்சிகளின் மூலம் என்டர்டெயின்மெண்டு டாக்ஸ் வருவாய் பெற முடியாமல் சில பேர்கள் சினிமா காட்சிகளை நிறுத்த வேண்டும் என்று தகராறு செய்கிறார்கள். அதனால் பல ஊர்களில் சினிமா காட்சிகள் நடக்காமல் என்டர்டெயின்மெண்டு டாக்ஸ் வருமானம் உள்ளாட்சிக்கு வரமுடியாமல் போய்விடுகிறது. இந்தக் குழு அது குறித்து பரிசீலனை செய்து, அதற்குரிய நடவடிக்கை எடுப்பது பற்றி ஏதாவது யோசனை செய்கிறதா ? அதுமாதிரி வன்முறையைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு முன்வா தைரியம் உண்டா ?

[redacted]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தைரியம் இருக்கிறது. கேளிக்கை வரி வசூலிக்கும் பணிகள், இதரப் பணிகள் குறித்து, நகராட்சிகளுக்கு யோசனை சொல்ல இந்தக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. வேறு சில வகைகளிலே அவைகள் பாதிக்கப்படுமானால், அதுபற்றி தெரிவித்தாலும், அதைப்பற்றி பரிசீலனை செய்வதற்குத் தயாராக இருக்கிறது.

## சேலத்தில் உணவுப் பொருள்களுக்கான அரசு அங்காடிகள்

*19 வினா—**திரு. கி. செயராமன் :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரத்தில் உணவுப் பொருள்கள் விநியோகிக்க (Government stores) தற்போது எத்தனை துவக்கப்பட்டுள்ளன ?

(இ) அதனை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :**

(அ) சேலம் நகரில் செவ்வாய்ப்பேட்டையில் ஒரு கடையும், அம்மாப்பேட்டையில் ஒரு கடையும் தாதகாப்பட்டியில் ஒரு கடையும் ஆக மூன்று கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

(இ) இல்லை.



**திரு. தி. பொன்னுமலை :** நகர்ப்புறங்களில் மட்டும்தான் அரிசி விநியோகிக்கப்படுகிறது. கிராமப்புறங்களில் எந்தவிதமான விநியோகமும் இல்லை. ஆகவே, கிராமப்புறத்து மக்கள் அவதிப் படுகிறார்கள். கூட்டுறவு சொஸைடிகளின் மூலம் அவர்களுக்கு அரிசி விநியோகம் பண்ண ஏற்பாடு செய்யமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** சேலத்தைப் பொறுத்த வரையில் தனியார்கள் கடைகள் இடையாது. எல்லாம் கூட்டுறவுத் துறை, பஞ்சாயத்துகள், சிவில் சப்ளை துறை ஆகியவை மூலம் தான் தரப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகள் இப்பொழுது செய்துகொண்டிருக்கிறார்கள்.

## *Mini Super Market at Chingleput*

* 20 Q.—THIRU G. R. EDMUND :
THIRU P. SOUNDRAPANDIAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether a number of officials of the Mini-Super Market at Chingleput have been held by the Police during January 1974;

(b) if so, the details thereof; and

(c) the matter as it stands now?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) ஆம். (இ) செங்கற்பட்டு மாவட்ட கூட்டுறவு வழங்கல் விற்பனைச் சங்கத்தைச் சேர்ந்த செங்கற்பட்டு கிளையின் எழுத்தரான திரு. டி. வி. வைத்தியலிங்கம் இச்சங்கம் செங்கற்பட்டில் நடத்தி வரும் சிறிய சிறப்பங்காடியில் எழுத்தராகப் பணியாற்றும் திரு. எஸ். புருஷோத்தமன் ஆகியோர் காவலரால் கைது செய்யப் பட்டு செங்கற்பட்டு சப்-மாஜிஸ்டிரேட் முன்னிலையில் காவலில் வைக்கப்படுவதற்காக அனுப்பப்பட்டனர்.

(உ) குற்றவியல் வழக்கு ஒன்று காவலரால் பதிவு செய்யப் பட்டுள்ளது. மேற்கொண்டும் புலனாய்வு நடைபெற்று வருகிறது.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** இந்தக் கையாடல் ஊழல் எவ்வளவு நாட்களுக்கு முன்னால் கண்டுபிடிக்கப்பட்டது? அது சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்கு போடப்பட்டுள்ளதா? அந்த நிலையில் உள்ளது?

[திரு. வை. பாலசுந்தரம்] [1974 ஆகஸ்ட் 12

நகரசபைகள் வரியை வசூலிக்கப் போடப்பட்டிருக்கிற இந்தக் குழு சர்க்காருக்கு ஏதாவது தெரிவித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இந்தக் குழு சென்னை மாநகராட்சியைத் தவிர மற்ற எல்லா நகராட்சிகளினுடைய நிதி வருவாய்த் துறை, செலவினங்கள், மற்ற இனங்களைக் குறைத்து வருவாயை அதிகரிப்பது அவற்றைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து தங்களுடைய அறிக்கையைத் தரவேண்டும் என்று இந்தக் குழுவிற்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இதுவரையில் அவர்கள் சிலவற்றிற்கான புள்ளிவிவரங்களைத் தராத காரணத்தினால், முழு விவரங்களையும் இப்பொழுது கொடுக்க முடியாமல் இருக்கிறது. அந்தக் குழுவின் அறிக்கை வந்ததற்குப் பிறகு முழு விவரங்களும் சொல்ல முடியும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இந்தக் குழு கொடுத்துள்ள அறிக்கையில் நகரசபைகளின் வருவாயைப் பெருக்க முக்கியமாக என்னென்ன ஆலோசனைகளை வழங்கியிருக்கிறது என்கிற விவரத்தை அறியலாமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இந்தக் குழு இன்னும் அரசாங்கத்திற்கு அதனுடைய அறிக்கையை அனுப்பவில்லை. அவர்களுக்கு யோசனைகள் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படி வருவாயைப் பெருக்குவது, வரியைக் குறைத்து வருவாயைப் பெருக்குவதற்கான வாய்ப்புகளை ஆராய்ந்து கூற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முழு அறிக்கையும் வந்த பிறகு விவரங்கள் சொல்ல முடியும்.

**திரு. மா. வே. நாராயணசாமி:** நகராட்சிகளின் வருவாயைப் பெருக்க வேண்டும் என்று அதற்கான பரிந்துரைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள குழு விரைவாக அந்தப் பணியை முடித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அரசு துரிதப்படுத்துமா? மேலும் நகராட்சிப் பணிகள் விரைவாக நடைபெறுவதற்கும், வருவாயைப் பெருக்குவதற்கும் எல்லா வகையிலும் நல்ல ஆலோசனைகள் வழங்க ஒரு தனிக் குழு அமைக்க அரசு முன்வருமா?



1974 ஆகஸ்ட் 12]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இப்பொழுது சம்பந்தப்பட்டவர்களை இணைத்துத்தான் இந்தக் குழு அமைக்கப் பட்டிருக்கிறது. அந்தக் குழு இறுதியாக தன்னுடைய கருத்துக்களைச் சமர்ப்பித்ததும், அவைகள் பரிசீலிக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன்:** அமைச்சர் அவர்கள் பதிலில் 1971-ல் அந்தக் குழு சில ஆலோசனைகளைக் கூறியதாகச் சொன்னார்கள். இப்பொழுது 1974 ஆம் ஆண்டு நடக்கிறது. இன்னும் அது ஆலோசனை நிலையில் தான் இருக்கிறது. அந்தக் குழு எப்பொழுது அமைக்கப்பட்டது, குழு எப்பொழுது முடிவாக ரிப்போர்ட்டுத் தரவேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது, எப்பொழுது அதனுடைய பணிகள் முடிவடையும் என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** மாநகராட்சி சம்பந்தமாகத் தான் இந்தக் குழு அமைக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட்டேன். நகராட்சிகளைப் பொறுத்தவரையில் 10—9—1973 ஆம் தேதியிட்ட 1872 ஆம் எண்ணுள்ள அரசாணையில் "நகராட்சி நிதி விசாரணைக் குழு" அமைக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டு இந்தக் குழு அமைக்கப்பட்டது.

**திரு. சோ. அழகர்சாமி:** இந்தக் குழுவில் இருக்கக் கூடியவர்கள் எத்தனை பேர், யார், யார், நகராட்சித் தலைவர்கள் யாராவது உண்டா? இருந்தால், அவர்கள் பெயர்களை அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இந்தக் குழுவில் நிதித் துறைச் செயலாளர் தலைவர், ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறைச் செயலாளர் அல்லது நிதித் துறை இணைச் செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை நெடுஞ்சாலைகள்—கிராமப் பணிகள் துறைத் தலைமைப் பொறியாளர், சென்னை, சுகாதாரப் பணிகள்—குடும்ப நலத் துறைக் கூட்டு இயக்குநர், சென்னை, உள்ளாட்சி நிதிக் கணக்குகள் ஆய்வாளர், தமிழ் நாடு குடிநீர் வழங்கல்—வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர், ஆகியோர் உறுப்பினர்கள். ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறைத் துணைச் செயலாளர் உறுப்பினர்—செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார். தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு அந்தக் குழுவிற்கு சில ஆய்வு வரம்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

[1974 ஆகஸ்ட் 12

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** 29—1—1974 அன்று கண்டுபிடிக்கப்பட்டது. மூவர் அந்தக் காரியத்தில் ஈடுபட்டுள்ளார்கள். செங்கற்பட்டு மாவட்டக் கூட்டுறவு வழங்கல்-விற்பனைச் சங்கத்தின் செங்கற்பட்டு கிளையில் எழுத்தராகப் பணிபுரியும். டி. வி. வைத்தியலிங்கம், இச்சங்கத்தின் சிறுப சிறப்பங்காடியில் எழுத்தராகப் பணி புரியும் புருஷோத்தமன், இந்தச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் எழுத்தராகப் பணிபுரியும் டி. வி. ராஜேந்திரன் ஆகிய மூவரும் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இவர்கள் எதற்காக கைது செய்யப்பட்டார்கள்? எவ்வளவு ரூபாய் கையாடல் செய்யப்பட்டது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** 1500 மீட்டர் காடா, 720 மீட்டர் சட்டைத்துணி ஆகியவைகளை கடத்தல் செய்வதற்காக சாதாரண மக்களுக்கு விநியோகம் செய்யாமல் சில வியாபாரிகளிடம் கொடுப்பதற்கு அவர்கள் காரில் கொண்டு போகும்பொழுது அந்தத் துணிகளைக் கைப்பற்றி அவர்களிடமிருந்து ரூ. 4,651 ரொக்கமும் பறிமுதல் செய்யப்பட்டது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இந்தக் கடத்தலுக்கு வேலை செய்கின்ற சிப்பந்திகள் மாத்திரம்தான் காரணமா? அதற்கு மேல் இருக்கக்கூடியவர்கள் பெரியவர்கள், ஏதாவது கமிட்டியிருந்தால் அந்தக் கமிட்டியின் பொறுப்பாளர்கள் இதில் ஈடுபட்டதாக புலனாய்வுத் துறையில் கண்டுபிடிக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இதைக் கண்டு பிடிப்பதற்கு மிகவும் உதவியாக இருந்தவர் மேலே இருந்த இந்தச் சங்கத்தின் வைஸ்-பிரசிடெண்ட்தான்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அமைச்சர் அவர்கள் பதில் கூறும் பொழுது ஜனவரி மாதத்தில் இந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொன்னார். சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் சொன்னார். வழக்கு பதிவு செய்யப்பட்டு ஏறத்தாழ 7 மாதங்கள் ஆகிவிட்டன அதன் பேரில் இன்வெஸ்டிகேஷன்,



1974 ஆகஸ்ட் 12]

விசாரணை நடத்தி குற்றப் பத்திரிகை ஏதாவது தாக்கல் செய்யப் பட்டிருக்கிறதா? வழக்கு நடந்துகொண்டிருக்கிறதா? இல்லையெனில் இதில் தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** டிபார்ட்மெண்டல் ஆக்ஷன் என்ற முறையில் மூன்று சிப்பந்திகள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். டிரைவர், வாங்கிச் சென்ற வியாபாரி, அந்தக் கார் 7773 நம்பர் உள்ளது. எல்லாவற்றையும் வழக்கில் சேர்த்து இப்பொழுது போலீஸ் இன்ஸ்வெஸ்டிகேஷன் நடந்துக் கொண்டிருக்கிறது.

### *State Housing Board*

* 21 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is a fact that an Expert Committee has been set up to streamline the accounting system of the State Housing Board; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் திறம்பட செயல் படுவதற்கான வழிமுறைகளைத் தெரிவிக்க கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது:—

1. திரு. வி. சுப்ரமணியன்—தலைவர்.
   ஓய்வுபெற்ற மாநிலக் கணக்காய்வுத் தலைவர்.
2. திரு. கே. எஸ். கணபதி—உறுப்பினர்.
   அடக்கச் செலவு கணக்காய்வாளர் நிர்வாக அமைப்பு-நடைமுறைப் பிரிவு.
3. திரு. எம். பாலசுப்ரமணியம்—உறுப்பினர்
   உள்ளாட்சி நிதிக் கணக்குத் துணை தணிக்கையாளர்.
4. தலைமை கணக்கு அலுவலர்—உறுப்பினர்.
   வீட்டு வசதி வாரியம் செயலாளர்.
5. திரு. ஜெயராமன்—உறுப்பினர்.
   தலைமைப் பொறியாளர் வீட்டு வசதி வாரியம்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இந்த வல்லுநர் குழு அமைக்கப்
பட்டப் பிறகு அவர்களால் ஆராயப்பட்டு, ஊழல், மோசடி
போன்றவை எவ்வளவு கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, ஊழல்
மோசடி எதுவும் இல்லை. வாடகை வசூல் செய்வதில்தான் கால
தாமதம் ஏற்படுகிறது. பாதைகள் போடுவதிலும் சிரமங்கள்
ஏற்படுகின்றன. இவைகளை தவிர்ப்பதற்காக எப்படி வேகமாகச்
செயல்படலாம் என்பதில் கவனம் செலுத்துவதற்காக இந்த குழு
அமைக்கப்பட்டிருக்கிறது. அது தவிர ஊழல், மோசடி இருட
பதாக எனக்குத் தகவல் இல்லை.

**திரு. கே. ஆர். கிருஷ்ணன் :** தலைவரவர்களே, சிமெண்ட் பற்றுக்
குறை இருப்பதினால் வீட்டுவசதி வாரியத்தில் கட்டப்படும்
வீடுகள் சுண்ணும்புக் கல்லினால் கட்டப்படுகிறது என்று சொல்லப்
படுகிறது. அப்படியானால் ஏராளமாகத் தேவைப்படுகிற
சுண்ணும்பு எங்கிருந்து வாங்கப்படுகிறது என்பதைத் தெரிவி
பார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, தமிழ்நாடு
பூராவும் சுண்ணும்பு கிடைக்கிறது. ஆகவே, தேவைப்படுகின்ற
அளவுக்கு ஆங்காங்கே இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

### *Industrial Health and Hygiene Unit*

* 22 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the
Minister for Labour be pleased to state—

(a) whether it is a fact that the Government propose to
set up an Industrial Health and Hygiene Unit for workers; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(இ) மாநிலத் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில்,
மருத்துவ அதிகாரி ஒருவர், இரசாயன வல்லுநர் ஒருவர், ஆய்வுக்
கூட ஆய்வாளர் இருவர் ஆகியோருடன் தொழிற்சாலைச் சுகா
தாரம்-துப்புரவுப் பிரிவு மற்றும் ஆய்வுக்கூடம் ஆகியவை இணைந்த
ஓர் அமைப்பை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.
தொழில் முறையில் ஈடுபடும் தொழிலாளர்களைப் பாதிக்கக் கூடிய



ஆபத்துக்களைக் கண்டறிந்து ஆய்வு செய்வதற்காகவும் தொழி
லாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்கான தடுப்பு மற்றும் பாது
காப்பு நடவடிக்கைகள் பற்றிக் கருத்து தெரிவிக்கவும் இப்பிரிவு
ஏற்படுத்தப்படுகிறது. ஆய்வுக்கூடத்திற்குத் தேவையான
முக்கிய வகையைச் சேர்ந்த கருவிகளை வெளி நாட்டிலிருந்து
வாங்குவதற்கான அனுமதியைப் பெற இவ்வரசு புதுடில்லி,
இந்திய அரசின் தொழில் நுட்ப மேம்பாட்டுத் தலைமை இயக்கு
நருடன் கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறது. மருத்துவ
ஆய்வாளர் பதவிக்குப் பொருத்தமான ஒரு நபரை நியமிப்பது
குறித்து அரசு பரிசிலித்து வருகிறது.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், தொழிலாளர்களுக்கு
ஏற்படக் கூடிய லெட் பாய்சன், டி.பி. போன்ற நோய்கள்
அவர்களை அணுகாமல் இருப்பதற்கு ஏதாவது வகை செய்யப்
பட்டிருக்கிறதா ? அப்படியானால் அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, சுகாதாரம்,
துப்புரவுப் பணிகளைச் செயல்படுத்துவது பற்றி ஆராயவும்.
ஆங்காங்கு தொழிலாளர்களுக்கு விபத்துக்கள் ஏற்படாமல்
தடுப்பது பற்றி ஆராய்ச்சிச் செய்வதற்கும் தற்போது ஏற்பாடு
செய்யப்பட்டிருக்கிறது. மருத்துவ அதிகாரி ஒருவரை இக்
குழுவில் நியமிக்க ஏற்பாடு நடைபெற்று வருகிறது. சில இயந்
திரங்கள் வெளிநாட்டிலிருந்து வாங்குவதற்குக் காரியங்கள்
செய்யப்பட்டிருக்கின்றன. மற்றுள்ள விபரங்களுக்குத் தனிக்
கேள்வி போடவும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இந்தக் குழுவானது
தற்காலிகமாக சிபாரிசுகளை மட்டும் வழங்க போடப்பட்டிருக்
கிறதா அல்லது நிரந்தரமானதா ? இந்தக் குழுவுக்கு தன்னிச்
சையாக தன்னுடைய கருத்துக்களை அமுல்படுத்துவதற்கான
அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இது நிரந்தரமாகப் பணி
செய்யும் குழுதான். தகுந்த அதிகாரமும் வழங்கப்பட்டிருக்
கிறது.

**திரு. பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, இது நிரந்தரமாக இருக்கக்கூடிய ஒரு குழுவாக இருப்பதால், அதற்கு ஏற்படக் கூடிய நிர்வாகச் செலவுகளுக்கு தொழில் ஸ்தாபனங்கள் பங்கு தரவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அப்படிப் பட்ட கருத்து எதுவும் இல்லை.

*Extraction of fish oil*

* 23 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) whether industries are functioning in (i) Private and (ii) Public Sector for extracting fish oil in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தமிழ்நாட்டில் மீன் எண்ணெய் எடுப்பதற்கான தனியார் தொழிற்சாலைகள் எதுவும் செயல்பட்டு வரவில்லை. கடலூர், அதிராமபட்டினம், அம்மாபட்டினம், பாம்பன், தூத்துக்குடி, புன்னக்காயல், பெரிய தாழை போன்ற இடங்களில் பொதுத் துறையில் அரசுத் துறை யைச் சேர்ந்த சுறா மீன் எண்ணெய் ஆலைகள் சில உள்ளன. இந்த இடங்களில் சுறாமீன்களின் ஈரலிலிருந்து சுறா மீன் எண்ணெய் (பக்குவப்படுத்தாதது) எடுக்கப்படுகிறது. வைட்டமின் ஏ, டி, செறிந்த பக்குவப்படுத்தாத சுறாமீன் எண்ணெய் கள்ளிக் கோட்டையிலுள்ள, கேரளா சோப்பு, எண்ணெய் நிறுவனத்திற்கு விற்கப்படுகிறது.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, மருத்துவ உபயோகம் உள்ள இந்த மீன் எண்ணெய் சாதாரண மக்களுக்கும் குறைந்த விலையில் கிடைப்பதற்கு ஏற்ப பல இடங்களில் பப்ளிக் செக்டார் மூலம் தேவையான தொழிற்சாலைகளை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவரவர்களே, அரசாங்கத்தில் ஏற்படுத்துவதற்குரிய சாத்தியக் கூறுகள் இப் போது இல்லை.



**திரு. க. உரோ. எட்மண்ட்:** தலைவரவர்களே, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் சுறா மீன் எண்ணெய் தயாரிக்கப்படுவதாக அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலில் சொன்னார்கள். சுறா மீன் எண்ணெய் ஒரு ஆண்டில் எத்தனை மாதங்கள் தயாரிக்கப் படுகிறது? ஏனென்றால், சுறா மீன் எப்போதும் கிடைப்பதில்லை. எல்லாக் காலங்களிலும் தொழில் நடைபெற, சுறா மீன் கிடைக்காத காலங்களில், அந்தக் காலங்களில் எந்தப் பகுதியில் கிடைக்கும் என்று கண்டறிந்து, மீன் பிடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவரவர்களே, அதுபற்றி விளக்கமான குறிப்பு இல்லை என்றாலும் தற்போது எந்த அளவுக்கு சுறா மீன் எண்ணெய் எடுக்கப்பட்டு வருகிறது என்ற குறிப்பை மட்டும் தெரிவிக்கிறேன்.

| | |
|---|---|
| 1957-58-ல் | 24.182 பவுண்ட். |
| 1958-59-ல் | 25.229 |
| 1959-60-ல் | 35.267 |
| 1960-61-ல் | 48.394 |

இதுபோன்ற அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், ஏதோ புள்ளிவிபரங்களை அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதை எந்தக் கணக்கில் எடுத்துக்கொள்வது? டன் கணக்கில் எடுத்துக்கொள்வதா அல்லது கிலோ கணக்கில் எடுத்துக்கொள்வதா? அதைச் சொன்னால் புரிந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** நான் முதலிலே சொன்னவற்றில் முதல் மூன்று ஆண்டுகள் (அதாவது, 1957–58 முதல் 1959–60 வரை) பவுண்ட் கணக்கு அதற்குப் பின்னால் சொன்னது (அதாவது 1960–61) கிலோ கணக்கு.

**செம்பனார்கோவில் பகுதியில் மீன் வளர்ப்புத் திட்டம்.**

* 24 வினா—**திரு. அ. தேவேந்திரன்:** மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

மாயூரம் வட்டம், செம்பனார்கோவில் பகுதியில் உள்ள ஆறு பாதி ஓடையை ஆழப்படுத்தி மீன் வளர்ப்புக்கு ஏற்றதாகச் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1974 ஆகஸ்ட் 1

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** ஆம். தஞ்சாவூ மாவட்டம், செம்பனார்கோயில் வட்டாரத்திலுள்ள ஆறுபா ஓடையில் நெல் பயிரிடுதல்—மீன் வளர்ப்புத் திட்டத்தை சோதனை அடிப்படையில் செயற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங் யுள்ளது.

### இஞ்சியிலிருந்து கெட்டிப்பாகு தயாரிப்பு.

*25 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வின க்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இஞ்சியிலிருந்து கெட்டிப்பாகு தயாரிக்கும் திட்ட ஏதேனும் செயல்படுத்தப்பட இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (இ) அரசு சின் கோனத் துறையில் இஞ்சியினின்று கெட்டிப்பாகும், எண்ணெயு தயாரிக்கும் திட்டம் தீவிர ஆராய்ச்சித் திட்டத்தின் பி ஏற்கெனவே செயலில் உள்ளது.

இஞ்சியிலிருந்து கெட்டிப்பாகும், எண்ணெயும் பெரிய அளவில் தயாரிக்கும் திட்டம் ஒன்றும் அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட் 1973-74-லிருந்து அமுல்படுத்தப்பட வேண்டியதாயிருந்தது தொடக்கத்தில் எதிர்பார்த்த அளவிற்கு இப்பொருட்களுக்கு ஆதரவு இல்லாததால் அந்த ஆண்டில் இப்பெரிய திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர இயலவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக அரசாங்கம் இஞ்சி உற்பத்தி செய்வதற்காக ஏதாவது சிறப்புத் திட்டங்களை வகுத்திருக்கின்றதா—காட்டிலா காவில் திட்டம் இருக்கிறதா ? தற்போது எந்த நிலையில் இருக் கிறது ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, 'இன்டன் சிவ் ரிசர்ச்' ஜெர்மானியத் திட்டத்தின் அடிப்படையில் இதற்கு வேண்டிய இஞ்சியை உற்பத்தி செய்ய, செயல்முறை இருக்கிறது. ஆனல், இந்தத் திட்டத்தின்படி உற்பத்தி செய்யும் இஞ்சிக்கு கிராக்கி இல்லாததால் சுருக்க அளவில் நிறுத்தப்பட்டுவிட்டது.



1974 ஆகஸ்ட் 12]

### புதிய நீர் மின் திட்டங்கள்

*26 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ்நாட்டில் புதிய நீர்மின் நிலையங்கள் அமைப்பதற்கான வாய்ப்புகள் குறித்து ஆய்வு ஏதேனும் மேற்கொள்ளப் பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** ஆம்.

**திரு. சு. துரைசாமி :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் 'ஆம்' என்று தெரிவித்தார்கள். என்னென்ன திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டன, அவைகள் மூலம் கிடைக்கும் மின்சாரத் தின் அளவு என்ன, அவைகளுக்கு திட்டக் கமிஷன் அங்கீகாரம் கொடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, ஆய்வில் இருக்கின்ற திட்டங்களின் முழு விபரம் தற்போது இல்லை. ஆய்வு செய்யப்பட்ட பல திட்டங்கள் இருக்கின்றன. உதாரணமாக, சோழாட்டிப்புழாத் திட்டம்—இது 60 மெகாவாட் திறன் கொண்டது. நெல்லித்துறை திட்டம் 50 மெகாவாட் திறன் கொண்டது. சண்முகா நதித் திட்டம் 30 மெகாவாட், பாலியாறு திட்டம் 30 மெகாவாட், இவைகள் அங்கீகாரத்திற்காக அனுப்பப் பட்டிருக்கின்றன.

மணிமுத்தாறு புனல் திட்டம், கீழ மேட்டூர் புனல் திட்டம், அக்கமலை புனல் திட்டம்—இவை போன்ற பல திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன.

(முற்பகல் 11.00)

### மோட்டார் வண்டிகள் சட்டம்.

*27 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோட்டார் வாகன சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று உயர்நீதிமன்ற நீதிபதி ஆலோசனை ஏதேனும் தெரிவித்துள்ளாரா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

[1974 ஆகஸ்ட் 12

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) ஆம்.**
இழப்பீட்டுத் தொகை உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டு
சென்னை, மோட்டார் விபத்துக்கள் உரிமை மனுக்கள் விசாரணை
நடுவர் மன்றத்தின் ஆணையை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட
மேல்முறையீடு ஒன்று குறித்து உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கும்
போது பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளது. மோட்டார்
வண்டி உரிமையாளர் மூன்றும் நபர் பொறுப்புகள் குறித்துக்
காப்புறுதிப் பத்திரம் ஒன்றை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும்
அத்தகைய காப்புறுதிப் பத்திரம் ஒன்றை வழங்க வேண்டியது
ஈட்டுறுதி நிறுவனம் ஒன்றின் பொறுப்பாகும் என்றும் விதிப்
பதற்கு வகை செய்ய, மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 95-வது
பிரிவு திருத்தப்படலாம். அந்த மோட்டார் வண்டி மற்றொரு
வருக்கு மாற்றப்பட்டாலும் அல்லது மாற்றப்படாவிட்டாலும்,
காப்புறுதிப்பத்திரம் கொடுக்கப்பட்ட கால அளவிற்கு அது
செயலில் இருக்கும். இவ்வாறாக உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில்
கருத்துத் தெரிவித்துள்ளது. இக்கருத்துரை பரிசீலனையில்
உள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, உயர்
நீதிமன்றம் எப்போது இந்தக் கருத்தினை அறிவித்தது? இது
வரை நடவடிக்கை எடுக்கப்படாமல் காலதாமதமானதற்குரிய
காரணம் யாது? அரசாங்கம் எப்போது நடவடிக்கை எடுக்க
இருக்கிறது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,**
காலதாமதத்திற்குக் காரணம் இந்தத் தீர்மானத்தை மத்திய அரசு
கொண்டுவரவேண்டும்.

**டாக்சி மீட்டர்கள்.**

*28 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :
திரு. கண். இட்டப்பா :
திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி, கோவை, மதுரை, சேலம் போன்ற நகரங்களில்
ஓடும் டாக்சிகளுக்கு மீட்டர் பொருத்தும் திட்டம் எந்த நிலையில்
உள்ளது?

(இ) எப்போது முதல் நடைமுறைக்கு வரும்?



1974 ஆகஸ்ட் 12]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ)** மதுரை, திருச்சி போன்ற இடங்களில் ஓடும் எல்லா வாடகை டாக்சி மோட்டார் வண்டிகள் அனைத்திலும் டாக்சி மீட்டர்கள் பொருத்தப் பட்டு விட்டன என்று போக்குவரத்து ஆணையாளர் கூறியுள்ளார். கோவையில் ஓடிக்கொண்டிருக்கும் 645 வாடகை மோட்டார் வண்டிகளில் 616 வாடகை மோட்டார் வண்டிகளுக்கு டாக்சி மீட்டர்கள் பொருத்தப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள கோவையில் ஓடும் மோட்டார் வண்டிகளுக்கும் சேலம் உள்பட இதர இடங் களில் ஓடும் மோட்டார் வண்டிகளுக்கும் 31—12—1974 வரை கால நீடிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, திருச் சியில் உள்ள வாடகைக் கார்களுக்கு எல்லாம் பெரும்பாலும் இன்னும் மீட்டர் பொருத்தப்படவில்லை என்பதை நானும் இதர சட்டமன்ற உறுப்பினர்களும் பொதுமக்களும் நன்கு அறிவோம். மற்ற உறுப்பினர்களும் பார்த்திருக்கிறோம். ஆகவே இனி மேலாவது எல்லா டாக்சிகளுக்கும் மீட்டர் பொருத்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப் பினருடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

**திரு. நா. வெ. குருசாமி :** திருச்சியிலும், மதுரையிலும் உள்ள டாக்சிகளுக்கு மீட்டர் பொருத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மதுரையைப் பொறுத்தவரையிலும் இன்னும் எந்த டாக்சிக்கும் மீட்டர் பொறுத்தப்படவில்லை. உடனடியாக இந்த டாக்சிகளுக்கு எல்லாம் மீட்டர்களைப் பொறுத்த அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பெரு நகரங்களில் உள்ள எல்லா டாக்சிகளுக்கும் மீட்டர்கள் பொருத்தப்பட வேண்டு மென்பது அரசினுடைய நடைமுறைத் திட்டங்களில் ஒன்று. ஆனால் போதுமான அளவு மீட்டர்கள் கிடைப்பது இல்லை. மீட்டர்கள் விலையும் மூவாயிரம், நாலாயிரம் என்று ஏறியிருப் பதால் சாதாரணமாக ஒரு டாக்சி வைத்துக்கொண்டு ஓட்டி

வருகிற ஓட்டுநர்களுக்கு அது சங்கடங்களை விளைவிக்கிறது. இருந்தாலும் இந்தக் கருத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதில் அரசு அக்கறை கொண்டிருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** எல்லா நகரங்களிலும் உள்ள வாடகைக் கார்களுக்கு எல்லாம் மீட்டர்கள் பொருத்தப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட முன்வருமா? மீட்டர்கள் அதிகவிலை ஏறியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். டாக்சி சொந்தக்காரர்களுக்கு அரசாங்கமே மீட்டர்களை வாங்கி தவணை முறையில் அவர்கள் அந்தத் தொகையைத் திருப்பிச் செலுத்தும் வகையில் அளிப்பதற்கு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, எல்லா நகரங்களுக்கும் இதை உடனடியாகக் கொண்டுவருவது என்பது உடனடியாக சாத்தியமல்ல. முதலில் பெரு நகரங்களுக்கு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் கருத்து. அடுத்து மீட்டர்களைத் தவணை முறையில் வாங்கிக் கொடுப்பதுபற்றி அரசுக்கு எந்தவிதமான தகவலும் இல்லை.

*Renovation work of Kamatchi Amman temple, Kancheepuram*

* 29 Q.—THIRU P. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) whether renovation work of Thiru Kancheepuram Kamatchi Amman temple has been taken up; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) காஞ்சிபுரம் அருள்திரு காமாட்சி அம்மன் ஆலயத் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, முதல் கட்ட வேலையாக ரூ. 30,000-க்கு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு திருக்குளம் திருப்பணி நடைபெற்று வருகிறது. மேலும் தெற்குப் பக்கம் ஓர் ராஜகோபுரம் கட்டுவதற்கும் இதர விமானங்களைப் புதுப்பித்தலுக்கும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு வரப்படுகின்றன.





*Siva Temple at Saliamangalam*

* 30 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) whether it is a fact that there was theft of temple idols from the Siva temple at Saliamangalam near Thanjavur in December 1973:

(b) if so, the details of the idols stolen;

(c) the value thereof; and

(d) whether the stolen idols have been recovered?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) இல்லை.

(இ), (உ) & (எ) கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 3. அறிவிப்புகள்.

**தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு குறித்து மேதகு ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி.**

MR. SPEAKER : I have to announce to the House that I have received the following message from the Governor of Tamil Nadu, dated the 7th August 1974 :—

" The Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill, 1973, was passed by both the Houses of the State Legislature and was reserved by me under Article 200 of the Constitution for the consideration of the President. The President has, in pursuance of the Proviso to Article 201 of the Constitution, directed that the Bill be returned to the Houses of the State Legislature with a message requesting that the Houses will reconsider, in the light of numerous representations received from the religious and charitable institutions in the State as well as

[Mr. Speaker] [1974 ஆகஸ்ட் 12

from the members of the public, the Bill as a whole, and in particular, the second proviso to clause 15 and clause 26 of the Bill, and make such amendments in the Bill as may be considered necessary to enable the said institutions to carry on their legitimate functions wthout any financial difficulty.

In accordance with the above direction, I, Kodardas Kalidas Shah, Governor of Tamil Nadu, hereby return the Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill, 1973, to the Houses of the Legislature for reconsiderng the Bill, as a whole and in particular the second proviso to clause 15 and clause 26 of the Bill, and to make such amendments in the Bill as may be considered necessary on the lines indicated in the direction of the President."

## 4. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பேரவையின் 55(1)-வது விதியின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள 'அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும்' தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

"That this House expresses its want of confidence in the Council of Ministers headed by Hon Dr. M. Karunanidhi due to the failure of the Government to tackle the food situation" என்பதாக திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

நாம் இதுவரை பின்பற்றி வருகின்ற முறைப்படி, முதலில் கொடுக்கப்பட்ட தீர்மானத்தை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தத் தீர்மானத்திற்குப் பேரவை அனுமதி அளித்துவிட்டால், மற்ற தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.

முதலில் கொடுக்கப்பட்டது திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களின் தீர்மானம். அத்தீர்மானத்தைப் பேரவையில் முன்மொழியப் பேரவை அனுமதி அளிக்கிறதா என்பதை அறிய



1974 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

வேண்டும். அனுமதி அளிக்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்கள் தம் இருக்கையில் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF: Is it Council of Ministry or Council of Ministers?

MR. SPEAKER: Council of Ministers.

(36 உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருபத்துநான்கு உறுப்பினர்களுக்குமேல் ஆதரவு அளிப்பதால் இத் தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறது என்று அறிவிக்கிறேன்.

(திரு. ஏ. ஆர். மாரிமுத்து எழுந்திருந்தார்)

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இதற்காக ஒதுக்கப்படுகிற நாட்கள் எத்தனை?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை இன்று கூடும் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்துகொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, on a point of order. There are other motions which have been tabled. I am afraid they would not be mentioned in the House in the light of the decision held by the Chair. That requires clarification as to who are all the persons that have tabled the No-confidence Motion and Censure Motion. If they are mentioned in the House, we may have the satisfaction that our Motions also gained publicity.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** திரு. கோவை செழியன் திரு. ஆர். பொன்னப்பநாடார், திரு. எஸ். வடிவேல், திரு. எஸ். அழகர்சாமி, திரு. என். மருதாசலம், திரு. என். கே. பழனிசாமி ஆகியவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே,

"That this House expresses its want of confidence in the Council of Ministers headed by Hon. Dr. M. Karunanidhi due to the failure of the Government to tackle the food situation."

என்ற அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1974 ஆகஸ்ட் 12

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I am seconding the No-Confidence Motion moved by Thiru A. R. Marimuthu.

THIRU M. A. LATHEEF : Sir, there are other Motions also. It seems that the No-Confidence Motion moved by the Hon. Member Thiru A. R. Marimuthu merely refers to the question of food crisis in the State. There are other motions that have been submitted by other Members. Other motions may also be mentioned so that discussions on other motions may be clubbed together and members may have a general discussion.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒத்தி வைப்புத் தீர்மானங்களைப் பல பொருள்பற்றிக் கொடுக்கிறார்கள். இருந்தாலும், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தினால் அவற்றிற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. அதையெல்லாம் கூட எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த எந்த உறுப்பினர்கள் எதை எதைப் பற்றியெல்லாம் பேச வேண்டுமென்று நினைக்கிறார்களோ, அவற்றைப் பற்றியெல்லாம் பேச இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தில் வாய்ப்பு இருக்கிறது.

THIRU M. A. LATHEEF : Sir, I am not referring to the Adjournment Motion. I have given notice of a Motion under Rule 68 of the Assembly Rules. That Motion may also be taken up. I have given notice of that Motion with reference to the serious food situation in the State. May I submit that Motion under Rule 42 is different from the Motion under Rule 68 of the Assembly Rules. I request that Motion may also be referred to because that is a major issue. I want to draw the attention of the House to the serious food situation that prevails in the State. I request the House that that Motion may also be taken into consideration.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. லத்தீப் அவர்கள் எதைக் கூற வேண்டுமென்று நினைத்தார்களோ அது நிறைவேறிவிட்டது.

**திரு. கோவை செழியன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நீங்கள் எடுத்துக் கொண்டதுபற்றி மிகவும்



1974 ஆகஸ்ட் 12] [திரு. கோவை செழியன்]

சந்தோஷம். ஆனால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பல பிரச்னைகளை அடிப்படையாக வைத்து, பலபேர் இங்கே பேச இருக்கிறார்கள். இன்றைக்கு நாடு முழுவதும் எதிர் நோக்கியிருக்கிற பிரச்னை அரிசிப் பிரச்னை. அந்த அரிசிப் பிரச்னைபற்றி பல மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானங்கள் தந்திருக்கிறார்கள். அவற்றை முதலிலே விவாதித்துவிட்டு, அதற்குப் பின்னாலே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதித்தால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே பல கருத்துக்களைச் சொல்லலாம். ஆனால், இன்றைக்கு மிகவும் முக்கியமான பிரச்னை அரிசிப் பிரச்னையாகும். ஆகவே, அதை முதலிலே எடுத்துக்கொண்டு விவாதத்திற்குப் பின்னாலே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபிறகு அதற்கு முதலிடம் கொடுக்காமல், மற்ற விவாதங்களைப் பற்றி பேசுவது முறையல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஆன் எ பாய்ண்ட் ஆப் கிளாரிபிகேஷன். முதலில், நம்பிக்கையில்லாத் தீர்மானம், அதற்குப் பிறகுதான் மற்றவைகள். ஆனால், ரூல் 42-ன் கீழும் மற்ற பிரச்னைகள்பற்றி நாங்கள் மோஷன்கள் கொடுத்திருக்கிறோமே, அவர்கள் பெயர்களை எல்லாம் சொன்னால் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது வராது.

**திருமதி சத்தியவாணிமுத்து :** நான் ரூல் 57-ன் கீழ் ஒரு மணி நேர விவாதத்திற்கு அரசாங்க செயல்முறைபற்றி விவாதிக்க ஒரு அர்ஜண்ட் மோஷன் கொடுத்திருக்கிறேன். அது எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும்? அது இந்தத் தீர்மானத்திலே வராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே வராத பொருளே இருக்காது. அதன்கீழ் எல்லாவற்றையும் பேசிவிடலாம். திரு. லத்தீப் அவர்களுக்குரிய பதிலைத்தான் தங்களுக்கும் கொடுக்க வேண்டியிருக்கிறது.

[1974 ஆகஸ்ட் 12

**திரு. நா. வீராசாமி:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். இந்தப் பிரச்னைகளையெல்லாம் இப்பொழுது எடுத்துக்கொள்ள வேண்டாம், மற்ற பிரச்னைகளையெல்லாம் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்வது, இந்த அரசின்மீது நம்பிக்கையிருக்கிறது என்று கூறுவதுபோல் இருக்கிறது. அதையாவது தெரிவித்துவிட்டால்...

**திரு. பெ. சீனிவாசன்:** திரு. லத்திப் ஏதோ ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். அது எங்களுக்குப் புரியவில்லை. ஏதோ ஒரு விதியின்கீழ் கொடுத்திருப்பதாகச் சொன்னார். அவர் என்ன தர்மசங்கடமான நிலைமையில் இருக்கிறார் என்பதை விளக்கினால் எங்களுக்கு நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பேரவைத் தலைவருக்கும்—எனக்கும்—லத்திப்புக்கும் இருப்பது.

**திரு. எம். ஏ. லத்தீப்:** என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் சீனிவாசன் அவர்கள் நான் ஆங்கிலத்திலே என்ன சொன்னேன் என்பதை புரிந்து கொண்டிருப்பார்கள். இன்றைக்கு நாட்டிலே இருக்கிற உணவு நெருக்கடியைப் பற்றி அவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையை விடுத்து, பொதுவான விதி 68-ன் கீழ், இந்த முக்கியமான பிரச்னையை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, உணவு நெருக்கடிக்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடிப்பதற்காக அதை இந்த அவை ஆராய்வதற்காக அதைக் கொடுத்தேன். அந்த நெருக்கடிக்குக் காரணம் யார்—இந்த அமைச்சரவையா அல்லது வேறு யார் என்று அப்பொழுது சொல்ல விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார் இன்றையதினம் இங்கே விவாதத்திற்கு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒருவேளை இரண்டு, மூன்று நாட்கள் தொடரலாம். ஆனால், நாட்டில் இருக்கிற முக்கியமான பிரச்னை உணவுப் பிரச்னை. ஆகவே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தை முடித்துவிட்டு, 3 நாட்களுக்கு அப்புறம் உணவுப் பிரச்னையை எடுத்துக்கொள்ளக் கூடிய நிலைமையில் நாடு இல்லை. ஆகவே, உணவுப் பிரச்னையைப்பற்றி விவாதித்தால், அரசாங்கம் அது சம்பந்தமாக என்ன என்ன செய்ய இருக்கிறது, இங்கே இருக்கிற அங்கத்தினர்கள் அதில் கூற இருக்கிற கருத்துக்கள் . . .



1974 ஆகஸ்ட் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பாயிண்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நண்பர் மாரிமுத்து அவர்கள் கொடுத்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் உணவுப் பிரச்னையை அடிப்படையாக வைத்துத் தான் கொடுத்திருக்கிறார். ஆகவே, தீர்மானத்திலேயே அதுபற்றி நிறையப் பேசலாம் என்பதுதான் என்னுடைய கருத்து.

*** திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மாநில அரசு உணவுப் பிரச்னையில் கையாண்டுவந்த கொள்கையின் காரணமாக, தமிழ் நாட்டிலே உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு, என்றும் இல்லாத அளவுக்கு விலைவாசி ஏறி, தமிழகத்தின் எல்லா பகுதி மக்களுமே மிகப் பெரிய சங்கடமான நெருக்கடியில் ஆழ்ந்துள்ளார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடந்த பல ஆண்டுகளாக அரசு செய்து வந்த முயற்சியின் காரணமாக, தமிழகம் உணவில் தன்னிறைவு பெற்று, உபரி மாநிலமாக ஆகிவிட்டிருக்கிறது என்ற செய்தியைப் பட்ஜெட் கூட்டத் தொடரின்பொழுது மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் மிகுந்த பெருமிதத்தோடு இந்தச் சபையிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சர்க்காருடைய புள்ளி விவரப்படி பார்த்தால், நாம் எதிர்பார்த்தது 59 லட்சம் டன் அரிசி என்று இருந்தாலும்கூட 56 லட்சம் டன் விளைந்திருக்கிறது. 56 லட்சம் டன் என்பது நம்முடைய மாநில அரிசித் தேவையை விட அதிகம் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. நம் மாநில மக்களுக்குத் தேவைக்குப் போக உபரி 10 லட்சம் டன் இருக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கப் புள்ளி விவரக் கணக்கினுடைய அடிப்படை என்று நான் கருதுகிறேன். ஆக, உபரியாக இந்த மாநிலத்தில் நெல் விளைவிக்கப்பட்டு இருந்தும்கூட, இன்றைக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு, இந்த அளவுக்கு விலைவாசி ஏறி இருப்பதற்கு யார் காரணம், என்ன காரணம் என்பதை இந்த அவை அலசி ஆராயக் கடமைப்பட்டிருக்கிறது. அரசுதான் காரணம்—அரசு தான் இந்தப் பற்றாக்குறைக்குக் காரணம் என்ற குற்றச்சாட்டை நான் அமைச்சரவைமீது சுமத்த விரும்புகிறேன். விளைச்சல் அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்களே தவிர,

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஆகஸ்ட் 12

அதிகமாக விளைந்த தானியத்தை இந்த நாட்டிலேயிருந்து
கடத்தப்படாமல் இருக்கவும்—சீராக விநியோகிப்பதற்கும்—முழுப்
பொறுப்பைக் கடமையுணர்ச்சியோடு இந்த அரசு நிறைவேற்ற
வில்லை.

அதோடு மட்டுமல்ல, நாட்டிலே கடத்தல்காரர்கள், பதுக்கல்
காரர்கள், கொள்ளை லாபக்காரர்கள், இவர்களெல்லாம்
கொழுப்பதற்கானச் சூழ்நிலையை அரசாங்கம் செய்துவிட்டு அதன்
மூலம் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள்
எல்லாம் படுபாதாளத்தில் விழக்கூடிய நிலைமையைத் தோற்றுவித்
திருப்பது இந்த அரசாங்கம்தான் என்று நான் கூற கடமைப்
பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரிலே பேசும்பொழுது
உணவு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், பாலைவனத்தின்
நடுவிலே தமிழ்நாடு பசுஞ்சோலையாகக் காட்சியளிக்கிறது என்று.
அவர்கள் கூறியதைக் கேட்டபொழுது நம்மையறியாமலே
நாமெல்லாம் மகிழ்ச்சி அடைந்தோம். இன்றைய தினம்
பசுஞ்சோலை பாலைவனமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்ற
செய்தியை இந்த அவையிலே பேசும்பொழுது எவ்வளவு மன
வருத்தம் நமக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான்
சுட்டிக்காட்டத் தேவையில்லை. அரசாங்கக் கொள்கையால்,
செயலால்தான் பசுஞ்சோலை பாலைவனமாக ஆக்கப்பட்டிருக்கிறது.
உண்மையிலே விளைந்திருக்கிறது. விளைந்திருந்தும் கிடைக்காமல்
பதுக்கல்காரர்கள், கொள்ளை லாபக்காரர்கள், கடத்தல்காரர்கள்
இவர்களால் இன்றையதினம் தமிழகத்திலே பற்றாக்குறை
ஏற்பட்டிருக்கிறது. அரசுச் செயலால், தமிழகம் இன்றைக்குப்
பற்றாக்குறையாக இருக்கிறது என்ற செய்தியைத்தான் நான்
தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிப்ரவரி மாதத்தில் கிட்டத்தட்ட 80,000 டன் கொள்முதல்
செய்யப்பட்டிருக்கிறது என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது.
அதனுடைய குறியீடு 1¼ இலட்சம் டன்னாகும். அந்த 1¼ லட்சம்
டன்னை நாம் கொள்முதல் செய்தால், தேவையான அளவுக்கு மக்க
ளுக்கு விநியோகம் செய்ய முடியும். அது மட்டுமல்லாமல், பம்பர்
ஸ்டாக் வைப்பதற்கான முயற்சியையும் நாங்கள் எடுக்கிறோம்
என்று இந்த அறிக்கையிலே சொல்லியுள்ளீர்கள்.



1974 ஆகஸ்ட் 12] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

எங்கே நீங்கள் பம்பர் ஸ்டாக் வைத்திருந்தீர்கள், எவ்வளவு
கொள்முதல் செய்தீர்கள், கொள்முதல் செய்து பம்பர் ஸ்டாக்
வைப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதா? நீங்கள்
எவ்வளவு வேண்டுமானாலும் கொள்முதல் செய்து பம்பர் ஸ்டாக்
வைப்பதற்கான வாய்ப்பு இருந்தும்கூட அந்த வாய்ப்பை நீங்கள்
நழுவ விட்டுவிட்டீர்கள், கவனிக்க மறந்துவிட்டீர்கள், வேண்டு
மென்றே நீங்கள் அப்படிச் செய்தீர்கள் என்று என்னால் சொல்ல
முடியாவிட்டாலும், நீங்கள் செய்தது மகத்தான மிகப் பெரிய
தவறு, ஒரு பெரிய தவறை இந்த அரசாங்கம் செய்திருக்கிறது
என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியவில்லை.

ஆரம்பத்திலிருந்து ஒன்றை நீங்கள் கூறி வந்தீர்கள்,
தமிழகத்தின் எல்லைப் பகுதிகள் பூராவும் ஒழுங்கான முறையிலே
கண்காணிக்கப்படுகின்றன என்று. ஆனால் நீங்கள் கூறியபடி
ஒழுங்கான முறையிலே கண்காணிப்புச் செய்து வந்திருப்பீர்களே
யானால் எல்லைப் பகுதிகளிலே இவ்வளவு உணவுப் பஞ்சம்
வந்திருக்காது. பல மாதங்களுக்கு முன்பே இந்தச் சட்டப்
பேரவையிலே நாம் இதைப் பற்றி விவாதித்தோம். கன்னியாகுமரி
மாவட்டத்திலே உணவுப் பொருளின் விலை மிகத் தாறுமாறாக ஏறி
அங்கே போராட்டங்கள் எல்லாம் நடந்து இருக்கின்றன. அந்த
நிலைமையெல்லாம் தெரிந்தபிறகும் இந்த அரசு எந்த அளவிற்குக்
கண்காணித்து இருக்கிறது என்பதைப் பார்த்தால் வேறு
மாநிலங்களுக்கு தானியங்களைக் கொண்டுபோகாமல் தடுப்பதற்கு
எடுத்த முயற்சிகள் எந்த அளவிற்குப் பலனளித்திருக்கிறது
என்பதைப் பார்த்தால் எந்தவிதப் பயனும் அளிக்காமல்
தமிழகத்திலிருந்து தானியங்கள் கடத்தப்பட்டிருக்கின்றது என்ற
உண்மையைத்தான் நம்மால் பார்க்க முடிகிறது. நேரடியாக நாம்
பார்க்கமுடியாவிட்டாலும், உபரியாக இருந்த ஒரு மாநிலத்தில்
உணவு நிலைமை இருக்கின்ற அவல நிலைமையைப் பார்த்தாலே
நம்மால் தெரிந்துகொள்ள முடிகிறது. நாங்களும் தெரியும்
இதையெல்லாம் அரசாங்கம் எதிர்பார்த்து இருந்தும்கூட
அரசாங்கம் வாளா இருந்துவிட்டது. கள்ளக்கடத்தல்காரர்
களுக்குச் சாதகமாக இருந்துவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டை
நான் சுமத்த விரும்புகிறேன்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஆகஸ்ட் 12

தமிழகத்திலே தஞ்சை மாவட்டம்தான் அதிகமான அரிசி உற்பத்தி செய்யக்கூடிய மாவட்டம் என்பது எல்லோருக்கும் தெரிந்தது. அந்த மாவட்டத்திலே சம்பாவில் 13 லட்சத்திலிருந்து 15 லட்சம் டன் வரையிலே உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு மாவட்டத்திலே மார்க்கடபிள் சர்ப்ளஸ் 6 லட்சம் முதல் 7 லட்சம் டன் வரையிலாவது நிச்சயமாக இருக்கவேண்டும். ஏழு லட்சம் டன்கள் உபரியாக இருக்கக்கூடிய அளவிலே தேவையான உணவுத் தானியத்தை நீங்கள் கொள்முதல் செய்து பஃபர் ஸ்டாக் வைத்திருக்கலாமே? ஏன் நீங்கள் கொள்முதல் செய்யவில்லை, ஒட்டு மொத்தமாக இன்றைக்கு 1 லட்சத்து 25 ஆயிரம் டன் கொள்முதல் செய்தால் போதும் என்று எந்தக் கணக்கை வைத்து முடிவுக்கு வந்தீர்கள், எந்தக் கணக்கிலே டார்ஜெட் போட்டீர்கள், அதுவே போதுமானது அல்ல என்று எப்படி நீங்கள் அறியாமலிருந்தீர்கள் என்று உங்களை நான் கேட்க விரும்புகிறேன். உங்களுக்கு சென்னை மாநகரம், கோவை மாநகரம், கன்னியாகுமரி மாவட்டம் இந்த மூன்றையும் எடுத்துக்கொண்டாலே கிட்டத்தட்ட 25 ஆயிரம் டன் வரையிலே அரிசி தேவைப்படுமே, இந்த நிலையிலே எல்லாவற்றிற்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாக ஒரு லட்சத்து 25 ஆயிரம் டன்கள் போதும் என்று எப்படிக் கணக்குப் போட்டீர்கள்?

அது மட்டுமல்ல, ஆரம்பத்திலிருந்தே தஞ்சை மாவட்டத்திலிருந்து அரிசியோ நெல்லோ வெளி மாவட்டங்களுக்குப் போகாமல் தடுத்து நிறுத்தி வைத்திருந்தீர்கள், அதனால் மார்க்கடபிள் சர்ப்ளஸ் அங்கே இருந்தது உண்மை, ஆனால் நிலைமை மோசமாக இருப்பது தெரிந்தபிறகும்—போன கூட்டத் தொடரிலே நான் இதைப்பற்றி விரிவாகச் சொன்னேன்—தஞ்சை மாவட்டத்திலிருந்து அரிசி, நெல் வெளி மாவட்டங்களுக்குப் போகாமல் தடுத்து நிறுத்தியிருந்தீர்கள். அந்த நேரத்திலே வெளி மாவட்டங்களிலே மதுரையிலே ஒரு மூட்டை 90 ரூபாய்க்கு விற்றது, தஞ்சை மாவட்டத்திலே 40 ரூபாய்க்குத்தான் ஒரு மூட்டை விற்றது. ஆகவே அந்த விலையேற்றத்தை, கள்ளக்கடத்தல்காரர்கள் பயன்படுத்திக்கொண்டு அதிகமாக இங்கிருந்து அங்கே கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள், உங்கள் முயற்சி பலனளிக்கவில்லை, விலையேற்றத்தைத் தடுக்கவேண்டுமானால் ஓரளவிற்கு கொஞ்சம்



974 ஆகஸ்ட் 12] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

வெளியே விடுவதற்கு நீங்கள் வழிசெய்ய வேண்டுமென்று சொன்னேன், அப்பொழுது அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை, உணவு அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டம் உணவுக் களஞ்சியம், வெளியே விட்டுவிட்டால் எப்படி பிரச்சினைகளைத் தீர்ப்பது என்று சொன்னார்கள், அவர்கள் அப்பொழுது சொன்னது எனக்கு சரியாகத் தோன்றியது, ஓரளவிற்குத் தடுத்து நிறுத்திய நிலைமையினால் பிறகு என்ன நிலைமை ஏற்பட்டது என்பதைப் பார்க்கவேண்டும்.

தஞ்சை மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு போகக் கூடாது என்று தடுத்து நிறுத்தியதன் மூலமாக வெளி மாவட்டங்களில் விலைவாசி அதிகமாகப் போய், தஞ்சை மாவட்டத்திலே வியாபாரிகள் ஒரு மூட்டை 40 ரூபாய்க்கு வாங்கி, வெளி மாவட்டங்களிலே 90 ரூபாய்க்கு ஒரு மூட்டை என்று விற்று கொள்ளை லாபம் சம்பாதிக்கக்கூடிய வழியை ஏற்படுத்திவிட்டது. சிறு விவசாயிகள் தங்கள் தானியங்களை வியாபாரிகளிடத்தில் விற்றுவிட்டார்கள், அதை வாங்கிக்கொண்டுபோய் வியாபாரிகள் ஸ்டாக் வைத்திருந்தார்கள், அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய கடன்கள், கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செலுத்தவேண்டிய கடன்கள், அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய நிலவரி பாக்கிகள் இவைகளை வசூல்செய்வதில் அரசாங்கம் விவசாயிகளிடத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுத்ததன் விளைவாக அவர்கள் தங்களுடைய தானியங்களையெல்லாம் விற்கக்கூடிய சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்திவிட்டது. அப்படி விற்கக் கூடிய அரிசி, நெல்லை எல்லாம் அரசாங்கமே சிறு விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து சாதாரண மக்களுக்குக் குறைந்த விலையில் அரிசி கிடைக்கச் செய்திருக்கலாம், ஏன் செய்யவில்லை? இது நன்றாகத் தெரிந்த, ஊர் அறிந்த, உலகம் அறிந்த விஷயம். இது அமைச்சரவர்களுக்குத் தெரியாதா, மந்திரிசபைக்குத் தெரியாதா, வெளி மாவட்டங்களில் அதிகமாக விற்கிறது, தஞ்சை மாவட்டத்திலே குறைந்தவிலைக்கு விற்கிறது, வியாபாரிகள் கொள்முதல் செய்து ஸ்டாக் வைத்து பிறகு அதிகமான விலைக்கு விற்பார்கள் என்பது யாருக்குத்தான் தெரியாது?

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஆகஸ்ட் 12

ஆரம்பத்திலிருந்தே சிறு விவசாயிகளிடத்திலிருந்து வியாபாரிகள் பணம் படைத்தவர்கள் குறைந்த விலையிலே வாங்கி பிறகு அதிக விலைக்கு விற்கக்கூடிய சூழ்நிலையை இந்த அரசாங்கம் தான் ஏற்படுத்தியது. அரசாங்கம் செய்த மாபெரும் தவறு, இமாலயத் தவறு, தஞ்சை மாவட்டத்திலிருந்து எல்லா நெல்லையும் அரிசியையும் வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லும் கட்டுப்பாட்டைத் தளர்த்தியதுதான் என்று நான் அழுத்தந் திருத்தமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். யார் பணம் வைத்திருந்தார்களோ அவர்கள் எல்லாம் குறைந்த விலைக்கு விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்து வைத்துக்கொண்டு பிறகு கட்டுப்பாடு தளர்த்தப்பட்டவுடன் வெளி மாவட்டங்களுக்குக் கொண்டுசென்று விற்று கொள்ளை லாபம் அடித்தார்கள் என்பது தெரியாதா? நாற்பது ரூபாய் என்ற அளவிற்குக் கொள்முதல் செய்து வைத்திருக்கிறார்கள். 80, 90 ரூபாய் என்ற அளவிற்கு விற்கிறது வெளி மாவட்டங்களில்.

இந்த நேரத்தில் கட்டுப்பாட்டைத் தளர்த்துவது சரியா என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவில்லை. அரசாங்கம் நினைத்திருந்தால் 40 ரூபாய்க்கு வாங்கிய நெல்லைப் பூராவையும் அரசாங்கம் கைப்பற்றியிருக்க முடியும் அப்படிச் செய்யவில்லை, மாநிலத்திலே உணவுப் பற்றாக்குறை இருக்கிறது, விலை ஏறியிருக்கிறது. இந்த நிலையில் குறைந்த விலைக்கு வாங்கி வைத்திருக்கிறவர்களை வெளி மாவட்டங்களுக்குத் தாராளமாகக் கொண்டுபோய் விற்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி அதன்மூலம் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கும் பலன்போய்ச் சேரவில்லை, சாதாரண மக்களுக்கும் பலன் போய்ச் சேரவில்லை என்ற சூழ்நிலையை ஏற்படுத்தியது இந்த அரசுதான். அந்தச் சூழ்நிலையை வேண்டுமென்றே இந்த அரசு ஏற்படுத்தியது என்ற குற்றச்சாட்டைச் சுமத்துகிறேன். ஏன் அந்தக் கட்டுப்பாட்டை எடுத்தார்கள்? சாதாரண மக்கள் வாழ்க்கையிலே மோசமான நிலையை அடையக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் யாரோ ஒரு சில வியாபாரிகள் மட்டும் விரல் விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கையில் உள்ள சிலர் மட்டும் பல லட்சக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடிக்கக்கூடிய நிலைமை தான் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையைத் தமிழக மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள்.



1974 ஆகஸ்ட் 12] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

எத்தனையோ காரணங்களை விலைவாசி ஏறியதற்கான காரணங்களாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். விலைவாசி உயர்விற்குக் காரணம் இந்த அரசாங்கத்தினுடைய உணவுக் கொள்கைதான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உர விலையை ஏற்றி விட்டார்கள், அதனால்தான் ஏறிவிட்டது என்று சொல்கிறார்கள். உர விலையை ஏற்றி இன்னும் விவசாயிகள் அந்த உரத்தை வாங்கவே இல்லை; இந்த சாகுபடிக்குத்தான் போடப் போகிறார்கள், இந்த நிலையில் உர விலை ஏறிவிட்டது, அதனால்தான் உணவு தானியங்கள் விலையும் ஏறிவிட்டது என்று சொல்வது எப்படிப் பொருந்தும் என்பதை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

புஞ்சை தானியங்களைப் பொறுத்தவரையில் கட்டுப்பாட்டை எடுத்துவிட்டார்கள், அதனால்தான் அரிசி விலை ஏறியிருக்கிறது என்று சொல்கிறார்கள், புஞ்சை தானியக் கட்டுப்பாட்டை எடுத்தால் புஞ்சை தானியங்களின் விலைதான் ஏறலாம். அது ஒப்புக்கொள்ளக்கூடிய ஒன்று. சோளம், கம்பு இவைகளின் விலை 150 ரூபாய் அளவிற்கு ஏறியிருக்கலாம், ஆனால் அரிசி விலை எப்படி ஏறியது? புஞ்சை தானியங்களைச் சாப்பிட்டுக் கொண்டு வந்தவர்கள் அரிசியைச் சாப்பிட வந்துவிட்டார்களா? இது எப்படி சரியான வாதமாகும் என்று எனக்குத் தெரியவில்லை.

(முற்பகல் 11.30)

கிராமப்புறங்களிலேயிருந்து வந்திருக்கின்ற உறுப்பினர்கள் இங்கே இருக்கிறார்கள். புஞ்சை தானியம் விலை குறைவான உணவுப் பொருளாகும். அதில் இன்றைக்குள்ள விலையேற்றத்தை கணக்கில் கொண்டாலும்கூட அரிசியைவிட அதன் விலை குறைவு தான். ஆகவே, புஞ்சை தானியங்களின் விலை ஏறிவிட்டால் அரிசியை வாங்கிச் சாப்பிட்டோம் என்று சொல்லும் சக்தி புஞ்சை தானியத்தைச் சாப்பிடும் மக்களுக்கு இல்லை. அவர்கள் புஞ்சைத் தானியங்களைத்தான் வாங்கிச் சாப்பிட முடியும். ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு குடும்பத்திற்கு 4 லிட்டர் அரிசி தேவைப்படும் இடத்தில் 3 லிட்டர் கேழ்வரகு சமைத்தால் அந்தக் குடும்பத்திற்குப் போதும். பழைய விலையில் பார்த்தாலும்கூட 4 லிட்டர் அரிசி 4½ ரூபாய்தான். ஆனால் புஞ்சை தானியத்தின் விலை அதைவிடக் குறைவுதான். ஆகவே, புஞ்சைத் தானியம்

சாப்பிட்டவர்கள் விலை ஏறிவிட்டதால் அரிசி சாப்பிட ஆரம்பித்து
விட்டார்கள் என்று கூறக்கூடிய வாதம் தவறு என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு வாதம். உணவு மண்டலத்தை மாற்றப்
போகிறார்கள் என்றவுடன் விலையெல்லாம் ஏறப் போகிறது என்று
இங்கே உள்ள பதுக்கல்காரர்கள் தானியங்களைப் பதுக்கி
விட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. எப்பொழுதுமே பதுக்கு
பவர்கள் பதுக்கிக் கொண்டுதான் இருப்பார்கள். கடந்த பல
ஆண்டுகளாக ஏறியுள்ள விலைவாசிகளைப் பார்த்தால் நிச்சயமாகப்
பதுக்கல் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. கடந்த
நான்கு ஆண்டுகளில் விலைவாசிகளைப் பாருங்கள். சென்ற ஆண்டு
ஒரு மூட்டை நெல் 40 ரூபாய் என்று இருந்தது. கடைசிக் கட்
டத்தில் குறுவை வருவதற்கு முன் 50 ரூபாயிலிருந்து 55 ரூபாய்
வரையில் விற்றது. மூட்டைக்கு 40 ரூபாய் கொடுத்து வாங்கி
வைத்துக்கொண்டால் 15 ரூபாய் லாபம் கிடைக்கிறது என்று
எண்ணி கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளாக பணம் வைத்திருப்ப
வர்கள் இந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.
வட்டிக்குக் கொடுத்தால் கூட பணம் திரும்பக் கிடைக்குமோ
கிடைக்காதோ என்று கவலைப்படுவதைவிட தானியங்களை இப்படி
வாங்கி வைப்பதன் மூலம், 6 மாத இடைவெளியில் 40 ரூபாய்
முதலீட்டிற்கு 15 ரூபாய் லாபம் கிடைக்கிறது. ஆகவே, 100
மூட்டை, 200 மூட்டைகள் என்று நெல்லை வாங்கி வைத்துவிடலாம்
என்று பணம் வைத்திருப்பவர்கள் எண்ணி அவ்வாறு நடந்து
வந்திருக்கிறார்கள் என்பது உண்மை. இந்த ஆண்டும் அப்படிச்
செய்திருப்பார்கள். அவ்வாறு பதுக்கப்பட்ட நெல்லை வெளியே
கொண்டு வருவதற்கு நாம் என்ன முயற்சியைச் செய்தோம்?
எப்படிச் செய்தோம் என்பதைப்பற்றி இந்தச் சபை சிந்திக்க
வேண்டும். எத்தனை பேர்களிடத்திலே நெல்லைக் கைப்பற்றி
யிருக்கிறோம்? செய்யவில்லை. இம்மாதிரி பல்வேறு காரணங்
களினால், அரசு கொண்டிருந்த முறையற்ற கொள்கையினால்
இவ்வளவு மோசமான விளைவுகளை இந்தத் தமிழகத்தில் ஏற்படுத்தி
யிருக்கிறார்கள் என்பதை மிக அதிகமாக எடுத்துச் சொல்லத்
தேவையில்லை என்றே நான் கருதுகிறேன்.



அடுத்தபடியாக, கடலை எண்ணெயைக் குறைந்த விலைக்குக்
கொடுக்கப் போகிறோம் என்று அரசு அறிவித்தது. லெவி போட்டு
வாங்கப் போகிறோம் என்று அறிவித்தார்கள். அது மகிழ்ச்சிக்
குரியதுதான். யாருக்கும் அதில் அபிப்பிராய பேதம் இருக்க
முடியாது. சாதாரண மக்கள் ஒரு லிட்டர் கடலை எண்ணெயை
8 ரூபாய்க்கு வாங்கி உபயோகப்படுத்துவது என்பது சிரமம்.
எனவே அதைக் குறைத்துக் கொடுப்பதற்கு அரசு எடுத்த முயற்சி,
அந்த எண்[illegible]லதுதான். ஆனால் அதை நிறைவேற்றுவதற்கு
எடுத்துக்கொண்ட முறையும், நிறைவேற்றியதன் பயனைக்
கிடைத்த பலனும் என்ன என்று பார்த்தால் அரசு எதிர்பார்த்த
அளவிற்குப் பயன் இல்லை. விளைவு என்ன? சாதாரண விவசாயி
களெல்லாம் மிகக் குறைந்த விலையிலே தங்களுடைய உற்பத்தியை
வியாபாரிகளிடத்திலே விற்பதற்குக் கட்டாயப் படுத்தப்பட்
டார்கள். அப்படிக் கட்டாயப்படுத்திக் கொள்முதல் செய்யப்
பட்டதே அதன் பயனை சாதாரண உபயோகிப்பாளருக்கு
குறைந்த விலைக்குக் கிடைத்ததா என்றால் இல்லை. அதில் உங்கள்
எண்ணம் ஈடேறவில்லை. காரணம் என்ன? அதற்கு வேண்டிய
முன்னேற்பாடான காரியங்களை அரசு செய்யவில்லை. வியாபாரிகள்
உங்களோடு ஒத்துழைக்க மாட்டார்கள் என்பது பல ஆண்டு
களாகத் தெரிந்த உண்மை. பல மாநிலங்களிலே நடப்பவைகளைப்
பார்த்தாலுங்கூட தெரியும். எப்படி லாபம் சம்பாதிப்பது என்ற
குறிக்கோளைக் கொண்டவர்களாக இருக்கிறார்களே தவிர சமுதாய
நலன்களைக் கருத்திற்கொண்டு செயல்படுபவர்கள் என்று எப்படி
இந்த அரசு நினைத்தது? தஞ்சை மாவட்டத்தில் எங்கள் பகுதி
யிலே கடலை அதிகமாக விளையும். அரசின் ஒரு உத்தரவின் காரண
மாக வியாபாரிகள் கொள்முதல் செய்ய மறுத்து விட்டார்கள்.
கொள்முதல் செய்ய முடியாது என்று வாளாவிருந்துவிட்டார்கள்.

விவசாயிகள் கூட்டுறவு நாணயச் சங்கம் கடனைத் திருப்பிக்
கொடுக்க வேண்டுமென்று பலவிதமான ஜப்தி நடவடிக்கைகளை
எடுக்க ஆரம்பித்து விட்டார்கள். விவசாயிகளுக்கு வேறு வழி
யில்லை. 200 ரூபாய்க்கும் குறைவான விலையில் விற்க வேண்டிய
துர்ப்பாக்கியமான நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. அப்பொழுது
அதை அரசு கொள்முதல் செய்ததா? நாங்கள் இருக்கிறோம்,
வாங்கிக் கொள்கிறோம், 230 ரூபாய் லெவி போட்டிருக்கிறோம், 250
ரூபாய் ஓப்பன் மார்க்கெட் என்று சொல்லி அரசு கொள்முதல்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஆகஸ்ட் 12

செய்ய முன்வந்ததா? எதற்காக உணவு அமைச்சர் என்று
இருக்க வேண்டுமென்று புரிந்து கொள்ள முடியவில்லை,
விவசாயிகளைப் பாதுகாக்கவா அல்லது அவர்களை நசுக்கவா?

இவர்களுடைய கொள்கையால், புரியாத்தனமான செயலினால்,
அவர்களுக்குக் கொடுத்த தவறான அறிவுரைகளினால் இன்றைக்குச்
சாதாரணமாக வாங்கி உபயோகிக்கின்ற மக்கள் படும் தொல்லை,
அதற்கு மேலாக அதை-உற்பத்தி செய்த சாதாரண மக்கள் படும்
தொல்லை இவைகளையெல்லாம் பார்க்கும்பொழுது இந்த அரசு
செய்தது சரியா, இதன் விளைவை எப்படி இந்த மக்கள் சமாளிக்கப்
போகிறார்கள் என்பதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்,
இந்தச் சபையில் நாம் பதில் சொல்ல முடியாது. ஏனென்றால்
அதிகப்படியான உறுப்பினர்களை ஆளுங்கட்சியில் வைத்திருக்கி
றீர்கள். நாங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்
திருந்தாலும் இந்தத் தீர்மானம் இந்த அவையிலே ஏற்றுக்
கொள்ளப்படும் என்று நாம் கருத முடியாது. ஆனால் மக்க
ளுடைய உணர்வு எப்படி இருக்கிறது, எவ்வளவு பெரிய
வேதனையை அவர்கள் அடைந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப்
பார்க்கவேண்டும் அரிசி கிடைக்கவில்லை தஞ்சை மாவட்டத்தில்
நெற்களஞ்சியத்தில் அரிசி இல்லை. தெருத் தெருவாக அரிசிக்காக
அலையும் நிலையைக்கூடப் பார்க்க நேரிடுகிறது. ஏன் இந்த நிலை?

நான் உணவு அமைச்சரிடத்திலே கூறினேன். நீங்கள் 50 சத
வீதமாவது லெவியை வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் லகுவாக,
கட்டுப்பாட்டைத் தளர்த்தாமல் இதர மாவட்டங்களுக்கு உணவு
தானியங்களை அனுப்புவதற்கு ஏற்பாடுகளைச் செய்யுங்கள், அப்படி
செய்தால் அங்குள்ள சாதாரண மக்களுக்குக் கிடைக்கும், அப்படி
கொடுப்பதால் விலை குறைவதற்கு ஏதுவாக இருக்கும் என்று
சொன்னேன். அது காதிலே விழவில்லை, அதை ஏற்றுக்கொள்ள
வில்லை. அதை எப்படிக் கருதினார்களோ தெரியாது. ஒரு மைபன்
மார்னிங் கட்டுப்பாட்டை எடுத்து விட்டோம் என்று சொன்
னார்கள். உடனே தஞ்சை மாவட்டத்திலே உள்ள நெல் இராப்
பகலாக ஆயிரக்கணக்கான லாரிகளில் வெளியேற்றப்பட்டது.
அப்படி அனுப்பினால் அது. இதர மாவட்ட மக்களுக்குக்
கிடைத்ததா, அந்த அளவிற்குச் சாத்தியப்பட்டதா என்றால் இல்லை.



1974 ஆகஸ்ட் 12] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அத்தனையும் எல்லையைக் கடந்து போயிருக்கத்தான் வேண்டும்.
இல்லையென்றால் இந்த அவல நிலை ஏற்பட்டிருக்க முடியாது.

இதர மாவட்டங்களை விட அதிக விலையில் தஞ்சை மாவட்
டத்தில் விற்கும் நிலை ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுகிறேன். சில
யிடங்களில் 4½ ரூபாய் என்று இருக்கிறது. சிலயிடங்களில் ஐந்து
ரூபாய்க்கு விற்பதாகச் சொல்கிறார்கள். இது எங்கு போய்
எப்படி நிற்கும் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. ஏன் இந்த
அவல நிலை ஏற்பட்டது? இந்த நிலையைப் போக்கி இருக்க
முடியாதா? இந்த நிலை வராமல் காத்திருக்க முடியாதா? தலைவ
ரவர்களே, அதைப்பற்றி இந்த அவை சிந்திக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக நாம் அதைத் தடுத்திருக்க
முடியும்.

இன்னும் சொல்லப்போனால் குறுவை வருவதில் இயற்கையின்
கோளாறு வேறு. இந்த வருஷத்திலே ஒரு மாதத்திற்குப் பிறகு
தான் தண்ணீர் திறந்திருக்கிறோம். அதனால் நம்முடைய குறுவை
வரவு ஒரு மாதம் பின்னாலே போய்விட்டது. ஆகவே, எப்படி
எடுத்தாலும் மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவை நாம்
தயார் செய்ய வேண்டும். பல அதிகாரிகள்கூடச் சொல்கிறார்கள்,
விலைதான் கூடுதலாக இருக்கிறதே தவிர அரிசி கிடைக்கிறது
என்று. அதுவும் எத்தனை நாட்களுக்குக் கிடைக்கும் என்று
புரிந்து கொள்ள முடியவில்லை. நான் பல கிராமங்களுக்கும்
சென்ற நேரத்தில் அங்கு அவர்கள் அப்பொழுதே நாங்கள் 40
ரூபாய்க்கு விற்றுவிட்டது என்று சொல்கிறார்கள். கொஞ்சம்
வைத்திருந்தவர்களும் இந்த 65 ரூபாய் விலையிலே விற்றிருப்
பார்கள். குறுவை வரவை எதிர்பார்த்து இப்பொழுது இருக்கும்
விலையை அதிக விலை என்று எண்ணி விற்றிருக்கலாம். சில வசதி
படைத்தவர்கள் லாப நோக்கத்தோடு ஆயிரம் மூட்டை, 500
மூட்டை என்று வைத்திருக்கலாம். அதைத் தெரிந்து கொள்ள
வேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று எங்கள் கட்சியின்
சார்பில் எல்லோருக்கும் நான் கூறியிருக்கிறேன். அதேபோல்
எல்லாக் கட்சியினரும் செயல்படுவார்கள் என்று நம்புகிறேன்.
அப்படியிருக்கும்பொழுது 3 மாதங்களுக்குரிய தேவையை எப்படி
சமாளிக்கப் போகிறோம்? தேவையான நெல் எவ்வளவு என்பதை

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஆகஸ்ட் 12

அரசுத் தரப்பிலே சொல்ல முடியாமல் இருக்கலாம், சொன்னால் சங்கடம்தான், விலை அதிகமாக ஏறும் என்று கருதிக்கொண்டு சொல்லாமல் இருக்கலாம். ஆனால் உண்மையில் மிகவும் சங்கட மாக இருக்கிறோம், அதை எப்படிச் சமாளிக்க வேண்டும் என்று அதற்கான வழிவகைகளை ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

இந்த மூன்று மாதத் தேவை எவ்வளவு என்ற புள்ளி விவரத்தைச் சரியாகக் கூறமுடியவில்லை. இதற்கு மாற்று வழி, ஒரே வழி என்ன என்று பார்க்கும்போது ஆந்திர மாநிலத்தி லிருந்து அதிகப்படியான அரிசியை இந்த மூன்று மாதத் தேவைக்குக் கொள்முதல் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். மத்திய அரசின் மூலமோ, அல்லது மாநில அரசோ நமக்கு இந்த மூன்று மாதத் தேவைக்கான அரிசியை ஆந்திர மாநிலத்திலிருந்து பெறுவதற்கு முயற்சியினை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த மூன்று மாதத்திற்கு மட்டுமல்ல; அடுத்து வரும் காலத்திலும் இந்த அரிசிப் பற்றாக்குறை இருக்கத்தான் போகிறது. தஞ்சை மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் 5 லட்சம் ஏக்கர் நிலத்தில் குறுவை சாகுபடி செய்யப்படும். இந்த ஆண்டு நிச்சயம் 5 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி இல்லை. 3 லட்சத்திற்குள்தான் இருக்கும். ஐப்பசி கடைசியில் அறுப்பு, கார்த்திகை மழையில் சேதம் ஏற்பட்டு விடும் என்று பலர் குறுவை போட முன்வரவில்லை. ஆகவே, 2 லட்சம் உபரியாகக் குறுவை உற்பத்தி இல்லாத நிலையில் எப்படி அதனை ஈடுகட்டப் போகிறோம் என்பதையும் ஆலோசிக்க வேண்டும்.

நீண்ட நாட்களாக ஒரு கருத்தை நான் சொல்லி வந்திருக் கிறேன். அமைச்சர் அவர்களிடத்திலும் அந்தக் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். கோடைக் காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் ஐந்து லட்சம் ஏக்கரை நெல் சாகுபடிக்குக் கொண்டு வரமுடியும் என்பது என் கருத்து. நிலத்தின் அடியில் மிக அதிகமான நீர் இருக்கிறது. தண்ணீர்ப் பஞ்சம் கிடையாது. மாயவரம், திருத்துறைப்பூண்டி, கும்பகோணம், பாபநாசம் ஆகிய பகுதிகளில் 50 அடியில் காலையில் பில்டர் பம்ப் கொண்டு போய்ப்



1974 ஆகஸ்ட் 12] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

போட்டால் மாலையில் தண்ணீர் இறைக்கலாம். ஐந்து லட்சம் டார்கெட் என்று வைத்து உடனடியாக இரண்டு, மூன்று லட்சம் ஏக்கராவது கோடை காலத்தில் சாகுபடி செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கோடையில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இன்செண்டிவ் கொடுக்க வேண்டும். தண்ணீர்த் தீர்வை கிடையாது என்று அறிவிக்க வேண்டும். கோடையில் நெல் சாகுபடி செய்வது சிரமமான காரியம். அதற்கான முயற்சியை அரசாங்கம் செய்ய வேண்டும். பல்வேறு முறைகளில் இன்றைக்கு உள்ள உணவுப் பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கைகளை எடுத்து சமாளிப்பதற்கான காரியங்களைச் செய்யவேண்டும்.

நீங்கள் பெரும் தவறு செய்திருக்கிறீர்கள். அந்தப் பெருந் தவறின் பயனை நீங்கள் அனுபவிக்க இருக்கிறீர்கள். அனுபவிப் பதற்கு முன்னால் மக்களைப் பட்டினி போடாமல் உயிர் வாழ்வதற்கு உணவு கொடுத்தாக வேண்டும். மக்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்றுவதற்காக முயற்சியை அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அரசு செய்த பெருந்தவறைக் கண்டித்து இந்த அரசின் பேரிலே கொண்டு வந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து என்னுடைய உரையை முடிக் கிறேன்.

* திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அவையின் முன் இருக்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசுகின்ற நான் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்பதற்கான காரணங் களாக மூன்றை இந்த அவையில் வைக்க ஆசைப்படுகிறேன்.

முதலில், அண்மையில் நடைபெற்ற கச்சத் தீவு ஒப்பந்தத்தில் மத்திய சர்க்கார் சார்பில் பிரதமர் அவர்கள் கையெழுத்திட்டார் கள். கையெழுத்திட்ட ஓரிரு நாட்களில் சட்டசபையில் இருக்கும் எல்லாக் கட்சித் தலைவர்களும் கொண்ட கூட்டத்தை முதலமைச்சர் அவர்கள் கூட்டினார்கள். நான் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு அப்போதே கூறினேன். இன்றைய தினம் கூட்டுகின்ற இந்தக் கூட்டத்தைப் பத்து நாட்களுக்கு முன்னதாகவே கூட்டியிருக்கலாம். அதன் மூலம் தமிழ்நாட்டு மக்களுடைய ஏகோபித்த எதிர்ப்பை மத்திய சர்க்காருக்கு

நீங்கள் தெரிவித்திருக்கவரம் என்று சொன்னேன். அதுமட்டு
மல்ல; தனக்கு இந்த ஒப்பந்தம் பற்றி எந்தவிதமான கருத்துக்
களும் தெரியாது என்று கூறினார்கள். அதற்கு முன்னதாக
இந்திய சர்க்கார் வெளி விவகாரக் காரியதரிசி திரு. கேவல்சிங்
சென்னைக்கு வந்திருக்கிறார்கள். முதல்வர் அவர்களைச்
சந்தித்திருக்கிறார்கள். கச்சத் தீவு ஒப்பந்தத்தைப் பற்றி பேசி
யிருக்கிறார்கள். பேசியதாக முதல்வர் அவர்களே இந்து பத்திரிகை
நிருபரிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி முதல்வர்
அவர்கள் மறுத்துப் பேசியதற்கு பார்லிமெண்டில் பேசிய மத்திய
சர்க்கார் வெளிவிவகார அமைச்சர் மதிப்பிற்குரிய சுவரன் சிங்
அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். இரண்டு முறை முதல
மைச்சர் அவர்களுடன் தீர்க்கமாகப் பேசியதாகவும், தெளிவாகப்
பேசியதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றையதினம் கச்சத்
தீவு ஒப்பந்தம் கையெழுத்தான பின்னல் அதைப்பற்றி மக்க
ளுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த முதலமைச்சர் அவர்கள்
மக்களுடைய உரிமைகள் பாதிக்கப்படா அளவுக்கு உரிய நேரத்தில்
மக்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரத் தவறியது
மந்திரி சபையின் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லுவதற்கு
முதற்காரணம்.

இரண்டாவது காரணம், நாட்டிலே போலீஸ் நிர்வாகம் இன்று
சீர்குலைந்திருக்கிறது. போலீஸ் நிர்வாகம் இன்று
இருப்பது போல் என்றைக்குமே இருந்ததில்லை என்று சொல்ல
லாம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானல் கோவை
நகரத்தில் நாம் குடியிருக்கும் பகுதியில் கடந்த இரண்டு மாத
காலத்திற்குள் ஏறக்குறைய பத்து கொலைகள் நடந்திருக்கின்றன.
நாகரிகம் உள்ள நகரத்திலேயே இப்படிப்பட்ட நிலைமைகள்
இருக்கின்றன என்றால் இதற்குக் காரணம் போலீஸ் துறை சரிவர
இயங்காமல் இருக்கிறது என்று திட்டவட்டமாகச் சொல்ல
முடியும்.

சென்னை நகரில் கடந்த மே மாதம் 26-ம் தேதி ஒரு ஊர்வலம்
நடந்தது. ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் அதிலே வருகிறார்கள்.
இனத் துவேஷத்தைக் கிளப்பும் கோஷத்தை இடுகிறார்கள்.
சென்னை நகரில் மவுண்ட் ரோடில் ஊர்வலம் வருகிறது.
மலையாளம்பட்டம் நடக்கும் தியேட்டரில் தகராறு செய்திருக்





கிறார்கள். ஓட்டலில் உள்ள முதலாளியை அடித்திருக்கிறார்கள்
பணத்தைக் கொள்ளையடித்திருக்கிறார்கள். மலையாளிகளைத
தாக்கியிருக்கிறார்கள். தமிழர்களையும் தாக்கியிருக்கிறார்கள்.
முஸ்லீம்களையும் தாக்கியிருக்கிறார்கள். இதற்குப் பின்னல்
கலைந்து சென்றார்கள். இந்தியன் பீனல் கோடு பிரகாரம்
கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்கள் அவர்கள்
செய்த குற்றங்கள்.

அந்த ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கியவர்கள் யாரோ,
எவரோ என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள முடியாது. ஊர்வ
லத்திற்குத் தலைமை தாங்கியவர்கள் நாத்திகம் ராமசாமி, வேலூர்
நாராயணன், முத்துராமலிங்கம். இவர்களை எல்லாம் போலீசா
ருக்கு நன்ருகத் தெரியும். முதலமைச்சருக்கும் தெரியும். இந்த
மூன்று பேரும் பீனல் கோடு பிரகாரம் கடுமையான குற்றங்களைச்
செய்தவர்கள். இன்றுவரை அந்த மூன்று பேரும் கைது செய்யப்
படவில்லை. முதலமைச்சர் அவர்கள் அதைக் கண்டித்துப் பேச
வில்லை. அதற்கு மாருக பெங்களூரில் முதலமைச்சர் அவர்கள்
பேசியிருக்கிறார்கள் ‘வன்முறைச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன ;
அதற்குக் காரணம் மலையாளிகள் அடக்கமாக நடக்கவில்லை ; சிறு
பான்மை மக்கள் அடக்கமாக நடக்கவில்லை என்ற கருத்தைச்
சொல்லியிருக்கிறார்கள்.’ இதற்கு இந்த காரணத்தைச் சொல்லும்
நீங்கள் நாளைக்கு ஒரு பெண் கற்பழிக்கப்பட்டாள் என்று கம்ப்
ளெயின்ட் தந்தால், அந்தப் பெண் அடக்கமாக இல்லாமல் அலங்
கரித்துக் கொண்டிருந்தாள் என்ற குற்றத்தைச் சுமத்துவதுபோல்
தவறு செய்பவர்களைக் கண்டிக்க வேண்டிய அரசாங்கம், அவர்
களைக் கைது செய்ய வேண்டிய அரசாங்கம், அநியாயங்களுக்கு
நியாயம் கற்பித்துக் கொண்டிருக்கும் மோசமான நிலைமை
இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க
விரும்புகிறேன்.

இதே நேரத்தில் போலீஸ் துறையைப் பற்றி உயர்நீதிமன்
றத்தில் இரண்டு மூன்று தீர்ப்புகள் வழங்கியிருக்கிறார்கள். சேலம்
மாவட்டத்தில் நடைபெற்ற கொலைக் குற்றத்தில் இரண்டு பேர்
கைது செய்யப்பட்டு அப்பீலுக்கு வந்த நேரத்தில் உயர்நீதி மன்ற
நீதிபதி சொன்னார்கள்—‘இன்றைய தினம் போலீஸ் துறை
சம்பந்தப்படாதவர்களைக் கைது செய்து, சாட்சியங்களை

தயாரித்து குற்றவாளிக் கூண்டுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.
கொலை செய்யப்பட்டவன் கைது செய்யப்படாமல் விடப்பட்
டிருக்கிறான்' என்று நீதிபதி தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கொலை செய்யப்பட்டவன்
கைது செய்யப்படவில்லை என்று எந்த நீதிபதி தீர்ப்பளித்தார்?

**திரு. செ. அரங்கநாயகம்:** கொலை செய்தவன் விடப்பட்டிருக்
கிறான் என்ற குற்றச்சாட்டை நீதிபதி சொல்லியிருக்கிறார்.
போலீஸ் இலாகா பேப்ரிகேட்டட் எவிடென்ஸைத் தயாரிக்கிறது;
அதை வைத்து வழக்குகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்
இன்று அதே நீதிபதி கூறியிருக்கிறார். தென் ஆற்காடு
மாவட்டத்தில் நக்ஸல்பாரி வழக்கில் ஒருவருக்கு தண்டனை
வர்ஜிதம் செய்யப்பட்டது. இன்குவஸ்ட் ரிப்போர்ட் பல
நாட்களுக்குப் பின்னால் வெளி வந்திருக்கிறது. அது எப்படி?
அது எப்படி மாஜிஸ்ட்ரேட் அலுவலகத்திற்குள் புகுந்தது?
குமாஸ்தாவோ அல்லது வேறு யார் அதற்குக் காரணமோ
அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நீதிபதி
சொல்லியிருக்கிறார். போலீஸ் துறை எந்த அளவுக்குத் தவறு
செய்கிறார்கள் என்பதற்கு இந்த இரு தீர்ப்புகளும் உதாரணங்கள்
ஆகும்.

கலெக்டர் மாநாடு நடைபெற்றது. அதில் ஆளுநர் அவர்கள்
பேசுகிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள்? அண்மையில்
9 சதவிகிதம் அளவிற்கு குற்றங்கள் அதிகமாகிவிட்டன என்று
சொல்லியிருக்கிறார்கள். நாட்டில் நடைபெறுகிற குற்றங்களை
சரியானபடி கண்டு பிடிக்க முடியவில்லை என்று சொல்லியிருக்
கிறார்கள்.

குற்றங்களை ஒழுங்காக கண்டுபிடிக்க முடியவில்லை, குற்ற
வாளிகளை சரியாக கைது செய்யவில்லை, குற்றம் செய்தவர்களை
உடனடியாக கைது செய்யாத காரணத்தினால் நாட்டில் குற்றங்கள்
அதிகமாகி விட்டன என்ற குற்றச்சாட்டை இந்த அமைச்சரவை
மீது நான் சுமத்துகிறேன்.

ஆக, அளிக்கப்பட்டுள்ள தீர்ப்புக்களையும், உள்ள
நிலைமைகளையும் வைத்துப் பார்க்கும்போது ஆளும்கட்சியும்,
அமைச்சர்களும் போலீஸ் நிர்வாகத்தில் அளவிற்கு மீறி
தலையிட்டிருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரங்கள் நிறைய



இருக்கின்றன. அந்த அடிப்படையில் இந்த அமைச்சரவை
மீது எங்களுக்கு முழுவதுமாக நம்பிக்கை இல்லை, இல்லை என்று
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக, அரிசிப் பிரச்னை. இன்றையதினம் அரிசிப் பிரச்னை
எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை எனக்கு முன்னால் பேசிய
நண்பர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த அரிசிப் பிரச்னை
தமிழ் நாட்டில் எப்படி வந்தது என்று நான் கேட்க விரும்பு
கிறேன். பருவ மழை பெய்யவில்லை, விவசாயம் செய்யவில்லை,
விளையவில்லை என்ற நிலைமை இருந்து அரிசி விலை உயர்ந்திருக்கு
மானால் இந்த அரசோடு ஒத்துழைக்க அண்ணா தி.மு.க. தயங்காது.
ஆனால் என்றைக்கும் இல்லாத அளவிற்கு விளைந்திருக்கிறது என்று
சொல்கிறார்கள் அமைச்சர்கள் 1967-ல் 35 லட்சம் டன் விளைந்த
இந்த மாநிலத்தில் இன்றையதினம் 57 லட்சம் டன் விளைந்
திருக்கிறது என்றால், இரண்டு மடங்கு அதிகமாக விளைந்
திருக்கிறது என்றால், உற்பத்தி அதிகமானால் விலை குறைய
வேண்டும் என்றுதான் நாம் படித்திருக்கிறோம். ஆனால்
தமிழ்நாட்டில் மட்டும் விலை குறையவேண்டாம், அப்படியே
இருக்கிறது இருந்தால் கூட போதும் என்றுதான் நாங்கள்
எதிர்பார்க்கிறோம். ஆனால் அதற்கு மாறாக ஏறுமுகமாக விலை
ஏறிக்கொண்டே இருக்கிறது. தஞ்சாவூரில் ஒரு விலை,
கோவையில் ஒரு விலை, மதுரையில் ஒரு விலை, திருநெல்வேலியில்
ஒரு விலை, கன்னியாகுமரியில் படி அரிசி ரூபாய் எட்டுக்கு
விற்கிறது. சில பகுதிகளில் அரிசி கிடைப்பதுகூட இல்லை என்ற
நிலை இருக்கிறது.

இந்த ஊர்கள் எல்லாவற்றிற்கும் சேர்த்துத்தானே
அமைச்சர்கள் இருக்கிறார்கள், முதல் அமைச்சர் அவர்கள்
இருக்கிறார்கள். இந்த ஊர்களில் ஒரு ஊர் ஆந்திராவில் ஒரு ஊர்
கேரளாவில் என்றில்லையே இப்படி ஒரே நிர்வாகத்தில், ஒரே
மண்டலத்தில் இருக்கக்கூடிய தமிழ்நாட்டில் அரிசி விலை
தாறுமாறாக ஏறியிருக்கிறது. இந்த விலையேற்றம் எப்படி
வந்தது? இன்றையதினம் நெல், அரிசி நடமாட்டக் கட்டுப்பாடு
வைத்துக்கொள்ளக் கூடிய அத்தனை அதிகாரங்களும் மாநில
அரசுக்கு இருக்கிறது. அதிகாரம் இல்லை என்று யாரும்
சொல்லமுடியாது. குருவாயூரப்பன் கோவிலுக்கு எவ்வளவு
பாட்டை போகவேண்டுமென்றாலும் முதல் அமைச்சரின் அனுமதி
இல்லாமல் போகமுடியாத சூழ்நிலைதான் இன்றையதினம்

தமிழகத்தில் இருக்கிறது. அப்படி இருக்கிற தமிழ் நாட்டில் இன்றைய தினம் இப்படி விலை தாறுமாறாக ஏறக் காரணம் என்ன? கோவையில் இரண்டு ரூபாய்க்கு வாங்கி கன்னியாகுமரியில் எட்டு ரூபாய்க்கு விற்கிறார்கள் என்றால் யார் இதைச் செய்கிறார்கள்? எப்படி அதை இந்த அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று இதைத்தான் நான் கேட்கிறேன்.

இவ்வளவு சொல்லியதற்குப் பின்னாலும் புரியவில்லை என்றால் அண்மையில் நடைபெற்ற சம்பவத்தை நான் மிக்க வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள், கோவையில் அரிசி விலை இரண்டரை ரூபாய் என்று விற்கிறது. விலையைக் குறைக்க நடவடிக்கை எடுங்கள் அல்லது இந்தப் பிரச்னை பற்றி பேசுவதற்கு உடனடியாக சட்ட மன்றத்தைக் கூட்டுங்கள் என்று கடிதம் கூட எழுதினோம். அப்போது சட்ட மன்றம் கூட்டப்படவில்லை. ஆனால் இரண்டரை ரூபாய் அதிகம் என்று நாங்கள் எடுத்துச் சொல்லி அரசு எடுக்கும் நடவடிக்கை மூலம் இரண்டேகால் ரூபாயாகக் குறையும் என்று நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். தஞ்சையில் தடை விதித்திருக்கிறார்கள். அங்கிருந்து நெல், அரிசி வெளியே போகக் கூடாது என்றிருக்கிறது. அமைச்சர் அவர்கள் திடீரென்று நடவடிக்கை எடுக்கிறார்கள், அரசு திடீரென்று நடவடிக்கை எடுக்கிறது, நடவடிக்கை எடுத்து தடையை நீக்குகிறோம் என்று சொல்கிறார்கள். அப்போது நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம், கோவையில் இரண்டரை ரூபாய் என்று விற்கப்படுவது இரண்டே கால் ரூபாய் என்று குறையும் என்று. ஆனால் அதற்கு மாறாக இரண்டே முக்கால் ரூபாய், மூன்று ரூபாய் என்று உயர்ந்திருக்கிறது. இருந்த தடையை எடுத்தார்கள், அப்படி எடுத்ததற்குப் பின்னால் தஞ்சை மாவட்டத்தில் இருந்த ஆயிரக்கணக்கான மூட்டைகள் எங்கே போயின என்ற கேள்வியைத்தான் நான் அமைச்சரவையைப் பார்த்து கேட்க விரும்புகிறேன். தடையை எடுக்கிறோம் என்றார்கள். ஆயிரம் லாரிகள் காத்துக் கிடக்கின்றன. அத்தனை லாரிகளும் அரிசி மூட்டைகளை எடுத்துக்கொண்டு ஊர்வலம் போல் போயிருக்கின்றன. அப்படிப் போனவர்கள் அவற்றை எங்கே கொண்டு போனார்கள்? உங்களுக்குத் தெரியாமல் அந்த மூட்டைகள் எங்கே போயின? இதைத்தான் நான் மிக்க



வேதனையோடு அமைச்சரவையை பார்த்துக் கேட்க விரும்புகிறேன். பட்ஜெட்டை நிறைவேற்றிவிட்டு முதல் அமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் மந்திரி வேலை பார்க்கச் சென்றால் அவர்கள் அரிசி கமிஷன் ஏஜென்ட்கள் போல் அந்த மாவட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை வேதனையோடு இந்த அமைச்சரவை மீது சுமத்த விரும்புகிறேன். இத்தகைய அநியாயங்கள் காரணமாக மக்களின் நம்பிக்கையை நீங்கள் இழந்துவிட்டீர்கள், உங்கள் மீதுள்ள நம்பிக்கையை மக்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு விட்டார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஒரு அமைச்சர் சொல்கிறார், படி அரிசி 12 ரூபாய் விற்க வேண்டிய நிலையில் மூன்று ரூபாய்க்கு விற்பது மிகக் குறைந்தது தானே என்று.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** துணைத் தலைவர் அவர்களே, அந்த வார்த்தைகள் பத்திரிகைகளில் வெளி வந்தது என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. 4 ஆம் தேதி அன்று எனக்கு ஒரு நகராட்சி மன்றம் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது ஒரு மகஜர் கொடுத்தார்கள். அந்த மகஜரைக் கொடுத்தவர்கள் அண்ணா தி.மு.க. தோழர்கள் என்றும், அந்தப் பகுதியில் விலையேற்றம் அதிகமாக இருக்கிறது என்றும், நான்கு ரூபாய்க்கு மேல் அரிசி விற்கப்படுகிறது என்றும் சொன்னார்கள். நான் சொன்னேன், உயர்ந்த அளவில் விற்கப்படுவதை இந்த அரசு ஒருகாலத்திலும் அனுமதிக்காது; தமிழக முதல் அமைச்சர் அவர்கள் அதுபற்றி கடுமையான நடவடிக்கை எடுத்திருப்பதை நீங்கள் எல்லாம் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள், அண்டை மாநிலத்தில் எல்லாம் ரூ. 12, ரூ. 10 என்ற அளவிற்கு உயர்ந்த அளவிற்கு அரிசி விற்கப்படுவதை நாம் காண்கின்ற நேரத்தில் நம் மாநிலத்தில் உயர்ந்த அளவிற்கு உணவு தானியம் விற்கப்படுவதை இந்த நாடு தாங்காது, இந்த மாநிலம் ஏற்காது, அதை அனுமதிக்காது என்று எடுத்துச் சொல்லி விலையேற்றத்திற்குக் காரணம் என்னவென்றால் பண வீக்கம்தான் காரணம் என்றும் ரூபாயின் மதிப்பு குறைந்திருக்கிறது; நீங்கள் சொல்கிறீர்கள் இந்த மகஜரில் 1966-ல் இரண்டரை ரூபாய்க்கு படி அரிசி விற்றபோது உங்கள் ஆட்சியில் நான்கு ரூபாய்க்கு மேல் விற்கலாமா என்று கேட்கிறீர்கள், இது அநியாயமான ஆட்சி

அல்ல பணத்தின் மதிப்பு அற்ற தன்மையில் விலை ஏறிவிட்டது என்பதை நண்பர்களுக்கு உணர்த்துகிறேன் . என்றுதான் தெரிவித்திருக்கிறேன் தக்கோலத்தில் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கோவை செழியன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதுபற்றி எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது. ஐந்தரை ரூபாய்க்கு படி அரிசி விற்கிறது என்று சந்தோஷப்பட வேண்டும், உண்மையில் ரூ. 13.50-க்கு விற்க வேண்டியது ரூ. 5.50-க்குத் தான் விற்கிறது என்று அமைச்சர் அவர்கள் பேசியதாக பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. அமைச்சர் அவர்கள் அந்தப் பத்திரிகைகளை யெல்லாம் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். உடனடியாக மறுப்புவிடாமல் இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஏதோ விளக்கம் தருவது எந்தவிதத்தில் சரி என்பதை உங்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்போது தந்திருக்கிற விளக்கத்திலும் அந்தப் பதில்தான் இருக்கிறது. இரண்டரை ரூபாய்க்கு விற்றது பண வீக்கம் காரணமாக நாலரை ரூபாயாக ஏறியிருக்கிறது என்றால் கட்டாயம் அவர்கள் அப்போது ரூ. 13 என்று சொல்லியிருக்க வேண்டும், சொல்லி யிருப்பார்கள். அமைச்சர்களாக இருப்பவர்கள், பொறுப்பில் இருப்பவர்கள் அதற்கு அப்போதே மறுப்பு கொடுத்திருக்க வேண்டாமா? ஆனால் அப்படி மறுப்பு கொடுக்கவில்லை பத்திரிகை களுக்கு. இன்று தமிழ் நாட்டில் மக்களிடையே ஒரு பீதி நிலவுகிறது. ரூ. 13-க்குத்தான் விற்கப்போகிறார்களா என்று தமிழக மக்கள் பீதியடைந்திருக்கிறார்கள். ஒரு அமைச்சரே சொல்லியிருக்கிறாரே, அப்போது நம் கதி என்ன என்று மக்கள் அஞ்சி நடுங்குகிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** உறுப்பினர்கள் அருள்கூர்ந்து கொஞ்சம் நிதானமாகக் கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நான்கு ரூபாய் என்ற அளவிற்கு விலையேற்றத்திற்குக் காரணம் பணத்திற்கு மதிப்பு இல்லை, பண்டத்திற்குத்தான் மதிப்பு எனச் சொல்லி பணத்தின் மதிப்பைப் பொறுத்துத்தான் பண்டத்தின் விலை ஏறுகிறது என்று சொல்லி யிருக்கிறேன். விலையேற்றத்தை அனுமதிக்கமாட்டோம், விலை



யேற்றத்தை கண்டிக்கிறோம். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுத்து விலை சரிவதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்திருக்கிறேன். அதோடு வாங்கு வதற்கு சக்தியற்ற மக்களுக்கு அரிசி குறைந்தவிலையில் கொடுக்க திட்டமிடப்பட்டிருக்கிறது என்றும் உடனடியாக குறைந்த விலையில் அரிசி விற்பதற்குரிய ஏற்பாட்டினை செய்திருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறேன். திரு. செழியன் அவர்கள் பல பத்திரிகைகளில் வந்திருப்பதாகக் கூறினார்கள். பல பத்திரிகைகள் என்றால் அவர்கள் பத்திரிகைகளில். அவர்கள் பத்திரிகைகளில் அவர்கள் சொல்கிற வார்த்தைகளை வைத்துக்கொண்டு அவை உண்மை என்று நினைக்க வேண்டாம். சொன்ன நண்பர்களை எனக்குத் தெரியும். கிண்டல் செய்தார்கள். குறும்புத்தனம் செய்தார்கள். பண வீக்கத்தைப் பற்றிச் சொல்லி, அரசின் தன்மையைப் பற்றிச் சொல்லி மக்களை திசை திருப்ப வேண்டாம், உடனடியாக குறைந்த விலையில் அரிசி விற்க நடவடிக்கை எடுப்போம் என்று அந்தப் பகுதி மக்களுக்கு அனுதாபத்திற்குரிய வகையில் ஆறுதல் கூறிவிட்டு வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிக் கேஷன். இங்கு ஒரு விளக்கம் தந்தார்கள். எனக்கு பொரு ளாதாரம் அதிகம் தெரியாமல் இருக்கலாம். ஒரு சந்தேகம் கேட்க விரும்புகிறேன். அவர்கள் சொன்னார்கள், பண வீக்கத்தால் பணத்தில் மதிப்பு குறையும். அரிசி விலை ஏறும் என்று சொன்னார்கள். தஞ்சாவூரில் இருக்கிற அரிசியை வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு போகலாம் என்ற உத்தரவு வந்த 24 மணி நேரத்தில் திடீரென்று ஏறியிருக்கிறது. ஆகவே இந்த விலையேற்றத்திற்கு மத்திய சர்க்காருடைய தவறான பொருளா தாரக் கொள்கைதான் காரணம். அதனால்தான் விலை ஏறியிருக் கிறது என்று அமைச்சர் அவர்கள் இந்த அவையில் சொல்கிறார்களா என்பதை தங்கள் மூலம் நான் கேட்க விரும்புகிறேன்.

(நண்பகல் 12.00)

**திரு. செ. அரங்கநாயகம்:** அமைச்சர் அவர்கள், அரிசி விலையேற்றத்திற்குக் காரணம் பணவீக்கம் என்று சொன்னார்கள்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1974 ஆகஸ்ட் 12

இதே கருத்தை பட்ஜெட் கூட்டத்தின் போது முதலமைச்சர் அவர்களும் தெரிவித்து இருந்தார்கள். நான் சொல்கிறேன், பணவீக்கம் தான் அரிசி விலையேற்றத்திற்குக் காரணம் என்று சொன்னால் அந்த விலையேற்றம் படிப்படியாக இருக்கும். நிமிடத்திற்கு ஒரு விலை, மணிக்கு ஒரு விலை என்று ஏறிக் கொண்டிருக்காது. சேலம் நகரத்தில் 12 மணிக்கு ஒரு விலை என்றால், 2 மணிக்கு ஒரு விலை சொல்கிறார்கள். 4 மணிக்கு ஒரு விலை சொல்கிறார்கள். இதற்குக் காரணம் பண வீக்கம் என்றால் நாம் பொருளதாரத்தைத் தவறாகப் படித்துக்கொண்டு, இங்கே நிர்வாகம் நடத்திக்கொண்டு இருக்கிறோம் என்றுதான் பொருள். பணவீக்கம்தான் விலை ஏற்றத்திற்குக் காரணம் என்பதை எங்களால் ஒப்புக்கொள்ளமுடியாது.

இன்றைய தினம் தமிழ்நாட்டில் ஏற்பட்டு இருக்கும் அரிசி விலையேற்றத்திற்குக் காரணம் வர்த்தக சூதாடிகள் மொத்த அரிசி வியாபாரிகள்தான் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களையெல்லாம் பிடித்து கட்டுப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கும் அரசாங்கம், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டிய அரசாங்கம், அதிகாரத்தை பயன்படுத்தத் தவறி இருக்கிறது.

உங்களுக்கு உதாரணத்திற்குச் சுட்டிக்காட்டவேண்டுமானால் பத்திரிக்கையில் ஒரு செய்தி வந்தது. வடநாட்டில் மீரட் என்ற இடத்தில் இருக்கும் மொத்த தானிய வியாபாரிகள் கைது செய்யப்படுகிறார்கள். அவர்கள் கையில் விலங்கிடப்பட்டு ரோடில் இழுத்துச் செல்லப்படுகிறார்கள். அவர்களைக் கைது செய்து ரோடில் இழுத்துக்கொண்டு சென்றதற்குப் பிறகு மூட்டைக்கு ரூ. 15 விலை இறங்கியிருக்கிறது என்று சொன்னால் விலையேற்றத்திற்கு யார் காரணம்? இவர்களை கைது செய்யத்தவறிய இந்த அரசாங்கம் பதவியில் இருக்க எந்தவிதமான உரிமையும் கிடையாது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இன்றையதினம் ஏற்பட்டு இருக்கும் அரிசிவிலை யேற்றத்திற்குக் காரணம் பதுக்கல்காரர்கள், சமூக விரோத சக்திகள் தான். அவர்கள் மீது இந்த அரசு கடும் நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே தான் நாங்கள் இன்றையதினம்



1974 ஆகஸ்ட் 12] [திரு. செ. அரங்கநாயகம்]

இங்கே இந்த அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக்கொண்டு வந்திருக்கிறோம். அமைச்சர்கள்மீதும் மக்கள் நம்பிக்கை இழந்து இருக்கிறார்கள். ஆகவே, இந்த நேரத்தில் இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தரும் பொறுப்பு ஆளும் கட்சிக்காரர்களுக்கு இருக்கிறது என்று கூறிக்கொண்டு, நான் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை வரவேற்று, ஆதரித்து என் பேச்சை முடிக்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து பேசிக்கொண்டிருக்கிறோம். இதற்குப் பதில் சொல்லும் கடமை முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. . .

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் :** இங்கே மற்ற அமைச்சர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்திற்குச் சென்றிருக் கிறார்கள். அதைப் பிரச்னையாக எடுத்துக்கொண்டு பேசுவது நன்றாக இருக்காது.

**திரு. கோவை செழியன்:** அவர் எழுந்து சென்றது எங்களை அவமதிப்பது மாதிரி இருக்கிறது.

* * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்படிப்பேசுவதால் நீங்கள் அலுவல் ஆய்வுக்குழுவை அவமதிப்பது போலாகும். முதலமைச்சர் அவர்களும், முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் அங்கே போய் இருக்கிறார்கள். ஆகவே, அதைப் பிரச்னையாக எழுப்புவது சரியல்ல.

**திரு. கோவை செழியன் :** அந்தக் குழு கூட்டத்தை மாற்றி வைத்துக் கொள்ளட்டும்.

* * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய பேச்சுரிமையை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தக்கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் குறித்துப் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**திரு. கோவை செழியன்:** ஜனநாயகத்தில் இது சரியா? நான் பேசியதை ஏன் எக்ஸ்பஞ்ச் செய்யவேண்டும்? என்ன காரணம் இருக்கிறது என்று நான் கேட்கிறேன்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இங்கே பேசக்கூடியவர்கள் பேச்சைக் கேட்கக்கூடாது என்று சென்று விடவில்லை என்பதை விளக்கமாகத் தெரிவித்த பின்னும், உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது குற்றம் சாட்டிப்பேசியதால் நிகழ்ச்சிக்குறிப்பிலிருந்து நீக்கச்சொன்னேன். திரு. வடிவேல் அவர்கள் பேசுவார்கள்.

(திரு. எஸ். வடிவேல் எழுந்து நின்றார்)

**திரு. கோவை செழியன்:** என்ன குற்றம் நான் சாட்டினேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது இங்கே திரு. வடிவேல் அவர்கள் தான் பேசவேண்டும். திரு. கோவை செழியன் பேசுவதற்கு உரிமை இல்லை.

**திரு. கோவை செழியன்:** எனக்கு உரிமை இருப்பதால் தான் பேசுகிறேன். தயவு செய்து எனக்கு தாங்கள் பதில் சொல்ல வேண்டும். நான் என்ன தவறான வார்த்தையை உபயோகித்தேன் என்பதை தயவுசெய்து சொல்லுங்கள்.

(பல உறுப்பினர்கள் குரலெழுப்பினர்)

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:** திரு. வடிவேல் பேசுவார்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: We would like to know what are the unparliamentary words used.

MR. DEPUTY SPEAKER: There should not be any insinuation in a Member's speech.

* * *

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



THIRU KOVAI CHEZHIYAN: I have not used that word.

MR. DEPUTY SPEAKER: That is the insinuation in the statement of Mr. Kovai Chezhiyan.

THIRU KOVAI CHEZHIYAN: I never used that word. * * * *

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, ஒரு முதலமைச்சர் * * என்று சொல்வது சட்டமன்றத்தில் மரபு தானா என்பதைச் சொல்ல வேண்டும். முதலமைச்சர் அவர்கள் கடமையைச் செய்வதற்காகப்போய் இருக்கும்போது, இப்படிப் பேசுவது முறைதானா என்பதற்கு தாங்கள் தீர்ப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:** ஏற்கனவே அது பற்றி தீர்ப்பு வழங்கியாகிவிட்டது. இப்போது வடிவேல் பேசுவார்.

**திரு. எஸ். வடிவேல்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்து மாண்புமிகு திரு. மாரிமுத்து அவர்கள் கொண்டுவந்துள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு அரிசியின் விலை வரலாற்றிலேயே என்றைக்கும் இல்லாத அளவுக்கு தமிழகத்தில் ஏறியிருக்கிறது. இந்த அரிசி விலை உயர்வுக்கும் காரணம் எங்களைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக்கழக அரசுதான் என்ற குற்றம் சாட்டுகிறோம். குறிப்பாக, தமிழ்நாட்டில் அறுவடை நேரத்தில் என்ன விலைக்கு நெல்லை அவர்கள் கொள்முதல் செய்தார்கள் என்பதை மாண்மிகு உணவு அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அன்று கோ-20 நெல்லை, நடுத்தர நெல்லை, ஒரு 57 கிலோ கொண்ட மூட்டை ஒன்றுக்கு ரூ. 40.30 என்று அறுவடை நேரத்தில் கொள்முதல் செய்தார்கள். குவிண்டால் என்று வைத்துக் கொண்டால், ஒரு குவிண்டால் நெல்லை ரூ. 70.80 காசுக்கு கொள்முதல் செய்தார்கள். அந்த ஒரு குவிண்டால் நெல்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

இன்றைக்கு 150 ரூபாயிலிருந்து ரூ. 200 வரை விற்கிறது என்று சொன்னால் அதனுடைய காரணம் என்ன என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் உணர்ந்து பார்க்க வேண்டும் என்பதற்காக சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக அன்று பிடித்த கொள்முதல் நெல்லை இன்றைக்கு விற்றால், நாட்டில் ஏழை எளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, என்.ஜி.ஓ-க்களுக்கு, நடுத்தர சிப்பந்திகளுக்கு நியாய விலையில் அரிசி கிடைக்கும். இந்த அகவிலை கொடுத்து அவர்கள் வாங்க வேண்டியிருக்காது. அன்று ஒரு குவிண்டால் நெல் ரூ. 70.80 காசுக்கு கொள்முதல் செய்தார்கள். வண்டிச் சத்தம் ஒரு ரூபாய், அவியல் ஒரு ரூபாய், மில் அரவை கூலி 4 ரூபாய், மற்ற செலவுகள் எல்லாம் சேர்த்து வைத்துக்கொண்டால் ரூ. 7.75 வரும். ஆக, மொத்தம் ரூ. 18.55 காசு தான் இன்றைக்கு நியாயமான அரிசி விலை இருக்கவேண்டும்.

நெல் அரைத்ததால் அதில் கிடைக்கும் தவிடு, உமி போன்றவற்றால் ரூ. 4 கிடைக்கும். ஆகவே, அதைக் குறைத்தால் ரூ. 74.55-க்கு குறைந்தபட்சம் அரிசி விற்க முடியும். குவிண்டாலுக்கு ரூ. 75 என்று வைத்துக்கொண்டால் கூட, இந்த அரசாங்கம் ஒரு கிலோ ஒன்றுக்கு ரூ. 1.06 பைசாவிற்கு அரிசி கொடுக்க முடியும். கொடுக்கலாம். இன்று அரசாங்கத்தின் விலையை எடுத்துக்கொண்டால் ரூ. 1.70 முதல் விற்கிறார்கள். தனியார் விற்கிற விலையைப் பார்த்தால் 2.70-லிருந்து ரூ. 3 வரை விற்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் இந்த விலை விற்கப்படுகிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் பார்த்தால் அரிசி படி, பட்டணம் படி அல்ல, சின்ன படி ரூ. 2.45-லிருந்து ரூ. 2.60 காசு வரை விற்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தில் ரூ. 169-லிருந்து ரூ. 1.75 வரை விற்கிறார்கள். ஒரு குவிண்டால் நெல் விலை, கொள்முதல் விலையை வைத்துப் பார்க்கிறபோது, இன்றைக்கு அரிசி விற்கிற விலை ரூ. 4.45 என்று இருக்கிறது என்று சொன்னால், இந்த லாபம் யாருக்குக் கிடைக்கிறது. கொள்ளை லாபக்காரர்களுக்குக் கிடைக்கிறது. வர்த்தகச் சூதாடிகளுக்குக் கிடைக்கிறது. இந்த வர்த்தகச் சூதாடிகளுக்கும்





கொள்ளை லாபக்காரர்களுக்கும் தான் இந்த அரசின் கதவு திறந்துவிடப்பட்டிருக்கிறது என்பதாகத் தான் நான் குற்றம் சாட்டுகிறேன். குறிப்பாக அமைச்சர்கள் கூறும் காரணம் சரியில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். அமைச்சர் என்ன சொல்கிறார்? மத்திய அரசினுடைய உர விலை உயர்ந்ததன் காரணமாகத் தான் இன்றைக்கு நெல் விலை உயர்ந்திருக்கிறது, நெல் விலை உயர்ந்திருக்கிற காரணத்தினால் தான் அரிசி விலை உயர்ந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். மத்திய அரசினுடைய உர விலை இப்பொழுது தான் உயர்ந்திருக்கிறது. இந்த உர விலை ஏற்றம் அடுத்த ஆண்டைத் தான் பாதிக்கும். இன்றைக்கு நீங்கள் சொல்கின்ற காரணம் போலிக் காரணம். அது எந்த ஆண்டை பாதிக்கும்? வருகிற ஆண்டு நெல் அறுவடை காலத்தில் தான் பாதிக்கும். இந்த ஆண்டு பாதிக்கவில்லை. உர விலை ரூ. 55.70, 50 கிலோ கொண்ட யூரியா மூட்டை. போன ஆண்டை இது பாதிக்காது. நீங்கள் சொல்வது இதற்குத் தகுந்த காரணம் அல்ல என்பது தான் என்னுடைய கருத்தாகும்.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ 67½ லட்சம் ஏக்கர் நிலம் ஒரு போகம், இரு போகம் விளையக்கூடிய நிலம். இரு போகம், ஒரு போகம் விளையக்கூடிய நிலங்களில் சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு ஒரு டன் நெல் விளைகிறது என்று கணக்கிட்டாலும், ஏறத்தாழ 67½ லட்சம் டன் நெல் விளைகிறது. இந்த 67½ லட்சம் டன்னில் உழவர்கள் தங்களுடைய இருப்புக்காக 37½ லட்சம் டன் நெல் வைத்துக்கொண்டாலும், மீதி 30 லட்சம் டன் நெல்லை சாதாரணமாக அரசு கொள்முதல் செய்யலாம். அப்படிக் கொள்முதல் செய்து, தமிழ்நாட்டில் இம்மாதிரி விலையேற்றம் இல்லாமல் சரியான, குறைவான விலையில் கொடுக்க முடியும் இந்த அரசு. அப்படிக் கொடுக்க முடியாததற்குக் காரணம் என்ன என்பதை இந்த அரசு உணராத அரசு என்று நான் கருதவில்லை. அப்படி உணர்ந்தும் மக்களை ஏமாற்றுகின்ற அரசாக நான் கருதுகிறேன். அமைச்சர்கள் இதைப்பற்றி தெரியாத அமைச்சர்கள் அல்ல. இவ்வளவும் தெரிந்த அமைச்சர்கள் இருக்கும்பொழுது தான் இன்றைக்கு குவிண்டால் நெல் ரூ. 150 முதல் 200 வரையில் விற்கிறது. இப்படி விற்கும்படியாகச் செய்து வாழவைக்கப்

பட்டவர்கள் யார்? நெல் உற்பத்தி செய்யக்கூடிய சின்னஞ்சிறு விவசாயிகள், சிறு மிராசுதார்கள், வாரதார்கள், குத்தகைதார்கள், ஏழை உழவர்கள், இவர்கள் விற்கின்றபோதே நெல் விலை உயர்ந்ததால் ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம். ஆனால் அவர்கள் கூட்டுறவு சொசைடிகள், கடைக்காரர்கள், மற்றவர்களுக்கு கொடுத்த பிறகு இன்றைக்கு விலை உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் யாருக்காக உயர்ந்திருக்கிறது? வர்த்தக சூதாடிகள், கொள்ளை லாபம் அடிப்பவர்கள், ஆயிரக்கணக்கில் நெல் மூட்டைகளை பிடித்துவைத்திருப்பவர்கள், ரூ. 55 என்று மூட்டைக்கு அச்சாரம் கொடுத்தவர்கள், அட்வான்ஸ் கொடுத்தவர்கள் இவர்களுக்காகத்தான் உயர்ந்திருக்கிறது. ஒரே ராத்திரியில் ஜூலை மாதத்தில் தஞ்சை மாவட்டத்தில் 10,000 லாரிகளைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஒரே ராத்திரியில் 10,000 லாரிகளைக் கொண்டுவந்தால் என்ன ஆவது? (குறுக்கீடு) 5,000 லாரிகள் என்று அவர் சொன்னால் நான் அதையே சொல்லவேண்டும் என்று என்ன அவசியம் இருக்கிறது? 10,000 லாரிகள் தஞ்சை மாவட்டத்தில் ஒரே ராத்திரியில் நிற்கின்றன, ஜூலை மாதம் 19-ம் தேதியன்று. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்னால் வர்த்தகர்கள் அனைவரும் படை எடுக்கிறார்கள். மறுபடியும் அமைச்சர் உத்தரவு வருகிறது. 10 மணிக்கு எல்லா லாரிகளும் ஒரேயடியாகப் புறப்படுகின்றன. எங்கள் பக்கத்தில் கெளுத்தி மீன் என்று சொல்வார்கள், அதுமாதிரியாக எல்லா லாரிகளும் வரிசையாக புறப்படுகின்றன. இம்மாதிரி ஒரு உத்தரவு பிறப்பிப்பதற்கு என்ன காரணம்? ஒரு கட்சிக்கு ஒரு உத்தரவா? இரவில் ஒரு தீர்மானம் போடுவது, விடிந்தால் ஒரு தீர்மானம் போடுவது. எதற்காக இப்படி ஆர்டர் போடுவது? ஏழை எளியவர்களாக இருக்கும் நெல்லை உற்பத்தி செய்யக்கூடியவர்கள் பயன் அடைவதற்காகப் போடப்பட்டதா? அப்படிப் போடப்படவில்லை. பதுக்கல்காரர்கள், வர்த்தக சூதாடிகள், கொள்ளை லாபம் அடிக்கிறவர்கள் ஆகியவர்களுக்கு இந்த அரசு துணை நிற்கிறது. அதன் காரணமாகத்தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு ராஜிநாமா செய்வது சாலச் சிறந்தது என்று நான் கருதுகிறேன்.



தஞ்சை மாவட்டத்தில் என்ன சொல்கிறார்கள். ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பு ரூபாய்க்கு 3 படி எங்களது லட்சியத் திட்டம், உடனடித் திட்டம் என்றெல்லாம் அழகான வார்த்தைகள் போட்டு வாக்குறுதி அளித்தார்கள் அவைகள் என்ன ஆயிற்று? ரூபாய்க்கு மூன்று படி என்று சொன்னார்கள். இன்றைக்கு நெற்களஞ்சியம் என்று சொல்லப்படும் தஞ்சை மாவட்டத்தில் சோழ நாடு சோறுடைத்து என்று சொல்லப்படும் தஞ்சை மாவட்டத்தில் ஏழை எளிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், நெல்லை விளைவிக்கக்கூடிய மக்கள், உழவர்கள் கஞ்சிக்கு ஆலாய் பறக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** நண்பர் அவர்கள் தன்னுடைய விளக்கங்களை எடுத்துக் கூறும்பொழுது, 'உங்களுடைய திட்டங்களெல்லாம் என்ன ஆயிற்று' என்று கேட்டார்கள். காங்கிரஸ் காரர்கள்கூட சுயராஜ்யம் வந்தால் பாலும் தேனும் ஆறாக ஓடும் என்று சொன்னார்கள். பால் ஆறும் ஓடவில்லை, தேன் ஆறும் ஓடவில்லை. இவைகளையெல்லாம் எடுத்துச்சொல்லும்பொழுது நீங்களும் ஒத்துழைத்தால் ரூபாய்க்கு ஒரு படி அரிசி, இரண்டு படி அரிசி, மூன்று படி அரிசி என்று படிப்படியாக நிதானமாகப் போடுவதற்கான நடவடிக்கை எடுத்து செயல்படலாம் . . .

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திரு. வடிவேல் அவர்கள் தொடர்ந்து பேசட்டும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது 'ஏதோ காங்கிரஸ் காரர்கள் வந்தால் பாலும் தேனும் ஆறாக ஓடப்பண்ணுவோம் என்று கூறினார்கள், அவர்களால் செய்ய முடியவில்லை' என்று குறிப்பிட்டு, அது போல நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை தங்களால் நிறைவேற்ற முடியவில்லை என்று கூறினார்கள். ஆகவே, தி.மு.க.-வினர் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு அளித்த வாக்குறுதிகள் அனைத்தும் இந்த நிலையில் கைவிடப்பட்டிருக்கிறது, ஆகவே அவைகளை நிறைவேற்ற முடியாது என்று அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

[திரு. எஸ். வடிவேல்] [1974 ஆகஸ்ட் 12

1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இம்மாநகரில் பைலேரியா நோய்க் கட்டுப்பாடு தேசியத் திட்டம் தொடங்கப்பட்டதன் பயனாக, கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட்டுள்ளன. இம்மாநகர எல்லைக்குள் கொசு வளருமிடங்கள் பற்றிய விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொசுத் தொல்லைகளுக்குக் காரணமானவையும் போதிய கொசு மருந்துகள் கிடைக்காமையால் இதுவரை கவனிக்காமல் விடப்பட்டவையுமான வீட்டைச் சுற்றிலும் உள்ள கொசு உற்பத்தியாகும் இடங்களில் தற்பொழுது வாரத்திற்கு ஒருமுறை மருந்து தெளிக்கப்படுகிறது.

கொசு கட்டுப்பாடு வலம்வரும் படைகள் என்றழைக்கப்படுகின்ற சிறப்பு மருந்து தெளிக்கும் படைகள் ஒவ்வொரு மண்டலத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மக்களிடமிருந்து வருகின்ற புகார்களை கவனித்து எப்பகுதியிலிருந்து புகார் வந்ததோ அப்பகுதிகளில் கொசுத்தொல்லையை அகற்றுவதே இந்த சிறப்புப் படையினரின் பணிகளாகும். இதே நேரத்தில் இவ்வாறு வரும் புகார்களில் தவறுகளுக்கு காரணமாயிருக்கக் கூடிய படைப் பிரிவினரைக் கண்டிப்பதற்கு மண்டல அதிகாரிக்கு உதவியாகவும் இருக்கிறது. இக்குழுவில் கொசு சேகரிப்பவர் ஒருவர் உண்டு. எந்தெந்த நேரங்களில் கொசு

£ 6. Notification issued with G.O. Ms. No. 1867, Revenue, dated the 11th April 1973, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899, in respect of sale deed executed by Mrs. Rangammal Krishnamachari in favour of Khadi Gramodyog Sangh, Madras.

£ 7. Errata issued with Memo. No. 16056/ME/74-1, Rural Development and Local Administration, dated the 9th March 1974, to the Rural Development and Local Administration Department Notification No. II(1)/RUL/283 (aaw)/74, published at pages 6 to 8 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 21st January 1974.

£ 8. Errata issued with Memo. No. 26571/ME/74-1, Rural Development and Local Administration, dated the 9th March 1974, to the notification No. II(2)/RUL/283(ar)/74 dated the 11th January 1974, published at pages 1-4 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 17th January 1974.

£ 9. Errata issued with Memo. No. 18540/ME/74-1, Rural Development and Local Administration, dated the 16th March 1974, to the Notification No. II(2)/HO/523(i)/74, published at pages 10-12 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 23rd January 1974.

£ 10. Errata issued with Memo. No. 17667/ME/74-1, Rural Development and Local Administration dated 16th March 1974 to the Notification No. II(2)/RUL/100(j)/74, published at pages 14-23 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 4th January 1974.

& 11. Errata issued with Memo. No. 12326/ME/74-1, Rural Development and Local Administration, dated the 4th March 1974 to the Notification II No. 5773 (h) of 1973, published in Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 3rd December 1973.

& 12. Errata issued with Memo. No. 15496/ME/74-1. Rural Development and Local Administration, dated the 5th March 1974, to the Notification No. II (2)/RUL/283 (aan)/74, published at pages 23-26 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 19th January 1974.



121, 31/1974.
2.1.74.5751

& 13. Notification issued with G.O. Ms. 738, Revenue, dated the 20th February 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the reconveyance deeds to be executed in favour of Thiru P. S. Srinivasa Desikan and Thiru L. Varadarajan.

& 14. Errata issued with Memo. No. 9080/Me/74-1, Rural Development and Local Administration, dated the 1st March 1974 to the Notification No. II(2)/RUL/100(z)/74, published at pages 45 to 48 of Part II-Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 4th January 1974.

& 15. Errata issued with Memo. No. 26556/ME/74-1, Rural Development and Local Administration, dated the 1st March 1974 to the Notification No. II(2)/RUL/283(aac)/74, published at pages 5 and 6 in Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 19th January 1974.

& 16. Notification issued with G.O. Ms. No. 27.., Rural Development and Local Administration, dated the 12th December 1973 in regard to amendment to the Tamil Nadu Cottage Industries Construction and Establishment (Restrictions, Limitations and Conditions) Rules, 1960.

61669

& 17. Errata issued with Memo. No. 19126/ME/74-1, Rural Development and Local Administration, dated the 12th March 1974 to the Notification No. II(2)/RUL/283(...)/74, published at pages 1-5 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 19th January 1974.

& 18. Errata issued with Memo. No. 34136/ME/74-1, Rural Development and Local Administration, dated the 13th March 1974 to the Notification No. II (2)/RUL/1003 (s)/74, published at pages 31 to 33 of Part II-Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 16th February 1974.

& 19. Errata issued with Memo. No. 21370/ME/74-1, Rural Development and Local Administration, dated the 16th March 1974 to the Notification No. II (2)/RUL/100 (f)/74, published at pages 9—11 of Part II—Section 2 of the ***Tamil Nadu Government Gazette*** Extraordinary, dated the 4th January 1974.

அடர்த்தி அதிகமாக உள்ளது என்பதைக் கணக்கிட இவர் அங்கொன்றும் இங்கொன்றுமாக பெரிய கொசுக்களைச் சேகரிக்கிறார். எப்பகுதியிலிருந்து புகார் வருகிறதோ அப்பகுதியைச் சுற்றி சுமார் அரை சதுரமைல் பரப்பில் உள்ள கொசு உற்பத்தியாகும் இடங்களைச் சோதனையிடுவதற்காகப் பயிற்சி பெற்ற நால்வர் இருக்கின்றனர். இவர்களைத் தவிர, அத்தகைய கொசு உற்பத்தியாகும் இடங்களில் உடனடியாக மருந்து தெளிப்பதற்கும் அவற்றை ஒழிப்பதற்கும் இருவர் உள்ளனர். இந்த சிறப்புப் படைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்தி, இவர்களது பணிகளை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு பத்திரிகைகள் மூலம் அவர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

In order to ensure effective anti-mosquito operations in the City of Madras, the City is divided into 10 convenient ranges, each range covering 10 to 20 city divisions and 6 zones, each manned by a Zonal Officer. As many as 750 personnel are engaged on the anti-mosquito operations. An average quantity of 25,000 litres of mosquito larvicide is sprayed in a week over a surface area of 25.5 lakhs square metres of mosquito breeding places. Separate spray gangs have been earmarked for treatment of mosquito breeding places encountered in large drains and nullahs.

The anti-mosquito operations have been given a fillip consequent on the inception of the National Filaria Control Programme in the City during October 1972. An exhaustive and comprehensive survey of all the mosquito breeding places within the city limits has been taken up. The peri domestic mosquito breeding places, which were one of the causes for mosquito menace and which had not been attended to hitherto for want of adequate mosquito larvicides, are now given weekly treatment.

Special spray squads called the Mobile Mosquito Control Squads have been constituted for each zone. The functions of these special squads are to attend to the specific complaints from the citizens and to eliminate the mosquito menace from the area from which the complaint has emanated. Incidentally, this will also serve as a guide to the Zonal Officers to pull up the erring squads which were responsible for the lapses. The special squad consists of an insect collector who will do the random adult mosquito collections to arrive at the Man-hour density of mosquito, four trained men for



the checking of mosquito breeding places in about half a square mile of the areas from which the complaint was received and two men for the immediate treatment and liquidation of all such mosquito breeding places. The citizens have been kept informed of the creation of these special squards and persuaded through the press-media to utilise the services of these squads effectively.

## இணைப்பு—II.

[15-ம் பக்கத்திலுள்ள 5 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.]

சென்னையிலுள்ள ஸ்டான்லி மருத்துவமனையை அடுத்துள்ள பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளில் முதலாம் வகுப்பு மற்றும் ஆறாம் வகுப்புகளில் பயிலும் 5,000 குழந்தைகளை மருத்துவ ஆய்வு செய்யும் முன்னோடித்திட்டம் ஒன்றுக்கு 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் அரசால் ஒப்பளிக்கப்பட்டது. இதை அடிப்படையாகக் கொண்டு பள்ளிக் குழந்தைகளின் மருத்துவ ஆய்வுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க ஒரு குழுவும் அரசால் ஏற்படுத்தப் பட்டது. எந்தெந்த வகையான நோய்களினால் குழந்தைகள் வாடுகின்றனவென்றும், அப்படி நோய்களினால் வாடும் குழந்தைகளின் சதவீதம் எத்தனையென்றும் அவர்களுக்குச் சிகிச்சையளிக்க எவ்வளவு செலவாகுமென்றும் கண்டறிவதே முன்னோடித் திட்டத்தின் நோக்கமாகவிருந்தது. முன்னோடித்திட்டத்தின்படி மேற்சொன்ன மருத்துவமனையைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள 36 பள்ளிகளில் முதலாம் வகுப்பிலும் ஆறாம் வகுப்பிலும் பயின்ற 4,177 குழந்தைகள் ஆய்வு செய்யப் பட்டனர். அவ்வாய்வுகளை அடிப்படையாகக் கொண்டு, குழு தன் அறிக்கையை 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அரசுக்கு அனுப்பிவைத்தது. ஆய்வு செய்யப்பட்டக் குழந்தைகளில் 1,054 குழந்தைகள் பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தனவென்று (அறிக்கையிலிருந்து) தெரியவந்தது. குழுவின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளின்படி சென்னை நகரம் முழுவதிலுமுள்ள பள்ளிகளில் முதல் வகுப்பு மற்றும் ஆறாம் வகுப்பு ஆகிய இரு வகுப்புகளில் பயிலும் எல்லாக் குழந்தைகளையும் பொதுவான மருத்துவ ஆய்வு செய்யும் திட்டம் ஒன்று 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் அரசால் ஒப்பளிக்கப்பட்டு அது 26—2—1973 ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது.

# இணைப்பு—III

[19-ம் பக்கத்திலுள்ள 10-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க]

பொதுப் பணித் துறை.

பதில் :—

கிழக்குக் கடற்கரைச் சாலையில் புதிதாக கட்டப்பட்டுவரும் பாலங்களின் விவரம் பின்வருமாறு :—

| வரிசை எண். | வேலையின் பெயர். | (அ) பாலத்தின் இருப்பிடம். (இ) அருகிலுள்ள முக்கியமான இடத்தின் பெயர். (உ) மாவட்டம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | வயலூர் அருகில் பாலாற்றின் குறுக்கே ஒரு தொங்கு பாலம் கட்டுதல். | (அ) வயலூர் கிராமத்திற்கு அருகில் (இ) மகாபலிபுரம், கல்பாக்கம் (உ) செங்கற்பட்டு |
| 2. | தென்பாக்கத்திற்கருகில் புற நீரின் குறுக்கே பாலம் கட்டுதல். | (அ) திண்டிவனம், மரக்காணம், தென பாக்கம் அருகில். (இ) பாண்டி (உ) செங்கற்பட்டு |
| 3. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 67/0 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ) மீமிசல், கோட்டைப்பட்டினம் அருகில (உ) தஞ்சாவூர் |
| 4. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 63/4-8 இல் பாலம் கட்டுதல். | (அ) கோட்டைப்பட்டினம் அருகில் (இ) கோட்டைப்பட்டினம், மணமேல்குடி (உ) தஞ்சாவூர் |
| 5. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 75/6–8 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ): மீமிசல் அருகில் (உ) தஞ்சாவூர் |
| 6. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 68/8 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ) : கோட்டைப்பட்டினம், மீமிசல் (உ) தஞ்சாவூர் |
| 7. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 58/2 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ): மணமேல்குடி, கோட்டைப் பட்டினம். (உ) தஞ்சாவூர் |
| 8. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 60/2 இல பாலம் கட்டுதல். | (அ) & (இ): மணமேல்குடி, கோட்டைப் பட்டினம் (உ) தஞ்சாவூர் |
| 9. | தொண்டி—சுந்தரபாண்டிய பட்டணம் சாலையில் கி. மீ. 3/2 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ): தொண்டி (உ) ராமநாதபுரம் |
| 10. | தொண்டி—சுந்தரபாண்டிய பட்டணம் சாலையில் கி. மீ. 14/8 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ): தொண்டி (உ) இராமநாதபுரம் |
| 11. | தொண்டி—சுந்தரபாண்டிய பட்டணம் சாலையில் கி. மீ. 13/8 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ): தொண்டி (உ) ராமநாதபுரம் |
| 12. | தொண்டி—சுந்தரபாண்டிய பட்டணம் சாலையில் கி. மீ. 1/8 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ): தொண்டி (உ) ராமநாதபுரம் |
| 13. | தொண்டி—சுந்தரபாண்டிய பட்டணம் சாலையில் கி. மீ. 6/6 இல் பாலம் கட்டுதல். | (அ) தொண்டி (இ) தேவிப்பட்டினம் (உ) ராமநாதபுரம் |

| வரிசை எண். | வேலையின் பெயர். | (அ) பாலத்தின் இருப்பிடம். (இ) அருகிலுள்ள முக்கியமான இடத்தின் பெயர். (உ) மாவட்டம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 14. | தொண்டி—சுந்தரபாண்டிய பட்டணம் சாலையில் கி. மீ. 6/0 இல் பாலம் கட்டுதல். | (அ) தொண்டி<br>(இ) தேவிப்பட்டினம்<br>(உ) ராமநாதபுரம் |
| 15. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 26/0 இல் பாலம் கட்டுதல். | (அ) தேவிப்பட்டினம்<br>(இ) & (உ): ராமநாதபுரம் |
| 16. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 41/4 இல் பாலம் கட்டுதல். | (அ) பேராவூரணி<br>(இ) பட்டுக்கோட்டை<br>(உ) தஞ்சாவூர் |
| 17. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 43/0 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ): அறந்தாங்கி, காட்டுமாவடி<br>(இ) தஞ்சாவூர் |
| 18. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 49/8 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ) அறந்தாங்கி, காட்டுமாவடி<br>(உ) தஞ்சாவூர். |
| 19. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 69/0 இல் பாலம் கட்டுதல். | (அ) மீமிசல்<br>(இ) மணமேல்குடி<br>(உ) தஞ்சாவூர். |
| 20. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 74/4 இல் பாலம் கட்டுதல். | (அ) மீமிசல்<br>(இ) தொண்டி<br>(உ) தஞ்சாவூர் |
| 21. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 42/4 இல் பாலம் கட்டுதல். | (அ) அறந்தாங்கி<br>(இ) காட்டுமாவடி<br>(உ) தஞ்சாவூர் |



| | | |
|---|---|---|
| 22. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 67/8 இல் பாலம் கட்டுதல். | (அ) மீமிசல்<br>(இ) மணமேல்குடி<br>(உ) தஞ்சாவூர் |
| 23. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 76/4 இல் பாலம் கட்டுதல் | (அ) & (இ): தொண்டி, மீமிசல்<br>(உ) தஞ்சாவூர் |
| 24. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 79/8 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ): தொண்டி, மீமிசல்<br>(உ) தஞ்சாவூர் |
| 25. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 80/4 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ): தொண்டி, மீமிசல்<br>(உ) தஞ்சாவூர் |
| 26. | முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் கி. மீ. 82/0 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ): தொண்டி, மீமிசல்<br>(உ) தஞ்சாவூர் |
| 27. | வேளாங்கண்ணி—வேதாரண்யம் சாலையில் கி. மீ. 24/4 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ): வேளாங்கண்ணி, வேதாரண்யம்<br>(உ) தஞ்சாவூர் |
| 28. | வேளாங்கண்ணி—வேதாரண்யம் சாலையில் கி.மீ. 30/2 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ): ஷை<br>(உ) தஞ்சாவூர் |
| 29. | தொண்டி—சுந்தரபாண்டியபட்டணம் சாலையில் கி. மீ. 11/0 இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ): தொண்டிக்கும் தேவிப்பட்டினத்திற்கும் அருகில்<br>(உ) ராமநாதபுரம் |
| 30. | தொண்டி—திருப்பாலக்குடி சாலையில் கி. மீ. 18/4இல் பாலம் கட்டுதல். | (அ) & (இ) தொண்டிக்கும், தேவிப்பட்டினத்திற்கும் அருகில்<br>(உ) ராமநாதபுரம். |
| 31. | தொண்டி—திருப்பாலக்குடி சாலையில் கி. மீ. 23/4 இல் பாலம் கட்டுதல். | (அ) தொண்டி, தேவிப்பட்டினம்<br>(இ) திருப்பாலக்குடி, சித்தரக் கோட்டை சத்திரம்குடி ஆகியவைகளின் அருகில்<br>(உ) ராமநாதபுரம். |

STATEMENT SHOWING THE NAME OF THE BRIDGE WORKS AND THEIR LOCATION UNDER EXECUTION ON EAST COAST ROAD.

| *Serial number.* (1) | *Name of work.* (2) | (a) *Location of the bridge.* (b) *Name of nearby important places.* (c) *District.* (3) |
|---|---|---|
| 1 | Construction of a submersible bridge across Palar river near Vayalur. | (a) Near Vayalur village.<br>(b) Mahabalipuram, Kalpakkam.<br>(c) Chingleput. |
| 2 | Construction of a bridge across back water near Thenpakkam. | (a) Near Tindivanam Marakanam and Thenpakkam.<br>(b) Poondi.<br>(c) Chingleput. |
| 3 | Construction of a bridge at KM. 67/0 of Muthupet Mimisal Road. | (a) Near Mimisal Kottaipattinam.<br>(b) Do.<br>(c) Thanjavur. |
| 4 | Construction of a bridge at KM. 63/4-8 of Muthupet Mimisal Road. | (a) Near Kottaipattinam.<br>(b) Kottaipattinam and Manamelkudi.<br>(c) Thanjavur. |
| 5 | Construction of a bridge at KM. 75/6-8 of Muthupet Mimisal Road. | (a) Near Mimisal.<br>(b) Do.<br>(c) Thanjavur. |
| 6 | Construction of a bridge at KM. 68/8 of Muthupet Mimisal Road. | (a) Kottaipattinam, and Mimisal.<br>(b) Do.<br>(c) Thanjavur. |
| 7 | Construction of a bridge at KM. 58/2 of Muthupet Mimisal Road. | (a) Manamelkudi and Kottaipattinam.<br>(b) Do.<br>(c) Thanjavur. |
| 8 | Construction of a bridge at KM. 60/2 of Muthupet Mimisal Road. | (a) Manamelkudi and Kottaipattinam.<br>(b) Do.<br>(c) Thanjavur. |
| 9 | Construction of bridge at KM. 3/2 of Thondi Sundarapadipattinam Road. | (a) Thondi.<br>(b) Do.<br>(c) Ramanathapuram. |
| 10 | Construction of bridge at KM. 14/8 of Thondi Sundarapandipattinam Road. | (a) Thondi.<br>(b) Do.<br>(c) Ramanathapuram. |
| 11 | Construction of bridge at KM. 13/8 of Thondi Sundara pandipattinam Road. | (a) Thondi.<br>(b) Do.<br>(c) Ramanathapuram. |
| 12 | Construction of bridge at KM. 1/8 of Thondi Sundarapandipattinam. | (a) Thondi.<br>(b) Do.<br>(c) Ramanathapuram. |
| 13 | Construction of bridge at KM. 6/6 of Thondi Sundarapandipattinam. | (a) Thondi.<br>(b) Devipattinam.<br>(c) Ramanathapuram. |
| 14 | Construction of bridge at KM. 6/0 of Thondi Sundarapandipattinam. | (a) Thondi.<br>(b) Devipattinam.<br>(c) Ramanathapuram. |
| 15 | Construction of a bridge at KM. 26/0 of Muthupet Mimisal Road. | (a) Devipattinam.<br>(b) Ramanathapuram.<br>(c) Do. |
| 16 | Construction of a bridge at KM. 41/4 of Muthupet Mimisal Road. | (a) Peravurani.<br>(b) Pattukkottai.<br>(c) Thanjavur. |

| Serial number. (1) | Name of work. (2) | (a) Location of the bridge. (b) Name of nearby important places. (c) District. (3) |
|---|---|---|
| 35 | Construction of a bridge at KM. 6/6 of Thondi—Thirupalakudi Road. | (a) Near Thondi, Devipattinam. (b) Thirupalakudi, Chittarakottai and Chatramkudi. (c) Ramanathapuram. |
| 36 | Construction of a bridge at KM. 6/8 of Thondi—Thirupalakudi Road. | (a) Near Thondi, Devipattinam. (b) Thirupalakudi, Chittarakottai and Chatramkudi. (c) Ramanathapuram. |
| 37 | Construction of a bridge at KM. 13/2 of Thondi—Thirupalakudi Road. | (a) Near Thondi and Devipattinam. (b) Do. (c) Ramanathapuram. |
| 38 | Construction of a bridge at KM. [illegible] of Thondi—Thirupalakudi Road. | (a) Near Thondi and Devipattinam. (b) Do. (c) Ramanathapuram. |
| 39 | Construction of a bridge at KM. 6/8 of Thirupalakudi—Devipattinam Road. | (a) Near Thondi and Devipattinam. (b) Do. (c) Ramanathapuram. |
| 40 | Construction of a bridge at KM. 9/6 of Thondi—Thirupalakudi Road. | (a) Near Thondi and Devipattinam. (b) Do. (c) Ramanathapuram. |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1974 ஆகஸ்ட் 13.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

*Candidates selected for I.A.S. from Tamil Nadu*

* 31 Q.—Thiru M. SURENDRAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the candidates selected for the Indian Administrative Service from Tamil Nadu are decreasing in number year after year due to lack of sufficient command of English language; and

(b) if so, the steps taken by the Government to remedy, this?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) தமிழ் நாட்டிலிருந்து இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்.) பதவிகளுக்குத் தெரிந்தெடுக்கப்படுவோரின் எண்ணிக்கை 1964 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த நிலைமையுடன் ஒப்பிடுகையில், கடந்த பத்தாண்டுகளில் குறைந்துள்ளது. ஆனால் போதுமான ஆங்கில மொழியறிவு இல்லாமைதான் இதற்குக் காரண மென்று கூற முடியாது.

(ஆ) தமிழ் நாட்டிலிருந்து ஐ.ஏ.எஸ். தேர்வுக்குப் போட்டியிடுவோரின் திறமையை மேம்படுத்தும் பொருட்டு, அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது—

(1) அரிசனங்கள், பழங்குடியினர், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோர் அனைத்திந்தியப் பணித் தேர்வுகளில் போட்டியிட்டு

| Serial number. (1) | Name of work. (2) | (a) Location of the bridge. (b) Name of nearby important place. (c) District. (3) |
|---|---|---|
| 17 | Construction of a bridge at KM. 43/0 of Muthupet Mimisal Road. | (a) Arantangi and Kattammovadi.<br>(b) Do.<br>(c) Thanjavur district. |
| 18 | Construction of a bridge at KM. 49/8 of Muthupet Mimisal Road. | (a) Arantangi and Kattammovadi.<br>(b) Do.<br>(c) Thanjavur. |
| 19 | Construction of a bridge at KM. 69/0 of Muthupet Mimisal Road. | (a) Mimisal.<br>(b) Manamelkudi.<br>(c) Thanjavur. |
| 20 | Construction of a bridge at KM. 74/4 of Muthupet Mimisal Road. | (a) Mimisal.<br>(b) Thondi.<br>(c) Thanjavur. |
| 21 | Construction of a bridge at KM. 42/4 of Muthupet Mimisal Road. | (a) Arantangi.<br>(b) Kattumavadi.<br>(c) Thanjavur. |
| 22 | Construction of a bridge at KM. 67/8 of Muthupet Mimisal Road. | (a) Mimisal.<br>(b) Manamelkudi.<br>(c) Thanjavur. |
| 23 | Construction of a bridge at KM. 76/4 of Muthupet Mimisal Road. | (a) Thondi and Mimisal.<br>(b) Do.<br>(c) Thanjavur. |
| 24 | Construction of a bridge at KM. 79/8 of Muthupet Mimisal Road. | (a) Thondi and Mimisal.<br>(b) Do.<br>(c) Thanjavur. |
| 25 | Construction of a bridge at KM. 80/4 of Muthupet Mimisal Road. | (a) Thondi and Mimisal.<br>(b) Do.<br>(c) Thanjavur. |
| 26 | Construction of a bridge at KM. 82/0 of Muthupet Mimisal Road. | (a) Thondi and Mimisal.<br>(b) Do.<br>(c) Thanjavur. |
| 27 | Construction of a bridge at KM. 24/4 of Velanganni—Vedaranyam Road. | (a) Velanganni and Vedaranyam.<br>(b) Do.<br>(c) Thanjavur. |
| 28 | Construction of a bridge at KM. 30/2 of Velanganni—Vedaranyam Road. | (a) Velanganni and Vedaranyam.<br>(b) Do.<br>(c) Thanjavur. |
| 29 | Construction of a bridge at KM. 11/0 of Thondi-Sundarapandipattinam Road. | (a) Near Thondi and Devipattinam.<br>(b) Do.<br>(c) Ramanathapuram. |
| 30 | Construction of a bridge at KM. 18/4 of Thondi—Thirupalakudi Road. | (a) Near Thondi and Devipattinam.<br>(b) Do.<br>(c) Ramanathapuram. |
| 31 | Construction of a bridge at KM. 23/4 of Thondi—Thirupalakudi Road. | (a) Near Thondi and Devipattinam.<br>(b) Thirupalakudi, Chittarakottai and Chatramkudi.<br>(c) Ramanathapuram. |
| 32 | Construction of a bridge at KM. 21/0 of Thondi—Thirupalakudi Road. | (a) Near Thondi and Devipattinam.<br>(b) Thirupalakudi, Chittarakottai and Chatramkudi.<br>(c) Ramanathapuram. |
| 33 | Construction of a bridge at KM. 20/8 of Thondi—Thirupalakudi Road. | (a) Near Thondi and Devipattinam.<br>(b) Thirupalakudi, Chittarakottai and Chatramkudi.<br>(c) Ramanathapuram. |
| 34 | Construction of a bridge at KM. 9/3, 9/8, 10/1 of Thondi—Sundarapandipattinam Road. | (a) Near Thondi and Devipattinam.<br>(b) Thirupalakudi, Chittarakottai and Chatramkudi.<br>(c) Ramanathapuram. |

வெற்றி பெறுவதற்கு இயலும் வகையில், அவர்களின் பயனுக்காக தேர்வு ஆயத்தப் பயிற்சி நிலையங்கள் இரண்டை அரசு நடத்தி வருகிறது.

(2) பல்கலைக்கழக நிலையில், கல்வி கற்பிக்கப்படுவதன் பொதுத்தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை ஆராயும்படி அரசு தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகப் பதிவாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

(3) இது தொடர்பாக அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள இயலும் பொருட்டு, இப் பிரச்னைக்கான காரணங்களை விரிவாக ஆராயும்படி இந்தியப் பொது நிர்வாகக் கழகத்தின் (Indian Institute of public Administration) தமிழ்நாடு வட்டாரக் கிளையைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ். பதவிகளுக்குத் தெரிந்தெடுக்கப்பட்டு வருவோரின் எண்ணிக்கை குறைந்து வருவதற்கு முக்கியமான காரணம், செகண்ட் க்ளாசில் தேர்ச்சி பெற்றிருக்கக் கூடியவர்களைத்தான் எடுக்க வேண்டும் என்ற ஒரு நிபந்தனை இருப்பதாகும். தரமான தேர்டு க்ளாஸ் மாணவர்களையும் எடுத்துக் கொள்வதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பற்றி ஆராய்வதற்கு விடப்பட்டுள்ள குழுக்கள் தருகின்ற கருத்தைப் பொருத்து எப்படிப்பட்ட முடிவுகளை மேற்கொள்வது என்பதை அரசு பரிசீலிக்கும்.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, அகில இந்திய சர்விஸ்களில் தமிழ் பேசுகின்றவர்களுடைய எண்ணிக்கை குறைவதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, தேர்டு க்ளாஸ் வாங்கியவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்பதாகும். நம்முடைய சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையிலும், அவர்கள் 'க்ளாஸ்' கொடுப்பதில் ரொம்பக் கஞ்சத்தனமாக இருக்கிறார்கள். வட நாட்டில் இயல்பாகவே 'க்ளாஸ்' வாங்கிவிடுகிறார்கள். இன்னொரு காரணம் . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** க்ளாஸ் கொடுப்பதில் ரொம்பக் கஞ்சத்தனமாக இருக்கிறார்கள் என்ற பகுதியை உறுப்பினர் அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். இல்லையென்றால், அப்பகுதியை சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். கேள்வி நேரத்தில் எந்தவிதமான குற்றச்சாட்டும் இருக்கக் கூடாது.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, குற்றச் சாட்டாகச் சொல்லவில்லை. வட நாட்டில் இருக்கிற பல்கலைக் கழகங்கள் சுலபமாக மார்க் தந்துவிடுகிறார்கள். நம்முடைய பல்கலைக் கழகத்திலுள்ள நிலைமையை நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் அமைச்சர் களிடமிருந்து தகவல் அறியத்தான் துணைக் கேள்வி கேட்க வேண்டும். கருத்தைச் சொல்லக் கூடாது. குற்றச்சாட்டும் கூடாது.

**திரு. கோவை செழியன் :** குற்றம் சொல்ல வேண்டுமென்ற முறையில் நான் சொல்லவில்லை. வட நாட்டில் உள்ளவர்கள் ஃபர்ஸ்ட் க்ளாஸ் வாங்குவதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது. இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் இந்தியில் ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதுகிறார்கள். அதே மாதிரி, தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும் ஐ.ஏ.எஸ். தேர்வைத் தமிழில் எழுத வேண்டும் என்பதற்குத் தமிழக அரசு ஏதாவதொரு போராட்டம் நடத்துமா ? அத்தகைய போராட்டம் நடத்து மானால், நாங்களும் உங்களோடு சேரத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. கோவை செழியன் :** இதற்கு அரசாங்கம் தயாரா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 'போராட்டம் நடத்தினால் அதில் சேருவதற்குத் தயாராயிருக்கிறோம்' என்று கூறியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், இப்பொழுது இதுபற்றிய பிரச்சினைகளை ஆராயும்படி நாம் இந்தியப் பொது நிர்வாகக் கழகத்தின் தமிழ்நாடு வட்டாரக் கிளையைக் கேட்டுக் கொண்டுள்ளோம். அவர்கள் ஆராய்ந்து

தெரிவித்த பிறகுதான், எந்த வகையிலே இதை அணுகலாம் என்பதைப்பற்றித் தமிழக அரசு முடிவுகளை மேற்கொள்ள முடியும்.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, கல்லூரிகளில் பயிற்சி மொழி தமிழாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு எதிராக, இப்பொழுது ஆங்கிலமும் கல்லூரியில் பயிற்சி மொழியாக இருக்கும் என்று ஏற்பாடு செய்திருப்பதற்குக் காரணம், இத்தகைய தேர்வுகளில் நம்முடைய மாணவர்களுக்கு ஆங்கில அறிவு குறைவாக இருக்கிறது என்பதா? அல்லது வேறு காரணம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆங்கில மொழியறிவுக் குறைவின் காரணமாகத்தான் தமிழ்நாட்டிலிருந்து இதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் தொகை குறைவாக இருக்கிறது என்ற கருத்துக்கு எந்தவிதமான இடமும் கிடையாது என்பதைத் தெரிவித்திருக்கிறேன். ஆங்கில மொழியறிவு குறைவாக இருக்குமானால் அவர்களெல்லாம் நேர்முகத் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க மாட்டார்கள். நேர்முக தேர்வில், அதாவது 'இன்டர்வ்யூ'வில்தான் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றியெல்லாம் ஆராய வேண்டுமென்றுதான் இந்தக் குழுக்களை நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, what ever may be the circumstances, the standard of English has fallen down and is falling in high schools and colleges. Our present Hon. Speaker after his return from America gave a lecture and he stated that the standard of English of the candidates of Tamil Nadu has gone down and so, in the interest of the students of Tamil Nadu, may I request the Hon. Chief Minister to see that the standard of English is improved by all means?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கல்வியின் தரத்தை உயர்த்துவது பற்றி பல்கலைக்கழகங்கள் ஆராய வேண்டும் என்று அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

**திரு. ஏ. எம். இராஜா:** முதல்வர் அவர்கள் பதில் சொல்லும்போது, நம்முடைய மாணவர்கள் 'ரிட்டன்' தேர்வில் பாஸ் செய்துவிடுகிறார்கள். ஆனால் 'ஓரல்' இல்தான் 'ஃபெயில்' ஆகி



விடுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இதில் ஏதாவது அரசியல் காரணம் இருக்கிறதா? தமிழகத்தவர்களைப் புறக்கணிக்க வேண்டும் என்று ஏதாவது இரகசிய சுற்றறிக்கை கொடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதுவரையில் தகவல் இல்லை. அப்படி ஏதாவது இருந்தால், உறுப்பினர் தகவல் கொடுத்தால், அதுபற்றி ஆராயலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** வட நாட்டுப் பல்கலைக் கழகங்களில் இருக்கிற பாட திட்ட முறைகள் ஒரு முறையாகவும் தென்னாட்டில் இருக்கிற நம்முடைய பல்கலைக்கழகங்களில் உள்ள பாட திட்டங்கள் வேறுபட்டவையாகவும் இருக்கிற காரணத்தினால் நம்முடைய மாநிலத்து மாணவர்கள் தேர்வு பெறக் கஷ்டமாக இருக்கிறது. அது மட்டுமின்றி, நேர்முகத் தேர்வில் கொடுக்கப்படுகிற மார்க்குகளின் எண்ணிக்கையைக் குறைக்க இந்த அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பாட திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். பாட திட்டத்தை மாற்றியமைப்பது குறித்த ஆய்வு ஒன்றை சென்னைப் பல்கலைக்கழகம் இப்பொழுது மேற்கொண்டிருக்கிறது. எண்ணைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதை நாம் நிர்ணயிக்க இயலாது. ஆனால், ஒரு யோசனையாக அதை நாம் அந்தக் குழுக்களிடத்திலே எடுத்துக் காட்டலாம்.

*Central assistance under Special Employment Programme*

*32 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether this Government have received any grant from the Centre during 1973 for Special Employment Programme in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம்.

[1974 ஆகஸ்ட் 13

(ஆ) ஏற்கெனவே இந்த அரசு செயற்படுத்தி வந்த வேலை வாய்ப்புத் திட்டங்களை ஒருங்கிணைந்து சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டங்களுக்காக மத்திய நிதி உதவியை மாநில அரசு பெற்றுக்கொண்டது—

1. கிராமப்புறச் சாலைகள்.
2. இளைஞர் அணி.
3. தொழில் பழகுவோர் பயிற்சி பெறும் சிறப்புத் திட்டம்.
4. வேலை வாய்ப்பற்ற தொழில் வினைஞர்களுக்குக் கடன் உதவி.

இந்தச் சிறப்புத் திட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட திட்டங்களின் மொத்த செலவு ரூ. 402 இலட்சம் என மதிப்பிடப்பட்டது. 1972-73-ம் ஆண்டில் ரூ. 391.53 இலட்சம் செலவானது. அதற்கான உதவியும் மத்திய அரசு கொடுத்துள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இயங்கி வந்த க்ராஷ் ப்ரோக்ராம் போன்ற வேலை வாய்ப்புத் திட்டங்களினால் பிரயோசனம் இல்லை என்று மத்திய அரசு சொன்னதா? அதை மாற்றி வேறு ஏதாவது முறையில் அந்தத் திட்டங்களை உருவாக்க சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்த வேலை வாய்ப்பு சிறப்புத் திட்டத்தினால் பயன் ஏதும் இல்லை என்று மத்திய அரசு சொல்லவில்லை. ஆனால், வருகிற ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து இந்தப் பண உதவியை நிறுத்துவதாக மாத்திரம் மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** இந்தச் சிறப்புத் திட்டத்தின் கீழ், அதாவது இளைஞர் அணித் திட்டத்தின்கீழ், மாணவர்களுக்கு மாதம் ரூ. 150 சம்பளம் கொடுத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஒன்றும் இல்லாது சும்மா வைத்திருப்பதாக அவர்கள் வாய்மொழியாகச் சொல்கிறார்கள். அப்படிச் செய்வதன் மூலம் திட்டத்தினால் ஏதாவது பலன் ஏற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இது தமிழ்நாட்டை மாத்திரம் பொறுத்ததல்ல. 1972-73-இல் 1,514 பேர் பட்டதாரிகளும், 984 பேர் வினைஞர்களும் (க்ராப்ட்ஸ்மென்) பயன்



1974 ஆகஸ்ட் 13]

பெற்றிருக்கிறார்கள். இளைஞர் அணியில் 1,450 பேர் ஆண்கள், 150 பேர் பெண்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். கடனுதவி பெற்ற வினைஞர்கள் 255 பேர். 1973-74-இல் பட்டதாரிகள் 546 பேர்கள்; பட்டயதாரிகள் 934 பேர். வினைஞர்கள் 951 பேர். இளைஞர் அணியில் 1,525 பேர் ஆண்கள்; 275 பேர் பெண்கள். கடனுதவி பெற்ற வினைஞர்கள் 470 பேர். இளைஞர் அணி ஒருசில இடங்களில் சரியாகத் தங்களுடைய பணியினை ஆற்றவில்லை என்ற தகவல் அரசுக்கு வருகிறது. அவைகளும் இப்பொழுது கவனிக்கப்படுகின்றன.

**திரு. நா. வீராசாமி:** இந்த வேலை வாய்ப்புச் சிறப்புத் திட்டத்தினால் பல கிராமங்கள் சாலை வசதிகள் பெற்றிருக்கின்றன. கிராமப் பகுதிகளில் இருக்கும் ஏழைகள் பலருக்கு வேலை கிடைத்திருக்கிறது. இதை மனத்திலே கொண்டு, இந்தச் சிறப்புத் திட்டத்தை மத்திய சர்க்கார் நிறுத்தக் கூடாது, அதைத் தொடர்ந்து நம்முடைய நாட்டுக்கு அளிக்க வேண்டும் என்று நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வேலை வாய்ப்புக்காக இந்த அரசு நடத்தி வருகின்ற பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் இது ஒரு கட்டமே தவிர, இதுவே முழுமையான வேலை வாய்ப்புத் திட்டம் அல்ல. இந்தக் கட்டத்திற்கும் முதலில் ஒரு முறை நாம் கிட்டத்தட்ட 489 இலட்ச ரூபாய் 1973-74-ம் ஆண்டில் செலவழித்த நேரத்தில், அதில் பாதித் தொகையை மத்திய சர்க்கார் அளிப்பதாகச் சொன்னாலும், 201 இலட்ச ரூபாய்தான் தருவார்கள். அதற்குமேல் செலவழிக்க வேண்டியது மாநில அரசினுடைய பொறுப்பாகும். 1974-75-இல் செலவிடத் திட்டமிட்டிருக்கிற தொகை 443 இலட்ச ரூபாயாகும். 1974 மார்ச் மாதத்திற்குப் பிறகு எதுவும் தருவதாக இல்லை என்று அவர்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுபோல் பல்வேறு திட்டங்களைத் தொடங்கச் சொல்லி, அவர்களாகவே பண உதவி செய்வதாகச் சொல்லி, பிறகு மாநில அரசின் தலையில் கட்டிவிடுவது மத்திய அரசினுடைய வழக்கமாக இருந்து வருகிறது. ஆனாலும் இதுபோன்ற திட்டங்களை வேறு திட்டங்களோடு இணைத்துக் கொண்டு கிராமப்புறங்களிலே வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கு மாநில அரசு தன்னால் முடிந்த அளவு செய்யும்.

[1974 ஆகஸ்ட் 13

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இளைஞர் அணியில் வேலை பார்க்கின்ற வாலிபர்கள் இரண்டு ஆண்டு பணியாற்றிய பின்பு வேலையிலிருந்து பிரித்து விடப்படுவதாக, அரசாங்கம் அவ்வாறு செய்திருப்பதாகத் தெரியவருகிறது. அவர்களில் பலர் இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் ஓவர் ஏஜ் ஆகியிருக்கிறார்கள். ஆகவே, இரண்டு ஆண்டு வேலை செய்தவர்களைப் பிரித்துவிடாமல் மாற்று வேலை கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவர்களுக்கு வேறு வேலை வாய்ப்புகளில் முன் வரிசையிலே இடம் தருவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாற்று வேலைகள் அவர்களுக்குக் கிடைக்கிற வரையில் இந்த வேலையிலேயே அவர்களை நீட்டிப்பதைப் பற்றி அரசு யோசித்து வருகிறது.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவரவர்களே, வேலை வாய்ப்புச் சிறப்புத் திட்டத்தின்கீழ் பம்பாய், கல்கத்தா, உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் அதிகமான மானியத்தைப் பெறுகின்றனவா என்பதையும் அந்த அளவுக்குத் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கிறதா என்பதையும் நான் அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒவ்வொரு மாநிலத்திற்கும் இந்தச் சிறப்புத் திட்டத்திலே மத்திய அரசு செலவழிப்பதிலே பாதி தொகை அல்லது அதற்கு ஒரு வரையறை ரூ. 201 இலட்சம் என்று வைத்திருக்கிறார்கள். அந்த வகையிலேதான் மற்ற மாநிலங்களிலே கொடுக்கப்படும் என்று கருதுகிறேன். மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்ற புள்ளி விவரம் என்னிடத்திலே இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** இளைஞரணி சில இடங்களில் தன் பணியைச் சரியாக ஆற்றவில்லை என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த இளைஞரணியில் உள்ளவர்கள் இன்ன இன்ன பணிகளைச் செய்ய வேண்டுமென்று ஏதாவது வரையறுக்கப்பட்டிருக்கிறதாக? அதற்கான பயிற்சிகள் அளிக்கப்படுகிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.



1974 ஆகஸ்ட் 13]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இளைஞரணியிலே இருக்கிற எல்லோருமே பணியாற்றவில்லையென்று நான் குறிப்பிடவில்லை. அப்படி யாரும் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஒரு சில இடங்களில் அவர்கள் சரியாகப் பணியாற்றவில்லை என்ற தகவல் வந்து பரிசீலிக்கப்படுகிறது என்று சொன்னேன். அவர்களுக்கு என்ன என்ன பணிகள் என்பது வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான பயிற்சிகளும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பிறகே அவர்கள் அந்த இடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

*Report of working group on Examinations reform*

*33 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether this Government have received any report from Central Working Group for Examinations reform during 1972–73 on the modification of the present examination systems?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆம். இக் கருத்துக்கள் கல்வித் துறையின் ஆய்வில் உள்ளன.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், சமீபத்தில் அந்த மாதிரி பரீட்சை முறையிலே மாற்றம் கொண்டுவர வேண்டுமென்று பள்ளிக்கூடங்களில் வருஷக்கணக்கில் தேர்வு முறை வைப்பதைவிட, காலாகாலத்தில், அந்த அந்த மாதத்தில் டெஸ்ட் முறை வைத்து, டெஸ்ட் நடத்துகின்ற அந்த முறையிலே சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றதா, அப்படியென்றால் அதன் விவரங்கள் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, என்.சி.ஆர்.டி. என்கிற மத்திய அரசாங்கத்தின் கல்வித் துறையின் கீழ் இருக்கிற நிறுவனம் தேர்வு முறையிலே என்ன என்ன மாற்றங்களைத் தரலாம் என்று அறிக்கை தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே அவர்கள் முக்கியமாக வற்புறுத்தி இருப்பது ஆண்டு இறுதியிலே மொத்தமாக, நினைவாற்றலை வைத்து தேர்வு நடத்தப்படுவதோடு மட்டுமல்லாமல், அக மதிப்பீடு திட்டம்—ஆண்டு முழுவதும் மாணவர்களுடைய அறிவை மதிப்பிட்டு, அவர்களுக்கு எண்கள் வகுத்து மதிப்பிட வேண்டுமென்று சென்ற

[1974 ஆகஸ்ட் 13

நான் குறிப்பிட்டது, மாநில அளவிலே இருக்கிற குழுவினரும் அதற்கான முயற்சியிலே தனியாக ஈடுபட்டிருக்கிறார்கள். அகில இந்திய நிலையிலே போட்டிகள் ஏற்படுகிறபொழுது, இப்படிப் பட்ட தனிப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மாநில அளவிலே விளையாட்டிலே ஈடுபடும்போது இப்படிப்பட்ட நிலைமை ஏற்படு கிறது. மாவட்ட விளையாட்டுக் குழுக்களும் தனியாக இருக்கிற சாதாரணமக்களை ஈடுபடுத்த வேண்டுமென்ற நோக்கில்தான் ஆண்டுதோறும் பொங்கல் விழாவையொட்டி எல்லா கிராம மக்களும் ஒன்றிய அளவிலும், பிறகு மாவட்ட அளவிலும், பிறகு மண்டல அளவிலும் பொதுவாக எல்லா தரப்பினரும் எல்லா நிலைகளிலும் கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவரவர்களே, இதற்குண்டான விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுப்பதில் அரசாங்கம் என்ன முறைகளைக் கடைப்பிடிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. அதற்கென்று சில விதிமுறைகள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். மாவட்ட விளை யாட்டு ஆட்சிக் குழுக்களும், மாநில விளையாட்டு ஆட்சிக் குழுவும் அவர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. மாவட்ட விளையாட்டு ஆட்சிக் குழு, மாநில விளையாட்டு ஆட்சிக் குழுவுக்குப் பரிந்துரை செய்கிறது. மாநில விளையாட்டுக் குழு தனிக் கமிட்டி வைத்து இருக்கிறது. அந்தக் கமிட்டியினர் ஆராய்ந்து, உபகாரச் சம்பளம் போன்றவைகளைத் தந்து ஊக்குவிக்கின்ற முறைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

### பள்ளிகளில் விளையாட்டு வீரர்களுக்குப் பரிசுகள்

* 35 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் 1972-73-ல் திருச்சி மாவட்டத்தில் எத்தனை மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது?

(இ) அதன் விவரம் என்ன?



1974 ஆகஸ்ட் 13]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) 1972-73-ம் ஆண்டு திருச்சி மாவட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை நடத்திய மாவட்ட எல்லைப் போட்டிகளில் 86 மாணவர்களுக்கும், 60 மாணவிகளுக்கும் வெள்ளிப்பதக்கங்களும், மாவட்ட விளை யாட்டு மன்றம் நடத்திய போட்டிகளில் முதலிடத்தைப் பெற்ற 70 பேருக்கும், 2-ம் இடம் பெற்ற 70 பேருக்கும் சான்றிதழ்களும், குடியரசு தினவிழாப் போட்டிகளில் முதலிடத்தை அடைந்த 6 மாணவர்களுக்கு பதக்கங்களும், 2-ம் இடம் பெற்ற 5 மாணவர் களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, தற்போது பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் விளையாட்டு வீரர்கள் எண்ணிக்கை குறைந்து காணப்படுகிறது. ஆகவே தமிழகத்திலே மேலும் சிறந்த விளையாட்டு வீரர்களை அதிகமாக உருவாக்குவதற்கு பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உடல் பயிற்சி வகுப்பைக் கட்டாயமாக ஆக்கி இன்னும் இந்த உடற்பயிற்சிக் கல்வியைத் தீவிரமாக ஆக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நாளுக்கு நாள் விளையாட்டு வீரர்கள் குறைந்துவருகிறார்கள் என்ற எண்ணிக்கை பற்றிய விவரம் இல்லை. ஆனால் பள்ளிகள் தோறும் விளையாட்டு வகுப்புகளுக்கு முக்கியத்துவம் தரவேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. புதிதாகப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட வேண்டு மானால்கூட கட்டாயமாக 5 ஏக்கர் நிலம் இருக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம், விளையாட்டுக்கூடம் அமைப்பதற் கான போதுமான இடம் வேண்டுமென்ற வகையிலேதான் அப்படி வற்புறுத்தி வருகிறோம். மாவட்ட அளவிலே, கல்வி மாவட்டங்கள் என்ற அளவிலேயும் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன, மாவட்ட விளையாட்டு மன்றம் என்ற விளையாட்டுக்குழு மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளை நடத்திவருகிறது. குடியரசு தின விழாவின்போது மாணவர் களுக்கு என்றே தனியாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப் படுகின்றன. இதைத்தவிர பொங்கல் விழாவின்போதும் நடத்தப்படுகின்ற, எல்லாத் தரப்பினருக்காகவும் நடத்தப்படு கின்ற விளையாட்டுப் போட்டிகளிலும் மாணவர்களும் கலந்து

கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறோம். குறைந்தது 250 மாணவர்கள் இருந்தாலே ஒரு பி.இ.டி. ஆசிரியர் கட்டாயமாக நியமிக்கப்பட வேண்டுமென்று எல்லாப் பள்ளிகளுக்கும் நாம் வற்புறுத்தி வருகிறோம்.

## பல் மருத்துவர்கள்

* 36 வினா—**புலவர் சி. பழனிச்சாமி**: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பயிற்சி பெற்ற பல் மருத்துவர்கள் எத்தனை பேர் இன்னும் வேலையில் நியமிக்கப்படாமல் இருக்கின்றனர்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: 1—3—1974 அன்று கணக்குப் படி, நூற்றி ஒன்று உதவிப்பல் நோய் அறுவை மருத்துவராக தற்காலிக நியமனத்திற்கு நலப்பணிகள் மற்றும் குடும்பநலத் திட்ட இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கின்றனர்.

## *Dental Units in Hospitals*

* 37 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Health be pleased to state the names of Government Hospitals in the City of Madras where Dental units have been opened?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**:

1. சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை (எல்லா சிறப்புப் பகுதிகளும் அடங்கிய முழுமையான பல் சிகிச்சை நிலையம்).
2. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.
3. கீழ்ப்பாக்கம் மருத்துவமனை, சென்னை.
4. ராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.
5. கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை, சென்னை.
6. குழந்தைகள் நல நிலையம், குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.



7. மகப்பேறு மற்றும் மகளிர் நோய் நல நிலையம், அரசுப் பெண்கள் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.
8. அரசு மனநோய் மருத்துவமனை (வாரத்தில் இரண்டுநாள் மட்டும்), சென்னை.

**புலவர் சி. பழனிசாமி**: தலைவர் அவர்களே, வேலையில்லாமல் இருக்கின்ற பல் மருத்துவர்களுக்கு விரைவில் வேலை வாய்ப்புக்களை அளிக்க அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது? அப்படி வேலை வாய்ப்பு அளிக்கும்போது ஒவ்வொரு வட்டத்திலேயும் உள்ள தலைமை மருத்துவ மனைக்கும் ஒவ்வொரு சிறப்பு பல் மருத்துவர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: தலைவர் அவர்களே, அந்த ஆலோசனை ஏற்கனவே அரசால் பரிசீலிக்கப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் சில தாலுகா மருத்துவ மனைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றில் உள்ள இட வசதிகளுக்கேற்ப பல் டாக்டர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். கடந்த ஆண்டு, அப்படி, 11 பதவிகளில் தாற்காலிக உதவி பல் நோய் மருத்துவர்களாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

**திரு. என். கே. பழனிச்சாமி**: சார், ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள பெரிய ஆஸ்பத்திரிகளிலே இந்த மாதிரி பல் டாக்டர்களை நியமிக்க ஏன் அரசாங்கம் முயற்சி செய்யக் கூடாது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: ஜில்லா அளவில் டெண்டல் பகுதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எங்காவது இல்லையென்றால், அதைப்பற்றி விவரம் சொன்னால், பரிசிலிக்கப்படும்.

**திரு. என். கிட்டப்பா**: தலைவர் அவர்களே, தாலுகா தலைநகரங்களில் உள்ள அரசாங்க மருத்துவ மனைகளில் இம்மாதிரி பல் வைத்தியர்கள், இடம் இருந்தால் நியமிக்கப்படுவார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாயூரத்தில் அந்த மாதிரி இடத்தினை அல்லது கட்டடத்தினை பொதுமக்கள் உருவாக்கித் தந்தால் அங்கே பல் டாக்டர்களைக் கொண்டு பல் வைத்தியத்தைச் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்ய அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் அப்படி பொதுமக்கள் தாங்களாகவே

உருவாக்கித் தந்தால் அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்யும். ஆனால் மாயூரம் போன்ற இடங்களிலே விரைவில் அப்படிப்பட்ட ஏற்பாடு களைச் செய்வதற்கு அரசு முறைப்படி பரிசீலித்து வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, பல மாவட்ட மருத்துவ மனைகளில் டெண்டல் டிபார்ட்மெண்ட் திறக்கப்பட்டிருந்தாலும் கூட, அங்கே அதற்கான தளவாடங்கள், இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் இல்லாத நிலைமை இருக்கிறது. அந்தக் குறையை நீக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, புதிதாக துவக்கப்பட்ட சில இடங்களில் டாக்டர்கள் நியமிக்கப் பட்டு இருக்கின்ற அந்தத் தேதியிலேயே அதற்கான டெண்டல் சேர்ஸ் கிடைக்கும் என்று எதிர்பார்த்து அரசு உத்திரவிட்டது. ஆனால் டெண்டல் சேர்ஸ் கிடைப்பதிலே காலதாமதம் ஏற்பட்டு, அண்மையிலே அது கவனிக்கப்பட்டு இருக்கிறது. விரைவிலே அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்று நம்புகிறேன்.

THIRUMATHI ALDA M. FOWLER: Sir, may we know if a Dental Clinic will be opened at Villupuram and when we can expect it to be opened?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தனியாகக் கேள்வி போட்டால் ஒரு குறிப்பிட்ட இடத்தைப்பற்றிய வினாவிற்குப் பதில் அளிக்க முடியும்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** பல் மருத்துவப் படிப்பில் பட்ட மேல் படிப்பு படிப்பதற்கு வசதிகள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருக்கின்றனவா? இல்லாவிட்டால் அதைத் துவக்கு வதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, பட்ட மேல் படிப்பு படிப்பதற்கு வசதி ஓரிரண்டு துறைகளிலே இருக் கிறது என்று கருதுகிறேன். பல்வேறு துறைகளில் இன்றைய தினம் சிறப்புப் பகுதிகள் என்று தனியாகப் போய்க் கொண் டிருக்கின்றன. சில படிப்புகளை வேறு இடங்களிலும் படித்து வருகிறார்கள்.



*38 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மெடிகல் காலேஜ் ஆஸ்பத்திரியில் டெண்டல் ஹைஜினிஸ்ட், டெண்டல் மெகானிக் பயிற்சி பெற்ற வர்கள் பல் வைத்தியப் பிரிவில் பணி புரிகிறார்களா?

(இ) ஆம் எனில், எத்தனை பேர் அவ்விதம் பணி புரிகிறார்கள்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*Raja Mirasdar Hospital, Thanjavur*

*39 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it is a fact that there has been any shortage in the stocks of instruments, appliances, furniture and crockery in the Raja Mirasdar Hospital, Thanjavur;

(b) if so, whether the matter has been investigated into by the Police; and

(c) the result of the investigation?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) & (உ) மருந்துகள், அறுவை சிகிச்சைக் கருவிகள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள குறைவைப் பொறுத்தவரை காவல் துறையால் புலனாய்வு செய்யப்பட்டது. முன்னாள் தலைமை மருந்தாளுநர், மருந்தாளுநர் ஆகியோர் மீது தஞ்சாவூர் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவை நீதிமன்றத்தில் முடிவுறு நிலையி லுள்ளன. மரச்சாமான்கள், பீங்கான் பாண்டங்கள் ஆகிய வற்றில் ஏற்பட்ட குறைவைப் பொறுத்தவரை, இந்த விஷயத்திற்குப் பொறுப்பாக உள்ளவர்கள் மீது துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

[1974 ஆகஸ்ட் 13

## மாஜி ராணுவத்தினர் கூட்டுறவு நிலக்குடியேற்றச் சங்கங்கள்.

*40 வினா—திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், தற்போதுள்ள மாஜி பட்டாளத்தார் கூட்டுறவு நிலக்குடியேற்றச் சங்கங்கள் எத்தனை? மாவட்ட வாரியாக?

(இ) மேற்படி சங்கங்களை கலைத்துவிட உத்திரவு போடப் பட்டதா?

(உ) கலைப்பதற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) தற்போது தமிழ் நாட்டில் மாஜி ராணுவத்தினர்க்காக ஆரம்பிக்கப்பட்ட நிலக் குடியேற்ற சங்கங்கள் ஆறு உள்ளன. அவைகளின் விபரம் வருமாறு:

(1) மெய்யூர் குடப்பாக்கம் நிலக்குடியேற்ற சங்கம்—செங்கல்பட்டு மாவட்டம்.

(2) நல்லவன்னியன்குடிகாடு நிலக்குடியேற்ற சங்கம்—தஞ்சாவூர் மாவட்டம்.

(3) திருமங்கலக் கோட்டை நிலக்குடியேற்ற சங்கம்—தஞ்சாவூர் மாவட்டம்.

(4) ஜாம்புவானோடை நிலக்குடியேற்ற சங்கம்—தஞ்சாவூர் மாவட்டம்.

(5) டாக்டர் ராஜன் நகர் நிலக்குடியேற்ற சங்கம்—திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(6) குலசேகரம் நிலக்குடியேற்ற சங்கம்—கன்னியாகுமரி மாவட்டம்.

(இ) 15—11—1973-ல் தேசிய சமுதாய நலத்துறை அரசு ஆணை எண். 995-ல் ஜாம்புவானோடை நிலக்குடியேற்ற சங்கத்தை மட்டும் கலைத்துவிடலாம் என்றும் அரசு உத்திரவு போடப் பட்டுள்ளது.



1974 ஆகஸ்ட் 13]

(உ) ஜாம்புவானோடை நிலக்குடியேற்ற சங்கம் 1960-61 முதல் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வருகிறது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட எல்லாவித முயற்சிகளும் பலன் அளிக்காததால் மேலும் மேலும் சங்கத்தை நஷ்டமடைய விடுவதைவிட கலைத்து விடலாம் என்று கருதி மேற்கண்டவாறு அரசு முடிவு எடுத்துள்ளது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவர் அவர்களே, இந்த மாஜி பட்டாளத்தார் கூட்டுறவு நிலக் குடியேற்ற சங்கங்களுக்கு அரசாங்கம் இதுவரை கிடைத்த நிலம் எவ்வளவு? இதன் மூலம் எத்தனை மாஜி இராணுவத்தினர் பயன் அடைந்துள்ளார்கள் என்ற கணக்கை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** அந்த விவரம் இல்லை, தனிக் கேள்வி போட்டால் சொல்லப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, நிலக் குடியேற்ற சங்கத்திற்கு அரசாங்கம் என்ன என்ன வகைகளில் உதவி செய்கிறது என்ற விவரத்தை அறியலாமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் 41, 42, 43, 44 மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் படுகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## சுருட்டுத் தயாரிப்புப் பிரிவுகள்

*45 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மொத்தம் எத்தனை சுருட்டுக் கம்பெனிகள் தற்போது உள்ளன?

(இ) சுருட்டு ஏற்றுமதியால் நமக்கு கிடைக்கும் அன்னிய செலாவணி எவ்வளவு?

[1974 ஆகஸ்ட் 13

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) தமிழ்நாட்டில் உயர் வகைச் சுருட்டு, சுருட்டுத் தயாரிப்புப் பிரிவுகள் மொத்தம் 213.

(இ) தற்போது கிடைத்த தகவலின்படி தமிழ்நாட்டுத் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதியாகும் உயர்வகைச்சுருட்டு, சுருட்டு ஆகியவை மூலம் கிடைத்த அன்னியச் செலாவணி, 1971-ம் ஆண்டில் ரூ. 24,070க்குச் சமமாகும். 1972-ம் ஆண்டில் இந்த அன்னியச் செலாவணி பெரும்பாலும் இல்லை அல்லது மிகச் சொற்பமே எனலாம்.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது 213 உயர் ரக சுருட்டு செய்கிற தொழிற்சாலைகள் இருப்பதாகச் சொன்னார்கள். அவை எல்லாம் என் 5 லைசென்ஸ் பெற்றவையா? அல்லது எல். 2 லைசென்ஸ் பெற்றவையா? அன்னியச் செலாவணி குறைந்து விட்டதாகச் சொன்னார்கள், அதற்கான காரணத்தையும் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகவில்லை, ஆகவே, அன்னியச் செலாவணி குறைந்து இருக்கிறது. எந்த லைசென்ஸ் என்ற விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை.

*Match factories*

* 46 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the hardships of the Match Factories at Tirunelveli for want of Potassium Chlorate; and

(b) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) பொட்டாசியம் குளோரேட்டு பற்றாக்குறை காரணமாக திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சுமார் 228 சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகள் 3 முதல் 7 நாட்கள் வரை மூடப்பட்டிருந்ததை அரசு அறியும். இது குறித்து பொட்டாசியம் குளோரேட்டு முக்கியத் தயாரிப்பாளர்களுடனும், புதுடில்லி தொழில் நுட்ப வளர்ச்சித் தலைமை இயக்குநருடனும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. தயாரிப்பாளர்கள் வழக்கமாக தாங்கள் வழங்கும் அளவை வழங்கத் தொடங்கியுள்ளனர். உள்நாட்டில் கிடைக்கும்



1974 ஆகஸ்ட் 13]

பொட்டாசியம் குளோரேட்டுக்குக் கூடுதலாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவும் இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

(முற்பகல் 9.30)

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, தேவைக்கேற்ப இந்தப் பொட்டாசியம் குளோரேட்டை டைரக்டாகப் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திலிருந்து டைரக்டாக விநியோகிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாட்டிற்குத் தேவைப் படுவது ஆண்டுதோறும் 3,600 டன். தமிழ்நாட்டில் அந்த அளவிற்கு உற்பத்தி இல்லை. ஆகவே, வெளி மாநிலங்களிலிருந்து வர வேண்டும். மத்திய அரசு இதை ஒரு கட்டுதிட்டத்திற்குக் கொண்டு வந்து நம்மிடத்தில் ஒப்படைத்தால் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல் நாம் எடுத்துச் செய்யலாம். இதைப்பற்றிக் கவனிக்க வேண்டு மென்று மத்திய அரசை நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : Is it a fact that the Western India Match Factory is producing and selling Potassium Chlorate? Now they are not selling to others because they want to use them for themselves. Is it a fact?

THE HON. THIRU S. MADHAVAN : It is true that the WIMCO is producing Potassium Chlorate. It is not in our State but in Maharashtra State.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இந்தப் பொட்டா சியம் குளோரேட் பற்றாக்குறை காரணமாக அடிக்கடி தொழிற் சாலைகளிலே வேலை இல்லாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அங்கிருந்து முதலாளிகள் மூலம் இறக்குமதி செய்வதைவிட அரசாங்கமே பெற்று விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம் அல்லவா? மேலும், கூட்டுறவு முறையில் தீப்பெட்டித் தொழிற் சாலை அமைப்பதாக ஒரு யோசனை இருந்தது. அதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்படுவதாகச் சொல்லப் பட்டதே, அப்படி ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து, பொட்டா சியம் குளோரேட்டை இங்கேயே உற்பத்தி செய்வதற்கு அரசு முயற்சிக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படவில்லை. வெளி மாநிலங்களிலிருந்து வருவதால், மத்திய அரசு டிஸ்டிரிபியூஷன் கண்ட்ரோலை எடுக்காமல் இருப்பதால் இப்படிப்பட்ட சிரமங்கள் ஏற்படுகின்றன. நாம் 70 லட்சம் ரூபாய் அளவில் ஒரு தொழிற்சாலையை, ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1,825 டன்—நம்முடைய தேவையிலே பாதிக்கு மேல்—உற்பத்திச் செய்யும் முயற்சியைத் தொடங்கி விட்டோம். வெகுவிரைவில் உற்பத்தி தொடங்கும்.

## *Talks with Yugoslavian Trade Delegation*

* 47 Q.—THIRU G. R. EDMUND : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Officials of the State Government had talks about the Industrial potentialities of the State with the Yugoslavian Trade Delegation about the 22nd November 1973; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) யுகோஸ்லாவிலிருந்து வந்த அரசியல் சார்புள்ள தொழிற்குழு மின்சார உற்பத்திநிலையங்களுக்கான கருவிகளை விற்பதில் அக்கறை காட்டியது. மீன்பிடி படகு கட்டுதல், மருந்துப்பொருட்கள், ரசாயனப் பொருட்கள், மின் ஆக்கப் பொருட்கள் ஆகிய தொழில்களில் யுகோஸ்லாவியக் கூட்டு முயற்சிக்கான சாத்தியக்கூறு பற்றியும் விவாதிக்கப்பட்டது. மின் ஆக்கப்பொருட்கள், உந்துகளுக்கான வானொலிப்பெட்டிகள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்யும் சாத்தியக்கூறு பற்றியும் விவாதிக்கப்பட்டது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவரவர்களே, இந்தப் பேச்சு வார்த்தைகளின் முடிவுகளை அடுத்து அரசாங்கம் ஏதாவது மேற்கொண்டு காரியங்களைச் செய்ய இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதைப்பற்றி மத்திய அரசு தான் நடவடிக்கை எடுக்க முடியும். நம்மைப் பொறுத்த அளவில் யுகோஸ்லாவிய உதவியோடு சுமார் 11 கோடி ரூபாயிலே Grev Iron Castings ஏற்பாடு செய்ய முயற்சி எடுத்தோம். அதிலே ஓரளவு வெற்றி கிடைத்திருக்கிறது.



**திரு. கே. ஏ. வகாப்:** தலைவரவர்களே, அண்மையிலே மாண்புமிகு தொழிலமைச்சரவர்கள் அங்கு சென்றபொழுது இது சம்பந்தமாக ஏதாவது பேச்சு நடந்ததா? புதிய தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி வந்திருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதைத்தான் விளக்கினேன். ஏற்றுமதி, இறக்குமதியைப் பொறுத்தவரையில் நாம் ஒன்றும் செய்ய முடியாது. சில கருவிகளை நம்மிடத்தில் விற்பதற்குப் பார்க்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 'கேஸ்டிங்ஸ்' தொழிற்சாலைக்கு அவர்கள் உதவி செய்வதாக, அவர்களே பங்கு பெறுவதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். 11 கோடி ரூபாயிலே அந்தத் தொழிற்சாலை தமிழ்நாட்டில் தொடங்கப்படும்.

## *Exemption from Sales Tax on foodgrains and oil*

* 48 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state the estimated loss of Revenue as a result of the concessions on the levy of sales tax on foodgrains and oil announced by the Government recently?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** 1—9—1973 முதல் 31—3—1974 வரை பயறு வகைகள், பருப்பு வகைகள் குறித்து விற்பனை வரி விலக்களிக்கப்பட்டதன் காரணமாகவும், சமையல் எண்ணெயின் முதல் விற்பனைகள் நீங்கலான ஏனைய விற்பனைகள் குறித்து விலக்களிக்கப்பட்டதன் காரணமாகவும், ஏற்பட்ட வருவாய் விரயம் தோராயமாக முறையே ரூ.279.71 லட்சம், ரூ. 138.28 லட்சம் என மதிப்பிடப்படுகிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், இந்த வரி இழப்பீட்டுச் சமயத்தில் சர்க்கார் வரிச்சலுகை கொடுத்திருந்தும் ஜனங்களிடமிருந்து அவர்கள் வரியை வசூல் செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சர்க்கார், விலை குறைய வேண்டுமென்ற எண்ணத்தில் வரிச் சலுகையை அளித்திருந்தும் விலையை அவர்கள் குறைக்கவில்லை. எனவே அரசு நடவடிக்கை எடுத்து அந்த இழப்பீட்டுத் தொகையை மீட்பதற்கு முயற்சிக்குமா?

[1974 ஆகஸ்ட் 13

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** வரி விலக்கு கொடுத்ததற்குப் பிறகு வசூலிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. அப்படி ஏதேனும் தகவல் இருந்து தெரிவித்தால், நடவடிக்கை எடுக்கலாம். விலைவாசி குறையவில்லை என்ற ஒரு கருத்தும் இருக்கிறது.

**திரு. ஆலடி அருணா:** தலைவரவர்களே, முதலில் அமைச்சரவர்கள் இவ்வளவு வரி விலக்கின் மூலம் இந்த அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டார்கள். எவ்வளவு உணவுப் பொருள்கள், எண்ணெய் போன்றவைகளுக்கு இந்த விதி விலக்கு கொடுக்கப்பட்டது என்று சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அந்த விவரம் இப்பொழுது என்னிடத்திலே இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, இந்த வரிவிலக்கால் மொத்தம் ஏறக்குறைய 4 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்த வரி விலக்கு அளித்ததால் விலை கூடியதே தவிர, குறையவில்லை என்பதை அனுபவபூர்வமாக அரசும் அறிந்திருக்கிறது. எனவே விலையைக் குறைக்க ஏற்பாடு செய்யுமா? இவ்வாறு செய்த யோசனை தவறு என்பதை அரசு இப்பொழுது உணர்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** வரி விலக்கு கொடுத்த நோக்கிலே கொஞ்சம் விலை குறைந்தது என்பதை மாண்புமிகு அங்கத்தினர்களும் அறிவார்கள், எங்களுக்கும் தெரியும். விலைவாசியைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதைப் பற்றிக் கேட்டார்கள். 31—3—1974 ஆம் தேதியுடன் இது தீர்ந்து விட்டது, இப்பொழுது இந்தச் சலுகை கிடையாது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, இந்த வரி விலக்கை எந்த அடிப்படையிலே, எந்த நம்பிக்கையின் பேரிலே அளித்தார்கள்? வியாபாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களிடம் உத்தரவாதம் பெற்று இந்தச் சலுகையை அளித்தார்களா? விலையைக் குறைக்க வியாபாரிகள் என்ன நடவடிக்கையை எடுக்க முன் வந்தார்கள்? இந்த நஷ்டத்தை ஈடுகட்ட என்ன செய்யப் போகிறார்கள்? இனிமேல் இம்மாதிரி முடிவை எடுக்க மாட்டோம் என்று அரசு உத்தரவாதம் தருமா?



1974 ஆகஸ்ட் 13]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நிலைமைகளைப் பரிசீலித்து அவ்வப்பொழுது நிலைமைக்குத் தகுந்தாற்போல் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## அம்பாசமுத்திரம் வட்டத்தில் நிலவார உரிமைப்பதிவு

*49 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தாலுக்காவில் இதுவரை நிலவார உரிமை பதிவேடு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்த நபர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அம்பாசமுத்திரம் தாலுக்காவில் நிலவார உரிமை பதிவேடு சட்டத்தின்கீழ் இதுவரை 20,713 நபர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, மொத்தம் எவ்வளவு பேர் பதிவு செய்ய மனுப் போட்டார்கள்? பதிவு செய்வதில் காலதாமதம் இருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா? இதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இதுவரை மாநிலத்திலே number of tenants registered 3,98,260. காலதாமதம் எங்கே என்று மாண்புமிகு அங்கத்தினர்கள் குறிப்பிட்டால் நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, அம்பாசமுத்திரம் தாலுக்காவில் பதிவு செய்ய மனுச் செய்து கொண்டவர்கள் எத்தனை பேர்? எத்தனை பேர் இன்னும் பதிவு செய்யப்படவில்லை. பதிவு செய்யாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று அமைச்சரவர்கள் கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அம்பாசமுத்திரம் பற்றித் தனியாகக் கணக்கு இல்லை. ஆனால் திருநெல்வேலி மாவட்டத்தில் 65,579 பேர் இந்த டெனன்ட்ஸ் ரெஜிஸ்ட்ரேஷனில் பதிவாகியிருக்கிறார்கள். இந்த மாவட்டத்தில் இன்னும்

கொஞ்சம் வேலை பாக்கியிருக்கிறது என்றும், விசேஷ அதிகாரி நியமிக்கப்பட வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டிருக்கிறார்கள். 3 ஸ்பெஷல் தாசில்தார்களை நியமிப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

## தெளிப்புப் பாசன முறை

*50 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தெளிப்புப் பாசன முறையை அமுல்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையி லுள்ளதா?

(இ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டங்களில் அமுல்படுத்தப் படும்?

(உ) இத்திட்டத்திற்கு மத்திய அரசின் உதவியை மாநில அரசு கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை

(இ) & (உ) இவ்வினாக்கள் எழவில்லை.

## எல்லாபுரம். கும்முடிப்பூண்டி ஒன்றியங்களில் உரவிநியோகம்

*51 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும், கும்முடிப் பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும் எல்லாக் கிராம விவசாயி களுக்கும் உரம் விநியோகத்திற்கான கார்டுகள் அளிக்கப்பட்டு விட்டனவா?

(இ) ஆம் எனில், எல்லா விவசாயிகளுக்கும் உரிய காலத்தில் உர வகைகள் கிடைக்க மேற்கொண்டுள்ள சிறப்பு நடவடிக்கைகள் யாவை?





மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: விவர அறிக்கை* ஒன்று இப்பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, விவசாய மக்கள் 3 மைல், 4 மைல் தூரம் போய் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உரத்தை வாங்க வேண்டியிருக்கிறது. எனவே இரண்டு மூன்று கிராமங்களை இணைத்து, சிறுசிறு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விநியோகிக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இந்த விவசாய டெப்போக்களின் மூலமாக உர விநியோகம் செய்யலாம் என்ற கருத்து ஆய்வில் இருக்கிறது.

## *Institute of Meat Technology*

*52 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to open any institute for Meat Technology Training and Research in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, 'நான்-வெஜிடேரியன்' உணவை அபிவிருத்திச் செய்ய இது உபயோகமாக இருக்கும் என்பதால் இதை 'ஓப்பன்' செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, இறைச்சி உண்ணுதவர்களே இல்லை என்ற அளவிற்கு இறைச்சி உணவு உண்ணும் மக்களின் தொகை அதிகரித்து வருகிறது. மனித உணவில் இறைச்சி முக்கியமான அங்கம் வகிக்கிறது. இந்த

* 259-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 ஆகஸ்ட் 13

இறைச்சியை அதிகப்படுத்த, தனி ஆடே அதிக இறைச்சி தரும் அளவிற்கு அபிவிருத்தி செய்ய ஏதேனும் வழிமுறைகளை இந்த அரசாங்கம் கண்டு பிடித்திருக்கிறதா? அப்படிப்பட்ட பண்ணைகளை உண்டாக்குவதற்கு அரசாங்கத்திடம் திட்டங்கள் உண்டா? அப்படியானால் எத்தனை பண்ணைகள் இதுவரையில் செயல்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த வினா இன்ஸ்டிடியூட் ஃபார் மீட் டெக்னாலஜி ஏற்படுத்தப்படுமா என்பது பற்றியது. விவசாயப் பண்ணைகளை வளர்ச்சி செய்வது பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரமுடியும்.

**திரு. என். கிட்டப்பா :** சென்னை மாநகரில் ஆட்டுக் கறி என்று சொல்லி மாட்டிறைச்சியையும், உள்ளான் என்று சொல்லி குருவியையும் கொடுத்து விடுகிறார்கள். இதை ஆராய அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இது கலப்படச் சட்டத்தின் கீழ் குற்றமாகும். எனவே, ஆட்டிறைச்சி என்று சொல்லி மாட்டிறைச்சி வருவதாகத் தகவல் கிடைக்குமானால், அதுபற்றி நடவடிக்கை எடுக்க முடியும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மீட் டெக்னாலஜி இன்ஸ்டிடியூட்டில் எதை எதைப் பற்றி ஆராய்ச்சி செய்யப் போகிறார்கள்?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** விடை 'இல்லை' என்பதாகக் கொடுக்கப்பட்டது. இன்ஸ்டிடியூட் தொடங்குவதாக இருக்கிறது என்று சொல்லியிருந்தால் எதைப் பற்றி ஆராயலாம் என்ற துணைக் கேள்வி கேட்க இடம் இருக்கிறது. தொடங்கப் போவதில்லை என்று சொன்ன பிறகு எதைப் பற்றி ஆராயப்படும் என்று கேள்வி கேட்டால் . . . . (சிரிப்பு)

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கேரள மாநிலத்தில் இம்மாதிரியான மீட் டெக்னாலஜி இன்ஸ்டிடியூட் ஒன்று இருக்கிறது. தமிழ்நாட்டிலிருந்து அன்றாடம் 4000 மாடுகள் வரை கேரள மாநிலத்திற்குச் சென்று கொண்டிருக்கிறது. இதனால் வருகிற காலங்களில் மாடுகளுக்குக் கிராக்கி ஏற்பட்டு தமிழ் நாட்டில் விவசாயம் பாதிக்கப்



1974 ஆகஸ்ட் 13]

படக்கூடிய அவல நிலை ஏற்படக்கூடும். எனவே, கேரளாவிற்கு இங்கிருந்து மாடுகளை அனுப்புவதைத் தடுக்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த இன்ஸ்டிடியூட்டுக்கும் மாடுகள் கேரளாவிற்குப் போவதற்கும் சம்பந்தம் இல்லை. மாடுகள் கேரளாவிற்குப் போவது அடித்துச் சாப்பிடுவதற்கும் லாரிகளில் அடைத்து ஏற்றுமதி செய்வதற்குந் தான். மாடுகள் ஏராளமாகத் தமிழ் நாட்டிலிருந்து போகின்றன என்பது உண்மைதான். வொர்ல்டு பாங்கு பல இடங்களைப் பார்த்து வந்து 14 வழிகளில்—கன்னியாகுமரி மாவட்டம் மட்டுமல்ல; செங்கோட்டை மட்டுமல்ல; கோவை மட்டுமல்ல— கடத்தப்படுகின்றன என்று கூறியிருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுப்பது என்பது அரசின் ஆய்வில் இருக்கிறது.

## சாண்டிநல்லா ஆட்டுப்பண்ணை

* 53 வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) உதகை சாண்டிநல்லாவிலுள்ள ஆட்டுப்பண்ணையிலுள்ள ஆடுகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

(இ) சராசரியாக ஒரு ஆட்டுக்கு தீவன வகையில் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு செலவிடப்படுகின்றது?

(இ) ரூபாய் 132.66.

(உ) சராசரியாக ஒரு ஆட்டின் ரோமத்தினால் வரும் வருமானம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) 900.

(இ) ரூபாய் 132.66.

(உ) மெரினோ ரோமம் (இறக்குமதி செய்யப்பட்டவை). ரூ. 145.69

நீலகிரி ஆட்டின் ரோமம் ரூ. 12.23

**திரு. எம். தேவராசன் :** ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் எவ்வளவு ரோமம் கிடைக்கிறது? ரஷ்யாவிலிருந்து இன்னும் உயர்தர ஆடுகளை இறக்குமதி செய்து ரோமத்தை அபிவிருத்திச் செய்ய ஆலோசனை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: உதகை சாண்டிநல்லாவில் உள்ள ஆட்டுப் பண்ணையில் ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மெரினோ ஆடுகள் இருக்கின்றன. அவற்றை மேலும் மேலும் இறக்குமதி செய்து கொண்டிருப்பதைவிட கலப்பட இனத்தை உருவாக்க முயற்சிக்கப்படுகிறது. கலப்பட ஆடுகளின் ரோமம் ஏறத்தாழ 48 ரூபாய் அளவுக்குத்தான் கிடைக்கிறது. மேற்கொண்டு இதை வளர்ப்பதற்கான வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன.

திரு. ஏ. எம். இராஜா: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஒரு ஆட்டுக்குத் தீவன வகையில் ஆண்டு ஒன்றுக்கு 132 ரூபாய் ஆகிறது என்றும் வருமானம் 146 ரூபாய் என்றும் குறிப்பிட்டார்கள். செலவையும், வருவாயையும் பார்க்கும்போது மிகக் குறைந்த அளவுக்குத்தான் வருமானம் வருகிறது. ஆகவே, இந்த முயற்சி தேவைதானா அல்லது இதிலே வருமானத்தை அதிகரிக்க அரசு திட்டமிட முடியுமா, அப்படி அல்லாமல் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்தத்தான் வேண்டுமா என்பது பற்றி அரசின் கருத்து என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்த வினாவில் சராசரி ஒரு ஆட்டுக்குத் தீவனச் செலவு எவ்வளவு என்பது மட்டுந்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. தீவனச் செலவு 132 ரூபாய் என்றும் வருவாய் 146 என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கில் அதன் விலை, வளர்ப்புச் செலவு எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் லாபமா நட்டமா என்று தெரியும்.

### *Roadside workshops in Madras City*

* 54 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government are aware of any roadside workshops in Madras city; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பாதசாரிகள், போக்குவரத்து வண்டிகள் ஆகியவற்றிற்கு இடையூறாக சென்னை மாநகர் ஒற்றைவாடை சாலையிலுள்ள இரும்புப் பட்டறைகளைத் தவிர சாலை



ஓரப் பணிக்களரிகள் சென்னை மாநகரில் வேறு எந்த இடத்திலும் இருப்பதாக அரசுக்குத் தெரியவில்லை. சாலையிலும், சாலை ஓரங்களிலும் போக்குவரத்துக்கு இடையூறாக, ஆக்கிரமிப்பு செய்பவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு தலைமைப் பொறியாளருக்குத் (நெடுஞ்சாலை-கிராமப்பணிகள்) தேவையான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் உள்ள சாலை ஓரப் பணிக்களரிகள் பற்றிய ஆய்வு எதனையும் அரசு மேற்கொள்ளவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, are the Government aware that in the non-shopping areas, particularly in the residential areas, there are many cycle shops and car repair shops. As they are situated both inside and outside streets, they are causing a lot of inconvenience to the traffic. So, will the Government take strict steps to stop it?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சில இடங்களில் அப்படி நடைபாதையில் இரும்பு கட்டுமான வேலை செய்கிறவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். அவர்களை வெளியேற்ற ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சென்னையில் நடைபாதையிலுள்ள சிறு வியாபாரிகள், பாய்க்கடைக்கு எதிரிலுள்ள மிலிட்டரி இடத்தில் தங்களுக்குக் கொஞ்சம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று பலமுறை மனுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுக்கள் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? இனியாவது அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இதுவரை அப்படி ஒன்றும் வரவில்லை.

### வைகை ஆற்றின் குறுக்கே பாலம்

*55 வினா—திரு. கு. திருப்பதி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகரை ஒட்டி ஆற்றின் குறுக்கே புட்டுத் தோப்பையும், பாரதி நகரையும் இணைக்கும் வகையில் புதிய பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** மதுரையில் வைகை ஆற்றின் குறுக்கே புட்டுத்தோப்பையும் பாரதி நகரையும் இணைக்கும் வகையில் தரைமட்டம் அளவு பாலம் ஒன்று ரூ. 16.00 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. த. சோணையா:** மதுரை புட்டுத்தோப்பில் இருந்து பாரதி நகருக்குச் செல்ல வேண்டுமென்றால், ஆற்றிலே தண்ணீர் வருகின்ற நேரத்தில் நான்கு மைல் சுற்றி வரவேண்டிய அளவுக்கு மதுரை நகர மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதைப் போக்குகின்ற வகையில் புட்டுத்தோப்புக்கும் பாரதி நகருக்கும் இடையே மேம்பாலம் கட்டுகின்ற இந்தத் திட்டத்தைச் சீக்கிரம் முடித்துத் தர அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** புட்டுத்தோப்புக்கும் பாரதி நகருக்கும் இடையே வைகை ஆற்றில் பாலம் ஒன்று கட்டுவது பற்றிய விரிவான வரைபடங்களும், மதிப்பீடுகளும் தயாரிக்குமாறு தலைமைப் பொறியாளருக்கு ஆணை அனுப்பப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன் பரிசீலிக்கப்படும்.

## *New Housing Schemes*

* 56 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state whether it is a fact that the Slum Clearance Board has recently sent up a proposal to build houses for low and middle income groups along side tenements constructed for slum dwellers?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** குறைந்த வருமானத் தொகுதியினருக்கு/நடுத்தர வருமானத் தொகுதியினருக்கு வீடுகள் கட்டுவதற்காக குடிசை மாற்றுப் பகுதிகள் சிலவற்றிலுள்ள சில நிலங்களைத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்க தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கருதி வருகிறது. இது பற்றிய செயற்குறிப்புகள் அரசுக்கு வரவில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** குறைந்த வருமானத்தினருக்கும் நடுத்தர மக்களுக்கும் வீடு கட்டும் திட்டத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறது?



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இதற்குப் பணம் ஒதுக்குவது என்பது பிரச்சினை அல்ல. வீட்டு வாடகை அதிகமாகிக் கொண்டு வரும் காரணத்தால், அவர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுக்கலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. வருஷத்தில் 7,600 முதல் 18,000 வரை சம்பாதிக்கக்கூடியவர்களைக் குறைந்த வருமானக்காரர்கள் என்ற வகையில் சேர்த்து அந்த வகுப்பினருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் வகுக்கப்பட இருக்கிறது. இப்போது திட்டம் இல்லாத காரணத்தால் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அரசாங்கம் என்.ஜி.ஓ.-க்கள் வீடு கட்டுவதற்காகக் கடன் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. கேட்டால் ஒதுக்கப்பட்ட பணம் குறைவாக இருக்கிறது என்று கூறப்படுகிறது. அதிக வருவாய் உள்ளவர்களுக்குக் கடன் கொடுப்பதை நிறுத்திவிட்டு குறைந்த வருவாய் உள்ள என்.ஜி.ஓ.-க்களுக்கு வீடு கட்டுவதற்கு அதிக நிதி ஒதுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** என்.ஜி.ஓ.-க்களுக்கு வீடு கட்ட கடன் கொடுப்பதற்காக பணம் ஒதுக்கப்பட்டுத்தான் வருகிறது. கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் தொகை குறைவாக இருக்கும் காரணத்தால், முடிந்த அளவுக்கு உதவி செய்யப்படுகிறது. மற்றவர்கள் யாருக்கும் அதிகமாகக் கடன் தொகை ஒதுக்கப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில், சிமெண்ட் கிடைக்காத காரணத்தால், வீடுகள் கட்டுவதில் காலதாமதம் ஆகிறது என்று தெரிய வருகிறது. எனவே அவர்களுக்கு வீடுகள் கட்ட சிமெண்ட் ஒதுக்கிக் கொடுப்பதில் முதல் இடம் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் கோரி அதிகப்படியான சிமெண்ட் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இருக்கிற சிமெண்டை முடிந்த அளவிற்கு வீட்டுவசதி வாரியத்திற்கு அரசு ஒதுக்கி உதவி வருகிறது. மீதமுள்ள வீடுகளை சுண்ணாம்பால் கட்டுவதற்குரிய முறையை வீட்டுவசதி வாரியம் மேற்கொண்டிருக்கிறது.

[1974 ஆகஸ்ட் 13

**திரு. கே. என். குமாரசாமி:** நடுத்தர மக்கள் வீடுகள் கட்டிக் கொள்ள கூட்டுறவு முறையில் எல்.ஐ.ஸி. அல்லது பாங்குகள் மூலம் வழங்கப்படுகிற கடன்களுக்கு வட்டியின் சதவிகிதம் உயர்ந்து கொண்டே போகிறது. நகரங்களில் வீடுகள் கட்டிக்கொள்வதில் அந்த வட்டிக்குப் போதுமான அளவிற்கு வருமானம் கிடைக்கும். ஆனல் கிராமப் பகுதிகளில் வீடுகள் கட்டிக்கொள்ள அந்த வட்டி விகிதம் அதிகப்படியாகும் என்பதால் அத்திட்டத்தை ஏற்றுக் கொள்ள மக்கள் அச்சப்படுகிருர்கள். எனவே கிராமப் பகுதிகளில் அந்த வட்டி விகிதத்தைக் குறைத்துக் கொடுக்க வீட்டுவசதி வாரியம் மூலமாகவோ அல்லது குடிசை மாற்று வாரியம் மூலமாகவோ ஏற்பாடு செய்ய சர்க்கார் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இந்தப் பிரச்னையில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

## திருநெல்வேலி மாவட்டத்தில் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம்.

* 57 வினு—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வீட்டு வசதிக்கான திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் செயல் படுத்தப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அந்த மாவட்டத்தில் எந்தெந்த தொழிற் சாலைகளில் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) இத் திட்டம், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பேட்டை தொழிற்பேட்டையிலும் கோவில்பட்டி தொழிற் பேட்டையிலும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர, கூட்டுறவுத் துறையில் அரசிடம் கடன் பெற்று கீழ்க்கண்ட தொழிற்சாலைகள் தங்கள் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கின்றன.

(1) லாயல் நூற்பு ஆலை, தொழிலாளர்கள் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்.



1974 ஆகஸ்ட் 13]

(2) ஹார்விபுரம் தொழிலாளர்கள் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்.

(3) ஹார்விபுரம் பணிபுரிவோர் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்.

**திரு. சோ. அழகர்சாமி:** இந்த வீட்டு வசதித் திட்ட அடிப்படையில் எந்த முறையில் வீடுகள் கட்டிக்கொடுக்கப் படுகின்றன? அந்தத் தொழிற்சாலை அதிபர்கள் தங்கள் நிதியிலிருந்து போட்டு வீடுகள் கட்டிக் கொடுக்கிருர்களா? அல்லது வீட்டு வசதி வாரிய நிதியிலிருந்து வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றனவா? இந்தப் பணத்தை தொழிலாளர்கள் எந்த முறையில் திரும்பச் செலுத்த வேண்டும்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இந்த வீடுகள் அந்தந்த தொழிற்சாலைகளுக்கு அருகில் கட்டித் தரப்படுகின்றன. மாநில அரசும் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருகிறது. அதோடு தனி தொழில் அதிபர்களும் முன் வந்து இந்த உதவி பெற்று தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருகிருர்கள். ஆக, இரண்டு வகைகளிலும் வீடுகள் கட்டப் பட்டுவருகின்றன.

## *Nutrition Centre for children*

* 58 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state whether it is a fact that a Nutrition Centre for the Children of the tenements on East Cooum River Road, Chitadripet has been opened by the Indian Red Cross Society with the Co-operation of the State Social Welfare Department?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை:** ஆம்.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்தச் சத்துணவு பற்றிய விவரம் என்ன? அதைக் கொடுப்பதன் காரணமாக எந்த அளவிற்குப் பயன் அடையப் பெற்றிருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை:** சிந்தாதிரிப்பேட்டை கிழக்கு கூவம் ஆற்றுச் சாலையில் குடியிருப்பவர்களின் குழந்தை களுக்காகச் சத்துணவு நிலையம் ஒன்று மாநில சமூக நலத்

துறையின் ஒத்துழைப்புடன் இந்திய செஞ்சிலுவை சங்கத்தால் தொடக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா? என்பது வினா. அதனால் எந்த அளவிற்குப் பலன் பெறப்பெற்றிருக்கிறது என்று கேட்கிறார்கள். இந்தச் சத்துணவுத் திட்டத்தின்படி சென்னை பகுதியில் மட்டும் ஊட்டச் சத்து நிலையங்கள் 24 தோற்றுவிக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நிலையத்தின் மூலம் கிட்டத்தட்ட அறுபது குழந்தைகள் பயன் பெறுகிறார்கள்.

### *Recognised Orphanages*

*59 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) the number of orphanages run by private institutions with Government recognition as on this date; and

(b) the amount allotted for purpose of grants to those institutions?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** 31—3—74 அன்று உள்ளபடி, தனியார் நிறுவனங்கள், அரசு அங்கீகாரம் பெற்று 378 அனாதை இல்லங்களை நடத்துகின்றன. 1974-75-ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 68,61,000 ஒதுக்கப் பட்டிருக்கிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்த இல்லங்களில் உள்ளவர்களுக்கு எவ்வாறு புனர்வாழ்வு அளிக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** சென்னை, மதுரை, தஞ்சை, திருச்சி, கோவை, சேலம் போன்ற இடங்களில் இருக்கிற இல்லங்களுக்கு, ஒருவருக்கு ரூ. 14 வீதமும், மற்றும் பெருநகரங்கள் நீங்கலாக சமவெளிப் பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு ரூ. 13 வீதமும், மலைப்பிராந்தியங்களில் உள்ள இல்லங்களில் உள்ளவர்களுக்கு ரூ. 18 வீதமும் இந்தச் சிறுவர்கள் பயன்பெறும்வகையில் அரசு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படுகின்றன.





### மாதவரத்தில் அரிசன நலத்துறைப்பள்ளி

*60 வினா—திரு. ம. வெ. நாராயணசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் நகரத்தில் அரிசன நலத்துறைப் பள்ளி ஒன்று துவக்கிடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. மா. வெ. நாராயணசாமி:** மாதவரம் நகரத்தில் ஏராளமான ஹரிஜன மக்கள் வாழ்கிறார்கள். அதையொட்டியுள்ள பகுதிகளிலும் ஹரிஜன மக்கள் நிரம்ப வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, மாதவரம் நகரத்தில் ஒரு ஹரிஜன நலத்துறைப் பள்ளி துவங்க இனிமேலாவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** மாதவரம் நகரத்தில் ஹரிஜன நலப் பள்ளி துவங்கவேண்டும் என்று சொல்கிற அளவிற்கு உள்ளபடியே அங்கு நிலைமை இருக்குமானால் கல்வி இலாகா வருகிற விதிகளுக்குட்பட்டு அரிசன நலத்துறைப் பள்ளியை ஏற்று நடத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்

### (அ) அவை அலுவல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டப் பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விபரம் @ ஏற்கனவே உறுப்பினர்களுக்கு அச்சிட்டு அனுப்பியவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

@ 260–261-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.

[1974 ஆகஸ்ட் 13

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 6 (1)-ன்படி, கீழ்க்கண்ட உறுப்பினர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர்களாக நான் நியமனம் செய்திருக்கிறேன்:--

1. திரு. செ. கந்தப்பன்.
2. புலவர் கி. பழனிச்சாமி.
3. திரு. கே. பி. கந்தசாமி.
4. திரு. சி. வே. வேலப்பன்.
5. திரு. ஜெ. ஜேம்ஸ்.
6. திரு. சோ. அழகர்சாமி.

அடுத்து, அரசினர் சட்ட முன்வடிவு.

3. நடைமுறைக் கேள்வி.

பேரவையைப் பிற்பகல் 1.30 மணிக்கு முன்னதாகவே ஒத்திவைத்தது குறித்து.

DR. H. V. HANDE : I rise to present before the Hon. Speaker a very valid point of order, namely, that Rule 16 was violated yesterday and I would request the Hon. Speaker to give a ruling after listening to my points very carefully. The point that I want to bring before the House is that the Assembly Rules should not be violated. It is not to cast aspersion on the Chair or anything like that. Yesterday at about 12-30 p.m. or so the House was adjourned against paragraph 2 of Rule 16. What the Rule says is.........

MR. SPEAKER : எந்த ரூலைக் குறிப்பிடுகிறீர்கள்.

DR. H. V. HANDE : What Rule 16 (1) says is this—

" Subject to the provisions of Rule 87, the Speaker shall at the closing hour fixed under these rules or by the House from time to time, adjourn the House to the next sitting in the same meeting or sine die:



1974 ஆகஸ்ட் 13] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

The normal practice is before adjournment, the Speaker or the person presiding over the House usually asks the Hon. Leader of the House or Leader of the Opposition whether he can adjourn the House. That opportunity was not given and no question was asked either to the Hon. Leader of the House or Leader of the Opposition. The Hon. Deputy Speaker said that no one was forthcoming to speak and so he adjourn the House. The normal practice is that the Business Advisory Committee where the Hon. Speaker, Hon. Leader of the House and leaders of parties are present normally discuss as to the number of hours to be allotted to a particular subject. As far as the 'no-confidence motion' was concerned, the Deputy Speaker could have asked the Leader of the Opposition or leaders of parties whether there are adequate members to speak. Before adjourning earlier, he could have discussed with leaders of parties. That was not done. I say it is violative of Rule 16. That rule had been amended thus " Provided further that the House shall not be adjourned sine die or to a day beyond the next sitting except on a motion adopted by the House. " This amendment had come in after Mr. Mathialagan, who was the Speaker and who occupied the Chair previously adjourned the House abruptly once. This amendment was then brought in and we all discussed it in the Rules Committee and the new amendment was adopted to the effect that whenever the Speaker or Deputy Speaker wants to adjourn the House earlier, he has to seek the permission of the House; usually it is done by a resolution adopted by the House. But this normal practice was not followed.

The question now is this. In yesterday's case, whether the Deputy Speaker adjourned the House without ascertaining the will of the House. I understand, my information is that a number of members of the ruling party actually came forward to speak (Interruption) that is my information—but they were asked not to speak or they were not given permission to speak and a few other members of other parties also wanted to speak. Whenever such a situation arises, the usual practice is " யாரும் இல்லையா பேசுவதற்கு, யாராவது பேச இருக்கிறீர்களா என்று கேட்பார்கள் "

But suddenly, abruptly, without even giving an opportunity to members to explain their stand, the Deputy Speaker adjourned

the House and suddenly went away. This has been done to give the impression—that is the ultimate result—the ultimate result is this—that a wrong impression should be given to the people outside that members were not prepared to speak on the no-confidence motion. Actually, every one of us was prepared, but we were told that there was no time and one from each party can speak and so we gave one name only. For that matter I was ready and I, am always ready anyday. But we were told there is not enough time.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலம் இல்லை என்று சொன்னது யார், ஒருவருக்கு மேல் பேச முடியாது என்று சொன்னது யார்? பேரவைத் தலைவரிடமோ, துணைத் தலைவரிடமோ யாராவது நாங்கள் இரண்டு பேர் பேசுகிறோம் என்று கேட்டீர்களா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** எப்படிப் பேசுவது? எவ்வளவு நேரம் ஒதுக்கப்போகிறீர்கள் என்று கேட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்டார்கள் என்று சொன்னால் யார் கேட்டார்கள்?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** எல்லோரும் கேட்டார்கள், எட்மண்ட், திரு. பொன்னப்ப நாடார் கேட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்னப்ப நாடார் அவர்களை நான் அலுவல் ஆய்வுக்குழு நடந்து கொண்டிருந்த நேரத்தில் அழைத்து, இப்போது பேச ஆள் இல்லை, அடுத்து பேசுவதற்கு ஆள் கிடையாது, பெயர் கொடுங்கள் என்று சொன்னேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இப்படிச் செய்தால் என்ன ஆகும்? ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பேசுவதற்கு ஆள் இல்லை என்று நீங்கள் செய்வதைக் கொஞ்சம் கெட்டிக்காரத்தனமாகக் கூடச் செய்யலாம், மன்றத்தில் எதிர்க்கட்சியில் ஆட்கள் இருக்கிறார்கள், அவர்கள் பேச விரும்புகிறார்களா என்ற கேட்டிருக்கவேண்டும். திடீரென்று யாரும் பேச ஆள் இல்லை என்ற எழுந்து விட்டால், எதற்கு இந்த ரூலுக்கு திருத்தம் கொண்டு வரவேண்டும்?





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** திடீரென்று பேரவையை ஒத்திவைத்ததால் இங்கே ரூல் 16 வயலேட் செய்யப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பாயின்ட் ஆப் ஆர்டர் கீழ் வராது. பிரிவிலேஜில் வருகிறது. ஸ்பீக்கார் மேலே பிரிவிலேஜ் கொண்டு வர முடியாது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இட் டீஸ் அல்டிரா-வயர்ஸ் ஆப் ரூல் 16. நீங்கள் இப்போது உடனடியாகக் கூட ரூலிங் கொடுக்க வேண்டாம். எல்லோரும் சொல்லி, டிஸ்கஷன் ஆனபிறகு கொடுத்தால் நன்றாக இருக்கும். இதை இப்படியே விட்டு விட்டால், தொடர்ந்து இது போகும். அதற்காகத்தான் சொல்கிறேன், ஆகவே முதலமைச்சருக்கும் சொல்கிறேன், இதற்கு ஒரு ரூலிங் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் எங்களுடைய கட்சி கொறடா யார் யார் பேசுவதற்கு இருக்கிறார்கள் என்பதை முன்கூட்டியே சபாநாயகருக்கு கொடுத்து விடுவார். கொறடாக்கள் இப்படிப்பட்ட பணியைச் செய்யாதது அவர்களுடைய தவறே அல்லாமல் வேறு யாருடைய தவறும் இல்லை.

**திரு. து. ப. அழகமுத்து:** தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்களின் ஒழுங்குப் பிரச்சினை மீது சில கருத்துக்களை நான் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நம்முடைய தலைவர் கொறடாக்கள் செய்யவேண்டிய காரியத்தைச் செய்யவில்லை என்று சொன்னார்கள். நான் நேற்றையதினம் எல்லாக் கட்சித் தலைவர்களையும் சந்தித்து, பேசுவதற்கு ஆள் இல்லாததால் அசெம்பிளி ஒத்திவைக்க வேண்டியிருக்கும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். யாரும் பெயர் கொடுக்கவில்லை. பெயர் கொடுக்க யாரும் முன்வரவில்லை. ஆனால் இன்றையதினம் நம்முடைய எதிர்க்கட்சிப் பத்திரிகையில் பார்க்கிறபோது

[திரு. தா. ப. அழகமுத்து] [1974 ஆகஸ்ட் 13

செழியன் பெயர் கொடுத்தாகவும், கூப்பிடவில்லை என்றும் சபாநாயகர் மீது குற்றம் சுமத்தும் முறையில் செய்தி வந்திருக்கிறது. ஆனால் நான் சொல்வதுதான் உண்மை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** தலைவரவர்களே, நேற்றையதினம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் உடனடியாக விவாதத்திற்கு எடுக்கப்பட்டதால், நேற்றைக்கு முன்தினம் கொடுக்கப்பட்ட நம்முடைய சட்டமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு அனுமதி கோரப்படுமா என்றும் போடவில்லை, விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுமா என்றும் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படவில்லை. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்பிக்கையில்லாத் தீர்மானம்.

**திரு. கோவை செழியன்:** நான் கேட்ட பாயின்ட் ஆப் ஆர்டருக்கு பதில் சொல்லுங்கள். சேரில் உட்கார்ந்து இருப்பவர்கள் ஒத்தி வைப்பதற்கு முன் சபையைக் கேட்டார்களா? அது தான் பாயின்ட், மற்றதைப் பற்றி கவலையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சபையில் குறிப்பிட்டிருக்கிற அஜெண்டா படி பிசினஸ் முடிந்து விட்டால் 1½ மணிக்கு முன்னாலே கூட சபையை ஒத்தி வைக்கலாம், அதற்கு யாரையும் கேட்கவேண்டியது இல்லை. பேரவைத் தலைவரே ஒத்தி வைத்து விட்டுப் போகலாம். செழியன் அவர்கள் பேசவிரும்பியதாகச் சொல்கிறார்கள். அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் "நாளை 13—8—1974 அன்று காலை அண்ணா தி. மு. க. சார்பில் முதன் முதலில் பேச அனுமதி கோருகிறேன்" என்று எழுதிக்கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, அவர் நேற்று பேசுவதாக இல்லை.

**திரு. கோவை செழியன்:** எங்கள் கட்சியில் பேச தயாராக இருக்கிறோம். ஒரு கட்சிக்கு ஒருவர் தான் என்று சொன்னார்கள். ஆட்கள் இல்லை என்று தெரிந்து இருந்தால் நேற்றே நான் பேசியிருப்பேன்.



1974 ஆகஸ்ட் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது சொல்கிறேன். இப்போது பேசுவதற்கு பெயர் கொடுத்திருப்பவர்கள், ஆளுங்கட்சி சார்பில் திருவாளர்கள் வெ. கிருஷ்ணமூர்த்தி, கா. வேழவேந்தன், வை. பாலசுந்தரம், சுருளிவேல், தொ. ப. சீனிவாசன், அண்ணா தி.மு.க. சார்பில் திருவாளர்கள் கோவை செழியன், எச். வி. ஹாண்டே, ஸ்தாபன காங்கிரஸ் கட்சி சார்பில் திருவாளர்கள் ஒ. என். சுந்தரம், ஜே. ஜேம்ஸ், கே. பி. கோபால் ஆகியோர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு உறுப்பினர்கள் இன்றைக்குப் பெயர் கொடுத்து இருக்கிறார்கள். நேற்றும் இப்படி பெயர் கொடுத்து இருக்க வேண்டும். கொடுக்கவில்லை. அதற்காக நான் சும்மா இருந்து விடவில்லை. திரு. பொன்னப்ப நாடார் அவர்களை அழைத்துச் சொல்லியிருக்கிறேன். கே. எம். எஸ். பேசிய பிறகு பேசுவதற்கு ஆள் இல்லை, அவையை முடிக்கவேண்டியிருக்கும் என்று சொல்லி இருக்கிறேன். அவர்கள் கூட சொல்லவில்லை. ஆகவே, இதிலே எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, ஒரு கிளாரிபிகேஷன்.

**திரு. முனு ஆதி:** உங்கள் அனுமதி இல்லாமலேயே அவர்கள் எழுந்து நின்று பேசலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எப்படி இப்பொழுது எழுந்து பேசினீர்கள். நீங்கள் யாரைக் கேட்டு எழுந்தீர்கள்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** தலைவரவர்களே, என்னுடைய ஒழுங்குப் பிரச்னை என்ன என்று சொல்ல தாங்கள் எனக்கு அனுமதி வழங்கிய பின்னாலும் கூட, ஆளும் கட்சியைச் சார்ந்த நண்பர் வீராசாமி அவர்கள் எந்த உரிமையில் பேசுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அடிக்கடி இப்படி எழுந்து கொண்டிருந்தால். . . . .

(பல உறுப்பினர்கள் குரலெழுப்பினர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். எட்மண்ட், உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன சொல்லுங்கள்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** நான் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கிறார்கள்.

[1974 ஆகஸ்ட் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டரை எழுப்புங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** நான் எழுப்பிய பிரச்னையில் பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறதா, இல்லையா என்று தீர்ப்பு அளிக்கவேண்டியது சபாநாயகர் அவர்களே தவிர, இந்த மன்றத்தில் இருக்கிற 233 உறுப்பினர்களும் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பார்த்து உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்புங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** பேரவைத் தலைவர் அவர்கள் என்னைப் பேச அழைத்திருக்கிறார்கள். நான் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதை விளக்கிக்கொண்டிருக்கிறேன். அப்படியிருக்கும்பொழுது அத்தனை பேர்களும் எழுந்திருந்து பேசினால் இது சந்தைக் கடை மாதிரி இருக்கிறதே தவிர, சட்ட சபை மாதிரி நடக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு வாருங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** நான் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே முதல் அமைச்சர் அவர்கள் எங்கே பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கிறார்கள். நான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது முதல் அமைச்சருக்காக இல்லை. நான் எழுப்பிய பாயிண்ட் ஆப் ஆர்டர் தலைவர் அவர்களை நோக்கி எழுப்பி அவர்களின் தீர்ப்பை கேட்கிறேன். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டரைச் சொல்லுங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** நான் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப நீங்கள் என்னை அனுமதித்திருக்கிறீர்கள். உறுப்பினர்கள் அனுமதிக்கமாட்டேன் என்கிறார்களே ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரைச் சொல்லுங்கள்.





**திரு. உரொ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொண்ட பொழுது வழக்கமாக நாம் பின்பற்றிவரும் முறையை பின்பற்றவில்லை. வழக்கமாக எந்த ஒரு பொருளும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிற பொழுது சபாநாயகர் அவர்கள் உறுப்பினர்கள் எவ்வளவு நேரம் பேச வேண்டும், எந்தெந்தக் கட்சிக்கு எவ்வளவு நேரம் ஒதுக்கவேண்டும் என்று முடிவு செய்து நாம் விவாதத்தை ஆரம்பிக்கிறோம். நேற்று இருந்த நிலைமையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் எழுப்பப்பட்ட முதல் நாளாக இருந்த காரணத்தினால், தீர்மானம் எழுப்பப்பட்டதற்குப் பின்னால் நம்முடைய பிஸினஸ் அட்வைஸரி கமிட்டிக் கூட்டம் 12 மணிக்கு நடந்த காரணத்தினால், நேற்று நாம் அதற்குரிய வரைமுறையை செய்ய முடியவில்லை. நேற்றையதினம் சபையை 12¾ மணிக்கு யாரும் பேசுவதற்கு இல்லை என்ற காரணத்தைக் காட்டி. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை உடனடியாக எடுத்துக்கொள்ளலாமா என்பது தான் உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரா ?

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அதற்கு உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. நேற்று சபையில் பேசுவதற்கு ஆள் இல்லை என்ற காரணத்தைக் காட்டி சபையை பேரவைத் துணைத் தலைவர் ஒத்திவைத்துவிட்டார். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசியதற்குப் பிறகு அதைப்பற்றி தான் நான் முன்பே சொல்லி விட்டேனே?

**திரு. க. உரொ. எட்மண்ட்:** I am on the very same point of order but from a different angle. சில விளக்கங்கள் மன்றத்திற்கு நான் கொடுக்க விரும்புகிறேன். நேற்றையதினம் பேரவைத் துணைத் தலைவர் பேசுவதற்கு உறுப்பினர்கள் இல்லாத காரணத்தினால் சபையை 12-3/4 மணிக்கு ஒத்திவைத்துவிட்டார். வழக்கமாக இந்தமாதிரி விவாதம் நடக்கும்பொழுது எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் பேசிய பிறகு, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேர்கள் பேசுவார்கள். நேற்றையதினம் ஆளும் கட்சியிலிருந்து எந்த உறுப்பினரும் பேசவில்லை.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 ஆகஸ்ட் 13

நான் இரண்டு கேள்விகளை எழுப்ப விரும்புகிறேன். நேற்று ஆளும் கட்சியில் பேசுவதற்கு யாரும் பெயர் கொடுக்கவில்லையா? அல்லது பெயர் கொடுக்கவில்லை என்றால் நாங்கள் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசுவதற்கு ஆளும் கட்சியில் ஆள் இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டரைக் கூறுங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** நான் எதற்காக இந்தக் கேள்வியை எழுப்புகிறேன் என்றால், இன்று காலை முரசொலிப் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் அமைச்சர் அவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கும் பொழுது, அதன் பேரில் பேசுவதற்கு ஆள் இல்லாத காரணத்தினால் ஒரு மணிக்கு முன்னதாகவே சபை ஒத்திவைக்கப்பட்டது என்ற செய்தி போடப்பட்டிருக்கிறது. எனக்கு ஒரு சந்தேகம். இப்படி ஒரு செய்தியை வெளியிட வேண்டும் என்பதற்காகவே நேற்றையதினம் 12-3/4 மணிக்கு பேசுவதற்கு ஆள் இல்லை என்ற ஒரு காரணத்தைக் காட்டி பேரவையை ஒத்திவைப்பதற்கு பேரவைத் தலைவரும், துணைத் தலைவரும் உடந்தையாக இருந்தார்களோ என்ற ஒரு நியாயமான சந்தேகத்தை நான் எழுப்புகிறேன்.

(திரு. முனு ஆதி எழுந்திருந்தார்)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் எழுந்திருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. து. ப. அழகமுத்து:** ஆளும் கட்சி வரிசையிலிருந்து பேசுவதற்கு ஆள் இல்லாத காரணத்தினால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் அவர்களுக்கு உடன்பட்டதாக இருக்கிறதா என்ற முறையில் திரு. எட்மண்ட் அவர்கள் பேசுவதிலிருந்து ஏதோ நோக்கம் கற்பித்துப் பேசுகிறார்கள். ஆளும் கட்சி வரிசையில் பேச வேண்டிய அளவுக்கு அதிகமாகவே உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நேரத்தை எதிர்க்கட்சியினர் தான் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்களே தவிர, எங்கள் வரிசையிலே பேசுவதற்கு ஆள் இல்லாமல் இல்லை. நேற்றும் பேசுவதற்கு உறுப்பினர்கள் இருந்தார்கள். எதிர்க்கட்சிகளுக்குச் சந்தர்ப்பம் அதிகமாகத்தர நான் தான் பேசவேண்டாம் என்று கூறி விட்டேன்.



1974 ஆகஸ்ட் 13]

**திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு அரசாங்க கொறடா திரு. அழகுமுத்து அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களையும் பேசுவதற்கு யாராவது இருக்கிறார்களா என்று கேட்டதாகச் சொன்னார்கள். நான் உண்மையிலே சொல்கிறேன். என்னைச் சந்தித்து யாரும் அப்படிக் கேட்கவில்லை. தலைவர் அவர்கள் கேட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால், என்னைக் கேட்கவில்லை. நான் பிஸினஸ் அட்வைஸரி கமிட்டிக் கூட்டம் முடிந்த பிறகு 12½ மணிக்கு சபையிலே என்னுடைய இருக்கையிலே அமர்ந்திருந்தேன். அந்த நேரத்தில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. வடிவேல் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். பேசுவதற்கு ஆள் இருக்கிறார்களா, இல்லையா என்று பார்ப்பது என்னுடைய வேலை அல்ல. சபைத் தலைவருக்குத் தெரிய வேண்டும், அல்லது சபையை நடத்துபவருக்குத் தெரிய வேண்டும். 1½ மணி வரைக்கும் சபை நடக்கிறது. பெயர் கொடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. இன்னும் உறுப்பினர்கள் பேசுவதற்கு உண்மையான வாய்ப்பு வசதி இருக்கிறது. ஆளும் கட்சியிலிருந்து யாரும் தங்களுடைய பெயர்களைக் கொடுக்கவில்லை. எதிர்க்கட்சியினர்களிடமிருந்து அப்படியிருக்கும்பொழுது சபையை 1½ மணி வரையில் நடத்த வேண்டும். பேசுவதற்கு உறுப்பினர்கள் இருக்கிறார்களா என்று அறிய வேண்டும் என்ற நல்ல எண்ணம் சபையை நடத்திச்சென்ற துணைத் தலைவருக்கு இருக்குமேயானால், அவர் என்னைக் கேட்டிருக்கலாம். சபை ஒத்திவைக்கப்பட்ட நேரத்தில் நான் உள்ளேயே இருக்கிறேன். நான் சட்டமன்றத்திற்குள் என்னுடைய இருக்கையில் இருக்கிறேன். என்னைக் கூப்பிட்டு அவர்கள் கேட்டிருக்கலாம். இனி பேசுவதற்கு ஆள் இல்லை. ஆள் இல்லாத காரணத்தினால் சபையை 12¾ மணிக்கே ஒத்திவைக்கவேண்டிவரும், உங்கள் கட்சியிலிருந்து யாராவது பேசுகிறார்களா, இன்னும் யாராவது பேசவேண்டுமானால் நான் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன் என்று கேட்டிருந்தால், என் கட்சியிலிருந்து பேசுவதற்கு ஏராளமான பேர்கள் விருப்பமாக இருந்தார்கள். அவர்களில் யாராவது ஒருவரைப் பேசச் சொல்லியிருப்பேன்.

[1974 ஆகஸ்ட் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பொன்னப்ப நாடார் அவர்களை அழைத்து, பேசுவதற்கு ஆள் இல்லை, உங்கள் கட்சியிலிருந்து யாராவது பேசுவதாக இருந்தால் பேசலாம் என்று நான் சொல்லியிருக்கிறேன்.

**திரு. முனு ஆதி:** பொன்னப்ப நாடார் அவர்களைக் கேட்டிருக்கலாம். ஆனால் எங்களைக் கேட்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பேரவைத் தலைவரின் பணி அல்ல. அந்தப் பணி இல்லாதபோதும் பேரவையை நடத்திச் செல்லவேண்டும் என்பதற்காக நான் பொன்னப்ப நாடார் அவர்களிடம் சொன்னேன். அப்படி நான் சொல்லியிருந்தும், பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் மாசு கற்பிக்கும் முறையில் பேசுவது முறையாக இல்லை.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** சட்ட மன்றத்தில் விவாதத்தில் பங்குகொள்வதற்கு எந்தக் கட்சியிலிருந்தாவது ஆள் இருக்கிறார்களா என்று கேட்பது பேரவைத் தலைவர் அவர்களுடைய வேலை அல்ல என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். அப்படி அது உங்களுடைய பணியில்லை என்றாலும் நீங்கள் மிகுந்த பெருந்தன்மையோடு பொன்னப்ப நாடார் அவர்களை அழைத்து அவர்களுடைய கட்சி சார்பிலே பேசுவதற்கு யாராவது இருக்கிறார்களா என்று கேட்டிருக்கும் பொழுது, நான் அதே பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி கூட்டத்திலிருந்து வெளியே வந்திருக்கிறேன், என்னையும் கூப்பிட்டுக் கேட்டிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சியின் சார்பிலே ஒருவர் பேசியாகிவிட்டது. . . . .

**திரு. க. உரொ. எட்மண்ட்:** 1½ மணி வரையிலும் சபை நடக்கவேண்டும். 12-3/4 மணிக்கு பேசுவதற்கு ஆள் இல்லை என்ற நிலைமை உருவாகி, ஒரு கட்சிக்கு ஒருவர்தான் பேச வேண்டும் என்ற வரைமுறை உருவாக்கப்படாதபொழுது, பேசுவதற்கு ஆள் இருந்தால் ஒரு கட்சிக்கு ஒரு உறுப்பினர்தான் பேசலாம் என்று சொல்வதில் ஆட்சேபனை இல்லை, அப்படி ஆள் இல்லாதபோழுது என்னைக் கேட்டிருக்கலாம்.



1974 ஆகஸ்ட் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு பேர்கள் பேசியிருக்கலாம். பெயர் கொடுக்கவில்லை என்ற குறைதான்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** பேரவைத் தலைவர் அவர்கள் பொன்னப்ப நாடார் அவர்களைக் கேட்டபொழுது, நானும் அதே கமிட்டியில் இருந்தேன். என்னையும் கேட்டிருக்கலாம், உங்கள் கட்சியில் ஏற்கனவே ஒருவர் பேசிவிட்டார் 12-3/4 மணிக்குப் பேசுவதற்கு ஆள் இல்லை, இன்னும் ¾ மணி நேரம் இருக்கிறது, ஒரு கட்சிக்கு ஒருவர்தான் பேசவேண்டும் என்ற வரைமுறையை நாம் அப்பொழுது ஏற்படுத்தவில்லை. ஆதலால் என்னைப் போன்றவர்களை அழைத்து இன்னொருவர் பேசவேண்டும், ஆள் இருக்கிறார்களா என்று கேட்டிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்னப்ப நாடார் அவர்களை நான் கேட்டேன். அவர்தான் பெயர் கொடுக்கவில்லை. நான் அவரிடம் சொல்லிவிட்ட பிறகு மறுபடியும் உங்களைக் கூப்பிட்டுப் பேச வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** சபாநாயகர் அவர்களே, இன்னொரு விளக்கத்தை நான் கேட்க விரும்புகிறேன். அப்படி என்றால் ஆளும் கட்சியிலிருந்து பேசுவதற்கு ஆள் இல்லையா என்று நான் கேட்கிறேன். அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க் கட்சியைத்தான் நான் கேட்க வேண்டும். உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவரவர்களே, அவர்கள் ஆளும் கட்சியில் பேசுவதற்கு ஆள் இல்லையா என்று கேட்கிறார்கள். இந்த ஆட்சியின் மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது; பேசுவதற்கு இங்கே ஆட்களும் இருக்கிறார்கள்; அதற்கு பஞ்சம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, தங்களுடைய அனுமதியின் பேரில் எங்கள் கட்சியின் சார்பில், நடந்த நிகழ்ச்சியைப்பற்றி ஒரு விளக்கத்தை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஆகஸ்ட் 13

நேற்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் தாங்கள் என்னிடம், "உங்கள் கட்சியின் சார்பில் பேசுவதற்கு ஆள் இருந்தால் பெயர் கொடுங்கள்" என்று கேட்டது உண்மை. நான் அதை மறுக்கவில்லை. எங்கள் கட்சியின் சார்பில் பேசுவதற்கு பெயர் தருகிறேன் என்று சொல்லி, வெளியே வந்து, 'என்குயரி ஆஃபீசில்' இருந்து வருவதற்கு முன்னால் சட்டசபை ஒத்தி வைக்கப்பட்டுவிட்டது. நான் வந்து சொல்வதற்கு முன்னால் ஒத்திவைத்துவிட்டார்கள். ஆகையால் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிபற்றி நான் உள்நோக்கம் கற்பிக்க விரும்பவில்லை. யாராவது பேசுவதற்கு விரும்பியிருந்தால் அழைத்திருக்கலாம் என்ற என்னுடைய தன்னிலை விளக்கத்தை தெரிவித்துக்கொள் கிறேன்.

(திரு. கோவை செழியன் எழுந்துவிட்டு, உட்கார்ந்தார்)

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, அவர்கள் அடிக்கடி எழும்புவதும் உட்காருவதுமாக, ஏதேதோ பேசுவதுமாக இருக்கிறார்கள். அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தால் அதற்கு பதில் சொல்வதற்கும், அதைப் புரிந்துகொள்வதற்கும் எங்களுக்கு வசதியாக இருக்கும். எல்லாம் ஒரு நடிப்பு மாதிரி இருக்கிறது. என்ன சொல்கிறார் என்று தெரிந்தால் நாங்களும் அவரைப்போல நடிக்கலாம்.

**திரு. கோவை செழியன்:** நீங்கள் யாரைப்பார்த்து அப்படிச் சொல்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் வேண்டுமானால். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செழியன், நீங்கள் உட்காருங்கள். திரு. செழியனுக்கு உள்ள வருத்தம் எல்லாம் தான் சீக்கிரமாக பேச வேண்டும்; தன்னைப் பேச அழைக்க வேண்டும் என்பதுதான். அதனால்தான் அடிக்கடி எழுந்திருக் கிறார்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:**
on a point of order. It is very indecent, it is better to see some order is maintained in the House.



1974 ஆகஸ்ட் 13] [திருமதி த. ந. அனந்தநாயகி]

அங்கொருவரும் இங்கொருவருமாக குறுக்கிட்டுப் பேசிக் கொண்டிருப்பது நல்லதல்ல. அப்படி பேசுவது, 'வெளியே வா பார்த்துக்கொள்ளலாம்' என்று சொல்வதுமாதிரி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி யாரும் சொல்ல வில்லை; நீங்கள்தான் சொல்கிறீர்கள்.

THIRU M. A. LATHEEF: Mr. Speaker, Sir, the point of order raised by the hon. Member Dr. Hande was not the question of the Hon. Speaker performing the duties of asking members whether they were ready to speak on a particular subject. It was a specific point. The point raised by the hon. Member, Dr. Hande is whether the Speaker has powers to adjourn the House without sensing the mood of the House. The Speaker has already given his ruling on this point. They will go in the records for future guidance. Such being the case, we have to give proper guidance.

According to Rule 16 (2) of the Assembly Rules, the Speaker has to sense the mood of the House whether the House should be adjourned in the absense of nobody coming forward to speak on a particular subject. What I would like to submit is this. Even though the Speaker has powers to act on his own discretion under other Rules of the Assembly Rules, under Rule 16 (2) of the Assembly Rules, even though it is not mandatory and incum- bent upon the Speaker to sense the mood of the House, it is always desirable that the Speaker asks the House in the absence of no member coming forward to speak. The question of not having business and nobody coming forward to speak is quite different. Yesterday, the House was adjourned for the reason that nobody came forward to speak. It is neither mandatory nor incumbent on the part of the Speaker to go and ask whether the members are ready to speak. It is always desirable that the Speaker should take the House into confidence and adjourn the House according to the wishes of the House. That is my submission. But the House was adjourned earlier by an hour. We are spending a lot of money for each sitting. The Speaker cannot adjourn the House without sensing the mood of the House. It is always desirable the Speaker takes the House into confidence. I want to have your ruling on this point.

[1974 ஆகஸ்ட் 13

* திரு. செ. கந்தப்பன்: தலைவரவர்களே, திரு. லத்தீப் அவர்கள் எழுப்பிய பிரச்சனைக்கு என்னுடைய கருத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் 'ஃபியூச்சர் கைடன்ஸ்' என்ற அடிப்படையிலே சொன்னார்கள். சபாநாயகர் அவர்கள் சபையினுடைய காலத்தை நீடிப்பதற்கு சபையில் சொல்லி முடிவு எடுக்க வேண்டியது அவசியம். ஆனால் பேசுவதற்கு ஆள் இல்லாதபோது சபையில் சொல்லி முடிவு எடுக்க வேண்டுமென்று சொன்னால் அது வேறு சில குழப்பங்களுக்கு வித்திடுவதாக ஆகிவிடும்.

இந்த நேரத்தில் நாடாளுமன்ற நடைமுறையைப்பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். விவாதத்திற்காகப் பேச வில்லை; தகவலுக்காகச் சொல்லுகிறேன். இங்கே சபாநாயகர் அவர்கள் இருக்கிறார்கள்; துணைச் சபாநாயகர் அவர்கள் இருக்கிறார்கள்; மற்றுமுள்ள பானல் ஆஃப் சேர்மன் இருக்கிறார்கள். சில நேரங்களில் சபாநாயகர் இடத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் எழுந்துசெல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு, வேறு ஒருவர் அந்த இடத்தில் வந்து உட்காருவதற்கு இடைவெளி ஏற்பட்டால், இடைப்பட்ட அந்தக் காலத்திற்கு சபையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படி நாடாளுமன்றத்தில் ஒருமுறை 5 நிமிடம் ஒத்தி வைக்க வேண்டியிருந்தது. அதற்கெல்லாம் சொல்லி முடிவு எடுக்க முடியாது. குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னால் சபையை ஒத்தி வைக்க சபாநாயகருக்கு முழு அதிகாரம் இருந்தாக வேண்டும். நாடாளுமன்றத்திலும் இந்த முறை இருந்து வருகிறது.

THIRU M. A. LATHEEF: The point of order that has been raised by me is only to restore order. If the Hon. Speaker feels that the continuity of the House would land in disorder and in order to restore order, after sensing the feeling of the House, the Speaker can use the adjourning of the House as a last resort and as a last weapon. The adjourning of the House is a last weapon in the hands of the Speaker to have the House adjourned. This power is vested in the hands of the Speaker. Here what I want to submit is the Speaker has powers to adjourn the House even abruptly. That is why I submitted it was neither incumbent nor mandatory upon the Speaker to always sense the mood of the



1974 ஆகஸ்ட் 13] [திரு. எம். ஏ. லத்தீப்]

House. But it is always desirable under Rule 16 (2) of the Assembly Rules to sense the mood of the House particularly if there is a large gap between the adjourning time, i.e., 1-30 p.m, and the time at which the House was adjourned. That is my submission. I do not question the Chair's authority. It is not mandatory but it is desirable.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர், சாதாரணமாக 1½ மணிக்கு மேல் சபை நடக்க வேண்டுமென்றால் சபாநாயகர் சபையில் அனுமதியைப் பெற்றுத்தான் நடத்த வேண்டுமென்று விதி இருக்கிறது. அதேமாதிரி கேள்வி நேரத்தின்போது, குறிப்பிட்ட நேரத்திற்குள் கேள்வி முடியவில்லை என்றால் சபையின் அனுமதியைப் பெற்று, சிறிது நேரம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அப்படி எல்லாம் இருக்கும் போது சபையில் அனுமதியைக் கேட்காமல் பேசுவதற்கு ஆள் இல்லை என்று சொல்லி எப்படி ஒத்திப்போடலாம்? 234 உறுப்பினர்கள் இங்கே உட்கார்ந்து சபையை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்றால் அதற்கு ஒரு நாளைக்கு 7,000, 8,000 ரூபாய் செலவாகிறது. அதெல்லாம் மக்களுடைய வரிப் பணம் தான். அப்படி இருக்கும்போது 12½ மணிக்கே எப்படி சபையை ஒத்திப்போட்டு, மக்களுடைய வரிப் பணத்தை பாழாக்கலாம்? முழு நேரம் சபையை நடத்தியாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் நீண்ட நாட்களாக சட்டசபை உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். பலமுறை சட்டசபை குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னால் முடிந்திருக்கிறது. அது அதாவது 1-1/2 மணிக்கு முன்னாலே முடிந்திருக்கிறது. உங்களுக்கு நினைவிருக்கிறதா?

திருமதி த. ந. அனந்தநாயகி: பில்லை பற்றி டிஸ்கஷன் வரும் போது ஓட்டெடுப்புக்கு விட்டு, மசோதா நிறைவேறிய பின்னால் பிஸினஸ் முடிந்துவிட்டால் சபையை ஒத்திவைக்கிறீர்கள். அதைப்பற்றி யாரும் கேட்கவில்லை. ஆனால் பேசுவதற்கு ஆள் இல்லை பிஸினஸ் முடியாமல் இருக்கும்போது, ஒத்தி வைப்பதற்கு என்று சொல்லி எப்படி ஒத்திவைக்கலாம்? எதிர்க்கட்சியிலே நாங்கள் முன்னால் சபையைக் கேட்கவேண்டாமா? ஆளும் கட்சியிலே கிட்டத்தட்ட 50 பேர்கள்தான் இருக்கிறோம். ஆளும் கட்சியிலே

**பேரவையைப் பிற்பகல் 1-30 மணிக்கு முன்னதாகவே ஒத்தி வைத்தது குறித்து**

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 ஆகஸ்ட் 13

170 பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள். அதனால் எதிர்க்கட்சியில் யாரும் பேசவில்லை என்றால் ஆளும் கட்சியிலிருந்து யாராவது பேசியிருக்கலாமே. அவர்கள் அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

[முற்பகல் 10-30]

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி எழுந்திருந்தார்)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இங்கு எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினைக்குத் தாங்கள் தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள். இந்தப் பேரவை 1½ மணி வரையில் நடக்க வேண்டுமென்பது விதி. முன்பே முடிந்துவிடுவது என்பதும் விதிக்குப் புறம்பானது அல்ல. அவையை ஒத்தி வைக்கின்ற முழு உரிமை பேரவைத் தலைவருக்கு இருக்கிறது. 12¼ மணிக்கே முடித்திருக்கிறோம். 12½ மணிக்கு முடித்திருக்கிறோம். 1¼ மணிக்கு முடித்திருக்கிறோம். 1-10 மணிக்கும் முடித்திருக்கிறோம். அலுவல் முடிந்துவிட்டால் அதற்குப் பிறகும் இங்கே ஏன் உட்கார்ந்திருக்க வேண்டும்? தொடர்ந்து பேசுவதற்கு ஆட்கள் யாரும் பெயர் கொடுக்கப்படவில்லை என்கிற நிலையில் பேரவைத் துணைத் தலைவர் அவையை ஒத்திவைத்தது சட்டசபை விதிக்குப் புறம்பான ஒன்றல்ல. இந்தப் பிரச்சினையை இதோடு முடித்துவிட்டு அடுத்த அலுவலுக்குச் செல்லுமாறு நான் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**4. அரசினர் சட்ட முன்வடிவு.**

**தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய நான் அனுமதி கோருகிறேன்.



1974 ஆகஸ்ட் 13]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

**5. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்.**

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு முன்பு ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப விரும்புகிறேன். பத்திரிகை நிருபர்களுக்கு இடம் ஒதுக்குகிறபோது எதிர்க்கட்சி பத்திரிகை நிருபர்களுக்கு. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அவையில் வந்து சொல்லக்கூடிய பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. அதுபற்றி தாங்கள் என் அறையில் வந்து சொல்லலாம்.

(திரு. கு. பெரியசாமி—பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்திருந்தார்.)

**திரு. கோவை செழியன்:** இன்னொரு பாயின்ட் ஆப் ஆர்டர்— நான் நீண்ட நேரம் பேசுகின்றபோது இடையில் கொஞ்சம் தண்ணீர் சாப்பிடுவது பழக்கம். முன்வரிசையில் உள்ளவர்கள் அப்படிச் சாப்பிடுவதற்கு அனுமதிக்கிற பழக்கம் மிகுதியாக இருக்கிறது. ஆனால் இந்தப் பக்கம் தண்ணீர் கொண்டுவந்து கொடுப்பதற்கு சார்ஜெண்ட் அனுமதி வழங்க மறுக்கிறார். எப்படி மறுக்கலாம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இடையில் தண்ணீர் சாப்பிடலாம். கொண்டுவந்து கொடுப்பதற்கு அனுமதிக்கிறேன்.

(திரு. கு. பெரியசாமி எழுந்திருந்தார்)

திரு. பெரியசாமி நீங்கள் உட்காருங்கள். திரு. ஆலடி அருணா— நீங்கள் அவரை ஒன்றும் எழுந்திரு, எழுந்திரு என்று கிளப்பி விடாதீர்கள். . நான் அவரை உட்காரச் சொல்கிறேன்.

* **திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நேற்று ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து பேசுகின்ற வகையில்—அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகின்ற வகையில் நான் சில கருத்துக்களைச் சொல்ல இருக்கிறேன்.

என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு நான் ஒருவன் மட்டும்தான் பேசுகின்றேன் என்பதைச் சொல்லிக் கொண்டு, எனக்குப் பேச முழு நேரத்தையும் ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருகிற நேரத்தில், இந்தத் தீர்மானம் நிறைவேறிவிடும். இந்த மந்திரிசபை கவிழ்ந்துவிடும் என்ற எண்ணத்தில் இதைக் கொண்டுவரவில்லை. அது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான். ஆளுங் கட்சியைப் பொறுத்தவரையிலும் மெஜாரிட்டி இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். என்றாலும் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததன் நோக்கம் ஆளுங் கட்சியினர் செய்து வருகிற தவறுகளை—ஆளுங் கட்சியினர் செய்து வருகிற அக்கிரமங்களை—ஆளுங் கட்சியினர் செய்து வருகிற ஊழல்களை வெளி உலகத்திற்கு எடுத்துச் சொல்லும் வாய்ப்பை—இந்த முறையில்தான் ஜனநாயக ரீதியில் பெற்றிருக்கிறோம் என்ற காரணத்தினால் இந்த வாய்ப்பை நாங்கள் பயன்படுத்திக் கொள்கிறோமே தவிர—ஏதோ இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதன் மூலமாக உங்களை—ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்களை—பதவியில் இருந்து இறக்கி விடுவோம் என்ற நம்பிக்கையில் கொண்டுவரவில்லை.

ஒரு உண்மையை ஆளுங் கட்சியில் இருக்கிறவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மன்றத்தில் வேண்டுமானால் அதிக பலத்தை வைத்து



இருக்கிறீர்கள். ஆனால் நாட்டில் இன்றுள்ள நிலைமை என்ன? நாட்டு மக்கள் எந்த அளவில் கொந்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்? உணவு கிடைக்காத நிலைமையில்—பசி பட்டினியால் கொந்தளித்துக் கொண்டிருக்கிற மக்கள் ஆத்திரத்தால்—வேறு மாநிலங்களில் நடைபெற்றிருப்பதைப் போன்று—இங்கும் நடைபெறக்கூடிய நிலைமைக்கும் போய் விடுவார்களோ என்கிற அச்சம் இயற்கையாகவே ஏற்பட்டிருக்கிறது.

நான் பேசும்போது யாரையும் நடுவில் பேசவேண்டாம் என்று சொல்லுங்கள். வேண்டுமானால் நாங்களும் பேசுவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. பெ. சீனிவாசன்:** பேசுவதானால் எழுந்து நின்று பேசட்டும். உட்கார்ந்து கொண்டே எதற்காகப் பேச வேண்டும். அதைப்போல நாங்களும் இங்கே பேச முடியாது என்பது அல்ல.

* * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறிப்பாக பத்திரிகைகளுக்குச் சொல்ல விரும்புகிறேன். உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டே பேசுவது எல்லாம் கூட பத்திரிகையில் வருகின்றன. உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டே பேசுகின்றவைகள் அவைக் குறிப்பில் ஏறா. உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டே பேசுகின்றவைகளைப் பத்திரிகைகள் வெளியிடக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தாலும் எங்களுக்கு ஆளுங் கட்சியில் பல நண்பர்கள் இருக்கிறார்கள். நாங்கள் தனிப்பட்ட முறையில் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதை எல்லாம் அதிகாரப்பூர்வமான வாசகங்களாக எடுத்துக்கொள்ளக்கூடாது. பழக்கத்தால் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதை பெரிதுபடுத்தக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இங்கே பேசப்படுகின்ற விவாதங்கள் நாட்டு மக்களால் உன்னிப்பாக கவனிக்கப்படக்கூடிய வாதங்களாகும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு லட்சக் கணக்கான—கோடிக்கணக்கான மக்கள் அத்தனை பேரும் உணவு பொருள் இன்றி பசிபட்டினியால் வாடிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு விமோசனம் இந்த அரசாங்கத்திலே இருந்து கிடைக்குமா என்று நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களைப் போன்ற—பீகாரைப் போல, குஜராத்தைப் போல, உத்தரப்பிரதேசத்தைப் போல—உணர்வுகொண்ட மக்கள் நம் மாநிலத்தில் இருப்பார்களானால்—நம்முடைய மாநிலத்தில் பசிப்பிணியால் தவித்துக் கொண்டிருக்கிற மக்களுடைய உணர்வு புரட்சியாகத்தான் இதற்குள் வெடித்து—இங்கே ஒரு ரணகளமே ஏற்பட்டிருக்கும். நாட்டு மக்கள் கோட்டையை நோக்கி வந்து—கோட்டையைத் தூள்தூளாக ஆக்கியிருப்பார்கள்—அமைச்சர்களை நடுத்தெருவுக்குக் கொண்டுவந்திருப்பார்கள்.

ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் அந்த நிலை ஏற்படாமல் இருப்பதற்குக் காரணம் இங்கே இருக்கிற எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதற்கு ஒரு விமோசனம் செய்து தருவார்கள் என்ற நம்பிக்கையை எங்கள் மீது மக்கள் வைத்திருப்பதுதான். அந்தக் காரணத்தினாலேதான் இந்தத் தீர்மானத்திலே நாங்கள் பேசுகிறோம். இந்தத் தீர்மானம் வெற்றி பெறாது என்பது தெரிந்தாலும்கூட, இந்தத் தீர்மானத்தின் மூலமாக, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்—நீங்கள்—ஒரு நல்ல காரியம் செய்வதற்குத் தூண்டுகோலாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

ஒன்றை நான் சொல்லிக்கொள்கிறேன், தலைவர் அவர்கள் மூலமாக. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் எங்களுடைய ஆலோசனைகளை, எங்களுடைய எடுத்துக்காட்டுகளை உதாசீனம் செய்வார்களானால் இந்த நாட்டிலே இருக்கிற மக்கள் நீண்ட காலம் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். அதற்குப் பின்னால், அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களை, அரசியல் கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொண்டு அவர்கள் போராட்டம் நடத்த

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



மாட்டார்கள். மக்கள் தெருவிற்குத் தெரு, வீதிக்கு வீதி புரட்சியை ஆரம்பித்துவிடுவார்கள். அந்த நேரத்தில் உங்களால் எதையும் செய்ய முடியாமல் போய்விடும் என்று ஜனநாயக உணர்வோடு உங்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த நிலைமையை உருவாக்காதீர்கள். அந்த நிலைமையை உருவாக்காமல் இருக்கத்தான் இந்த மாமன்றத்திலே நாங்கள் இந்தக் கருத்துக்களைச் சொல்கிறோம்.

ஏனென்றால், இங்கே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது, நாங்கள் சொல்கின்ற கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, உங்களாலே அந்தச் சீர்திருத்தங்களைச் செய்ய முடியும் என்று உங்களுக்கு நம்பிக்கை இருக்குமானால் அந்தக் காரியங்களை உடனடியாகச் செய்யுங்கள். உங்கள் மீது பலக் குற்றச்சாட்டுகளை நான் இப்பொழுது சொல்லப் போகிறேன். அந்தக் குற்றச்சாட்டுகள் தவறு என்று சொன்னால், எப்படி தவறு என்பதை நீங்கள் உங்களுடைய பதிலிலே எடுத்துச் சொல்ல வேண்டும். ஆனால், அந்தக் குற்றச்சாட்டுகள் உண்மைதான் என்பதை நிரூபிக்கச் சான்றுகளை என்னால் கொடுக்க முடியும் என்று சொன்னால், ஆட்சியினர் மரியாதையாக ராஜிநாமா செய்து விட்டு, பதவியை விட்டு வெளியேற வேண்டுமென்று, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் அவர்கள் ஒரு சிறு தவறைச் செய்தார்கள் என்ற உண்மையை ஒப்புக்கொண்டு, அவர்கள் கீழே இறங்கியதைப்போல் இங்கே இருக்கிற முதலமைச்சரவர்களும் அந்த நற்பண்பை உணர்ந்து, ஜனநாயக மரபுக்கு மதிப்புத் தந்து பதவியை விட்டு இறங்குவார்களானால், நாங்கள் மட்டுமல்ல, நாடும் பாராட்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் அந்தக் காரியத்தைச் செய்யமாட்டீர்கள்—அந்த நல்ல உதாரணத்தை நீங்கள் பின்பற்ற மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

என்றாலும் கூட, இன்றைக்கு நாட்டிலே உருவாகியிருக்கிற மூன்று நிலைமைகளை மட்டும் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஒன்று, இப்பொழுது உடனடியான பிரச்னை திடீரென்று அரிசி விலை ஏறியது. அரிசி விலை ஏறியது மட்டுமல்ல, அரிசி கிடைக்கவில்லையென்ற நிலைமை உருவாகியிருக்கிறது.

[திரு. கோவை செழியன்] [1974 ஆகஸ்ட் 13

அதற்கு என்ன காரணம்? நேற்று எங்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அரங்கநாயகம் அவர்கள் பேசுகின்ற பொழுதே அந்தக் கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்திலே ஒரு குற்றச்சாட்டையும் சொன்னார்கள். ஏதோ, ஆளுங்கட்சியிலே இருக்கின்றவர்கள் ஊதியம் பெற்றுக்கொண்டு, அல்லது வேறு ஏதோ பெற்றுக்கொண்டு, நீங்கள் அந்தக் காரியத்தைச் செய்து விட்டீர்களோ என்று மக்கள் சந்தேகிக்கிறார்கள் என்று நேற்று அவர்கள் சொன்னார்கள். அதற்கு விடை அளிக்கின்ற வகையிலே இன்றைக்குப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலும் அரசாங்கக் கணக்கின் படி, ஏறத்தாழ 57 லட்சம் டன் நெல் உற்பத்தியாகியிருக்கிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில், 18 லட்சம் டன் மற்ற தானியங்கள் உற்பத்தியாகியிருக்கிறது என்றும் சொல்கிறீர்கள். தமிழ் நாட்டு மக்களுக்குத் தேவையான உணவு ஏறத்தாழ 43 லட்சம் டன் என்றும் சொல்கிறீர்கள். சரி—உபரியாக இருக்கக்கூடிய அந்தத் தானியம் எங்கே போயிற்று? தமிழ் நாட்டிலே இல்லாமல், வெளியிலே போவதற்கு என்ன காரணம்? நேற்று முதலமைச்சரவர்கள், ஒரு பொதுக் கூட்டத்திலே பேசினார்கள். நாங்கள் ஏன் அந்த உத்தரவைப் போட்டோம் என்று வியாபாரிகள் மாநாட்டிலே பேசினார்கள். அது எப்படிச் சரியான வாதம் என்பதை எங்களாலே புரிந்து கொள்ள முடியவில்லை. தஞ்சையிலே இருக்கிற வியாபாரிகள் ஏற்கனவே விவசாயிகளிடத்திலே நெல்லை வாங்கி ஸ்டாக் வைத்திருக்கிறார்கள். நீங்கள் போட்ட உத்தரவு கோட்டையிலிருந்து வெளியே வருகிறது. அன்றைக்கே ஏறத்தாழ 10,000 லாரிகளுக்கு மேல் உடனடியாக, அப்பொழுதே அத்தனை லாரிகளிலும் மூட்டைகள் ஏற்றப்பட்டு, வெளியிலே கொண்டு போகப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அந்த லாரிகளுக்கு யார் தகவல். . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உங்கள் தலைவர் விட்ட அறிக்கையில் 1,000 லாரிகள் என்று குறிப்பிட்டிருக்கிறார். நண்பர் அவர்கள் 10,000 லாரிகள் என்று சொல்கிறார். இதிலே எது உண்மை என்று கேட்க விரும்புகிறேன்.



1974 ஆகஸ்ட் 13]

**திரு. கோவை செழியன்:** என்னைப் பொறுத்தவரையிலே, அந்த இரண்டு கேள்விகளையும் முதலமைச்சரவர்களையே கேட்கிறேன். 1,000 என்பதையாவது ஒத்துக்கொள்கிறீர்களா? எங்கள் தலைவர் அவர்கள் சொன்ன நேரத்திலே வந்த செய்தி அது. அதற்குப் பிறகு நாங்கள் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்று பல பகுதியினரை விசாரித்தோம். லாரிகள் ஊர்வலம் போவதைப் போல் வரிசையாகச் சென்ற காட்சியைப் பார்த்ததாக ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களே சொல்கிறார்கள்—பல பேர் அறிக்கை விட்டிருக்கிறார்கள் என்று நான் கேள்வியுற்றேன். இப்படி. . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆண்டுதோறும் தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற தடையை, மற்ற மாவட்டங்களுக்கு அரிசி செல்லக் கூடாது என்ற தடையை, ஆண்டுதோறும் எடுப்பது வழக்கம். அந்த வழக்கத்தைப் பின்பற்றித்தான் இந்த ஆண்டும் தடை எடுக்கப்பட்டது.

**திரு. கோவை செழியன்:** நான் முதலமைச்சரவர்களைக் கேட்கிறேன், நீங்கள் திடீரென்று உத்தரவு போட்டீர்கள். பின் ஏன் இரண்டு நாளில் உத்தரவை வாபஸ் வாங்கினீர்கள்? அதற்கு வேண்டிய அவசியம் என்ன? இருப்பிற்குத் தேவையான ரொம்ப ஏராளமான தானியங்களை மத்திய அரசாங்கத்தினுடைய ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா மூலமாக ஸ்டாக் செய்து வைத்ததற்குப் பின்னாலே நீங்கள் வெளியிட்டிருந்தால், உங்களுடைய விவேகத்தை நான் பாராட்டி இருப்பேன். ஃபுட் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கியிருக்கிறீர்கள்; எவ்வளவு வாங்கியிருக்கிறீர்கள்? ஏறத்தாழ 66,000 டன்கள் மட்டுமே ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா மூலமாக வாங்கி வைத்திருக்கிறீர்கள். அது போதுமா? உங்கள் தேவைக்குப் புரக்யூர்மென்ட் செய்ததற்குப் பின்னால், மீதி இருக்கிற நெல்லை அனுப்பினால் உங்களுடைய புத்திசாலித்தனத்தைப் பாராட்டலாம். ஆனால், அதைச் செய்யத் தவறிவிட்டீர்கள். அதைக் கூட, ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா செய்ததே தவிர, தமிழ் நாடு அரசின் சிவில் சப்ளைஸ் டிபார்ட்மென்ட்டோ, மற்றவைகளோ செய்யவில்லையென்பதுதான் என்னுடைய மற்ற குற்றச்சாட்டு. அந்த உத்தரவு வந்தவுடனே லாரிகள் எல்லாம் வெளியூருக்குச் சென்றன.

[திரு. கோவை செழியன்] [1974 ஆகஸ்ட் 13

கோயம்புத்தூருக்குச் சென்றன. கோயம்புத்தூரிலே என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு கிட்டத்தட்ட 18,000 மூட்டைகளுக்கு லைசென்ஸ் தரப்பட்டிருக்கிறது என்று சொன்னால் என்ன காரணம்? அவருக்குத் திடீரென்று தரவேண்டிய அவசியம் என்ன? ஒரு சிலருக்கு மட்டும் தரவேண்டிய அவசியம் இல்லை—ஆனால் தந்திருக்கிறீர்கள். கோயம்புத்தூருக்கு வந்த அரிசி, கோயம்புத்தூரிலேயே இருக்க வேண்டும். ஆனால், கோயம்புத்தூரிலே பற்றாக்குறை நிலை. கோயம்புத்தூரிலேயும் அரிசி விலை ஏறிவிட்டது என்று சொன்னால் வந்த அரிசி எங்கே போயிற்று? வெளியிலே போயிற்று என்று சொன்னால், வெளியிலே போவதற்குக் காரணம் என்ன? இங்கே இருக்கிற போலீஸ் அதிகாரிகள் திறமையற்றவர்கள் என்று நான் சொல்லத் தயாராயில்லை. அவர்களுடைய திறமையைப் பாராட்டுகிறேன். என்றாலும் கூட, அந்த செக் போஸ்ட், கேரளத்திற்குச் செல்கின்ற அந்தப் பாதைகளின் வழியாகப் பல ஆயிரக்கணக்கான மூட்டைகள் எப்படி சென்றன? கேரளாவிலே நிறுவனங்களை வைத்துக்கொண்டு, அதனுடைய ஏஜெண்டுகள் தமிழ்நாட்டிலே இருந்து அங்கு அனுப்புகிறார்கள். அந்த ஏஜெண்டுகள், நிறுவனங்கள் யார், யார், என்பதைத் தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் விசாரித்து, அந்த அறிக்கையை இங்கே தருவார்களா? அந்த நிறுவனங்களிலே யார் யார் அமைச்சருடைய சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதை விசாரணை செய்து இந்த மன்றத்திற்குத் தரத் தயாராக இருக்கிறார்களா? கேரளத்திற்குச் சென்ற அரிசி அங்குமில்லை; கேரளாவிலே அரிசி இல்லை. அங்கிருந்து துவைத்துக்கு, சிலோனுக்கு சென்று. . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கேரளத்திலே ஒரு வியாபாரக் கேந்திரம் இருப்பதாகவும், அதற்குத் தமிழக அமைச்சர் ஒருவர் உடந்தையாக இருப்பதாகவும் சொல்லி, என்னை விசாரிக்கச் சொல்கிறார். யார் அந்த அமைச்சர்? அந்தக் கேந்திரத்தினுடைய விலாசத்தைத் தருவார்களானால் விசாரித்து, அப்படி ஏதாவது இருக்குமானால், அந்த அமைச்சரின் மீது நடவடிக்கை எடுக்க என்றைக்கும் தயாராக இருக்கிறேன்.



1974 ஆகஸ்ட் 13]

**திரு. கோவை செழியன்:** முதலமைச்சரவர்கள் அந்த இலாக்காவினுடைய தலைவராக இருக்கிறார். போலீஸ் இலாக்காவும், சி.ஐ.டி. இலாக்காவும் அவரிடம் இருக்கிறது. அவர்களே அதைச் செய்யலாம். அப்படி செய்யாவிட்டால், நீதி விசாரணைக்காவது ஏற்பாடு செய்யுங்கள். அப்பொழுது நாங்கள். . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, போகிற போக்கில், ஏதாவது புழுதி வாரி வீசிவிட்டு, அதற்கு நீதி விசாரணை தேவை என்று இப்படியே தப்பித்துக் கொள்வது உங்களுக்கு வழக்கமாக இருக்கிறது. எந்த அமைச்சருடைய சொந்தக்காரர்? கேரளாவில் எங்கு வியாபார ஸ்தலம் வைத்திருக்கிறார்? எங்கிருந்து கள்ளக்கடத்தல் செய்திருக்கிறார்? இதைச் சொல்லுங்களேன். அப்படி செய்திருந்தால், அந்த அமைச்சர் யாராயிருந்தாலும் அவர்மீது நடவடிக்கை எடுக்கத் தயாராயிருக்கிறேன். தைரியம் இருந்தால், ஆதாரம் இருந்தால், அந்த விவரங்களைத் தெரிவித்துப் பேசுங்கள்.

**திரு. கோவை செழியன்:** புழுதிவாரி வீசுகின்ற போக்கு இல்லை. மக்களை. . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பொது மக்களைக் குழப்புவதற்காக, ஏதாவது, மேடைகளிலே உண்மைக்கு மாறான விஷயங்களைச் சொல்கிறார்கள். சட்டசபைக்கு வந்து மாட்டிக் கொள்ளக்கூடாது என்பதற்காக உங்களுடைய தலைவரே வராமலிருக்கிறார். அவர் வந்து சொல்லட்டும். நீங்கள் விவரம் வைத்திருந்தால் சொல்லுங்கள்.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் தலைவர் அவர்கள் வருவது ஒரு பக்கம் இருக்கட்டும். கேட்கின்ற கேள்விக்கே உங்களால் பதில் சொல்ல முடியவில்லை. நீங்கள் நேரடியாகப் நீதி விசாரணையைக் கேவலப்படுத்தாதீர்கள். போட்ட நீதி விசாரணைகளில் அரசாங்கம் செய்தது தவறு என்று நிரூபித்திருக்கிறார்கள் என்று உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல, இன்னொரு குற்றச்சாட்டையும் சொல்ல விரும்புகிறேன். . . .

[1974 ஆகஸ்ட் 13

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எந்த நீதி விசாரணையில் எந்த அமைச்சர் மீது எந்தப் புகார் சொல்லப்பட்டு நிரூபிக்கப் பட்டது? விஷயத்தை விட்டுவிட்டு வேறு இடத்திற்குப் போகாதீர்கள். யாரோ ஒரு அமைச்சருக்குச் சொந்தக்காரர் கேரளாவில் வியாபார நிறுவனம் வைத்துக்கொண்டு கள்ளக் கடத்தல் நடத்துகிறார்கள் என்று சொன்னீர்கள். எந்த அமைச்சர் என்று சொல்லுங்கள்.

**திரு. கோவை செழியன்:** அப்படிப்பட்ட ரிக்கார்டுகளை யெல்லாம் சொல்வது என்றால், அமைச்சர் பெயரிலே யாரும் வியாபாரம் நடத்த மாட்டார்கள், அமைச்சர்களுடைய சொந்தக் காரர்கள் பெயரில்தான் வியாபாரம் நடைபெறும் என்பது உங்களுக்குத் தெரியாததல்ல, இதற்கெல்லாம் நீதி விசாரணை வைத்தால் எல்லாவற்றையும் சொல்ல முடியும். இன்னொரு சவாலையும். . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அமைச்சருடைய சொந்தக்காரராகவே இருக்கட்டும். எந்த அமைச்சருடைய சொந்தக்காரர்? அவருடைய கட்சித் தலைவர் தன் அறிக்கையில் தமிழ்நாடு சர்க்காரும், பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மிராசுதார்களும் சேர்ந்துகொண்டு கேரளாவிற்கு லாரிகளில் கடத்திச் சென்றுவிட்டார்கள் என்று கூறியிருக்கிறார். ஆனால் இப்போது அந்தக் கட்சியும் இந்தக் கட்சியும் சேர்ந்துதான் நம்பிக்கையில்லா தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது வேறு விஷயம். பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மிராசுதார் களும், வியாபாரிகளும் தி.மு.க. அரசோடு தொடர்பு வைத்துக் கொண்டு ஆயிரக்கணக்கான லாரிகளில் கடத்தினார்கள் என்று உங்களுடைய தலைவர் அறிக்கை விடுகிறார். ஆனால் நீங்கள் அமைச்சருடைய சொந்தக்காரர் கொண்டுபோனார் என்று சொல்கிறீர்கள். இதிலே எது சரி? உங்களுடைய தலைவர் சொல்வது சரியா? நீங்கள் சொல்வது சரியா? நீங்கள் சொல்வது சரியானால் எந்த அமைச்சருடைய சொந்தக்காரர்?

**திரு. கோவை செழியன்:** இரண்டும் உண்மை தான். அவர் சொன்னதும் சரி, நான் சொல்வதும் சரி. . . .



1974 ஆகஸ்ட் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட மன்றத்திலே எந்தக் குற்றச் சாட்டைச் சொல்வதாக இருந்தாலும், சொல்கின்ற நேரத்திலே என்ன செய்யவேண்டுமென்று ஒரு முறையை நாம் வகுத்துக்கொண்டிருக்கிறோம். . . .

**திரு. கோவை செழியன்:** இன்னும் சொல்லப் போகிறேன், ப்ரூப் பண்ணப் போகிறேன். . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாம் இந்த மன்றத்திலே ஒரு முறையைப் பின்பற்றவேண்டுமென்று நாமே வகுத்துக் கொண்டிருக்கிறோம். சாதாரண உறுப்பினர் மீது ஒரு குற்றச் சாட்டைச் சொல்லவேண்டுமென்றால்கூட பேரவைத் தலைவருடைய முன் அனுமதியைப் பெறவேண்டும், அதைக் கூறுவதற்கான வாய்ப்புக்கு அனுமதி கிடைத்தபிறகுதான் அதைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று நாமே ஒரு முறையை வகுத்துக் கொண்டிருக்கிறோம். பொதுவாக ஒரு அமைச்சர் என்று சொல்கிறார்கள். இன்ன அமைச்சர் மீது குறிப்பிட்டுச் சொல்லப் போகிறேன் என்று பேரவைத் தலைவரை அணுகி அவருடைய அனுமதி பெற்று சொல்லியிருந்தால் குறிப்பிட்ட அமைச்சருக்கு அல்லது உறுப்பினருக்கு விளக்கம் சொல்வதற்கான வாய்ப்பையும் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும், அப்படிச் செய்யாமல், அந்த முறையைப் பின்பற்றாமல் முதலில் அமைச்சர் என்று சொல்வது, பிறகு அமைச்சரின் சொந்தக்காரர் என்று சொல்வது என்பது சரியல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மிராசுதார்கள் கள்ளக் 'கடத்தலுக்கு உடந்தையாக இருந்ததாகப் பேசப்பட்டது. அப்படி ஏதாவது விவரம் இருந்தால் அதை இந்த மன்றத்திலே வைத்தால் அதைப்பற்றி விவாதிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் தவறு புரிந்து இருந்தால் அதற்காக எந்தத் தண்டனைக்கும் தயங்கமாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் கட்சியிலே யார் கள்ளக் கடத்தலில் ஈடுபட்டார்கள் என்பதைச் சொன்னால் நான் பேசத் தயாராக இருக்கிறேன், கட்சி வண்ணம் பூசி, எங்கள் முகத்தில் கரியை வாரி இறைக்கவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் அவர்களைச் சொல்லவில்லை. அன்று தி.மு.க. தலைவர் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். அதிலே பழைய காங்கிரஸ்காரர்களைச் சொல்லியிருக்கிறார், நான் சொல்லவில்லை, ஆகவே, திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுடைய விளக்கம் திரு. கோவை செழியனுக்குத் தான் என்று நினைக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த மாதிரி கள்ளக் கடத்தலில் ஈடுபட்டவர்கள் யார் என்று இந்த மன்றத்திலே கூறினால் நிச்சயமாக அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் அவர்களை அம்பலப்படுத்துவதற்கும் அவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பதற்கும் ஏதுவாக இருக்கும். எந்தக் கட்சியாரும் கள்ளக் கடத்தலை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள், வேண்டுமென்றே சிலர் குற்றச்சாட்டுக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கள்ளக் கடத்தலைத் தவிர்ப்பதற்கு நிச்சயமாக எல்லாக் கட்சியினரும் ஒத்துழைப்பார்கள் என்று நினைக்கிறேன். பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒத்துழைப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கோவை செழியன் அவர்கள் விவரமாகச் சொல்வார்களானால் அது குறித்த விசாரணைக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகள் அனைத்தும் சேர்ந்து இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிற நேரத்திலே முதலமைச்சர் அவர்கள் மிக சாமர்த்தியமாக எங்களுக்குள்ளேயே சண்டையை உண்டாக்கப் பார்க்கிறார்கள். நாங்கள் அவர்களிடத்திலே எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லிக்கொள்கிறோம். இந்தச் செய்திகளையெல்லாம் சொல்லலாம். ஆனால் நான் சொன்னதற்கும் பிறகு அந்தச் செய்திகள் எப்படி வந்தது என்று பார்த்து அதிகாரிகளைப் பாதிக்கக்கூடிய நடவடிக்கை எடுப்பார்கள், அதிகாரிகள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்ற உத்திரவாதத்தை அவர்கள் தந்தால் நான் அதையெல்லாம் தரத் தயாராக இருக்கிறேன். அதற்காகத்தான் சொல்கிறேன், நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யுங்கள், அப்பொழுதுதான் அதிகாரிகளுக்கு பிரொட்டக்ஷன், பாதுகாப்பு இருக்கும். ஆகவே, நீதி விசாரணைக்கு



ஏற்பாடு செய்யுங்கள், உங்களுக்கு துணிவு இருக்குமானால் பெரிய குப்பம் சம்பவம் பற்றிய ராஜாராம் அறிக்கை என்ன ஆயிற்று? ஏன் வெளியிடாமல் அதை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லவேண்டும். (குறுக்கீடு) எங்கேயோ நான் போகவில்லை, நீங்கள் கேட்டதால்தான் நான் சொல்கிறேன். பாலக்காட்டில் உள்ள நிறுவனத்திற்கு யார் பாகஸ்தர்கள் என்று நான் பேரவைத் தலைவரிடம் தெரிவிக்கிறேன். நீங்கள் பார்த்து...

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பகிரங்கமாக சட்ட சபையில் அறிவித்து விட்டு பிறகு தப்பித்துக்கொள்ள நீதி விசாரணை, நீதி விசாரணை என்று கூறி ஓடிவிடுவது நல்லதல்ல. பெரிய குப்பம் அறிக்கை தயாராக இருக்கிறது, அதிலே ஒன்றும் நீங்கள் எதிர்பார்ப்பதுபோல் இல்லை. "பாலக்காடு" 'கோயம்புத்தூர்' "நீதி விசாரணை" என்ற இந்த மூன்று சொற்களை வைத்துக்கொண்டு அரசியலை நடத்தக்கூடாது. துணிவு இருந்தால் என்று என்னைக் கேட்காதீர்கள். உங்களுக்குத் துணிவு இருந்தால்சொல்லுங்கள். எந்த அமைச்சர், எந்தச் சொந்தக்காரா, யாருக்கு பங்கு இருக்கிறது, யார் அந்த வியாபாரி என்று துணிவு இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. கோவை செழியன்:** முதலமைச்சர் அவர்கள், அமைச்சருடைய சொந்தக்காரர், நீதி விசாரணை என்று சொன்னால் ஏன் பயந்துகொள்கிறார்கள் என்று தெரியவில்லை. நீதி விசாரணையில் நம்பிக்கை இருப்பதால்தான் அது வேண்டுமென்று கேட்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மன்றத்திலே ஒரு குற்றச்சாட்டைச் சொல்லவேண்டுமென்றால் ஒரு முறையை நாமே வகுத்துக்கொண்டு இருக்கிறோம். நான் இன்னொருவர்மீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்லப் போகிறேன் என்று பேரவைத் தலைவரிடம் சொல்லி அவருடைய அனுமதி பெற்றுச் சொன்னால் தான் அந்த உறுப்பினரோ அல்லது அமைச்சரோ அதற்கான விளக்கங்களைத் தருவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தர முடியும். அப்படி அனுமதியைப் பெறாமல் நான் பின்னாலே கொடுக்கிறேன் என்று முன்னாலேயே குற்றச்சாட்டுக்களை சொல்வது சரியல்ல.

**திரு. கோவை செழியன்:** நான் பெயர்களைச் சொல்கிறேன், ஆனால் அந்த அதிகாரிகளுக்கு நீங்கள் என்ன பாதுகாப்பு தரபோகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவையிலே இருக்கும் பாதுகாப்புதான் யாருக்கும் இருக்கும். பலமுறை இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. குற்றச்சாட்டுகளை முன் அனுமதியில்லாமல் சொல்லக்கூடாது. அப்படிச் சொன்னால் அது சபைக் குறிப்புகளிலே ஏறாது என்ற நிலைமைதான் ஏற்படும்.

**திரு. எம். எ. லத்தீப்:** திரு. கோவை செழியன் அவர்கள் ஒரு கடுமையான குற்றச்சாட்டை இங்கே சொல்லியிருக்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டை மறைமுகமாகச் சொல்லிவிட்டு இந்தக் குற்றச்சாட்டின் விவரங்களை இந்த அவையிலே சொன்னால் குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்று கேட்கிறார்கள், ஏதோ அதிலே அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்கள் என்று அவர்கள் சொல்கிற கருத்து பயங்கரமான கருத்து. ஒன்று, அவர்கள் அதை வாபஸ் பெறவேண்டும் அல்லது அதற்கான விளக்கங்களைத் தரவேண்டும். அதுதான் முறை. அப்படிச் செய்யாவிட்டால் நிர்வாகத்திற்கு ஒரு மாபெரும் தவறைச் செய்தவர்களாக நாம் இருப்போம். அதிகாரிகள் இந்த அவையில் இல்லை. எந்த அதிகாரிகள் என்று சொல்லி அவர்கள் விளக்க வேண்டும். இல்லாவிட்டால் வாபஸ் பெற வேண்டும். இதற்காக தங்களுடைய ரூலிங் என்ன என்பதைப் பற்றி தாங்கள் சொல்லவேண்டும்.

அதே நோக்கிலே பொதுவாக ஒரு கருத்தைச் சொன்னார்கள், தமிழ்நாட்டு வியாபாரிகள் கேரளத்திலே தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்று. அப்படிச் சொல்வதன் மூலம் அவர்கள் கேரளத்திலே வியாபாரம் செய்கிற தமிழர்களையும் பாதிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்தச் சட்டசபையில் தமிழ்நாட்டு வியாபாரிகளையும், அதிகாரிகளையும் மறைமுகமாகக் குறிப்பிட்டு அவர்கள் தங்களுடைய அரசியலுக்குப் பாதுகாப்புத் தருகிறார்கள் என்று தான் பொருள்படும். அவர்கள் குறிப்புகளைத் தர மறுத்ததன் காரணத்தினால் கள்ளக் கடத்தலில் அதிகாரிகளுக்கும் பங்கு இருக்கிறது, ஆகவே அவர்களுக்குப்





பாதுகாப்புத் தருகிறீர்களா என்று அவர்கள் கேட்பது போல் இருக்கிறது, ஒன்று அவர்கள் அதை வாபஸ் வாங்க வேண்டும் அல்லது அவர்கள் கூறியதை விளக்கிச் சொல்ல வேண்டும்.

**திரு. க. டொ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, அவையின் முன்னாலே இருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது என்னுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சில கருத்துக்களை சம்பந்தப்பட்ட உறுப்பினர் தலையிட்டுப் பேசலாம் அது அவர்களுடைய உரிமை. பேசுகின்ற பேச்சில் யாரையாவது உறுப்பினரைச் சுட்டிக்காட்டிப் பேசினால் அந்த உறுப்பினர் எழுந்து விளக்கம் சொல்வதற்குத்தான் விதிகள் உரிமையளிக்கின்றன. ஆனால் எனக்கு தெரிய வேண்டியதெல்லாம், திரு. லத்தீப் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்களே, அவர்கள் எந்த அடிப்படையில் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 11.00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பினார்கள். இந்த மன்றத்திலே விவாதம் செய்வதற்கு ஒரு முறை இருக்கிறது. அந்த முறை தவறி பாதிக்கப்படும் நோக்கில், விவாத முறை தவறிப் போகிறது என்று சுட்டிக் காட்டுவதற்கு மன்றத்திலே உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிமை இருக்கிறது. அந்த முறையிலே, அதிகாரிகளையும் மற்றவர்களையும் பற்றிப் பேசுவதில் அம்மாதிரித் தவறிப் போகிறார்கள் என்று சுட்டிக் காட்டுவதில் தவறு இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சாதாரணமாக சட்டசபையில் பேசும்பொழுது Certain amount of immunity இருக்கிறது. வெளியே பேசும்பொழுது நாங்கள் எல்லாவிதமான சட்ட நடவடிக்கைகளுக்கும் நாங்களே தாங்கிக்கொண்டுதான் பேச வேண்டியிருக்கிறது. ஆனால் சட்டசபையிலே பேசும்பொழுது மக்களின் நன்மைகளுக்காகச் சில கருத்துக்களைச் சொல்லும் பொழுது இயற்கையாகவே சில பாதுகாப்புகளைத் தருகின்றீர்கள். குற்றச்சாட்டுகளைச் சொல்லும்பொழுது முடிந்த வரையில் ஆதாரத்தோடு சொல்வது வரவேற்கத் தக்கது, அதை யாரும் மறுக்கவில்லை.

[1974 ஆகஸ்ட் 13

**திரு. கோவை செழியன்:** நான் பெயர்களைச் சொல்கிறேன், ஆனால் அந்த அதிகாரிகளுக்கு நீங்கள் என்ன பாதுகாப்பு தரபோகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவையிலே இருக்கும் பாதுகாப்புதான் யாருக்கும் இருக்கும். பலமுறை இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. குற்றச்சாட்டுகளை முன் அனுமதியில்லாமல் சொல்லக்கூடாது. அப்படிச் சொன்னால் அது சபைக் குறிப்புகளிலே ஏறாது என்ற நிலைமைதான் ஏற்படும்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** திரு. கோவை செழியன் அவர்கள் ஒரு கடுமையான குற்றச்சாட்டை இங்கே சொல்லியிருக்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டை மறைமுகமாகச் சொல்லிவிட்டு இந்தக் குற்றச்சாட்டின் விவரங்களை இந்த அவையிலே சொன்னால் குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்று கேட்கிறார்கள், ஏதோ அதிலே அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்கள் என்று அவர்கள் சொல்கிற கருத்து பயங்கரமான கருத்து. ஒன்று, அவர்கள் அதை வாபஸ் பெறவேண்டும் அல்லது அதற்கான விளக்கங்களைத் தரவேண்டும். அதுதான் முறை. அப்படிச் செய்யாவிட்டால் நிர்வாகத்திற்கு ஒரு மாபெரும் தவறைச் செய்கிறவர்களாக நாம் இருப்போம். அதிகாரிகள் இந்த அவையில் இல்லை. எந்த அதிகாரிகள் என்று சொல்லி அவர்கள் விளக்க வேண்டும். இல்லாவிட்டால் வாபஸ் பெற வேண்டும். இதற்காக தங்களுடைய ரூலிங் என்ன என்பதைப் பற்றி தாங்கள் சொல்லவேண்டும்.

அதே நோக்கிலே பொதுவாக ஒரு கருத்தைச் சொன்னார்கள், தமிழ்நாட்டு வியாபாரிகள் கேரளத்திலே தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்று. அப்படிச் சொல்வதன் மூலம் அவர்கள் கேரளத்திலே வியாபாரம் செய்கிற தமிழர்களையும் பாதிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்தச் சட்டசபையில் தமிழ்நாட்டு வியாபாரிகளையும், அதிகாரிகளையும் மறைமுகமாகக் குறிப்பிட்டு அவர்கள் தங்களுடைய அரசியலுக்குப் பாதுகாப்புத் தருகிறார்கள் என்று தான் பொருள்படும். அவர்கள் குறிப்புகளைத் தர மறுத்ததன் காரணத்தினால் கள்ளக் கடத்தலில் அதிகாரிகளுக்கும் பங்கு இருக்கிறது, ஆகவே அவர்களுக்குப்



1974 ஆகஸ்ட் 13] [திரு. எம். ஏ. லத்தீப்]

பாதுகாப்புத் தருகிறீர்களா என்று அவர்கள் கேட்பது போல் இருக்கிறது, ஒன்று அவர்கள் அதை வாபஸ் வாங்க வேண்டும் அல்லது அவர்கள் கூறியதை விளக்கிச் சொல்ல வேண்டும்.

**திரு. க. டொ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, அவையின் முன்னாலே இருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது என்னுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சில கருத்துக்களை சம்பந்தப்பட்ட உறுப்பினர் தலையிட்டுப் பேசலாம் அது அவர்களுடைய உரிமை. பேசுகின்ற பேச்சில் யாரையாவது உறுப்பினரைச் சுட்டிக்காட்டிப் பேசினால் அந்த உறுப்பினர் எழுந்து விளக்கம் சொல்வதற்குத்தான் விதிகள் உரிமையளிக்கின்றன. ஆனால் எனக்கு தெரிய வேண்டியதெல்லாம் திரு. லத்தீப் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்களே, அவர்கள் எந்த அடிப்படையில் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 11.00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பினார்கள். இந்த மன்றத்திலே விவாதம் செய்வதற்கு ஒரு முறை இருக்கிறது. அந்த முறை தவறி பாதிக்கப்படும் நோக்கில், விவாத முறை தவறிப் போகிறது என்று சுட்டிக் காட்டுவதற்கு மன்றத்திலே உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிமை இருக்கிறது. அந்த முறையிலே, அதிகாரிகளையும் மற்றவர்களையும் பற்றிப் பேசுவதில் அம்மாதிரித் தவறிப் போகிறார்கள் என்று சுட்டிக் காட்டுவதில் தவறு இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சாதாரணமாக சட்டசபையில் பேசும்பொழுது Certain amount of immunity இருக்கிறது. வெளியே பேசும்பொழுது நாங்கள் எல்லாவிதமான சட்ட நடவடிக்கைகளுக்கும் நாங்களே தாங்கிக்கொண்டுதான் பேச வேண்டியிருக்கிறது. ஆனால் சட்டசபையிலே பேசும்பொழுது மக்களின் நன்மைகளுக்காகச் சில கருத்துக்களைச் சொல்லும் பொழுது இயற்கையாகவே சில பாதுகாப்புகளைத் தருகின்றீர்கள். குற்றச்சாட்டுகளைச் சொல்லும்பொழுது முடிந்த வரையில் ஆதாரத்தோடு சொல்வது வரவேற்கத் தக்கது, அதை யாரும் மறுக்கவில்லை.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 ஆகஸ்ட் 13

ஆனால் அதிகாரிகளின் பெயரைச் சொல்ல வேண்டுமென்று திரு. லத்தீப் அவர்கள் சொல்வது ஆபத்தான முறை. அதைச் சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது. அதிகாரிகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அமைச்சரவைக்கு உண்டு. அவர் பதில் சொல்லும்பொழுது அதிகாரிகள் நேர்மையானவர்கள், திறமையானவர்கள் என்று சொல்லலாமே தவிர, அதிகாரிகளின் பெயரைச் சொல்ல வேண்டுமென்று கேட்பது ஆபத்தான முறை. அப்படியிருந்தால் நாளைக்கு சட்டமன்றத்திலே யாருமே பேச முடியாது. ஆகவே, குறிப்பிட்ட அதிகாரியின் பெயரைச் சொல், என்ன செய்தார் என்று சொல், அப்பொழுதுதான் பேசலாம் என்று கேட்பது சட்டமன்ற அங்கத்தினர்களை தங்கள் பணிகளைச் செய்ய முடியாத ஒரு பயங்கரமான இடத்திற்கு இழுத்துச் செல்கிறார்கள் என்றுதான் ஆகும். ஆகவே, தயவு செய்து எங்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, பொதுவாக அதிகாரிகள் என்று சொல்வது அதிகார வர்க்கத்தைப் பற்றிச் சொல்வதாக இருக்கிறது. அமைச்சரவையின்மீதும், அதிகாரிகள் மீதும் தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தி, சீரான நிர்வாகத்திற்கு வேட்டு வைக்கும் முறையில் செய்து, மேலும் சிக்கலை ஏற்படுத்துவதற்கான முயற்சியே தவிர, சீரான நிர்வாகத்திற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சியாக இல்லை. இது ஒருவேளை அரசியலாக இருக்கலாம், ஆனால் அறமுள்ள அரசியலாக இது நிச்சயமாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுப்படி நாளைக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசி முடிப்பது, 16 ஆம் தேதியன்று முதலமைச்சரும், இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவர்களும் பேசுவது என்று முடிவெடுத்திருக்கிறோம். உறுப்பினர்களுக்கு பேசுவதற்கு ஒருநாள்தான் இருக்கிறது. அதை மனத்திலே வைத்துக் கொண்டு மன்றத்திலே உறுப்பினர்கள் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது திரு. செழியன் அவர்கள் 10-30 மணிக்கு ஆரம்பித்தார்கள், அரை மணி நேரம் ஆகிவிட்டது. எனவே, திரு. செழியன் அவர்கள் இன்னும் 15 நிமிடங்களிலே தன்னுடைய பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும்.



1974 ஆகஸ்ட் 13]

**திரு. கோவை செழியன் :** மற்றவர்கள் பேசியது, இடை மறித்தது, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசியது எல்லாவற்றையும் என் கணக்கிலே கொண்டு வராதீர்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். திரு. கோவை செழியன் அவர்கள் மிகுந்த தைர்யசாலி. மக்கள் நலத்தை அவர்கள் பெரிதாகப் பார்க்க வேண்டுமே தவிர ஓரிரு அதிகாரிகளுக்காக பாதுகாப்பு கொடுக்க வேண்டும், அவர்களை எங்காகிலும் மாட்டிவிடப் போகிறார்கள் என்று அச்சப்படத் தேவையில்லை. என்ன குற்றம் நடந்தது, எங்கே நடந்தது, யார் மூலம் செய்தார்கள், அதற்கு யார் பொறுப்பு என்று சொல்ல வேண்டுமே தவிர, பொதுவாக அதிகாரிகள் சொல்லிவிட்டார்கள் என்று சொல்வது முறை அல்ல. அதிகாரிகள் தயவு செய்து அதை அவர்கள் விளக்கினால் அவர்களுடைய நண்பர்களாகிய நாங்கள் அதை மேற்கொள்வோம்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம்மாதிரி உறுப்பினர்களின் மீது இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்வது முறையல்ல. திரு. செழியன் அவர்கள் சொன்ன இந்தக் கூற்று நிகழ்ச்சிக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. கோவை செழியன் :** என்னை அவர்கள் தைர்யசாலி என்று சொல்லலாமா? அவருடைய கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன். இதை ஏன் நீங்கள் எக்ஸ்பஞ்ச் செய்கிறீர்கள்? எக்ஸ்பஞ்ச் செய்யும் வேலையைத் தயவுசெய்து விட்டுவிடுங்கள். பிறகு உங்கள் பெயரே வேறே மாதிரி வந்துவிடும்.

என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால், ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா மொத்தமாக 66,000 டன் மட்டும் நெல்லை ப்ரொக்யூர் செய்திருக்கிறது. ஒரு நாளில் 19,000 டன் அரிசி வெளியிலே போயிருக்கிறது என்றால், இது எவ்வளவு பெரிய குற்றம், கிரிமினல் குற்றம் என்பது என்னுடைய குற்றச்சாட்டின்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

முதல் பகுதி. தனி ஒருவனைக் கொன்றால் தூக்குத்தண்டனை தருகிறோம். ஆனால் இந்த ஆட்சியிலே இருப்பவர்கள், உணவுப் பொறுப்பை எடுத்திருப்பவர்கள், தலைமைப் பொறுப்பை எடுத்து இருப்பவர்கள் இந்த நாட்டிலே உள்ள கோடிக்கணக்கானவர்களைத் தினம் தினம் கொஞ்சம் கொஞ்சமாக கொன்று கொண்டு இருக்கிறார்கள், இவர்களுக்கு என்ன தண்டனை என்று நாட்டு மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன் எதிரொலியாகத் தான் நான் இங்கே பேசுகிறேன் என்று என்னுடைய குற்றச் சாட்டிலே உள்ள கருவை உணர்ந்து புரிந்து கொள்ள வேண்டு மென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். வெளியிலே வியாபாரிகளிடத்திலே ஆட்சியாளர்கள் பணத்தை வாங்கிக் கொண்டார்கள் என்று சொன்னபொழுது கோபப்பட்டார்கள். ஆனால் பத்திரிகையிலே, இன்றைய தினத்தந்தியிலே நிலக்கடலை வியாபாரிகள் 10 இலட்சம் ரூபாய் தருவதாகச் சொல்லி 6 இலட்சத்து சில்லறை ரூபாய் முதலமைச்சருடைய ஊனமுற்றோர் நிதிக்கு வழங்கியிருக்கிறார்கள். இதை எப்படி வசூல் செய்தார்கள்? கோயம்புத்தூரிலே, ஈரோட்டிலே, தஞ்சை மாவட்டத்திலே வியாபாரிகளிடத்திலிருந்து கசக்கி வாங்கியது எல்லோருக்கும் தெரியும். என்ன சொல்லி வாங்கினார்கள்? இதுவும் ஒரு விதத்திலே மறைமுகமான இலஞ்சம்தான் என்பது என்னுடைய குற்றச் சாட்டு. நேற்றையதினம் திரு. அரங்கநாயகம் அவர்கள் பேசிய பேச்சிற்கு இன்று காலையிலேயே நல்ல பலன் கிடைத்திருக்கிறது. இதை அவர்கள் மறுக்க முடியாது.

இந்தக் குற்றச்சாட்டில் உணவுப் பிரச்சினையைப்பற்றி சொல்ல வேண்டுமென்றால் நிறையச் சொல்லலாம். நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்ஃப்லேஷன் பற்றிப் பேசினார்கள். பண வீக்கத்தினால் திடீரென்று விலை ஏறிவிட்டதா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். எனக்கு அவர் விளக்கம் தர வேண்டும். ஆகவே, இப்படிப் பல தவறுகளை அரசாங்கம் செய்திருப்பதால், அதுவும் உணவு இலாக்காவைப் பொறுத்த வரையில் 57 கிலோ கொண்ட நெல்லை 40 ரூபாய்க்கு வாங்கி 80 ரூபாய்க்கு விற்றால் அந்த இலாபம் யாருக்குப் போய்ச் சேருகிறது என்றால், அது விவசாயிகளுக்குப் போகவில்லை. அந்த





வகையில் கொள்ளை அடிக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணமாக உள்ள உணவு அமைச்சர் இராஜினமா செய்திருக்க வேண்டாமா? அவர்தான் இராஜினமா செய்யவில்லை என்றாலும் முதலமைச்ச ரவர்கள் அவரை டிஸ்மிஸ் செய்திருக்க வேண்டாமா? ஏன் அதைச் செய்யவில்லை? நாட்டு மக்கள் அந்த நல்ல நாளை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு என்னுடைய குற்றச்சாட்டின் அடுத்த பகுதி, ஏதோ வீட்டிற்குப் போகப்போகிறோம் என்ற முறையில், அரசாங்கத்தை விட்டு விலகப் போகிறோம் என்ற அவசரத்தில் இந்த நாட்டு மக்களை சித்திரவதை செய்துவிட்டுப் போகிறோம் என்ற பாங்கிலே உங்களுடைய நடவடிக்கை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நாட்டு மக்களைப் பட்டினி போடுவதற்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? நாட்டு மக்களைச் சித்திரவதை செய்வதற்கு என்ன உரிமை உங்களுக்கு இருக்கிறது? அதற்கு உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது என்றுதான் கேட்க நான் விரும்புகிறேன்.

தண்டனை வருவதற்கு முன்னால், பிரெஞ்சு நாட்டு வரலாற்றைப் படித்தவர்களுக்குத் தெரியும், உணவு இல்லாமல், உணவு தர முடியாமல் இருந்த ஆளவந்தார்கள் எப்படி சித்திரவதைப் பட்டார்கள் என்பது தெரியும். அந்த நிலைமை தமிழகத்தில் வருவதற்கு முன்னால் நீங்களாகவே ஒரு நல்ல காரியத்தைச் செய்ய வேண்டுமென்று அன்பான முறையில் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். பழைய நட்பின், பாசத்தின் காரணமாக அந்த அடிப்படையில் சொல்ல விரும்புகிறேன். அந்த ஆபத்தான நிலைமை வருவதற்கு முன்னால் நீங்களாகவே விலகிக்கொள்ளுங்கள். ஏதோ நீங்கள் போய்விட்டால் நாங்கள் ஆட்சிக்கு உடனே வந்து விடலாம் என்ற அற்ப ஆசையிலே நான் இதைச் சொல்லவில்லை. உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களே வேறு யாராவது வரட்டும். தேர்தல் வரும் வரையில் நாங்கள் காத்துக்கொண்டிருக்க முடியும். இந்த மந்திரிசபை குற்றம் செய்திருக்கிறது, ஆகவே, இந்த மந்திரிசபை விலக வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், ஆட்சியிலே இருப்பவர்கள் நிர்வாகத்திலே அடிக்கடி தலையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நிர்வாகத்தை நடத்த முடியாமல் அதிகாரிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக,

[திரு. கோவை செழியன்] [1974 ஆகஸ்ட் 13

பல இலாக்காக்களைப் பற்றிய புள்ளி விவரங்களைச் சொல்ல முடியும். ஆனால் இங்கே இருக்கின்ற நேரம் குறைவாக இருப்பதால் ஒருசிலவற்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தினசரி, அன்றாடம் நிர்வாகத்திலே அமைச்சர்களிலேயிருந்து சாதாரண தொண்டர்கள் வரையில் உங்கள் கட்சியிலே இருப்பவர்கள் தலையிடுகிறார்கள்.

இன்னமும் தெளிவாகச் சொல்கிறேன், ஆட்சியிலே இருப்பவர்களின் தலையீடுகளின் காரணமாக சமீபத்தில் நடைபெற்ற கலெக்டர்கள் மாநாட்டில் சீஃப் செக்ரட்டரி அவர்கள் ஒரு வாசகத்தைச் சொன்னார்கள். கொஞ்சம் மந்தமாக அதிகாரிகள் போக்கு இருக்கிறது, முன்பு போல் உற்சாகமாக இல்லை என்ற அந்த வாசகத்தைச் சொன்னார்கள். அந்தச் சோர்வு வர வேண்டிய அவசியம் என்ன? உங்களுடைய தலையீட்டின் காரணமாக ஒரு அதிகாரியை மூன்று நாட்களிலே நான்கு இடங்களுக்கு மாற்றுகிறீர்கள். இன்னும் சொல்லப்போனால் எதிர்க்கட்சியிலே இருக்கின்ற அங்கத்தினர்களின் சொந்தக்காரர்கள் பலரையும் பந்தாடிக்கொண்டிருக்கிறீர்கள். நாங்கள் அரசியலிலே இருக்கிறோம் என்றால் எங்களுக்கு வேண்டியவர்களுக்கு இத்தகைய தண்டனையை அளிப்பது எந்தவிதத்திலே நியாயமாகும்?

சமீபத்தில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகள்—பெரிய பெரிய அதிகாரிகளை எல்லாம் பழி வாங்கினார்கள். ராயப்பா பழி வாங்கப்பட்டார்; மகாதேவன் மனம் உடைந்து செத்தார். இன்றைக்கு அருள் அவர்களைப் பழி வாங்க நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். மகாதேவனைப் போல் அருள் போய்விடமாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. சமீபத்தில் அரசாங்கத்திலிருந்து உத்தரவு போனதாகக் கேள்விப்படுகிறேன். உண்மையா, பொய்யா என்று முதலமைச்சர் அவர்கள்தான் சொல்லவேண்டும். அருளை ஹோம் டிப்பார்ட்மெண்ட் அடிஷனல் செகரடரியாக மாற்றுவதற்கு உத்தரவு போயிற்று என்றும் அதை ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மறுத்தார்கள் என்றும் தெரிகிறது. ஏற்கனவே, போலீஸ் கமிஷன் ரிப்போர்ட்டை நிறைவேற்ற என். கிருஷ்ணசாமி என்பவரை ஜாயிண்ட் செக்ரடரியாகப் போடும்போது ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அதை ஏற்றுக்கொள்ளாமல் மறுத்தார்கள்.



1974 ஆகஸ்ட் 13]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்போது நண்பர் செழியன் அவர்கள் சொல்லுகின்ற இந்தத் தகவல்களை அடியோடு, அறவே மறுக்கிறேன். அப்படிப்பட்ட எந்த விவகாரமும் கிடையாது.

**திரு. கோவை செழியன்:** மகிழ்ச்சி. அந்த எண்ணம் உங்களுக்கு வரவேண்டாமென்று ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உங்களுக்கு எதையும் தெரிந்து கொண்டு பேசுகிற சுபாவம் வரவேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** ஏற்கனவே முதலமைச்சரை நல்ல முறையில் தெரிந்தவன் என்ற காரணத்தால் நீங்கள் என்னென்ன காரியங்களை எப்படி எப்படிச் செய்வீர்கள் என்று எனக்குத் தெரியும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எல்லாம் செய்வேன்; நோய் இல்லாமல் ஆஸ்பத்திரிக்குப் போகமாட்டேன்.

**திரு. கோவை செழியன்:** நோய் இல்லாதவர்களை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கின்ற அளவுக்கு உங்கள் நிர்வாகம் இருக்கிறதே என்பதற்காக நான் வருத்தப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்போதுதான் சொன்னீர்கள்—எதிர்க்கட்சியினரை நிர்வாகம் மதிப்பதில்லை என்று. நோய் இல்லாத உங்களை நிர்வாகம் எந்த அளவுக்கு மதித்திருக்கிறது என்பதற்கு இது ஒரு நல்ல சான்று.

**திரு. கோவை செழியன்:** வியாதியோடு நான் ஆஸ்பத்திரிக்குச் சென்றது மட்டுமல்ல; பாதி வியாதியோடு என்னை வெளியிலே தள்ள முதலமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள்—வாய் மூலமாக—என்றும் அறிகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதையாவது நிரூபிக்க வேண்டும். நான் உத்தரவு போட்டதாகச் சொன்னார்கள். நான் எந்த உத்தரவும் அப்படிப் போடவில்லை.

**திரு. கோவை செழியன்:** ஃபோன் மூலமாகக் கூறி இருக்கிறீர்கள். ஆஸ்பத்திரியில் ரெக்கார்டு இருக்கிறது.

[1974 ஆகஸ்ட் 13

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நண்பர் செழியன் அவர்கள் நோய் இல்லாமல் எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் ஆஸ்பத்திரியில் இருக்க தாராளமாக அனுமதிக்கலாம். மேடையில் வந்து எதையாவது பேசிக் கொண்டிருப்பதைவிட ஆஸ்பத்திரியில் இருப்பது நல்லது.

**திரு. கோவை செழியன்:** உங்களுடைய நோயான ஆட்சியை அகற்ற வேண்டுமென்றுதான் எனக்கு நோய் இருந்தாலும் பரவாயில்லை என்று வெளியே வந்திருக்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆஸ்பத்திரியிலே தங்கியிருந்தபோது பல அமைச்சர்கள் என்னை வந்து பார்த்தார்கள். ஆகையால் முதலமைச்சர் அவர்களுக்குக் கோபம் ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவரை அமைச்சர்கள் சென்று பார்த்ததால் கோபம் என்ற முறையில் பேசுவது முறையல்ல. செழியன் அங்கிருந்தபோது நானே போய்ப் பார்த்தேன். அப்படி இருக்கும்போது அமைச்சர்கள் சென்று பார்த்ததால் எப்படி எனக்குக் கோபம் ஏற்பட்டிருக்க முடியும்?

**திரு. கோவை செழியன்:** உங்களைத் தவிர மற்றவர்கள் வந்து பார்த்ததன் விளைதான் கோபம் வந்திருக்கிறது.

எனக்கு ஒரு கடிதம் வந்தது. தெரியாத்தனமாக ஆஸ்பத்திரி அதிகாரிகள் முதலமைச்சருக்கு அனுப்புவதற்குப் பதிலாக எனக்கு அனுப்பிவிட்டார்கள். என்னுடைய ரூமுக்கு யார் யார் வந்தார்கள்; எந்தத் தேதியில் வந்தார்கள்; நான் ஃபோனில் என்ன பேசினேன் என்ற விவரங்கள் எல்லாம் இருந்தன. இந்த விவரங்கள் எல்லாம் டைப் அடிக்கப்பட்ட கடிதத்தை என்னிடம் கொடுத்துவிட்டு கையெழுத்து வாங்கிக் கொண்டு போனார்கள். பிரித்துப் படித்துப் பார்த்தால் அது முதலமைச்சருக்கு எழுதப் பட்டது எனக்குத் தவறாக வந்திருக்கிறது என்பது தெரிந்தது. பிறகு அதிகாரிகள் என்னிடம் ஓடிவந்து 'எங்களைக் காப்பாற்றுங்கள்; தெரியாமல் உங்களுக்கு வந்துவிட்டது' என்று சொன்னார்கள். இதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அதற்காக அந்த அதிகாரிகளைப் பழிவாங்கிவிடாதீர்கள். 'வெளியே போய் ட்ரீட்மென்ட் செய்து கொள்ளுங்கள்' என்று சொன்னார்கள்



1974 ஆகஸ்ட் 13] [திரு. கோவை செழியன்]

ஏழு நாட்கள் வெளியே சென்ற நான் தினசரி ட்ரீட்மென்ட் பெற்று வந்தேன். ஏதோ ஆஸ்பத்திரி உங்களுக்குத்தான் சொந்தம், மற்றவர்கள் வரக்கூடாது என்ற முறையில் என்னை வெளியே அனுப்ப வேண்டுமென்று செயலாளர் மூலம் சொல்லவில்லையா? எப்படியாவது என்னை வெளியேற்ற வேண்டுமென்று கூறவில்லையா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இவை எல்லாம் தவறு. செழியன் என்ன செய்கிறார், அவரை வெளியேற்ற வேண்டும் என்றெல்லாம் விரும்பவும் இல்லை, அப்படிப்பட்ட உத்தரவு எதுவும் போடவும் இல்லை. செழியன் 'ஏ' கிளாஸ் வேண்டுமென்று கேட்ட போது சிபாரிசு செய்திருக்கிறேனே அல்லாமல் வேண்டாமென்று சொல்லவில்லை. பழகிய பாசம் என்று கூறினார்கள். அதையெல்லாம் மறந்துவிட்டுப் பேசுவது நல்லதல்ல. அதை மனத்தில் கொண்டு பேசுவது நல்லது.

**திரு. கோவை செழியன்:** அந்தப் பாசத்தை மறந்துவிடவில்லை. நீங்கள்தான் பாதி வியாதியிலே வெளியே அனுப்பினீர்கள். ரெக்கார்டு இருக்கிறது, காட்டுகிறேன். இப்படி எல்லாம் குறுக்கே பேசி என்னுடைய நேரத்தை வீணாக்காதீர்கள். எவ்வளவோ பேச வேண்டுமென்று குறிப்பு வைத்திருக்கிறேன்.

இந்த அரசாங்கத்தின் மீது பல குற்றச்சாட்டுக்கள். தியாகராஜன் என்ற டெபுடி டைரக்டர்—மத்திய அரசுக்கும் தெரியாமல், மாநில அரசுக்கும் தெரியாமல் ஆஸ்திரேலிய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதினார். மத்திய அரசாங்கம் அந்த அதிகாரியை பிளாக் லிஸ்டில் சேர்க்கவேண்டுமென்று தண்டனை கொடுத்தும் மாநில அரசாங்கம் அந்த அதிகாரிக்கு தண்டனை கொடுக்காததோடு மட்டுமல்லாமல், அவருக்குப் ப்ரமோஷன் கொடுத்திருக்கிறீர்கள். தாளம் போடுகின்ற அதிகாரிகளுக்கெல்லாம் ப்ரமோஷன் கிடைக்கிறது. மற்றவர்கள் எல்லாம் வெளியிடத்திற்கு மாற்றப்படுகிறார்கள். சில அதிகாரிகள் 5 வருஷம், 6 வருஷம், 7 வருஷம் என்று ஒரே இடத்தில் இருக்கிறார்கள். ஆனால் அந்தக் கலையில் வல்லவர்கள் அல்லாதவர்கள் சித்திரவதைக்கு ஆளாகிறார்கள் என்பதும் தெரிகிறது. இதை நீங்கள் தயவுசெய்து விசாரித்தால் போதும்.

[1974 ஆகஸ்ட் 13

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தியாகராஜனைப் பற்றிச் சொன்னார்கள். அவர் அரிசன வகுப்பைச் சேர்ந்த அதிகாரி. அவர் என்ன தவறு செய்தார் ?

திரு. கோவை செழியன் : பத்திரிகைகளில் வந்திருக்கிறது. நான் ஒன்றும் புதிதாகச் சொல்லவில்லை. வெளிநாட்டுக்குக் கடிதம் எழுதினார் என்று மத்திய அரசாங்கம் குற்றம் சாட்டியதா, இல்லையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : என்ன கடிதம் எழுதினார் ?

திரு. கோவை செழியன் : நான் முதலமைச்சராக இருந்தால் சொல்லியிருப்பேன். யாரையும் காட்டிக் கொடுக்கக்கூடாது என்று நினைக்கும்போது நாங்கள் என்ன செய்வது ?

இன்றைக்கு இருக்கும் நிலைமையில் அதிகாரிகள் எல்லாம் எப்படி எப்படிப் பழி வாங்கப்படுகிறார்கள், எந்தெந்த விதத்தில் கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதற்குப் பல உதாரணங்கள் சொல்ல முடியும். சமீபத்திலே சேலத்திலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன். சேலம் நிகழ்ச்சியைச் சொல்லக் காரணம் அதன் பின்னாலே பல மர்மங்கள் இருப்பதுதான். அதிகாரிகள் ஏன் பயப்படுகிறார்கள் ? பல அதிகாரிகளை நீங்கள் பழி வாங்கியிருக்கிறீர்கள். தஞ்சையில் ஒரு போலீஸ் அதிகாரி இருந்தார். பெயர்களை எல்லாம் எழுதித் தரத் தயாராக இருக்கிறேன். கும்பகோணத்தில் முதலமைச்சர் பொதுக்கூட்டத்தில் பேசும்போது ஒரு ஆளைக் கொண்டு வந்து காட்டினார்கள். 'நேற்று இன்று நாளை' பட வெளியீட்டின்போது பொதுமக்களால் தாக்கப்பட்டார் என்று குறிப்பிட்டபோது முதலமைச்சர் அவர்கள் இங்கு 'போலீஸ் இருக்கிறதா ? இல்லையா ?' என்று கேட்டார்கள். உடனே அங்கிருக்கும் எஸ்.பி. பதில் சொல்ல முன்வருவதற்குள் கோபித்துக் கொண்டு, முகத்தைத் திருப்பி வைத்துக் கொண்டு சினிமாக் கொட்டகைக்குப் போங்கள் அங்குதான் உங்களுக்கு பாதுகாப்பு வேலை மிக முக்கியம் என்றார். அந்த போலீஸ் அதிகாரி மூன்றே நாளில் மாற்றப்பட்டார். அவர் போஸ்ட் இல்லாமல் இன்னும் வெயிட்டிங்கில் இருக்கிறார்.



1974 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இவையெல்லாம் கற்பனை. போட்டுக் கொண்டு பத்திரிகையில் அவர்களே ஒரு செய்தியைப் சட்டசபையில் பேசுவது முறையாக இல்லை. அதிகாரிகள் மாற்றப் படுவதற்கும், படம் நடந்ததற்கும் ஒற்றுமை கிடையாது. பொதுவாக இப்படிப் பேசுவது நல்லதல்ல. படம் நடந்தது. தியேட்டரில் அதிகக் காவல் போட வேண்டுமென்று இந்த அரசு தீர்மானித்து போடப்பட்டது.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, எந்தெந்த அதிகாரிகள் எப்படி எப்படிப் பழிவாங்கப்பட்டார்கள் என்று உங்களிடம் எழுதித் தருகிறேன். பத்திரிகைகளுக்குத் தெரிகிற வகையில் நீங்கள் வாசிக்க வேண்டும். நான் நேரம் இல்லாத காரணத்தால் எழுதித் தருகிறேன். ஆனால் நீங்கள் வாசிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிர்வாக வசதிகளுக்காக அதிகாரிகள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றப் படுவது எல்லாம் பழி வாங்கப்படுவதாக ஆகாது.

திரு. கோவை செழியன் : தி.மு.க. வசதிக்காகவா ? அரசாங்க வசதிக்காகவா ?

ஒரு அதிகாரி சயானி தியேட்டருக்கு முன்னால் தமிழர் படையை ரகளை செய்ய அனுமதிக்கவில்லை என்ற காரணத்தால் ஒரே நாளில் அவரை ஆவடிக்கு மாற்றினார்கள். ஆவடியில் மலையாள முஸ்லீம் பெண்கள் கற்பழிக்கப்பட்ட நிகழ்ச்சி பேப்பரில் வந்ததும் இவர் அங்கிருந்தால் நமக்கு ஆபத்து என்று அவரை ரெட்ஹில்சுக்கு மாற்றினார்கள். அங்கும் இல்லாமல் மறுபடியும் சென்னைக்கு I.G. அலுவலகத்திற்கு மாற்றப்பட்டார். அந்த அதிகாரியின் சகோதரியின் மகன் ஸ்கூட்டர் ஆக்சிடெண்டில் செத்து பிணத்தை வாங்குவதற்காக அவர் ஜெனரல் ஆஸ்பத்திரியில் பிண அறைமுன் காத்துக் கொண்டிருந்தார். மைக் மூலம் உத்தரவு போட்டார்கள், நீ போய் உடனே பொறுப்பைக் கொடுத்துவிடு என்று ஆர்டர் போட்டார்கள். நிர்வாக வசதிக்காகவா இது ? கொஞ்சம் கூட மனிதாபிமானம் கிடையாதா ? அக்கா மகன் செத்துக் கிடக்கிறான், பிணத்தை வாங்க விடமாட்டேன் என்கிறார்கள். கேட்டால் நிர்வாக

வசதிக்காக என்று பதில் சொல்லுகிறார்கள். யார் நம்புவார்கள் இதையெல்லாம்? இதையெல்லாம் சொல்லுவதற்குக் கூட இந்த மன்றத்தில் உரிமை இல்லையென்றால், இவையெல்லாம் நிர்வாகப் பணிகள் என்று சொன்னால் எப்படி நியாயமாகும்?

சேலத்தில் ஒரு எம்.எல்.ஏ.-யின் அண்ணனும், அண்ணன் மகனும் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் செல்வாக்கு உள்ள ஒரு எம்.எல்.ஏ. இன்றுவரை அந்த ஊரில் அதற்காக யாரும் கைது செய்யப்படவில்லை. போலீஸ் நாய் அழைத்துச் செல்லப்பட்டது. அது பல வீடுகளுக்குச் சென்றது. சில வீடுகளில் நாயை விட மறுத்திருக்கிறார்கள். நாங்கள் அந்த ஊருக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள பொது மக்கள் சொன்னார்கள். ஏன் இன்றுவரையில் யாரும் கைது செய்யப்படவில்லை என்று நான் கேட்கிறேன். சாதாரண ஒரு ஆள் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தால்கூட கண்டு பிடித்திருப்பார்களே. இவ்வளவு பெரிய எம்.எல்.ஏ.-யின் அண்ணனும் அண்ணன் மகனும் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய அக்கிரமம் நடைபெற்றிருக்கிறது. அந்த எம்.எல்.ஏ.-யாவது முயற்சி எடுத்து கண்டு பிடித்திருக்கவேண்டாமா? அப்படி அந்த எம்.எல்.ஏ. செய்யாவிட்டாலும் அரசாங்கமாவது செய்யவேண்டாமா, ஏன் இன்று வரை அந்தக் காரியத்தைச் செய்யவில்லை என்று கேட்கிறேன். சொன்னால் கோபம் வருகிறது.

இந்த ஆட்சி கொலைகார ஆட்சி. கொலை செய்தாவது எதிர்க் கட்சிகளை ஒழிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டை நான் சுமத்துகிறேன். ஏன் யாரும் கைது செய்யப்படவில்லை? தெருவில் அடிபட்டு போனவர்களைக்குறித்து, யார் குற்றம் செய்தார்கள் என்று இருபத்துநான்கு மணி நேரத்தில் கண்டுபிடிக்கிறது போலீஸ் நிர்வாகம். அந்த நிர்வாகத்தை வைத்துக்கொண்டு ஏன் இதுவரையில் அங்கு அதற்காக யாரும் கைது செய்யப்படவில்லை என்று கேட்கிறேன்.

இன்னும் எவ்வளவோ அசிங்கங்களைச் சொல்லலாம். கோவையில் ஒரு ஹோட்டலில் ஒரு பெண், விபசாரி என்று சொல்லப்பட்டவள் கைது செய்யப்பட்டாள் என்பதற்காக அவள் சென்னை வந்து பலபேர்களைச் சந்தித்திருக்கின்றாள். பலன் அதற்குப் பின்னால் போலீஸ் அதிகாரிகள், கைது செய்தவர்கள்





மாற்றப்படவில்லையா? கோவையில் ஒரு விபசார விடுதியில் ஒரு அமைச்சருக்கு வரவேற்பு தந்தார்கள். அந்த அமைச்சருக்கு விபசாரிகள் ஆரத்தி எடுத்தார்கள் என்று நவசக்தியில் போட்டிருந்தார்கள். அதைவிட இது அசிங்கம் அக்கிரமம் இல்லையா? ஏன் கேஸ் போடவில்லை? இவைகளை எல்லாம் சொல்கிற போது எரிச்சல் வருகிறது, கோபம் வருகிறது. இதுதான் இந்த ஆட்சியின் இலட்சணம் என்று சொன்னால் அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராகயில்லை.

ஒழித்துவிடுவது என்று திட்டமிட்டு இந்தக் காரியங்களைச் செய்கிறீர்கள். ஆட்சியைவிட்டு இறங்கப் போகிறோம் இறங்கப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டு தமிழ்நாட்டை சுடுகாடாக ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள். தமிழர்கள் 82 லட்சம் பேர்கள் வெளி மாநிலங்களில் இருக்கிறார்கள். தமிழன், மலையாளி, தெலுங்கன் என்ற உணர்ச்சி, உங்கள் தூண்டுதலினால்தான் தமிழ் நாட்டில் உங்கள் படைகள் கிளம்பிக் கொண்டிருக்கின்றன. இன்று மூன்று மாநிலங்களில் சீப்-செகரட்டரிகளாக தமிழர்கள் இருக்கிறார்கள். ஒரிசா, மத்திய பிரதேஷ், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் திரு. கோபால், திரு. சுந்தரம், திரு. ராமமூர்த்தி போன்றவர்கள் மூன்று பேர்கள், தமிழர்கள் சீப்-செகரட்டரிகளாக இருக்கிறார்கள். உங்களைப் போன்று அந்த மந்திரிகளும் நினைத்தால் என்னவாகும்? நேற்றுவரை கேரளாவில் ஐ.ஜி.-யாக இருந்தவர் தமிழரல்லவா? நீங்கள் செய்கிற காரியங்கள் இந்த நாட்டை சுடுகாடாக . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இங்கும் ஹரிஜன வீட்டு வசதி வாரியத்தின் தலைவராக இருப்பவர் நம்பியார் என்கிற மலையாளி வகுப்பைச் சார்ந்தவர்தான்.

**திரு. கோவை செழியன்:** போட்டுவிட்டார்கள் அந்தக் காலத்தில். நீங்கள் போடவில்லை, அவர்கள் அந்தக் காலத்தில் வந்தார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான்தான் ஹரிஜன வீட்டு வசதி வாரியத்தின் தலைவராக அவர்களை நியமித்திருக்கிறேன்.

[1974 ஆகஸ்ட் 13

திரு. கோவை செழியன்: எங்கேயாவது ஒரு இடத்தில் அவர்களை போட்டுத்தானே தீர வேண்டும். அவரை உங்களால் மாற்ற முடியாது, அவர் ஆல் இந்தியா சர்வீஸைச் சேர்ந்தவர். என் குற்றச்சாட்டெல்லாம் இந்த ஆட்சி கொலைகார ஆட்சி. இந்த ஆட்சி நாட்டு மக்களைப் பட்டினி போட்டு வதைக்கின்றது. இந்த ஆட்சி நாட்டு மக்களைச் சித்திரவதை செய்கிறது. அப்பேர்ப்பட்ட ஆட்சி கீழே இறங்கவேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் ராஜிநாமா செய்யவேண்டும். மானமுள்ளவர்களாக இருக்கிற காரணத்தால் நான் சொல்கிறேன், நீங்கள் ராஜிநாமா செய்துவிட்டு வெளியேறுங்கள், அப்போதுதான் இந்த நாடு உருப்படும் என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அருமை நண்பர் கோவை செழியன் அவர்கள் ஆரம்பத்திலேயே சொன்னார்கள், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறாது, நிறைவேறாத காரியத்தில் அவர்கள் நம்பிக்கை வைத்து ஏதோ இந்த அமைச்சரவை மீது வசைமொழிகள் வீசிடவேண்டுமென்பதற்கு ஒரு வாய்ப்பாகத்தான் இதனை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள்.

அரசாங்கம் செய்யக் கூடிய தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்கு வழிகள் இருக்கின்றன. நம்பிக்கையில்லாத் தீர்மானம்தான் வழி என்பதல்ல. சென்ஷர் மோஷன் கொடுக்கலாம். ஒரு கொள்கையில் ஒரு அரசாங்கத்தின் செயலை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அதைக் குறிப்பிட்டு அந்தக் கொள்கையைக் கண்டித்து, அரசாங்கத்தைக் கண்டித்து அவர்கள் தீர்மானம் கொடுக்கலாம். ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்ற அளவில் கொடுக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

திரு. செழியன் அவர்கள் நிறையச் செய்திகளை எல்லாம் சொல்வார்கள், இந்த அரசாங்கம் அதை வைத்துக்கொண்டு எதிர் காலத்தில் திறம்பட செயல்பட அவை உதவியாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் மிக்க ஏமாற்றத்தோடுதான், அவர்கள் முதல் அமைச்சர் அவர்கள் ராஜிநாமா செய்யவேண்டும், உணவு அமைச்சர் அவர்கள் ராஜிநாமா செய்யவேண்டும் என்ற



1974 ஆகஸ்ட் 13] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

கோஷங்களை மட்டும் போட்டு விட்டுச் சென்றிருக்கிறார்களே தவிர உண்மையான குற்றச்சாட்டினை இந்த அமைச்சரவை பேரில் அவர்கள் எதுவும் சொல்லவில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருக்கிற முறையில் நாம் ஒன்றைப் பார்க்கவேண்டும். இந்த அமைச்சரவை தான், அண்ணாவினுடைய அமைச்சரவைதான், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சரவைதான் தாங்கள் பொறுப்பேற்ற பிறகு அரிசியே இல்லை என்று சொன்ன தமிழகத்தில் பல லட்சக்கணக்கான டன் அரிசியை உற்பத்தி செய்ததோடு கூட மட்டுமல்லாமல் பற்றாக்குறையாக இருந்த தமிழ்நாடு இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களுக்கு அரிசி வாரி வழங்கக்கூடிய ஒரு உபரி மாநிலமாக, உற்பத்தி கேந்திரமாக தமிழ் நாட்டை மாற்றியது என்பதைக் குறித்து இங்கிருக்கிற எதிர்க்கட்சிக்காரர்கள் மட்டுமல்ல அகில இந்தியாவில் இருக்கக்கூடிய முதல் அமைச்சர்களும், பாராளுமன்றத்தில் இருக்கக்கூடிய தலைவர்களும் கொடுத்திருக்கிறார்கள், நன்சான்றிதழ் களினை. ஆகவே, இதை வைத்துக் கொண்டு, திறமையற்ற ஆட்சி, இவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை, இவர்களால் தவறுகள் நேர்ந்தன என்று சொன்னால் அது வாதத்திற்கு ஏற்புடையதாக இருக்காது.

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் நடைபெற்ற சட்ட மன்றக் கூட்டத்தில் நான் சொன்னேன். குஜராத்தில் உணவுப் பஞ்சம் வந்த சமயத்தில் தமிழ் நாட்டிலிருந்து அரிசி கொடுங்கள் என்று கேட்டேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இங்கேயே பதில் சொன்னார்கள், நான் தருகிறேன் என்று. சொன்னார்கள், தந்தார்கள். மற்ற மாநிலங்களுக்குத் தந்தார்கள்.

ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். மற்றவர்கள் பட்டினி இருக்கக்கூடிய சமயத்தில் தமிழன் அதைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான். வைத்திருக்கலாம்—இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பாக மற்ற மாநிலங்களுக்குக் கொடுத்த உணவுப்பொருளையும் சேர்த்து வைத்திருந்தால் இன்னும் கொஞ்சம் நிலைமை சீர்பட்டிருக்கும். இருந்தாலும், அவர்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள், குஜராத்தில் செத்துக்கொண்டிருக்கிறார்கள், மகாராஷ்ட்ராவில் செத்துக்கொண்டிருக்கிறார்கள், வங்காளத்தில்

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1974 ஆகஸ்ட் 13

செத்துக்கொண்டிருக்கிறார்கள், மற்ற மாநிலங்களில் உணவு இல்லாமல் செத்துக்கொண்டிருப்பதைப் பார்த்து மனம் உருகித் தான் தமிழ்நாட்டிலிருந்து நம்மால் முடிந்த அளவிற்கு ஓரளவு கொடுக்கச் செய்தோம்.

ஆனால், இன்று ஓரளவிற்கு உணவு நிலைமையில், விலைவாசி உயர்ந்திருப்பது உண்மைதான். இல்லை என்று நான் சொல்லவில்லை. சாதாரண விவசாயிகள் மட்டுமல்ல, தொழிலாளர்கள், பிக்ஸட் இன்கம் க்ரூப்பில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் படி அரிசி இரண்டு ரூபாய் என்றிருந்ததை, படி மூன்றரை ரூபாய், நான்கு ரூபாய் என்று கொடுத்து வாங்குகிற சமயத்தில் சங்கடம் வருகிறது. இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்கள் இந்தச் சங்கடத்தை எப்படி தவிர்க்கலாம், எப்படி தவிர்த்திருக்கலாம் என்று சொன்னால் நியாயமாக இருக்கும். அதை விட்டுவிட்டு நம்முடைய செழியன் அவர்கள் குஜராத்தைப் போல் இங்கும் பட்டினிப் புரட்சி வந்துவிடும் என்று நான் அஞ்சுகிறேன் என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், நீங்கள் நிச்சயமாக பயப்பட்டீர்களா? உங்கள் ஆசைதானே அது. எதிர்க்கட்சியினுடைய ஆசை குஜராத்தில் ஏற்பட்ட புரட்சி போன்று, பீஹாரில் உள்ள புரட்சி போன்று, மற்ற மற்ற உள்ளதைப் போன்று உணவுப் பற்றுக்குறையால் அரசாங்கம் கவிழ்ந்துவிடும் என்ற ஒரு புரட்சிகரமான சூழ்நிலை இங்கு வராதா என்று நீங்கள் எல்லாம் எதிர்பார்த்தீர்கள். நீங்கள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. அப்படி நடக்கவில்லை என்ற பின் அதை மறைப்பதற்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம்.

ஒரு பத்து நாட்களுக்கு முன்பு இருந்த நிலைமை இப்போது இல்லை. பன்னிரண்டு நாட்களுக்கு முன்பிருந்த நிலை இப்போது இல்லை. அரிசியே இல்லை என்று சொல்லக்கூடிய நிலை தமிழ்நாட்டில் இல்லை. அரிசி இருக்கிறது. கொஞ்சம் விலை அதிகமாக இருக்கிறது, ஒத்துக்கொள்கிறேன். இந்த நிலை எப்படி வந்தது? சென்ற கூட்டத்தில் நம் முதல் அமைச்சர் அவர்களும் சொன்னார்கள், தொழில் அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். நமது உணவு அமைச்சர் அருமைச் சகோதரர் மன்னை நாராயணசாமி அவர்களும் டெல்லி சென்று வாதித்தார்கள். கோர்ஸ் க்ரெயின்ஸ், கம்பு, சோளம், கேழ்வரகு இவைகளைத் தமிழ்நாட்டிலிருந்து வெளி



1974 ஆகஸ்ட் 13] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

மாநிலங்களுக்கு அனுப்பக்கூடாது என்று தமிழ் நாட்டு அரசாங்கம் மத்திய அரசோடு போர் தொடுத்தது. இல்லை, எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது, அனுப்புவோம் என்று

(முற்பகல் 11-30)

சொன்னார்கள். நமக்கு அதிகாரம் இல்லாத காரணத்தால் தடை செய்ய முடியவில்லை. அவர்கள் கேட்டுகளை திறந்து விட்டு விட்டார்கள். ரூ. 60 விற்ற கேழ்வரகு ரூ. 120 ஆகியது. ரூ. 60 விற்ற கம்பு ரூ. 140 ஆகியது. ரூ. 70 விற்ற சோளம் ரூ. 130—ரூ. 140 கொடுத்தாலும் கிடைக்கவில்லை. நாம் எல்லோருமா அரிசியைச் சாப்பிடுகிறோம். அரிசியை நீக்கி, கேழ்வரகு, கம்பு, சோளம் மற்ற மற்ற பொருள்களைச் சாப்பிடுகிறோம். சோளம் கிடைக்காமல் செய்தது யார்? கம்பு கிடைக்காமல் செய்தது யார்? கேழ்வரகு கிடைக்காமல் செய்தது யார்? ஏன் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எல்லாம் மத்திய அரசாங்கம் செய்தது தவறு என்று சொல்லவில்லை. மில்லட்டுகளை வெளி மாநிலங்களுக்கு அனுப்பியதால் தான் இந்த விலையேற்றம். There will be pressure on rice. இப்போது எல்லோருமே இந்த அரிசி விலையேற்றத்திற்குக் காரணம் இப்படி விலையேற்றம் செய்து, அரிசி சாப்பிட வேண்டியிருக்கிறது. மத்திய அரசு சூழ்ச்சி மாநில அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு சிறு தானியங்கள், கம்பு, செய்கிறது. இந்த மாநிலத்தில் உள்ள வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் கேழ்வரகு, சோளம் இவற்றை நிலைமை என்ன? அரிசிக்குக் சென்று விட்டார்கள். அதனால் கிராக்கி அதிகமாகிவிட்டது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து** : புஞ்சை தானியங்கள் இங்கேயிருந்து கொண்டு செல்வதற்கு மட்டும் மத்திய அரசு அனுமதி அளித்து இருக்கிறதா? வெளியிலிருந்து இங்கே கொண்டு வருவதற்கும் அனுமதி அளித்திருக்கிறதா?

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)** : இங்கேயிருந்து தான் கொண்டு செல்கிறார்கள். அங்கேயிருந்து வருவது அதிகம் இல்லை. மேட்டிலிருந்து தான் பள்ளத்திற்கு தண்ணீர் வருமே தவிர, மேட்டிற்கு வராது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து** : இங்கே வெளி மாநிலங்களிலிருந்து அதிகமாக வந்து இருப்பதாகச் சொல்கிறார்கள்.

[1974 ஆகஸ்ட் 13

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இந்த விலைவாசி ஏற்றத்திற்குக் காரணமே வெளி மாநிலங்களுக்குக் கொண்டு செல்லலாம் என்று உத்தரவிட்ட காரணத்தால் தான். குஜராத் வியாபாரிகள், பம்பாய் வியாபாரிகள் இங்கே வந்து விலையை ஏற்றி விட்டார்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** ஹரியானா, பஞ்சாப் மாநிலத்திலிருந்து அதிகம் வந்திருக்கிறது. இங்கேயிருந்து அவ்வளவு போகவில்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அப்படியானால் ஏன் மத்திய அரசாங்கம் கட்டுப்பாட்டை எடுக்கவேண்டும்?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பஞ்சாப், அரியானா மாநிலத்திலிருந்து அதிகம் வருவதற்காக இருக்கலாம்.

**திரு. கோவை செழியன்:** தலைவரவர்களே, சிவில் சப்ளைஸ் டிபார்ட்மென்ட் மூலம் வாங்காமல் ஏன் ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா மூலமாக வாங்கினீர்கள்?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** சிவில் சப்ளைஸ் மூலமாக எவ்வளவு செய்யவேண்டுமோ நாங்கள் போட்ட திட்டப்படி செய்து இருக்கிறோம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** நம்முடைய தமிழகத்தில் ஏற்பட்ட உணவு நெருக்கடிக்கு மிக முக்கிய மூலகாரணம் மத்திய அரசாங்கம் தான். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பொறுப்பிலிருந்து இறக்க வேண்டும், இறக்கு வதற்கான ஒரு நிலை ஏற்படவேண்டுமென்று சதி செய்தது தான், தமிழ்நாட்டிலிருந்து கம்பு, கேழ்வரகு, சோளம் மற்ற பொருள்களை வெளிமாநிலங்களுக்கு அதிகமாக அனுப்பினார்கள் என்பதை நாம் மறுக்க முடியாது. அது ஒரு புறம் இருக்கட்டும்.

**திரு. சோ. அழகர்சாமி:** மத்திய அரசாங்கம் செய்த சதி என்று சொல்கிறீர்கள். அந்தச் சதி செய்தவர்களுடைய கட்சி ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தியிருப்பவரை ஏன் ஆதரிக்கிறீர்கள், அதற்குக் காரணம் என்ன?

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** கம்யூனிஸ்ட் கட்சிக்கு இந்திரா காந்திமீது வேறுபாடு கிடையாது. எந்த அளவுக்கு வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி இந்திரா காந்தி



1974 ஆகஸ்ட் 13] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

அவர்களுக்குப் பாராளுமன்றத்தில் ஒத்துழைக்கிறது என்பது எனக்கு அங்கிருந்த காரணத்தால் தெரியும். இப்போது ஏதோ அவர்கள் தலைவர் சொல்லிவிட்டார் என்பதற்காக இப்போது வேறு விதமாகப் பேசுகிறார்கள். அது வேறு விஷயம்.

இரண்டாவதாக, அரிசி கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இந்தியா முழுவதும் ஒரே ஃபுட் சோனாக இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதாவது, கேரளம், ஆந்திரம், கருநாடகம், தமிழ் நாடு ஆகிய நான்கும் சேர்ந்து ஒரே சோனாக இருக்கவேண்டு மென்று சொன்னார்கள். சதர்ன் ஃபுட் சோன் என்று சொன்னால் இங்கேயிருந்து அரிசி இந்த நான்கு மாநிலத்திலும் எங்குவேண்டு மானாலும் எடுத்துக்கொண்டு போகலாம். அப்படியிருந்திருந்தால் இன்றைக்கு ரூ. 4 விற்கும் அரிசி ரூ. 10 விற்று இருக்கும். நம்முடைய முதலமைச்சரும், உணவு அமைச்சரும் டெல்லிக்குச் சென்று போராடி ஒரே சோனாக இருக்க ஒப்புக்கொள்ளவில்லை. அப்படி ஒப்புக்கொண்டிருந்தால் இன்று படியரிசி கூட கிடைக்காது போய் இருக்கும்.

இன்றைக்கு விலைவாசி ஏறியிருப்பது தஞ்சாவூர் மாவட்டத்தில் மடை திறந்து திறந்துவிட்டதால் மட்டுமல்ல. தஞ்சாவூரின் சேலத்திற்குச் விட்டதால் கோயம்புத்தூர் சென்று இருக்கிறது. அரிசி இல்லாத மற்ற மாவட்டங்களுக்குச் சென்று இருக்கிறது. ஒரு இடத்தில் 5 ரூபாய், ஒரு இடத்தில் 1½ ரூபாய் படி அரிசி என்ற நிலைமை இல்லாமல் எல்லா இடங் களிலும் ஒரே விலைதான் இன்றையதினம் விற்கிறது. விலைவாசி ஏறியிருப்பது என்னவோ உண்மை. அரசாங்கம் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று திராவிட முன்னேற்றக்கழக சார்பில் உங்களோடு சேர்ந்து நானும் வேண்டுகோள் விடுகிறேன். இப்போது அரிசி ரூ. 3.50 விற்கப் படுகிறது. இது நிரந்தரமான விலை அல்ல. மழை பெய்யவில்லை. ஆகையால் நிலைமை சரியில்லை. அரிசி கிடைக்காமல் இல்லை. எல்லா இடத்திலும் இருக்கிறது. 31-ம் தேதி கிரோசின் இல்லை என்ற உடன் 1-ம் தேதி எல்லோரும் க்யூ நின்று விட்டார்கள். இப்போது கிடைக்கும் என்று தெரிந்ததும் க்யூ குறைந்துவிட்டது. அதே போல் அரிசி கிடைக்காது என்று தெரிந்ததும் நாமும் ஒரு 10 படி வாங்கி வைத்துக்கொள்வோமே என்று எல்லோரும் வந்து

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1974 ஆகஸ்ட் 13

விட்டார்கள். இப்போது கிடைக்கும் என்று தெரிந்ததும் அந்த நிலைமை இல்லை. இந்த மாதிரி ஒரு நிலைமையை உருவாக்கி அதன் மூலம் இந்த ஆட்சியைக் கவிழ்க்கவேண்டுமென்று எதிர்க்கட்சிகள் செய்தார்கள்.

There was an artificial demand for rice.

அதை எப்படியோ அரசாங்கம் சமாளித்து விட்டது. அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு இன்றையதினம் ரூ. 3.50 அரிசி போட முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு மாதம் போனால் ரூ. 2.50 கிடைக்கும் என்று எதிர் பார்க்கலாம். சம்பா அறுவடை ஆகிவிட்டால் கொஞ்சம் விலை குறையும். இப்போது எந்தெந்த மில்காரர்கள் எங்களுக்குத் தகவல் கொடுக்கிறார்களோ அவர்களெல்லாம் தானாகவே எங்களிடத்தில் வருவார்கள். அரிசி விலை குறைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். நம்முடைய செழியன் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள் கிறேன். விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்கக்கூடாது என்று அவர்கள் நினைக்கிறார்களா? உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது என்று சொல்வார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அதிக விலை உழவனுக்குக் கிடைக்கவில்லை. வியாபாரிகளுக்குத்தான் கிடைத்திருக்கிறது.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ நான் விவசாயிகளுக்கு அதிக விலை கொடுக்கக்கூடாது என்று சொன்னதுபோல் சொல்கிறார்கள். இப்போது விற்கிற அரிசி உரவிலை, யூரியா விலை குறைவாக இருந்தபோது உற்பத்தியானது. அந்த நேரத்தில் கொள்முதல் விலை குறைவு. இனிமேல் கொடுப்பதைப் பற்றி நான் சொல்லவில்லை. ஏற்கனவே 52 ரூபாய்க்கு யூரியா வாங்கிய நேரத்தில் இருந்த நெல்லுக்குத்தான் விலை ஏறியிருக்கிறது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** மிக்க சந்தோஷம். செழியன் அவர்கள் விவசாயிகளுக்கு அதிகமாகப் பணம் போய் விடுகிறதே, நெல்லுக்கு இவ்வளவு விலை கொடுக்கக்கூடாது என்று மிக அருமையாகச் சொல்கிறார்கள். பாராட்டுகிறேன். நேற்றைய முன்தினம் ஹிந்து பத்திரிகையில் மதுரையைச் சேர்ந்த திரு. ராஜாராம் அவர்கள் ஒரு ஆர்டிகிள் எழுதியிருந்தார். 'பாடி



1974 ஆகஸ்ட் 13] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

எகானமி' என்பது பற்றி எழுதியிருந்தார். விவசாயிக்கு டீஸல் என்ஜின் கிடைக்கவில்லை, கரண்டு தட்டுப்பாடு, அதைப்போல உரம் கிடைக்கவில்லை. இப்படி இவ்வளவு கஷ்டங்களுக்கிடையே அவன் பயிரிட்டுவிட்டு, அவனுக்குக் கிடைப்பது போதவில்லை. அதைத்தான் எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்கள் சொன்னார்கள். பத்திரிகைக்காரர்களும் எழுதினார்கள். ஓரளவுக்கு விவசாயிக்கு அதிகமான விலை கிடைத்தால்தான் அதிகமான உற்பத்தி ஏற்படும்.

இந்தியா தன்னிறைவு பெற்ற நாடு. செய்யவேண்டியதை மத்திய அரசாங்கம் செய்யாமல் இப்பொழுது மீண்டும் உணவு இறக்குமதி செய்யப் போகிறார்கள். தமிழ் நாடு அப்படி செய்துவிட முடியுமா? அதற்கு அதிகாரம் இருக்கிறதா? இல்லையே. அதிலே தமிழ்நாடு நம்பிக்கை வைக்கவில்லை. விவசாயிகளுக்குக் கட்டுபடி யாகக்கூடிய விலை கொடுத்தால் நிச்சயம் அதிகமாகப் பயிரிடுவார்கள். அதிகமாகப் பயிரிட்டால் உற்பத்தி பெருகும். அதிகமாக உற்பத்தி ஏற்பட்டால் தானாகவே விலை குறையும். இருக்கிற நிலைமைக்கேற்றவாறு அரிசிக்கும் நெல்லுக்கும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஒரு விலையைக் கொடுத்திருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய விவசாயிகள் பாடுபட்டு பாடுபட்டு உழைத்து, போதிய பலன் கிடைக்காமல், கடன் சுமையை ஏற்றி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கடன் சுமை குறைவதற்கு கொஞ்ச காலத்திற்கு அவர்களுக்கு இந்த விலை கிடைத்தால் விவசாயிகள் நிம்மதியாக வாழ முடியும். அது மாத்திரமல்ல, அதிகமாக உற்பத்தி செய்ய முன்வருவார்கள். இந்த நிலைமை ஏற்பட்டதால்தான் கரும்பு நடுபவர்கள், கரும்பு நடவை மறுத்துவிட்டு நெல் பயிரிடுவதாகச் சொல்கிறார்கள். ஏனென்றால் நெல் பயிரிட்டால் லாபம் வரும், வருமானம் வரும் என்று அவர் களுக்குத் தெரிகிறது.

சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் கிராமங்களிலிருந்து வரக்கூடியவர்கள். கிராமத்திலுள்ள விலைவாசியைப் பார்க்க வேண்டும். நம்முடைய வடிவேல் அவர்கள் நன்றாகச் சொன்னார்கள். ஏற்கனவே கணபதியா பிள்ளைக் கமிஷன் ஒரு விலையைக் கொடுத்திருக்கிறது. இவ்வளவு தான் கூலி என்று சொல்லப் பட்டிருக்கிறது. பணமாகக் கொடுத்தால் எவ்வளவு, நெல்லாகக்

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1974 ஆகஸ்ட் 13

கொடுத்தால் எத்தனை மரக்கால் என்று சொல்லியிருக்கிறது. நெல்லாகக் கொடுக்கலாம். பணமாகக் கொடுப்போம் என்று சொல்கிற நேரத்தில் ஒரு புரட்சியே நடக்கிறது. நெல்லாகக் கொடுக்கவேண்டும், அப்படி இல்லை என்றால் அந்த நெல்லை வாங்குகின்ற அளவுக்குப் பணமாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். ஆகையினால் . . .

**திரு. எஸ். வடிவேல்:** தலைவர் அவர்களே, 22—7—74-ம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அன்றைய விலை மூட்டை ரூ. 58 என்று சொல்லி, ஆண்களுக்கு ரூ. 6 கூலி, பெண்களுக்கு ரூ. 4 கூலி என்று சொன்னார்கள். பத்து நாட்களுக்குப் பின்னால் ரூ. 80 ஒரு மூட்டைக்கு கூட்டுறவு சொஸைட்டியிடம் ஒப்படைத்தால், அதோடு 20 கிலோ யூரியா இனாம் என்று சொல்கிறார்கள். பத்து நாளைக்கு முன்பு நிர்ணயம் செய்யப்பட்ட கூலி கொடுத்தால், விவசாயத் தொழிலாளி எங்கே போய் சம்பாதிப்பான் என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறதா?

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** நன்றாக உணர்கிறது. விவசாயத் தொழிலாளி பட்டினி கிடக்கக்கூடிய நிலையில் இருக்கமாட்டான். அப்படி பட்டினி கிடந்தால் அவன் விவசாயத் தொழிலை நடத்த முடியாது. இரண்டு நாட்களுக்குத் தொழிலாளிக்கு சரியான ஊதியம் கிடைக்கவில்லை என்றால் அவனே நிலைமையை திருத்திக் கொள்வான். அவன் சம்பளத்தை உயர்த்திக் கொள்வான். அவன் குடும்பத்தை வாழவைக்கக்கூடிய பொறுப்பு விவசாயிக்கு இருக்கிறது. கிராமத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளிகளுக்கு அவர்களே கூலியை உயர்த்திக் கொள்ளக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. நகரத்தில் இருக்கக்கூடியவர்களைச் சொன்னால் ஒத்துக்கொள்கிறேன். ஏனென்றால் பத்திரிகை பலர் இருக்கிறது. நகரத்தில் கஷ்டப்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவர்களே பாதுகாத்துக்கொள்ள முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். கிராமத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள் முன்வைக்கு வருகிறார்கள். ரூ. 3 கூலி கொடுத்தால், போதவில்லை என்றால், ரூ. 4 கொடுக்கிறோம், எங்கள் பகுதியில் ரூ. 5 கொடுக்கிறோம். அதுவும் போதவில்லை என்றால் ரூ. 6 கொடுக்கிறோம். ரூ. 6 இல்லாவிட்டால், ரூ. 7 கொடுக்கிறோம். அவர்களுடைய உழைப்பினால்தான் உற்பத்தி ஏற்படுகிறது. அதன் காரணமாக அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளிகள் அவர்களாகவே அவர்களுடைய நிலைமையைச் சீர்செய்துகொள்கிறார்கள். நான் நகரங்களில் இருக்கக்கூடியவர்களை வைத்துச் சொல்லவில்லை. ஆனால் உழைக்கின்ற மக்களுக்கு இதுவரையிலே போதுமான பாதுகாப்பு கிடைக்காமல் இருந்தது. ஓரளவுக்கு நிச்சயமாகப் பாதுகாப்பு கிடைக்கும் என்ற சூழ்நிலையில்தான் அரிசிக்கும் நெல்லுக்கும் ஓரளவுக்கு விலை கூடியிருப்பதன் காரணமாக அவர்கள் மனம் நிம்மதியாக இருக்கிறது. அதே காரணத்தினால் உற்பத்தி நிச்சயமாக பெருகத்தான் போகிறது. ஏதோ சிறு தவறுகள்—தவறுகள் என்று கூடச் சொல்ல மாட்டேன்—நடந்திருக்கலாம்.



1974 ஆகஸ்ட் 13] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில் ஒரு 'ஸ்டடி பாலிஸி' எப்பொழுதும் ஒரு நிரந்தரமான கொள்கையை வைத்துக் கொண்டிருந்தால் அது சரியாக இருக்காது என்று கூறுவார்கள். இந்திரா காந்தி அம்மையார் என்ன சொன்னார்கள். கோதுமையைப் பொறுத்தவரையில் 'ஹோல்ஸேல் டிரேடை' அரசாங்கமே எடுத்துக்கொள்ளும் என்று சொன்னார்கள். இரண்டு மாதில அரசாங்கங்கள் கழிந்ததற்குப் பிறகுதான் அவர்களுக்கு உண்மை உணர்வு வந்தது. அது தேவையில்லை என்று சொன்னார்கள். அவர்கள் அந்தக் கொள்கையை மாற்றவில்லையா? கொள்கையை 'ஃப்லெக்ஸிபிளாக' வைத்துக்கொள்ளவில்லையா? அதனால்தான் முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். உணவுத் கொள்கையைப் பொறுத்தவரையில், தமிழகத்தைப் பொறுத்த வரையில், நிரந்தரமாக ஒரு கடுமையான கொள்கையை என்றைக்குமே நாம் வைத்திருந்தது கிடையாது. நிலைமைக்கு ஏற்றவாறு, சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு, பொது மக்களின் நன்மைகள் பாதுகாக்கப்படக்கூடிய அடிப்படையில் உணவுக் கொள்கையை மாற்றவேண்டியதாகத்தான் இருக்கும் என்று கூறுகிறார்கள்.

சில பேர்கள் சந்தோஷப்படுவார்கள். எனக்குத் தெரியும். அரசின் கையாலாகாத தனத்தினால் ஏதோ செய்துவிட்டோம் என்று வியாபாரிகள் அரசாங்கத்தைக் குறை சொல்கிறார்கள். விவசாயிகளிடத்தில் இன்றைக்கு நெல் கிடையாது. காரணம் மூட்டை ரூ. 70 விற்ற பொழுது. 2 மூட்டைகள் இருந்தால் போதும். குறுவை நெல் வரும்,

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1974 ஆகஸ்ட் 13

அதைக் கொண்டு சாப்பிடலாம் என்று நினைத்து மூட்டை ரூ. 55 விற்றது ரூ. 70-க்கு வந்துவிட்டது. எதற்காக தான் வைத்துக் கொள்ளவேண்டும் என்று கருதி தன்னுடைய சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக விவசாயி நெல்லை விற்றுவிட்டான். அவர்களிடத்தில் இப்பொழுது நெல் இல்லை. பெரிய விவசாயிகளிடத்தில் தான் நெல் இருக்கிறது. கள்ளப் பணம் சம்பாதிக்கும் பெரிய விவசாயிகளிடத்தில் தான் நெல் இருக்கிறது. அந்த நெல்லை வெளியே கொண்டுவருகிற பணியில்தான் உணவு அமைச்சர் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தயவு தாட்சண்யமின்றி அவர்களிடமிருந்து நெல்லை எடுத்துக் கொள்வதற்கு உறுதுணையாக எதிர்க்கட்சியினர் இருக்கவேண்டும்.

வியாபாரிகள் வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஐம்பது குவிண்டாலுக்குள் இருந்தால் 'டெக்ளேர்' செய்யவேண்டியதில்லை என்ற உத்தரவை அவர்களுக்குச் சாதகமாக வைத்துக்கொண்டு, பணம் வைத்திருக்கக்கூடிய வியாபாரிகள் ஒவ்வொரு கிராமமாகச் சென்று 500 மூட்டைகள் வாங்கியிருக்கிறார்கள். பத்து பேர்களிடம் ஒவ்வொருவரிடமிருந்து 50 மூட்டைகள் வாங்கி, 'நீங்கள் அதை வீட்டில் வைத்துக்கொள்ளுங்கள், நான் வேண்டும்பொழுது எடுத்துக்கொள்கிறேன், அதற்கு வேண்டுமானால் உங்களுக்கு வாடகை கொடுத்துவிடுகிறேன்' என்றெல்லாம் சொல்லி வாங்கியிருக்கிறார்கள். சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள அவர்கள் பார்க்கிறார்கள். அவர்களிடமிருந்து நெல்லை வெளிக்கொணர வேண்டும். இந்தக் காரியத்தைத்தான் இப்பொழுது தமிழ் நாடு அரசு செய்துகொண்டிருக்கிறது. குஜராத்தில் ஏற்பட்டுள்ளது போல் நிலைமை இங்கும் ஏற்படவேண்டும் என்று சிலர் எதிர்பார்த்தார்கள்.

இந்த உணவுப் போராட்டத்தில் எங்கேயாவது துப்பாக்கிச் சூடு நடக்காதா, குஜராத்தில் ஒரு புரட்சி நடக்கிறது. அதுமாதிரி இங்கே நடைபெறாதா, பீகாரில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறதே, அதுமாதிரி இங்கேயும் ஏற்பட வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அப்படி யெல்லாம் நிகழ்ச்சி இங்கு ஒன்றும் ஏற்படவில்லை. அதுமாதிரி இங்கு ஒன்றும் நடைபெறவில்லை. நடக்கவும் நடக்காது. காரணம், உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில், நிரந்தரமானது அல்ல. நிரந்தரமான ஒரு முடிவை நாம் ஏற்றுக்கொள்ள



1974 ஆகஸ்ட் 13] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

வில்லை. நிலைமைக்கு ஏற்ப செய்கிறோம் என்ற அடிப்படையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தினம் தினம் இந்த இலாகாவில் என்ன நடந்துகொண்டிருக்கிறது, எப்படி செயல்படுகிறார்கள் என்பதெல்லாம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். நிலைமைக்கேற்றவாறு உத்தரவை மாற்றுவார்கள். இப்பொழுது விலை ஏறி இருக்கிறது என்றால் ரூ. 3.50 அல்லது ரூ. 3 என்றால், தயவுசெய்து தமிழக மக்கள் இது நிரந்தரமான விலை என்பதனை மட்டும் நினைக்கவேண்டிய அவசியம் இல்லை. ரூ. 3½ என்பது ரூ. 3 ஆகும், ரூ. 2½ ஆகும், ரூ. 2 ஆகும். விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய அளவுக்கு அது வரும் என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய ஆளும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் மணிலாப் பயிரைப் பற்றிச் சொன்னார்கள். வாஸ்தவம் தான். நான் சொல்வதெல்லாம் சென்ற ஆண்டு மணிலாப்பயிர் ரூ. 330 விற்றது 80 கிலோ கொண்ட மூட்டை ஒன்று. இந்த ஆண்டு அது மணிலாப் பயிர்—கோடிப் பயிர் என்று சொல்வார்கள். ரூ. 225, 226 என்று தென் ஆற்காடு மாவட்ட மார்கட் கமிட்டியில் விற்றது. ஒரு விவசாயி டீசல் எண்ணெய் கிடைக்காமல், டிராக்டரை எடுத்துக் கொண்டு பெட்ரோல் பங்கில் காத்துக் கிடந்து எண்ணெய் வாங்கி வைத்து, எண்ணெயை வைத்து தண்ணீர் இறைத்து விவசாயம் செய்து, தொழிலாளிகளுக்கு உயர்ந்த கூலி கொடுத்து, உற்பத்தி பண்ணி, மின்சார வெட்டு காரணமாக இரவோடு இரவாக கரண்டு கிடைக்கும் பொழுது கரண்டு கொட்டகையில் இருந்து பாசனம் செய்து பயிர் செய்து கஷ்டப்பட்ட விவசாயிக்கு கட்டுபடியாகக் கூடிய விலை கொடுக்க வேண்டாமா? உணவு அமைச்சர் என்ன செய்தார்? ரூபாய் 8½ ஒரு கிலோ என்ற விலைக்கு மணிலா எண்ணெய் விற்றது. அதிலே உணவு அமைச்சர் தலையிட்டு, நம்முடைய மன்னை அவர்கள் தலையிட்டதன் காரணமாக ஒரு கிலோ ரூ. 8½ அல்லது ரூ. 9 என்று விற்றதை ரூ. 7.15-க்கு கொண்டு வந்து நிறுத்தினர். அப்படி நிறுத்தப்பட்டது என்றால் ஒரு கிலோவுக்கு ரூ. 2 விலை குறைந்தது என்றால் அது சாதனை அல்லவா? அப்படி சாதனை செய்து கொண்டிருக்கிற அமைச்சரை 'வெளியே போ, வெளியே போ' என்றால் என்ன பிரயோசனம்?

நீங்கள் வேறு யாராவது ஒருவரை மனதில் வைத்துக்கொண் டிருந்தால், அதைத் தனியாக வந்து சொல்லவேண்டும். முயற்சி செய்து பார்க்கிறோம். விலையைக் குறைக்கும் முயற்சி செய்து கொண்டிருக்கும் அமைச்சரை, திறம்பட நிர்வாகம் செய்து கொண்டிருப்பவரை, நாணயமாக நிர்வாகம் நடத்திக்கொண் டிருப்பவரை, வெளியே போ என்றால் எங்கே போவது? சட்ட மன்றம் முடிந்தபிறகு வீட்டிற்குப் போய்விட்டு மறுபடியும் இங்கே தான் வருவார்.

ரூபாய் 220 விலைக்கு மணிலாப் பயிர் விற்றால் விவசாயிக்கு அது கட்டுப்படியாகாது. முதல் அமைச்சர் அவர்களுக்குத் தந்தி கொடுத்தேன். கண்ட்ரோல் போட்டார்கள். விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள். ஒரு மூட்டை மணிலா ரூ. 280-க்குக் குறைவாக விற்றால், நிச்சயம் மணிலா பயிரிட முடியாது, மணிலா பயிரிடா விட்டால் எங்கேயிருந்து எண்ணெய் வரும், பிறகு மணிலாப் பயிரே கிடைக்காது. ஆகவே தயவுசெய்து கண்ட்ரோலை ரத்து செய்யுங்கள் என்றுகூட நான் சொல்ல விரும்பவில்லை. ரூபாய் 7-க்குக் குறையாமல் எண்ணெய் விற்கிற அளவுக்கு ஒரு பகுதியை அரசாங்கமே ப்ரொக்யூர் செய்யுங்கள், அரசாங்கமே கம்பல்சரி லெவி செய்யவேண்டும், சிவில் சப்ளை கார்ப்பரேஷனை 'ஸ்ட்ரெங்தன்' செய்து எண்ணெயை லெவி போட்டு ப்ரொக்யூர் செய்யுங்கள் ரூபாய் 6.90-க்கு ப்ரொக்யூர் செய்யுங்கள். ரீ-டெய்லர் ரூ. 7 அல்லது 7.15-க்கு விற்கின்ற அளவுக்கு ஒரு முறையை கையாளுங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறேன். அதன் மூலம் தம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய மணிலாப் பயிர் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை கிடைக்கும். இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

இங்கே உற்பத்தியாகக்கூடிய மணிலாவின் மொத்த அளவு 7½ லட்சம் டன். அதில் 3 லட்சம் டன் எண்ணெய் கிடைக்கிறது. இந்த 3 லட்சத்தில் ஒன்று அல்லது ஒன்றேகால் லட்சம் டன் எண்ணெய்தான் நம்முடைய மாநிலத்திற்குத் தேவைப்படுகிறது. மீதி இருக்கின்ற எண்ணெய் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட வில்லை என்றால் இங்குள்ள விவசாயிகளுக்குக் கிடைக்கவேண்டிய விலை கிடைக்காது; அதனால் பெருத்த பாதிப்பு ஏற்படும். முன்னூறு ரூபாய் விலை ஒரு மூட்டைக்குக் கிடைத்தால்தான் கட்டுப்படி யாகும். அப்படி இருக்கும்போது 225 ரூபாய், 230 ரூபாய்



கொடுத்தால் மீண்டும் மணிலாப் பயிர் செய்யமாட்டார்கள். ஆகையால் மத்திய அரசு செய்யக்கூடிய தவறுதல்களை நாம் செய்ய வேண்டியதில்லை.

தென்னாற்காடு மாவட்ட மார்க்கெட்டிங் பெடரேஷனில் நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். இந்த விலை குறைவினால் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு ஒரு நாளைக்கு 3 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. வெளிமாநிலங்களுக்கு எண்ணை, பருப்பு இவைகளை எடுத்துச்செல்லக்கூடாது என்று சொன்னதால் இந்த இழப்பு ஏற்படுகிறது. ஆந்திரப்பிரதேசத்தில் ஒரு மூட்டைக்கு 310 ரூபாய் விலை கிடைக்கிறது. இங்கே 230 ரூபாய் என்றால் என்ன அர்த்தம்? இதனால் தென்னாற்காடு மாவட்டத் திலுள்ள சிறு விவசாயிகள் ஒரு நாளைக்கு 3 லட்சம் ரூபாயை இழந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இன்று அல்லது நாளை அல்லது 10 நாட்கள் கழித்து கட்டுப்பாட்டை எடுக்கலாமா என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பரீட்சை செய்து பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. உடனடியாகக் கட்டுப்பாட்டை எடுத்துவிடலாம்.

அங்குள்ள சிறு விவசாயிகள் மணிலாவை மார்க்கெட்டிங் பெடரேஷனில் தான் விற்றாக வேண்டும். ஏனென்றால் அங்குள்ள மார்க்கெட்டிங் ஆர்கனைசேஷன் அப்படி இருக்கிறது. நான் ஒரு விவசாயி. விவசாயி என்று சொல்லிக் கொள்ளும் நண்பர் செழியன் அவர்களுக்கு இதையெல்லாம் எடுத்துச்சொல்வதற்கு நேரம் இல்லை. ஆனால் தான் ஒரு விவசாய பிரதிநிதி என்று மட்டும் சொல்லிக் கொள்வார்; இதைச் செய்யமாட்டார். அதற்குப் பதிலாக சேலத்தில் நடைபெற்ற கொலையைப் பற்றி ஏதோ கண்டுபிடித்து விட்ட மாதிரி, அங்கே இருக்கின்ற இன்ஸ்பெக்டர்கள் கொலை செய்தவர்களைக் கண்டுபிடிப்பதற்கு ஒன்றும் செய்யவில்லை, தான் தான் ஜேம்ஸ்பாண்ட் டிடெக்டிவ் மாதிரி கண்டுபிடித்துவிட்டது போல் சொல்லிக்கொண்டிருக்கிறார். (சிரிப்பு).

**திரு. கோவை செழியன்:** நான் சேலம் கொலை வழக்கைப்பற்றி சொன்னால் நண்பர் கிருஷ்ணமூர்த்திக்கு ஏன் இவ்வளவு கோபம் பொத்துக்கொண்டு வருகிறது என்று தெரியவில்லை. ஒருவேளை நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்களும் அதில் கலந்துகொண்டிருக்கி றார்களோ என்ற சந்தேகம் வருகிறது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** நீங்கள் என்ன சொன்னாலும் நான் கோபப்படமாட்டேன். காரணம் நீங்கள் என்னுடைய நண்பர். இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் விஷ ஊசி போட்டு ஏழு கொலைகளைச் செய்தவர்களைக் கூட கண்டுபிடித்திருக்கிறது. அப்படி இருக்கும்போது இதை மட்டும் சும்மா விட்டுவிடுவார்களா? ரோடிலே போகும்போது ஏதோ ஒரு லாரி வந்து அடித்துப் போட்டுவிட்டுப் போய்விடுகிறது; அது எந்த லாரி என்று கண்டுபிடிக்க முடியவில்லை; அது யாருடைய லாரி என்று கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் அரசாங்கம் அதற்கு உடந்தை என்று சொல்லிவிட முடியுமா? 6 கொலைகள் நடந்ததை பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, ஏழாவது கொலை நடக்கும்போதுதான் பிடித்தார்கள் என்று சொல்ல முடியுமா? 6 கொலைகள் மர்மமாக நடந்ததால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் அதன் காரணத்தை ஆராயாமல் இருக்கவில்லை. ஏழாவது கொலை நடக்கும்போது இடைவிடாத முயற்சியினால் கண்டுபிடித்துவிட்டார்கள். அதேமாதிரி இந்த வழக்கிலும் தேடிக்கொண்டிருக்கிறார்கள்; இன்னும் துப்பு கிடைக்கவில்லை. அதை வைத்துக் கொண்டு அமைச்சர்களைப் பழி வாங்கவேண்டும். இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசை பழி வாங்கவேண்டும் என்று நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். அது நடக்காது. குற்றம் செய்தது யார், குற்றவாளி யார் என்பதை தேடிக்கொண்டிருக்கிறார்கள். குற்றத்தை நீங்களே செய்துவிட்டுகூட எங்கள்மீது பழி சுமத்தலாம் அல்லவா? (சிரிப்பு) எங்கள்மீது குற்றஞ்சாட்டுவதற்காக நீங்கள் செய்திருக்கலாம் அல்லவா.

**திரு. கோவை செழியன் :** சேலத்திலே நடைபெற்ற கொலை வழக்கு சாதாரணமானதல்ல. ஒரு எம்.எல்.ஏ.வினுடைய அண்ணனும் அவருடைய மகனும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே இருக்கின்ற போலீஸ் நிர்வாகம் அகில இந்தியாவிலும் சிறந்தது என்ற பெயரை பெற்றிருக்கிறது. அப்படி சிறந்த போலீஸ் இங்கே இருக்கும்போது, இந்தத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சேலம் கொலை வழக்குப்பற்றி துப்பு கிடைக்கவில்லை என்று சொல்வது நம்ப முடியாததாக இருக்கிறது. ஒரு எம்.எல்.ஏ.வினுடைய அண்ணனும் அண்ணன் மகனும் அந்தக் கொலையில் செத்திருக்கிறார்கள். போலீஸ் துறையின் நாய்களும் அங்கே வந்திருக்கின்றன. பல இடங்களுக்குப் போயிருக்கிறார்கள்



நாய்களுடன். இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் அதில் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** கோர்ட்டிலே அந்த வழக்கு இருப்பதால் அதைப்பற்றி விவாதிப்பது நல்லதல்ல. கொலை நடைபெற்றது இரவு நேரம். அவருக்கு எதிரிகள் பலர் இருக்கிறார்கள். அந்த எதிரிகள் இந்தக் கொலையைச் செய்திருக்கலாம். ஆனால் அந்த எதிரிகளில் யார் செய்திருப்பார்கள் என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அந்த எதிரிகள் ஒரு வேளை செழியன் அவர்களுக்கு நண்பர்களாக இருக்கலாம். கொலை செய்தது யார் என்று கண்டுபிடித்த பின்னால்தான் முழு விபரமும் தெரியும். இறந்துபோன பழனியப்பன் அவர்கள் 1962-லிருந்தே எனக்குத் தெரிந்தவர்தான். அவருக்கு பல எதிரிகள் உண்டு. அவர்களில் யார் செய்திருப்பார்கள் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்காக இந்த அரசாங்கத்தைத் திசை திருப்ப வேண்டாம்; களங்கம் கற்பிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களும் மற்ற பலரும் அடிக்கடி என்னைப் பார்த்து, இந்த மந்திரி சபைக்கு விரோதமாக நான் பேசுகிறேன்; எனக்கு மந்திரி சபைமீது வெறுப்பு என்று சொல்கிறார்கள். நான் இந்த அமைச்சரவைமீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறேன்; அமைச்சர்கள் என்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர். என்னுடைய நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த மந்திரி சபை மீதும், முதலமைச்சர் மீதும் எவ்வளவு அபிமானம் வைத்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி அடிக்கடி என்னுடன் விவாதித்திருக்கிறார்கள். அதைப்பற்றி எல்லாம் பேசிக் கொண்டிருப்பதானால், நான் பல உண்மைகளைச் சொல்ல வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** நான் யாருக்கும் எப்போதும் பரிந்து பேசுபவன் அல்ல. யார் தவறு செய்தாலும் சுட்டிக் காட்டுவதில் நான் தயக்கம் காட்டுவதில்லை. அதைப்பற்றி எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அதனால் அமைச்சரவைக்கு

விரோதமாக நடக்கிறேன் என்று சொல்லிவிட முடியாது. ஏதோ வாசகத்திற்காகச் சொல்ல வேண்டுமென்று அப்படிச் சொல்கிறார்கள். உண்மை அதுவல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** செழியன் அவர்கள் நண்பர் கிருஷ்ணமூர்த்தி இந்த அரசாங்கத்திற்கு விரோதமாக பேசுகிறார் என்று சொன்னார்கள். அது சரியல்ல. அரசாங்கத்திற்கு விரோதமாகப் பேசியவர்கள் ஏற்கெனவே வெளியேற்றப் பட்டுவிட்டார்கள். அப்படி யாராவது இருந்தால் வெளியேற்றப் படுவார்கள். நண்பர் கிருஷ்ணமூர்த்தியைப் பொறுத்தவரையில் செழியன் அவர்கள் சொன்னது பொருந்தாது.

**திரு. கோவை செழியன்:** அது எனக்குத் தெரியும். பலர் வந்திருக்கிறார்கள்; இன்னும் பலர் வந்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** வீக்காக இருக்கிற ஆளைப்பார்த்து இழுத்துக்கொண்டிருக்கிறீர்கள். பலமானவர்கள் வரமாட்டார்கள். போனவர்களில் கூட பலர் திரும்பிவந்து கொண்டிருக்கிறார்கள். நீங்களும் திரும்பி வரக்கூடும்.

(Thiru Kovai Chezhiyan rose in his seat) Let us not waste our bullets on each other; let us keep it for future.

**திரு. கோவை செழியன்:** தலைவரவர்களே, என்னுடைய நண்பர் கிருஷ்ணமூர்த்தி பலர் திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ரொம்ப சந்தோஷம். நான் கூட திரும்பி வரக்கூடும் என்று சொன்னார்கள். அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் எங்களிடம் வந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய கட்சித் தலைவர்கள்தான் எங்கள் தலைவரிடம் இரவிலே தூது வருகிறார்கள். அதை நாங்களும் அறிவோம்; இந்த நாடும் நன்றாக அறியும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** இப்படியெல்லாம் சொல்ல ரொம்ப காலமாக முயற்சி செய்துகொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு மீன் கிடைக்காது. உங்களுடைய கொக்கியில் இருக்கக் கூடிய மீன்தான் விறுைதுமே தவிர, பெரிய மீன் எதுவும் கிடைக்காது. அந்த வேலை இனி பலிக்காது. தமிழ் நாட்டில் தற்போது நிலவிவரும் உணவுப்பொருள் விலையேற்றத்தை வைத்து



இந்த அமைச்சரவையை வெளியேற்றிவிடலாம் என்ற முயற்சியில் தோல்வி கண்டுவிட்டதால், திசை திருப்பிவிடும் முயற்சியில் இப்போது பல குற்றச்சாட்டுக்களைச் சொல்கிறார்கள். ஏழை எளிய மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு, விவசாயிகளுக்குப் பாதுகாப் பாக இருப்பது இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசு தான். இந்த அரசு தொடர்ந்து நீடித்திருக்கும். உங்களுடைய நினைப்பு நிறைவேறாது என்று தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**திரு. கோவை செழியன்:** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான் ஒரு கேள்வி போடுகிற நேரத்தில் யார் உங்கள் தலைவரைச் சந்தித்தார்கள் என்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் யார் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆசைப் பட்டால் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இரண்டு கட்சிகளுக்கும் ஏதோ பெரிய ரகசியம் இருப்பதுபோல் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நண்பர் செழியன் அவர்கள் சொல்லவேண்டுமென்று விரும்புகிறார் என்று கருது கிறேன். அவர்கள் ஆசையை நான் கெடுக்கவில்லை; தாராளமாகச் சொல்லலாம்.

**திரு. கோவை செழியன்:** மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் எம்.ஜி.ஆர். அவர்களை விரும்பி அழைத்து, சந்தித்துப் பேசினார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எந்த இடத்தில்?

**திரு. கோவை செழியன்:** உங்களுக்கும் எங்களுக்கும் தெரிந்த நெருங்கிய நண்பர் ஒருவர் வீட்டில்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நீங்கள் யார்மீது ஊழல் புகார் கொடுத்தீர்களோ, அவர்களை எல்லாம் இப்போது சேர்த்துக் கொள்கிறீர்கள். யார் யார் மீது ஊழல் புகார், எந்தெந்த காண்ட்ராக்டர்கள் சம்பந்தப்பட்டவர்கள் என்று சொன்னீர்களோ அவர்கள் வீட்டை சமரசம் பேசத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள்.

அப்படிப்பட்ட ஒருவருடைய வீட்டில்தான் உங்களுடைய தலைவரும் எங்களுடைய அமைச்சரும் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள்.

**திரு. கோவை செழியன் :** நாங்கள் சந்திக்கவில்லை. அமைச்சரவர்கள் அந்த இடத்தில் சந்தித்துப் பேசலாம் என்று சொல்லி, வந்தார்கள். எங்கள் தலைவர் என்ன சொல்கிறார் கேட்போம் என்று போனார்கள். போகும்போது எங்களிடம் சொல்லிவிட்டுத்தான் போனார்கள். சந்திக்கின்ற இடம் எப்பேர்ப் பட்ட இடம் என்பதல்ல முக்கியம். யார் யார் பேசினார்கள், என்ன பேசினார்கள் என்பதுதான் முக்கியம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் திரும்பவும் கூறுகிறேன். ஜனாதிபதியிடத்திலே ஊழல் புகார் கொடுத்தீர்கள். யாரைச் சம்பந்தப்படுத்தி ஊழல் புகார் கொடுத்தீர்களோ அவர் உங்களுடைய தலைவருக்கு மிக நெருங்கிய—எல்லா வகையிலும்—படம் எடுப்பதில் இருந்து பட விநியோகம் செய்வது வரையில்—வேண்டியவர். அவருடைய வீட்டில்தான் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

(முற்பகல் 12-00)

**திரு. கோவை செழியன் :** குற்றச்சாட்டு சொன்னதை இன்றைக்கும் நாங்கள் மறுக்கவில்லை. உங்கள் பேரிலும், அமைச்சர்கள் பேரிலும் கூடக் குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறோம். அதற்காக உங்களோடு பேசாமல் இருக்க முடியுமா? உங்கள் வீட்டு விசேஷத்திற்கு வராமல் இருக்க முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நீங்கள் வரவேண்டுமென்று நான் விரும்பவே இல்லை.

**திரு. பெ. சீனிவாசன் :** அமைச்சர் மாதவன் அவர்கள் எங்கள் தலைவரைச் சந்தித்தது—முதலமைச்சருக்குச் சந்திப்பதற்கு முன்னாலேயே தெரியுமா? அல்லது பிறகுதான் தெரியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதை நான் நிருபர்களிடத்தில் அப்போதே சொல்லியிருக்கிறேன். இன்றைய விவாதத்திற்குத் தேவையில்லாத அதை திரு. செழியன் அவர்கள் கிளப்பியிருக்கிறார்கள். உங்களுக்கு எல்லாம் தெரியாமல் தான்





உங்கள் தலைவர் அமைச்சர் மாதவனைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். எங்கே ஒன்று சேர்ந்துவிடுவார்களோ, நாம் மந்திரியாக வருகிற வாய்ப்பு போய்விடுமோ என்ற பயத்தில்தான் எப்படியாவது ஒன்றுசேராமல் ஆக்கிவிடலாமா என்று பார்க்கிறீர்கள். அவர்கள் தற்செயலாகத்தான் சந்தித்தார்கள். அவ்வளவுதான்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார் பாயின்ட் ஆப் ஆர்டர். அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. அதைவிட்டு விட்டு குடும்ப விவகாரத்தைப்போல சபையில் பேசிக்கொண்டிருப்பது முறை தானா என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** இது தேவையில்லாத விஷயமா? ஒரு அமைச்சர் எதிர்க் கட்சியின் தலைவரைச் சந்தித்திருக்கிறார். அது குடும்ப விவகாரமா? இது யாரோடும் சம்பந்தம் இல்லாத ஒன்றா? மத்திய அரசாங்கத்திலே இது கிடையாதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நண்பர் சீனிவாசன் திரு. சுரேந்திரன் அவர்களிடம் கோபித்துக்கொள்ள வேண்டாம். முன்பெல்லாம் நாம் ஒரே குடும்பம் என்று சொல்லிக்கொண் டிருந்தோமே அந்த ஞாபகத்தில் அவர்கள் சொல்லிவிட்டார். அவ்வளவுதான்.

(பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

* **திரு. ஓ. என். சுந்தரம் :** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அமைச்சரவையின் மீது கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையின்மைத் தீர்மானத்தின்மீது என் கட்சியின் சார்பாக என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சற்று முன்னதாக மெம்பர்கள் பரிமாறிக்கொண்ட கருத்தின் படி குடும்ப விவகாரமோ, இல்லையோ—அவர்கள் இன்றைக்கு ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைத்துக்கொண்டுதான் பேசு கின்றார்கள் என்று கருதுகிறேன். நமது சட்டமன்றம் 1971 இல் பதவி ஏற்றுக்கொண்ட பிறகு இந்த மூன்று ஆண்டுக் காலத்திலே ஒவ்வொரு முறையும் இந்த அரசின் மீது பல்வேறு காரணங்களுக் காக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அப்படிப் பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் ஆளுங் கட்சியின் வலிவு மிகுதியால் தோற்கடிக்கப்பட்டு வந்திருக்கிறது உண்மை

[திரு. ஓ. என். சுந்தரம்] [1974 ஆகஸ்ட் 13

என்றாலும் கூட இன்றைக்கு இந்தச் சபையில் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒரு அசாதாரண சூழ்நிலையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்கு உணர்த்த ஆசைப்படுகிறேன்.

1967-லே திராவிட முன்னேற்றக் கழகமானது ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால் திரு. அண்ணாதுரை அவர்கள் தேர்தல் காலங்களில் ரூபாய்க்கு 3 படி லட்சியம் ரூபாய்க்கு ஒரு படி இல்லையென்றால் முச்சந்தியில் சவுக்கால் அடியுங்கள் என்று சொல்லி அரசியலில் அரிசியை பெரிய விவகாரமாக வைத்தே அரியணையில் ஏறினார்கள். இதை யாரும் மறுப்பதற்கில்லை.

அதன் பின்னால் முதலில் 1967 மே மாதம் 1 ஆம் தேதி அன்றைக்கு கோவை சிதம்பரம் பூங்காவில் தொழிலாளர் விழாவில் பேசுகின்றபோது எல்லா நகரங்களுக்கும் ஒரு படி அரிசி போடப்படும் என்ற லட்சியத்தை அறிவித்தார்கள். அதற்குப் பின்னால் சென்னை நகரில் ஏ.வி.எம். ஸ்டுடியோவில் நடைபெற்ற கூட்டத்தில் சென்னைக்கும், கோவைக்கும் மட்டுமே படியரிசித்திட்டம் என்பதைத் திட்டவட்டமாக அறிவித்தார்கள். தொழிலாளர்கள் அதிகமாக வாழக்கூடிய இந்த இரண்டு நகரங்களில் மட்டுமே அன்றைக்கு படியரிசித் திட்டம் செயல்பட்டது என்பது உண்மை.

ஆனால் 1971 டிசம்பர் மாதத்தில் பாகிஸ்தான்—பங்களாதேஷ் யுத்தத்தின் காரணமாக உணவு வழங்குவதில் இருந்த சலுகை நிறுத்தப்பட வேண்டும் என்ற அறிவிப்பின் பேரில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்தத் திட்டத்தைத் கைநழுவ விட்டு விட்டார்கள்.

உங்கள் அறிக்கையின்படி கடந்த இரண்டு மூன்று வருடங்களில் கணிசமான அளவுக்கு உணவு தானியம் உற்பத்தியாகியிருக்கிறது, 73 லட்சம் டன் உற்பத்தியாகியிருக்கிறது, 59 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகியிருக்கிறது என்றெல்லாம் சொன்னீர்கள். மாநில சுய தேவைக்கு அதிகமாகவே நெல் உற்பத்தியாகியிருப்பதாகப் பேசப்பட்டது. அதுமட்டுமல்ல. சட்டமன்றத்தில் பேசுகின்றபோது சொன்னார்கள்—கேரளாவானாலும், குஜராத்தானாலும், மேற்கு வங்கமானாலும், மைசூரானாலும்—நெருக்கடி



1974 ஆகஸ்ட் 13] [திரு. ஓ. என். சுந்தரம்]

நிலைமை ஏற்பட்டால் கேளுங்கள் கொடுப்போம் என்று பதினைந் தாயிரம், பத்தாயிரம், ஐந்தாயிரம் என்பதாக, 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட டன் அரிசியை—நம்முடைய மாநிலத்தின் தேவை என்ன என்பதை சரியாக கணக்கிட்டு பார்க்காமலேயே வாரி வாரி வழங்கினார்கள். நம்முடைய கொள்முதல் விலை 125 என்று சொன்னால்—230, 260 என்று மார்க்கெட் விலையை வைத்து வெளி மாநிலங்களுக்கு விற்றுவிட்டவர்கள் என்கிற குற்றச்சாட்டைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குச் சொல்கிறார்கள்—அரிசியைப் பொறுத்தவரையில் செயற்கையாகத்தான் பற்றாக்குறை ஏற்படுத்தப்பட்டது. என்கிறார்கள். யார் ஏற்படுத்தினார்கள். மழை பொய்த்துவிட்டது. மின்சாரப் பற்றாக்குறை—உர விலைகள் ஏறிவிட்டன—மத்திய அரசாங்கத்தின் தவறான கொள்கைதான் எல்லாவற்றுக்கும் காரணம் என்று சொல்கிறீர்கள். கொள்முதல் செய்த அரிசியை கண்டபடி விநியோகம் செய்யாதிருந்திருந்தால் இன்றைக்கு நம் மாநிலத்தில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்குமா? படி அரிசி 5 ரூபாயில் இருந்து 8 ரூபாய் வரை விற்கிறது. மக்கள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். உங்கள் கையில் இருக்கும் ஸ்டாக்கை வெளியிட்டு அரிசிக்கும் இந்த நெருக்கடி வராமல் தடுத்திருக்கலாம் அல்லவா? அரிசி கட்டுப்பாட்டை ஜூலை மாதம் 10 ஆம் தேதி எடுக்கிறீர்கள். தஞ்சை மாவட்டத்தில் இருந்து மட்டும் எத்தனை லாரிகள் வெளியேறின என்ற கணக்கை நான் சொல்லவில்லை. இரண்டு நாட்களுக்குள் 3 விதமான உத்தரவுகள் —உங்கள் தூக்ளக் ஆட்சியில்.

இன்றைக்கு செயற்கையாக அரிசியைப் பதுக்கி வைத்துக் கொண்டு சங்கடமான நிலைமையை உண்டாக்கியிருக்கிறார்கள் என்றால் அப்படிச் செய்தது யார்? ஜூலை மாதம் 10 ஆம் தேதிக்கும் இந்த ஆகஸ்டு மாதத்திற்கும் இடையில் அரிசி விலை எப்படி ஏறியிருக்கிறது? இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நண்பர் செழியன் சொன்னாரோ என்னமோ—நம்மது முதல்வர் சொன்னார். பழைய காங்கிரஸ்காரர்கள்தான் இந்த நெருக்கடியை உண்டாக்கியிருக்கிறார்கள் என்று. கள்ளக்கடத்தல் செய்கிறவர்கள் எந்தக் கட்சியில் இல்லை. அ.தி.மு.க. இல் இல்லையா? பதுக்கல்காரர்களை, கள்ளக் கடத்தல்காரர்களைப் பிடித்து அவர்களுக்குரிய தண்டனையை அளித்து, அரிசியை ஏன் வெளியே கொண்டுவரக்

கூடாது? நகரத்தைப் பொறுத்தவரையில் ஒரு சிலரைப் பிடித்து —ஒரு சில மூட்டைகளை மாதத்தில் ஒரு நாள் 3 ரூபாய்க்குப் போட்டோம், நான்கு ரூபாய்க்குப் போட்டோம் என்பதனால் பயன் இல்லை. இது உங்களுக்கே பெருத்த ஏமாற்றத்தை அளிக்கும் என்பதை மிகத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நீங்கள் கிராமங்களைப் போய்ப் பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு அரிசி கிடைக்காது பசியாலும், பட்டினியாலும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை. (மணி அடிக்கப் பட்டது). நீங்கள் இங்கே பேசுகின்ற பொழுதும், முதல்வர் அவர்களும், செழியன் அவர்கள் பாசத்தின் காரணமாக பேசு கிறார்கள் என்று சொன்னீர்கள்—செழியன் அவர்கள் 1½ மணி நேரம் பேசினார்கள். எங்களுடைய கட்சி இரண்டாவது இடத் திற்கு வந்துவிட்ட காரணத்தால் 1/2 மணி நேரமாவது எனக்கு ஒதுக்குங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 15 நிமிடம் பேசினீர்கள். இன்னும் 5 நிமிடம் பேசலாம்.

**திரு. ஓ. என். சுந்தரம் :** நான் கேட்பது, அவர்களுக்குக் கொடுத்த நேரத்தில் 3-ல் ஒரு பங்கு நேரம்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** செழியன் அவர்கள் 50 நிமிடம் தான் பேசி இருக்கிறார்.

**திரு. ஓ. என். சுந்தரம் :** ஆக, இப்படி உங்களது கட்சியில் குழப்பம் ஏற்பட்டு, கொள்கையில் மாறிமாறி ஒரு முறை யில்லாமல் செய்ததின் காரணமாக, தஞ்சையிலிருந்து வெளி யேற்றப்பட்ட பல்லாயிரக்கணக்கான டன்களால் இன்றைக்கு அகோரங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. பலர், அவற்றை வாங்கி பல்லாயிரக்கணக்கான ரூபாயைச் சம்பாதித்தது மட்டுமல்ல, இப்படி இந்த அரசுக்குப் பல அகோரமான நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படி பெருவாரியாகத் தேக்கி வைத்திருப்பவர்கள்மீது, பதுக்கி வைத்திருப்பவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுத்திருக்கக் கூடாது என்று நான் கேட்க ஆசைப் படுகிறேன். இன்றைக்குச் சிறு வியாபாரிகள் பாதிக்கப்படு கிறார்கள். நெல் மூட்டைகளை ஸீஸ் பண்ணுகிறோம் என்று சொல்லி பெரிய பெரிய பதுக்கல் பேர்வழிகளை விட்டு விட்டு, சிறு





வியாபாரிகளைப் பெட்டிக் கடையிலே வைத்திருக்கிறவனைப் போய் கண்டு பிடித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாது. பதுக்கலை வெளியே கொண்டு வரவேண்டுமென்று சொன்னால், அப்படி பதுக்கப்பட்டிருக்கிற அரிசி அனைத்தையும். .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, நம்முடைய கனம் உறுப்பினர் அவர்கள் சிறு பதுக்கல்காரர்களைத் தான் பிடிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இன்னும் பெரிய வர்கள் பதுக்கி வைத்திருப்பதாக அவர்கள் தெரிந்து சொல் கிறார்கள். தயவு செய்து, அப்படிப்பட்டவர்களது பெயர்களை இரகசியமாக என்னிடம் சொன்னால், நான் நடவடிக்கை எடுக் கிறேன்.

**திரு. ஓ. என். சுந்தரம் :** எனக்குத் தெரியும் என்று நான் சொல்லவில்லை. வெளி மாநிலத்திற்குக் கடத்தப்பட்டது என்று சொன்னபோது, சரியான பாதுகாப்பு கொடுத்திருக்கிறோம், அதிகாரிகள் வேலை செய்கிறார்கள், கடத்தல் போகவில்லை, என்று சொல்கிறீர்கள். அப்படியென்றால், தஞ்சை மாவட்டத்தில் மற்ற மாவட்டங்களிலிருந்த அரிசி எங்கே போயிருக்க வேண்டும்? அது மொத்தமாக இங்கேயே இருக்கவேண்டும் அல்லவா? எங்கேயோ பதுக்கி வைக்கப்பட்டிருக்க வேண்டுமல்லவா? . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நீங்கள், நாங்கள் சொன்னதாகக் கற்பனை செய்துகொண்டு அந்த அடிப்படையிலே பேசுவது எப்பொழுதும் மிகவும் சுலபம். கடத்தலே நடைபெற வில்லையென்று அரசாங்கம் சொல்லவில்லை. கடத்தல் நடை பெறுகிற காரணத்தால்தான் காவல்துறை வலுப்படுத்தப்பட்டு, எல்லையோரப் பகுதியில் அரசு முனைந்து கடமை ஆற்றிக் கொண்டிருக்கிறது; பதுக்கலும் இருக்கிறது. பதுக்கலில், சிறு பதுக்கல்காரர்களை மாத்திரம் பிடிக்கிறோம் என்று சொல்வது முறையல்ல. கடந்த சில தினங்களுக்கு முன்னால், ஆயிரக்கணக் கான மூட்டைகள் நெல்லும் உரமும் வைத்திருந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பெரிய பதுக்கல்காரரைப் பிடித்ததை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார் என்று நினைக் கிறேன்.

[1974 ஆகஸ்ட் 13

திரு. ஓ. என். சுந்தரம் : பதுக்குகிறவர் எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் பிடிக்கவேண்டும், அவர்களைத் தண்டிக்க வேண்டும், எங்கள் கட்சிக்காரராக இருந்தாலும் எந்தத் தண்டனையைக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று எங்கள் கட்சியின் சார்பாகச் சொல்லிவிட்டோம். வெளி மாநிலங் களுக்குச் செல்லவில்லையென்றால், இங்கே பதுக்கி வைத்திருப்பவர் களைப் பிடிக்க வேண்டுமென்று. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாங்கள் இரண்டையும் குழப்புவது நல்லதல்ல. கூடுதல் அரிசி போகவே இல்லையென்று சொல்லவில்லை. கூடுதல் அரிசி போகிறது. எல்லா அரிசியும் போய்விட்டது என்று சொல்லக் கூடாது.

திரு. ஓ. என். சுந்தரம் : நானும் அதைத்தான் கேட்கிறேன். கூடுதலாக இருப்பதாகச் சொல்வது போய்விட்டதா? அல்லது பெரும் பகுதி போய்விட்டதா? இல்லை—பெரும்பகுதி போக வில்லையென்றால், இங்கே முடங்கிவைக்கப்பட்டிருக்கிறதா, பெரும் பகுதி பதுக்கப்பட்டதா என்றும் தெரியவில்லை. எப்படி பற்றாக் குறை வந்தது? எங்கு அதிகமாகப் பதுக்கப்பட்டு பற்றாக் குறை வந்து விட்டது என்று சொன்னால் சௌகரியமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தஞ்சையிலே யிருந்து பல மாவட்டங்களுக்குச் சென்றிருக்கிற அரிசியை அன்றாடத் தேவைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். கடத்தலை 90 சதவிகிதம் நிறுத்தியிருக்கிறோம். எங்கெங்கு பிடிக்கிறார்கள் என்ற விவரத்தைப் பத்திரிகையிலே கொடுத்திருக்கிறோம். ஆகவே, இன்றைக்கு 5 சதவிகிதம் கூடக் கடத்தல் செய்யப்படவில்லை யென்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஓ. என். சுந்தரம் : கடத்தல் நிறுத்தப்பட்டு, 90 சத விகிதம் இங்கேயே இருப்பதாக அமைச்சரவர்கள் சொல்வதி லிருந்து நான் புரிந்து கொள்கிறேன். அதைப் பிடிக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏதோ ஒரு நாளைக்கு மக்களுக்கு விநியோகிப்பதற்குப் பதிலாக, வியாபாரிகளுக்கு ரூ. 50 காம்பன் சேஷன் போட்டு ஒரு நாளைக்கு நாடகம் போடுவதைப்போல், மக்களுக்கு ரூ. 4-க்குப் போடுவது நிரந்தரமாக இந்தப் பிரச்னையைத் தீர்க்காது என்பதனை உங்களுக்கு வலியுறுத்திச் சுட்டிககாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1974 ஆகஸ்ட் 13] [திரு. ஓ. என். சுந்தரம்]

நீங்கள் ஒன்றைச் செய்யவேண்டும். இன்றைக்குக் குறுவை வருகிற வரையிலும் அரிசிப் பிரச்னை தீராது என்று திரு.. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அவர் பெரிய விவசாயி, நான் வியாபாரி, வியாபாரிகள் அவர்கள் கையில் கிடைத்தால் லாபம் செய்ய நினைப்பார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். அரசாங்கக் கோடவுனில் அரிசி இருக்கிறது. கிலோவுக்கு ரூ. 1¼ அசலாகிறது அந்த அரிசிக்கு அதனை ரூ. 1½-க்கு விற்றால் வியாபாரிகள் மீறிப் போகமுடியாது. அப்படிப்பட்ட திட்டங்களை என் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். வியாபாரி பதுக்கி வைத்திருந்தாலும், கடத்தி வைத்திருந்தாலும் சர்க்கார் படி ரூ. 2¼-க்கு விற்கிறது என்று சொன்னால், அந்த அரிசி மூட்டைகளை நிச்சயமாக வெளிக்கொண்டு வருவான், புதிய மகசூல் வரும்போது அவன் தேக்கி வைக்கமாட்டான். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அப்படிப்பட்ட கொள்கையைக் கடைப்பிடிப்பாரா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு தவறு மேல் தவறு செய்து, தஞ்சை மாவட்டத்திலே குழப்பங்களை ஏற்படுத்தி உத்தரவுகளைப் போட்டு, ரத்து செய்த, எண்ணெய் வியாபாரத்திலே சொன்னால், ரூ. 7-15-க்கு யுள்ளது. கிடைக்கிறது என்று திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன் னார்கள். மெத்த சரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் உணவு அமைச்சருக்கும் நான் பதிவுத் தபாலிலே விவரமாக ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். அதனுடைய அடிப்படையிலே நீங்கள் எடுத்த நடவடிக்கைக்கு என்னுடைய பாராட்டுதலை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், நீங்கள் எடுத்து லெவி கட்டாயப்படுத்தியதனாலோ, அல்லது வலியக் கொண்டு வந்ததனாலோ இன்றைக்குத் தமிழகத்திலே 1½ லட்சம் மூட்டைகளை, ஏறத்தாழ 30 கோடி ரூபாய்க்கான சரக்குகளை வெளியாக்கி பணம் கொடுத்து அரசாங்கம் வாங்கியிருக்கிறது. சாதாரணமாக, இரண்டுமூன்று மாதத்திலே அதை அரைத்து, எண்ணெய் பிழிந்து, என்ன என்ன காரியம் செய்ய வேண்டுமோ அதையதைச் செய்ய வில்லையென்று சொன்னால் ரூ. 30 கோடி அளவுக்கு அரசாங்கத்

[திரு. ஓ. என். சுந்தரம்] [1974 ஆகஸ்ட் 13

திற்குப் பெரிய நஷ்டம் வருமா, இல்லையா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இதனை எடுத்து, இங்கே கொஞ்சம், அங்கே கொஞ்சம் கடலைப் பருப்பை அரைத்து, ரெஃபைன் செய்து விட்டால் சரியான முறையல்ல. ஆகவே, லெவியாக எடுத்த 1½ இலட்சம் டன் மூட்டைகளை ரெஃபைன் செய்தால், ஆயில் செய்தால்—ரூ. 130 ஒரு குவிண்டாலுக்கு ரெஃபைன் செய்ய என்று சொல்கிறார்கள்—இன்றைக்கு மார்க்கெட்டில் ரெஃபைன்ட் ஆயில் குவிண்டால் ரூ. 900-க்கு விற்கிறது. அதையும் செய்யவில்லை. புத்திசாலித்தனமாக எடுக்கவும் இல்லை. இதனால் வியாபாரிகளுககும் தொல்லை. அரசாங்கத்திற்கும் தொல்லை, பொதுமக்களுக்கும் தொல்லை. இப்படி தொல்லைக்கு மேல் தொல்லை வந்துக்கொண்டிருப்பதை நான் மிகப் பரிதாபத்தோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

25 சதவிகிதம் லெவி போக, பகிரங்க மார்க்கெட்டிலேயுள்ள 75 சதவிகிதத்தை முடக்கி வைத்துவிட்டார்கள். வியாபாரிகள் முதலீடு போட்டு பருப்பை வைத்திருக்கிறான் என்று சொன்னால், பரிசீலனை செய்து உடனடியாக உணவுக் கொள்கையைத் திருத்திக் கொள்பவர்கள், ஃபிளெக்சிபில் பாலிசியை வைத்திருப்பவர்கள் 75 சதவிகிதம் கடலைப் பருப்பை வெளியே எடுக்க முயற்சி செய்ய வில்லை. இங்கே சொன்னார்கள், அப்படிப்பட்ட குற்றச்சாட்டை நான் சொல்லவிரும்பவில்லை. அதிலே ரூபாய் வாங்கினார்கள், இதிலே ரூ. 5 இலட்சம், அதிலே ரூ. 10 இலட்சம் என்று சொல்லா விட்டாலும்கூட, துரிதமாக நீங்கள் காரியங்களைச் செய்யாததைப் பார்க்கும்போது மக்களிடத்திலே அப்படிப்பட்ட எண்ணம் வருவதற்குச் சாத்தியம் உண்டு என்பதை நான் எச்சரிக்கையாக சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த நிலையிலே நான் உங்களிடம் சொல்கிறபோது, மற்றவர்கள் சொல்லியதைப்போல் இப்போது உள்ள அரசு இந்த நிலையில் ராஜிநாமா செய்யவேண்டுமென்று சொல்லவில்லை, இந்த நிலைமை சீர்திருந்தவேண்டும் என்று சொல்வது மட்டுமல்ல, மக்களுடைய கஷ்டங்களை மனக்குமுறல்களை அவர்களுடைய பசிக் கஷ்டங்களை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டுமென்று சொன்னால், நகரசபைத் தேர்தல்களைப் பலமுறைகள் ஒத்திவைத்துவிட்டீர்கள், பரவா யில்லை, அடுத்த மாதத்திலே 100 நகர சபைகளுக்கான தேர்தல்



1974 ஆகஸ்ட் 13] [திரு. ஓ. என். சுந்தரம்]

களை நடத்துங்கள், அப்படி நடத்துவீர்களானால்தான் மக்களுடைய முடிவு உங்களுக்குத் தெரியும், அந்த முடிவின் பெயரால் மக்கள் உங்களுக்கு ஆதரவு கொடுத்தால் நீங்கள் இன்னும் ஓர் ஆண்டுக்காலம் நீடிக்கலாம், ஆனால் மக்களுடைய ஆதரவு உங்களுக்கு இல்லையென்று சொல்லிவிட்டால் உடனடியாக மந்திரிசபையைக் கலைத்துவிடுங்கள் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படி ஏதாவது காங்கிரஸ் ஆட்சியில் முன்மாதிரி இருக்கிறதா?

**திரு. ஓ. என். சுந்தரம்:** நாங்கள் செய்யவில்லையென்றால் பரவா யில்லை, நீங்கள் செய்யக்கூடாதா? நீங்கள் எத்தனையோ காரியங் களில் முன்மாதிரியாக இருக்கிறது தமிழ் நாடு அரசு என்று தினம் தினம் சொல்லிக்கொள்கிறீர்களே, இது பெரிய காரியமல்ல, ஏன் தயக்கம் காட்டவேண்டும்? மதுவிலக்குக் கொள்கையை ஒத்திவைக்கிறோம் என்று சொன்னீர்கள், அதற்குக் காரணம் என்ன சொன்னீர்கள் என்றால் பல மாநிலங்களிலிருந்து மது பானங்கள் வருகின்றன என்ற காரணத்தைச் சொன்னீர்கள். சட்டசபையிலே மதுவிலக்குக் கொள்கையிலே நீங்கள் ஸ்திரமாக இருக்கவேண்டுமென்று நாங்கள் சொன்னோம், நீங்கள் கேட்க வில்லை, இந்த இரண்டு ஆண்டுக்காலத்திலே பல லட்சக்கணக்கான குடியர்களைத் தமிழகத்திலே உற்பத்தி செய்துவிட்டீர்கள். நாங்கள் அன்றைக்குச் சட்டசபையிலே பேசியது மட்டுமல்ல, 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பல லட்சக்கணக்கானவர்கள் 126 நகரங்களிலே ஆர்ப்பாட்டங்கள் செய்து எங்கள் கோரிக்கையை வைத்தோம். அது மட்டுமல்ல. அக்டோபர் மாதத்தில் ஒரு லட்சம் என்று பதிவு செய்து, 50 ஆயிரம் பேர்கள் வரையில் மதுவிலக்குக் கொள்கையை நீடிக்க வேண்டுமென்று சிறைவாசம் அனுபவித் தோம். இவ்வளவும் நடந்ததற்குப் பிறகுதான் செப்டம்பர் முதல் தேதி முதல் மதுவிலக்குக் கொள்கையை அமலாக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதை நாங்கள் வரவேற் கிறோம்.

ஆனால், அதேபோன்று உணவுக்காக போராட்டம், ஆர்ப் பாட்டம் நடத்தவேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா? 1967 ஆம் ஆண்டுக்கு முன்னாலே காங்கிரஸ் ஆட்சிகளுக்கு முன்னாலே நீங்கள் உண்ணாவிரதம் இருந்தீர்கள், விலைவாசிப்

[திரு. ஒ. என். சுந்தரம்] [1974 ஆகஸ்ட் 13

போராட்டம் நடத்தினீர்கள், அப்படிச் செய்ததால் நாங்கள் செய்யவேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை, உணவு விஷயத்திலே இன்னும் 15, 20 நாட்களுக்குள் உங்களுடைய கொள்கை திருத்திக் கொண்டு சிற்றூர்களுக்கும், பேரூர்களுக்கும் அங்கே உள்ள மக்களுக்கு எல்லாம் அரிசி குறைந்த விலையிலே நீங்கள் கொடுக்கத் தவறினால் அறப்போராட்டம் மதுவிலக்குக் கொள்கைக்காகச் செய்ததைப் போன்று அப்படிப்பட்ட போராட்டத்தைச் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொண்டு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்த தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் மேல் ஆளுங் காங்கிரஸ் கட்சித் தலைவரால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் வன்மையாகக் கண்டித்து சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

இந்த ஆட்சியின் மேல் எதிர்க்கட்சியிலே இருக்கிற நம்முடைய உறுப்பினர்கள் ஆண்டுக்காண்டு நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தைக் கொண்டுவருவதும், அதை ஒரு சம்பிரதாயமாக வைத்துக்கொண்டிருப்பதும் வாடிக்கையாக இருக்கிறது. ஒருவேளை சட்ட மன்ற நடைமுறை விதிகளில் ஆறு மாதத்திற்கு ஒரு முறைதான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற விதி இல்லாவிட்டால் மாதம் ஒரு முறைகூட இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள்போல் தெரிகிறது, உண்மையிலேயே அரசியல் சிந்தனைத் தெளிவு பெற்றவர்கள் இதனை எண்ணிப் பார்க்கவேண்டும். தமிழகச் சட்ட மன்றத்திலே ஆளுகின்ற கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசின் மேல் டாக்டர் கலைஞரின் மேல் நம்பிக்கையில்லை என்று இவர்கள் சொல்கிற அதேநேரத்திலே டெல்லியிலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருப்பதும், இந்தியா முழுவதும் பட்டினிக் கோலமும், பஞ்சமும் தலைவிரித்தாடுகின்ற கோலமும் இருக்கின்றது, அதே ஆளுங்கட்சி தான் இங்கே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறது, அங்கேயுள்ள பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் ராஜிநாமா



1974 ஆகஸ்ட் 13] [திரு. கா. வேழவேந்தன்]

செய்யவேண்டுமென்ற போர்க்குரல் டெல்லியிலே எழுந்து கொண்டிருக்கிறது. ஒரு மாநிலத்து மக்கள் எப்படி பட்டினியோடு இருக்கிறார்கள் என்றும், ஒரு மாநிலத்திலே மக்கள் தழைகளைக் கூடச் சாப்பிடுகிறார்கள் என்றும் பட்டினிச் சாவுகள் எவ்வளவு என்பதைப்பற்றியும் புள்ளிவிவரங்கள் பாராளுமன்றத்திலே அங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர் மானத்திற்குக் காரணங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

குஜராத் மாநிலத்தில் ஒரு அரசே கவிழ்ந்ததற்குக் காரணம் என்ன என்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்டவும், டெல்லியிலே நடைபெறுகிற காட்சியைப் பார்க்கிறோம். இங்கே ஆளும் காங்கிரஸ் கட்சி இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது உள்ளபடியே வேடிக்கையாக மட்டு மல்ல, ஒரு அரசியல் கோமாளித்தனமான சூழ்நிலை உருவாகியிருக் கிறது என்பதையும் நம்மால் உணர முடிகிறது.

இன்றைக்கு டெல்லி அரசாங்கம்தான் இதற்கு எல்லாம் காரணம் என்று பொருளாதார நிபுணர்கள் ஒத்துக்கொள் கிறார்கள். திடீரென்று அரிசி விலை உயர்வதற்கு என்ன காரணம் என்பதை எனக்கு முன்னாலே பேசிய நண்பர் திரு. திருஞான மூர்த்தி அவர்கள் தெளிவாகக் கோடிட்டுக் காட்டினார்கள். மார்ச் மாதத்திலே நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியதையும் கேட்காமல் மத்திய அரசாங்கம் கம்பு, கேழ் வரகு, சோளம் போன்றவற்றை மற்ற மாநிலங்களுக்குக் கொண்டு செல்லலாம் என்று சொல்லிவிட்டது. அதற்குப் பிறகு வியா பாரிகள் வெகு வேகமாகக் கொண்டுபோன காட்சி அதன் காரண மாக, இங்கே கம்பு, கேழ்வரகு, சோளம் இவைகளைச் சாப்பிட்டு வந்த மக்கள் எல்லாம் அரிசியைச் சாப்பிட ஆரம்பித்தார்கள் என்பதை அதற்கு ஒரு உண்மையான காரணம் என்று ஏற்றுக் கொள்ளவேண்டும்.

விலைவாசி உயர்வுக்கு மாநில அரசுதான் காரணமா? அறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்கே சொன்னார்கள், நாட்டு வாட்டத்தைப்போக்கிட நோட்டடித்தால் மட்டும் போதாது என்று சொன்னார்கள். நாசிக் பணத் தோட்டத்திலே ஏராளமான

தோட்டுப் பயிர்களை உருவாக்கினால் அதன் காரணமாக பணவீக்கமும், விலைவாசி உயர்வும் ஏற்படத்தான் செய்யும் என்று நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள்.

விவசாயிகளுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு இன்றைக்குச் சிலர் பேசுகிறார்கள். மத்திய அரசாங்கம் விவசாயிகளுக்கு குறிப்பிட்ட விலை கிடைக்கவில்லையென்றால் விவசாயிகள் எவ்வளவு பாதிக்கப்படுவார்களென்பதை அறிந்திருந்தும் உரத்தினுடைய விலையை ஏற்றினார்கள், விலையை ஏற்றியது 1 சதவிதம், 10 சதவிதம், 50 சதவிதம் அல்ல நூறு சதவிதம், 100-க்கு 100 சதவீதம் என்ற முறையிலே உயர்த்தினார்கள், அதன் காரணமாக 100 ரூபாய் கொடுத்து வாங்கிய உரத்தை 200 ரூபாய் கொடுத்து வாங்கக் கூடிய நிலைக்கு விவசாயிகளைத் தள்ளிவிட்டது யார்? மத்திய அரசாங்கம் தான். மத்திய அரசாங்கம் ஏற்கனவே நடத்திய உர வியாபாரத்தில் 400 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது, அந்த நஷ்டத்தைச் சரிக்கட்டுவதற்கு வருங்காலத்திலே பயிர் செய்யும் விவசாயிகளுக்குத் தண்டனைக் கொடுக்கிறோம் என்ற முறையிலே கொள்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் மத்திய அரசினர்.

மத்திய அரசிலே இருக்கின்ற மிஸ்ரா, மிஸ்ரா என்று சொல்லப்படுகின்ற இரயில்வே அமைச்சர் சரக்குக் கட்டணத்தை உயர்த்தி இருக்கிறார் ஒரு 'மிசிரபிள்' செய்தியாக மிஸ்ரா அதைச் சொல்லியிருக்கிறார். சரக்குக் கட்டணத்தை உயர்த்தினால் யாருக்குப் பாதகம்? சரக்குகளை ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு ஏற்றிச் செல்கிற, ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு ஏற்றிச் செல்கிற இரயில் சரக்குக் கட்டண உயர்வு விலைவாசி ஏற்றத்திற்கு காரணமாக அமையும்.

இன்னொரு முக்கியமான கருத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். செங்கற்பட்டு மாவட்டமும் வட ஆர்க்காடு மாவட்டமும் கடந்த ஒன்றரை ஆண்டுக்காலமாக சரியான பருவ மழை இல்லை. ஆற்காடு கிச்சடியை சென்னைக்கு அனுப்பமுடியாத நிலைமை ஏற்பட்டது.

(பிற்பகல் 12-30)

மழை மேகங்கள் மலடுகளாகிவிட்டதால் பூமிக்கு அடியிலுள்ள தண்ணீரைக் கொண்டுவர வேண்டும், பம்பு செட்டுகள் மூலம் கொண்டுவந்து அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும் என்று எண்ணி ஏராளமான விவசாயிகள் பம்பு செட்டுகளுக்காக விண்ணப்பித்தார்கள். இந்த நேரத்தில் நான் மத்திய சர்க்காரைக் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். ஏனென்றால், அவ்வாறு விண்ணப்பித்த எல்லோருக்கும் பம்பு செட்டுகளுக்கு இணைப்புகள் கொடுக்கப்பட்டிருந்தால் இன்றைக்கு ஓரளவிற்கு மழைப்பயிரை நம்பி இருப்பவர்கள் நிலநீரினைப் பயன்படுத்தி நிச்சயமாக விவசாயத்தைப் பெருக்கியிருக்க முடியும். ஆனால் என்ன காரணத்தாலோ மத்திய சர்க்கார் அவர்களைப் பழி வாங்கிக்கொண்டிருக்கிறது.



மொத்தத்தில் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பேசியவர்கள் யார் என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. படி படி என்று இப்போது பேசியவர்கள் அவுன்ஸ் கணக்கிலே மருந்து கொடுப்பதைப்போல் அவுன்சாகக் கொடுத்தவர்கள். கத்தாழை சாப்பிட்டால் சத்தாக இருக்கும் என்று சொன்னார்கள், பிண்ணாக்கு சாப்பிட்டால் சத்தாக இருக்கும், எலிக்கறி சத்தாக இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் ஆட்சியிலே இருப்பவர்கள் அப்படிச் சொல்லவில்லை. விலைவாசி ஏறியிருக்கிறது என்று பதட்டத்தோடு கவனித்து அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். அது எந்த அர்த்தநாரீஸ்வரராக இருந்தாலும் பதுக்கலைக் கண்டுபிடித்து வெளியே கொண்டுவருவதால் விலைவாசி குறைவது மட்டுமல்ல, சில எதிர்க் கட்சிப் பத்திரிகைகளிலே காட்டியிருக்கும் நிலையை மாற்றி, கோடம்பாக்கம் பாலத்திற்கு அடியிலே அரிசி குவித்து வைக்கப்பட்டிருக்கும் காட்சியை புகைப்படமாக வெளியிட்டிருப்பதால் இன்றைக்கு பீதி குறைந்திருக்கிறது.

இன்றையதினம் மத்திய அரசு மட்டும் இப்படிப்பட்ட படுபாதகச் செயலில் ஈடுபடாமல் இருந்திருந்தால், பம்பு செட்டுகளின் வரியை உயர்த்த வேண்டும், மின் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்பதுபோன்ற கொடுமைகளைச் செய்யவில்லையென்றால் இந்த விலையேற்றம் இருக்காது என்று தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. கே. எ. வகாப்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்தத் தமிழக அரசின்பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானமானது இந்தக்

[திரு. கே. எ. வகாப்] [1974 ஆகஸ்ட் 13

சபையே இதுவரையில் கண்டிராத முறையிலே ஒரு புதுமையான முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எப்படி எதிரிமேல் அம்பு எய்வதற்காக நாண் ஏற்றி அம்பை வைத்து எய்யும்பொழுது அந்த அம்பானது வேகமாகச் சென்று எதிரியைத் தாக்குவதற்குப் பதிலாக வழியிலேயே வீழ்ந்துவிடுகிறதோ அதைப்போல எதிர்க் கட்சிகள் இதற்குமுன்னால் ஆட்சியின்பேரில் அம்பைத் தொடுத்து அது வேகமாகச் சென்று ஆட்சியின் காலடியில்தான் சென்று வீழ்ந்தது. ஆனால் இன்று இவர்கள் எய்யும் அம்பானது வழியிலேயே மடிந்து விழுகின்ற அளவிற்கு மக்களிடத்தில் ஆதரவு இல்லை என்பது மட்டுமல்ல, சட்டமன்றத்திலே பேசுவதற்கு அவர்களுக்கு நேரம் இல்லை அல்லது விஷயம் இல்லை என்ற அளவிற்கு இன்றைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கிறது. இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்கு எதிர்க் கட்சிகளை குறை கூறத் தயாராக இல்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது எதிர்க் கட்சிகளின் கடமை. அவர்கள் அதைச் செய்துதான் ஆகவேண்டும். நாட்டுமக்களின் எண்ணங்களை எடுத்துச் சொல்ல அதை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தத் தான் வேண்டும். ஆனால் இந்தப் பிரச்னையின் மேல் ஒரு நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமா என்பதா ஒரு பிரச்னை.

ஒரு அரசு தன்னுடைய கடமையிலேயிருந்து தவறுகின்ற நேரத்தில் அல்லது அப்படித் தவறி விட்டது தவறு என்று ஒத்துக்கொள்ளாத நேரத்தில், அந்தத் தவறைத் திருத்திக் கொள்ள எந்தவிதமான முயற்சியும் எடுக்காவிட்டால் நம்பிக்கை யில்லாத் தீர்மானம் அவசியம்தான். ஆனால் இங்கே ஏற்பட்ட சில தவறுகளுக்காக அரசு பொறுப்பேற்றுக்கொண்டு அந்தத் தவறுகளைக் களைவதற்காக இன்றையதினம் யுத்த காலத்திலே நடப்பதுபோன்ற சில நிகழ்ச்சிகளை எங்களைப்போன்ற கிராமப் புறங்களிலே இருப்பவர்கள் பார்க்கிறோம். பெரிய பெரிய மிட்டா மிராசுகளை இன்றையதினம் தயவு தாட்சண்யம் இன்றி சிறைக் கூடங்களுக்குத் தள்ளுகின்ற அளவிலே தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சர வர்களே சில பெரிய சம்பவங்களை சொல்லிக் காட்டினார்கள்.



1974 ஆகஸ்ட் 13] [திரு. கே. எ. வகாப்]

அதுமட்டுமல்ல, இன்றைக்கு வடார்க்காடு மாவட்டத்தில் தீவிர
நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்திற்கு
அடுத்தபடியாக உற்பத்தி செய்யும் மாவட்டம் என்ற பெருமையை
எங்கள் மாவட்டம் கொண்டிருக்கிறது. அப்படிப் பெருமைப்
பட்டுக்கொண்டிருந்த நாங்கள் திடீரென்று ஒரு படி அரிசி 5
ரூபாய் என்று ஏறிய நேரத்தில், அது செயற்கையாக உண்டாக்கப்
பட்ட விலையேற்றம் என்று கண்டுபிடித்து அதிகாரிகள் எடுத்த
நடவடிக்கைகளுக்காக உண்மையிலேயே பாராட்டைத் தெரிவித்து
கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பசுமைப் புரட்சியின் காரணமாக இந்த நாட்டிலே உபரியாக
இருந்தது. உங்களுக்கு நன்கு தெரியும், நம்முடைய மாநிலம்
தான் மற்ற மாநிலங்களுக்கு உதவுகின்ற ஒரு மாநிலமாக
இருந்தது. ஆனால் இன்றைக்கு நமக்குப் போதிய அளவிற்கு
உணவு தானியம் இல்லையா என்ற நிலை இருக்கிறது. கடத்தல்
என்ற பெயரில் மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் சொன்னதைப்
போல் சில பகுதிகளுக்குள் சென்றிருக்கலாம். ஆனால் பதுக்கல்
என்ற பெயரில் இன்னும் ஏராளமான நெல்லும் அரிசியும் இருந்து
கொண்டுதான் இருக்கிறது. அதைக் கண்டுபிடிப்பதில் இன்னும்
முனைப்பான திட்டங்கள் இருந்தால் இன்றைக்கு 3½ ரூபாய்
என்றிருப்பது இன்னும் ஒரு மாதத்தில் அரிசியின் விலை 2½
ரூபாய்க்கு வரும் சாத்தியக்கூறுகள் இருக்கத்தான் செய்கின்றன.
உண்மையிலேயே இந்த விலையேற்றத்தால் யாருக்குப் பலன்
கிடைக்க வேண்டுமோ அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அருமை
நண்பர் மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னதைப்
போல் கோழியோடு எழுந்து கோட்டானோடு உறங்கி, நிலத்தைத்
திருத்தி, மின்சாரத்திற்கும், தண்ணீருக்கும், எல்லாவிதமான
உரத்திற்கும் சிரமப்படுகின்றவர்கள் யாரோ அந்த விவசாயி
களுக்குக் கிடைக்க வேண்டிய அளவிற்கு நன்மைகள் கிடைக்க
வில்லை. ஆனால் இந்த விலையேற்றத்தின் காரணமாக தங்களுக்குப்
பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அவர்கள்
பாடுபடுகிறார்கள்.

அதேநேரத்தில், அரிசியின் விலை இறங்கினால் விவசாயிகளுக்குக்
கொடுக்கப்படும் நெல்லின் விலை குறையக்கூடாது என்பதிலும்
எங்களுக்கு அக்கறை இருக்கிறது. அதை எப்படிச் செய்ய

வேண்டுமென்பதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மத்திய அரசோடு கலந்து நெல்லின் கொள்முதல் விலையைப் பற்றித் தீவிர முயற்சியெடுக்க வேண்டும். இன்றைக்கு அவர்கள் சொன்னதைப்போல் கூலி அதிகம் கொடுக்க வேண்டும், உரத்திற்கும் அதிக விலை கொடுக்க வேண்டும், மின்சாரம் போதிய அளவிற்குக் கிடைக்கவில்லை, ஆனாலும் 100 ரூபாய் வருகிறது என்று நம்பிக்கொண்டு விவசாயம் செய்பவனுக்கு நாளைக்கு 50 ரூபாய்தான் என்றால் அந்த விவசாயிகளுடைய நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த எதிர்ப்பை நாம் சமாளிக்க வேண்டியிருக்கும் என்பதை மனதில் வைத்து நல்ல திட்டங்களைத் தீட்ட வேண்டும், எதிர்காலத்திற்கு வேண்டிய நல்ல திட்டங்களை வைத்துக்கொள்ள வேண்டும்.

எதிர்காலத்திலே விலை வீழ்ச்சி ஏற்படும்பொழுது விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க முடியாது. சிறு விவசாயிகள் பலர் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தங்களிடமிருந்து நெல்லை விற்றுவிட்டு இன்றையதினம் அவர்கள் வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. நான்கூட சென்ற சட்டமன்றக் கூட்டத்தின்பொழுது சொன்னேன். எங்கள் மாவட்டத்தில் அரசாங்கம் நிர்ணயித்த விலையான 57 ரூபாய்க்குக்கூட விற்க முடியாமல் அதற்கும் குறைவாக விற்றிருக்கிறார்கள் என்று சொன்னேன். உடனே மதிப்பிற்குரிய உணவு அமைச்சரவர்கள் கொள்முதலுக்கு ஏற்பாடு செய்தார்கள். அப்படிச் செய்யும்பொழுது மறுபடியும் விறுவிறு என்று விலை அதிகமாக ஏறிவிட்டது. மறுபடியும் விலை அதிகமாக இறங்கும் சூழ்நிலையை ஏற்படுத்தும்பொழுது விவசாயிகள் அதனால் பாதிக்கப்படாத அளவில் ஒரு நிலையிலே நிற்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது கடமை.

பசுமைப்புரட்சி நிச்சயமாக வெற்றி பெற்றிருக்கிறது. இன்றைக்கு அந்தச் சொல் சிறக்கும் நிலை நிச்சயமாக இருக்கிறது. ஆகவே, உணவுதான்யப் பற்றாக்குறை என்பது இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சியைப் பாராட்ட வேண்டிய நேரத்தில், எவ்வளவு புகழ வேண்டுமோ அவ்வளவு புகழ்ந்து பாராட்ட வேண்டிய நேரத்திலே, உதய சூரியன் கிளம்புகின்ற நேரத்தில் மூடுபனி இருப்பதைப்போல் மதுவிலக்கைக் கொண்டுவருவதன் மூலம் 56 கோடி ரூபாயை இழந்தும் இனிய





முகத்தோடு சட்டமன்றத்திலே அமர்ந்திருக்கும் இந்த நேரத்திலே அதை எல்லாக் கட்சிகளும் ஏகமனதாகப் பாராட்ட வேண்டிய இடத்திலே மூடுபனி வந்திருக்கிறது. அரிசிப் பிரச்னை வந்திருக்கிறது, விலையேற்றம் வந்திருக்கிறது. இதுவும் மூடுபனியைப்போல் நீங்கிவிடும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

மதுவிலக்கை அமல்படுத்த வேண்டுமென்று நாங்கள் சட்டமன்றத்திலேயும், வெளியிலேயும் சொல்லிக்கொண்டு வந்தோம், அந்த நீதியான காரணத்தைப் புரிந்துகொண்டு, இலட்சோப லட்சம் தாய்மார்களின் கண்ணீர் துடைக்கப்படும் அளவில், ஏழை விவசாயிகளின் வாழ்க்கை உயரும் அளவில், மைனாரிட்டிகளின் கோரிக்கைகளை ஏற்று இந்தக் காரியத்தைச் செய்தமைக்காக இந்தச் சபையில் பாராட்ட வேண்டிய கட்டத்தில் இதை ஒரு அசம்பாவிதம் என்றுதான் சொல்ல வேண்டும், இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருந்தாலும் நிச்சயமாக இந்த நேரத்தில் எங்கள் கட்சியின் சார்பிலே முதல்வர் அவர்களுக்கும், அமைச்சரவைக்கும் எங்கள் கட்சியின் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

**திரு. கே. கந்தசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் அரசின்மீது எதிர்க்கட்சிகளின் சார்பாக உணவுக் கொள்கை, விலைவாசி ஏற்றத்தை முன்னிட்டு இந்த அரசு மக்களின் நம்பிக்கையினை இழந்து விட்டது என்ற தீர்மானத்தை கொண்டுவந்து ஆதரித்துப் பேசினார்கள். இந்தத் தீர்மானத்தை எங்களது பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக முழு மனதோடு எதிர்த்துப் பேச முனைகிறேன்.

இதை ஆதரித்துப் பேசிய மெம்பர்கள் எல்லாம் எதிர்த்துப் பேசுகிறவர்களுக்குக் குறுகிய நேரம் இருந்தால் போதும், எங்களுக்கு அதிக நேரம் கொடுங்கள் என்று சொன்னார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது அரசின்மீது மக்கள் கொண்டிருக்கும் கருத்தைத் தெரிவிக்கும் வாய்ப்பாகப் பயன்படும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு வேழவேந்தன் அவர்கள் குறிப்பிட்டது போல் இதை பீரியாடிகல் ரீன்யூவலாகச் செய்வது, திரும்பத் திரும்பக் கொண்டுவருவதை மரபாக வைத்துக் கொண்டிருப்பதைக் காணும்போது வருத்தப் படுகிறேன்.

இன்று நாட்டிலுள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் அத்தனை பேரும் இந்தியாவிலுள்ள மாநிலங்களிலுள்ள நிலைமையை உணரத் தவற மாட்டார்கள் என்று கருதுகிறேன். இந்தியாவிலுள்ள அத்தனை மாநிலங்களிலும் உணவுப் பிரச்சினை இருப்பதோடு மட்டுமல்லாமல் மக்களின் அன்றாடத் தேவைக்கான அத்தனை பொருள்களும் வானளாவ உயர்ந்து மக்களுக்குப் பீதியான நிலைமையை உருவாக்கி போராட்டங்கள், ஊர்வலங்கள் நடைபெற்று சட்டம் அமைதிக்குப் பங்கம் ஏற்படுகின்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. அதன் காரணமாக சட்டம் அமைதியைப் பாதுகாக்கவேண்டிய போலீஸ் அதிகாரிகள் சுடுவதும் அன்றாட நிகழ்ச்சியாக இருந்துகொண்டிருக்கும் நேரத்தில் நம்முடைய மாநிலம் ஒயாசிஸ் ஆக இருந்து கொண்டிருக்கிறது. பாலைவனத்தில் பஞ்சுசோலையாக கலைஞர் அரசு தமிழக மக்களுக்கு குறிப்பாக தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களுக்கு ஓடோடி அதிக நன்மைகளைச் செய்து வருகிறது. மற்ற மாநிலங்களை விட இங்கு விலைவாசி குறைவாக இருக்கிறது. தமிழகத்தில் மாத்திரம் எங்கும் இல்லாத உயர்வு ஏற்பட்டு விட்டது போலவும், தமிழக அரசின் திறமையின்மை காரணமாக ஏற்பட்டு விட்டது போலவும் அவர்கள் பேசுவதைப் பார்க்கும்போது ஆச்சரியப்படுகிறேன்.

மத்திய அரசாங்கக் கொள்கைத் தவறு காரணமாக 'இன்ஃப்ளேஷன்' ஏற்பட்டிருக்கிறது; நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று பொருளாதார நிபுணர்கள் எல்லாம் சொல்லுகிறார்கள். அதற்கு யார் பொறுப்பு என்று கேட்டால் 'மாநில சுயாட்சி கேட்கிறார்கள்' என்று கிளப்புகிறார்கள். அரசியல் சாயம் பூச முனைகிறார்கள். அரசியல் வேறு, உண்மையை உணர்ந்து நாட்டு மக்களுக்கு நன்மை புரிவது வேறு. இன்ஃப்ளேஷன், மத்திய அரசின் 'ஓவர் ப்ரின்டிங் ஆப் கரன்ஸி நோட்ஸ்' 'ஓவர் டாக்ஸேஷன்' ஆகியவைதான் இந்த விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்று சொல்லுகிறார்கள்.

**திரு. கோவை செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்தவர்கள், அதிகம் கற்றவர்கள். இன்ஃப்ளேஷன்—பணவீக்கம் காரணமாக விலைவாசிகள் ஏறுகின்றன என்று சொல்லுகிறார்கள். அந்தத் தத்துவத்திலே சில மாற்றங்கள் இருக்கின்றன. ஒரே ஒரு பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவில் 80 சதவிகிதம் சம்பளம் வாங்குகின்றவர்களாகத்தான் இருக்





கிறார்கள். நோட்டு அடிப்பவர்கள், ஒருசில பெரும் பணக்காரர்கள் காரணமாக இன்ஃப்ளேஷன் ஏற்படுகிறது என்றால் விலைவாசி கிராஜுவலாக ஏறுமே தவிர, முதல் நாள் இருந்த விலை திடீரென்று அடுத்த நாள் ஏகமாக ஏறிவிடாது.

**திரு. கே. கந்தசாமி:** அதற்கு விளக்கம் தரத்தான் வந்து கொண்டிருக்கிறேன். அந்த அளவுக்குப் பிளாக் மணி இல்லை யென்று சொல்லுகிறார்களா? இல்லையென்று சொல்ல முடியுமா? மத்திய அரசு அந்தக் கறுப்புப் பணத்தை ஒழிக்க எந்த வகையில் தீவிரமாக நடவடிக்கை எடுத்தார்கள்? திருமதி இந்திரா காந்தி ஆட்சி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? மத்திய அரசு தன்னுடைய கையில் அத்தனை அதிகாரங்களையும் குவித்து வைத்துக்கொண்டு அரசியல் பிரசாரத்திற்குப் பயன்படுத்து கிறார்கள். சர்வதேச அரசியலில் தாங்கள் செய்த தவறின் காரணமாக—

Change of political application has caused great havoc to the country and economy has collapsed.

வெளிநாடுகளில் இருந்து கிடைத்த உதவிகள் நிறுத்தப்பட்டு விட்டன. அதன் காரணமாக இந்திய பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தவிர்க்க அட்மினிஸ்ட்ரேட்டிவ் மெஷினரி நல்ல முறையில் பணியாற்றி எங்கெங்கு கறுப்புப் பணம் இருக்கிறது, எங்கெங்கு கள்ள நோட்டுகள் அச்சடிக்கப்படுகின்றன என்று கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டாமா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கறுப்புப் பணம் வைத்திருப் பவர்களை மத்திய அரசாங்கம் கண்டுபிடிக்கவில்லை என்று கூறுகிறார்கள். தினந்தினம் செய்திகள் வருகின்றன. எந்தெந்த வீடுகளில் சோதனை நடந்தது, கறுப்புப் பணம் கண்டுபிடிக்கப் பட்டது என்ற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. கறுப்புப் பணத்தை எல்லோரும் சேர்ந்து வெளியே கொண்டுவர வேண்டும். கள்ளநோட்டு அதிகமாகத் தமிழ்நாட்டில்தான் அச்சடிக்கப்படு கிறது என்ற செய்தி வந்தது. அதற்காக தமிழ்நாடு அரசுதான் பொறுப்பு என்று சொல்ல முடியுமா? ஒரு அரசாங்கத்தை ஆதரிப்பதற்காக இன்னொரு அரசாங்கத்தின் மீது தவறு சொல்லுவது சரியல்ல, நியாயமல்ல.

**திரு. கே. கந்தசாமி:** மத்திய அரசு கறுப்புப் பணம் வைத்திருப்பவர்களைப் பிடிக்க முயல்வதற்காகப் பாராட்டுகிறேன். வன்மையாகச் செயல்படுகிறதா, செயல்பட வேண்டிய அளவுக்குச் செயல்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. 1956-லேயே தேவர் அவர்கள் சொன்னார்கள். ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்களுக்கு கள்ள நோட்டு அடிப்பவர்களோடு நேரடித் தொடர்பு இருக்கிறது என்று கடற்கரைக் கூட்டத்தில் சொன்னார்கள். வியாபாரிகள் எல்லாம் இந்த நாட்டைக் காப்பதற்காக இல்லை; ஏழைக் குடியானவன்தான் தன்னுடைய ரத்தத்தைச் சிந்தி இந்த நாட்டைக் காப்பான்; வியாபாரிகள் எல்லாம், கோடீஸ்வரவர்கள்; எல்லாம் உயிர்காத்தால் போதும் என்று அந்த நாட்டுக்கு ஓடிவிடுவான் என்று சொன்னார். நாட்டு நன்மைக்காக அவர் சொன்னதைத் திசை திருப்பி சாதிப் பூசலாகக் கிளப்பி நாடகம் நடித்தார்கள்.

‘பெரியோர் வாய்ச் சொல் முதலில்
கசக்கும், பிறகு இனிக்கும்’

என்பதற்கேற்ப அன்று அவர் சொன்னதைக் கேட்காத காரணத்தால் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். 1956-ம் ஆண்டே அவர்கள் அதை நிரூபிக்கத் தயாராக இருந்தார்கள். லட்சக்கணக்கான மக்களை வைத்துக் கொண்டு அறைகூவல் விடுத்தார்கள். ஆகவே, இதைக் களைவதற்காக பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. எல்லா மாநிலங்களிலும் விலைவாசி அதிகமாக ஏறியிருக்கும்போது தமிழகத்தில் மாத்திரம் எப்படி குறைவாக இருக்க முடியும். அப்படியிருந்தும் மற்ற மாநிலங்களுக்கும் தாராளமாக அரிசி கொடுக்கும் வகையில் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். பசுமைப் புரட்சியின் மூலமாக நவீன சாதனங்களைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றோம். அப்படி இருந்தும் இப்போது ஏற்பட்ட நிலைக்குக் காரணம் யார்?

விவசாயிகளும், வியாபாரிகளும் சேர்ந்து அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்கள். தஞ்சை களஞ்சியம் போல் இருக்கிறது. வெளியே கொண்டு போகக்கூடாது என்ற சட்டத்தைச் சற்று தளர்த்தி வெளிமாவட்டங்களுக்குக் கொண்டுபோக அனுமதிக்க வேண்டுமென்ற வேண்டுகோள் விடப்பட்டது.





அந்த வேண்டுகோளை பலகாலம் ஏற்றுக்கொள்ளா விட்டாலும் பரீட்சார்த்தமாக பார்க்கலாமே என்று இரண்டு மூன்று நாட்கள் தளர்த்தியிருக்கிறார்கள். அப்படி அவர்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு தளர்த்தியதன் விளைவு

organised, pre-planned and systematic conspiracy by the merchants has taken place to meet their own selfish ends.

என்று நான் சொன்னால் அதை மறுக்கமுடியுமா? வேண்டுமென்றே, முன்கூட்டியே திட்டமிட்டு சதி செய்திருக்கிறார்கள் ஒருசில வியாபாரிகள் தங்கள் சுயநலத்திற்காக. அவர்களோடு சில பதுக்கல் பேர்வழிகளும், முதலாளிகள் சிலர் இருக்கலாம், அவர்கள் விவசாயிகள் என்ற பெயரால் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களும், மற்ற சில உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டதைப் போல் அவர்களின் பெயர்களைச் சொன்னால் என்ன தவறு? இன்று காலையில் கூட ரேடியோவில் சொன்னார்கள், ஐம்பது பேர்கள் பிடிக்கப்பட்டு அவர்கள் பெயர்கள் கூட தெரிவிக்கப்பட்டது, நான் மகிழ்ச்சியோடு கேட்டுக் கொண்டிருந்தேன். அவர்கள், மக்கள் துரோகிகள் மக்கள் மன்றத்திற்கு முன்பு வரும்போது மக்கள் அவர்களை அடையாளம் கண்டு கொள்கிறார்கள். ஆக, நாலரைக் கோடி தமிழ் மக்களின் விரோதிகளை அடையாளம் காட்டியாக வேண்டும். அப்படி காட்டும்போது அவர்கள் வெட்கப்படுவார்கள், வேதனைப்படுவார்கள், தவறுகள் செய்வதை குறைப்பார்கள்.

நமது எக்கானமி, அக்ரிக்கல்சரல் ரூரல் எக்கானமி, அதுதான் மெயின் எக்கானமி. அதுதான் இந்தியாவின் எக்கானமி, தமிழ் நாட்டின் எக்கானமி. ஆக, விவசாயப் பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்குப் பதிலாக, அதை மையமாக வைத்து மற்றப் பொருள்களின் விலைவாசிகளை நிர்ணயிப்பதற்குப் பதிலாக, இந்தியாவின் தமிழகத்தில் இருக்கிற 80 சதவீதம் விவசாயிகளின் பொருளாதாரத்தை மையமாக வைத்து நமது பொருளாதாரத்தை நிர்ணயிப்பதற்குப் பதிலாக 20 சதவீதம் பேர்களுக்கு வழி செய்கிற அளவிற்கு விலைவாசிகளை ஏற்றுவதும் இறக்குவதும், ப்ரைஸ் மெக்கானிஸத்தை அவர்கள் தங்கள் கைகளில் வைத்துக் கொண்டிருப்பதன் விளைவுதான் இந்தக்

[திரு. கே. கந்தசாமி] [1974 ஆகஸ்ட் 13

குழப்பத்திற்கு காரணம். இதற்குக் காரணமாக இருப்பது மைய அரசு, தமிழ்நாடு அரசுக்கு பொறுப்பில்லை என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கிற இந்த கலைஞர் அவர்களின் அரசு தவறு செய்பவர்களின் மீது இன்னும் மிகக் கடுமையான நடவடிக்கை எடுத்து மக்கள் மன்றத்தில் அவர்களை நிறுத்த வேண்டும், மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்து இந்த நம்பிக்கையின்மைத் தீர்மானதை வண்மையாகக் கண்டித்து, எதிர்த்து அமர்கிறேன். வணக்கம்.

**திரு. எம். சுரேந்திரன்:** உதவி சபாநாயகர் அவர்களே, இங்கு முதல் அமைச்சர் அவர்கள் மீதும், அவர்களால் அமைக்கப் பட்டிருக்கின்ற அமைச்சரவை மீதும் என் கட்சித் தலைவரும், தோழருமான திரு. வ. ஆர். மாரிமுத்து அவர்களால் வைக்கப் பட்டிருக்கிற தீர்மானத்தின் மீது அதை ஆதரிக்கிறேன் என்று மொட்டையாக ஒரே வார்த்தையில் கூறி நிறுத்திவிடலாமா என்ற எண்ணம் எனக்குத் தோன்றுகிறது. காரணம், இதற்கு முன்னால் இந்த சபையிலே பல நேரங்களில் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. அப்படி வந்தபோதெல்லாம் அவை சமுதாயத்தில் இருக்கிற ஏதாவது ஒரு பிரிவைச் சேர்ந்த வர்களுக்கு இந்த அமைச்சரவை செய்த அநியாயம் பற்றிய அந்தக் கருத்தை மையமாகக் கொண்டு தீர்மானங்கள் வந்திருக் கின்றன என்பதை இந்த சபையின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். தொழிலாளர்களைப் பற்றிய அல்லது விவசாயி களைப் பற்றிய அல்லது மாணவர்களைப் பற்றிய அல்லது ஆசிரியர் களைப் பற்றிய என்று இப்படி வேறு வேறு பிரிவுகள் பற்றி அவரவர்கள் பிரதிநிதிகளாக இருக்கிறவர்கள் இங்கே பிரதிபலித் திருக்கிறார்கள் என்பதுதான் கடந்த காலத்தில் ஏற்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்களின் விவரங்களாகும். அதல்லாமல் அமைச்சர்கள் லஞ்சம் வாங்கினார்கள், ஊழல்கள் செய்தார்கள், பட்சபாதம் காட்டினார்கள் என்பவை போன்ற குற்றச்சாட்டுகளும் வந்திருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** குறிப்புப் புத்தகத்தில் அது பதியும் என்பதற்காகச் சொல்கிறேன். 'என்பது போன்ற நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகள்' என்று சொன்னால் பொருத்த



1974 ஆகஸ்ட் 13] [திரு. எம். சுரேந்திரன்]

மாக இருக்கும். ஊழல், லஞ்சம் போன்ற குற்றச்சாட்டுகள் என்று சொல்லும்போது எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்பதையும் சேர்த்துக் கொள்ளவும்.

**திரு. எம். சுரேந்திரன்:** எப்படியிருந்தாலும் அப்படிப்பட்ட தீர்மானங்கள் இங்கே விவாதிக்கப்பட்டிருக்கின்றன என்று மட்டும் தான் சொன்னேன். அவை நிரூபிக்கப்பட்டிருக்கின்றனவா, நிரூபிக்கப்படவில்லையா. . . . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதுபோன்ற குற்றச் சாட்டுகள் டெல்லியிலும் விவாதிக்கப்படுகின்றன.

**திரு. எம். சுரேந்திரன்:** இந்தச் சட்டமன்றத்தில் ஒரு பிரதி நிதியாக மக்களின் ஒரு பிரதிநிதியாக இருந்து கொண்டு இந்த அமைச்சரவை மீது கொண்டு வந்திருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நான் பேசுகிறேன். என் கட்சி மத்தியில் இருக்கிறது என்பதை நான் உணர்ந்திருந்தாலும் கூட இங்கே பேசுவது இங்கிருக்கிற நிலைமை பற்றித்தான். அங்கே ஊழல் என்று கொண்டுவரப்பட்டால் அங்கே பாராளுமன்ற உறுப்பினர் கள் இருக்கிறார்கள், அவர்கள் அங்கே பேசுகிறார்கள். அவர்கள் அதை நீக்குவதற்கான வழிமுறைகளைக் காண்கிறார்கள். ஆனால் இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகிறபோது இந்தச் சட்ட மன்றத்தில் நடக்கிற, இந்த அமைச்சரவையில் நடக்கிற காரியங் களைப் பற்றி எடுத்துச் சொல்வதுதான் முறையாகும் என்ற முறையில்தான் இதைக் கூறுகிறேனே தவிர அவை நிரூபிக்கப் பட்டதா நிரூபிக்கப்படவில்லையா என்ற வாதத்திற்குள் நான் செல்லவில்லை. அதை எடுத்துச் சொல்வதற்கு முன்னால் முதல் அமைச்சர் அவர்களுக்கு ஏன் கோபம் வரவேண்டும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆக, அந்த முறையில் அம்மாதிரியான பல பிரிவுகள் பற்றி ஏற்கனவே வந்திருக் கின்றன.

இப்போது வந்திருக்கிற இந்தத் தீர்மானம் அம்மாதிரியான தல்ல. வேறுபட்டது. இந்த மாநிலத்தில் இருக்கிற ஒட்டு மொத்தமான நாலரை கோடி மக்களுக்கும் முதல் அமைச்சர் அவர்களும், இந்த அமைச்சரவையும் எவ்வளவு பெரிய தீங்கைச் செய்திருக்கிறது என்பதை மையமாகக் கொண்டு இந்தத் தீர்மானம் அதனுடைய பிரதிபலிப்பாக வந்திருக்கிறதே தவிர

வேறு ஒன்றுமல்ல. இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு நண்பர் வேழவேந்தன் அவர்கள் ஏதோ கோமாளித்தனமாகக் கொண்டு வந்திருப்பதாகச் சொன்னார்கள். உங்களது நாவன்மை, நடிப்புத் திறமை எல்லாவற்றையும் இன்று மக்கள் கோமாளித்தனமாகப் பார்க்கிற அளவிற்கு மாறியிருக்கிற ஒரு சூழ்நிலையை நீங்கள் உணர்ந்து கொள்ளாமல் இந்தச் சட்டசபையில் இதை கோமாளித்தனமாகக் கொண்டு வந்திருப்பது என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது, வேதனையாகவும் இருக்கிறது என்று இந்த நேரத்தில் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்போது இங்கு ஏற்பட்டிருக்கிற ஒரு பிரதான அம்சம் மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற மக்களுடைய உணவுப் பிரச்னையாகும். இந்த உணவுப் பிரச்னை சம்பந்தமாக பல பேர்கள் பல நேரங்களில் பேசியதுண்டு. ஆனால் இப்போது எந்தச் சூழ்நிலையில் இந்த தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பது மட்டும் மல்லாமல் இந்தத் தீர்மானம் எந்தக் காலக் கட்டத்தில் எப்படி இருக்கிறது என்று பார்த்தால் முதல் அமைச்சர் அவர்களைப் பற்றி அவ்வளவு பேர்களும் சொல்வார்கள். அரசியலிலே மிக நுணுக்கமான திறமை படைத்தவர்கள் என்று சொல்வார்கள். அரசியலில் மட்டும் திறமை படைத்தவர் அல்ல. எதிர்கட்சிகள் சொல்கிற வாதங்களுக்கு மிகத் திறமையாக அவ்வப்போது சுடச் சுட பதில் அளித்து அவர்களை மடக்குவதில் கெட்டிக்காரர் என்று சொல்வார்கள். அதோடு மட்டுமல்ல. தேர்தல் காலத்தில் தேர்தலைப் பற்றி மதிப்பிட்டு அந்த மதிப்பீடுகள் மேல் முறையாக என்னென்னமாதிரியான தந்திரங்கள் செய்து வோட்டு பெற வேண்டும் என்பதை கணிப்புச் செய்வதிலும் அதைச் செயல் படுத்துவதிலும் கெட்டிக்காரர், வல்லவர் என்று சொல்வார்கள். ஆனால் அம்மாதிரி சொல்லப்பட்டு வரும் அந்த முதல் அமைச்சர் அவர்களின் நிலை இன்று எப்படி இருக்கிறது என்று பார்த்தால் அரசியல் தோல்வியோடு, தன் கட்சியில் இருப்பவர்கள் பிரிந்து சென்று ஒரு பெரும் கட்சியாக மாறி தன் கட்சியையும் தன்னையும் அழித்து விடுவார்களோ என்று எண்ணத் தக்க அளவிற்கு ஒரு சூழ்நிலை இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அது என் குற்றம் அல்ல. சில நேரங்களில் சில பேர்களைக் கணிக்க முடியாமல் போகும் நிலைமையால் ஏற்படுகிறது. தாங்கள் கூட பிரஜா சோஷலிஸ்ட் கட்சியில் இருப்பீர்கள் என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் தங்களை ஆதரித்து வோட்டு கேட்டது. இப்படி மாறி விடுவீர்கள் என்று யார் கண்டது?

**திரு. எம். சுரேந்திரன்:** முதல் அமைச்சர் அவர்கள் சொன்னது எனக்குப் புரியவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் சொல்வதற்கு மட்டும் பதில் சொல்ல நான் தயாராயில்லை. . ..

**திரு. பெ. சீனிவாசன்:** சுரேந்திரன் அவர்கள் வந்திருக்கிற இந்திரா காங்கிரஸ் கட்சியை 1971-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரித்தது. 1971-ம் ஆண்டுத் தேர்தலில் சுரேந்திரன் அவர்கள் சார்ந்திருக்கிற இந்திரா காங்கிரஸ் கட்சி தி.மு.க. கூட்டணியில் இருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்போது அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தார்கள் என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** தேர்தலில் நிபுணர் என்று மற்றவர்களால் கருதப்பட்டு வந்தவர் தேர்தலிலும் தோல்வி பெற்று அந்தத் தேர்தல் நிபுணத்துவம் இழந்து போய் நிற்கும் ஒரு நேரத்தில் இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது என்பதை இந்த சபையின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை, சந்தர்ப்பம் எல்லாம் பொருந்தி நாட்டிலிருக்கிற அவ்வளவு மக்களும் எதிராக நிற்கிற ஒரு நேரத்தில்தான் இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது. ஆகவே இந்தத் தீர்மானத்தை மொட்டையாக நான் ஆதரிக்கிறேன் என்று சொல்லலாமா என்று கூட நான் எண்ணினேன். இருந்தாலும் இந்தப் பிரதேசத்தில், இந்த மாநிலத்தில் இருக்கிற மக்கள் என்ன எண்ணுகிறார்கள் என்பதைச் சொல்லாவிட்டால் இந்த மாநில மக்களின் உணர்வுகளை நான் இங்கு பிரதிபலிக்கவில்லை என்று அங்குள்ள மக்கள் கருதுவார்களோ என்று கருதித்தான் ஒருசில விவரங்களை, அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்ற விவரங்களை மட்டும் இந்த சபையில் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

இந்த மாநிலத்தில் ஏற்பட்டு இருக்கும் உணவுப் பிரச்னை ஏதோ சிறுகச் சிறுக வளர்ந்து இந்த நிலை ஏற்பட்டு இருந்தால் அதைப் பற்றி யாரும் அதிகமாகக் கவலைப்பட ஒன்றும் இருக்காது. திடீரென்று இந்தமாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பது தான் எல்லோரின் கவலையாகும். திடீரென்று இப்படி ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் இருக்கிறது. அதைப் பற்றி ஆராய்ந்து பார்க்க ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இன்று உணவு உற்பத்தியானது 73 லட்சம் டன்கள் என்று உங்கள் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. 1966-67-ல் எவ்வளவு என்றால் 53 லட்சம் டன்கள் என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. 53 லட்சம் டன்கள் இருக்கின்ற நேரத்தில் இந்த மாநிலத்தில் இருக்கும் மக்களுக்கு அரிசி தருவதற்கு முடியாமல் காங்கிரஸ் ஆட்சியானது 6 அவுன்ஸ் அரிசி கொடுத்தார்கள். அந்த நிலைமை ஏற்பட்டதால்தான், முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல், தாங்களும் உங்களோடு சேர்ந்து அரசாங்கத்தை மாற்றுவதற் கான எல்லாக் காரியங்களையும் செய்தோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(பேரவைத் தலைவர் தலைமை)

அப்படி எல்லாக் காரியங்களையும் செய்த பிறகும் இந்த மாநிலத்தில் இன்றைக்கு நிலைமை என்ன? இவ்வளவு நெருக்கடி ஏற்பட்டதற்குப் பின்னால், இப்போது வாரத்திற்கு 3 கிலோ அரிசி போடுவதாகச் சொல்கிறார்கள். 3 கிலோ அரிசி என்று சொன்னால் ஒரு தலைக்கு—5 பேர் கொண்டுள்ள குடும்பத்தில்—3 அவுன்சு அரிசி தான் ஆகிறது. காங்கிரஸ்காரர்கள் 6 அவுன்சு அரிசி போட் டார்கள் நம்முடைய மாநிலம் பற்றாக்குறையாக இருந்த நேரத்தில். அதைக்கூட இன்றைக்கு மக்களுக்குக் கொடுக்க முடியவில்லை இவ்வளவு உற்பத்தி இருந்தும் என்று சொன்னால் என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை. ஏதோ சில இடங்களில் மட்டும் இந்த மாநிலத்தில் இருக்கும் மக்களுக்கு தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள், மாநிலம் முழுவதும் உள்ள வர்களுக்கு தருவதாக வாக்களிக்க முன்வரவில்லை. ஆகவே, எங்களுடைய ஒத்துழைப்பை உங்களுக்குத் தருவதற்கு இயலாது என்று நீங்களே தெரிந்து கொள்ள வேண்டும்.





அடுத்தாற்போல், 1966-67-ல் 6 அவுன்சு அரிசி போட்டதால் என்ன ஆனது என்பது எல்லோருக்கும் தெரியும். 1966-67-ல் நீங்கள் அதிகாரத்திற்கு வந்தபோது அண்ணா அவர்கள் இருந்தார்கள். அவர் அரிசிப் பிரச்னை அரசாங்கத்தை கவிழ்க்கும் வலிமை உடையது என்பதை நன்றாக அறிந்தவர்கள். ஆகவே, அதை எப்படி தீர்ப்பது என்பதை ஆராய்ந்து ரூபாய்க்கு ஒரு படியரிசி போடுவது என்று ஒரு திட்டத்தை உருவாக்கி ஒரு சில இடங்களில் போட்டார்கள். நம்முடைய மாநிலம் பற்றாக்குறையாக இருந்த நேரத்திலும் ரூபாய்க்கு ஒரு படியரிசி போட்டார்கள் . . . (மணியடிக்கப்பட்டது) எனக்கு மேலும் ஒரு 10 நிமிடம் தாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நாள் குறிப்பிட்டாகிவிட்டது, உறுப்பினர்களுக்கு நேரமும் ஒதுக்கியாகிவிட்டது. நான் என்ன செய்ய முடியும்?

**திரு. எம். சுரேந்திரன்** : எதிர்க்கட்சிக்காரர்கள் பேசவேண்டுமென்று தாங்கள் விரும்பினால் இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள். இல்லையென்றால் நான் உட்கார்ந்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஆளும் கட்சியிலிருந்து கிருஷ்ணமூர்த்தி, வேழவேந்தன் ஆகியவர்கள்தான் பேசியிருக்கிறார்கள். இவ்வளவு நேரமும் எதிர்க்கட்சித் தரப்பில்தான் பேசியிருக்கிறார்கள். இருக்கிற நேரத்தைத் தான் பங்கிட்டுக்கொடுக்க முடியும். இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன்**: சபாநாயகர் அவர்களே, குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்பதற்காக நான் பேசவில்லை. இருக்கிற நிலைமைகளை எடுத்துச் சொல்லி, அவற்றைத் தீர்ப்பதற்கு பரிகாரம் காண வேண்டுமென்பதற்காகத்தான் பேச வேண்டுமென்று எண்ணுகிறேன். நான் பேசி உங்களை உடனே ராஜினமா செய்து விட்டு வெளியே போகச் சொல்வதற்காக பேசவில்லை. நீங்கள் வெளியேற வேண்டுமே என்ற கவலை வேண்டாம். இன்னும் கொஞ்சம் நேரம் சேர்த்துக் கொடுங்கள்.

இந்தப் பிரச்னையில் ஏற்கனவே நான் சொன்னது போல், அண்ணா அவர்களும் நானும் ஒரு கூட்டத்தில் பேசுகிற நேரத்தில் இந்த ரூபாய்க்கு ஒரு படியரிசி போடும் திட்டத்தை நாடு

பூராவிலும் உருவாக்கும் நிலை உருவாக வேண்டும். அப்படி நாடு பூராவிலும் உருவாக்கிற தருவதோடு மட்டும்ல்லாமல், நீங்கள் தேச முழுமையும் உள்ள கட்சியாக வளர வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன்.

இன்று நிலைமை என்ன ஆகிறது என்று பார்க்கிற நேரத்தில் அந்த நல்ல காரியத்தை விட்டுவிட்டார்கள் என்பது மட்டுமல்ல, நாடு பூராவிலும் பரவுவதற்கு பதிலாக ஏதோ திராவிட நாடு என்று சொல்லிக்கொண்டு வந்து, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்ற நிலைமைபோய், தமிழ் மட்டும் போதும் என்ற நிலைக்கு வந்து நீங்கள் குறுகிக் கொண்டிருக்கிறீர்கள் என்று பார்க்கிறபோது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. எப்படி குறுகிக்கொண்டு வருகிறீர்கள் என்று சொன்னால், அது வேகமாக, தீவிரமாக, ஆத்திரமாக வந்து கொண்டு இருக்கிறது. எப்படி ஆத்திரமாக வந்து கொண்டிருக்கிறது, மலையாளிகள்—தமிழர்கள் சண்டையைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள். உங்களுடைய புள்ளி விவரப்படி மலையாளிகள் 1.36 சதவீதம் இங்கு இருக்கிறார்கள். தமிழர்கள் 85 சதவீதம் இருக்கிறார்கள். இவர்களிடையே சண்டை தீவிரமாகிக் கொண்டிருக்கிறது. இப்படி நீங்கள் தகராறு கிளப்பி விடுவது உங்களுடைய கட்சியின் சொந்த நலனுக்கு உகந்ததா, உங்களுக்கு இதனால் என்ன லாபம் என்று நீங்கள் சிந்திக்க வேண்டும். மீண்டும் மீண்டும் குறுகிக்கொண்டே வந்து, தமிழன் என்ற நிலைக்கு வந்திருக்கிறீர்கள். தமிழன் என்ற நிலைக்கு வந்த பின்னாலும், தமிழ் சினிமா ஒன்று நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் அதைத் தமிழன் சென்று பார்க்க முடியாத நிலையில் செய்கிறீர்கள்.

ஆகவே, உங்களுடைய போக்கு உங்களுடைய செயல்கள் மிக மிக கீழே இறங்கிச் சென்று கொண்டிருக்கின்றன. நீங்கள் இன்னும் குறுகி, உங்களிலிருந்து பிரிந்த சிலர் பிரிந்து கட்சி ஆரம்பித்து, உங்கள் கட்சியும் போய்விடுமோ என்ற நிலையில் இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட நிலையில் பிரச்னைகள் இருந்து கொண்டிருக்கும்போது, மாநிலத்தில் இருக்கும் உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நீங்கள் ஏற்கனவே என்னென்ன செய்து கொண்டிருந்தீர்களோ அவைகளையெல்லாம் நீங்கள் இன்று நிறுத்திக் கொண்டிருக்கிறீர்கள். இப்படிச் செய்வதற்கு என்ன காரணம்?





நான் கேள்விப்பட்டேன், தேங்காய் வியாபாரிகள் விற்பனை வரியைக் குறைப்பதற்காக உங்களுக்கு பணம் தந்ததாகக் கேள்விப்பட்டேன். நெல் வியாபாரிகள் சேர்ந்து உங்களுக்கு பணம் தந்ததாகக் கேள்விப்பட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதற்கு முன்பு உங்களுக்கு பணம் கொடுத்தார்கள் என்று நான் கேள்விப் பட்டேன். உங்களைப்பற்றி ஆயிரம் கேள்விப்படுகிறேன் மேட்டரில், அதையெல்லாம் சொல்லவா?

**திரு. எம். சுரேந்திரன்:** நான் கேள்விப்பட்டதை சொன்னேன். நீங்கள் கேள்விப்படுவதாக இருந்தால் வைத்துக் கொள்ளுங்கள். மதுவிலக்கை கொண்டு வரக்கூடாது என்பதற்காக மது தயாரிப் பாளர்கள் ஒன்று கூடி ஒரு கூட்டம் கூட்டி ஒரு கோடி ரூபாய் திரட்டுவது, அதை ரத்து செய்ய வேண்டுமென்பதற்காக பெரும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, கொஞ்சம் நேரமானாலும் பரவாயில்லை. அதுபற்றி விவரமாகச் சொல்ல வேண்டுகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** அம்மாதிரி ஒரு கூட்டம் நடந்து, அந்தக் கூட்டத்தில் ஒரு கோடி ரூபாய் திரட்டுவது என்று. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எந்த நிபந்தனையின் பேரில் அந்த ஒரு கோடி ரூபாய் திரட்டப்படுகிறது, என்ன காரணம் சொல்லி வசூலிக்கப்பட்டது?

**திரு. எம். சுரேந்திரன்.** எனக்குக் கிடைத்த தகவலைச் சொல் கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எந்தச் சலுகை அளிப் பதற்காக அந்த ஒரு கோடி லஞ்சம் கேட்கப்பட்டது? என்ன தவறு செய்யப்பட்டிருக்கிறது? இப்படி பொறுப்பு இல்லாமல், ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது.

**திரு. எம். சுரேந்திரன்:** மதுவிலக்குக் கொள்கையை நீங்கள் மறுபடியும் கொண்டு வராமல் இருப்பதற்காக. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதற்காக லஞ்சமா?

[1974 ஆகஸ்ட் 13

**திரு. எம். சுரேந்திரன்:** அந்தமாதிரி வந்தால், அந்த வியாபாரிகள் எல்லாம் சேர்ந்து ஏற்கனவே அரிசி வியாபாரிகள் செய்தது போல், ஏற்கனவே கடலை வியாபாரம் செய்தவர்கள் செய்தது போல், ஏற்கனவே தேங்காய் வியாபாரிகள் செய்தது போல் செய்வதற்கான வாய்ப்பு இருப்பதாக அவர்கள் எண்ணி இந்த 1 கோடி ரூபாய் திரட்டுகிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மதுவிலக்குக் கொள்கையை இங்கே அமல் செய்யப் போகிறோம் என்று சொன்ன உடனேயே மதுவை இங்கே தயாரிக்கக்கூட உரிமை அளிக்க முடியாது என்று கண்டிப்பாகச் சொல்லி இருக்கிறோம். மதுவை தயாரியுங்கள், அதற்காகப் பணம் கொடுங்கள் என்று கேட்ட தாகச் சொல்லப்படுவது கொஞ்சமும் ஆதாரம் அற்ற குற்றச் சாட்டு, பொறுப்பற்ற குற்றச்சாட்டு.

**திரு. எம். சுரேந்திரன்:** எப்போதும் பொறுப்பில்லாதவர்கள் பேசுவது பொறுப்பு இல்லாமல் இருக்கும். பொறுப்புள்ளவர்கள் பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தயவு செய்து ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள். மதுவை இங்கே தயாரிப்பதற்கு இந்த அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா?

**திரு. எம். சுரேந்திரன்:** உத்தரவிட்டிருப்பதாகச் சொல்ல வில்லையே. வியாபாரிகள் இந்தமாதியான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் 5½ லட்ச ரூபாய் சேலம், ஜில்லாவிற்கு கேட்டா வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இல்லை என்று சொல் கிறேன் நான். பொறுப்பை ஏற்றுக் கொள்கிறீர்களா, நிரூபிக்கத் தயாரா? சபாநாயகர் அவர்களையே தலைவராகக் கொண்டு ஒரு கமிட்டி போட்டு விசாரணை நடத்தலாம். உண்மை என்று சொன்னால் நான் ராஜினாமா செய்கிறேன், இல்லாவிட்டால் நீங்கள் ராஜினாமா செய்யத் தயாரா.

**திரு. எம். சுரேந்திரன்:** நான் பொறுப்பேற்றால், ராஜினாமா செய்வேன் என்று சவாலாகச் சொல்லியிருப்பேன். என்னை ராஜினாமா செய்ய சொல்ல உங்களுக்கு என்ன இருக்கிறது? நான் அப்படிச் சொல்லவில்லை.



1974 ஆகஸ்ட் 13]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தேங்காய் வியாபாரிகள், சொன்னது நெல் வியாபாரிகள், மற்ற வியாபாரிகள் பற்றிச் இருந்தால், உண்மையல்ல. அவர்களுக்கு நிரூபிக்கத் திராணி பேச்சு, ஆதாரம் இருந்தால் நிரூபிக்கட்டும். பொறுப்பற்ற உறுப்பினர் விதண்டாவாதம், அர்த்தமற்ற பேச்சு. மாண்புமிகு வாபஸ் வாங்கவேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன்:** கொடுக்கிறவர்கள் ரிகார்டு வைத்துக் கொண்டு கொடுப்பது இல்லை. அது வேறு விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுரேந்திரன். இந்த மன்றத்தில் பல முறை சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு குற்றச் சாட்டு சொல்வது என்றால் அதற்கு ஒரு முறை வகுத்து இருக் கிறோம். அந்த முறைப்படி சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவர் குற்றச்சாட்டு களுக்கு பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லி விட்டார். அவற்றை அவர் திரும்பப் பெறவேண்டும். ஆனால் அவைகளெல்லாம் நடவடிக்கைக் குறிப்பிலும் இருக்க வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன்:** சபாநாயகர் அவர்களே, நான் ஒன்றும் சட்டசபை விதிகளுக்கு மாறான பேச்சை பேசவில்லை. எங்களுடைய நம்பிக்கையில்லாத் தீர்மானம் சபையிலே விவாதத்தில் இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, சுரேந்திரன் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும்போது முதல் அமைச்சர் அவர்களும் அவசரப்படுகிறார்கள். சுரேந்திரன் அவர்களும் அவசரப்படுகிறார்கள். இம்மாதிரி ஒரு வழி இருக்கிறது என்று வியாபாரிகள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல் கிறார். சர்க்கார் சொன்னதாகச் சொல்லவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள், அதற்காக வியாபாரிகள் நிதி வசூல் பண்ணுகிறார்கள் என்று சுரேந்திரன் அவர்கள் சொல்ல வில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** குற்றம் சாட்டுவது சுரேந்திரன் அவர்கள். அதற்கு வக்காலத்து வாங்கிப் பேசுவது குமாரசாமி அவர்கள். அது சரியல்ல. சட்டசபையில் குற்றம்

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஆகஸ்ட் 13

சாட்டினால் அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும், பொறுப்பு ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர் சொல்லி விட்டார். அதுதான் இப்பொழுது விவாதத்தில் இருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** வியாபாரிகள் அப்படி பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொன்னார். அரசு கேட்டதாக அவர்கள் சொல்லவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அரசாங்கம் செய்த தாகத்தான் சொன்னார்கள். சுரேந்திரன் அவர்கள். அதற்கு அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு நிரூபிக்கத் தயாரா என்று கேட்டபொழுது, பொறுப்பேற்றுக் கொள்ள தயார் இல்லை என்று சொன்னார். அவை நடவடிக்கைக் குறிப்பிலே அவைகள் ஏறியிருக்கின்றன.

**திரு. எம். சுரேந்திரன்:** சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் அந்தமாதிரி ஒரு உத்தரவு போட்டதன் மூலம், அந்த உத்தரவின் காரணமாக இம்மாதிரி செய்கிறார்கள் என்று கூட சொல்லவில்லை. நான் சொல்லியதெல்லாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், தேங்காய் விவகாரம், கடலை விவகாரம், அரிசி கடத்தல் விவகாரம் ஆகிய வற்றில் எப்படி நடந்ததோ அதைப்போல இதுவும் நடக்கும் என்றுதான் கூறினேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மறுபடியும் கேட் கிறேன். எப்படி நடந்தது என்று சொல்ல வேண்டும். அரிசி வியாபாரத்தில் எப்படி நடந்தது, தேங்காய் வியாபாரத்தில் எப்படி நடந்தது, அதெல்லாம் எப்படி நடந்தது என்று சொல்ல வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன்:** நான் சாட்சியாக இருக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த இடத்தில் பேசுகின்ற உறுப்பினர்கள் பொறுப்போடு பேச வேண்டும். சட்ட சபையில் பேசுவது என்றால் பொறுப்போடு பேச வேண்டும். தேங்காய் வியாபாரம், நெல் வியாபாரத்தில் நடந்ததுபோல எப்படி நடந்தது என்று சொல்ல வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன்:** வியாபாரிகள் சொல்கிறார்கள்.



1974 ஆகஸ்ட் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மன்றத்தில் ஒரு பெட்டிஷன் கொடுக்கிறார் என்றால், வேறு யாராவது ஒரு பெட்டிஷன் கொடுத்தால் கூட, இந்த மன்றத்தில் அந்த பெட்டிஷனைக் கொடுக்கின்ற நேரத்தில், பெட்டிஷனில் கொடுத் திருக்கிற குற்றச்சாட்டிற்கான பொறுப்பை இந்த மன்றத்தில் அதைக் கொடுக்கின்ற உறுப்பினர் ஏற்றுக் கொள்ள வேண்டும். அம்மாதிரி இந்த மன்றத்தில் நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. வியாபாரிகள் சொல்கிறார்கள் என்று சொல்கிற நேரத்தில்; உறுப்பினர் அதை இங்கே சொல்கிற நேரத்தில் உறுப்பினர் தன்னிடமிருந்து அந்தப் பொறுப்பு போய்விடும் என்று நினைத்து விடக் கூடாது. உறுப்பினருக்கு அந்தப் பொறுப்பு உண்டு. குற்றச்சாட்டை வியாபாரிகள் சொல்கிறார்கள் என்று சொல்லி அதை இங்கே பொறுப்பில்லாமல் சொல்லிவிட முடியாது. அதுபற்றி உறுப்பினரே குற்றம் சாட்டி குறிப்பிடுவது போலத் தான் ஆகும். அதற்கு அவர்கள் பொறுப்பேற்க வேண்டும். அதுதான் இந்த மன்றத்தின் நடைமுறை.

**திரு. எம். சுரேந்திரன்:** சட்டசபையையும், கோர்ட்டையும் ஒரேமாதிரியாகக் கருதுவதற்கு இல்லை. ஒரு உத்தரவு போட்டிருக் கிறார்கள் என்று நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொது வாகத்தான் சொல்கிறேன். சர்க்கார் பற்றியும், இந்த அமைச்சர் அவை பற்றியும் வெளியிலே எப்படி எண்ணம் கொண்டிருக் கிறார்கள் என்பதைச் சொன்னால், சட்டசபை விதிகளுக்கு விரோதமான கருத்தாக அது எப்படி இருக்க முடியும்? பெட்டிஷன் கொடுப்பவருக்கு சாட்சியாக நான் இங்கே பேச வில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெட்டிஷன் இன்னொருவர் கொடுத்தாலும், அந்தப் பெட்டிஷனைப்பற்றி இந்த அவையில் குறிப்பிடும்பொழுது, அப்படிக் குறிப்பிடும் உறுப்பினர்தான் அதற்கு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன்:** இது பெட்டிஷன் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வியாபாரிகள் சொல் கிறார்கள், கடைகளிலே சொல்கிறார்கள் என்று சொன்னால், அதை சட்டசபையில் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்பொழுது

உறுப்பினர் அந்தக் குற்றச்சாட்டைக் குறிப்பிடுவது போலத் தான் ஆகும். ஆகவே, அப்படிக் குற்றச்சாட்டு சொல்கிற நேரத்தில் அதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டு ஆதாரத்தோடு பேச வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மதுவிலக்கைப் பொறுத்தவரையில் நான் நிருபர்களிடத்தில் அமைச்சர் அவைக் கூட்டம் முடிவடைந்த உடனே பேசியபொழுது, '1971-ல் மது விலக்கை ஒத்தி வைப்பதற்கு முதல் நாள் தமிழ் நாட்டில் மது விலக்குக் கொள்கை எப்படி அமல் நடத்தப்பட்டதோ அதே நிலை தான் மீண்டும் வரும்' என்று சொன்னேன். அப்படியிருக்கும் பொழுது, வியாபாரிகள் அல்லது பெரிய ஃபாக்டரி வைத்திருப் பவர்கள் மதுவினைத் தயார் செய்வதற்கு எந்தவிதமான உத்தரவும் இடுகிற அளவுக்கு எந்தவிதமான நிலையும் கிடையாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு மாறாக, வியாபாரிகளிடத்தில் ஒரு கோடி ரூபாய்க்கு பேரம் வைத்துப் பேசியதாகக் குற்றம் சாட்டுவது உண்மைக்கு முற்றிலும் மாறானது என்பதற்காகத்தான் நான் குறுக்கிட்டுச் சொன்னேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** முதல் அமைச்சர் அவர்கள் அப்படி யில்லை என்று சொன்னால் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. அம் மாதிரி இல்லை என்றால் ரொம்பவும் சரி. நான் அதைப்பற்றி கவலைப் படவில்லை. ஆனால் அவர்கள் அப்படி சொல்லக் கூடாது, அப்படி நடக்கவில்லை என்று இவர்கள் சொல்ல முடியாது. அதைத்தான் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் சொல்கிறார்கள் என்று அதை அமைச்சரவையோடு சேர்த்துப் பேசுவது சரியல்ல. வியாபாரிகள் எதெதெற்கோ நிதி வசூலிப்பார்கள். அதை வைத்து இணைத்து இந்த அமைச்சர் அவையோடு சேர்த்துப் பேச வேண்டாம்.

**திரு. எம். சுரேந்திரன்:** நான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து, அமர்கிறேன்.





**திரு. வை. பாலசுந்தரம்:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பேரவையிலே கொண்டுவரப் பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மிகக் கடுமையாக எதிர்த்து என்னுடைய வார்த்தைகளை நான் தொடர்கிறேன்.

ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத்தின் தொடர்பின்பொழுதும் இப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது ஒரு வாடிக்கையாக ஆகிவிட்டது என்று இங்கே பலரும் பேசினார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து பேசுவதை வெளியே இருக்கிற பொது மக்கள் வேடிக்கையாகக் கருதுகிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. பொறுப்பு வாய்ந்த இந்த மன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் இந்த நாட்டிலே வாழ்கின்ற 4½ கோடி மக்களுக்கு எப்படியெல்லாம் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் தேடித் தருகிற தலையாய பொறுப்பு உண்டு என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்த மாமன்றத்தை வழி நடத்திச் செல்கின்ற முதல் அமைச்சர் அவர்களுக்குத்தான் அத்தகைய பொறுப்பு உண்டு என்று மற்ற உறுப்பினர்கள் தட்டிக் கழித்தால் அவர்கள் தங்களுடைய பொறுப்பை தட்டிக் கழிக்கிறார்கள் என்று தான் பொருள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசப்பட்ட பேச்சுக்களிலெல்லாம் அரிசி கிடைக்க வில்லை என்று பேசப்பட்டதா, அரிசியே தமிழ் நாட்டில் இல்லை என்று பேசினார்களா என்பதை எண்ணிப் பார்க்கிறபொழுது, அரிசி இல்லை என்றார்களா அல்லது அரிசி விலை ஏறிவிட்டது என்று சொன்னார்களா என்றால் அதையெல்லாம் போட்டுக் குழப்பிக் கொண்டு பேசியதை நான் இங்கே பார்த்தேன். அரிசி விலை ஏறி இருக்கிறது என்பது தான் இங்கே பொருளாகும். அரிசி விலை ஏறியிருக்கிறது என்று சொல்வதை யாரும் ஒத்துக்கொள்ளத்தான் செய்கிறார்கள். ஆட்சியில் அமர்ந்திருக்கக் கூடியவர்கள் இல்லை, அரிசி விலை உயரவில்லை, ஏறவில்லை என்று யாரும் சொல்லுவதற்குத் [illegible] இல்லை. அரிசி தாராளமாக இருக்கிறது; [illegible]

[திரு. வை. பாலசுந்தரம்] [1974 ஆகஸ்ட் 13

அளவு தமிழ் நாட்டில் இருக்கிறது என்ற உத்தரவாதத்தை அரசு தருகிறது. ஆனால், அரிசி விலைதான் ஏறி இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது.

அரிசி விலை ஏறிவிட்டது என்றால் அது விலைவாசி ஏற்றத்தைக் குறிப்படுகிறது என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். விலைவாசி ஏற்றத்தைப் பொறுத்தவரையில் விலைவாசி ஏற்றத்துக்கு ஒரு மாநில சர்க்கார்தான் காரணமாக என்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். மாநில சர்க்கார் மீது விலைவாசி ஏற்றத்துக்கு பழியைச் சுமத்துவது உள்ளபடியே முறையற்றதாகும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்

பண்டித நேரு அவர்கள் பாராளுமன்றத்தில் பேசுகின்ற பொழுது கூறியதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நாட்டில் பஞ்சம் ஏற்படுகிறபொழுதாகயிருந்தாலும் சரி, நாட்டிலே கேடுபாடுகள் நடைபெறுகிறபொழுதாகயிருந்தாலும் சரி, அத்தனை பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ளக்கூடியது மத்திய அரசுதான் என்று சுட்டிக்காட்டும் வகையிலே அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதை நான் இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன். "பிரச்சினைகள் வரும்பொழுது நான் ஓடி ஒளிய விரும்பவில்லை; அவைகளை எதிர்நோக்க விரும்புகிறேன்; அவைகளைச் சமாளிக்க விரும்புகிறேன்; தட்டிக் கழிக்கவோ, சுற்றி வளைக்கவோ நான் விரும்பவில்லை; என்னுடைய மக்களுக்கு பிரச்சினைகள் ஏற்படும்பொழுது, அவைகளை என்னுடைய பிரச்சினைகளாகவே கருதுகிறேன்; 40 கோடி மக்களின் பிரச்சினைகளும் என் பிரச்சினைகள் தான்" என்று கூறியிருக்கிறார்.

ஒரு நாட்டினுடைய மக்களின் ஏற்றத்தாழ்வை அகற்றுவதும், ஒரு நாட்டினுடைய விவசாயிகளைப் பாதுகாப்பதும், ஒரு நாட்டு மக்களுடைய வாழ்க்கைப் பிரச்னையை சீர்தூக்கிப் பார்ப்பதும் மத்திய சர்க்காருக்கு உள்ள பொறுப்பு என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற விலைவாசி ஏற்றத்துக்கெல்லாம் காரணம் மத்திய சர்க்கார் தான் என்று நான் மிகவும் தைரியமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் மத்திய சர்க்கார்தான் என்பதை இந்த



1974 ஆகஸ்ட் 13] [திரு. வை. பாலசுந்தரம்]

சந்தர்ப்பத்தில் நான் அடித்துச் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்று சொல்லப்படுமானால், இன்றைக்கு தமிழகம் விலைவாசி ஏற்றத்தை சமாளித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் சிலர் கருதுகிறார்கள். படிக்காத பாமர மக்கள்தான் இப்படிப் பேசுகிறார்களா என்று எண்ணிப்பார்த்தால் நிச்சயமாக இல்லை. அவர்கள் சொன்னால் 'பாவம்' என்று சொல்லி சும்மா இருந்து விடலாம். படித்தவர்கள்தான் இப்படிப் பேசுகிறார்கள். பொறுப்புள்ளவர்கள்தான் இப்படிப் பேசுகிறார்கள். தமிழ்நாட்டில் ஒரே ஒரு ஆட்சிதான் நடப்பதாகக் கருதிக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சியை ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கின்ற மத்திய அரசு ஒன்று மேலே இருக்கிறது என்பதை படித்தவர்களும் பொறுப்புள்ளவர்களும் மறந்துவிடுகிறார்கள். அவர்களை பரிதாபத்தோடு ஒன்று கேட்க விரும்புகிறேன்.

25 ஆண்டு காலமாக இந்த நாட்டை ஆண்டுகொண்டிருப்பது காங்கிரஸ் கட்சிதான். அண்மை காலத்தில்தான் சில மாநிலங்களில்தான் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில மாநிலங்களில் தான் தங்களுடைய செல்வாக்கால் சில கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றி ஆண்டுகொண்டிருக்கின்றன. அது தவிர, 25 ஆண்டுக் காலமாக அதிகாரம் செலுத்தி, ஏகபோக உரிமை கொண்டு ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிற கட்சி காங்கிரஸ் கட்சிதான். அதை யாரும் மறுக்க முடியாது. இந்த நாட்டில் ஏற்படுகிற பஞ்சம், பட்டினி, பட்டினிச் சாவு, விலைவாசி ஏற்றம் இதில் எது வானாலும் சரி அதற்குப் பதில் சொல்ல வேண்டியது மத்திய அரசு தான்; இன்றைக்கு ஆட்சி செய்துகொண்டிருக்கிற இந்திரா காந்தி அம்மையார்தான் என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் விலைவாசி ஏற்றத்திற்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. தமிழகம் உணவு தானியத்தைப் பொறுத்த வரையில் தன்னிறைவு பெற்றுத் திகழ்கிறது என்று சொல்லிக் கொள்வதில் நாமெல்லாம் பெருமைப்பட்டுக்கொள்ளலாம். 1967-ல் ஏறத்தாழ 53 லட்சம் டன் நெல்லைத்தான் உற்பத்தி செய்தோம். ஆனால் 1973-74-ல் ஏறத்தாழ 73 லட்சம் டன் அரிசியை உற்பத்தி செய்கிறோம். அப்படி இருந்தும் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறதே, அதற்கு என்ன காரணம் என்று பார்க்க வேண்டும். மத்திய

[திரு. வை. பாலசுந்தரம்] [1974 ஆகஸ்ட் 13

சர்க்கார், முக்கிய உணவுப் பொருட்கள் தமிழ்நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கு அனுமதி இல்லாமல் செல்லக் கூடாது என்று போட்ட தடையை இந்தியப் பேரரசு எடுத்துவிட்டதால் இப்படிப் பட்ட உணவுப் பஞ்சம் ஏற்பட்டது என்பதை மறந்துவிடக் கூடாது.

இன்றைக்கு அரிசியை, நெல்லை உற்பத்தி செய்து கொடுக்கிறோம். 4 மாத காலத்திற்கு இடையிலேதான் அரிசி விலை கூடுதலாக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லும்போது உரத்தை விநியோகித்துக்கொண்டிருக்கும் மத்திய அரசு நடவடிக்கைகளையும் நாம் கவனிக்க வேண்டும். 4 மாதங்களுக்கு முன்னால் 75 கிலோ கொண்ட ஒரு மூட்டை உரம் 55 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்தது இன்றைக்கு 105 ரூபாய்க்கு விற்கிறது. இதற்குப் பொறுப்பு மத்திய அரசு. இதை எடுத்துச் சொல்வதற்கு எதிர்க் கட்சிக்காரர்கள் வக்கற்றுப்போய் இருக்கிறார்கள். விலைவாசி உயர்வுக்கு என்ன காரணம் என்று இந்த மாநில அரசைக் கேட்கின்ற எதிர்க் கட்சிகள்—இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்ற இந்திரா காங்கிரஸ்காரர்கள்—டில்லியிலே இருக்கின்ற இந்திரா காந்தி அம்மையாரை கேட்டிருக்க வேண்டும். உரத்திற்கு கூடுதலாக வரி ஏன் போட்டீர்கள்? தமிழ்நாட்டு விவசாயிகளை கெடுக்கிறீர்களே என்று இந்திரா காந்தி அம்மையாரைக் கேட்டிருந்தால் பொருத்தமாக இருக்கும். அதைச் செய்யாமல், தமிழ்நாட்டில் விவசாயிகள் நிம்மதியாக இருக்கிறார்களே, தமிழ்நாடு பசுமைப் புரட்சி மூலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருக்கிறதே, நிர்வாகத்தில் முதலிடம் வகிக்கிறதே என்ற காழ்ப்புணர்ச்சி கொண்டு, தமிழ்நாட்டு விவசாயிகளைக் கெடுக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக உரத்திற்கு கூடுதல் வரி போட்டு இங்கே இந்த நிலையை ஏற்படுத்தியிருக்கிறது டில்லி சர்க்கார் என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி மாற்றான் தாய் மனப்பான்மையோடு நடந்து கொண்டால் தமிழ்நாட்டின் நிலைமை எப்படி இருக்கும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் உற்பத்தியைக் கூட்டிக் கொடுக்கிறோம். அதனால் நமக்கு சில சலுகைகள் தேவை. உரத்தை தாராளமாக தமிழ்நாட்டிற்கு தருவதானால் நாம் உற்பத்



1974 ஆகஸ்ட் 13] [திரு. வை. பாலசுந்தரம்]

தியைப் பெருக்கி, மத்திய அரசுக்குத் தருகின்ற வாய்ப்பை உருவாக்கித் தருவது மட்டுமல்லாமல், மற்ற மாநிலங்களுக்கும் நாம் அரிசியை தருவோம் என்ற உத்தரவாதத்தையும் தந்திருக்கிறோம். இதைப்பற்றி மத்திய அரசு அக்கறை கொண்டிருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை.

நாம் வேகமாக முன்னேறுவது இங்கே இருக்கின்றவர்களுக்கே பிடிக்கவில்லை. நம் மாநிலத்திலே ஒழுங்கான ஆட்சி நடைபெறுவதை விரும்பாதவர்களாக இருக்கிறார்கள். ஆட்சி ஒழுங்காக நடக்க வேண்டும், மக்கள் சுபீட்சமாக வாழ வேண்டும் என்று யாரும் எண்ணவில்லை. இந்த ஆட்சிக்கு எதிராக சிலர் சேர்ந்து கூச்சல் போடுகிறார்கள்.

இன்றையதினம் நாம் உணவு தானியத்தில் தன்னிறைவு பெற்றுத் திகழ்கிறோம் என்பதால் நம்முடைய முதலமைச்சரவர்கள் பட்டினிச்சாவு கேரளத்தில் ஏற்பட்டபோது 10,000 டன் அரிசி வழங்கினார்கள். பக்கத்திலே இருக்கிற மாநிலத்திற்கு அரிசி வழங்கினார்கள். மற்ற பல மாநிலங்களுக்கும் வழங்கினோம். அப்போது என்ன சொன்னார்கள் தெரியுமா? முதலமைச்சர் இங்கே இருக்கிற அரிசியை வெளி மாநிலங்களுக்குக் கொண்டு போய் விற்று, அவருடைய கஜானாவை நிரப்பிக் கொள்கிறார் என்று வெளியிலே பேசினார்கள். நாமும் அதைக் கேட்டோம். இன்றைக்கு நிலைமை என்ன? தமிழ்நாட்டில் இருக்கிற அரிசியை கொண்டுபோய் ஒரு 6 மாத காலத்திற்கு முன்னால் மாநிலத்திற்கும் கேரளத்திற்கும் உத்தரப்பிரதேசத்திற்கும் முதலமைச்சர் விற்றுவிட்டதால் தமிழ்நாட்டு மக்கள் அரிசி இல்லாமல் அவதிப்படுகிறார்கள் என்று பேசுகிறார்கள். அவர்கள் பேச்சில் ஏதாவது பொருளுண்டா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் எதிர்க்கட்சிக்காரர்களைப் பார்த்துக் கேட்கிறேன், மனத் தெளிவோடுதான் நீங்கள் பேசுகிறீர்களா? (திரு. கோவை செழியன் எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நேரம் இல்லை.

**திரு. கோவை செழியன்:** இந்த மன்றத்திலே பேசும்போது, முழு விபரங்களுடன் பேசவேண்டுமென்று நீங்கள் சொன்னீர்கள். உரத்தின் விலை ஏற்றத்திற்கான காரணம் மத்திய அரசு தான்

[திரு. வை. பாலசுந்தரம்] [1974 ஆகஸ்ட் 13

என்று சொல்கிறார்கள். அது தவறு. அரேபியன் கன்ட்ரீசில் இருந்து வரக்கூடிய பெட்ரோலியம் ப்ராடக்ட்ஸ் நாப்தாவின் விலை ஏற்றத்தினால்—விலை ஏற்றம் இன்டர் நேஷனல் அளவில் உள்ளது—யூரியா போன்ற பொருட்களுக்கு விலை அதிகரித்துள்ளது. அதனால் மத்திய அரசு வேண்டுமென்றே விலையை ஏற்றிவிட்டது என்று சொல்வது சரியா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம்:** உண்மை நிலைமையை விளக்காமல் விலை ஏற்றத்திற்குக் காரணம் தமிழ்நாடு அரசுதான் என்று ஏன் இந்த அரசின் மீது பழி சுமத்த வேண்டும்? விலையேற்றத்திற்கு காரணமான டில்லியை சாடுவதற்கு வழியில்லை; இங்கே ஏமாந்தவர்கள் இருக்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டு சாடுகிறார்கள். பிரச்சனைகளை அணுகும்போது, எங்களோடு நீங்களும் சேர்ந்து கேட்டால் பரிகாரம் காணலாம்; விலையேற்றத்தைத் தடுக்கலாம். நமக்குள் ஒரு ஒற்றுமை இல்லாமல் என்னதான் பிரயத்தனம் செய்தாலும் இந்திரா காந்தி அம்மையார் அசையமாட்டார் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு இருக்கின்ற நிலைமைகளைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் உணவு தானிய உற்பத்தியில் குறைந்திருக்கிறோமா என்று பார்த்தால் இல்லை. பதுக்கல்காரர்கள், கள்ள மார்க்கெட்காரர்கள் இன்றைக்கு உணவு தானியத்தைப் பதுக்கி வைத்திருப்பதால் இந்தப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கடுமையான தண்டனை மூலம் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சிலர் இன்றைக்குச் சொல்கிறார்கள். 1965-லே இப்படிப்பட்ட அரிசிப் பஞ்சம் ஏற்பட்ட காரணத்தினால்தான் ஆட்சி கை மாறியது என்று சொன்னார்கள். அரிசிப் பஞ்சம் ஏற்பட்டதால் மட்டும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைப் பிடித்துவிடவில்லை. அன்றைக்கு இருந்த நிலைமை என்னென்ன என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். அரிசி கிடைக்கவில்லை என்றால் பால் சாப்பிடு, பழம் சாப்பிடு என்று அன்றைக்கு இருந்தவர்கள் சொன்னார்கள்.

அரிசிப் பிரச்சனை ஒன்றை வைத்துத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது என்றால், 1952-ல் காங்கிரஸ் கட்சிதான் ஆட்சியில் இருந்தது என்பதை



1974 ஆகஸ்ட் 13]

யாரும் மறந்துவிடக் கூடாது. அப்போது 6 அவுன்ஸ் அரிசிதான் போட்டார்கள். அதற்குப் பின்னால் 1962-லும் காங்கிரஸ் ஆட்சி தான் ஏற்பட்டது. ஆகையால் அரிசிப் பிரச்சனையை மட்டும் வைத்து ஆட்சிக்கு வந்துவிடலாம் என்று கனவு காணபார்களே யானால் அது பகற்கனவுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் ஏழை எளிய மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு, தொழிலாளர் தோழர்களுக்கு, பிற்பட்ட மக்களுக்கு எல்லாம் பாதுகாப்பளித்து, அவர்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவது இந்த அரசு ஒன்றுதான். அந்த மக்கள் எல்லாம் இந்த அரசைத்தான் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி நல்ல பல காரியங்களை இந்த அரசு செய்துகொண்டிருக்கும் போது, அதன் பலன்கள் அந்த மக்களுக்கு கிடைப்பதை தயவு செய்து தடுத்து நிறுத்தாதீர்கள்; இந்த ஆட்சி மூலம் அவர்களுக்குக் கிடைக்கின்ற நன்மைகளுக்கு குறுக்கே நிற்காதீர்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டுகோள் விடுத்து, என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்துடன் பேரவையின் இன்றைய அலுவல்கள் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

## 6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

**71. Notification issued with G.O. Ms. No. 629, Rural Development and Local Administration, dated the 16th March 1974, in regard to declaration of the areas forming the Sirkali Local Planning Area.** [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

72. Notification issued with G.O. Ms. No. 97, Rural Development and Local Administration, dated the 18th January 1974, in regard to division of wards and reservation of two seats for Scheduled Castes and two seats for women in the Tambaram Municipal Council. [Laid on the table of the House under secion 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

73. Notification issued with G.O. Ms. No. 33, Rural Development and Local Administration, dated the 3rd January 1974, in regard to division of wards and reservation of one seat for Scheduled Castes and two seats for women in the Kancheepuram Municipal Council. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

74. Notification issued with G.O. Ms. No. 136, Rural Development and Local Administration, dated the 23rd January 1974, in regard to division of wards and reservation of one seat for Scheduled Castes and one seat for women in the Kovilpatti Municipal Council. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

75. Notification issued with G.O. Ms. No. 648, Rural Development and Local Administration, dated the 16th March 1974, in regard to declaration of the areas forming the Pattukottai Local Planning Area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

*B. Reports, Notifications and Other Papers.*

26. Errata issued with Memo. No. 8398/ME/74-1, Rural **Development and Local Administration, dated the 1st March** 1974 to the Notification No. II (2) Rule 100 (*d*)/74, dated the **2nd January 1974 published at pages 5 to 9 of Part II—Section 2** of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the **4th January 1974.**



## இணைப்பு I.

(143-ம் பக்கத்திலுள்ள 51 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.)

(அ) ஆம். எல்லாபுரம் பஞ்சாயத்து யூனியனிலும், கும்மிடிப் பூண்டி பஞ்சாயத்து யூனியனிலும் முறையே 12,500 அட்டைகளும் 12,000 அட்டைகளும் வழங்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

(இ) 28—2—1974 வரையில் எல்லாபுரம், கும்மிடிப்பூண்டி பஞ்சாயத்து யூனியன்களில் கீழ்க்கண்டவாறு உரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன :—

| | எல்லாபுரம் | கும்மிடிப்பூண்டி |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| விற்பனை நிலையங்கள் | 11 | 10 |
| மத்திய உரத்தொகுப்பு | 241. மெட்ரிட் டன்கள் யூரியா. | 133-1/2 மெட்ரிட் டன்கள் யூரியா. |
| | 184 மெட்ரிட் டன்கள் டை அம்மோனியம் பாஸ்பேட் D.A.P. | 7 மெட்ரிட் டன்கள் டை அம்மோனியம் ாாஸ்பேட் D.A.P. |
| தனியார் உரத்தொகுப்பு | 27· மெட்ரிக் டன்கள் மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் யூரியா. | 8· மெட்ரிக் டன்கள் மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் யூரியா. |

இவை 28—2—1974 முடிய தனியார் கடைகளின் மூலமாக அடையாளச் சீட்டு வைத்திருப்பவர்களுக்கு விற்கப்பட்டன.

இணைப்பு II [1974 ஆகஸ்ட் 13

(153 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## PROGRAMME OF BUSINESS FOR THE MEETING OF THE LEGISLATIVE ASSEMBLY AS DECIDED BY THE BUSINESS ADVISORY COMMITTEE AT ITS MEETING HELD ON 12TH AUGUST 1974.

*Monday, the 12th August 1974 and Tuesday the 13th August 1974.*

Discussion on the No-confidence Motion.

*Wednesday, the 14th August 1974.*

1. Presentation of the First Supplementary Statement of Expenditure for the year 1974-75.

2. Discussion on the No-Confidence Motion.

*Thursday, the 15th August 1974.*

Independence Day—Holiday.

*Friday, the 16th August 1974*

Discussion on the 'No-Confidence Motion'.

Last Day.

*Saturday, the 17th August 1974.*

Government Resolutions—

(1) Resolution on the De-limitation of the Parliamentary and Assembly Constituencies in Tamil Nadu.

(2) Resolution on "Katcha Theevu".

*Sunday, the 18th August 1974.*

Holiday.



*Monday, the 19th August.*

*Tuesday, the 20th August and Wednesday the 21st August 1974.*

Discussion on the Annual Financial Statement for 1974-75 and Supplementary Financial Statement for 1973-74 of the Tamil Nadu Electricity Board.

*Thursday the 22nd August 1974.*

1. Discussion on the First Supplementary Statement of Expenditure and Voting on Demands for Grants for further expenditure in the year 1974-75.

2. Introduction of Appropriation Bill.

*Friday the 23rd August 1974.*

Official Bills and Resolutions.

*Saturday the 24th August 1974.*

1. Consideration and passing of Appropriation Bill.

2. Official Bills.

*Sunday the 25th August 1974.*

Holiday.

*Monday the 26th August 1974.*

Official Bills (if necessary).

The Assembly, as usual, will sit from 9 a.m.

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

## புதன்கிழமை, 1974 ஆகஸ்ட் 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

*Water sports at Mahabalipuram*

* 61 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to open water sports at Mahabalipuram; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) மாமல்லபுரத்தில் நீர் விளையாட்டுக்களைத் தொடங்குவதற்கான வாய்ப்பு குறித்து ஆய்வு செய்த ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட வல்லுநர்கள் குழுவின் அறிக்கையைப் பொறுத்து இருக்கிறது. மேலே குறிப்பிட்ட அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, வல்லுநர்கள் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் எப்பொழுது செயல் முறைப்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தை எந்த எந்த வகைகளில் சுற்றுலாவுக்கேற்ற வகையில் சீர்படுத்தலாம் என்பது குறித்து ஆராய்ந்து ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட வல்லுநர்கள் குழு அறிக்கையொன்றைத் தயாரித்திருக்கிறார்கள். அது மத்திய அரசுக்குச் சென்று, மத்திய அரசிலிருந்து நமக்கு வர வேண்டும். அதை தமிழக அரசு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகுதான் அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.

[1974 ஆகஸ்ட் 14

## இராமேஸ்வரத்தில் தகவல் நிலையம்

*62 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமேஸ்வரத்தில் யாத்திரீகர்கள் வசதிக்கென தகவல் நிலையம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் இரயில் நிலையத்தில் சுற்றுலாத் தகவல் நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்று இருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, அது எப்பொழுது அமுல் நடத்தப்படும் என்பதை அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இராமேஸ்வர தென் பிராந்திய இரயில்வே அதிகாரியைக் கலந்தாலோசித்து வரைப்படத்தைத் தயாரித்து வருவதாக மதுரை சுற்றுலா அதிகாரி தெரிவித்திருக்கிறார். இடத்தை ஒதுக்கும்படியாக இரயில்வே அதிகாரிகளை நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இடம் கிடைத்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. த. சோனையா:** தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்திற்கு இந்தியாவின் வட மாநிலங்களிலிருந்தும், பல மொழிகள் பேசுகிறவர்கள் வருவதால் அப்படிப்பட்டவர்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டுமானால், பல மொழிகள் தெரிந்தவரைத் தகவல் நிலைய அதிகாரியாக நியமிக்கவேண்டும். அப்படிச் செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மதுரை இரயில் நிலையத்தில் இப்படிப்பட்ட ஒரு தகவல் நிலையத்தை வைத்திருக்கிறோம். இராமேஸ்வரத்திலும் அப்படிப்பட்ட தகவல் நிலையம் வைப்பதும் இந்தச் சுற்றுலாத் துறையினுடைய நோக்கமாகும். இரண்டு வரவேற்பாளர்களைக் கொண்ட நிலையங்கள் அமைக்கப்படும் என்று கூறப்படுகிறது. பல்வேறு மொழிகள் தெரிந்தவர்கள் வரும்போது, அவர்களுக்கு வழிகாட்டிகளாக இருப்பவர்களும் பல மொழிகள் தெரிந்தவர்களாக



1974 ஆகஸ்ட் 14]

இருக்கவேண்டும் என்பதுதான் நோக்கம். ஆகவே, தகவல் நிலையம் அமைக்கும்போது, தேவைகளையொட்டி இந்தச் செயல்கள் நிறைவேற்றப்படும்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் இம்மாதிரியான தகவல் நிலையங்கள் வைக்கப்பட்டுள்ளன? இந்தத் தகவல் நிலையங்கள் எந்த அடிப்படையில் வைக்கப்படுகின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, எந்த எந்த இடங்களில் என்ற விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால், அந்த விவரக் குறிப்புகளை அறிந்து சொல்லலாம். ஆனால், எங்கெங்கு அதிகமான எண்ணிக்கையில் வெளி மாநிலங்களிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் சுற்றுப் பயணிகள் வருகிறார்களோ, அந்த இடங்களில் அவர்களுக்கெல்லாம் தகவல் தர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட இடங்களாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்து நாம் தகவல் நிலையங்களை அமைக்கின்றோம்.

## *Corporation for taxis and auto-rickshaws*

* 63 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether there is any proposal to set up a Corporation to take over the taxis and auto rickshaws in the State?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அப்படி ஒரு வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு இல்லை.

## அரிகேசவநல்லூருக்கு சித்த வைத்திய சாலை

*64 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி பஞ்சாயத்து யூனியனில் உள்ள அரிகேசவநல்லூர் கிராம பஞ்சாயத்தில் ஒரு சித்த வைத்தியசாலை திறக்கப்பட வேண்டுமென்று பஞ்சாயத்து யூனியனிடமிருந்து 22—5—1973-ல் மனு ஏதேனும் அனுப்பியதா?

[1974 ஆகஸ்ட் 14

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) அரிகேசவநல்லூரில் அரசாங்க மானியத்துடன் ஒரு கிராமிய சித்த மருந்தகத்தைத் திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### மருத்துவ ஆய்வுக்கூட நுட்பனர்கள்.

*** 65 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மருத்துவ ஆய்வுக்கூட நுட்பனர்கள் சங்கம் (Medical Laboratory Technicials Association) 5—8—1973 அன்று அதன் பொதுக் காரியதரிசி மூலம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் மகஜர் அளித்தார்களா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை. ஆனால் 26—7—73 தேதியிட்ட விண்ணப்பம் ஒன்று அரசுக்குக் கிடைக்கப் பெற்று அது ஆய்வில் இருக்கிறது.

### *Water Supply Schemes*

* 66 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have any proposal to provide protected water supply to all the urban and rural areas in the State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சட்டப் பேரவை முன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

@ [illegible]ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 ஆகஸ்ட் 14]

**திரு. த. சோனையா:** தலைவர் அவர்களே, இந்த குடி நீர் வழங்கு திட்டத்தில் கார்ப்பரேஷன் போன்ற பெரிய இடங்களுக்கு நல்ல வசதிகளை அரசாங்கம் செய்து தந்திருக்கிறது. அதேபோல், பாதுகாக்கப்பட்ட குடி நீர் திட்டத்தின்கீழ் கிராமங்களுக்கும் கொடுக்கப்படுகிறது. ஆனால், அதிகமான மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு இன்னும் தமிழ்நாட்டில் குடி நீர்த் திட்டம் இல்லாமல் இருக்கிறது. அங்கும் இத்தகைய வசதிகளைச் செய்வதற்கு அரசாங்கம் தீவிரமான ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து செயல்படுத்துமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** 626 பேரூராட்சிகளில், 71 பேரூராட்சிகளுக்கு இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பேரூராட்சிகளினுடைய நிதி நிலையைப் பொறுத்தும், கடன் வசதியைப் பொறுத்தும் அண்மைக் காலத்தில் தொடங்கப்பட்ட திட்டம் என்ற முறையில் எதிர்காலத்தில் விரைவுபடுத்துவதற்கான எல்லா முயற்சியும் இருக்கிறது.

**திரு. த. சோனையா :** தலைவர் அவர்களே, மேஜர் பஞ்சாயத்துக்கள் பொருளாதாரத்தில் மிகவும் கீழ் மட்டத்தில் இருக்கின்றன. கடன் வாங்கியாவது குடி நீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மேஜர் பஞ்சாயத்துக்கள் தீர்மானித்திருக்கின்றன. குடி நீர்ப் பிரச்சினை மிக முக்கியமானது. மனிதனுக்கு மிகவும் முக்கியமான பிரச்சினை. அதை உடனடியாகத் தீர்ப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அதனாலேதான் எண்ணிக்கை விவரத்தை நான் சொன்னேன். மாநகராட்சி பகுதியில் மக்கள் தொகை மிக அதிகம் என்ற காரணத்தால் அந்தத் திட்டங்கள் எப்போதோ செயல்படுத்த ஆரம்பிக்கப்பட்டன. பேரூராட்சிப் பகுதிகளிலும் குடி தண்ணீர்த் திட்டம் அவசியம் என்பதை அரசு உணர்ந்து அண்மைக் காலத்தில்தான் அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் எத்தனைத் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதையும், எவ்வளவு கடன் வசதி கிடைக்கிறது என்பதையும் அடிப்படையாக வைத்து இவைகளில் முன்னுரிமை தரவேண்டிய பேரூராட்சிகளுக்கு முன்னுரிமை தந்து இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

[1974 ஆகஸ்ட் 14

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, இந்தக் குடி தண்ணீர் வாரியத்தின் மூலமாக 13 நகரங்களிலும், 626 பேரூராட்சிகளில், 71 பேரூராட்சிகளிலும் குடி தண்ணீர் வழங்கும் திட்டங்கள் செயலில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். சிங்காநல்லூர் நகரசபைப் பகுதியில் மக்கள் காசு கொடுத்துத்தான் தண்ணீர் வாங்க வேண்டிய அவசிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கோயம்புத்தூரை அடுத்த ஒரு பெரிய நகரசபைப் பகுதியில் இப்படிப்பட்ட திட்டத்தை அரசாங்கம் ஏன் அவசரமாக எடுத்துச் செயல்படுத்த முன்வரவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தனிப்பட்ட ஒரு நகரசபையைக் குறித்து தனியாகத்தான் கேள்வி போட வேண்டும். ஆனாலும், சிங்காநல்லூரைப் பொறுத்தவரையில் சிறுவாணித் திட்டத்திலே அதற்கும் பங்கு கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, in Dharmapuri district there are a number of panchayats which are small and their income is inadequate and they are not able to provide drinking water and unless the Government comes forward the panchayats are not going to provide any drinking water-supply. May I know if the Hon. Minister will take steps to provide water-supply to such small villages and panchayats?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, கிராமங்களுக்கான குடி தண்ணீர்த் திட்டம் அந்தக் கிராமங்களினுடைய நிதி வசதியைப் பொறுத்து நடத்தப்படவில்லை. அவசியம் என்ற அடிப்படையில் நடத்தப்படுகிறது. ஆனால், பேரூராட்சியாக இருக்குமானால், ஏதாவது ஒரு வகையில் கடனைத் திருப்பிக் கட்ட வாயில்களை ஆராய்ந்துதான் கடன் பெற முடிகிறது. அதற்கிடையில் வேறு ஏதாவது கிராமத்தைப் பொறுத்த வரையில், பேரூராட்சியாக இருந்து, அந்த நிலைமை பரிசோதிக்கப்பட வேண்டுமானால் பரிசீலித்துப் பார்க்கலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இப்பொழுது நமது சென்னை மாநகராட்சியில் பல இடங்களில் குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு இருக்கிறது. இடைக்கால நிவாரணம் என்ற முறையில் அதற்கு



1974 ஆகஸ்ட் 14]

என்ன என்ன வழிமுறைகளை அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது? அதற்குக் கார்ப்பரேஷன் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்ற விவரத்தையாவது அமைச்சரவர்கள் தருவார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இதுவும் தனிக் கேள்விக்குரியதாக இருந்தாலும், என் நினைவிலிருந்து தெரிவிக்கின்றேன். ஏறத்தாழ ஐம்பது இலட்சம் ரூபாய் அளவுக்குப் பல்வேறு திட்டங்கள் இடைக்காலத்தில், தண்ணீர் வறட்சி நேரத்தில் மக்களுக்குப் பயன்படுவதற்கான பல்வேறு நிலைகளில், குழாய்க் கிணறுகள்—பம்ப் செட்கள்—எந்த எந்தப் பகுதிகளிலே அமைக்க வேண்டுமோ அங்கு அமைத்திருக்கிறார்கள். மேலும், தேவைக்கேற்ப கவனிப்பார்கள்.

**திரு. ஆர். பரந்தாமன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பல திட்டங்களை ஆய்வு நடத்தி, மத்திய அரசுக்கு ஒப்புதலுக்காக அனுப்பி ஓரிரண்டாண்டுகள் ஆகியும், இன்னும் ஒப்புதல் வரவில்லை என்பது உண்மையா? ஒப்புதலுக்குக் காத்திராமல், குடிநீர் வாரியமே அந்தத் திட்டங்களைச் செயல்படுத்த முன்வந்திருப்பதும் உண்மையா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, ஆக்சிலரேடட் வாட்டர் ப்ரோக்ராம் என்ற பெயரால் விரிவுபடுத்தப்பட்ட குடி தண்ணீர்த் திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மத்திய அரசு ஒரு ஆலோசனை வழங்கி. நிதி வழங்குவதாகத் தெரிவித்தார்கள். அந்தத் திட்டத்தின்கீழ், ஏறத்தாழ 467 கிராமங்களுக்கான திட்டங்கள் அனுப்பப்பட்டன. அவற்றில் 421-க்கான திட்டங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஒத்துக்கொண்டதற்கு அதிகமான தொகையை மாநில அரசு வழங்கி அதன் மூலமாக இந்தத் திட்டங்கள் பெருமளவு நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**திரு. ச. சங்குமுத்துத் தேவர்:** தலைவர் அவர்களே, கிராம பஞ்சாயத்துகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு—முதலில், ஆய்வு வேலை நடத்துவதற்காக—இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ்—என்று அந்தந்த பஞ்சாயத்துகளைப் பணம் கட்டச் சொல்கிறார்கள். அந்தத் தொகை அதிகமாக இருப்பதால் அதை அரசே மேற்கொண்டு ஆய்வு வேலைகளை நடத்துவார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அப்படி ஏதாவது ஒரு பஞ்சாயத்தின் நிதி நிலைமை ஆய்வு வேலையை நடத்துவதற்குரிய தொகையைக் கூடக் கட்ட முடியாததாக இருந்தால், திட்டத்தின் கடன் தொகையை அவர்கள் எப்படித் திருப்பிக்கட்டுவார்கள் என்பதும் பரிசீலிக்கப்பட வேண்டியதாகும். ஆய்வு வேலைக்கான முழுத் தொகையையும் அரசே ஏற்றுக்கொள்வது என்பது கடினம். எந்தெந்த கிராமங்களில் பொருளாதார நிலை மிகத் தாழ்வாக இருக்கிறதோ அவைகளுக்கு எப்படிப் பரிவு காட்டலாம் என்பதை அரசு ஆலோசித்து வருகிறது.

**திரு. சி. ஆறுமுகம் :** செங்கற்பட்டு மாவட்டத்தில்—குடிநீர் வடிகால் வாரியத்தினால் எத்தனை கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது? எத்தனை கிராமங்களுக்குச் செய்துகொடுக்க திட்டமிட்டிருக்கிறது? காலதாமதம் இருக்குமானால் அதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தனிக் கேள்வி போட்டால் புள்ளிவிவரங்களோடு விடை அளிக்க முடியும்.

**திரு. கோவை செழியன் :** நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் இதே கேள்வியைத் திருப்பித் திருப்பிக் கேட்கிறோம். நிலைமையில் மாற்றம் இல்லை. கிராமங்களில் குடி-தண்ணீர் வசதி செய்து கொடுக்க—மாதிரித் தண்ணீர் எடுத்து கிண்டிக்கே பரிசோதனைக்கு அனுப்பப்படுகிறது. அறுபது விழுக்காடுகளுக்குமேல், அவற்றை குடிப்பதற்கு லாயக்கற்றவை என்று மறுக்கிறார்களே என்பதாக சிறுவாணி, காவேரி தண்ணீரை கூட எடுத்து அனுப்புகிறார்கள். அவற்றையும் அவர்கள் மறுத்துவிடுகிறார்கள். இதனால் ஏழை அரிசனங்கள் மற்றவர்கள் குடிப்பதற்குத் தண்ணீர்கூட இல்லாமல் பல கிராமங்களில் தவிக்கிறார்களே, இந்த முறையை மாற்ற அரசு முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** விஞ்ஞானத்தை அரசியல் நோக்கத்தில் கட்டுப்படுத்துவது என்பது முடியாத காரியம். யாரோ தனிப்பட்டவர் ஒருவர்—இருவருக்காக வெட்டுகிற கிணறு என்பது வேறு. சமுதாயத்திற்காக குடிதண்ணீருக்காக கிணறு வெட்டுகிறபோது—அந்தக் கிணற்றுத் தண்ணீர் குடிப்பதற்கு லாயக்கானதுதானா என்பதைப் பரிசீலித்துத்தான் அந்தக் கிணறு



எடுக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. தண்ணீரை ஆராய்ந்து பார்க்காமல் கிணறு எடுத்து—குடிப்பதற்குத் தண்ணீரை எடுத்துச் செல்ல அனுமதிக்க முடியாது. இந்தக் காரணத்தினால்தான் அந்தவிதமான பரிசோதனை நடக்கிறது. அது மிகவும் அவசியமானது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கன்னியாகுமரி ஜில்லாவில் பத்மநாபபுரம் ஒன்றியத்தில் குடி-தண்ணீர் திட்டத்திற்காக இன்வெஸ்டிகேஷன் சார்ஜை கவர்ன்மெண்டிடம் ஒப்படைத்தாகிவிட்டது. இதுவரை அந்தத் திட்டம் நடைபெறவில்லை. அந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு உறுப்பினரது கேள்வியிலேயே விடை இருக்கிறது, குடிதண்ணீர் எந்த இடத்தில் இருந்து எடுப்பது, அதன் விளைவு எப்படி இருக்கும் என்பது எல்லாம் முதற்கட்டமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும். அடுத்து அதன் நிதிநிலைமை திட்டத்திற்கேற்ப ஒத்து வருகிறதா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். நிதித்துறை பரிசீலித்து, பின்னர் கடன் கிடைக்க வாய்ப்பு இருக்கிறதா என்பதும் பரிசீலிக்கப்பட்டு—முன்னுரிமை வழங்கப்பட்ட திட்டங்களின் வரிசையில் இது எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஆக கொஞ்சம் காலதாமதம் ஆகத்தான் செய்யும்.

**திரு. பெ. சீனிவாசன் :** இந்தக் குடிநீர் வழங்கும் திட்ட வேலைகளை குடிநீர் வடிகால் வாரியம் ஆரம்பிக்கிற நேரத்தில் அந்தந்த கிராம பஞ்சாயத்துத் தலைவர்களை, ஒன்றியத் தலைவர்களைக் கலந்துகொண்டு செயலாற்றுகிற முறை இருக்கிறதா? இல்லையென்றால் அப்படிச் செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** குடிநீர்-வடிகால் வாரியத்தின் பணி தனி வகையானது. தண்ணீரே இல்லாத கிராமங்களுக்கு—எப்படித் தண்ணீர் வழங்கலாம் என்பதை உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவி கொண்டு பரிசீலிப்பதும் அதைச் செயல்படுத்துவதாக இருக்கிறது, ஒன்றியத் தலைவர்களின் அனுமதியைப் பெற்றுத்தான்—பஞ்சாயத்துத் தலைவர்களைக் கலந்துகொண்டு—

உள்ளாட்சித் துறையே நடத்துகிற திட்டமாக இருந்தாலும், வாட்டர் போர்டு செயல்படுத்துகிற திட்டமாக இருந்தாலும்—இன்றைக்கும் செயல்பட்டு வருகிறார்கள்.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** கன்னியாகுமரி மாவட்டத்தில் 1964-இல் போடப்பட்ட பெரிய திட்டம்—மாம்பழத்துறை நீர்த்தேக்க திட்டம் இன்றைக்கும் செயல்படாமல் முடங்கிக் கிடக்கிறது. அதை நிறைவேற்றினால் குளச்சல், பத்மநாபபுரம்—இவற்றுக்கு இடைப்பட்டிருக்கிற பஞ்சாயத்துகள் எல்லாம் பயன்பெறும். இதற்காக இன்வெஸ்டிகேஷன் சார்ஜை பல பஞ்சாயத்துக்களும் கட்டியிருக்கின்றன. பத்மநாபபுரம் கட்டியிருக்கிறது. இதுவரை நிறைவேற்றப்படாமல் இருக்கும் அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அங்கத்தினருடைய ஆர்வம் தனிக் கேள்வியாக வெளிப்பட்டிருக்குமானால் முழு விடையும் கொடுத்திருக்கலாம். எனக்குத் தெரிந்த வரையில் இன்வெஸ்டிகேஷன் சார்ஜைக் கட்டிய சில பஞ்சாயத்துகள் கூட அந்தத் தொகையைத் திருப்பிப் பெற்றுக்கொண்டுவிட்டார்கள். அந்தப் பெரிய திட்டத்திற்குக் கடன் கிடைக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, குறைந்த செலவில் வேறு எப்படி திட்டத்தை மாற்றி அமைக்கலாம் என்பது பரிசீலிக்கப்பட வேண்டும். அந்த வேலை தொடர்கிறது.

**திரு. பெ. சீனிவாசன:** இப்போது நிறைவேற்றப்பட்ட திட்டங்களில் பெரும்பாலான இடங்களில்—அமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணத்தில் பார்த்திருப்பார்கள்—குடிப்பதற்கு ருசி இல்லாததாக இருக்கிறது. ஆகவே அது பெரிதும் பலன் அளிக்கிறது என்று சொல்ல முடியாது. ஆகவே ஆற்றுத் தண்ணீரைப்போன்ற ருசியான தண்ணீரை சப்ளை செய்ய தனி முயற்சி எடுத்துக்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** நண்பர் சீனிவாசன் அவர்களது கேள்வி திரு. கோவை. செழியன் கேட்ட கேள்விக்கு நேர்விரோதமானது பரிசீலனைக்குத் தண்ணீரை அனுப்பும்போது வேறு கிணற்று நல்ல தண்ணீரைக் கூடச் சில இடங்களில் அனுப்பி



விடுகிறார்கள். இதனால் ஏற்படுகிற விளைவுகள் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. பொதுவாக குடிப்பதற்கு லாயக்கான தண்ணீர் இருந்தால்தான் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள்.

### *Water-supply for Southern Petro-Chemical Industries*

* 67 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether water from Thambaraparani is to be supplied to the Southern Petro-Chemical Industries Corporation water treatment Plant at Tuticorin; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) தூத்துக்குடியிலுள்ள திருவாளர்கள் சதர்ன் பெட்ரோகெமிகல் இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷனுக்கு பேய்க்குளத்திலிருந்து நீர் வழங்கப்படும். இக்குளத்திற்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து நீர் கிடைக்கிறது.

(இ) தூத்துக்குடி தொழிற்சாலைக்கு நாள் ஒன்றுக்கு 20 மில்லியன் காலன் நீர் வழங்கப்படும் திட்டத்திற்கு 1970 நவம்பர் திங்களில் அரசு நிர்வாக ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்தின் கீழ், குழாய்கள் அமைப்பதற்கு ரூ. 470 லட்சமும், இவற்றை ஆண்டுதோறும் பராமரிப்பதற்காக ரூ. 19.00 லட்சமும் செலவு ஆகும். தாமிரபரணி ஆற்றிலிருந்து நீர் பெறும் பேய்க்குளத்திலிருந்து தூய்மைப்படுத்தப்படாத நீர் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இங்கிருந்து நீர் சுமார் 4 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள தூய்மைப்படுத்தப்படும் இடத்திற்கு 1,200 மில்லி மீட்டர் விட்டமுள்ள முன்னரே அழுத்தப்பட்ட கான்கிரீட் குழாய்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது. தூய்மைப் படுத்தப்பட்ட பின்னர், வடிகட்டிய நீர் 1,200 மில்லி மீட்டர் விட்டமுள்ள முன்னரே அழுத்தப்பட்ட கான்கிரீட் குழாய்கள் மூலம் சுமார் 11 கிலோ மீட்டர் தொலைவில் திருவாளர்கள் சதர்ன் பெட்ரோகெமிகல் இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் வளவுக்குள் அமைக்கப்பட்டுள்ள நிலமட்ட தொட்டிக்கு எடுத்துச் செல்லப்படும்.

THIRU N. DENNIS: May I know from the Hon. Minister whether the Government have received any complaint frim the people of that locality that agricultural and domestic purposes would be affected by such allotment?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைத் திட்டம் வருகிறபோது இதற்கான தண்ணீர் வாய்ப்பு எப்படி இருக்கிறது என்று பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. இதனால் விவசாயம் பாதிக்கப்படாது என்ற அடிப்படையில்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : இந்தத் திட்டத்திற்கு அரசாங்கம் எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறது? அதேமாதிரி சதர்ன் பெட்ரோகெமிகல் நிறுவனத்தார் எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : இந்தத் திட்டத்திற்கான முழுச் செலவையும் சதர்ன் பெட்ரோகெமிகல் இண்டஸ்ட்ரியல் நிறுவனத்தார் ஏற்று இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். வேண்டுமானால் தனியாகக் கேள்வி போட்டால் சரியான புள்ளி விவரம் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினா எண் 68-க்குத் திருத்திய விடை தரப்பட வேண்டுமென்ற தகவல் வந்திருக்கிற காரணத்தினால், அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

### கைத்தறி நிதிக் கார்ப்பரேஷன் கடன்கள்

* 69 **வினா—திரு. கி. ஜெயராமன்** : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனிப்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு (Individual handloom weavers) தமிழ்நாடு கைத்தறி நிதிக் காப்பரேஷனில் தற்போதுள்ள பங்குகள் பேரில் கடன் கொடுக்கும் முறையை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.



### கூட்டுறவு நூற்பாலைகளுக்கு பருத்தி கொள்முதல்

* 70 **வினா.—திரு. கி. ஜெயராமன்** :

**திரு. என். கே. பழனிசாமி** : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்வேறு கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்குத் தேவையான பருத்தியை மையப்படுத்தி வாங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : ஆம்.

**திரு. கி. ஜெயராமன்** : கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்குத் தேவையான பருத்தியை மையப்படுத்தி வாங்கும் செயற்குறிப்பு பற்றி கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. ஆனால், அண்மையிலே மேற்கொண்ட ஒரு திட்டம் பிரதேச வாரியாகக் கொள்முதல் செய்கின்ற திட்டமாக இருக்கிறது. அதனை மையப்படுத்துகின்ற திட்டத்தை மேற்கொள்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : ஆம் என்று பதில் சொன்னேன்.

**திரு. என். கே. பழனிசாமி** : சார், வருஷம் ஒன்றுக்கு எவ்வளவு பருத்தி கொள்முதல் செய்யப்படும்? மில்களுக்குத் தேவையான அளவுக்கு கொள்முதல் செய்யப்படுமா? தனிப்பட்டோரிடமிருந்து வாங்க உத்தேசிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : நம்முடைய 12 கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் ஆண்டு ஒன்றுக்கு 1 இலட்சம் பேல்ஸ் தேவைப்படுகிறது.

**திரு. சோ. அழகர்சாமி** : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவையான பருத்தியை மையப்படுத்தி வாங்கக்கூடிய செயற்குறிப்பு இருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இப்பொழுது கோயம்புத்தூரிலே எடுத்துக் கொண்டாலும், என்னுடைய வட்டாரத்திலேயும் பருத்தி விவசாயிகளிடமிருந்து மில் முதலாளிகள் வாங்கத் தயாராக இல்லை. மிகக்

குறைந்த விலைக்கே வாங்குகிறார்கள். சென்ற ஆண்டைவிட ரூ. 100 குறைவாகவே விற்கிறார்கள். அவர்கள் தேவையான விலைக்கு விற்க முடியாத நிலைமையிலே கஷ்டப்படுகிற நேரத்தில் வாங்கிய கடன்களைக் கட்டமுடியாமல் விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இப்பொழுது 1 இலட்சம் பேல்ஸ் தேவைப்படுகிறது என்று சொன்னார்கள், நியாயமான விலை கொடுத்து வாங்குவதற்கு உடனடியாக திட்டமிட அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இந்தக் கேள்வி சம்பந்தப்பட்ட பிரச்னை வேறு. இதிலே நாம் எடுத்திருக்கின்ற முடிவு, தேவையான பருத்தியை ஒவ்வொரு ஆலையும் அவரவர்கள் விருப்பப்படி வாங்கினால், தவறுகள் ஏற்படலாம் என்றுதான் மையமாகச் சேர்த்து வாங்குகிற முறையைப் புகுத்தலாம் என்று முடிவு செய்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது உண்மையான பிரச்னையாகும். அப்போதைக்கப்போது ஏற்படுகிற மார்க்கெட் ஃப்ளக்ச்சுவேஷனால் சாதாரண விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற உண்மையை அரசு உணர்ந்திருக்கிறது. ஆனால் நம்முடைய தமிழ் நாட்டு ஆலைகளுக்கு மட்டும் பொருந்துமாறுச் செய்யப்படுமா என்பதுதான் பெரிய பிரச்னையாக இருக்கிறது. மத்திய அரசாங்கம் ஓர் அமைப்பு வைத்திருக்கிறது. அதோடு நம்முடைய மாநில அரசும் சேர்ந்து, தமிழ்நாட்டு எல்லைக்குள்ளாக நிரந்தரமான, நிலையான, குறைந்தபட்ச விலையிலாவது அவற்றைக் கொள்முதல் செய்ய முடியுமா என்பது ஆய்வில் உள்ளது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : இப்பொழுது கூட்டுறவு ஆலைகளிலே பர்ச்சேசஸ் கமிட்டி ஒன்று இருக்கிறது. அரசு உத்தேசித்துள்ள மையமான முறையிலே கொள்முதல் செய்யும் திட்டத்தைக் கையாண்டால், அந்தக் கமிட்டிகளைப் பிரித்துவிட்டு வேறு என்ன ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருகிறது என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : ஒவ்வொரு ஆலையிலும் அப்படிப்பட்டக் குழுவின் மூலமே வாங்கவேண்டுமென்ற கருத்தும் வலியுறுத்தப்படுகிறது. ஆனால், அதில் தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்வதற்கும், மொத்தமாக விலையைக் குறைத்து



வாங்க வாய்ப்பு ஏற்படுத்துவதற்கும் எல்லா நூற்பாலைகளின் பிரதிநிதிகளை வைத்து—அந்தக் குழுவின் மூலமாக வாங்கவேண்டுமென்ற செயற்குறிப்பு விவரம் பரிசிலனையில் இருக்கிறது.

**திரு. கே. கந்தசாமி** : அரசு மையமாக வைத்து, அதிகாரிகளை வைத்து, கமிட்டிகளை வைத்து, வாங்க இருக்கிற முறையை அமைச்சரவர்கள் விளக்கினார்கள். இப்பொழுது கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் சொஸைட்டிகள் இருக்கிற மாதிரி, புரட்யூசர்ஸ் கோவாபரேடிவ் சொஸைட்டிகள் வைத்து, கார்டமம் சொஸைட்டிகள் வைத்திருப்பதைப் போல், உற்பத்தியாளர்களுடைய கூட்டுறவு முறையை ஊக்குவித்து அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கி, நியாயமான விலையில், நிதானமான முறையில் வாங்குவதற்கு, விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில் அரசு முயற்சி எடுத்து ஊக்குவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : கூட்டுறவு முயற்சி பற்றி கூட்டுறவுத் துறையிலே கேட்கவேண்டும். நம்முடைய ஆலைகளைப் பொறுத்தவரைக்கும் ஒரு புதிய முயற்சி இருப்பதை நான் ஏற்கெனவே விளக்கினேன்.

**திரு. கோவை செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையின் சார்பில் நீண்ட 'லாங் ஃபைபர் இஜிப்ஷியன் காட்டன் வெரைட்டி' யைச் சேர்ந்த சுஜாதா போன்ற வெரைட்டிகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கம் தந்து, அப்படி உற்பத்தி செய்யப்பட்ட பருத்தியை யாரும் வாங்குவதில்லை. அதனுடைய உற்பத்தி மிகவும் குறைவு—ட்யூரேஷனும் அதிகமாக இருக்கிற காரணத்தினால், விவசாயிகளுக்கு அதிக விலை தந்தால்தான் அவர்களுக்குச் சரியாக இருக்கும். அதனைத் தனிப்பட்ட, குறிப்பிட்ட சில ஆலைகள்தான் வாங்கி வருகின்றன. அதனை விற்கமுடியாத நிலையில் விவசாயிகள் கஷ்டப்படுவதால், கோவாபரேடிவ் மில்கள் மூலமாக, அத்தகைய பருத்திகளை வாங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : கூட்டுறவு ஆலைகளுக்கு எந்தெந்த கவுண்ட்ஸுக்கு எப்படிப்பட்ட பருத்தி வேண்டுமோ, அதை வாங்கிக் கொள்ளலாம்.

## விசைத்தறிகள்

*71 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் நூல் உற்பத்தியின் அளவை ஒட்டி மேலும் விசைத்தறிகள் அமைக்க மத்திய அரசிடம் மாநில அரசு அனுமதி கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்ற நூல், தமிழ்நாட்டில் இருக்கிற கைத்தறிக்குப் போக அதிகமாக உற்பத்தியாகிறது. பொதுவாக இப்பொழுது விசைத்தறிகள் வைப்பதன் மூலமாக, பஞ்சாலைத் தறிகள் வைப்பதன் மூலமாக உற்பத்தியாகிற நூல், தமிழ் நாட்டிலே வியாபாரத்திற்குப் பயன்படுகிறது. அதை ஊக்குவிக்க, விசைத் தறிகளை வைக்க அரசாங்கம் இனிமேலாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய மாநிலக் கைத்தறிகளுக்குத் தேவையான நூலைவிட, 2 மடங்கு அதிகமாக நாம் உற்பத்தி செய்வது உண்மைதான். அதையே நம்முடைய கைத்தறிகளுக்குக் கொடுக்க முடியாத இக்கட்டான நிலைமைதான் இன்றைக்கிருக்கிறது. பூரணமான சட்டப் பாதுகாப்பை விசைத் தறிக்குக் கொடுக்கமுடியாத நிலைதான் இப்பொழுதிருக்கிறது. விசைத் தறியை மேலும் விரிவுபடுத்துவது கைத்தறிக்கு ஆபத்தாகும்.

**திரு. கி. ஜெயராமன் :** இருந்தாலும் வங்கீகரிக்கப்படாத விசைத்தறிகள் ஏராளமாக இன்று ஓடிக் கொண்டிருக்கின்றன. அதையாவது அங்கிகரிக்க மத்திய அரசிடம் மாநில அரசு என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு.** செ. மாதவன்: இந்த அரசு பொறுப்பேற்றவுடன் புதிதாகச் சட்டதிற்குப் புறம்பாக விசைத்தறிகள் போடுவதைத் தடுப்பதற்கு மின்சாரம் வழங்ககூடாது என்ற



ஏற்பாட்டைச் செய்து இருக்கிறோம். ஆகவே, மென்மேலும் அன்ஆதரைஸ்டு பவர்லூம்ஸ் விரிவடைய வாய்ப்பு இல்லை. இருக்கிற அன்ஆதரைஸ்டு பவர்லூம்கள் 17,000 அதை எப்படியாவது சட்டப்படி அங்கீகரித்து, மேற்கொண்டு வராத அளவுக்குப் பார்த்துக்கொள்வதைப் பற்றி மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். மத்திய சர்க்கார் நீர்மானமான பதில் எதுவும் கூறவில்லை.

**திரு. எஸ். வடிவேல்:** விசைத்தறி மூலமாகக் கைத்தறி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கைத்தறி பாதிக்கப்படாமலிருக்க அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.** செ. மாதவன்: அதுதான் மன்றத்திலேயே சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

**திரு. ஆ. பரந்தாமன்:** மத்திய அரசு ஓர வஞ்சனை செய்து மராட்டியம் போன்ற மாநிலங்களுக்கு கைத்தறி விசைத் தறிகளை வாங்க அனுமதி கொடுத்தது உண்மையா? அந்த அளவுக்குத் தமிழ் நாட்டிலேயிருக்கிற நாம் பொதுச் சந்தையிலே போட்டி போடமுடியவில்லையென்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த விசைத்தறி பிரச்னை பெரிய பிரச்னை. அகில இந்தியாவிலே அமுல் நடத்த ஒரு கொள்கையை ஒப்புக் கொண்டிருக்கிற மத்திய அரசு அதை அமுல் நடத்துவதிலே கொஞ்சம் தயக்கம் காட்டுவதுபோல்தான் தெரிகிறது. மாநிலங்களுக்கே அமுல் நடத்துகின்ற உரிமைக்கு இப்பொழுதைய சட்டத்திலே வாய்ப்பு வைத்திருக்கிற காரணத்தால், வடபுலத்திலே ஏராளமான விசைத்தறிகள் வைக்கப்பட்டதும் அவை நம்முடைய சந்தைக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதும் உண்மைதான்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இந்த விசைத் தறியின்மூலம் உற்பத்தியாகும் துணிகளைக்கொண்டு தனியார் மில்களின் மூலம் கொள்ளை இலாபம் அடித்தும் கொண்டிருக்கிறார்கள். இதனால் உற்பத்தியாளர்களுக்குப் பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. இவற்றையெல்லாம் பவர்லூம் கூட்டுறவு சொஸைட்டியின்மூலம் கொண்டுவந்து அரசாங்கமே அதனுடைய

உற்பத்திகளை எடுத்து, விநியோகிக்கின்ற பொறுப்பையும், எடுத்து நடத்த, விசைத் தறி கூட்டுறவு சங்கம் ஏற்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எதிர்காலத்திலே விசைத்தறி என்பது வேறு பிரச்சினை இப்பொழுது இருக்கிற விசைத்தறிகளை எப்படி கட்டுப்படுத்தலாம் என்று சர்வீஸ் கோவாபரேடிவ் சொஸைட்டிகளைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் திட்டத்தின் கீழே விசைத் தறியைக் கொண்டு வரலாமா என்பதைப் பரிசீலிக்கலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, அண்மையிலே சென்ட்ரல் டெக்ஸ்டைல்ஸ் கமிஷனர் மத்திய அமைச்சர், மாநில அமைச்சர்கள் எல்லாம் சேர்ந்த ஒரு ஆலோசனைக் கூட்டம் நடந்ததே அதிலே, இந்த விசைத்தறியைப் பற்றி ஏதாவது முடிவு ஏற்பட்டதா? கைத்தறியைப் பற்றிய சிறப்பான அம்சங்கள் பேசப்பட்டனவா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படிப்பட்ட எந்த ஆலோசனைக் கூட்டமும் நடைபெற்றதாக எனக்கு தெரியவில்லை. அமைச்சசர் கலந்து கொண்ட கூட்டத்திலே நானும் பேசினேன் தமிழ்நாடு சட்டம், கொண்டு வந்ததையும், விசைத்தறியால் கைத்தறி எப்படி பாதிக்கப்படுகிறது. என்பதையும், நூல் விநியோகத்திலே ஏற்பட்டிருக்கிற தவறான செயல்களின்மூலம் தமிழ்நாடு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அவர்கள் முன்னால் சொன்னேன். கேட்டவர்கள் எல்லாம் வரவேற்றார்கள். அமைச்சர் அவர்கள் ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தார்.

(முற்பகல் 9-30)

**திரு. க. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிக்கு நாம் நல்ல பாதுகாப்பு கொடுத்தாலும்கூட தமிழ் நாட்டிற்குள் உற்பத்தியாகக் கூடிய நூல் வைத்தறிக்குப் போக, அதிகமாக இருக்கிறது. இன்றைக்கு வேஷ்டி ஒரு ஜோடி 90 ரூபாய்க்கு விற்கிறது. பவர் லூமிலே, அதே வெஷ்டி 60 ரூபாய் விலைக்கு நாம் சாதாரண மக்களுக்கு கொடுக்க முடியும். ஆகவே கைத்தறிக்குப் பாதுகாப்புக் கொடுப்பதைத் தவிர, நம்முடைய





நூல் வெளிமாநிலங்களுக்குப் போகாமல் பார்த்துக்கொண்டு அந்த நூலை நாமே துணியாக நெய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போழுதுள்ள நிலையில் தமிழ் நாட்டிலே உற்பத்தியாகிற நூலை தமிழ்நாடே எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பு இல்லை.

## *Handicrafts Sales Emporium*

* 72. *Q.*—THIRU N. K. PALANISAMY :

THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Handicrafts Corporation Limited had proposed to open one Sales Emporium in each of the district Headquarters; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) செங்கல்பட்டு, கன்னியாகுமரி, தர்மபுரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஏற்கெனவே ஒரு விற்பனை நிலையம் உள்ளது. இந்த நான்கு மாவட்டங்களிலும் விற்பனை நிலையங்கள் தொடங்குவதற்கான செயற்குறிப்பு தமிழ்நாடு கைவினைப்பொருள் வளர்ச்சிக் வழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** கார், எல்லா மாவட்டங்களிலேயும் இம்மாதிரி எம்போரியங்கள் திறப்பதற்கு ஆலோசனை உள்ளதா? அப்படியானால் அந்தந்த எம்போரியங்களில் என்ன என்ன பொருட்கள் விற்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நான் கேள்விக்குப் பதில் சொல்லுகிறபோதே முதல் கேள்விக்குப் பதில் சொன்னேன். நம்முடைய நகரங்கள் அத்தனையிலும் இந்தப் பொருட்கள் எல்லாம் விற்கப்படும். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலேயும் இப்படிப்பட்ட நிலையங்கள் திறக்கப்படும். அந்தந்த மாவட்டங்களிலே செய்யப்படுகின்ற பொருட்களுக்கு அந்த அந்த மாவட்டங்களிலேயுள்ள கைவினைஞர்களுக்கு வேண்டிய ரா மெட்டீரியல்ஸ்

வாங்கிகொடுப்பது, அவர்களுக்குக் கடன்கொடுப்பது, அவர்கள் உற்பத்தி செய்கிற பொருட்களை வாங்கி விற்று தருவது போன்ற நோக்கங்களுடன் இந்த வாரியம் செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** இந்த கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட விற்பனை நிலையங்கள் வியாபாரத்தில் எவ்வளவு லாபம் வருகிறது? அந்தப் பொருட்களில் ஏதாவது வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனவா? எந்த அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எடுத்தவுடனே லாபத்தில் நடக்க ஆரம்பித்திருக்கிறது. ஆனால் எவ்வளவு என்ற விவரம் இல்லை. வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று நினைக்கிறேன், எவ்வளவு என்ற விவரம் தற்போது இல்லை.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, நிறைய சுற்றுலாப் பயணிகள் வருகின்ற உதகையில் இப்படிப்பட்ட நிறுவனம் நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக இல்லை. ஆனால் கேரள மாநிலம் கைராலி என்ற நிறுவனத்தை அங்கே வைத்திருக்கிறது, நம்முடைய அரசாங்கத்தின் சார்பாகவும் உதகையிலே ஒன்றைத் திறக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விற்பனைக்கு வாய்ப்பு இருந்தால் பரிசீலிக்கலாம்.

**இராமநாதபுரத்தில் வழக்கு மன்றங்களுக்கு கட்டடங்கள்.**

* 73 **வினா—திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) இராமநாதபுரம் நகரில் வழக்கு மன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுகின்ற திட்டம் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) ம், பாக திட்டத்தின் கீழ் இச்செயற் குறிப்பு பரிசீலிக்கப்படும்.





**திரு. த. சோணையா:** தலைவர் அவர்களே, இராமேசுவரத்திலே வழக்கு மன்றங்கள் கட்ட இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதைக் கட்டுவதற்கு எவ்வளவு காலம் ஆகும், என்ன மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இராமேசுவரம் அல்ல இராமநாதபுரம் இப்பொழுது அந்த விவரங்கள் பரிசீலனையில் உள்ளன.

**நிலவரி.**

* 74 **வினா—திரு. என் கிட்டப்பா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நஞ்சை, புஞ்சை வரி நீக்கத்தின் காரணமாக தமிழகத்தில் எத்தனை ஏக்கர் நிலத்திற்கு தற்போது வரி விலக்களிக்கப் பட்டுள்ளது?

(இ) அதன் மூலம் ஏற்பட்டுள்ள ஆண்டு வருவாய் இழப்புத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே.** சாதிக் பாட்சா: (அ) 177,41,918.85 ஏக்கர்கள்.

(இ) ரூ. 2,22,50,81755.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் இந்த நட்ட ஈட்டுத் தொகை யினை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருந்தாலும் கூட மத்திய அரசு நில வரி நீர் விவசாய வரி முதலியவற்றை அதிகரிக்கவேண்டுமென்ற குறிக்கோளை அடிக்கடி, வலியுறுத்திவருகிறதே அதைப் பற்றி அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு நஞ்சை வரி, புஞ்சை வரி மீண்டும் போடலாம் என்று மத்திய அரசு ஆலோசனை கூறியது. ஆனால் அதை நம்முடைய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

[1974 ஆகஸ்ட் 14

**திரு. ஜே. ஜேமஸ்:** தலைவர் அவர்களே, புஞ்சை வரி நீக்கம் நம்முடைய மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகிறதா? ஆம் என்று சொன்னால் கன்னியாகுமரி மாவட்டத்திலே இன்னும் அது நீக்கப்படவில்லையே, அது வசூலிக்கப்படுகிறது, காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கன்னியாகுமரி மாவட்டத்திலே இப்போது அமுலுக்கு வந்துவிட்டது. அரசு அதற்கான உத்தரவினை போட்டிருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, இந்த நஞ்சைக்கும், புஞ்சைக்கும் வரி நீக்கம் செய்யப்பட்டிருப்பது பொதுவாக வரி நஞ்சைக்கு 30, 40 ரூபாய் என்று வைத்துக்கொண்டால், ரூபாயைத்தான் நீக்கம் செய்திருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இதனால் விவசாயிகளுக்கு எந்தவிதமான பலனும் இல்லை என்பதையும் அரசு அறியுமா? ஆகவே சிறு சிறு விவசாயிகள் பலன் பெறக்கூடிய முறையிலே ஐந்து ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு எல்லாம் எந்தவிதமான வரியும் இல்லை என்று விலக்கு அளிப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** புஞ்சையைப் பொறுத்தவரையில் வரி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. நஞ்சையிலே பேசிக் டாக்ஸ் மட்டும் வரி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசு மீண்டும் அந்த வரிகளைப் போடலாம் என்று சொல்லியிருக்கிறது. நம்முடைய அரசு அந்த வரிகளை மீண்டும் போடுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லியிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** நஞ்சை, புஞ்சைக்கு வரி விலக்கு அளிப்பதற்காக ஆங்காங்குள்ள புஞ்சாயத்துக்கள் எல்லாம் செஸ் வரி விதித்து இருக்கிறார்கள். அது இந்த வரியைவிட அதிகமா அல்லது குறைவா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** செஸ் ஏற்கனவே போடப்பட்டிருக்கிறது. இந்த வரியைவிட அது அதிகமாக, இருக்கிறது. அந்த வரி இதிலிருந்து விலக்கு அளிக்கப்படவில்லை.



1974 ஆகஸ்ட் 14]

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, நம்முடைய நாடு பூராவும் புஞ்சைக்கு வரி நீக்கம் செய்ததால் நம்முடைய அரசுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** புஞ்சை, நஞ்சை இரண்டுக்கும் சேர்த்து இரண்டு கோடியே 22 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்று ஏற்கெனவே சொன்னேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு புஞ்சை வரி நீக்கப்பட்டிருக்கிறது என்றும் அதற்கான உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். ஆனால் அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகும் கூட இம்ப்ரூவ்ட் லேண்ட்ஸ் என்று இருக்கின்றவற்றிற்கு எல்லாம் ஹெக்டேருக்கு ரூ. 6.40 என்று நிலவரியாகவும் அந்த அளவிற்கு பஞ்சாயத்துக்களுக்கான வரி அளவும் அதிகமாக வரி வசூலிக்கப்பட்டு வருகிறதே, அதற்கு என்ன காரணம்? அதைக் குறைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. THIRU S. J. SADIQ PASHA. The waiver was given effect to from 1-7-1968 in Shenkottah talak and from 1-7-1971 in Kanyakumari district as ryotwari settlement was completed in those areas only during the above period.

1971-லிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் சொல்கிற குறை இருக்குமானால் கவனித்து நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, மத்திய அரசு விவசாய வரி அதிகமாக விவசாயிகளிடமிருந்து வசூலிக்க வேண்டுமென்று ஆலோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது, புஞ்சைக்கு நம்முடைய அரசாங்கம் முழுதும் வரியை நீக்கியிருப்பதுபோல் நஞ்சை நிலத்திற்கும் வரியை நீக்குவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதுபோன்ற ஆலோசனை இப்பொழுது கிடையாது.

[1974 ஆகஸ்ட் 14

*75 வினு—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தண்ணீர் வரி விதிப்பினை சீரமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) தண்ணீர் வரி மற்றும் தண்டத் தீர்வை விதிப்பினை ஒழுங்குபடுத்தி சீரமைக்கும் அறிக்கை ஒன்றினை அரசுக்கு வருவாய் வாரியம் அளித்துள்ளது. வாரிய உறுப்பினர் திரு. சினிவாசன் அவர்கள் இதைப்பற்றி அறிக்கை ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளார். இரு அறிக்கைகளும் அரசினரின் ஆய்வில் உள்ளன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்த தண்ணீர் தீர்வை எப்போதிருந்து அமல்படுத்தப்பட்டது ? இப்பொழுது என்ன என்ன விதிமுறைகள் இருக்கின்றன ? ஏன் இவற்றை சீரமைக்க வேண்டுமென்று அரசு கருதியது என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தண்ணீர் வரி எப்பொழுது விதிக்கப்பட்டது என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. இது சரித்திர பூர்வமாக இருப்பது என்று நினைக்கிறேன். சில குறைபாடுகள் இருப்பதாக உணரப்பட்டு பிறகு அதைப் போக்குகின்ற முறையிலே யோசனைகளைச் சொல்வதற்கு ஒரு தனி அதிகாரி போடப்பட்டு அவருடைய அறிக்கையும் கிடைத்திருக்கிறது, அது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தமிழ்நாட்டிலே சிறு விவசாயிகளுக்கு எல்லாம் அடிக்கடி தண்டத்தீர்வை போட்டு அவர்கள் எல்லாம் அவலநிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக இந்தத் தண்டத் தீர்வையைத் தொலைத்து விட்டு அசல் தீர்வையை மட்டும் வசூலிக்க ஏற்பாடு செய்வார்களா ? போடுகின்ற தண்ணீர் வரியையும், தண்டத் தீர்வையையும் தொலைத்து விவசாயிகளுக்கு உதவி செய்ய இந்த அரசாங்கம் முன்வருமா ?



1974 ஆகஸ்ட் 14]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அன்ஆதரைஸ்டு இரிகேஷன் ஆக இருந்தால், இர்ரெகுலர் இரிகேஷனுக இருந்தால் தண்டத் தீர்வை விதிக்கிறோம். ரிஜிஸ்டர்டு ஆயக்கட்டாக இருந்தால் தண்டத் தீர்வை விதிக்கப்படுவதில்லை. தண்டத் தீர்வையை நாங்கள் விதிக்கவில்லை. அப்போதே விதித்து இருக்கிறார்கள். உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அப்பொழுது 20 பங்கு என்ற அளவிற்கு இருந்த தண்டத் தீர்வை மாண்புமிகு அமைச்சர் சண்முகம் அவர்கள் வந்த பிறகு பரிசீலிக்கப்பட்டு கோவை, திருநெல்வேலி ஆகிய இந்த இடங்களில் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் ஒழுங்குபடுத்தி சீரமைப்பதற்காகத்தான் சீனிவாசன் என்ற அதிகாரி நியமிக்கப்பட்டு அவரிடமிருந்து அறிக்கை கேட்கப்பட்டது, அந்த அறிக்கையை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, கடலிலே வீணுகச் சென்று விழுகின்ற அந்தத் தண்ணீரை ஏற்ற மரம் கட்டிப் பயன்படுத்தி புறம்போக்கு நிலத்தில் விடுகிறார்கள். அம்மாதிரி ஏழை ஹரிஜனங்களுக்காவது இந்தத் தண்டத் தீர்வையை ரத்து செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, கடல் தண்ணீராக இருந்தாலும், கடலுக்குப் போய்ச் சேருகின்ற தண்ணீராக இருந்தாலும் அது முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். அந்த முறையைப் பற்றித்தான் சீரமைப்புக் குழு சிபார்சு செய்திருக்கிறது. அந்த அடிப்படையில் செய்ய வேண்டுமே தவிர, இஷ்டம் போல் எடுத்துக்கொண்டாலும் அதற்குத் தண்டத் தீர்வை விதிக்கக் கூடாது என்றால் அது அரசாங்கத்தால் முடியாது.

*76 வினு—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய வருமான வரி, நில வரி, நீர் வரி, இவற்றை உயர்த்த வேண்டும் என மத்திய அரசு வலியுறுத்தி வருகிறதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள முடிவு என்ன ?

[1974 ஆகஸ்ட் 14

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) மத்திய அரசு, விவசாய வருமான வரி, நில வரி இவற்றை உயர்த்த வலியுறுத்தவில்லை. நீர் வரியை உயர்த்த சில கருத்துரைகளை அனுப்பியுள்ளது.

(இ) இவை அரசின் பரிசிலனையில் உள்ளன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, அண்மையில் தமிழகத்திற்கு வந்த திட்ட அமைச்சரவர்கள் மாண்புமிகு முதலமைச்சரவர்களைச் சந்தித்த நேரத்தில் விவசாய வருமான வரியை ஒப்புக்கொண்டதாகப் பத்திரிகையில் பார்த்தோம். அது உண்மையா? நிலவரியை உயர்த்துவதற்கு என்ன காரணத்தை மத்திய சர்க்கார் காட்டியுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** விவசாய வருமான வரியை ஒப்புக்கொண்டதாக எந்தப் பத்திரிகையில் பார்த்தார்கள் என்று தெரிவித்தால் பிறகு அதுபற்றிக் கருத்து தெரிவிக்கலாம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** நாளைக்கு அந்தப் பத்திரிகையை எடுத்துக் காட்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தற்பொழுதுள்ள நில வரி, வேளாண்மை வருமான வரி நடைமுறைக்குப் பதில் வேளாண்மை நில உடைமைகள் வரி (Landholdings tax) விதிக்க வேண்டுமென்று மத்திய அரசு சொல்கிறது. அது சாத்தியமில்லை என்று நம்முடைய அரசு கருதியிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், விவசாயிகள்மீது வரி போட வேண்டுமென்று மத்திய சர்க்கார் சொல்வதாகப் பல அமைச்சர்கள் பல சந்தர்ப்பங்களில் சொல்கிறார்கள். அதிகமான பணத்தை ஒவ்வொரு மாநிலத்திலும் திரட்ட வேண்டுமென்ற முறையில் எந்தெந்தப் பிரிவுகளில் இருக்கும் காரியங்களுக்கு வரி போடலாம் என்று ஆராய்ந்து புரியும்படி செய்திருக்கிறார்களா? அல்லது ஒட்டுமொத்தமாக விவசாயிகள்மீது கட்டாயமாக வரி போட்டாக வேண்டுமென்று நிர்ப்பந்திக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்



1974 ஆகஸ்ட் 14]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எல்லா முனைகளிலும் அநேகமாக வரிபோட்டு முடிந்தாகிவிட்டது. விவசாய முனை தான் பாக்கியிருக்கிறது. ஆகவே, வரிபோடும் கவனத்தை இனிமேல் விவசாய முனையின்பக்கம் திருப்புங்கள் என்று மத்திய அரசு அடிக்கடி மாநிலங்களுக்கு ஆலோசனை கூறி வருகிறது.

## ஊராட்சிகள் நிலவரி விதிப்பு.

*77 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய நிலங்களின்மீதான பஞ்சாயத்து வரியை உயர்த்த வேண்டும் என மத்திய அரசு வலியுறுத்தி வருகிறதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) வினா எழ இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, அண்மையில் மாநில அரசு ஏதாவது வரியை உயர்த்தியிருக்கிறதா? அப்படியென்றால் எவ்வளவு தொகை என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அண்மையில் அப்படி உயர்த்தவில்லை. 1958-ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப் பெற்ற விதிகளுக்கு இணங்க ஊராட்சிகள் குறிப்பிட்ட சில பணிகளை நிறைவேற்றும்பொருட்டு விவசாய நிலங்கள்மீது குறிப்பிட்ட காலத்திற்கு விவசாய வரியினை [அபிவிருத்தி வரியினை] முன் அனுமதி பெற்று விதிக்கலாம். எந்தெந்த நோக்கங்களுக்காக அதை விதிக்கலாம் என்பது தமிழ் நாடு ஊராட்சி நடைமுறை நூலில் 54-வது பத்தியில் குறிப்பிடப் பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாக மின்சார வசதி, குடிநீர் வசதி, சாலையமைத்தல் போன்ற பணிகளுக்காக மேற்கூறிய வரி விதிக்கப்படலாம்.

[1974 ஆகஸ்ட் 14

## உப்போடை ஆற்றின் குறுக்கே பாலம்

*78 வினா—திரு. க. உரோ. எட்மண்ட்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் வட்டத்திலுள்ள ஆத்தூர் பேரூராட்சி மன்றத்திலுள்ள, தலைவன்வடலி என்ற கிராமத்திற்கு அருகேயுள்ள உப்போடை ஆற்றில் பாலம் கட்டி இணைப்பு ரோடு போடும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) ஆம்.

(இ) உப்போடை ஆற்றில் பாலம் கட்டி, இணைப்பு ரோடு போடும் வேலை கிராம ஊராட்சி சாலை திட்டத்தில் முதலாவது கட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலை எடுத்து நடத்தப்பட்டு வருகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, இந்த உப்போடை ஆற்றுப் பாலத்திற்கு எவ்வளவு மதிப்பீடு போடப் பட்டுள்ளது? எப்பொழுது முடியும் என்று எதிர்பார்க்கப் படுகிறது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, தலைவன்வடலி என்ற கிராமத்திற்கு அருகேயுள்ள உப்போடை ஆற்றில் பாலம் கட்டி இணைப்பு ரோடு போடும் வேலைக்கு மதிப்பீடு ரூ. 80,000 ஆகும். இந்தச் சாலை அமைக்கும் வேலை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ. 40,000-க்கும், இரண்டாம் பகுதிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ. 40,000-க்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதி சாலையை அமைக்கும் வேலையை எடுத்துக் கொள்ள ஒப்பந்தக்காரர் திருமதி நாகம்மாள், இரண்டாம் பகுதியிலுள்ள சாலையை அமைக்கும் வேலையை எடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. பட்டுராஜ். வேலை துவங்கப்பட்டிருக்கிறது. உப்போடையின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் மதிப்பீடு 1,79,000 ரூபாய். ஒப்பந்தம் கோரியுள்ள ஒப்பந்தக்காரர் திரு. வேலாயுதம் பிள்ளை. வேலை தொடங்கியிருக்கிறார்கள்.



1974 ஆகஸ்ட் 14]

## உணவுப் பொருட்கள் விற்பனை

*79 வினா.—திரு. கி. ஜெயராமன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு நியாய விலைக்கடைகளில் விநியோகிக்கப்படும் உணவுப் பொருட்களை எடையிட்ட பொட்டலங்களாக விநியோகிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** ஆம்.

## *Modern Rice Mills*

*80 Q.—THIRU R. PONNAPPA NADAR:
THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether the Modern Rice Mills in the State which were under the control of the Co-operation Department have been placed under the control of the Food Department;

(b) whether these mills are running on profit; and

(c) the steps taken to maintain the quality control in these mills?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) ஆம் உணவுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழுள்ள தமிழ் நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம் கூட்டுறவுச் சங்கங்களின் பொறுப்பின் கீழ் இருந்து 13 நவீன அரிசி ஆலைகளை எடுத்துக் கொண்டுள்ளது.

(இ) இந்த ஆலைகள் ஆதாயத்தில் செயல்படவில்லை.

(உ) இந்த ஆலைகளுக்கு வரும் நெல்லின் தரத்தினை சரி பார்த்துக் கட்டுப்படுத்துவதற்கு தொழில் நுட்ப உதவியாளர் ஒருவரும், இந்த ஆலைகளில் தயாரிக்கப்படும் அரிசியின் தரத்தினைப் பேணிவருவதில் உற்பத்திப் பொறியாளர்களுக்கு ஆலோசனை நல்க, அரிசி ஆலைத் தொழிலில் அனுபவமுள்ள தொழில் நுட்ப (தரப்படுத்துதல்) அதிகாரி ஒருவரும் உள்ளனர்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, மொத்தமாக 13 ஆலைகள் இருக்கின்றன என்று அமைச்சரவர்கள் விவரம் தந்தார்கள். இதிலே ஆக மொத்தமாக எவ்வளவு நஷ்டம்

ஏற்பட்டிருக்கிறது? இதில் எந்த மில்லாவது இலாபத்தில் ஓடுகிறதா? பெருத்த நஷ்டத்தில் ஓடினால் உணவுப் பண்டங்களின் விலை கூடுதலாவதற்கு உடந்தையாக இருக்காதா? அது சம்பந்தமாக என்ன நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளப் போகிறது என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, 1972-73-ல் ரூ. 5,41,000 அளவில் எல்லா மில்களுக்கும் சேர்ந்து நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட எல்லா மில்களுமே நஷ்டத்தில்தான் ஓடிக் கொண்டிருக்கின்றன. இந்த ரூ. 5,41,000-ல் தேய்மானம் என்ற அளவில் ரூ. 4,29,000 போனால் மீதியுள்ள ரூபாய் 1,12,000 செலவாகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், நவீன ரைஸ் மில்களில் தஞ்சை, கும்பகோணம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலே இருக்கும் மில்கள் ஓடுவதே இல்லை என்று சொல்கிறார்களே, அதை மூடிவிட்டார்களா? மூடியிருந்தால் அதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** சொல்வது முழுவதும் தவறான செய்தி,

*Cellular Concrete Plant*

* 81 Q.—Thiru N. DENNIS Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Chief of the HUDCO has suggested to the State Housing Board and the State Government to operate the Cellular Concrete Plant at Madras as a commerical venture; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) & (இ) வீட்டு வசதி—நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்தின் அந்நாளைய நிர்வாக இயக்குநரான திரு. பிரபாகர் ராவ் அவர்கள் சில காலத்திற்கு முன்னர் சென்னையில் நடைபெற்ற இலேசான பொருள்கள் குறித்த குழுவின் கூட்டத்தில் உரையாற்றியபோது, எண்ணூரில் உள்ள தக்கைக்கல் உற்பத்தி தொழிற்சாலையை வணிக அமைப்பாக செயல்படுத்தலாம் என கருத்து தெரிவித்தார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.





**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, இதன் உற்பத்தியைப் பெருககவும், சாதாரண மக்கள் குறைந்த விலையில் இதைப் பெறுவதற்கும் அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, பக்கத்திலே இருக்கிற எண்ணூர் அனல் மின்சார நிலையத்திலுள்ள சாம்பலைப் பயன்படுத்தி இதன் விலையைக் குறைக்க எண்ணி அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வில்லிவாக்கத்தில் E.S.I. மருந்தகம்.**

* 82 வினா—திரு. மா. வெ. நாராயணசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் நகரத்தில் ஒரு E.S.I. மருந்தகம் திறக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) இப்பொருள் பற்றி அரசு ஆய்ந்து வருகிறது.

**திரு. மா. வெ. நாராயணசாமி:** தலைவரவர்களே, வில்லிவாக்கம் நகரத்தில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் ஈ.எஸ்.ஐ. மருந்தகம் இல்லாமல் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அது தொழிலாளர்களின் நீண்ட நாளைய கோரிக்கை என்பதால் அங்கு ஈ.எஸ்.ஐ. மருந்தகத்தைத் துவங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? மேலும் வில்லிவாக்கம் நகரத்தில் இருப்புப் பாதைக்கு வடக்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. திட்டம் நடைமுறையில் இல்லை. அங்கேயும் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, வில்லிவாக்கத்தில் எவ்வளவு தொழிலாளர்கள் வாழ்கிறார்கள், அவர்களுக்கு என்னென்ன வசதிகள் தேவை என்பதைப்பற்றியெல்லாம் 'டைரக்டர் ஆஃப் ஹெல்த் சர்வீசஸ்' இடத்தில் கேட்கப்பட்டு அவர்கள் தற்பொழுது தகவல்களைச் சேகரித்துக்

கொண்டிருக்கிறார்கள். அப்படிச் சேகரித்து முடிந்தவுடன் வில்லிவாக்கத்திற்கு ஒரு ஈ.எஸ.ஐ. மருத்துவமனை தேவையா இல்லையா என்பதை அரசு முடிவு செய்யும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இந்தக் கேள்வி வில்லிவாக்கத்தைக் குறிப்பிட்டதாக இருந்தாலும்கூட, தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் எங்கெங்கு வேண்டும், எவ்வளவு படுக்கைகள் கொண்டதாக இருக்க வேண்டுமென்று இவற்றையெல்லாம் பற்றி ஒரு சர்வே செய்ய வேண்டிய கட்டம் இருப்பதாக அரசு கருதுகிறதா? அம்மாதிரி சர்வே செய்யப்பட்டு, குறிப்பாக எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கே அதிக படுக்கைகள் உள்ள மருத்துவமனைகளை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளைப் பொறுத்தவரை இந்தியாவிலேயே அதிகமான மருத்துவ மனைகள் தமிழ்நாட்டிலேதான் இருக்கின்றன. அதிகமான படுக்கைகளையும் கொண்டிருக்கின்றன. இந்த அரசு அதிகமான தொகையையும் இதற்காகச் செலவழித்துக் கொண்டிருக்கிறது. இவை எங்கெங்கு தேவை என்பதை அரசு ஆராய்ச்சி செய்து சென்னையில் அடையாற்றிலும், நந்தம்பாக்கத்திலும், மதுரை மாவட்டத்தில் மேலூரிலும், திருச்சி மாவட்டத்தில் கரூரிலும், சேலம் மாவட்டத்தில் ஆத்தூரிலும், வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூரிலும், கோவை மாவட்டத்தில் காரமடையிலும் இ.எஸ்.ஐ. மருத்துவ மனைகள் கட்ட ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தொழிலாளர்களுக்குக் கட்டப் படும் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளிலே பிளாஸ்டிக் சர்ஜரி என்ற பகுதி வைக்கப்படவில்லை. அடிக்கடி விபத்துக்களுக்கு உள்ளாகும் தொழிலாளர்களுக்கான இந்த மருத்துவ மனைகளில் பிளாஸ்டிக் சர்ஜரி பிரிவு ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அப்படி பிளாஸ்டிக் சர்ஜரி செய்யப்பட வேண்டிய பிரச்சினை இதுவரை வந்ததாகத் தெரிய வில்லை. அது வருமானால் அம்மையார் அவர்கள் எண்ணத்தைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் பொதுவான சிகிச்சைகளுக்கான முறையில் இயங்கி வருகின்றன. இப்படிப்பட்ட சிறப்பான சிகிச்சைகள் தேவைப்படுகின்றன என்றால் பொது மருத்துவமனையில் அத்தொழிலாளர்களைச் சேர்ப்பதற்காக இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. சிறப்பு சிகிச்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தேவைக் கேற்றபடி கிடைக்கும்.

## எண்ணூர் மீன் குளிர் பதன நிலையம்

***83 வினா—திரு. மா. வெ. நாராயணசாமி :** மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணூரில் உள்ள அரசு மீன் குளிர் பதன நிலையம் (Government Freezing Plant) தற்போது இயங்கி வருகிறதா?

(இ) எப்போது மீண்டும் செயல்படத் தொடங்கும்?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** (அ) ஆம். எண்ணூரிலுள்ள குளிர்பதன நிலையம், தமிழ் நாடு பால்வள நிறுவனத்தில் பொருள்களைச் சேகரித்து வைப்பதற்காக 1—2—74 முதல் அந்த நிறுவனத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. மா. வெ. நாராயணசாமி :** எண்ணூரில் இருக்கக்கூடிய அந்த ஃப்ரீசிங் பிளாண்ட் நீண்ட நாட்களாகச் செயல்படாமல் இருந்து வந்திருக்கிறது. அது மீன்களை அங்கு வைத்து பதப் படுத்தி அனுப்பக்கூடிய ஏற்பாடுகளுக்காகப் பயன்பட்டு வந்தது. அதே முறையில் முழுமையாகப் பயன்படக்கூடிய அளவுக்கு அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா? இப்போது தாற்காலிக ஏற்பாடாக மாற்று முறையில் பயன்படுத்தி வந்தாலும் எந்த நோக்கத்திற்காகக் கட்டப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறை வேற்றும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** பெரிய மீன் பிடி படகுகளைக் கொண்டு மீன், இறால் போன்றவற்றை வெளிநாடு களுக்கு அனுப்பி அந்நியச் செலாவணியைப் பெறும் வகையில்

லாபகரமான திட்டமாக நிறைவேற்ற வேண்டுமென்பது அரசின் கொள்கை. இத்தாலிய நாட்டுக்குக் கப்பட்டிருக்கும் ஒப்பந்தப்படி உரிய காலத்தில் விசைப் படகுகள் வந்து சேராமையால் தாற்காலிகமாக இப்போது பால் துறைக்கு விடப்பட்டிருக்கிறது.

## Bus fares

* 84 *Q.*—Thiru N. DENNIS
Thiru N. K. PALANISAMY : Will the Hon the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to revise the fares in the Transport Undertakings in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (ஆ) போக்குவரத்து நிறுவனங்களால், நகரங்களிலும் மாநகரங்களிலும் நடத்தப்படும் பேருந்துகளுக்கான கட்டண வீதங்கள் 1—5—1974-ஆம் நாளிலிருந்து மாற்றியமைக்கப்பட்டன. ஏனைய பேருந்துகளுக்கான கட்டண வீதங்கள் 1—6—1974-ஆம் நாளிலிருந்து மாற்றியமைக்கப்பட்டன. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1. **நகர—மாநகரப் பேருந்துப் பணிகள்.**—முதல் பயண நிலை வரை 15 காசுகளுக்கு மேற்படாமலும் அடுத்துவரும் ஒவ்வொரு பயண நிலைக்கும் 5 காசுகளுக்கு மேற்படாமலும் வசூலிக்கப்படுகிறது. (சோராயமாக ஒரு பயண நிலை என்பது நடைமுறைக்கு இயன்ற வரையில் 2 கிலோ மீட்டர் தூரமாகும்).

2. **சாதாரணப் பேருந்துகள்.**—சமவெளியிலுள்ள சாலைகளில் செல்லும் பேருந்துகளுக்கான கட்டணம் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 4 காசுகளுக்கும். மலைச் சாலைகளில் செல்லும் பேருந்துகளுக்குக் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 6 காசுகளுக்கும் மேற்படாமல்.

3. **விரைவுப் பேருந்துகள்.**—சமவெளியிலுள்ள சாலைகளில் செல்லும் பேருந்துகளுக்கான கட்டணம் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 4 காசுகளுக்கும். மலைச் சாலைகளில் செல்லும் பேருந்துகளுக்குக் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 6 காசுகளுக்கும் மேற்படாமல் உயர் வகுப்பு இடவசதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பின் கூடுதலாக ஒரு காசு வசூலிக்கலாம்.



4. சந்தைகள்—திருவிழாக்கள் போன்ற சிறப்பு நேர்வுகளில் நடத்தப்படும் பேருந்துகளுக்கான கட்டணம்.—கிலோ மீட்டர் ஒன்றுக்கு 5 காசுக்கு மேற்படாமல் வசூலிக்கப்படுகிறது.

**திரு. என். டென்னிஸ் :** இப்போது குறைந்த கட்டணம் நகரங்களில் 15 பைசாவாக இருக்கிறது. எக்ஸ்பிரஸ் பஸ்கள் தவிர மற்ற பஸ்களிலும் குறைந்த கட்டணம் 15 பைசாவாக நிர்ணயிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நிர்ணயிக்கப்படமாட்டாது.

## உதகை நகரில் பேருந்துப்பணி

* 85 **வினா—திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகை நகரில், டவுன் பஸ்கள் விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. கு. அ. பொம்மன் :** உதகையில் இருந்து கூனூர், கோத்தகிரி போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் பஸ்கள் புறப்படும் இடத்திலேயே பிரயாணிகள் நிறைந்து விடுகிறார்கள். நடுவழியில் பிரயாணிகள் பஸ்களில் ஏற இடம் இல்லை. ஆகவே, சீசன் காலத்தில் விடுவது போல் டவுன் பஸ்கள் விட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** டவுன் பஸ்கள் விட உத்தேசம் இல்லை என்று சொன்னேன். பஸ்களை அதிகப்படுத்துவது பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும்.

**திரு. என். கே. பழனிசாமி :** ஏற்கெனவே வசூலிக்கப்பட்ட கட்டணமே அதிகம் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது இப்போது ஸ்டாண்டிங் பாசஞ்சர்களை அதிகப்படுத்த வேண்டிய அவசியமென்ன? சர்க்கார் கட்டணத்தை உயர்த்தியதன்

காரணமாக தனியார் அதை விட அதிகமாக உயர்த்தியிருக்கிறார்கள். அவர்களும் அதிகப்படியான ஸ்டாண்டிங் பாசஞ்சர்களை ஏற்றுகிறார்கள். ஆகவே, புனராலோசனை செய்து குறைப்பதற்கு முயற்சி செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்தக் கட்டண உயர்வு பண வீக்கப் பொருளாதாரத்தின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. நின்று செல்லுகிற பயணிகள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நின்று பயணம் செய்கிற பயணிகளின் தொகையையும் ஒட்டி அதற்கும் மோட்டார் வாகன வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

*Family Welfare Schemes for employees of Transport Corporations*

*86 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to extend the Family Pension Scheme and the Family Welfare Fund Scheme to all employees in the various transport corporations in the State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தமது ஊழியர்களின் நலனுக்காக, இவ்வரசின் குடும்ப ஓய்வூதியத் திட்டம், குடும்ப நல நிதித் திட்டம் ஆகியவற்றுடன் தாராள ஓய்வூதிய விதிகளின்படிக்கான நன்மைகளைச் செயற்படுத்துமாறு, அரசு அவற்றுக்குக் கட்டளை பிறப்பித்துள்ளது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அரசுப் பேருந்துகளாக இருந்தபோது தொழிலாளர்கள் அடைந்த சலுகைகள் இப்போது பல்வேறு கழகங்களாக அமைக்கப்பட்ட பிறகு குறைக்கப்பட்டிருக்கிறது என்ற குறைபாடு தொழிலாளர்களிடையே நிலவுகிறது. ஏற்கெனவே பெற்று வந்த சலுகைகளைக் குறைக்காமல் அரசு பாதுகாக்குமா ?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அரசுப் போக்குவரத்துத் துறையில் தொழிலாளர்களாக—டிரைவர்களாக, கண்டக்டர்களாக—பணியாற்றுபவர்களுக்கு முன்பு ஓய்வூதியம் கிடையாது. ஆனால் இந்தியாவிலேயே முதன் முதலாக இண்டஸ்ட்ரியல் ஓர்க்கருக்கு பென்ஷன் திட்டத்தைப் போக்குவரத்துக் கழகங்களில் அமல்படுத்தியிருக்கிறோம். ஆகையால் அரசுப் போக்குவரத்துத் துறையில் இருந்ததை விட இப்போது தொழிலாளர்களுக்கு அதிகச் சலுகைகள் ஏற்பட்டிருக்கின்றன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** கட்டபொம்மன் கார்ப்பரேஷன் என்று கன்னியாகுமரி ஜில்லாவுக்கும் திருநெல்வேலி ஜில்லாவுக்கும் புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது. டிரான்ஸ்போர்ட் இலாகாவிலே முன்பு வேலை செய்த அரசாங்க சிப்பந்திகள், கிளார்க் போன்றவர்கள் இந்தக் கழகத்திலே இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்பு இருந்த சலுகைகள் கொடுக்கப்படுமா அல்லது பறிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்தச் சலுகைகள் கொடுக்கப்படும் என்று ஏற்கெனவே இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பழனியில் தங்கும் விடுதி

*87 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி கோயில் நிதியிலிருந்து அங்கு மேலும் ஒரு தங்கும் விடுதி கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) தற்போதுள்ள விடுதிகள் பயணிகள் தங்க போதுமானதாக இல்லை. எனவே, 108 அறைகள் கொண்ட மாடி கட்ட உத்தேசிக்கப்பட்டு, முதல் கட்டமாக ரூபாய் நான்கு லட்சத்தில் 48 அறைகள் கட்டுவதற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தப் பணி எப்போது முடிவுறும்? அங்கு கட்டப்படும் அறைகளுக்குக் குறைந்த வாடகை திர்ணயிக்கப்படுமா ? நவீன முறையில் வசதிகள் செய்யப்படுமா ?**

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** சென்ற மாதத்தில்தான் வேலை துவக்கப்பட்டுள்ளது. சுமார் 6 மாத காலத்தில் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பயணிகள் தங்குவதற்கான வசதிகள் என்னென்ன தேவையோ அத்தனை வசதிகளும் அந்த அறைகளில் செய்யப்படும்.

### பழனியில் நடமாடும் மருத்துவமனை

*88 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி கோயில் நிதியிலிருந்து நடமாடும் மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்தும் உத்தேசம் ஆய்வில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ஆம். இதற்கான ஒப்பளிப்பு சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரால் வழங்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-00)

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இந்த நடமாடும் மருத்துவமனை எவ்வளவு மைல்கள் தூரத்திற்குச் சென்று பணியாற்ற உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ? இதற்கு தேவையான வாகனங்கள் முதலியவற்றிற்கெல்லாம் ஏற்பாடு செய்தாகிவிட்டதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பழனிக் கோவிலைச் சுற்றிலும் சுமார் 25 மைல் சுற்றளவு உள்ள பகுதிகளுக்கு நடமாடும் மருத்துவமனை சென்று வரவேண்டுமென்று திட்டமிடப் பட்டுள்ளது. அதற்காக மருத்துவ வண்டி வாங்குவதற்கும் மருத்துவர்களை நியமிப்பதற்கும் அறநிலையத் துறை ஆணையாளர் 28—3—74 அன்று தன் ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்த நடமாடும் ஆஸ்பத்திரியை பழனியிலிருந்து 25 மைல் தூரம் அனுப்புவதைவிட, பழனிக்கு அதிகம் பிரயாணிகள் வருகிறார்கள். அவர்களுக்கு ஏற்படக்கூடிய விபத்துக்களை உடனடியாக கவனிப்பதற்கு முதல் இடம் கொடுக்கப் படுமா ?



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** 25 மைல் என்றுதான் நான் குறிப்பிட்டேன். ஏற்கெனவே வருகிற பிரயாணிகளுக்கு மட்டுமல்லாது உள்ளூரில் இருப்பவர்களுக்குக்கூட மருத்துவ வசதி பெறுகிற வகையில் கடந்த மூன்றாண்டுக் காலத்தில் ஒரு மருத்துவ மனை நிறுவி கோவில் சார்பில் நடத்தப்பட்டு வருகிறது. அதுபோல் கண் மருத்துவமனை ஒன்றும் ஏற்கெனவே இருக்கிறது. அதைத் தொடங்குவதற்கு சுமார் பத்து லட்சம் ரூபாய் செலவில் கட்டட வேலை இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

### *Marudamalai Subramania Temple*

*89 Q.—Thiru N. Dennis
Thiru N. K. Palanisamy
Thiru P. Soundarapandian : Will the Hon. the Minister for Religious Endowments be pleased [illegible] state—

(a) whether bogus Archana tickets have been [illegible] by the Hindu Religious and Charitable Endowments Administration Department from Sri Subramania Temple at Marudamalai in Coimbatore district; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) அதுபற்றிய செய்தி, [illegible]யின் ஆய்வில் உள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இந்த போலி அர்ச்சனை டிக்கட்டுகள் எப்படி வந்தன ? அதி[illegible] சென்று விசாரித்தார்களா ? அதனுடைய விவரங்களைத் தெரிந்து அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** 1382-ம் ஆண்டு பசலிக்கான தணிக்கையில் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அதன் பெயரில்தான் கோவில் நிர்வாக அதிகாரி மீது சந்தேகம் ஏற்பட்டு தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது.

### மேட்டுப்பாளையத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர் விடுதி

*90 வினா—**திரு. மே. சி. தாயமணி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகரில் தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதி ஒன்று அமைக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் நகரில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான அரசு விடுதியொன்று கட்டும் திட்டம், புதிய விடுதிகள் திறக்கவும்,



...AT LIBRARY

உதவி பெறும் தனியார் விடுதிகளை மேற்கொள்ளவும் முன்மொழிவு செய்யப்பட்டுள்ள 1974-75 ஆண்டுக்கான இரண்டாம் பகுதித் திட்டத்தின் (under Part II Scheme) கீழ் அரசின் ஆய்விலுள்ளது.

திரு. மே. சி. தூயமணி: மேட்டுப்பாளையம் நகரில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை பல்லாண்டுகளாக இருந்துவருகிறது. எனவே இந்த ஆண்டாவது அதை அமைப்பதற்கு உடனடியாக முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் நகரில் அரிசன உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான விடுதியொன்று கட்டும் திட்டம் அரசின் ஆய்விலுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் அரிசன மாணவர்களுக்காக அரசு புதிய விடுதிகளைத் திறந்து வருகிறது. இதற்காக அரசின் திட்டத்தில் இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ் (பார்ட் 2 ஸ்கீம்) நிதி ஒதுக்கீடு வேண்டப்படுகிறது. இந்நிதி புதிய விடுதிகளைத் திறப்பதற்கும், தனியார் நடத்தும் விடுதிகளை படிப்படியாக அரசு மேற்கொள்ளும் திட்டத்திற்கும் செலவிடப்படுகிறது. 1974-75-ல் இதற்கென ரூ. 4,55,900 ஒதுக்கப்பட்டிருக்கிறது. புதிய விடுதிகளைத் திறப்பதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கருத்துரைகளை அரிசன நல இயக்குநர் அரசுக்கு அனுப்பி வைக்கிறார். எந்தெந்த இடங்களில் விடுதிகளைத் திறக்கவேண்டுமென்பதை மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர், அரிசன நல இயக்குநர், சமூக நலத் துறைச் செயலாளர் ஆகியோர் கலந்துரையாடி முடிவு செய்கின்றனர். 1974-75-ம் ஆண்டில் புதிய அரிசன மாணவர் விடுதிகள் திறப்பதற்காக முன்மொழியப்பட்டுள்ள இடங்கள் ஒன்று கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் நகராகும். அங்கு ரூ. 15,180 செலவில் 30 உயர்நிலைப்பள்ளிகள் மாணவர்கள் தங்கிப் பயில வசதியுள்ளதாக விடுதி அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, எஸ்டேட்டுகள் (ஒழிப்பு, ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, எஸ்டேட்டுகள் (ஒழிப்பு, ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### (ஆ) 1974-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) மூன்றாம் திருத்த சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, 1974-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) மூன்றாம் திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

**(இ) 1974-ம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு.**

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, 1974-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

இத்தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(3) 1974-75-ம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, 1974-75-ம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இப்பேரவையின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 6.06 கோடி ரூபாய்க்கான துணை மானியக் கோரிக்கைகள் அவையின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 3.47 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும். எஞ்சிய தொகை, மூலதன கடன் கணக்குகளிலும் சேரும்.

இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டப்பணிகள், வேலைத் திட்டங்கள் குறித்துச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக மாவட்ட நல அதிகாரிகள் இரு துறைகளுக்கும் ஒருவராக இருந்ததை மாற்றி ஒவ்வொரு துறைக்கும் தனித்தனி மாவட்ட நல அதிகாரிகளை நியமிப்பதற்கு இத்துணை மதிப்பீட்டில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.





படிப்பு உதவித் தொகை வழங்க வரையறுக்கப்பட்டுள்ள பெற்றோர் வருமான மேல்வரம்பு, தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பொறுத்த வரையில், 2,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும், பிற்படுத்தப்பட்ட மாணவர்களைப் பொறுத்த வரையில், 2,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வீட்டு வசதிக்கெனப் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக 100 தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர் விடுதிகள் கட்டுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. அஃதன்றியில் 50 பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளும் கட்டப்படும். இதற்கென 25 லட்ச ரூபாய் கடன் வழங்கத் துணை மதிப்பீட்டில் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற குடிநீர் வழங்கு திட்டங்களுக்குத் தற்போது வகை செய்யப்பட்டுள்ள 1.77 கோடி ரூபாயுடன் மேலும் ஒரு கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்படுகிறது. செங்கற்பட்டு, வட ஆற்காடு, திருச்சி, சேலம், தர்மபுரி, கோவை மாவட்டங்களில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த மொத்தம் 27 லட்சம் ரூபாய் அளவுக்கு செலவிட வகை செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகருக்கான குடி தண்ணீர் நிலைமையைச் சமாளிக்கும் வகையில் மாநகராட்சிக்கு மானியமாகவும், கடனாகவும் 32.25 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஆயிரத்து ஐநூறுக்குக் குறையாத மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலை அமைப்பது என்ற அடிப்படையில் கடந்த வருடம் சிறப்புத் திட்டத்தை உறுப்பினர்கள் அறிவார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கென 6.6 லட்ச ரூபாய் வைக்கப்பட்டுள்ளது. மேலும் 1,500-க்கு குறைந்த மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் அமைப்பது என்ற 12 கோடி ரூபாய்ச் செலவில் சிறப்புத் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து வளர்ச்சி நிதி உதவிக் கழகம் ஒன்றை நிறுவிடவும், பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு கூடுதல் மூலதனம் அளிக்கவும், சென்னை மாநகரில் விரைவுப் போக்குவரத்து நிலையமொன்றை அமைக்கவும் இத் துணைமதிப்பீட்டில் 71.50 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஆகஸ்ட் 14

மொத்தம் 1.52 கோடி ரூபாய் செலவில், மேலும் 12 புதிய சிறப்புச் சிறு பாசனத் திட்டங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இப் புதிய திட்டங்களுக்கான செலவு, அவை ஏற்கெனவே அனுமதித்துள்ள மானியத்தில் அடங்கும். அவையின் ஒப்புதலைப் பெற இத்துணை மதிப்பீடுகளில் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

புதிதாக நிறுவ இருக்கும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்காக 30 லட்ச ரூபாய் பங்கு மூலதனம் வழங்குவதற்கான நிதி ஒதுக்கமும் இதில் அடங்குகிறது.

ஏற்கெனவே ஒப்பளிப்பு வழங்கியது உட்பட, இருபத்தாறு தீயணைக்கும் படை நிலையங்களை நடப்பு ஆண்டில் அமைப்பதென முடிவு எடுத்துள்ளோம். அதில் ஒரு கட்டத்திற்காகும் செலவுக்காக துணை மதிப்பீட்டில் 7.22 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

1937-ம் ஆண்டிலிருந்து இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்களுக்கும், கன்னியாகுமரி, திருத்தணி பகுதிகளைத் தமிழ் மாநிலத்துடன் இணைப்பதற்கான போராட்டங்களில் கலந்து கொண்டவர்களுக்கும் குடும்ப நிதி உதவி, மாதாந்திர மானியத் தொகை அளிப்பதென அரசு அறிவித்ததற்கு ஏற்ப, 3.57 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய பல்வேறு நிதி ஒதுக்கங்கள் மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளிலும், நல் வாழ்வுத் திட்டங்களிலும் அரசு கொண்டுள்ள ஆர்வத்தைத் தெளிவு படுத்துவனவாகும். 1973-74-ல் 129 கோடி ரூபாய் அளவுள்ள திட்டமொன்றை நிறைவேற்றினோம். அஃதன்னியில் திட்டத்தில் சேராத வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொண்டிருக்கிறோம். 1974-75-ம் ஆண்டுக்கு, மத்திய திட்டக் குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட திட்ட அளவு 112 கோடி ரூபாயாக இருப்பினும், 151 கோடி ரூபாய்க்கான திட்டத்தை நிறைவேற்ற உறுதி கொண்டுள்ளோம். திட்டத்தில் சேராத வளர்ச்சிப் பணிகள் பலவற்றையும், சிறப்புப் பணிகளையும் தீவிரமாகச் செய்து முடிக்க முனைந்துள்ளோம். இவ்வாறு திட்டப் பணிகளையும், மற்றப் பணிகளையும் செய்து முடிப்பதற்கு உதவும் வகையில், இந்தத் துணை மதிப்பீடுகளை இந்த அவை ஏற்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.



1974 ஆகஸ்ட் 14] [டாக்டர் மு. கருணாநிதி]

இந்தத் துணை மதிப்பீடுகளையன்னியில் வேறு சில விவரங்களையும் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்காக எடுக்கப்பட்டுள்ள முடிவுகளையும் அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். மதுவிலக்கை நடைமுறைப்படுத்தி வந்த நமது மாநிலத்திற்கு அதனால் ஏற்பட்ட இழப்பை ஓரளவுக்காவது ஈடுகட்ட மத்திய அரசு முன்வராததாலும், மதுவிலக்குக் கொள்கையை அகில இந்திய அளவில் நடைமுறைப்படுத்தாததால் ஏற்பட்ட இன்னல்களுக்கு நமது மாநிலம் ஆளாக வேண்டியிருந்ததாலும், இடைக்கால நிதி நிலையைச் சமாளிக்க மிகுந்த மனவேதனையுடன் மதுவிலக்கை 1971-ம் ஆண்டு ஒத்திவைக்க நேர்ந்தது. அண்ணல் காந்தி நெறி நின்று, அண்ணா வழியில் அரசோச்சும் நமக்கு மதுவிலக்கு ஒத்திவைப்பின் நியாயவாதங்களுக்கு இடையே ஏதோ ஒரு முள் நெஞ்சில் உறுத்திக் கொண்டே இருந்தது. இதனை மதுவிலக்கை ஒத்தி வைத்தபோதே சட்டப் பேரவையில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஒத்திவைப்பது என்பதே, மீண்டும் நடைமுறைக்கு வரும் என்பதற்கான அறிகுறிதான் என்று அப்போதே நான் கூறியதற்கு இணங்க, அறிஞர் அண்ணா பிறந்த திங்களான செப்டம்பர் திங்கள் முதல் நாளில் இருந்து, மீண்டும் தமிழகத்தில் முழுமையான மதுவிலக்கு நடைமுறைப் படுத்தப்பட இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். முதற் கட்டமாக கள்ளுக்கடைகளை மூடியும், இரண்டாவதும் இறுதியுமான கட்டமாக முழு மதுவிலக்கைக் கொண்டு வந்தும், நாம் எடுத்துள்ள இந்த முடிவின் காரணமாக ஆண்டுக்கு 56 கோடி ரூபாய் இழப்பை அரசு ஏற்க வேண்டியுள்ளது.

மதுவிலக்கை அமுல்படுத்தும் முடிவுடன், மற்றொரு மகிழ்ச்சிகரமான செய்தியையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் செய்தி பல ஏழை நடுத்தரக் குடும்பங்களுக்கு செந்தேனைக இனிக்கும் என்பதை நானறிவேன். நீண்ட நெடு நாட்களாக நல்லோர் பலரின் முறையீடாக இருந்து வருவதும், ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டதுமான குதிரைப் பந்தயத்தை அறவே ஒழிப்பதென்று இந்த அரசு முடிவு செய்கிறது. இந்த முடிவு 1974 நவம்பர் முதல் நாளில் இருந்து நடைமுறைக்கு வரும். இதனால் ஆண்டுக்கு இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படும்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஆகஸ்ட் 14

இது போன்ற சமூக நலக் கொள்கைகளை நிறைவேற்றுவதில் ஏற்படும் இழப்புகளைச் சரிக்கட்டவும், திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், தொய்வு விழாமல் தொடர்ந்து நடைபெறவும், நிதி ஆதாரத்தைச் செம்மையாக வைத்திருக்க வரிகளை விதிக்க வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பணவீக்கம் மிகுந்துள்ள இந்நாளில், விதிக்கின்ற வரிகள், அடிப்படை அத்யாவசியப் பொருள்களின் விலையை மேலும் உயர்த்தாமல் பார்த்துக் கொள்வது முக்கியமானதாகும். அந்த அடிப்படையில் நாம் செயல்படுத்த இருக்கும் நிதி திரட்டும் முறைகள் அமையும். இதன் வாயிலாக முழு ஆண்டில் ஏறத்தாழ 14 கோடி ரூபாய் வருவாய் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போதுள்ள பலமுனை விற்பனை வரி விகிதத்தை 3.5 சதவிகிதத்திலிருந்து 4.0 சதவிகிதமாக உயர்த்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அண்டை மாநிலங்களான, ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்கள் இந்த விகிதத்தில்தான் இப்போது வரி விதிக்கின்றன. இதற்கேற்ப ஒருமுனை வரியின்கீழ் ஏழு சதவிதமாக விதிக்கப்படும் வரிகளுக்குரிய பொருள்களுக்கு மட்டும் இனிமேல் 8 சதவிகித வரியாக விதிக்கப்படும். இத்துடன், கரும்பின் மீதான கொள்முதல் வரி தற்போது 7 சதவிகிதம் என்று இருப்பதை 12 சதவிதமாக உயர்த்தப்படும்.

சென்ற நிதிநிலை அறிக்கையில் பலமுனை வரிகள் பலவற்றை ஒருமுனை வரியாக மாற்றியமைத்தபோதும், ஏற்கெனவே இருந்த ஒருமுனை வரிகளை சற்று அதிகப்படுத்தியபோதும் ஏழை மக்கள் பயன்படுத்தும் பொருள்களுக்கு வரிகளை நாம் கூடுதலாக்கவில்லை. அதே கொள்கை இப்பொழுதும் கடைப் பிடிக்கப்பட்டுள்ளது. பொதுவாக குறைந்தபட்ச ஒருமுனை வரி விதம், பலமுனை விற்பனை வரி வீதத்தை விடக் குறைவாக இருக்கக் கூடாது. எனினும். விவசாயிகள், நடுத்தர மக்கள் ஆகியவர்களைப் பாதிக்காத வண்ணம் உரம், பூச்சி மருந்துகள், எண்ணெய் வகைகள், பருப்பு, போன்றவைகளுக்கு 3½ சதவீதம் அல்லது அதற்குக் குறைவாகவேதான் ஒருமுனை விற்பனை வரி விகிதம் அமைக்கப் பட்டுள்ளது. இவற்றை மாற்றியமைக்காமல் தொடர்ந்து சலுகை வீதங்களிலேயே வரி விதிப்பை வைத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.



1974 ஆகஸ்ட் 14] [டாக்டர் மு. கருணாநிதி]

மோட்டார் வாகன எண்ணெய்மீது தமிழக அரசு விதித்து வரும் விற்பனை வரி, அண்டை மாநிலங்கள் விதிக்கும் விகிதத்தை விடக் கணிசமான அளவுக்குக் குறைவானதாகும். இதர மாநிலங்களான கேரளத்தில் ஒரு கிலோ லிட்டருக்கு 420 ரூபாயாகவும், ஆந்திரத்தில் 365 ரூபாயாகவும், கர்நாடகத்தில் 352 ரூபாயாகவும், மகாராஷ்டிரத்தில் 308 ரூபாயாகவும் இருக்கும்போது நமது மாநிலத்தில் ஒரு கிலோ லிட்டர் பெட்ரோலுக்கு 150 ரூபாய் என விற்பனை வரி விதிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே வசதியான நிலையில் உள்ளவர்கள் பயன்படுத்தும் பெட்ரோல் மீதான விற்பனை வரியை கிலோ லிட்டருக்கு 150 ரூபாயிலிருந்து 210 ரூபாயாக உயர்த்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பிறகும் நமது மாநிலத்தில் விதிக்கப்படும் வரி மற்ற மாநிலங்களை விடக் குறைவானதாகவே இருக்கும். இத்துடன் டீசல் எண்ணெய் மீதான விற்பனை வரியும் லிட்டருக்கு 2 காசுகள் உயர்த்தப்படும். இதன் மூலம் பெட்ரோல், டீசல் இவற்றின் விலைகளில் உள்ள வேறுபாடு அதிகரிப்பது கட்டுக்குள் அடங்கும்.

திரைப்படக் காட்சி வரியை கீழ்க்கண்டவாறு உயர்த்துவது என முடிவு செய்துள்ளோம்:—

| நிரந்தர, ஓரளவு நிரந்தரத் திரையரங்குகள். (Permanent, Semi-permanent Theatres) | காட்சி ஒன்றிற்கான வரி. |
|---|---|
| | ரூபாய் |
| சென்னை— | |
| குளுமைப்படுத்தப்பட்ட திரையரங்குகள் | 150 |
| மற்றவை | 100 |
| பெரிய நகரங்களான— | |
| மதுரை, கோவை, திருச்சிராப்பள்ளி, சேலம், குளுமைப்படுத்தப்பட்ட திரையரங்குகள் | 100 |
| மற்றவை | 75 |
| மற்ற நகராட்சிகள்— | |
| குளுமைப்படுத்தப்பட்ட திரையரங்குகள் | 75 |
| மற்றவை | 50 |

| | காட்சி ஒன்றிற்கான வரி. |
|---|---|
| நிரந்தர, ஓரளவு நிரந்தரத் திரையரங்குகள். | |
| மற்ற இடங்கள்— | |
| குளுமைப்படுத்தப்பட்ட திரையரங்குகள் | 50 |
| மற்றவை | 40 |
| தற்காலிக திரையரங்குகள் (Touring Theatres)— | |
| நகராட்சிகளில் | 40 |
| மற்ற இடங்களில் | 25 |

உள்ளாட்சி அமைப்புகள், காட்சி வரி மீது விதித்து வந்த மேல் வரி நீக்கப்படுகின்றது. 1973–74-ல் இந்த மேல் வரிமூலம் பெற்ற தொகைக்கு தகுந்த இழப்பீடு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும். மேற்கூறிய வரி விதிப்பு செயற்குறிப்புகள் நாளை முதல் அமுலுக்கு வரும்.

மோட்டார் வாகன வரி விகிதங்களையும் அவற்றின் மீதான மேல் வரி விகிதங்களையும் சேர்த்துச் சீரமைப்பதெனத் தீர்மானித்துள்ளோம். இதன்படி மேல் வரி உள்ளிட்ட காலாண்டு வரி விகிதம் ஒவ்வொன்றும் அதற்கு மேலாக அடுத்துள்ள பத்து ரூபாய்க்கு முழுமையாக்கப்படும். இது வரி வசூலுக்கும் கணக்கு முறைக்கும் எளிதாக அமையும். மேல் வரி என்று தனியாகக் கணக்கு வைப்பது விட்டு விடப்பட்டாலும், கிராமப்புறச் சாலை நிதிக்கு (Rural Road Development Fund) மொத்த வரி வசூலிலிருந்து தகுந்த ஒதுக்கீடு செய்யப்படும். இது அடுத்து வருகின்ற காலாண்டிலிருந்து (1974-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ம் நாள் முதல்) செயல்படுத்தப்படும்.

குடியின் தீமையையும், குதிரைப் பந்தய தீமையையும் ஒழிக்கும் அதே நேரத்தில் இதனால் ஏற்படும் இழப்பையும் ஈடு கட்டி, மக்கள் நல் வாழ்வுக்கான வளர்ச்சித் திட்டங்களையும், சமுதாய நலப் பணிகளையும் விரைவு குன்றாது செயல்படுத்த, ஒரு சில வரி விகித மாற்றங்களுக்கு தனது முழு ஆதரவையும் நல்கி, அரசு பாங்காக நிதி நிர்வாகம் நடத்த இம் மாமன்றம் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின்மீது விவாதம். அலுவல் ஆய்வுக்குழுவில் எடுத்த முடிவின்படி இன்றைக்கு கட்சித் தலைவர்கள் பேசவேண்டும்.



## 4. நடைமுறைக் கேள்வி.

திருமதி சத்தியவாணிமுத்து அவர்களை அமைச்சர் பதவியிலிருந்து விலக்கம் செய்ததற்கான காரணங்களை மாண்புமிகு முதல்வர் அறிவிக்கக் கோருதல்.

**திரு. கோவை செழியன் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, சென்ற முறை சட்டமன்றம் கூடி கலைந்ததற்குப் பின்பு இந்த சட்டமன்றம் கூடியிருக்கிறது. இந்த இடைக் காலத்தில் நடைபெற்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் நிகழ்ச்சிகள் இருக்கின்றன. சாதாரணமாக அவற்றை சட்டமன்றத்திற்குச் சொல்வது வழக்கம். பாராளுமன்றத்தில் அம்மாதிரி இரண்டொரு நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன. அவைகளை நான் எடுத்துக்காட்ட முடியும். சென்ற முறை ஆளும் கட்சியில் அமைச்சராக இருந்து திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், சட்டமன்றம் முடிவடைந்த பின்னால் அமைச்சர் பதவியில் இருந்து ராசினாமா செய்யாமல், டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒரு அமைச்சர் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார் என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அரசியல் நிகழ்ச்சியாகும். நாட்டிலே உள்ள மக்களும், எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகளும் அதற்கான காரணங்களை முதலமைச்சர் அவர்களிடமிருந்து எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திருமதி சத்தியவாணிமுத்து அவர்களை டிஸ்மிஸ் செய்ததற்கான காரணங்கள் என்ன என்ற விவரத்தை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

## 5. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதிர்க்கட்சிக்காரர்கள் கொண்டு வருகிறோம். ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. இன்று கட்சித் தலைவர்கள் பேசவேண்டுமென்றால், மற்ற உறுப்பினர்கள் பேச வாய்ப்பு இல்லை. இதுவரையில் ஒரு 4–5 பேர்கள்தான் பேசியிருக்கிறார்கள். இதற்காக ஒரு 35 பேர் எழுந்து ஒரு தீர்மானம் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அலுவல் ஆய்வுக் குழுவில் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து எடுத்த முடிவு.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர்கள் அங்கே எடுக்கிறார்கள். இங்கே வந்து பார்த்தால்தானே தெரிகிறது. அதற்காக தலைவர்கள் மீது நம்பிக்கையில்லை என்று சொல்லவில்லை. முதல் நாள் 12¾ மணிக்கே ஆள் இல்லை என்று சபையைக் கலைத்து விட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆள் இல்லை என்று கலைத்து விட்டார்கள் என்றெல்லாம் சொல்லாதீர்கள். அதுபற்றி நேற்றே பேசி முடிவெடுத்தாகிவிட்டது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Members cannot speak after that on a very important problem like rice price, scarcity etc.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவு. உங்கள் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து எடுத்த முடிவு.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எப்படியாவது ஒரு நாள் எக்ஸ்டென்ட் செய்து கொடுங்கள். இல்லையென்றால் உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். Members cannot speak afterwards.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த முக்கியமான விவாதத்திலே இன்னும் நாளை அதிகமாகக் கூட்டவேண்டும் என்ற கருத்தை திருமதி அனந்தநாயகி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் நான்கு நாட்கள் இந்த விவாதத்தை ஒதுக்கவேண்டும், மூன்று நாள் விவாதம் அதற்குப் பிறகு நான்காம் நாள் முதல் அமைச்சர் அவர்களும், இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த தலைவரும் பேச வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். அதற்கு மாறாகப் பல பேர்கள் பேசுவதற்கு இருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களும் சபையின் முன்னவர் அவர்களும் ஒத்துக்கொண்டால் இந்த விவாதத்திற்கு மேலும் ஒரு நாள் ஒதுக்குவதிலே எனக்கும் ஆட்சேபணை இல்லை. ஏதோ கட்சித் தலைவராக இருந்து கொண்டு பின்வரிசையிலே இருக்கிறவர்களுக்கு இடம் கொடுக்கக்



கூடாது என்ற உணர்வோடு இருப்பதாக யாரும் நினைக்கவேண்டிய தேவையில்லை என்பதை தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அலுவல் ஆய்வுக் குழுவில் மிக முக்கியமான ஒரு பிரச்சினையைப் பற்றி முடிவு செய்ததை இப்பொழுது மறந்து விடுவதற்கில்லை. 19-ம் தேதி டெல்லியில் டீலிமிட்டேஷன் கமிட்டியில் சில முடிவுகளைச் செய்ய இருக்கிறார்கள். மறு பரிசீலனை செய்வதற்கு இந்த மன்றத்தில் 17-ம் தேதியன்றே ஒரு தீர்மானத்தைப் போடவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, 16-ம் தேதியன்றே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது விவாதத்தை முடிப்பது என்று ஒருசேர அனைவரும் கலந்து முடிவு எடுத்திருக்கிறோம் அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில். அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் அப்படி முடிவு எடுத்தது சரியல்ல, ஆகவே சபையே ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்றால் அலுவல் ஆய்வுக் குழுவே தேவையில்லாமல் போய்விடும்.

**திரு. கோவை செழியன் :** டீலிமிட்டேஷன் பற்றிய தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்றப் போகிறோம். அதிலே விவாதம் தேவையில்லை. அதை இப்பொழுதே வேண்டுமானாலும் பாஸ் பண்ணி அனுப்பிவிடலாம். டீலிமிட்டேஷன் தீர்மானத்தைப் பொறுத்த வரையிலும் யாரும், எந்தக் கட்சியும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அந்தத் தீர்மானத்தை முன்மொழியுங்கள், ஆமாம் என்று சொல்லிவிடுகிறோம். அதற்குப் பின்னால் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு உறுப்பினர்களை அனுமதியுங்கள். அதை ஒரு பெரிய காரணமாக வைத்துக்கொண்டு, அதற்கு ஒரு நாள் விவாதத்திற்கு தேவை என்று சொல்லி, இந்தத் தீர்மானத்தை விவாதிப்பதற்கு ஒரு நாளைக் குறைப்பது நியாயம் இல்லை. அந்த டீலிமிட்டேஷன் தீர்மானத்தை முன்மொழியுங்கள். நாங்கள் சரி என்று சொல்கிறோம்.

**திரு. சோ. அழகர்சாமி :** அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் கூட இந்தத் தீர்மானத்தை விவாதிப்பதற்கு கூடுதலாக ஒரு நாள் வேண்டும் என்று சொன்னோம். பிறகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி டீலிமிட்டேஷன் தீர்மானத்திற்கு ஒரு நாள்

விவாதம் வேண்டும் என்று கருதி, இதற்கு நான்கு நாட்கள் ஒதுக்கப்பட்டது. அன்று பேசுவதற்கு ஆள் இல்லை என்று சொல்லி ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே சபை ஒத்திவைக்கப் பட்டது. அன்று சில உறுப்பினர்கள் பேசியிருக்கலாம். அது முடிந்துபோன விஷயம். அதைப்பற்றி இப்பொழுது பேசுவதில் பயனில்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாலையிலே வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். அன்று ஒரு மணி நேரம் போனதற்கு கூடுதலாக இரண்டு மணி நேரம் கிடைக்கும்.

**திரு. சோ. அழகர்சாமி :** இந்தத் தீர்மானத்தில் முக்கியமான பிரச்சினைகளைப்பற்றிப் பேசவேண்டியிருக்கிறது. அந்த டீலிமிட்டேஷன் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றிவிடலாம். அதில் அதிக விவாதம் தேவையில்லை. செழியன் அவர்கள் சொன்னது போல், ஏகமனதாக அந்த டீலிமிட்டேஷன் தீர்மானத்தை நிறை வேற்றி விடலாம். கூட ஒரு நாள் இந்தத் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நண்பர் செழியன் அவர்கள் சொன்னதுபோல 16-ம் தேதி காலையிலேயே இந்த டீலிமிட்டேஷன் பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றி விடலாம். எல்லோரும் சேர்ந்து அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டால் இந்த மந்திரி சபையின் மீது நம்பிக்கை வைத்து, பிறகு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது விவாதத்தைத் தொடரலாம். ஆளும் கட்சியினர் கொண்டு வருகிற ஒரு தீர்மானத்தை அனைவரும் ஆதரித்துப் பேசுவதன் மூலம் எல்லோரும் ஏகோபித்து ஆளும் கட்சியின்மீது நம்பிக்கை வைத்திருப்பதாக அர்த்தம் ஆகிவிடும். ஆகவே, செழியன் அவர்களின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் படுகிறது.

**திரு. கோவை செழியன் :** இதிலிருந்து ஒன்று தெரிந்து கொள்ள வேண்டும். எதிர்க்கட்சிக்காரர்கள் ஜனநாயகத்திற்கு எவ்வளவு மதிப்பு தந்து, ஆளும் கட்சியினர் நல்லது செய்தால் அதை ஆதரிக்கவேண்டும் என்று கருதுகிறார்கள் என்பதை உணர



வேண்டும். நம்பிக்கை இல்லை என்று தீர்மானம் கொண்டு வந்திருந்தாலும் நல்லதை ஆதரிப்போம், பெருந்தன்மையோடு ஒத்துழைப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆகவே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது மேலும் ஒரு நாள் விவாதத்திற்கு ஒதுக்கப்படுகிறது. 17-ம் தேதியும் விவாதம் உண்டு. திரு. அழகர்சாமி அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது இப்பொழுது பேசுவார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, எங்கள் கட்சி சார்பிலும், எதிர்க்கட்சிகள் சார்பிலும் கொடுக்கப்பட்ட நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்கம் இன்று பதுக்கல் காரர்களுக்கும், கள்ளமார்க்கெட்காரர்களுக்கும், கொள்ளை லாபம் அடிப்பவர்களுக்கும் அனுசரணையான கொள்கையைக் கடைப் பிடிக்கிறது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மக்களுடைய நியாயமான உரிமைகளை கேட்கக்கூடிய சமயத்தில் போலீஸ் மூலம் அடக்குமுறை செய்கிறது, தமிழ்நாட்டில் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் நடவடிக்கை எடுத்து வருகிறது, என்ற காரணங்களினால் இந்த அரசின் மீது நம்பிக்கை யில்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

பிரதானமாக, தமிழ்நாட்டில் எப்பொழுதுமே ஏற்படாத ஒரு கடினமான பயங்கரமான உணவு நெருக்கடி ஏற்பட்டு இருக்கிறது என்று சொன்னால் அதற்கு முக்கிய காரணம் இந்த சர்க்கார் கடைப்பிடிக்கிற பிற்போக்கான கொள்கைகள் என்பதுதான் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இந்தக் கொள்கை கள் காரணமாக இன்று இந்த நாட்டில் கொள்ளை அடிக்கக்கூடிய வர்கள், கள்ளமார்க்கெட்காரர்கள், பதுக்கல்காரர்கள், எவ்வளவு கோடிக் கணக்கான ரூபாய்களை கொள்ளை அடித்து இருக்கிறார்கள் என்பதை மதிப்பிற்குரிய நண்பர் வடிவேல் அவர்கள் முதல் நாள் விவாதத்தின்போது எடுத்துக் கூறினார்கள். இந்த அரசாங்கம் ரூ. 80-க்கு வாங்கலாம் என்று விலை நிர்ணயித்து இருக்கிறார்கள். சாதாரண விவசாயி உற்பத்தி பண்ணக்கூடிய விவசாயி வாங்கக் கூடிய விலையா என்றால் இல்லை. இவர்கள் சொல்லக்கூடிய ரூ. 80 விலை, இவர்கள் நிர்ணயித்து இருக்கக்கூடிய ரூ. 80 விலை, யாருக்குச்

சாதகமாக இருக்கிறது என்றால் அறுவடை காலத்தில் மூட்டை ரூ. 40 என்று வாங்கி அங்கே சேர்த்து வைத்து இருப்பவர்களுக்கு, பதுக்கல்காரர்களுக்கு, மொத்த வியாபாரிகளுக்குத்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். கள்ளமார்க்கெட் விலையையே நியாய விலையாக நிர்ணயித்து இருக்கிறார்கள். கள்ளமார்க்கெட் விலையை நியாய விலையாக அறிவித்து இருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறேன். தமிழகத்தில் பெரும் பகுதி மக்களுடைய வருமானம் ஒரு மாதத்திற்கு ரூ. 100 கிடையாது. அப்படிப் பல குடும்பங்கள் இருக்கின்றன. ஒரு படியரிசி ரூ. 5, ரூ. 6 என்று வாங்கி ஒரு வேளை கூட வயிறார சாப்பிட முடியாமல் அவதிப்படுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? அரசாங்கத்தின் தவறான கொள்கைகள்தான்.

தமிழகத்தில் விளையக்கூடிய நெல் தமிழகத்திற்கு மட்டும் போதுமானதல்ல, அண்டை மாநிலத்திற்கும் அனுப்பக்கூடிய விதத்தில் உபரியாக உற்பத்தியாகியிருக்கிறது. இவ்வளவு நெல்லையும் அரசாங்கமே விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டு இருக்காது. ஆனால், மொத்த வியாபாரிகள் அறுவடை காலத்தில் நெல்லை வாங்கிப் பதுக்கி வைத்து இப்போது மார்க்கெட்டில் அதிகமான விலைக்கு விற்கிறார்கள். அதுவே தற்போது நியாயமான விலை என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

இரவோடு இரவாக தஞ்சாவூரிலிருந்து மட்டும் ஒரே நாளில் 1,000 லாரிகள் அரிசியை வெளியேற்றிச் சென்றன என்பதை முதலமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். 1,000 லாரிகளா, 10,000 லாரிகளா என்பதுதான் சர்ச்சை. ஒரே நாளில் தஞ்சை மாவட்டத்திலிருந்து இரவோடு இரவாக நெல் வெளியே செல்வதற்கு எப்படி அனுமதி அளிக்கப்பட்டது? அரசுக்கு முன் கூட்டியே இது தெரிந்து இருக்கவில்லையா? எப்படி இந்த லாரிகளில் நெல்லை முன்கூட்டியே ஏற்றி இருக்க முடியும்? அரசாங்கத்தில் சி.ஐ.டி. இலாகா இருக்கிறது, போலீஸ் இலாகா இருக்கிறது, அதிகாரிகள் வைத்து இருக்கிறார்கள். இந்த லாரிகள் எங்கே போயிற்று, இந்த சரக்கு எங்கே விற்கப்பட்டது, நெல் எங்கே போய்விட்டது என்று அரசாங்கம்தான் கண்டு பிடிக்க வேண்டும். எதிர்க்கட்சிக்காரர்களைப் பார்த்து, நீங்கள் சொல்ல வேண்டுமென்று சொல்கிறார்கள். அரசாங்கம் உங்கள் கையில் இருக்கிறது. நெல் எங்கே போய் இருக்கிறது என்று கண்டு பிடிப்பது அரசாங்கத்தின் பொறுப்பு. இந்த நெல்லை அரசாங்கமே



முன்கூட்டியே நேரடியாகக் கொள்முதல் செய்து ஸ்டாக் வைத்து இருந்தால் அங்குள்ள சிறு சிறு வியாபாரிகளுக்குக் கொடுத்து இருந்தால் விநியோகம் ஒழுங்காகவும் சீராகவும் அமைந்து இருக்க முடியும்.

படி அரிசி 1½ ரூபாய் விற்ற விவசாயி, இப்போது ரூ. 4½, 5 வாங்க வேண்டுமென்று சொன்னால் படியரிசிக்கு 3 ரூபாய் கூட கொடுத்து வாங்கவேண்டுமென்றால் சாதாரண விவசாய மக்கள் பட்டினி கிடந்து அவதிப்படக்கூடிய அவலநிலை ஏற்பட்டு இருக்கிறது. இன்னும் இந்த நிலை மூன்று மாத காலத்திற்கு நீடிக்கும் என்றால் அதற்குள் பல விவசாயக் குடும்பங்கள் பட்டினியால் வாடிச் செத்துவிடும் என்பதில் சந்தேகம் கிடையாது. இப்பொழுது ரூ. 6-க்கு விற்பது ரூ. 10-க்கு போகாது என்பதில் என்ன நிச்சயம் இருக்கிறது? அதையேகூட சர்க்கார் நியாய விலை என்று அறிவித்து விடுவார்கள் என்பதிலும் சந்தேகம் கிடையாது.

சிறுதானியங்கள் பொறுத்தவரையில் மாகாணத்தை விட்டுப் போகக்கூடாது என்ற தடையை மத்திய சர்க்கார் நீக்கியது தவறு என்று சொல்லப்பட்டது. அதை நாங்கள் சரி என்று சொல்லவில்லை. பொருளாதார நெருக்கடிக்குக் காரணம், மத்திய சர்க்காரின் பிற்போக்கான கொள்கை, பெரிய முதலாளிகளுக்கு ஆதரவான கொள்கை, பண வீக்கத்தைத் தடுக்காத கொள்கை, நோட்டு அச்சடிப்பதை நிறுத்தாத கொள்கை என்பதில் சந்தேகம் இல்லை. அதை எதிர்த்து காங்கிரஸ் முதல் அமைச்சர்களே போராடுகிறார்கள். ஒரிசா முதல் அமைச்சர் அந்தக் கொள்கையை எதிர்த்துப் போராடுகிறார். உத்தரப் பிரதேசத்தின் முதல் அமைச்சர் திரு. பகுகுணா அந்தக் கொள்கையை எதிர்த்துப் போராடுகிறார்கள். நம்முடைய முதல் அமைச்சர் போகும் போதும் சொல்லியிருக்கிறார். உணவு அமைச்சர்கள் மகாநாட்டில் மாகாணத்தை விட்டு மாகாணம் சிறு தானியங்கள் எடுத்துச் செல்வதற்கான தடை நீடிக்க வேண்டும் என்று சொல்லியிருப்பது நியாயமான கோரிக்கைதான். அதே நேரத்தில் மொத்த வியாபாரத்தை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற முற்போக்கான கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அதைவிட பிற்போக்கான கொள்கையை அனுசரிப்பதாகத்தான் நேற்று கூட முதல் அமைச்சர் அவர்கள் வர்த்தகர்கள் மகாநாட்டில்

சொல்லியிருக்கிறார்கள். வர்த்தகர்கள் மாநாடு நடத்தி, அவர்கள் உங்களுடைய நிர்வாகத்தின்மீது பழி போடுகிறார்கள். இன்றைக்கு 5 ரூபாய்க்கு அரிசி விற்கிறது. இன்னும் சில நாள் போனால் 6 ரூபாய்க்கு விற்கும். அதற்கு எல்லாம் காரணம் இந்த அரசாங்கம்தான் என்பதைத் தெரிவித்து, வன்மையாகக் குற்றஞ் சாட்டுகிறேன்.

(முற்பகல் 10-30)

1½ ரூபாய்க்கு விற்றபோது வாங்கிப் பதுக்கி வைத்துவிட்டு, நிலச் சுவான்தார்கள், பதுக்கல்காரர்கள், கள்ளமார்க்கெட்காரர்கள் எல்லாம் சேர்ந்து இப்போது 5 ரூபாய்க்கு விற்கிறார்கள். அதை இந்த அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்கிறது; நிலச் சுவான்தார்களுக்கு உடந்தையாக இருக்கிறது.

அறுவடை நேரத்தில் 80 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருந்தால் அந்தப் பணம் விவசாயிகளுக்குக் கிடைத்திருக்கும். ஆனால் இப்போது எங்கும் அறுவடை இல்லை. முந்திய அறுவடை சமயத்தில் குறைந்த விலைக்கு வாங்கிப் பதுக்கி வைத்திருந்த கள்ளமார்க்கெட்காரர்களுக்குத்தான் இப்போது நீங்கள் நிர்ணயம் செய்திருக்கின்ற 80 ரூபாய் போய் சேரும். ஆகவே, இந்த அரசாங்கமும் சிவில் சப்ளை இலாகாவும் பெரிய வர்த்தக முதலாளிகளும் கள்ளமார்க்கெட்காரர்களும் கூட்டு சேர்ந்து, சதி செய்து 4½ கோடி மக்களின் வயிற்றில் அடிக்கக்கூடிய பாதகமான செயலைச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று நான் குற்றஞ் சாட்டுகிறேன்.

இன்னும் கொஞ்ச நாள் போனால் அரிசி 10 ரூபாய்க்குக் கூட விற்கும். இப்போதே பல குடும்பங்கள் பட்டினி கிடக்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? இந்த நாட்டிலே நெல் விளையவில்லையா என்று கேட்டால் நிறைய விளைந்திருக்கிறது. இல்லை என்று சொல்ல முடியாது. அது மட்டுமல்ல. நம்முடைய சிவில் சப்ளைஸ் இலாகா கோதுமையை மத்திய அரசாங்கத்திடமிருந்து வாங்கிக் கொள்கிறது. மாதம் 2,000 டன் மத்தியிலிருந்து வருவதாகச் சொல்கிறார்கள். அதை எப்படி விநியோகம் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. எங்கே எப்படி விநியோகம் நடைபெறுகிறது என்று யாருக்கும் தெரியவில்லை. அசோக் டிரேடிங் கம்பெனி, பாலாஜி இண்டஸ்டிரீஸ் கம்பெனி. ஆனந்த மாளிகை



இவைபோன்ற ஒருசில நிறுவனங்களிடம் கொடுக்கிறார்கள். அவர்கள் யார் யாருக்கு எப்படிக் கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. கேட்டால் நீங்களே கண்டுபிடியுங்கள் என்று எங்களைப் பார்த்துச் சொல்கிறார்கள். யார் மூலம் எங்கே எவ்வளவு விநியோகம் நடைபெறுகிறது என்று எங்களுக்குத் தெரிந்தால் தானே நாங்கள் கண்காணிக்க முடியும். அந்த விபரத்தைப் பகிரங்கமாகவே இந்தச் சபையில் நீங்கள் சொல்லுங்கள்; எல்லோருக்கும் தெரியட்டும்.

மூன்று மாதங்களுக்கு முன்னால்கூட திருச்சியிலிருந்து பெங்களூருக்கு கோதுமைத் தவிடு ஒன்பது லாரிகளில் சென்றுகொண்டிருந்தது. அதை எங்கள் தலைவர் கல்யாணசுந்தரம் கண்டுபிடித்து. ஒரு வழக்குப் பதிவு செய்தார். அது என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. இப்படி கள்ளமார்க்கெட்காரர்களும், கொள்ளை லாபக்காரர்களும் நிலச்சுவாந்தார்களும் கொள்ளையடிப்பதற்குத்தான் உங்கள் நடவடிக்கைகள் பயன்படுகின்றன. இந்த நாட்டு ஏழை எளிய மக்களுக்குப் பயன்படவில்லை. இது அமைச்சர்களுக்குத் தெரியாதா? நிச்சயமாகத் தெரியாது என்று சொல்ல முடியாது.

ஒரு நாளைக்கு ஒரு உத்தரவைப் போடுகிறார்கள். ஒரு நாள் தடை போடுகிறார்கள், மறு நாள் தடையை எடுத்து விடுகிறார்கள். இது எதற்காக? தடையை எடுத்துவிட்டால் விலை உயரும், உணவுப் பொருட்கள் கடத்தப்படும் என்று முதலமைச்சருக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் நன்றாகத் தெரியும். முன்னால் நீங்களே அப்படிச் சொல்லியிருக்கிறீர்கள். மத்திய அரசாங்கத்தை எதிர்த்துப் போராடியிருக்கிறீர்கள். அப்படி இருக்கும்போது, தஞ்சை மாவட்டத்திலிருந்து நெல்லை வெளியே கொண்டு போனால் விலை ஏறும் என்பது உங்களுக்கு எப்படித் தெரியாமல் இருக்கும்? நீங்கள் தெரிந்துதான் தடையை நீக்கினீர்கள். கள்ளக்கடத்தல்காரர்களுக்கும் பதுக்கல்காரர்களுக்கும் உதவுவதற்காகத்தான் நீங்கள் தடையை நீக்கினீர்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)** : தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் நெல்லுக்கு அதிக விலை தரப்படவில்லை என்றும், நெல் வெளியே போகாத காரணத்தால் விலை குறைவாக இருக்கிறது என்றும் அரசாங்கத்திடம் முறையீடு செய்தார்களே. அதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா?

**திரு. ஆலடி அருணா:** பேராசிரியர் அன்பழகன் அவர்கள் இருந்த போது, கொள்முதல் விலையை அதிகமாக்கித் தரவேண்டுமென்று கேட்டபோது மக்களின் வாங்கும் சக்தியைப் பார்த்துத்தான், கொள் வாங்கும் சக்தி இருக்கிறதா என்பதைப் பார்த்துத்தான் கொள் முதல் விலையை உயர்த்துவதுபற்றி யோசிக்கலாம். தற்போது புதிய வித்துக்கள், நவீன உரங்கள் எல்லாம் கையாளப்படுகிறது; அதனால் இப்போது விலையை ஏற்றவேண்டாம் என்று அண்ணு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நடைமுறைப்படுத்து வீர்களா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் ஒருவர் பேசும் போது இன்னொரு உறுப்பினர் தகவலுக்காக வேண்டுமானால் சிறு விளக்கத்தைக் கொடுக்கலாம். அதுவும் இடம் கொடுத்தால்தான் சொல்லலாம். இடையிலே ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னால் சபை ஒழுங்காக நடக்காது.

**திரு. சோ. அழகர்சாமி:** விவசாயிகளுக்கு விலையை கூட்டிக் கொடுத்தால் சந்தோஷம். ஆனால் இப்போது 80 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறீர்கள். அது யாருக்குப் போகும் ? கள்ளமார்க் கெட்காரர்களுக்குத்தானே போகும். விவசாயிகளுக்கு அந்த விலை கிடைக்காது. விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக விலையை உயர்த்தினோம் என்கிறீர்கள். அப்படியானால் கரும்புக்கு விலை உயர்த்தவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, ஏன் அதைச் செய்யவில்லை? 40 ரூபாய்க்கு விற்ற நெல்லை வாங்கி 80 ரூபாய்க்கு விற்க அனுமதித்திருக்கி றீர்கள். அதேமாதிரி கரும்புக்கு 150 ரூபாய், 200 ரூபாய் என்று ஏன் உயர்த்திக் கொடுக்கக்கூடாது ?

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** அரசாங்கம் கரும்புக்கு 125 ரூபாய், 130 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது. அதற்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

**திரு. சோ. அழகர்சாமி:** கரும்பு விலையை அதிகரித்தால் ஆலை முதலாளிகளைப் பாதிக்கும். ஆகவே அதற்கு மறுப்புத் தெரிவிக் கிறார்கள். நெல் விலையை ஏற்றினால் கள்ளமார்க்கெட்காரர்களுக்கும், பதுக்கல்காரர்களுக்கும், கொள்ளை லாபக்காரர்களுக்கும் லாபம்.



ஏற்றியிருக்கிறீர்கள். ஆகவேதான் அதனால் இங்கே விலையை கள்ளமார்க்கெட்காரர்களுக்கும் இந்த வர்த்தக சூதாடிகளுக்கும் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். அரசாங்கம் துணை நிற்கிறது

விவசாயத் தொழிலாளர்களுக்குப் பல மாவட்டங்களில் கூலி நிர்ணயம் கலெக்டர் தலைமையில் முத்தரப்பு மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. விவசாயிகளுக்குக் கூலியாக 5 படி நெல், 2 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதன் படி தாருங்கள் என்று கேட்டு இன்றைக்குப் பல இடங்களிலே போராட்டம் நடக்கிறது. நெல் விலை ஏறிவிட்டதால் நிலச் சுவாந்தார்கள் நெல்லுக்குப்பதில் பணம்தான் தருவோம் என்று சொல்கிறார்கள். விவசாயக் கூலிகள் நெல்தான் வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்கள் கொடுக்க மறுப்பதால் தகராறுகள் ஏற்படுகின்றன. அதற்கு போலீஸ் உடந்தையாக இருக்கிறது. நிலச்சுவாந்தார்கள் பக்கம் போலீஸ் இருக்கிறது. நியாயமான கூலி வேண்டுமென்று கேட்கின்ற கூலிகளை அடித்து நொறுக்கி, சிறையில் அடைத்திருக்கிறார்கள். இன்றைக்கு தென்னாற்காடு மாவட்டத்தில் சொரப்பூர் என்ற கிராமத்தில் முடிவு செய்யப் பட்டபடி கூலி வேண்டுமென்று கேட்ட விவசாயக் கூலிகள் அடித்து நொறுக்கப்பட்டு, அவர்கள் வீடுகளுக்கு தீ வைக்கப்பட் டிருக்கிறது. அவர்கள் வெளியே போக முடியாமல் தடுக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அங்கே இருக்கின்ற போலீஸ் இலாகாவினர் நிலச்சுவாந்தார்களுக்குத்தான் பாதுகாப்பாக இருக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் இந்த அரிசன விவசாய கூலிகளை அடித்து நொறுக்கி, வீடுகளுக்கு தீ வைத்துக் கொளுத்தியிருக்கிறார்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடக் கூடிய கிராமம் நம்முடைய மாநிலத்திலுள்ளது அல்ல. அந்தத் தகராறு நடைபெற்றிருப்பது புதுவை மாநிலத்தைச் சேர்ந்த கிராமத்தில். அங்கே தொடர்ந்து போராட்டம் நடந்து வருகிறது. அது நம்முடைய மாநிலத்தில் அல்ல.

**திரு. சோ. அழகர்சாமி:** இல்லை. நம்முடைய மாநிலத்தில் தான். தென்னாற்காடு மாவட்டத்தில், விழுப்புரம் தாலுகாவில், சொரப்பூர் என்ற கிராமத்தில்தான் நடைபெற்றிருக்கிறது. மகஜர்

என்னிடத்தில் இருக்கிறது. அதையெல்லாம் படிப்பதற்கு நேரம் இல்லை. அங்கே போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நிர்ணயிக்கப்பட்டபடி நெல் கொடுக்காததால்தான் இந்தப் போராட்டம் நடக்கிறது. போராட்டம் நடத்துபவர்கள் மீது போலீஸ் கடுமையான, படுபயங்கரமான அடக்குமுறையை அவிழ்த்துவிட்டிருக்கிறது.

பதுக்கல்காரர்களுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் பாதுகாப்பாக இருந்து, விவசாயக் கூலிகள்மீது கேஸ் போட்டிருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் இரவோடு இரவாகப் பெண்கள் மீது கேஸ் போட்டு, அவர்களை ஜாமீனில்கூட இடாமல் சிறையிலே அடைத்திருக்கிறார்கள். கூலி கேட்பவர்களைச் சிறையிலே அடைத்து, சித்திரவதை செய்கிறார்கள்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நாங்கள் எல்லாம் தண்ணீர் பாய்ச்சி, உரம் போட்டு, சேரில் பாடுபட்டு நெல் விளைவித்தோம். அந்த நெல் எங்களுக்கு நியாயமான விலைக்குக் கிடைக்கவில்லை. விற்கின்ற நேரத்தில் நியாயமான விலையும் கிடைக்கவில்லை. நிலத்திலே பாடுபடுகின்ற விவசாயக் கூலிகள் நிர்ணயிக்கப்பட்டபடி நெல் வேண்டுமென்று கேட்டு ஊர்வலம் போனார்கள். அவர்களை எல்லாம் அடித்து, துன்புறுத்திச் சிறையிலே அடைத்திருக்கிறார்கள், அங்கே கொடுமைப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். கள்ளமார்க்கெட்காரர்களையும், பதுக்கல்காரர்களையும் அடையாளம் காட்டினால் அவர்களை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, அவர்களை அடித்து நொறுக்கிக் கொடுமைப்படுத்துகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்--தலைமை)

ஒரு நாளைக்கு ஒரு உத்தரவாக மாற்றி மாற்றிப் போடுவதால் தான் விலைவாசி இந்த அளவுக்கு ஏறியிருக்கிறது. ஆக விலையேற்றத்திற்குக் காரணம் இந்த அரசாங்கத்தின் உத்தரவுதான். கள்ளமார்க்கெட்காரர்களுக்கும் பதுக்கல்காரர்களுக்கும் இந்த அரசாங்கம் உடந்தையாக இருப்பதால்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. விலைவாசியைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் மலையாளி-தமிழன் பிரச்சனையைக் கிளப்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தமிழ்நாட்டிலே தமிழனைப் பாதுகாக்க என்று ஒரு தமிழர் படை தேவைதானா? தமிழனைப் பாதுகாக்கத் தமிழர் படை எதற்கு? தமிழன்-மலையாளி என்ற பிரச்சனையைக்





கிளப்பிவிட்டுவிட்டு, சினிமாத் தியேட்டர்களில் போலீஸ் காவல் போடுவதற்கு எதற்கு? அங்கே போய் திரையைக் கிழிப்பது எதற்கு? 'நேற்று, இன்று நாளை' என்று அவர்கள் படம் எடுத்தால் நீங்கள் 'நாளை இன்று நேற்று' என்று வேண்டுமானால் ஒரு படத்தை எடுங்கள். அதை திரையிடுங்கள். நேற்று இன்று நாளை படத்திற்கு 1,000 பேர் வந்தால் நாளை இன்று நேற்று படத்திற்கு 2,000 பேர் வரலாமே. அதைவிட்டுவிட்டு வீணான போராட்டங்கள் எதற்கு? இப்படியெல்லாம் போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தால் வீராணம் திட்டம் என்னவாகும்?

அச்சுதமேனன் கருணை கொண்டு, சிறுவாணித் திட்டத்திலிருந்து தண்ணீர் தருவதாக ஒத்துக்கொண்டிருக்கிறார். மேற்கொண்டும் மேற்குத் தொடர்ச்சி மலை நீர்வளங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமானால் இரு மாநிலங்களுக்கும் இடையிலே ஒரு சுமுகமான உறவு இருக்க வேண்டாமா? வீராணம் திட்டத்திலிருந்து தண்ணீர் வருமா என்பதே சந்தேகமாக இருக்கிறது, கிருஷ்ணா நதி, கோதாவரி நதிகளிலிருந்து தண்ணீர் கொண்டுவரலாம் என்று யோசனை சொல்லப்பட்டது. அதற்கும் அண்டை மாநிலங்களுடன் சுமுகமான உறவு இருக்க வேண்டும். இல்லை என்றால் முடியாது. இப்படி ஜாதிக்கு ஜாதி, இனத்திற்கு இனம் சண்டையை மூட்டிக்கொண்டிருந்தால் உறவு நிலை எப்படி இருக்கும்? குந்தகம்தான் ஏற்படும். அதனால் மோசமான ஒரு நிலைமைதான் ஏற்படும்.

இப்போது ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். குடும்பத்திற்கு மூன்று லிட்டர் அரிசி வழங்கப்படும் என்று போட்டிருக்கிறார்கள். அது எல்லோருக்கும் கிடைக்கும் என்று பார்த்தோம். ஆனால் முதலில் முனிசிப்பாலிடி ஏரியாவுக்கு மட்டும்தான் போடுவோம் என்று சொல்கிறார்கள். அப்புறம் டவுன் பஞ்சாயத்துக்குப் போடுவார்கள். அதற்குள் குறுவை அறுவடை வந்துவிடும். விலைவாசி கொஞ்சம் குறைந்துவிடும். வியாபாரிகள் வாங்கிப் பதுக்கி வைத்துக்கொள்வார்கள். போடுவோம் என்று சொன்னதை யாவது உடனே போட வேண்டாமா? ஆங்காங்கே கள்ளமார்க்கெட்காரர்களிடம், பதுக்கல்காரர்களிடம் இருப்பதை எடுத்து, கொள்முதல் செய்து நியாய விலையில் வழங்கலாமே. அவர்கள் 1½ ரூபாய்க்கு வாங்கியதை வேண்டுமானால் ஒன்றே முக்கால் ரூபாய்க்கு கொடுக்கட்டும்; பரவாயில்லை. இரண்டு ரூபாய்க்கு ஒரு படி அரிசி

என்ற விலையில்—அங்கங்கே வியாபாரிகள் பதுக்கி வைத்திருக்கிற நெல்லை—நிலச்சுவான்தார்கள் பதுக்கி வைத்திருக்கிற நெல்லை எடுத்து—குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு—நிலம் உள்ளவர்களை விட்டுவிடுங்கள்—நிலம் இல்லாத ஏழை விவசாயக் கூலிகளுக்கு—அரசாங்கச் சிப்பந்திகளுக்கு எல்லாம் நியாயவிலைக் கடைகளின் மூலமாக விநியோகம் செய்தாகவேண்டும். இல்லையென்றால் எங்கு பார்த்தாலும் பசி—பட்டினிதான். இப்போதே பல குடும்பங்கள் தற்கொலை செய்துகொள்கின்றன—பேப்பர்களில் பலவும் வரவில்லை—படி அரிசி 5 ரூபாய், 6 ரூபாய் என்று விற்கப்படுவது ரூ. 10 என்று போய்விடக்கூடிய அபாயத்தை உண்டாக்கிவிட்டுவிட்டார்கள். ஏழை எளிய, நடுத்தர, பாட்டாளி மக்களை எல்லாம் பட்டினியால் சாகக்கூடிய நிலைமைக்குத் தள்ளிவிட்டுவிட்ட இந்த அரசு—பதவியில் நீடிப்பதற்கு அருகதை இல்லை—மேலும் நீடித்தால் தமிழகத்திற்குப் பெருங்கேடே விளையும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, உறுப்பினர் அழகர்சாமி அவர்கள்—வருகின்ற மகசூலில் விவசாயிகளுக்கு அதிகவிலை கொடுக்க வேண்டுமா அல்லது வேண்டாமா? கொடுக்கவேண்டுமென்றால் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பது பற்றி கருத்துச் சொல்வார்களா?

**திரு. சோ. அழகர்சாமி:** அதிகவிலை கொடுக்கத்தான் வேண்டும். எவ்வளவு விலை கொடுக்கவேண்டும் என்பதற்கு நாங்கள் அவற்றை எல்லாம் பரிசீலனை செய்து தீர்மானங்கள் போட்டு அனுப்புகிறோம்.

**திரு. ஆலடி அருணா:** கொள்முதல் விலை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஐந்தாண்டுத் திட்ட டிராப்ட் ப்ளானிலேயே விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. அதையாவது பின்பற்றுவார்களா? வாங்கிக்கொடுக்கிறபோது—உணவுப்பொருள்களுக்கு சப்சிடி அளிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அந்தக் கொள்கையை வரையறுத்து ஒப்புதலுக்காக டெல்லிக்கு அனுப்பியிருக்கிறோம். டெல்லியில் விரைவில் முடிவு எடுத்து அனுப்புவார்கள்





**திரு. ஆ. கு. சுப்பையா:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் அரசாங்கத்தின்மீது கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானம் சம்பந்தமாக நான் இந்த விவாதத்திலே என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அரசாங்கத்திற்குத் தற்காலிகமான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடி உணவு விஷயத்தில் ஏற்பட்ட ஒரு நெருக்கடியாகும். மற்ற விஷயங்களைப்பற்றி இங்கு பெரிய அளவுக்கு விவகாரங்கள் இல்லை என்று சொன்னாலும்—அரசாங்கம் திடீரென்று தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற நெல்லை—அரிசியை வெளிமாவட்டங்களுக்குக் கொண்டுசெல்லலாம் என்று உத்தரவிட்ட பிறகு இம்மாதிரியான ஒரு நெருக்கடி தமிழகம் முழுவதிலும் ஏற்பட்டிருக்கிறது. தமிழகம் உணவுத் துறையில் உபரி மாநிலமாகும். இங்குள்ள மக்களுக்கு இங்கே தாராளமாக உணவுப் பொருள் கிடைப்பதற்கு ஒரு கொள்கையை அரசாங்கம் எடுத்து நடைமுறையில் செயல்படுத்திக்கொண்டு வந்தபோது இடையில் விளைவித்துவிட்ட ஒரு சிக்கலாக இது ஏற்பட்டிருக்கிறது.

உணவுப்பொருளை வாங்கி உபயோகிக்கக்கூடிய மக்கள், உணவு உற்பத்தி செய்த சாதாரண ஏழை விவசாயிகள், விவசாயக் கூலிகள் எல்லாம் இன்றையதினம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் நம் அரசு வர்த்தகர்களை நம்பி, வர்த்தகர்கள் மூலமாகக் கொள்முதல் செய்து, வர்த்தகர்கள் மூலமாக விநியோகம் செய்கிற ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டதுதான். இதன் காரணமாகத்தான் இன்றையதினம் நாட்டிலே ஒரு அவலமான நிலை உண்டாக்கப்பட்டுவிட்டது. அரிசி விலை உயர்ந்துவிட்டது. மக்கள் எங்கு பார்த்தாலும் அரிசி கிடைக்கவில்லை என்று கூக்குரலிட ஆரம்பித்துவிட்டார்கள். இத்தகைய ஒரு அவல நிலையை—நெருக்கடியை உண்டாக்கியவர்கள் வர்த்தக சூதாடிகள்தான். நாட்டிலே வர்த்தக வியாபாரிகள்தான் சூதாடிக்கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களிடம் இருந்து கோடிக்கணக்கான ரூபாயை ஆதாயம் பெற்றிருக்கிறார்கள். இதை இல்லை என்று யாரும் மறுக்க முடியாது. அரசாங்கத்தை ஏமாற்றிப் பிழைக்கிறவர்கள்—இன்றையதினம் நெல் நடமாட்டக் கட்டுப்பாட்டை நீக்கச் சொல்லி கோடிக்கணக்காகக் கொள்ளை அடித்து விட்டார்கள். இந்த

[திரு. ஆ. கு. சுப்பையா] [1974 ஆகஸ்ட் 14

மாநிலத்தில் இருந்து உணவு தானியங்களை வெளிமாநிலங்களுக்குக் கொண்டுசென்றுவிட்டார்கள். அரசாங்கம் வெளிமாநிலங்களுக்கு அரிசி கொண்டுபோவதை எத்தனையோ வகையில் தடுத்து வந்தும் கூட அவர்களது செயலைத் தடுக்க முடியவில்லை. மாண்புமிகு உணவு அமைச்சர் கூட கூறியிருக்கிறார்கள். "கழுதைகளின் மீது ஏற்றிக்கொண்டு சென்றார்கள். கழுதைகளைவிட்டுவிட்டு ஓடி விட்டார்கள். கழுதைகளைப் பிடித்துவந்து ஏலம் போடப்பட்டது" என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆக, அரசாங்கத்தை வர்த்தக வியாபாரிகள் ஏமாற்றி விட்டார்கள். இன்றையதினம் உணவுத் திருடர்கள் நமது நாட்டில் சுதந்திரமாக நடமாடிக்கொண்டிருப்பதுதான் இத்தகைய பெரிய நெருக்கடிக்கே காரணம். வர்த்தக சூதாடிகளுக்கு உடந்தையாகத் தான அதிகாரிகளும் இருக்கிறார்கள். இது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயமாகும்.

உணவுப்பொருளை நியாயவிலையில் கொடுக்கவேண்டும் என்று ஒரு பக்கம் மக்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். அது உண்மையும் கூட. அதே நேரத்தில் விவசாயிகளுக்குத் தேவையான மற்றப் பண்டங்களின் விலையும் இரு மடங்கு, மூன்று மடங்கு உயர்ந்து விட்டது. உற்பத்திச் செலவு கட்டுபடியாகவில்லை. கொள்முதல் விலையை உற்பத்திச் செலவின் கூடுதலுக்கு ஏற்ப அரசு விவசாயிகளுக்கு உயர்த்திக்கொடுக்க முன்வரவேண்டும். அந்த விலையை இப்போதே அறிவித்துவிடவேண்டும். குறைந்தபட்சம் கிலோ ஒன்றுக்கு 1½ ரூபாய், ஒண்ணேமுக்கால் ரூபாயாகவாவது நிர்ணயிக்கவேண்டும்.

விவசாயிகளுக்கு இன்றையதினம் உற்சாகம் குறைந்திருக்கிறது. காலத்தில் தண்ணீர் வரவில்லை. அது ஒரு பக்கத்தில் கவலையை அளிக்கிறது. இப்போதுதான் குறுவை நாற்று நடுகிறார்கள். இந்த நிலையில் அரசாங்கம் கொள்முதல் விலையை வருகின்ற மகசூலுக்கு உயர்த்தி அறிவித்தால்தான் விவசாயிகளுக்கு ஒரு போகமாவது—குறுவை சாகுபடி செய்ய உற்சாகம் ஏற்படும். அடுத்து கொள்முதலை வியாபாரிகளிடம் நம்பி விடக்கூடாது. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகவே நஞ்சை, புஞ்சை தானியங்களைக் கொள்முதல் செய்யவேண்டும்.



1974 ஆகஸ்ட் 14] [திரு. ஆ. கு. சுப்பையா]

அரசாங்கம் கொள்முதல் செய்து வைத்துக்கொண்டு, எங்கெங்கு தேவையோ, அங்கங்கு, தேவையான இடங்களுக்கு விநியோகிக்கின்ற பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளும்போது. இன்றையதினம் கிராமப் பகுதியிலே அரிசி—நெல்—கிடைக்காமல் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்களே, அந்த நிலைமை இருக்கிறது. இப்பொழுது, கோவாபரேடிவ் சொஸைட்டிகள் மூலமாகக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. அதுவும் குறைந்த ஏற்பாடுதான். உரம் அளித்தலையும் மற்ற உதவிகளையும் விவசாயிகளுக்குச் செய்து கொண்டிருக்கும்போது அரிசியும் கொடுக்கவேண்டுமென்று சொல்லும்போது. அரசாங்கத்தின்மேல் அக்கறை கொண்ட நல்ல தலைவர்கள் அக்கறையோடு நடந்துகொள்கிறார்கள். சில பேர் வேண்டுமென்றே, அரசுக்கு நெருக்கடியை உருவாக்க விரும்பி, இன்று அரிசி இல்லை, நாளைதான் கொடுக்கமுடியும் என்று ஜனங்களைத் திருப்பிவிடுகிறார்கள். இம்மாதிரியான நிலைமையைப் போக்கவேண்டும்.

சம்பந்தப்பட்ட கூட்டுறவு ரிஜிஸ்தரார்கள் சுற்றுப்பயணம் செய்து அந்த நிலைமைகளையெல்லாம் பார்க்கவேண்டும். ஆகவே, என்னுடைய யோசனை என்னவென்றால், ஒவ்வொரு பஞ்சாயத்திலும் கூட்டுறவு ஸ்டோர்களை ஏற்படுத்தவேண்டும். அத்தியாவசியமானப் பொருள்களை அரசாங்கமே கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விநியோகம் செய்யும் பொறுப்பைக் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டிருக்கும்போது, கூட்டுறவு ஸ்டோர்களைத் திறந்து, மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களை அரிசி முதல் சகல தானியங்களையும் கொடுக்கின்ற வகையிலே நடவடிக்கை எடுப்பதன் மூலமாக இன்றைக்கு இருக்கிற நெருக்கடிகளைப் போக்க முடியும். அந்த வகையிலே அரசாங்கம் யோசிப்பது நியாயமாக இருக்கும், அதுதான் நல்லதாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இது தற்காலிகமாக ஏற்பட்ட நெருக்கடியாகும். இந்த நெருக்கடியைப் போக்க வேண்டுமென்று சொன்னால், இன்னும் சிலர் நெல்லைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள். பதுக்கி வைத்திருந்த நெல்லையெல்லாம் எங்களுடைய மாவட்டத்திலே உள்ள அதிகாரிகள் உள்ளே புகுந்து எடுத்தார்கள். அது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அம்மாதிரி தொடர்ந்து இருந்திருந்தால்கூட,

[திரு. ஆ. கு. சுப்பையா] [1974 ஆகஸ்ட் 14

இம்மாதிரி நெருக்கடி வந்திருக்காது. ஆனால், திடீரென்று இரண்டு மூன்று நாள் கழித்து, அங்கிருந்து வெளியே எடுத்துச் செல்லலாம் என்று பிறப்பித்த உத்தரவால், தஞ்சை மாவட்டத்திலே நடமாட முடியவில்லை, அவ்வளவு லாரிகள் சாரி சாரியாக வாங்கிக்கொண்டு சென்றன. அவற்றையெல்லாம் வெளி மாநிலங்களுக்குக் கொண்டு சென்றார்கள். அதற்குப் பலர் உடந்தையாக இருந்திருக்கிறார்கள். அதிகாரிகளும் உடந்தையாக இருந்தார்கள் என்று சொல்ல வேண்டும். இல்லையென்றால், இவ்வளவு கண்காணிப்பு, எல்லையிலே காவல் எல்லாம் இருக்கும்போது, எப்படி நம் மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு இவ்வளவு நெல் சென்றிருக்கும் என்பதைத் தீவிரமாக ஆலோசிக்க வேண்டும். இம்மாதிரி செய்த அதிகாரிகள் மீதுத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது என்னுடைய ஆலோசனையாகும்.

இம்மாதிரி ஏற்பட்டுள்ள தற்கால நிலைமையிலிருந்து மீள வேண்டுமென்று சொன்னால், விவசாயிகளுக்கு உணவு தானியம் தயாரிக்க ஊக்கம் அளித்து, நியாயமான விலையை நிர்ணயம் செய்தாகவேண்டும். அது மாத்திரமல்லாமல், உணவு தானியங்கள் முழுவதையும் அரசாங்கமே கொள்முதல் செய்யவேண்டும். விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய வியாபாரிகளுக்கு அளித்துள்ள லைசென்ஸை ரத்து செய்யவேண்டும். கொள்முதல் செய்ய அவர்களுக்கு எந்த அதிகாரமும் கொடுக்கக் கூடாது. கொள்முதல் செய்ய ஏஜெண்டுகள் மாதிரி நியமனம் செய்வதை விட்டு, அதற்கென்று அதிகாரிகளை நியமித்து, இதற்கென்று செலவழித்தால்கூடத் தவறில்லை. வியாபாரி மூலம் கொள்முதல் செய்வதை ரத்து செய்து, அரசாங்கமே கொள்முதல் செய்து, அரசாங்கமே விநியோகம் செய்கின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்வதன் மூலமாகத்தான் இந்த நெருக்கடியைத் தீர்க்க முடியும்.

வெளி மாநிலங்களோடும், தற்காலிகமாக மத்திய அரசோடும், அண்டை மாநிலங்களோடும் பேச்சு வார்த்தை நடத்தி, இந்த உணவுப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும். இதைத் துரிதமாகச் செய்வதன்மூலம்தான் இந்த நெருக்கடியிலிருந்து மீள முடியும் என்ற என்னுடைய வார்த்தையைக் கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



1974 ஆகஸ்ட் 14]

**திரு. ஆலடி அருணா**: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் முன்மொழிந்து, இந்த மன்றத்தில் விவாதிக்கப்பட்டு வருகின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து எனது கருத்துக்களை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

கடந்த 3 தினங்களாக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் குறித்து, தெளிவாகவும் தீவிரமாகவும் நமது சட்டமன்ற உறுப்பினர்கள் உரையாற்றி வருகிறார்கள். இந்தத் தீவிரமான விவாதம் நாட்டு மக்களுடைய நல்ல கவனத்தை ஒழுங்காக ஈர்த்திருக்கிறது. இத்தகைய தீவிரமான விவாதத்திற்கு இன்றைக்குப் பொறுப்பிலே இருக்கிற அமைச்சரவை, நீரோ மன்னனைப் போல் பிடில் வாசித்துக் கொண்டிருக்கப் போகிறதா, அல்லது நிக்சனைப் போல் கீழே இறங்கப்போகிறதா என்பதை நாட்டு மக்கள் மிக்க ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு பிரச்னையை நாம் மிகத் தீவிரமாக இந்தச் சந்தர்ப்பத்தில் விவாதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இங்கே தீவிரமாக விவாதிக்கிறோம். ஆதாரங்களைச் சொல்கிறோம், விளக்கங்களைச் சொல்கிறோம், நியாயங்களைச் சொல்கிறோம். ஆனால் அத்தனைக்கும் மேலாக இந்த அமைச்சரவைமீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை, எங்களுக்கு நல்லெண்ணம் இல்லை, இன்றைக்கு அமைச்சரவையிலே இருப்பவர்கள் கீழே இறங்கித்தான் தீரவேண்டுமென்று இந்த நாட்டிலே இருக்கிற மக்கள் ஏற்கனவே ஒருமுறை அல்ல, இரு முறை அல்ல மூன்று முறை தெளிவாகத் தீர்ப்புச் சொல்லி விட்டார்கள். அப்படிப்பட்ட தீர்ப்புக்குப் பிறகும் இங்கே ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து, நாம் இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறோம் என்றால், அதனுடைய பொருள் என்னவென்றால், நாம் ஜனநாயகத்தின் பலகீனத்தை இப்பொழுது தான் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்.

We are experiencing the defects of democracy rather than the fruits of democracy.

என்று சொல்கின்ற அளவில் நம்முடைய ஜனநாயகத்தினுடைய பலகீனம் இன்றைய தினம் பரிமளித்துக் கொண்டிருக்கிறது.

[திரு. ஆலடி அருணா] [1974 ஆகஸ்ட் 14

நாளைய தினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சுதந்திர— தேசியக் கொடியை ஏற்றப் போகிறார்கள். இந்த மாநிலத்திற்கு ஒரு தனிக் கொடி வேண்டுமென்று காரணங்களையும் நியாயங்களையும் மத்திய சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். மத்திய சர்க்கார் மிக ராஜதந்திரமாக நம்முடைய முதலமைச்சரைப் பழி வாங்கி இருக்கிறது. நீங்கள் தனிக் கொடி கேட்டீர்கள். நீங்களே இந்த தேசியக் கொடியை ஏற்றுங்கள் என்று இன்றையதினம் அவரை . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்திய தேசியக் கொடியையும் ஏற்றுக்கொண்டுதான் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனிக் கொடி வேண்டுமென்று கூறினோமே அல்லாமல், இந்திய தேசியக் கொடியை அகற்றிவிட்டு தனிக் கொடி வேண்டுமென்று ஒரு கற்பனையான வாதத்தை, தேசத் துரோகமான வாதத்தை, தேச விரோதமான வாதத்தை திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் வைக்கவில்லை.

**திரு. ஆலடி அருணா:** நம் உள்ளத்திலே எதற்காகக் கேட்டோம் என்பது நாட்டுக்குத் தெரியும், நடுநிலையாளர்களுக்குத் தெரியும் எனவே, அதைப்பற்றி நான் அதிகமாகக் குறிப்பிடவில்லை. நாளைத் தினம் 27-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடப் போகிறோம். நமது அரசியல் கொள்கைகளை மறந்து, அரசியல் வேறுபாடுகளை மறந்து, மத்திய சர்க்காராக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி, ஆளும் பொறுப்பிலே இருக்கிற, உங்களை நம்பி இருக்கிற ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கு நல் வாழ்வு அளிப்பதிலே வெற்றி கண்டிருக்கிறோமோ என்றால், இல்லை. உண்மையிலே அதற்காக நாம் வெட்கப்படவேண்டும். அவர்களுக்கு நல்ல வாழ்வு கொடுத்திருக்கிறோமா என்றால் இல்லை. நல்ல வாழ்வைக் கொடுக்காவிட்டாலும், தேவையான அளவுக்குக் குடி நீர் வசதியைக் கொடுத்திருக்கிறோமா என்றால் குடிநீர் வசதியைக் கொடுக்கவில்லை. குடிக்கிற தண்ணீரைக் கொடுக்க முடிந்திருக்கிறதா என்றால், அதையும் கொடுக்க முடியவில்லை. அவர்கள் நடக்கிற பாதையையாவது நாடெங்கும் கொடுத்திருக்கிறோமா என்றால், பாதையையும் கொடுக்கவில்லை. இவைகளையெல்லாம் நினைவுபடுத்துவதற்கு . . . 27 ஆண்டுகள் சுதந்திர வாழ்வில் எந்த முன்னேற்றத்தையும் இந்த நாட்டு மக்கள்



1974 ஆகஸ்ட் 14] [திரு. ஆலடி அருணா]

பெறவில்லையென்றால், நம்முடைய சுதந்திர வாழ்வே கேலிக் கூத்தாகிவிட்டது. பொதுமக்களிடத்திலே சந்தேகத்திற்குரியதாகி விட்டது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

உலக நாடுகளிடையே ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்தியாவினுடைய நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது, புழுங்கத்தக்க விதத்திலிருக்கிறது. விலைவாசி ஏற்றம் நம்மைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது. இந்த நாட்டினையே பாதித்திருக்கிறது என்றுதான் பொருள். இதற்கு இந்த மாநில சர்க்கார் மட்டும்தான் காரணம் என்று நான் நிச்சயமாகச் சொல்லவில்லை. மாநில சர்க்காரும் மத்திய சர்க்காரும் காரணம் என்பதைப் பகிரங்கமாக இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த விவரத்தை நான்கு நாளைக்கு முன்னாலே பாராளுமன்றத்திலே ஒரு உறுப்பினர் தெளிவாக விளக்கி இருக்கிறார்.

compared to the present levels the wage increase is the lowest in India. என்று சொல்லி

In the last five years, prices in India have risen by 125 to 300 per cent whereas the corresponding rise in wages has seen 20 to 30 per cent only.

விலைவாசி ஏற்றம் 125 சதவிகிதத்திலிருந்து 300 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. ஆனால், சம்பளம் 20 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதமாகத்தான் உயர்ந்திருக்கிறது.

(முற்பகல் 11-00)

இது தமிழ்நாட்டினுடைய பரிதாபமான நிலைமை. ஆனால் உலகத்திலேயுள்ள வேறு நாடுகளிலே இந்த நிலைமையுண்டாவென்றால் நிச்சயமாக இல்லை. அதையும் அந்த உறுப்பினர் மிகத் தெளிவாக அந்த மாமன்றத்திலே சொல்லியிருக்கிறார். ஜப்பானைப் பொறுத்த வரையிலும் விலைவாசி 40 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. ஆனால் சம்பளம் 85.5 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. பெல்ஜியத்திலே விலைவாசி 10.5 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது, ஆனால் சம்பளம் 25 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது, யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்காவிலே விலைவாசி 25 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது, சம்பளம் 37.5 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது, இங்கிலாந்தில் விலைவாசி 45 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது, ஆனால் சம்பளம் 67.5 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது, பிரான்ஸ் நாட்டில் விலைவாசி 32.5 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது, ஆனால் சம்பளம்

[திரு. ஆலடி அருணா] [1974 ஆகஸ்ட் 14

65 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது, இத்தாலியில் விலைவாசி 47.5 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது, ஆனால் சம்பளம் 62.5 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது, கிழக்கு ஜெர்மனியில் விலைவாசி 37.5 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது, ஆனால் சம்பளம் 40 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது, கனடாவில் விலைவாசி 37 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது, ஆனால் சம்பளம் 47 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது, ஆஸ்திரேலியாவில் விலைவாசி 30 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது, ஆனால் சம்பளம் 52 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது என்று நாடாளுமன்றத்திலே விளக்கப்பட்டிருக்கிறது.

இதை நான் சொல்வதற்குக் காரணம் இவ்வளவு கடுமையாக விலைவாசிகள் ஏறியிருப்பதன் காரணமாக இன்றைய தினம் தமிழகத்திலே அரிசிப் பிரச்னை மிகப் பயங்கரமாக உருவெடுத்திருக்கிறது. படியரிசி 4½ ரூபாய், 5 ரூபாய், சில இடங்களிலே 6 ரூபாய் என்ற அளவிற்கு விற்கக்கூடிய பரிதாபம் எப்படி ஏற்பட்டது? இது யாரால் ஏற்படுத்தப்பட்டது? இந்தப் பரிதாப நிலைமைக்கு வேலைநிறுத்தம் காரணமா? உழவர்கள் ஒத்துழைக்கவில்லையா? அல்லது விவசாயிகள் பெரிய போராட்டத்தை நடத்தினார்களா? அல்லது பற்றாக்குறை ஏற்பட்டதா? பஞ்சம் ஏற்பட்டவுடனே பார், பார், காவேரி வெரித்துக் கிடக்கிறது, வயல் வெளிகள் வறண்டு கிடக்கின்றன, வாய்க்கால்களில் தண்ணீர் இல்லை, குளங்களிலே தண்ணீர் இல்லை என்று காட்டுங்கள், ஒத்துக் கொள்ளலாம், அல்லது வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது பெரிய வெள்ளம் ஏற்பட்டு அதனால் காவிரி நதி தீரத்தின் கரைகள் உடைந்து அதன் காரணமாக காவிரியாற்றின் பக்கம் இருக்கின்ற கன்னெல்லும் செந்நெல்லும் பாதிக்கப்பட்டுவிட்டன என்று ஆளுங் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் சுட்டிக்காட்டட்டும், ஒத்துக் கொள்ளலாம். இல்லை, பெரிய புயல் ஏற்பட்டு அதன் விளைவாகப் பெருஞ்சேதம் ஏற்பட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டுவிட்டது என்று அவர்கள் சமாதானம் சொன்னால் நம்மால் ஒத்துக்கொள்ள முடியும். இப்படி எந்தக் காரணத்தையும் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லவில்லை, பத்திரிகைகளும் சொல்லவில்லை. பெருமைவாய்ந்த முதலமைச்சர் அவர்கள் கூட செய்தியாளர்களைச் சந்தித்த நேரத்தில் தெளிவாகச் சொன்னார், உறுதியாகச் சொன்னார், சந்தேகத்திற்கு இடமின்றிச் சொன்னார், தேவையான தானியம் கையிருப்பில் இருக்கிறது, சந்தேகம் வேண்டாம், இது



1974 ஆகஸ்ட் 14] [திரு. ஆலடி அருணா]

செயற்கையாக உருவாக்கிவிடப்பட்ட பிரச்னை, தேவையான தானியம் இருக்கிறது என்று சொன்னார். தேவையான தானியம் இருக்கிறது என்றால் ஏன் இந்த அவல நிலைமை? தேவையான அளவு தானியம் எங்கே இருக்கிறது? ஏன் விலை இப்படி அபரிமிதமாக உயரவேண்டும்? நாட்டிற்குத் தேவையான அளவு தானியம் எங்கே இருக்கிறது? ஏழைகளிடத்திலே இருக்கிறதா? பாட்டாளிகளிடத்திலே இருக்கிறதா? யாரிடத்திலே இருக்கிறது? பதுக்கல்காரர்களிடத்திலும், கடத்தல் பேர்வழிகளிடத்திலும் இருக்கும்பொழுது பொறுப்பிலே இருக்கின்றவர்கள் கடமை அதை வெளியே கொண்டு வந்து மக்களுக்குத் தருவது அல்லவா, அவர்களைச் சட்டத்தின் முன்னால் நிறுத்திக் கடுமையாகத் தண்டிக்க வேண்டியது பொறுப்பிலே உள்ளவர்களின் தலையாய பொறுப்பு அல்லவா?

இத்தனையையும் செய்யாமல் இந்தச் சர்க்கார் இன்றைக்கு இருக்கிறார்கள் என்றால் இது கையாலாகாத சர்க்கார், ஏழைகளைப் பற்றி பாட்டாளிகளைப்பற்றிக் கவலைப்படாத சர்க்கார் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசாங்கம் விற்கின்ற விலையே, விற்கச் சொல்கின்ற விலையே ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் 2.30 அல்லது 2.50 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றால் இது ஏழைகளுக்காக இருக்கிற சர்க்காரா? இந்த அளவிற்கு சர்க்கார் நிர்ணயிக்கிற விலையே இருக்குமானால் படியரிசி 4½ ரூபாய் 5 ரூபாய் கொடுத்து ஏழை மக்கள் வாங்கிச் சாப்பிட முடியுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் இவர்கள் இன்றைக்குச் சொல்கிற காரணம் உரத்தின் விலை உயர்த்தப்பட்டுவிட்டது மத்திய சர்க்கார் உயர்த்தியதை நான் சரி என்று சொல்லவில்லை, நாங்கள் அதற்காக மத்திய சர்க்காரைக் கண்டிக்கிறோம், ஆதரிக்கவில்லை. மத்திய சர்க்காரைக் கேட்டால் உரத்தின் விலையை உயர்த்தவில்லை, 500 கோடி ரூபாய் அளவிற்கு மானியம் கொடுத்தோம், அதை இப்போது நிறுத்தினோமே தவிர உயர்த்தவில்லையென்று என்று சொல்கிறார்கள். அவர்கள் மானியத்தை நிறுத்தினாலும் சரி, விலையை உயர்த்தினாலும் சரி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் மத்திய அரசை அந்த வகையில் கண்டிக்கிறோம். அந்த விலை உயர்விற்கும் அரிசிக்கும், மார்க்கெட்டிலே இருக்கிற அரிசிக்கும் என்ன சம்பந்தம் என்று உணவு அமைச்சர் அவர்கள் சொல்லட்டும். நெல்லை சர்க்கார் 1—1—74-லே என்ன விலைக்கு

வாங்கியது? கோர்ஸ் நெல்லுக்கு 68 ரூபாய், மீடியம் 70 ரூபாய், பைன் வெரைட்டிஸ் 75 ரூபாய். அதையே அரிசிக் கணக்கிலே சொன்னால் கோர்ஸ் 103 ரூபாய், மீடியம் 108 ரூபாய், பைன் வெரைட்டிஸ் 118.50 ரூபாய் ஆகும். இதன் அடிப்படையிலே கொள்முதல் செய்துவிட்டு இன்றைய தினம் இதே அரசாங்கம் 2 ரூபாய் 2.30 அல்லது 2.50 கிலோ அரிசி என்று விற்றால் கள்ள மார்க்கட்காரர்களுக்கும் உங்களுக்கும் வித்தியாசம் இருக்கக் கூடாது என்று நினைக்கிறீர்களா? இரண்டு பேர்களும் ஒன்றாக மக்களுக்குக் காட்சியளிக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களா?

இந்த விலை மற்ற மாநிலங்களிலே நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் எவ்வளவு அதிகமானது என்பது தெரியும். நான்கு தினங்களுக்கு முன்னால் பத்திரிகையிலே ஒரிசா மாநிலத்தைப்பற்றிய செய்தி வந்தது அந்த மாநிலத்தில் ஒரு ஆண்டுக் காலமாக வறட்சி அதிகமாக ஏற்பட்டு பற்றாக்குறை ஏற்பட்டது. கடந்த வாரத்தில்தான் மூன்று முறைகள் மழை பெய்திருக்கிறது. இந்த நிலையில் உள்ள அந்த மாநிலத்தில் 1.25 என்ற அளவுக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். மந்திரி சத்பதி அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

Common varieties of rice were selling in the open market at Rs. 2.06 per kilogram as against Rs. 1.25 fixed for the same through public distribution system. என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, புதுவையினுடைய ஆளுநர் மிகத் தெளிவாக ஒரு உத்திரவைப் போட்டிருக்கிறார்கள். ஒரு கிலோ 1.26 என்று விற்கப்பட வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். ஒரிசா மாநிலத்திலே 1.25 என்றும் பக்கத்திலே இருக்கிற பாண்டிச்சேரியிலே 1.26 என்றும் விற்கும்போது இந்த அரசாங்கம் கிலோ அரிசி 2 ரூபாய் 2.30 அல்லது 2.50 என்று போடுகிறது என்றால் நான் கேட்க விரும்புகிறேன், நீங்கள் உங்களுடைய இதயத்தை ஏன் இரும்பாக்கிக் கொண்டீர்கள்? இன்றைக்கு மிட்டா மிராசுகளுக்குச் சாதகமாக விலை நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியம் உங்களுக்கு ஏன் ஏற்பட்டது?

இந்தப் பிரச்னையைக் கலெக்டர்கள் மாநாட்டில் விவாதித்து ஒரு முடிவை எடுப்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். நான் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த கலெக்டரைச் சந்தித்து எங்கள்





தொகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய அரிசியை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டபொழுது அவர் சொன்னார், முதன் முதலில் மாநகராட்சி பிறகு நகராட்சிகள், அதற்குப் பிறகு பேரூராட்சிகள், பிறகுதான் ஊராட்சிகள் என்று சொன்னார்கள். கலெக்டர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் பத்திரிகை விளம்பரத்திற்காகக் கொடுக்கப்பட்டதே தவிர மக்களின் பசியைப் போக்குவதற்காகக் கொடுக்கப்பட்டதல்ல.

நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன், இந்தச் சர்க்காருக்கு ஏழை எளிய மக்களுக்குக் குறைந்த விலையில் நியாயமான விலையில் தேவையான அளவிற்கு அரிசியைக் கொடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் இல்லை, அந்த எண்ணத்தில் நியாய விலைக் கடைகளைத் திறக்கவில்லை, இந்தியா வெங்கும் நியாய விலைக் கடைகளைத் திறந்திருக்கிறார்கள். நான் 1972-ம் ஆண்டு உள்ள புள்ளி விவரத்தைச் சொல்கிறேன், முதலமைச்சர் அவர்களிடம் 1973-74 ஆண்டுக்கான புள்ளிவிவரம் இருக்குமானால் என்னுடைய புள்ளிவிவரம் தவறு என்று இருந்தால் சொல்லட்டும். நான் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். நான் தருகின்ற புள்ளிவிவரம் பிரைஸ் கமிஷனால் எடுக்கப்பட்ட புள்ளிவிவரமாகும். இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள ஒவ்வொரு மாநிலமும் உணவுப் பிரச்னையிலே எவ்வளவு பொறுப்போடு இருக்கிறது, ஆனால் நம்முடைய அரசாங்கம் எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதைக் காட்டுவதற்குச் சொல்கிறேன்.

ஆந்திர மாநிலத்திலே 10,189 நியாயவிலைக் கடைகள், அசாமிலே 10,071 நியாயவிலைக் கடைகள். பீகாரிலே 21,785 நியாயவிலைக் கடைகள். குஜராத்திலே 7,561 நியாயவிலைக் கடைகள், கர்நாடகத்தில் 13,763 நியாயவிலைக் கடைகள், கேரளத்திலே 11,724 நியாயவிலைக் கடைகள், மத்தியப்பிரதேசத்திலே 10,042 நியாயவிலைக் கடைகள், மகாராஷ்டிரத்திலே 25,565 நியாயவிலைக் கடைகள், உத்திரப் பிரதேசத்திலே 13,526 நியாயவிலைக் கடைகள், மேற்கு வங்காளத்திலே 16,169 நியாயவிலைக் கடைகள்—ஆனால் தமிழ்நாட்டில் 1972-இல் திறக்கப்பட்டவை 2,153 கடைகள்தான். இந்தியாவிலே எல்லாம் சேர்ந்து ரேஷன், பேர் பிரைஸ் ஷாப் ஆகிய புள்ளிவிவரங்களைத்தான் நான் சொல்கிறேன், நீங்கள் இதைப் படித்துப் பார்த்து ஆழ்ந்து யோசித்து பதில் சொல்லுங்கள். இப்படி இந்தியா பூராவிற்கும் சேர்த்து . . .

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசும்போது சட்ட மன்றத்திலே தவறான விவரங்களைக் கொடுக்கக்கூடாது. வட மாநிலங்களிலே உள்ளவர்கள் கோதுமையைச் சாப்பிடுகிறார்கள், அவர்கள் இறக்குமதி செய்யக் கூடிய கோதுமை அத்தனையையும் கொடுப்பதற்காக அவர்கள் திறந்திருக்கிறார்கள். இது அரிசி சாப்பிடுகிறவர்கள் இருக்கிற மாநிலம், பற்றாக்குறை இல்லாததால் இதுவரையில் திறக்கப் படவில்லை.

**திரு. பெ. சீனிவாசன்:** அவர்கள் உறுப்பினர்களை வேண்டுமென்றே அவமானப்படுத்துகிறார்கள். தவறான தகவலை சட்ட சபைக்குத் தருவதாகச் சொல்கிறார்கள்.

MR. DEPUTY SPEAKER: What is the issue that you want to raise? Please speak on the point of order.

**திரு. பெ. சீனிவாசன்:** பாயின்ட் ஆஃப் ஆர்டரிலே பேசுகிறேன். உறுப்பினர் சொல்வது தவறான கருத்து என்று திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அதை அவர்கள் நிரூபிக்கவில்லை. இப்படி ஏதோ இலாக்கா இல்லாத மந்திரி மாதிரி எதற்கெடுத்தாலும் பதில் சொல்லிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆலடி அருணா அவர்களும் எம்.ஏ., பி.எல்., படித்த வழக்கறிஞர், எனவே அவருக்காக நீங்கள் வக்காலத்து வாங்க வேண்டியதில்லை.

**திரு. பெ. சீனிவாசன்:** அவர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொன்னாரே, அவர் எழுப்பியது பாயின்ட் ஆஃப் ஆர்டரா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. திரு. ஆலடி அருணா பேசுவதற்கு இடம் கொடுங்கள்.

**திரு. ஆலடி அருணா:** நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கோதுமைக்கான நியாய விலைக் கடைகள் அவை என்று சொன்னார். அவர்கள் கோதுமை சாப்பிடுபவர்கள், எனவே அதற்கான நியாய விலைக் கடைகளை அவர்கள் திறந்திருக்கிறார்கள்.



நாம் அரிசி சாப்பிடுகிறோம். கர்நாடகம், கேரளம், ஆந்திர மாநிலங்களைப் பற்றியும் நான் சொன்னேன். அவர்களெல்லாம் கோதுமை சாப்பிடுகின்றவர்களா? ஆகவே, விவரத்தைக் கவனித்துப் பேச வேண்டுமென்று அவர்களுக்குச் சொன்னேன். நான் சொல்வது என்னவென்றால் இந்தச் சர்க்காருக்குப் பொறுப்புணர்ச்சி இல்லை. 1971-ஆம் ஆண்டு பட்டியலைப் படித்தால் இதைவிட இன்னும் விபரீதமாக ஆகியிருக்கும். ஆகவே, அவைகளை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நான் விரும்பவில்லை.

இந்தப் பிரச்னை இவ்வளவு விபரீதமாக இருப்பதற்குக் காரணம் பதுக்கல்தான். இது எல்லோருக்கும் தெரியும். பதுக்கலை ஒழிக்கவும், கடத்தலைத் தடுக்கவும் இந்த அரசு துணிவான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. உண்மை என்னவென்றால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தக் கடத்தலை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 11-ஆம் தேதி நாடாளுமன்ற உறுப்பினர், மிகவும் முக்கியமான நண்பர் திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் ஒரு விளக்கத்தை அந்த வியாபாரிகள் மாநாட்டிலே சொல்லியிருக்கிறார்கள். ஜூலை மாதம் 15-ஆம் தேதி 138,332 டன் அரிசி கடத்தப்பட்டதாக உணவு இலாக்கா அதிகாரிகள் எனக்குச் சொன்னார்கள், ஜூன் மாதம் 11-ஆம் தேதியிலிருந்து 30-ஆம் தேதி வரையில் 24,800 டன் அரிசி கடத்தப்பட்டது என்று பெருமதிப்பிற்குரிய திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் மாநாட்டில் சொன்னது, 138,000 டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னதை கடத்தப்பட்டது என்று பத்திரிகையில் போட்டார்கள். உடனடியாக ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் எங்களுக்குத் திருத்தத்தை ஃபோன் மூலம் சொல்லி, அன்று மாலையே பத்திரிகையாளர்களை வைத்துக் கொண்டு திருத்தத்தைச் சொல்லி பத்திரிகையாளர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஆலடி அருணா:** இதே பதிலை முதல்வரவர்கள் இன்னொரு கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். நான் அவரிடத்திலே கேட்பது, இந்தப் பதிலை ஈ. ஆர். கிருஷ்ணனே சொல்லியிருக்கக்

[திரு. ஆலடி அருணா] [1974 ஆகஸ்ட் 14

கூடாதா? ஈ. ஆர். கிருஷ்ணன் சொல்வதாக முதலமைச்சரவர்கள் தான் ஏன் வக்காலத்து வாங்குகிறார்கள்? நான் இதைக்கூட விட்டு விடுகிறேன்.

கட்சிக்காரர்களைக் காப்பாற்றுவதற்காக, கட்சியின் கொள்கைகளைக் காப்பாற்றுவதற்காக அவர்கள் வக்காலத்து வாங்கட்டும். அதைத் தடுக்கவில்லை. ஆனால் கடந்த மானியக் கோரிக்கையின் பொழுது உணவு அமைச்சரவர்கள் ஒரு அறிக்கையைத் தாக்கல் செய்தார்கள். அதிலே, இந்த நாட்டின் கொள்முதல் 125,000 டன் என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதையும் இந்த மன்றத்தில் சொல்கிறேன். 1974-ஆம் ஆண்டில் சம்பா அறுவடைக் காலத்தில் வெளிச்சந்தை. வெளியில் 1.25 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்வது என்று அரசு முடிவு செய்துவிட்டது, சம்பா அறுவடைக் காலத்தில் 1.25 லட்சம் டன் கொள்முதல் செய்வது என்று முடிவு செய்தவர்கள் ஏற்கனவே பிப்ரவரி மாதம் முடிய—அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள்—79,688 டன் கொள்முதல் செய்யப்பட்டு விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த 79,688 டன், ஜூன், ஜூலை மாதங்களில் கொள்முதல் செய்யப்பட்டதாகக் கூறப்படும் 138,332 டன் இந்த இரண்டையும் சேர்த்து இந்த அரசாங்கம் 218,020 டன் கொள்முதல் செய்தது. அதை ஒத்துக் கொள்ள வேண்டும்.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் பேசியது உண்மை. நீங்கள் அதை மறைக்கிறீர்கள். திரை அடிக்கிறீர்கள். கடத்தல்காரர்களை அன்றைக்குப் பிடிக்கவில்லை, ஆனால் இப்படிப்பட்ட வித்தைகளைச் செய்துகொண்டிருக்கிறீர்கள். எத்தனை நாட்களுக்கு ஓடும் இந்த வித்தை?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, முதலிலே கொள்முதல் செய்தது குறுவை கொள்முதல் செய்தது என்று இருக்கிறது. இன்றைக்கு சம்பா கொள்முதல் திட்டம் சொல்லியிருக்கிறோம். சம்பாவிலே லெவியிலே கொள்முதல் செய்யும் கணக்கு ஒரு இலட்சத்து 38 ஆயிரத்துச் சொச்சம் என்று இருக்கிறது. எனவே அதற்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆலடி அருணா அவர்கள் ஐந்து நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டும்.



1974 ஆகஸ்ட் 14]

**திரு. ஆலடி அருணா:** சம்பந்தமில்லை என்று சொல்கிறார்கள். எது சம்பந்தமில்லை என்று நாட்டுக்குத் தெரியும். இந்த அரசாங் கத்திற்குப் பதுக்கலை ஒழிப்பதில் அக்கறையில்லை என்பதற்கு மட்டும் ஒரேயொரு உதாரணத்தைச் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** அரை மணி நேரம் தருவதாக ஸ்பீக்கரே ஒத்துக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஐந்து நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

**திரு. ஆலடி அருணா:** அம்பையிலே ஒரு மார்க்கெட்டிங் சொசைட்டி இருக்கிறது. அதில் எந்தத் தீர்மானமும் இல்லாமல், எந்த விதமான நியாயமான முடிவும் இல்லாமல் மூன்று பேர்கள் சேர்ந்து ஆளுக்கு 35,000 ரூபாய் எடுத்திருக்கிறார்கள், கொள் முதலுக்கு என்று ஒரே வரியில் எடுத்திருக்கிறார்கள். அந்த சொசைட்டிக்கு ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒன்றியச் செயலாளர் தலைவராக இருக்கிறார்கள். அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு மூன்று பேர்களும் தங்களுடைய விருப்பத்திற்கேற்ப நெல்லைக் கொள்முதல் செய்து, அரசாங்கத்திற்கு தெரியாமல், சொசைட்டிக்கும் தெரியாமல் மூன்று இடங்களில் பதுக்கி வைத் திருந்தார்கள். அந்த இடங்களைச் சொல்கிறேன். ஒரு இடம் கடையம். அங்கே 824 மூட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டன. இன்னொரு இடம் வீரவநல்லூர். அங்கே 324 மூட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டன. மூன்றாவது இடமாகிய சம்மன்குளத்திலே 660 மூட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டன. இப்படி மொத்தம் சுமார் 1,808 மூட்டை நெல்லை மூன்று இடங்களில் பதுக்கி வைத்தார்கள்.

அந்த நபர்களின் பெயர்களையும் சொல்கிறேன். சொசைட்டியின் தலைவர், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர், அந்தப் பணத்தை எடுத்த நபர்களில் ஒருவர் இலட்சுமணப் பெருமாள் என்பவர், இன்னொருவர் நம்பிக் கோனார் என்பவர். இன்னொருவர் புதியவன் என்பவர். இம்மூவரும் சேர்ந்து பதுக்கி வைத்திருந்த இடத்தை சேரன்மாதேவி சப்-கலெக்டர் நேரடியாகச் சென்று

பார்த்தார்கள். உடனே நெல்லை வெளியே எடுத்தார்கள். அது மட்டுமல்ல, சொசைட்டியையும் சோதனை இட்டார்கள். எந்தக் கணக்கும் இல்லை, யாரிடத்திலே வாங்கப்பட்டது, எவ்வளவுக்கு வாங்கப்பட்டது, எப்பொழுது வாங்கப்பட்டது என்ற எந்த விவரமும் அந்த சொசைட்டியில் இல்லை. உடனே அந்த அம்மையார் அந்த மூன்று பேர்களின் மீது தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சொன்னார்கள். நான் மிகவும் பணிவன்போடு சொல்கிறேன், இதுவரை அது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆலடி அருணா:** இது நடந்தது 27—5—1974-இல். இப்பொழுது அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்தார் என்றால் கைப்பற்றப்பட்ட நெல்லை அரசாங்கம் விலைக்கு வாங்கியிருக்கிறது. இதுதான் நான்கு தினங்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட நடவடிக்கை. நான் கேட்கிறேன், சேரன்மாதேவி சப்-கலெக்டரின் அறிக்கையை, டி.எஸ்.ஓ., மாவட்ட விநியோக அதிகாரியின் அறிக்கையை இந்த மன்றத்தில் வைப்பதற்கு அமைச்சர் தயாரா? அவர்கள் என்ன கருத்தைச் சொன்னார்கள்? ஜே. ஆர். என்ன சொன்னார்கள், அந்த சொசைட்டியின் டைரக்டரைக் காப்பாற்ற, கள்ளக் கணக்கைத் தயாரித்துக் கொடுக்கிறார்கள் என்பதைத் துணிவோடு குற்றம் சாட்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** கள்ளக்கணக்கு என்று எப்படிச் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. ஜாயிண்ட் ரெஜிஸ்தாரைப் பற்றிச் சொல்கிறார்கள். நான் நடந்ததைச் சொல்லிவிடுகிறேன். பதுக்கலான நெல்லை எடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு பார்த்தால் சொசைட்டியிலே கணக்கு இல்லை. பிறகு அந்தக் கணக்கை செக் செய்து முடிந்த பிறகு நெல்லைப் பறிமுதல் செய்து சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எடுத்திருக்கிறது. சட்ட பூர்வமாக என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள்.



**திரு. ஆலடி அருணா:** இந்த அரசாங்கத்திற்குப் பதுக்கலை ஒழிப்பதில் அக்கறையில்லை, கடத்தலைத் தடுப்பதில் அக்கறையில்லை, ஏழைகளுக்குக் குறைந்த விலையில் அரிசி கிடைக்கச் செய்வதில் அக்கறையில்லை. மிட்டா மிராசுதார்களின் கையாட்களாக, முதலாளிகளின் எடுபிடியாக இந்த அரசாங்கம் மாறிவிட்டது. இன்றைய தினம் முதலமைச்சரவர்கள் நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டுமென்று எண்ணியிருந்தால் அவர் செய்ய வேண்டிய காரியம் இராஜினாமா செய்வது ஒன்றுதான். அவ்வாறு அவர் இராஜினாமா செய்தால் ஒன்று அவருடைய கட்சிக்கு இலாபம், இரண்டாவது அரசாங்கத்திற்குப் பெருமை, மூன்றாவது நாட்டிற்கும் விமோசனம், நான்காவது அவருக்கும் புகழ் கிடைக்கும் என்று சொல்லி, ஒன்றே செய்க, நன்றே செய்க, அதை இன்றே செய்க என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. ஆலடி அருணாவின் பேச்சு எனக்கு எந்தவிதமான மனப் புண்ணையும் தரவில்லை. மாநில சுயாட்சி தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தின் போது அவர் பேசிய பேச்சை எண்ணிக் கொண்டு இதை நான் மறந்து விடுகிறேன்.

**திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, மாநில சுயாட்சி பற்றி இன்னும் தனிப்பட்ட முறையில் மாறுபட்ட கருத்து இல்லை. நான் சொல்லுவது மாநில சுயாட்சி; ஆனால் அவர் கேட்பது அவருடைய சொந்த ஆட்சி.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அல்ல. நான் கேட்பது மாநில சுயாட்சி. நீங்கள் உங்கள் சொந்த ஆட்சிக்காக 26-ம் தேதி கலைவாணர் அரங்கத்தில் பேசிவிட்டு 29-ம் தேதி திருச்சி மாநாட்டில் சென்று கலந்து கொண்டதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

(மணி அடிக்கப்பட்டது).

(திரு. ஆலடி அருணா, கோவை செழியன், பெ. சீனிவாசன் ஆகியோர் எழுந்து நின்றனர்—கூச்சல் குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரை மணி நேரத்திற்கு மேல் நீங்கள் பேசியாகிவிட்டது. இரண்டு பேரும் அதற்குப் பிறகு ஒருவருக்கொருவர் பதில் சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி? சண்டை போடுவது முறையல்ல.

**திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, 26-ம் தேதியன்று நான் அங்கு இருந்தேன். மறுக்கவில்லை. அதே நேரத்தில் எத்தனை பிரச்சினைகளில் அவரிடத்தில் எதிர்த்து நான் வாதாடினேன், கருத்து வேறுபாடு கொண்டிருந்தேன் என்பதை அறிவார்கள். கடந்த முறை நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்த போது கூட நான் பேச மறுத்தேன் என்பதையும் அறிவார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 26-ம் தேதி மாலை கலைவாணர் அரங்கத்தில் 'தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவர் கலைஞர்' என்று சொல்லிவிட்டு 29-ம் தேதி திருச்சி மாநாட்டில் 'தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவர் ராமச்சந்திரன்' என்று சொன்னீர்கள். . .

**திரு. ஆலடி அருணா:** நான் கற்றது உங்களிடந்தான். இதெல்லாம் நீங்கள் கற்றுத் தந்த வித்தைகள்தான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்போது அங்கே போய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அங்கேயாவது தயவு செய்து விஸ்வாசமாக இருங்கள்.

(திரு. சுருளிவேல் பேச அழைக்கப்பட்டார்).

**திரு. எம். சுரேந்திரன்:** ஒரு கிளாரிபிகேஷன். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்கள் இரண்டு பேரும் பேசிக் கொண்டார்கள். நீங்கள் என்ன கிளாரிபிகேஷன் கேட்கப் போகிறீர்கள்? திரு. சுருளிவேல் . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, திரு. சீனிவாசன் எழுந்து இந்த விவகாரத்தில் சம்பந்தம் இல்லாத எங்கள் தலைவர் காமராஜரை எதற்காக இழுக்கிறார் என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவு செய்து புது விவாதங்களைக் கிளப்ப வேண்டாம். திரு. சுருளிவேல். . .

**திரு. எம். சுரேந்திரன்:** அமைச்சர் அவர்கள் நெல் பறிமுதல் செய்யப்பட்டது என்றார்கள். பறிமுதல் செய்யப்பட்ட நெல்லுக்கு என் விலை கொடுக்கப்பட்டது? பறிமுதல் செய்தால் விலை கொடுக்க வேண்டுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பறிமுதல் செய்யப்பட்ட நெல்லை எப்படி எடுத்துக் கொள்வது, என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இந்திரா காங்கிரசைச் சேர்ந்த அர்த்தநாரீஸ்வர கவுண்டரிடமிருந்து எடுக்கப்பட்ட நெல்லைக் கூட விலைக்கு எடுத்துக் கொள்வதா அல்லது வேறு நடவடிக்கை எடுத்துக் கொள்வதா என்பது பற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை; யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அந்த சொசைட்டியில் மூன்று பேர் கொள் முதல் செய்வது என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். மூன்று பேரும் கொள் முதல் செய்து வைத்திருக்கிறார்கள். கணக்கு இல்லை. அதனால் அதை எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. உள்ளபடியே கடத்தலாக இருந்து தப்பான முறையில் வைத்திருந்தார்கள் என்றால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். வேறு கணக்கு வைத்திருந்தால் நெல்லை எடுத்துக் கொண்டு விலை கொடுக்கலாமா என்பது பற்றி முடிவு செய்யப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பறிமுதல் செய்யப்பட்ட நெல்லுக்குப் பணம் கொடுப்பது எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** புது விவாதங்கள் தேவையில்லை. திரு. சுருளிவேல். . .

**திரு. மு. சுருளிவேல்:** தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்மீது நம்பிக்கை இல்லை, இந்த நாட்டு மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை வன்மையாக எதிர்த்தும், அதே நேரத்தில் நாலரைக் கோடித்

[திரு. மு. சுருளிவேல்] [1974 ஆகஸ்ட் 14

தமிழ்ச் சமுதாய மக்கள் தங்களுடைய உரிமைகளைக் காப்பதற்காகவும், எதிர்காலத்திலே நிம்மதியான வாழ்க்கையைப் பெறுவதற்காகவும், நம்முடைய உயிரினும் மேலாக இருக்கக்கூடிய பண்பையும், கலாசாரத்தையும், நாகரிகத்தையும் காப்பதற்காகவும் டாக்டர் கலைஞர் தலைமையில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்திலேதான் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை மிகத் திண்ணமாக எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இருபத்தைந்து ஆண்டு கால ஆட்சியிலே தன்னுடைய தவறான பொருளாதாரக் கொள்கையின் மூலமாக எந்தக் கட்சி இந்தியத் துணைக் கண்டத்தைச் சுடுகாடாக மாற்றியதோ, முதலாளிகளுக்கு ஆதரவாகவும், நிலப்பிரபுக்களுக்குக் கைக்கூலிகளாகவும், தொழிலாளர் வர்க்கத்திற்கு மிகக் கொடூரமான எதிரிகளாகவும் தங்களுடைய பொருளாதாரக் கொள்கையை வகுத்துக் கொண்டதன் மூலம் நாட்டிலே கறுப்புப் பணத்தையும், பண வீக்கத்தையும் ஏற்படுத்தியதோ அந்தக் கட்சி. . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அவர் பாட்டுக்கு அடுக்கி கொண்டிருக்கிறாரே, மத்திய சர்க்கார் முதலாளிகளுக்கு ஆதரவாக என்ன செய்தது, தொழிலாளர்களுக்கு எதிராக என்ன செய்தார்கள் என்பதற்கு ஆதாரமாக எதாவது சொல்லிப் பேசினால் பரவாயில்லை. இங்கே என்ன மத்திய அமைச்சரா இருக்கிறார், அதற்குப் பதில் சொல்லுவதற்கு? இவ்விடத்திற்கு மத்திய சர்க்காரைப் பற்றிப் பேசுவது சரியல்ல.

**திரு. மு. சுருளிவேல் :** மத்திய சர்க்கார் தொழிலாளர் நலக் கொள்கைக்கு விரோதமானது என்பதற்கு, 20 லட்சம் ரயில்வே தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தை மதிக்காமல் அதை அடக்கி ஒடுக்க இராணுவத்தையும், வானொலியையும் அரசு இயந்திரத்தையும் எந்த அளவுக்குப் பயன்படுத்தினீர்கள் என்பதே போதுமானது. எந்த அளவுக்கு உங்களுக்குத் தொழிலாளர் நலனில் அக்கறை இருக்கிறது என்பதை நாடு அறியும். அம்மையார் அவர்கள் அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.



1974 ஆகஸ்ட் 14] [திரு. மு. சுருளிவேல்]

இத்தகைய சூழ்நிலையில் விலைவாசி உயர்வுக்கு, கறுப்புப் பண நடமாட்டத்திற்கு எந்தக் கட்சி காரணமோ, மூலகர்த்தாவோ அந்தக் கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மாரிமுத்து அவர்களே நம்முடைய ஆட்சி மீது நம்பிக்கையில்லை என்று கூறுவதும், 'டிபாக்டோ' 'டிஜூரோ' காங்கிரஸ் கட்சி இந்த மன்றத்தில் உரத்த குரல் இந்திரா காங்கிரசுக்கு வக்காலத்து வாங்கி எழுப்புவதும் விநோதமான ஒன்றாகும்.

அரசின்மீது நம்பிக்கை இல்லை என்று கூறும் அவர்கள் மைய மாக வைத்திருக்கும் பிரச்சினை தமிழ்நாட்டில் அரிசி விலை ஏறி விட்டது என்பதுதான். உபரி மாநிலமான தமிழ்நாட்டில் அரிசிப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை மையமாக வைத்து தங்களுடைய வாதத்தை எழுப்பியிருக்கிறார்கள்.

அவர்களுடைய மனச்சாட்சியைக் கேட்க விரும்புகிறேன். அரிசிப் பற்றுக்குறை என்ற நிலை குறுகிய காலத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் எப்படி ஏற்பட்டது? சென்னை நகரத்தில் அல்லது தமிழகத்தின் பிற பகுதிகளில் இரண்டு மூன்று நாட்களுக்குள் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுவதற்குக் காரண கர்த்தாக்கள் யார்? நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். இதற்கு முதல் காரணம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியாகும். அந்தக் கட்சியின் முக்கிய தலைவருள் ஒருவரான உமாநாத் புதுப் பாக்கத்திலும், திருவொற்றியூரிலும் தொழிலாளர்கள் கூட்டத்தில் பகிரங்கமாக அறைகூவல் விடுத்தார். அரிசியைச் சூறையாட வேண்டுமென்ற முழக்கத்தைத் திருவொற்றியூரில் பேசிய மறுநாளே அரிசிக் கடைகள் சூறையாடப்பட்டன. இந்த ஆட்சியின் மேல் காழ்ப்புணர்ச்சி கொண்டு விரக்தியுற்ற சக்தியின் கூடாரமாக இருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தது. அத்துமீறி கடைகளில் புகுந்து அரிசியைக் கொள்ளையிட்டனர். இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியும் அத்தகைய சட்ட விரோத, சமூக விரோத மான காரியங்களில் ஈடுபட்டது . . .

**திரு. சோ. அழகர்சாமி :** எங்கள் கட்சியைப் பற்றிப் பேசிக் கொண்டு வருகிறார். கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரை மக்களுக்கு நியாய விலையில் அரிசி கிடைக்க வேண்டுமென்று

போராடுகிறது. காலையில் மூன்று ரூபாய் என்று விற்றது, 4 ரூபாய், 5 ரூபாய் என்று ஏறிக் கொண்டே போவதை உங்கள் போலீசும், சட்ட அமைச்சரும் தடுக்காமல் இருக்கும்போது ஜனங்களே நேரடியாகக் கள்ள மார்க்கட் செய்பவர்களைப் பிடித்து நியாயமான விலையில் அரிசி கிடைக்க கம்யூனிஸ்டு கட்சி உறுதுணையாக இருக்கும்.

திரு. மு. சுருளிவேல்: இவர்கள் ஏற்படுத்திய பீதியினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும், அரசு அதிகாரிகளும் கலந்து அரிசிப் பற்றாக்குறை நிலைமையைப் போக்க தைரியத்துடன் நடவடிக்கை எடுத்து அரிசியை வெளிக் கொணர்ந்து விநியோகித்ததை நாம் கண்ணாரக் கண்டோம். இப்போது பற்றாக்குறை நிலைமை மாறி விலைவாசி ஏறிவிட்டது என்ற குற்றச்சாட்டை எல்லா உறுப்பினர்களும் கூறினார்கள். அதற்கு யார் காரணம்? 1960-ல் இருந்து 1970 வரை பத்தாண்டுக் காலத்தில் 200 சதவிகிதம் இந்த நாட்டில் விலைவாசி உயர்ந்திருக்கிறது.

(முற்பகல் 11-30)

அதற்கு யார் காரணம்? திராவிட முன்னேற்றக் கழகமா அல்லது இந்த நாட்டின் முதல் அமைச்சர் அவர்களா என்பதை ஆளும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தாக வேண்டும். சென்ற ஆண்டு 27 சதவீதம், அதற்கு முந்திய ஆண்டு 25 சதவீதம் அகில இந்திய ரீதியில் விலைவாசியேற்றம் கூடியிருக்கிறது என்றால் அதற்கு மத்திய அரசுதான் காரணம். மத்திய அரசினுடைய ஒரு அங்கமாக இருக்கும் துர்ப்பாக்கியம் நமக்கிருக்கிற காரணத்தால் தான் அவர்களால் கொடுக்கப்படும் தவறான பொருளாதாரக் கொள்கையை நாம் ஏற்று அதன் விளைவுகளை ஏற்கும் விதத்தில், அதையும் மீறி நம் சக்தியைப் பயன்படுத்தி இன்றையதினம் போராடிக் கொண்டிருக்கிறோம். உறுப்பினர்கள் மத்திய அரசினுடைய விலை நிர்ணயக் கொள்கையை தயவு செய்து பரிசீலனை செய்தாக வேண்டும்.

1947-ல் இருந்து இன்றுவரையில் 27 ஆண்டுக் காலத்தில் ஒரு மோசமான நிலையில், ஏறிய விலையை இறக்க முடியாத நிலையில், அல்லது ஏறிய விலைவாசியை இறக்க முடியவில்லை என்ற நிலையில் இந்திய பொருளாதாரத்தால் நசுங்கிப் போகக்கூடிய மோசமான



தொரு நிலையில் இருக்கிறோம். ஏனெனில், மத்திய அரசினுடைய விலை நிர்ணயக் கொள்கை இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங் களுக்கும் ஒரே விலையை நிர்ணயித்து விடுகிறது. ஒரு பொருளின் விலை ஏறிவிட்டால் அது கீழே இறங்க முடியாத அளவிற்கு ஒரு கொள்கையை மத்திய அரசு தொடர்ந்து கடைப்பிடித்து வருவதால் இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

எனவே, இதற்கு யார் காரணகர்த்தாக்களோ அவர்களாலேயே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுவது மிகவும் துர்ப்பாக்கியமான ஒன்றாகும். இந்த அரிசிப் பிரச்னையை வைத்து எங்களது மாஜித் தோழர்கள் எப்படியாவது இந்த ஆட்சியைக் கவிழ்த்து விடலாம் என்று இங்கே உரத்த குரலில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களை திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து தூக்கியெறிந்ததற்குப் பிறகு எவ்வளவோ முறைகள் எத்தனையோ கட்டங்களில் டெல்லியில் உள்ள சக்திகளின் வாக்கை நம்பி இன்னும் இரண்டு மாதங்களில் அமைச்சரவை வீழ்ந்துவிடும், ஐந்து மாதங்களில் கலைஞர் கருணாநிதி அவர்களும், நாவலர் அவர்களும் வீடு போய் விடுவார்கள் என்ற ஆசை வார்த்தை காட்டி பலரை தங்கள் பக்கத்திற்கு இழுக்க முயற்சி செய்து தோல்வியடைந்ததை நாம் அறிவோம்.

எங்களது மாஜி தோழர்கள் சொல்கிறார்கள், இன்று ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள், இந்த அரசு கூண்டோடு ராஜினாமா செய்ய வேண்டும், டாக்டர் கலைஞர் அவர்களும், நாவலர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் பதவி விலகிட வேண்டு மென்று கோருகிறார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன், அந்த இடத்திற்கு யார் வருவது? தயவுசெய்து கூறுங்கள். 1957-ல் நடந்த மும்முனைப் போராட்டத்தில், டால்மியாபுரம் என்ற பெயரை கள்ளக்குடியென்று வைக்க வேண்டும் என்று நமது தானைத் தலைவர், இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியபோது தயங்காது தலையை தண்டவாளத்தில் வைத்து தன் உயிரைத் தியாகம் செய்ய தயங்காமல் முன்வந்தவர் பதவி விலகி, ஒவ்வொரு போராட்டத்தின்போதும் விலக்கு பெற்றுக்கொண்டு

[திரு. மு. சுருளிவேல்] [1974 ஆகஸ்ட் 14

வெளியே ஓடிய ஒருவர் இந்த நாட்டின் முதல் அமைச்சராக வர வேண்டுமா என்றுதான் கேட்கிறேன். எங்களது மாஜி நண்பர்கள் தங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லட்டும்.

1965-ல் நாம் எல்லாம் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து போராடிய போது 500-க்கு மேற்பட்ட மாணவர் திலகங்களை பக்தவத்சலம் ஆட்சி துப்பாக்கியால் சுட்டுக் கொன்றபோது மாணவர்களிடத்தில் வன்முறையை கலைஞர் அவர்கள்தான் தமது எழுத்தாலும் பேச்சுக்களாலும் தூண்டிவிட்டார்கள் என்று காரணம் காட்டி டி.ஐ.ஆர்.-ன் கீழ் 1965-ல் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டையில தனிமைச் சிறையில் அடைக்கப்பட்ட அவர்கள் முதல் அமைச்சராக இருக்க வேண்டாம், ஆனால் தூண்டிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்ய முயற்சி செய்யப்படுகிறது என்று சின்ன அண்ணாமலை, தமிழ் சினிமா கிங் ஆனந்த் தியேட்டர் உமாபதி கூறியதைக் கேட்டு யார் தமிழ் மக்களின், மாணவர்களின் ரத்தத்தைக் குடிக்க பக்தவத்சலத்திற்குத் தூண்டுதலாக இருந்தார்களோ அந்த காமராஜருக்கு விழா எடுத்த * * இந்த நாட்டின் முதல் அமைச்சராக வரவேண்டுமா? அதை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்கள் உபயோகித்த * * என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். பத்திரிகைகளிலும் அதைப் பிரசுரிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** அவர்கள் இப்படிப் பேசுவதாக இருந்தால் நாங்களும் அப்படிப் பேசுவோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை நீக்கியாகி விட்டதே.

**திரு. பெ. சீனிவாசன்:** அந்த வாக்கியத்தையே நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைப் படித்துப் பார்த்துவிட்டு நீக்குகிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1974 ஆகஸ்ட் 14]

**திருமதி சத்தியவாணிமுத்து:** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பெருமதிப்பிற்குரிய ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தலைவர் மாரிமுத்து அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நானும் ஆதரித்து இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்பதை நிரூபிக்க சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

அவர்கள் கொடுத்துள்ளது, இன்றைக்கு ஏறியுள்ள அரிசியின் விலை காரணமாக ஏழை எளிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், பட்டினிச் சாவு நிறைய ஏற்படுகிறது, அரிசியின் விலை ஏறுகிறது என்று கூறுகிற அதே நேரத்தில் விளைச்சல் அதிகமாக இருக்கிறது என்று புள்ளிவிவரம் காட்டப்படுகிறது. விளைச்சல் அதிகமாகிறது. ஆனால் விளைகிறவைகள் எங்கே போகிறது என்ற குற்றச்சாட்டுதான் இங்கே இரண்டு தினங்களாக எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது.

விளைச்சல் இல்லை என்றாலும், அல்லது அரிசி இடைக்க வில்லையே என்று மக்கள் நினைத்தாலும் அது பரவாயில்லை. ஆனால், விளைச்சல் இருந்தும் அது எங்கேயோ போய் விளைவித்துக் கொடுக்கிற விவசாயிகளும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மக்களும், மற்றவர்களும் அரிசி விலையேற்றத்தால் பாதிக்கப்பட்டு, நாடு நலிந்து கிடக்கிறது என்ற நிலை வரும்போது இந்த அரசு இருக்க வேண்டுமா என்ற கேள்வியை இங்கே அனைவரும் கேட்டாக வேண்டும்.

அப்படித்தான் காங்கிரஸ் ஆட்சியில் அரிசி விலை ஏறியிருக்கும் போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கேட்டார்கள்; நானும் அப்போது அந்தக் கட்சியில் இருந்த போது கேட்டேன். கேட்கக் கூட இல்லை, போராடினோம். சாதாரணப் போராட்டம் அல்ல. சிறைக்குச் சென்றோம். சாதாரண தண்டனை அல்ல, மூன்று மாதம், ஆறு மாதம் தண்டனை பெற்றோம். நிறைகர்ப்பிணியாக இருந்த நானும் அந்த தண்டனையைப் பெற்றேன், அரிசி விலை குறைவிற்காக. எனவே, அந்த ஆட்சிக்கு ஒரு நீதி, இந்த ஆட்சிக்கு ஒரு நீதி என்றில்லாமல் திராவிட முன்னேற்றக் கழகம் எதற்காக காங்கிரஸ் ஆட்சியை ஒழித்து விட்டு ஆட்சிக்கு வந்தோம் என்பதை நினைவில் வைத்துக்

கொண்டு அரிசி விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை இதுவரையிலும் எடுக்கவில்லை. எனவே, இந்த அரசு இருக்கக் கூடாது என்பது ஒரு நியாயமான வாதம்.

நம்பிக்கை இல்லை என்று கூறுவதில் நியாயம் இருக்கிறது. அதை விட முக்கியமான சில விவரங்களை நான் இம்மன்றத்தில் கூற விரும்புகிறேன். எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற நண்பர் கோவை செழியன் அவர்கள் கேட்டார்கள். கடந்த முறை சட்டமன்றத்தில் அமைச்சராக இருந்த நான் இப்போது அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறேன். அதற்குக் காரணம் என்ன என்று கேட்டார்கள். நான் ராஜிநாமா செய்திருந்தால் நானே ஒரு அறிக்கையை வைக்க வேண்டும் சட்டமன்ற விதிகளின்படி. ஆனால் நான் ராஜிநாமா செய்யவில்லை, நான் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறேன். முதல் அமைச்சர் அவர்களின் சிபாரிசின் பேரில் கவர்னர் அவர்கள் என்னை நீக்கியிருக்கிறார்கள். எனவே சட்டமன்ற விதிகளின் 57-வது விதியின்படி நானே ஒரு மணி நேர விவாதம் வேண்டுமென்று கேட்டேன். அப்போது சட்டமன்ற தலைவர் அவர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நீங்கள் பேசலாம் என்றார்கள். எனவே, நான் அதற்குரிய விளக்கங்களைக் கூற விரும்புகிறேன்.

நான் மார்ச் மாதம் 21 ஆம் தேதி ஹரிஜன நலத் துறை அமைச்சராக இருந்தபோது பேசிய என் பேச்சுக்களில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசிய பேச்சுக்களை அடிப்படையாக வைத்து அரசு எடுக்கிற முடிவுகள் எதுவாக இருந்தாலும் அவை வெற்றி பெற அதிகாரிகள் தான் காரணம் என்றேன். அதை உணர்ந்துதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் அரசுக் கட்டிலில் அமர்ந்தபோது அதிகாரிகளை அழைத்து வேண்டுகோள் விடுத்தார்கள். அந்த வேண்டுகோள் இன்று செயல்படுத்தப்படவில்லை. அரசுச் சார்பில் பணம் ஒதுக்கியும், திட்டங்கள் தீட்டியும் அவை சரியான முறையில் நடைபெறவில்லை தாமதமாகிறது, துர்விநியோகம் நடைபெறுகிறது, நீங்கள் சொல்கிற குற்றச்சாட்டுகளை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொன்னேன். உடனடியாக எதிர் வரிசையில் இருக்கிற நண்பர்கள் மதிப்பிற்குரிய லத்தீப்





போன்றவர்கள் யார் அவர்கள், எந்த அதிகாரி என்றெல்லாம் கேட்டார்கள். முதல் அமைச்சர் அவர்களும் நலத் துறை அமைச்சர் இப்போதுதான் முதல் முறையாகக் கூறுகிறார், நான் விசாரித்து அவர்கள் யார் என்று கேட்டு நடவடிக்கை எடுக்கிறேன் விரைவில் என்று சொன்னார்கள்.

நான் பேசியது மார்ச் 21 ஆம் தேதி. ஆனால் ஏப்ரல் 22 ஆம் தேதி முதல் அமைச்சர் அவர்களிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. ஒரு ரகசியக் கடிதம். நீங்கள் பேசிய பேச்சுக்கு விளக்கம் தர வேண்டும் என்று வந்தது. அப்போது என் கைவசம் இருந்த மூன்று கோப்புக்களை, நான் எதை நினைத்து உத்தரவு போட்டேனோ அந்த உத்தரவுகளை அதிகாரிகள் செயல்படுத்தவில்லை. அதற்கான ஆதாரபூர்வமான கோப்புகளை நான் இரகசியமான முறையில்தான் நானும் ஒரு ஸீல்ட் கவரில் வைத்து என் நேர்முக உதவியாளர் மூலம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடம் கொடுத்தேன். கொடுத்த இரண்டு தினங்களுக்குப் பிறகு நான் என்ன செய்தி பற்றி, என்ன குற்றச்சாட்டுக்கள் பற்றி நான் அந்தக் கோப்புக்களைக் கொடுத்தேனோ அவை பத்திரிகைகளில் வெளி வந்தது. நான் அனுப்பியது 24 ஆம் தேதி.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த விவரங்களை 26 ஆம் தேதி பத்திரிக்கைகளுக்குத் தந்து இருக்கிறார்கள். பத்திரிக்கைகளில் நான் பார்த்தேன். எனவே, நான் எதைக் கொடுத்தேனோ அதை அவர்கள் சரியான முறையில் எடுக்காத முறையில் எனக்கு அவருடைய வாசகம் தெரிந்தது. அதற்குப் பிறகு நான் பதவியிலிருந்து நீக்கப்பட்டேன் என்ற செய்தி கவர்னர் மூலமாகத் தெரிந்தது. அதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியாது. நான் அதிகாரிகள் மீது கூறிய குற்றச்சாட்டு சரியா, தவறா என்று என்னை அழைத்தும் அவர்கள் கேட்கவில்லை. கொலைக் குற்றம் சாட்டப்பட்ட கைதிகளைக் கூட அழைத்து விசாரிப்பது என்ற வழக்கம் இருக்கிறது. நான் ஒரு அமைச்சராக இருந்தேன். நான் போட்ட உத்தரவு நிறைவேற்றப்படவில்லை. நிறைவேற்றப்படவில்லை என்பது மாத்திரமல்ல, அதிகாரிகள் அதற்கு நேர்மாறாக அரசாங்க உத்தரவு பிறப்பிக்கிறார்கள்.

நான் இப்போது கூறுகிறேன், அப்போது கூறவில்லை. நான் போட்ட உத்தரவு, அதற்கு மேல் சம்பந்தப்பட்ட அமைச்சர் போட்ட உத்தரவு, அதற்கு மேல் முதலமைச்சர் போட்ட உத்தரவு, இவைகளை எல்லாம மீறி ஒரு அரசாங்கச் செயலாளர், அதற்கு நேர்விரோதமாக ஒரு ஆர்டரை, ஜி.ஓவை, அரசாங்க ஆர்டரை பிறப்பித்து இருக்கிறார்கள் என்றால், அது எவ்வளவு பெரிய குற்றம்! என்னுடைய உத்தரவை மீறி ஒரு அரசாங்க அதிகாரி, அதிலும் செயலாளர் பொறுப்பில் இருக்கும் அதிகாரி ஒரு உத்தரவு போடுகிறார். நான் அமைச்சராக இருந்தும் என் உத்தரவு மதிக்கப்படவில்லை. என்னவோ இந்தச் சமுதாயத்தில் பிறந்தோமே அதனால் மதிக்கவில்லையோ என்று இருந்து இருப்பேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எந்த உத்தரவை மீறி எந்த அதிகாரி நடந்து கொண்டார் என்று சொன்னால், இப்போதே நான் விளக்கந் தயாராக இருக்கிறேன்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே, 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தில் திருச்சியில், நடைபெற்ற கலெக்டர்கள் மாநாட்டில் நான் ஒன்றை எழுப்பினேன். கிராமங்களில் அபிவிருத்தி செய்ய 20 சதவிகிதம் நலத் துறையிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்கிறோம். இந்தப் பணத்தில் பஞ்சாயத்துகளில் கிணறுகள் தோண்டுகிறார்கள், ரோடுகள் போடுகிறார்கள். ஆனால் எனக்கு வரும் புகார்கள் எல்லாம் பஞ்சாயத்துக்கள் ரோடுகள் போடுவதில்லை, அந்தப் பணத்தில் கிணறுகள் தோண்டுவதில்லை. எனவே, பேரறிஞர் அண்ணா அவர்கள் கலெக்டர்களுக்கு ஒரு உத்தரவு போட்டார்கள். அதை நீங்கள் பரிசீலனை செய்து போர்ட் ஆப் ரெவின்யூவிற்கு ரிப்போர்ட் அனுப்புங்கள். பிறகு போர்ட் ஆப் ரெவின்யூ ரிப்போர்ட் அனுப்பியது. 3—6—1969 இல் அதற்குப் பிறகு போர்ட் ஆப் ரெவின்யூ அந்த உத்தரவை ஒப்புக்கொண்டார்கள். அதைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம். நீங்கள் கூறியது சரியாக இருக்குமானால் அதற்குச் சரியான பரிகாரம் காணலாம் என்றார்கள். போர்ட் ஆப் ரெவின்யூவும், ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்ட்டும் ஒப்புக்கொண்டார்கள். அந்தக் கோப்பு எனக்கு வந்தபோது நான் குறிப்பாக, குறிப்பு ஒன்றை எழுதினேன்.





இந்தத் திட்டங்களுக்குப் பணம் அரிசன நலத் துறையிலிருந்து 20 சதவிகிதம் நான் கொடுக்கிறேன். செயலாற்றுவது பஞ்சாயத்துகளும், ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்ட்டும். எனவே, வேலைகளை மட்டும் ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்ட் செய்யட்டும், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அரிசன மக்கள் வாழும் எந்தப் பகுதியில் கிணறு வெட்ட வேண்டும், எந்தப் பகுதியில் ரோடு போட வேண்டும், அதாவது செலக்ஷன் ஆப் சைட், அது நலத் துறை செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டேன். நான் போட்டது 16—5—1969 ஆம் தேதி. அப்போது உள்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. முத்துசாமி அவர்கள் அந்த உத்தரவை ஒப்புக்கொண்டார்கள். அரிசன நலத் துறையிலிருந்து ஒதுக்குகிற பணத்தை எந்தெந்தப் பகுதிகளில் என்னென்ன பணிகளுக்காகச் செலவழிக்கவேண்டும், இடம் தேர்ந்தெடுப்பது நலத் துறை இலாகா, அதைச் செயல்படுத்துவது ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்ட் என்பதை மாண்புமிகு திரு. முத்துசாமி அவர்கள் கையெழுத்திட்டு ஒப்புக்கொண்டார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்களும் கையெழுத்திட்டு அவர்களும் ஒப்புக் கொண்டு, ஒப்புதல் அளித்தார்கள்.

முறையாக என்ன நடந்து இருக்க வேண்டும்? நலத் துறை அமைச்சர் கையெழுத்துப் போட்டு, உள்துறை அமைச்சர் கையெழுத்துப் போட்டு, அதற்கு முதலமைச்சர் அவர்களும் ஒப்புதல் அளித்து இருக்கிறார்கள். 25—11—1970 இல் முதலமைச்சர் கையெழுத்திட்டார்கள். மூன்று பேரும் கையெழுத்துப் போட்ட பிறகு சம்பந்தப்பட்ட இலாகாவின் அதிகாரிகள் கவர்ன்மெண்ட் ஆர்டர் இஷ்யூ செய்ய வேண்டும். ஆனால் செய்தார்களா என்றால் இல்லை. செய்யவில்லை. மறுபடியும் அந்தக் கோப்பு சுற்றுக்குக் கொண்டு போகப்படுகிறது. இது பஞ்சாயத்துக்களிலே இருப்பவர்களின் உரிமையைப் பாதிக்கும், ஆர்.டி.எல்.ஏ.வில் இருப்பவர்களின் உரிமையைப் பாதிக்கும்.

'It would better the freedom of the Panchayat Union'

என்று சொல்லி, அரிசன வெல்பேர் டிபார்ட்மெண்டில் ஸ்டாப் கிடையாது என்று சொல்லி, மறுபடியும் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அப்போது உள்துறை அமைச்சராகவும் இருந்தார்கள், அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

25—11—1970 இல் கையெழுத்தான பிறகு முறையாக ஜி.ஓ. போடுவதற்கு மாருக, வேறு ஒரு அமைச்சர், மாண்புமிகு நாவலர் அவர்கள் வரும்போது, மறுபடியும் உத்தரவு கேட்டு அந்த பைல் வருகிறது. அவர்கள் அதை ஏதோ சரியாக கவனிக்காமல் "ஸ்டேடஸ்கோ மே கன்டின்யூ" என்று கையெழுத்துப் போட்டு விடுகிருர். அதற்கும் முதலமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டு 10—5—1971-இல் கையெழுத்துப் போடுகிருர்கள். உள்துறை அமைச்சராக இருந்த நாவலர் போட்ட கையெழுத்து "தி ஸ்டேடஸ் கோ மே கன்டின்யூ", அதற்கும் முதலமைச்சர் அவர்கள் கையெழுத்துப் போடுகிருர் நான் நேராக அந்தக் கோப்பை எடுத்துக் கொண்டு கவுன்சில் நடக்கும்போது சென்றேன், "என்னங்க அநியாயமாக இருக்கிறது, ஏற்கனவே திரு. முத்துசாமி அவர்களும் கையெழுத்துப் போட்டு, நானும் கையெழுத்துப் போட்டு, நீங்களும் ஒப்புக்கொண்டு, பிறகு அந்த அதிகாரி ஜி.ஓ. போடாமல், அதற்குப் பதிலாக மறுபடியும் இந்தக் கோப்பு வந்திருக்கிறது. அதற்கு நாவலர் அவர்களும் கையெழுத்துப் போட்டிருக்கிருர், நீங்களும் கையெழுத்துப் போட்டு இருக்கிறீர்கள்" என்று சொல்லி, மறுபடியும் நான், முதலமைச்சர், நாவலர் கையெழுத்துப் போடுகிறேரும். நாங்கள் மூன்று பேரும் கையெழுத்துப் போட்டு மறுபடியும் 23—6—1971 அன்று அனுப்புகிறேரும். ஏற்கனவே நான் சொன்னபடி அந்த உத்தரவு போட்டிருக்கிறேரும். அதாவது இடம் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை நலத் துறை இலாகா செய்ய வேண்டும். அந்த வேலையை ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்ட் செய்ய வேண்டும் என்று முன்பு திரு. முத்துசாமி அவர்கள் அமைச்சராக இருந்த உத்தரவையே நான், நாவலர், முதலமைச்சர் மூவரும் சேர்ந்து மறுபடியும் போடுகிறேரும்

அதன் பிறகு அந்த முறையில் தான் அரசாங்க செயலாளர் ஜி.ஓ. போட வேண்டும். அந்த அதிகாரி என்ன செய்து இருக்கிருர். 11 அக்டோபர் 1971 இல் ஒரு ஆணை பிறப்பிக்கிருர். அதற்கு நேர்மாருக ஜி.ஓ. எண். 2284. மாவட்ட நல அதிகாரி தேர்ந்தெடுக்கக்கூடாது. பஞ்சாயத்தில் இருக்கும் அதிகாரிகள், கலெக்டர்கள், தாசில்தார், ஒரு குழு உர்கார்ந்து கொண்டு தான் தேர்ந்தெடுக்க வேண்டும். முதல் அமைச்சர் அவர்களைக் கன்ஸின்ஸ் செய்யாமல் கலக்காமல், சம்பந்தப்பட்ட அமைச்சர்



என்னிடத்தில் சொல்லாமல், மூன்று அமைச்சர்கள் மூன்று முறை போட்ட உத்தரவுக்கு மாருக 11 அக்டோபர் 1971-ல் 2284 எண்ணுள்ள ஆணையை அந்த அதிகாரி இஷ்யூ செய்கிருர்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்த ஓ.ஜி.-வைப் பற்றித்தான் சொல்ல வருகிறேன். அதற்காகத்தான் இது வரையில் பேசுவதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். அந்த ஜி.ஓ. வில் தவறு இல்லை. அந்த அரசாணையைப் பார்க்கிறபோது, பஞ்சாயத்து யூனியன் கிராமங்களைப் பற்றி முழு விவரம் தெரிந்த பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், மாவட்ட நல அதிகாரியின் கீழ் வேலை செய்யும் தாசில்தார்,—மாவட்ட நல அதிகாரி புறக்கணிக்கப்பட வில்லை—இடங்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் தேர்ந்தெடுத்த கிராமங்களின் பட்டியலை மாவட்ட நல அதிகாரிக்கு அனுப்பி, மாவட்ட நல அதிகாரியின் ஒப்புதல் பெற்று, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு அனுப்ப வேண்டுமென்று இருக்கிறது. மாவட்ட நல அதிகாரி புறக்கணிக்கப்பட வில்லை. 20 சதவிகிதம் அரிசனங்கள் வாழும் பகுதி எங்காவது புறக்கணிக்கப்பட்டிருக்கிறதா? 20 சதவிகிதம் மக்கள் வாழும் பகுதியை மீறி, அவர்களுக்குக் கொடுக்காமல் வேறு பகுதி எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி எடுத்து இருந்தால் 20 சதவிகிதம் உள்ள பகுதிகள் எடுக்காமல் இருந்திருந்தால் அதைப் பற்றித் தெரிவித்தால் நன்ருக இருக்கும்.

DR. H. V. HANDE : Sir, on a point of order. The Hon. Chief Minister has stated just now that what he had done was in order. He stated that the Government Orders was issued. Whether a Government Order against the mandatory order of the three Ministers, can be issued and that is the question before the House......

MR. DEPUTY SPEAKER : This is not a point of order at tll. Any point of order raised should be in respect of the business before the House and not in respect of other thinks. So, there is no point of order. The hon. Member, Thirumathi Sathyavani Muthu can continue her speech.

DR. H. V. HANDE : Sir, a specific question regarding the issue of the order has been raised......

MR. DEPUTY SPEAKER : I have already given a ruling that there is no point of order as the point raised by the hon. Member does not relate to the business of House. The hon. Member, Thirumathi Satyavani Muthu can continue her speech.

**திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாறுபட்ட விதமாக செயலாளர் மாற்றவில்லை என்று கூறுகிறார். சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மூன்றுபேர் கையெழுத்துப்போட்டு இருக்கிறோம். என் வரையில் சொல்கிறேன், நான் முட்டாளாக இருக்கலாம். நான் முட்டாள் தனமான உத்தரவு போட்டு இருக்கலாம். ஆனால் அந்த உத்தரவு முதலமைச்சரால் ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. அந்த உத்தரவை மீறி எப்படி ஒரு செயலாளர் அவருக்கு இஷ்டமான முறையில் ஆணை பிறப்பிக்கலாம்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** உத்தரவின் நோக்கம் மாறுபட வில்லை. மாவட்ட நலத் துறை அதிகாரிகள் கலந்து கொள்ளப்பட வேண்டும் என்பது புறக்கணிக்கப்பட வில்லை. மாவட்ட நலத் துறை அதிகாரியே ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று எந்தெந்த பகுதி அரிசனங்களுக்கு ஒதுக்குவது என்று செய்வது ஏதுவான காரியம் அல்ல. ஆகவே தான், மாவட்ட நல அதிகாரியின் கீழ் பணியாற்றும் தாசில்தார், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் தேர்ந்தெடுத்த இடங்களை மாவட்ட நல அதிகாரியின் ஒப்புதலோடு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு அனுப்ப வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறது. இதனால் மாறான விளைவு ஏற்படவில்லை.

**திருமதி சத்தியவாணிமுத்து :** நான் கூறுவதெல்லாம் மாவட்ட நல அதிகாரி இருக்கத் தேவையில்லையே? அதற்கு வேறு பல பேர் ஒரு குழுவாக இருந்து எல்லா வேலைகளையும் செய்யலாமே? இதற்காகத் தனியாக ஒரு டிஸ்டிரிக்ட் வெல்பேர் ஆபிசர் அரிசன நலத்தைப் பார்ப்பதற்காக இருக்கிறார். அவருக்குத்தானே ஒவ்வொரு கிராமமும் தெரியும். அவர் பார்த்து எடுக்கிற முடிவு சரியானதாக இருக்காது, நலத் துறை அதிகாரி முடிவு எடுக்காமல் அதற்கு ஒரு குழு இருந்து எடுக்கலாம் என்றால், அதை முதல் அமைச்சரே வேறு மாதிரியாக மாற்றி, 'நீங்கள் சொல்வது சரியல்ல, நீங்கள் சொல்வதுபோல அரிசன நலத் துறை அதிகாரி



செய்ய முடியாது, எனவே வேறு மாதிரியாகச் செய்யலாம்' என்று சொல்லியிருக்கலாம். அல்லது அந்த அதிகாரியே முதல் திருத்திக் கொண்டிருக்கலாம். அந்தத் திருத்தத்தை முதல் அமைச்சர் அவர்களிடம் வந்து சொல்லியிருக்கலாம். அந்த அதிகாரி என்னிடம் வந்து சொல்லியிருக்கலாம். சம்பந்தப் பட்ட அமைச்சரிடம் சொல்லியிருக்கலாம். இப்படி அதிகாரிகள் அமைச்சரிடத்தில் வந்து அமைச்சர் போடுகிற உத்தரவு கூட சரியாக இல்லாமல் இருந்தால், அதைக் கொண்டு வந்து விவாதித்து மாற்றியிருக்கலாம். அமைச்சரும் அதை உணர்ந்து அமைச்சரிடம் சொல்லி, அவர் என்னைக் கூப்பிட்டு வைத்து 'நான் போட்ட உத்தரவு சரியான உத்தரவில்லை' என்று சொல்லித் திருத்தியிருந்தால் நியாயமானதாக இருந்திருக்கும். மூன்று முறை முதல் அமைச்சர் அவர்களே கையெழுத்துப்போட்ட பிறகு, அதற்குரிய உத்தரவை ஒத்துக்கொண்ட பிறகு முதல் அமைச்சர் அவர்கள் செய்தது சரிதானா?

நலத்துறை அதிகாரிதான் இதை முடிவு செய்ய வேண்டும். வேறு பல அதிகாரிகள் இருக்கிறார்கள் என்றால், குழு இருக்கிறது என்றால், கலெக்டர் இருக்கிறார் என்றால், தாசில்தார் இருக்கிறார் என்றால், பஞ்சாயத்து சேர்மன் இருக்கிறார் என்றால், அந்தக் குழுவில் இருப்பவர்களெல்லாம் மெஜாரிடி காஸ்டு, ஒன்றிந்துவாக இருந்துவிட்டால், நலத்துறை அதிகாரி மைனாரிடியாக இருப்பார். அவரும் சில நேரத்தில் காஸ்ட் ஒன்றிந்துவாக இருந்துவிட்டால் அரிசனங்களுக்காகக் காலனியைத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேலையை செய்ய முடியவில்லை என்ற பரந்த கருத்தோடு தான் இந்த உத்தரவை நான் போட்டேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் என்னையே கூப்பிட்டு 'நீங்கள் போட்ட உத்தரவு சரியில்லை, ஆனால், அதிகாரிகள் சொல்வது சரி' என்று கூறி இருப்பார்களேயானால் நான் ஒத்துக் கொண்டிருப்பேன். நான் வேதனைப்படுகிறேன். மூன்று முறை கையெழுத்துப் போட்டுவிட்டு, அவரே அவருடைய கையெழுத்தை மதிக்காமல் மாறாக வேறு ஒரு ஆர்டர் போட்டுவிட்டு, அதே நேரத்தில் என்னைக் கூப்பிட்டு அதைப்பற்றி என்னைக் கேட்க வில்லை. அவர் என்னைப் பதவி நீக்கம் செய்துவிட்டார். நான் கவலைப்படவில்லை. அப்போர்ப்பட்ட அமைச்சர் அவையில் இருப்பதைவிட நான் வெளியே வந்து பேசுவது நல்லது.

மோட்சத்தில் தோட்டி வேலை செய்வதைவிட நரகத்தில் ராஜா வேலை செய்வது நல்லது என்று கருதி அங்கிருந்து விலகி இந்தப் பொறுப்புக்கு வந்துவிட்டேன் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அரிசன நலத் துறை அமைச்சராக இருந்தவர் தோட்டி வேலையை இவ்வளவு இழிவாகக் கூறுவது உள்ளபடியே வேடிக்கையாக இருக்கிறது.

**திருமதி சத்தியவாணிமுத்து:** அரிசன நலத்துறை அமைச்சராக மட்டுமல்ல. விவசாயத் துறையிலே இருந்தேன், சுகாதாரத் துறையிலே இருந்தேன். முதல் அமைச்சர் அவர்கள் வகித்துவரும் செய்தித்துறைக்கும் அமைச்சராக இருந்தேன். எத்தனையோ துறைகளுக்கு அமைச்சராக இருந்தேன். நலத் துறை மட்டுமல்ல. எப்பொழுதும் அரிசனங்களை இழிவாகப் பேசுவது மாண்புமிகு முதல் அமைச்சருக்கு ஒரு வேடிக்கையான விளையாட்டு, நிலாச்சோறாக இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் அதிகாரிகள் சரியாக நடந்துகொள்ளவில்லை என்பதற்காக மூன்று குற்றச்சாட்டுகளை என்னிடமே 'நீங்கள் இவைகளை ஆராயலாம்' என்று அளித்தார். அந்த மூன்று குற்றச்சாட்டுகளில் ஒன்று தான் இப்பொழுது விவாதிக்கப்பட்டது. மாவட்ட நல அதிகாரிகள் யாரும் பரிசீலிக்கக் கூடாது என்கின்ற வகையிலே உத்தரவு போட்டதாகச் சொன்னார்கள். நான் அதற்கு விளக்கம் அளித்தேன். மாவட்ட நல அதிகாரிகள் ஒப்புதலோடுதான் இந்தக் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று தான் ஜி.ஓ. போடப்பட்டது என்று சொன்னேன்.

அவர்களுடைய இன்னொரு குற்றச்சாட்டு இது தான். ஏதோ செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 1969-70 இல் அரிசனக் காலனிகளில் குடிநீர் கிணறு வசதிக்காக ரூ. 2.10 இலட்சம் ஒதுக்கப்பட்டது. அது சரெண்டர் செய்யப்பட்டது என்கின்ற ஒரு குற்றச்சாட்டு. அது பற்றி எல்லா பத்திரிகைகளிலும் கூட வந்தது. அதையும் தலைமைச் செயலாளரின் மூலம் ஆராயச் சொன்னேன். அந்தக் குற்றச்சாட்டுக்கு எள்ளளவும் இடமில்லை என்பது அதன் மூலம் தெரியவருகிறது. நான் அதைப்



பற்றிய விளக்கத்தை இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 1969-70-ல் அரிசனக் காலனிகளில் குடிநீர் கிணறு வசதிக்காக ரூ. 2.10 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இந்த மாவட்டத்தில் அரிசனக் காலனிகளில் ஏற்கனவே குடிநீர் கிணறு வசதி இருப்பதால், அந்த நிதியை பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்திற்கு ஒதுக்கித் தரும்படி மாவட்ட ஆட்சித்தலைவர், அரிசன நல இலாகா இயக்குநரை கேட்டிருந்தார். இயக்குநருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் இதுபற்றி மூன்று மாதம் கடிதப் போக்குவரத்து நடந்து, பின்பு அந்தக் கோரிக்கையை அரசு 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் ஏற்றுக் கொண்டு ஆணை பிறப்பித்தது. இதற்குள் மாவட்ட ஆட்சித் தலைவர் ரூ. 35,000 அரசு ஆணையை எதிர் பார்த்துச் செலவு செய்தார். இதையும் அரசு அங்கீகரித்தது. செலவு செய்யாமல் இருந்த மீதிப் பணம் அடுத்த நிதி ஆண்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிக்காக அதே அரிசனக் காலனிகளில் செலவழிக்கப்பட்டுவிட்டது. இந்தச் செலவை அங்கீகரித்து ஆணை பிறப்பித்த கோப்புகளிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் 1969-70, நிதியாண்டில் செலவு செய்ய முடியாததற்குக் கூறியிருந்த காரணத்தையும் அரிசன நல இலாக்கா அமைச்சர் கையெழுத்திட்டு, ஒப்புக் கொண்டிருக்கிறார். எனவே பணம் செலவு செய்யப்படாமல் 'சரண்டர்' செய்யப்பட்டது என்பது தவறு என்று தலைமைச் செயலாளரின் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

மற்றொன்று, கடயநல்லூரில் அரிசனக் குடியிருப்புக்கு அருகில் ஒரு தினசரி மார்க்கெட் இருந்து வந்தது. இதை வேறு இடத்திற்கு அகற்ற வேண்டுமென்று சொன்னார், அகற்றவில்லை என்பது. தினசரி மார்க்கெட்டை அகற்றுவது என்பது உள்ளாட்சித் துறை இலாகாவைச் சேர்ந்ததாகும். அதுபற்றியும் நான் தலைமைச் செயலாளரிடம் விவரம் கேட்டேன். கடயநல்லூரில் அரிசனக் குடியிருப்புக்கு அருகில் ஒரு தினசரி மார்க்கெட் இருந்து வருகிறது. இதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று கடையநல்லூர் கவுன்சிலர் ஒருவர் அரசைக் கேட்டுக்கொண்டார். இதுபற்றி நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு அதிகாரம் மாவட்ட முனிசிபல் சட்டப்படி இடையாது. நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால், நல்வாழ்வுத் துறை சட்டத்தின் கீழ்

தான் எடுக்க முடியும். எனவே, மக்கள் நல்வாழ்வுத் துறை இயக்குநரை இதைப்பற்றி ஆராயும்படி அரசு கோரியிருந்தது. அதன்மேல் இந்தத் தினசரி சந்தையை அகற்றும்படி அவர் செய்த சிபாரிசின் மீது அரசு ஆணை பிறப்பித்தது. இந்த ஆணையைப் பெற்ற பின்பு கடயநல்லூர் நகர்மன்றம் இந்த விஷயத்தில் அரசு தங்களைக் கலந்துகொள்ளவில்லை என்றும், தங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என்றும், இந்தச் சந்தையை ஏற்கனவே மூன்றாண்டு காலத்திற்குக் குத்தகைக்கு விட்டு விட்டதாகவும், ஆகவே இதுபற்றி அரசு மறுபரிசீலனை செய்து ஓராண்டு காலம் தொடர்ந்து இந்தத் தினசரி சந்தை செயல்பட அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. அந்தக் கோரிக்கையை ஏற்று இன்னும் ஓராண்டு காலத்திற்கு இந்தச் சந்தைத் தொடர்ந்து நடக்க அரசு அனுமதித்துள்ளது. இதில் முக்கியமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நகர் மன்றம் ஏகமனதாக அரசுக்கு அனுப்பியுள்ள கோரிக்கையை அரசு நிராகரித்து விட முடியாது. ஓராண்டிற்குத் தற்காலிகமாகவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது உள்ளாட்சித் துறைக்குச் சம்பந்தப்பட்ட பிரச்சினை. அரிசன நலத் துறைக்குச் சம்பந்தப் பட்ட பிரச்சினை அல்ல. இதுபற்றி சாதகமான கருத்தோ, பாதக மான கருத்தோ அரிசன நலத் துறை அமைச்சரால் எந்தச் சந்தர்ப்பத்திலும் தெரிவிக்கப்படவில்லை என்பதும் தலைமைச் செயலாளர் அறிக்கையின் மூலம் நமக்குத் தெரிய வருகிறது.

நான் இன்னொன்றும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்பு கிறேன். அதிகாரிகள் எப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். நான் ஒரு விவரத்தை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அரிசனக் குடியிருப்புகளுக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு அரசு எடுத்துக் கொள்கின்ற தருவாயில் அரிசன நலத் துறை அமைச்சரால் ஸ்டே கொடுக்கப்பட்டு, இதனால் அரிசனங்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுப்பது மூன்று ஆண்டுகள் தாமதப்பட்டது. முதல் அமைச்சர் அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் போட்ட தடையை நீக்கி, நிலத்தை ஆர்ஜிதம் செய்ய உத்தரவிட்டார். மூன்று ஆண்டுக் காலம் அரிசனங்களுக்குத் தரப்பட வேண்டிய நிலத்தை தராமல் இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில் வீற்றிருக்



கிற முன்னாள் அரிசன நலத் துறை அமைச்சர் ஸ்டே கொடுத்த தினால், அங்கிருந்தவர்களெல்லாம் முறையிட்டதற்குப் பிறகு அந்த ஸ்டேயை நீக்கி அரிசனங்களுக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு நான் உத்தரவு போட்டிருக்கிறேன்.

1968-லிருந்து 1974 வரையில் அரிசனங்களுக்கு சிறு தொழில் செய்ய ஆறு ஆண்டுக் காலத்திற்கு 44 இலட்சம் ரூபாய் அரசு கொடுத்துள்ளது. அப்படிக் கொடுக்க வேண்டும் என்று கொடுத்த இவற்றில் 40 சதவிகிதம் சுமார் 20 இலட்சம் ரூபாய் சென்னை நகரிலேயே கொடுக்கப்பட்டுள்ளது. அதுவும் பெரும் பகுதி வட சென்னையிலேயே கொடுக்கப்பட்டது. 44 இலட்சம் ரூபாயில் 20 இலட்சம் ரூபாய் சென்னையில் அதுவும் வட சென்னையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. 19, 20 பேர்களுக்கு ஆளே தெரிய வில்லை, கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி விசாரணை நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விவரங்களெல்லாம் தலைமைச் செயலாளர் எனக்கு அளித்த விவரங்களின் சில பகுதிகள்.

(நண்பகல் 12-00)

**திருமதி சத்தியவாணிமுத்து :** முதலமைச்சரவர்கள் பாதையை வேறு பக்கம் திருப்புகிறார்கள். அதற்கும் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். முதலிலே என்னுடைய பேச்சைத் தொடருகிறேன்.

மூன்று முறை முதலமைச்சர் கையெழுத்திட்டப் பிறகும், செயலாளர் வேறான அறிக்கை ஒன்றை தந்துவிட்டிருக்கிறார். அவர் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டாமா? அதற்குப் பதிலாக அந்த அதிகாரிக்கு வக்காலத்து வாங்கி பேசு கிறார்கள். ஆகவே, இந்த அரசு வெளியேறிவிட வேண்டும்.

இரண்டாவதாக, செங்கற்பட்டு மாவட்டத்தில் குடி தண்ணீர் வசதி செய்வதற்காக 'ட்ரவுட் ரிலீஃப் ஃபண்டில்' இருந்து பணம் கொடுத்தோம். மொத்தம் 2.20,000 ரூபாய் கொடுத்தோம். 21—12—1969 வரையில் செலவு செய்யப்பட்டது 35,549 ரூபாய். மார்ச் மாதம் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. டிசம்பர் மாதம் வரை 35,549 ரூபாய்தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அது பற்றி எனக்கு அப்போது புகார் வந்தது. அந்தப் பணத்தை எங்கே செலவு செய்ய வேண்டுமென்று சொன்னோமோ அங்கே

செலவு செய்யாமல் ஜாதி இந்துக்கள் வசிக்கின்ற பகுதியில் ‘ஓவர் ஹெட் டாங்க்’ அமைத்திருக்கிறார்கள். நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனே கேட்டேன். அவர்கள் இப்போது வேறு புதிய ஒரு கோரிக்கை வந்திருக்கிறது என்று சொன்னார்கள். கிணறு வெட்டாமல் ஓவர் ஹெட் டாங்க் அமைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். எதற்காகப் பணம் ஒதுக்கிக் கொடுக்கிறோமோ அதற்காக அந்த பணத்தைச் செலவிட வேண்டும். அதை விட்டுவிட்டு, வேறு ஒரு திட்டத்திற்குச் செலவிட்டிருக்கிறோம் என்று 9 மாதங்களுக்குப் பிறகு தகவல் வருகிறது என்றால் என்ன பொருள்? கிணறு வெட்டுவதற்கு என்று பணம் ஒதுக்கினால் கிணறுதான் வெட்ட வேண்டும். அதை விட்டு விட்டு ஓவர் ஹெட் டாங்க் அமைத்தோம் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஏன் அப்படி வேறொரு திட்டத்திற்குச் செலவு செய்யப்பட்டது? ஏன் வேறு பக்கம் பணம் போனது என்று கேட்டால், ‘இல்லை, இல்லை’ பணம் இருக்கிறது, திருப்பிக் கொடுக்கிறோம், சரண்டர் செய்கிறோம் என்று சொன்னார்கள். ஏன் சரண்டர் செய்ய வேண்டும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சரண்டர் செய்யப்படவில்லை. செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அரிசன இலாக்கா எடுத்த முடிவை தாங்கள் கோப்பிலே கையெழுத்துப் போட்டு, அங்கீகாரம் செய்திருக்கிறீர்கள்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** அது எப்போது? 1969 மார்ச்சில் பணம் கொடுக்கப்பட்டது? 1969 நவம்பர் மாதம் உத்தரவு போடுகிறேன். அப்போதும் நிறைவேற்றப்படாவிட்டால்—1970 மார்ச் 26-ந் தேதி உத்தரவு போடுகிறேன். இன்னும் அந்தப் பணத்தை செலவழிக்கவில்லை என்றால் அந்த அதிகாரி மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? முதலமைச்சரும் கையெழுத்துப் போடுகிறார்; அப்போது நிதியமைச்சராக இருந்த மதியழகனும் கையெழுத்துப் போடுகிறார்; நானும் கையெழுத்துப் போடுகிறேன். 11 மாதங்கள் கழித்து பணத்தை சரண்டர் செய்கிறேன் என்று சொல்கிறார்கள் அதிகாரிகள். ஆனால் உண்மையில் அந்தப் பணம் வேறு திட்டத்திற்குச் செலவு செய்யப்பட்டது. நான் கேட்டபோது, கலெக்டர் பண்டில் இருந்து செலவு செய்யுங்கள் என்று முன்னாள் செயலாளர் ராயப்பா சொன்னார். ஆக கிணறு வெட்டுவதற்கு ஒதுக்கியப் பணத்தை ஓவர் ஹெட் டாங்க் கட்டுவதற்குப் பயன்படுத்தினார்கள்.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஏற்கெனவே அங்கே குடி தண்ணீர் கிணறு இருக்கும்போது பக்கத்தில் இன்னொரு கிணறு வெட்டத் தேவையில்லை; ஆகவே, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் தேக்கங்கள் அமைக்கலாம் என்பதில் என்ன தவறு? ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் அப்படிக் கருத்துத் தெரிவிப்பது தவறா?

**திருமதி சத்தியவாணிமுத்து:** முழுத் தகவலையும் தெரிந்துவிட்டு பேசினால் நல்லது. மழை பெய்கிறது, அதனால் கிணறு வெட்ட முடியவில்லை என்று சொல்கிறார்கள். பணம் ஒதுக்கீடு செய்து 4 மாதம் வரை என்ன செய்தார்கள்? அல்லது 6 மாதம் வரை என்ன செய்தார்கள்? அல்லது 7 மாதம் வரை என்ன செய்தார்கள்? 11 மாதம் கழித்து மழை பெய்கிறது என்று சொல்கிறார்கள். நவம்பர் மாதம் மழை பெய்யக்கூடிய காலம்தான். ‘ட்யூ டு ஹெவி ரெயின்’ என்று சொல்லியிருக்கிறார்கள். கோப்பைப் படித்துப் பாருங்கள் தெரியும். “நலத் திட்டங்களுக்கு ஒதுக்கும் நிதியை செலவழிக்காமல் வைத்திருப்பது குற்றமாகும். சம்பந்தப்பட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை வேறு திட்டங்களுக்குச் செலவழிப்பதாக புகார்கள் வருகின்றன. இதுவும் தடுக்கப்பட்டாக வேண்டும். இப்பொழுது இதனை ஏற்றுக் கொள்ளலாம்” என்ற குறிப்புடன் கையெழுத்திட்டிருக்கிறேன். அதற்குக் கீழே முன்னாள் நிதி அமைச்சரும், முதலமைச்சரும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். ஆனால் நடவடிக்கை எடுக்காமல் அதற்குத் துணை போகிறார்கள். இன்றைக்கு உரத்த குரலிலே முதலமைச்சர் சொல்கிறார். அதிகாரிகள் உத்தரவை மீறுகிறார்கள் என்றால் அது என்னுடைய உத்தரவு அல்ல; அவர்கள் என்னுடைய உத்தரவை மீறவில்லை; இந்த நாட்டின் நாயகனான உங்களுடைய உத்தரவை மீறியதாகும்.

மூன்றாவதாக, கடயநல்லூர் சம்பவம் பற்றிச் சொன்னார்கள். கடயநல்லூரில் டாக்டர் அம்பேத்கார் காலனி தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதி. அந்த இடத்தில் மார்க்கெட் இருக்கக் கூடாது என்று சொல்லி, என்னிடம் அந்தப் பகுதி மக்கள் மகஜர் கொடுத்தார்கள்; கலெக்டரிடம் மகஜர் கொடுத்தார்கள். சுகாதாரத் துறை பரிசீலித்தது. எல்லோரும் அங்கே அந்த மார்க்கெட் இருக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். சுகாதார இலாகா அதிகாரிகள் அந்த மார்க்கெட் இருக்கக் கூடாது என்று

6—6—1973-ல் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அமைச்சர்களும் அதை ஒத்துக் கொண்ட பின்னால் அதிகாரிகள் உத்தரவு ஜி.ஓ. போடுகிறார்கள். அது மீறப்பட்டிருக்கிறது என்றால் அந்த உத்தரவுக்கு என்ன மதிப்பு இருக்கிறது? உத்தரவு பிறப்பித்த பின்னால் கீழே இருக்கிற அதிகாரிகள் அதை மீறுகிறார்கள் என்றால் அதை இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டாமா? முதலமைச்சர் அதைக் கேட்க வேண்டாமா? என்ன காரணம் என்று கேட்க வேண்டாமா? இல்லை என்றால் ஒன்றைச் சொல்லி விடுங்கள். நாங்கள் ஒன்றைச் சொல்வோம், அதிகாரிகள் ஒன்றைச் செய்வார்கள், அவர்கள் வைத்ததுதான் சட்டம்; அதை நாங்கள் கேட்க மாட்டோம்; அரசாங்க ஆணையைப் பார்க்காதீர்கள் என்று சொல்லிவிட்டால் கேட்க நாதி இருக்காது. உங்கள் தர்பார் எதுவரை நடக்குமோ அதுவரை நடக்கட்டும். காலம் வரும்வரை தர்பார் பண்ணுங்கள்; அதற்குப்பின்னால் தானே இறங்கிப் போங்கள்.

6—6—1973-ல் அந்த மார்க்கெட் இருக்கக்கூடாது என்று சுகாதார இலாகா அதிகாரிகள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். திரு. சண்முகம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர் மனு கொடுத்தவர். அங்கே இருக்கிற மக்கள் அனைவரும் கையெழுத்திட்டு, எங்கள் பகுதியில் கடை இருக்க வேண்டாமென்று எழுதிக் கொடுத்த பிறகு, சுகாதாரக் கேடு வரும் என்று சுகாதார இலாகாவினர் தெரிவித்த பிறகு, முனிசிபாலிட்டியினர் 'ஆக்ஷன்' விடுகிறார்கள். இவ்வளவு நடந்த பிறகு முனிசிப்பாலிட்டியில் ரெசலூஷன் போடுகிறார்கள் என்றால் அரசாங்க ஆணைக்கு என்ன மதிப்பு இருக்கிறது? அரசாங்க ஆணைக்கு மதிப்பு இல்லை என்றால் அமைச்சர்களுக்கு மதிப்பு இல்லை என்று அதிகாரிகள் செய்கிறார்கள். அப்படியானால் உங்களுக்கு அதிகாரம் இருந்து என்ன பயன்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கடயநல்லூரிலிருந்து அதிகாரிகள் யாரும் உத்தரவு போடவில்லை. கடயம் நகராட்சி மன்றம் ஏற்கெனவே மூன்றாண்டுகளுக்குக் குத்தகை விட்டுவிட்டோம்; இரண்டாண்டு முடிந்துவிட்டது; இன்னும் ஓராண்டு இருக்கிறது; எங்களைக் கலந்துகொள்ளாமல் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது; ஆகவே, இந்த ஓராண்டு காலத்திற்கு கடை நடத்த அனுமதிக்க வேண்டுமென்று கேட்டார்களே அல்லாமல் வேறல்ல.



**திருமதி சத்தியவாணிமுத்து:** அமைச்சர்களைக் கலந்து கொள்ளாமல் அதிகாரிகள் எப்படி ஜி.ஓ. போட்டார்கள்? எல்லோரும் சேர்ந்து முடிவு செய்த பின்னால்தான், அமைச்சர்களின் உத்தரவின்பேரில்தான் ஜி.ஓ. போடுகிறார்கள். ஜி.ஓ. போட்ட பின்னால் அதைச் செயல்படுத்த வேண்டாமா? நீங்கள் ஒரு உத்தரவைப் போட்ட பிறகு, அதிகாரிகள் மற்றொன்றைச் செய்தால், மக்கள் எதை நம்புவார்கள்? அரசு ஆணையை நம்புவார்களா அல்லது அதிகாரிகள் சொல்வதை நம்புவார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒரு உத்தரவு போடப்பட்ட பிறகு, நகராட்சி மன்றம் கேட்டால் அதை மறுபரிசீலனை செய்வது தப்பா? இப்போது, திருச்சியில் ஒரு தெருவுக்கு சாஸ்திரி தெரு என்று ஜாதிப் பெயரை வைத்திருந்தார்கள். அரசாங்கம் ஜாதிப் பெயர்களைத் தெருவுக்கு வைத்திருப்பதை மாற்ற வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆனால் ஜி. டி. நாயுடு தெரு என்று ஒரு தெருவுக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள். நாயுடு என்பது ஜாதிப் பெயர். இதில் நாயுடு என்பதை எடுத்து விட்டால் ஜி. டி. தெரு என்று இருக்கும். ஜி. டி. தெரு என்றால் புரிந்து கொள்வது கஷ்டம். சில இடங்களில் இப்படிப்பட்ட பெயர்களுடன் ஜாதிப் பெயரும் இருந்தால்தான் பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்தார்கள். பிறகு இப்படிப்பட்ட குறிப்பிட்ட சில பெயர்களுடன் ஜாதிப் பெயரும் இருக்கலாம் என்று உத்தரவு போட்டோம். அதைப்போலவே, இதிலும் ஓராண்டு காலத்திற்கு அந்தக் குத்தகை நீடிக்கலாம் என்று உத்தரவு போட்டோம். அது தவறல்ல.

**திருமதி சத்தியவாணிமுத்து:** அந்தப் பகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் மார்க்கெட் வேண்டாமென்று சொல்கிறார்கள்; சுகாதார இலாக்கா அதை ஒத்துக்கொண்டது; சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒத்துக்கொண்டார்கள்; அதற்குப் பிறகு ஒரு முனிசிப்பாலிட்டி வேண்டாம் என்று சொல்கிறது என்றால் என்ன பொருள்? உத்தரவை மாற்ற வேண்டுமென்று சொல்கிறார்கள்; அரசு உத்தரவை மீறி இருக்கிறார்கள் என்றால் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அரிசன மக்களுக்காக இவ்வளவு வக்காலத்து வாங்கிப் பேசிக் கொண்டிருக்கிறீர்களே, ராசிபுரம் அரிசன மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து, வரதப்ப

கவுண்டர் என்பவர் மனுக் கொடுத்தார் என்பதற்காக அதை நிறுத்தினீர்களே. அந்த மனுவிலே என்ன எழுதினீர்கள்? I have gone through the file once again too clearly. Further proceedings may be withdrawn. என்று எழுதினீர்கள். இது அரிசன மக்களுக்குச் செய்த நன்மையா, துரோகமா?

**திருமதி சத்தியவாணிமுத்து :** அந்தக் கோப்பு முழுவதையும் படித்தால் நல்லது. அங்கே பாதியைப் படித்து, இங்கே பாதியைப் படித்து வாலும் இல்லாமல் தலையும் இல்லாமல் ஒரு முண்டத்தை மட்டும் படித்துவிட்டு, அதை ஒரு முண்டமாக்கிவிட்டு, என்னையும் ஒரு முண்டமாக்கிவிட வேண்டாம். யார் யார் அதிலே தலையிட்டிருக்கிறார்கள், எந்தச் சட்டமன்ற உறுப்பினர் வற்புறுத்த லினால் அப்படி எழுதப்பட்டிருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். இன்னும் சில புகார்கள் வந்திருக்கும். என்னுடைய குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்லாமல் என்னைத் திசை திருப்ப வேண்டாம்.

முருங்கைப்பள்ளம் என்ற ஒரு ஊர் ஆம்பூரில் இருக்கிறது. அங்கே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் வாழைத் தோட்டம் வைத்துவிட்டார்கள். அதை எடுக்க வேண்டுமென்று நான் உத்தரவு போடவில்லையா? நீங்கள் போட்ட உத்தரவை மாற்றலாம். நான் போட்ட உத்தரவு மாற்றக் கூடாது என்றால் இந்த ஆட்சியில் நாங்கள் எல்லாம் இருக்க முடியாது.

அடுத்ததாக, மற்றொரு முக்கியமான விஷயத்தையும் நான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அடிப்படையாக வைத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மத்திய அரசு எங்களுக்காகக் கொடுக்கிற—தாழ்த்தப்பட்ட மக்களுக்காக—மலைசாதியினர் நலத்துக்காக கொடுக்கப்படுகின்ற தொகை சம்பந்தமாக நான் இங்கே பலமுறை பேசியிருக்கிறேன், அதைப் பற்றியும் விளக்கமாக நான் இங்கே சொல்ல வேண்டும். இந்த அரசின் மீது நம்பிக்கையில்லை என்பதற்கு ஒரு சான்று—நான் அமைச்சராக இருந்தபோது 1971 மே மாதம் டெல்லிக்குச் சென்றிருந்தபோது மத்திய அரசு சோஷல் வெல்பேர் மினிஸ்டர் திரு. சித்தார்த்த சங்கர்ரே அவர்கள் என்னிடம் சொன்னார்கள். "நாங்கள் உங்களுக்குக் கொடுக்கிற பணத்தை—நான்காவது





ஐந்தாண்டுத் திட்டத்தில் இரண்டாண்டுக் காலம் ஆகியும் கூட இன்னும் நீங்கள் சரியாகச் செலவு செய்துகொள்ளவில்லையே—உங்களுக்காக ஒதுக்கிய பணத்தில் இன்னும் 6½ கோடி ரூபாய் செலவு செய்தாக வேண்டும். உங்களுக்காக 8½ கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் அதிலேயே இன்னும் 6½ கோடி செலவு செய்யாது மேலும் பணம் கேட்கிறீர்களே" என்றார். நான் உடனே அதிகாரிகளைக் கேட்டேன், அவர் ஏதோ அதிகப்படுத்திச் சொல்லியிருக்கிறார் என்றார்கள்.

பின்னாலே நான் சென்னை திரும்பியவுடன் கடிதம் வருகிறது, எங்களுக்காக ஒதுக்கிய பணத்தில் செலவழிக்கப்பட்டிருப்பது எவ்வளவு என்பதை பிட்டுப் பிட்டுக் காட்டியதோடு, இன்னும் செலவழிக்கப்படாமல் இருப்பது இவ்வளவு என்றும் எழுதியிருந்தார்கள். நான் அதனை நிதித்துறைக்கு அனுப்பி கணக்குக் கேட்கிறபோது அவர்கள் சொல்கிறார்கள். உங்களுக்கு என்று சொல்கிற பணம்.

It is not only for Scheduled Castes and Scheduled Tribes but it is also for Other Backward Classes. என்கிற ஒரு விவரத்தை இங்கேயிருக்கிற நிதித்துறை சொல்கிறது. மத்திய அரசில் இருக்கிற சோஷல் வெல்பார் மினிஸ்டர் என்ன சொல்கிறார். What we mean is only Scheduled Castes and Scheduled Tribes. என்கிறார்கள். திரு. சித்தார்த்த சங்கர் ரேயிடம் இருந்து வந்த கடிதத்திற்கு முதலமைச்சர் என்ன கடிதம் எழுதப் போவதாக—என்னிடம் காட்டினார்கள் . என்றால்

In addition to Scheduled Castes and Scheduled Tribes, 52 per cent of the total population of the State belonging to communities which have been declared as backward; the State Plan for welfare of backward classes will naturally have to include programmes for these backward classes also. Many of the programmes envisaged for backward classes relate pre-matric and post matric scholarships.

என்று கணக்கு காட்டுகிறார்கள். இதை அனுப்பினார்களா என்றால் இந்தக் கடிதத்தை அனுப்பவும் இல்லை. 69-70 ஷெட்யூல்ட் காஸ்ட்டுக்காக ஒதுக்கப்பட்டது 73 லட்சம், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் 10 லட்சம் பார்வார்டு க்ளாசுக்காக 17 லட்சம், 71-72-ல் ஷெட்யூல்ட் காஸ்ட்டுக்காக ஒதுக்கப்பட்டது 112 லட்சம்,

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 ஆகஸ்ட் 14

ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் 17 லட்சம், பாக்வார்டு க்ளாஸ் 114 லட்சம். 1971-72-ல் ஷெட்யூல்ட் காஸ்டு 149 லட்சம், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் 23 லட்சம், பாக்வார்டு க்ளாஸ் 152 லட்சம். இப்படி வரிசையாக எடுத்துப்பார்த்தால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை ஒதுக்கப்படவில்லை. பாக்வார்டு க்ளாசுக்கு அதிகமாக அந்தப் பணத்தில் இருந்து செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பதிலை எழுதிக் காட்டினார்களே தவிர, அதனை மத்திய அரசுக்கு அனுப்பவும் இல்லை. 22—1—1973-ல் மத்திய அரசிடம் இருந்து கடிதம் வருகிறது.

Letter. dated 21st July 1973 from Shri B. R. Srinivasan, Under-Secretary, Government of India, Department of Social Welfare " As emphasised by the earlier working groups, the recognised policy of the Central Government is that programmes for other backward classes should be financed by the State Government and should not return part of the plan programme. The expenditure incurred on this programme is not eligible for Central assistance.

இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்கள் மாநிலத்தில் 52 சதவிகிதம் பின்தங்கியவர்கள் இருக்கிறார்கள், நீங்கள் கொடுக்கிற தொகையை பின்தங்கியவர்களுக்கும் சேர்த்துச் செலவு செய்கிறோம் என்று பதில் கொடுத்த பிறகு மத்திய அரசிடம் இருந்து வந்த தாக்கீது எனக்கு வருகிறது.
This should not be spent for other communities but only for Scheduled Castes and Scheduled Tribes. ஆக, 1971-72, 1972-73, 1973-74-க்கு இந்த மூன்று ஆண்டு காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மத்திய அரசு ஒதுக்கிய தொகையில் ரூ. 647.51 லட்சம் ரூபாய் செலவு செய்தாக வேண்டும். அவர்கள் ஒதுக்கியிருக்கிற தொகை 850 லட்சம் ரூபாய்—இந்தக் கணக்கை நான் சொல்லவில்லை. மத்திய அரசு சொன்னது. ஒரு மகாநாட்டில் என்னை வைத்துக்கொண்டு இதனை சித்தார்த்த சங்கர் ரே சொல்கிறார். அங்கே திருமதி இந்திரா காந்தி அம்மையார் இருக்கிறார். 8½ கோடி ரூபாய் மத்திய சர்க்கார் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்றே ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தப் பணத்தை இவர்கள் செலவழிக்கவில்லை. இது அரசியல் சட்டத்திற்கு முரணானது இல்லையா?



1974 ஆகஸ்ட் 14]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மத்திய சர்க்கார் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று தரவில்லை. ஏற்கனவே இந்த மன்றத்தில் அம்மையார் அமைச்சராக இருந்தபோது இந்த விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். 1967-ல் இருந்து 1974 வரை அரிசன நலத்துறைக்காக செலவு செய்து வந்திருப்பதை எடுத்துப் பார்த்தாலேயே தெரியும். அரிசன நலத் துறைக்காக 1967-68-ல் ஒதுக்கப்பட்டது 4.60 கோடியாகும். 1973-74-ல் இது 9 கோடியாகியிருந்தது. 1974-75-க்கு 10-16 கோடி ஒதுக்கியிருக்கிறோம். அரிசன பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை 1967-68-ல் இரண்டு லட்சத்து 72 ஆயிரம் என்றால் 73-74-ல் 4 லட்சத்து 78 ஆயிரமாகியிருக்கிறது. அரிசன மாணவ விடுதிகளின் எண்ணிக்கை 1967-68-ல் 412 என்றால் 1973-74-ல் 544 ஆகியிருக்கிறது. விடுதிகளில் தங்கிப் படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கை 1967-68-ல் 27 ஆயிரம் என்றால் 1973-74-ல் 34 ஆயிரமாக உயர்ந்திருக்கிறது. இப்படி எல்லாம் வரவர உயர்ந்தே இருக்கிறதே தவிர எதுவும் குறையவில்லை.

அவர்களது குற்றச்சாட்டு—மாவட்ட நல அதிகாரிகளை எல்லாம் வயதானவர்களாகப் போட்டு விட்டார்கள். அதனால் அந்த வேலை நடைபெறவில்லை. எப்படி வயதானவர்களைப் போடலாம் என்பதாகும். நான் அதுபற்றி ரெவின்யூ அமைச்சர் சாதிக் பாட்சாவை விசாரித்தேன். The following Deputy Collectors may please be posted as District Welfare Officers. என்று 6—9—1973 தேதியிட்டு அம்மையார் அவர்கள் யார் யாரைப் போட வேண்டும். என்று பெயர் அனுப்பினார்களோ அவர்களைத்தான் போட்டதாகச் சொன்னார்கள். அம்மையார் அவர்கள் கொடுத்த பெயர்கள்—இராமநாதன் வயது 52, மனோன்மணி வயது 53, பூச்சியப்பன் வயது 54, தேவராசன் வயது 50. இவர்களைப் போடவேண்டுமென்று சொல்லிவிட்டு, வயதானவர்களைப் போட்டுவிட்டார்கள் என்று பத்திரிகையில் அறிக்கை கொடுப்பது, இங்கே அதைப் பற்றிப் பேசுவது எந்த அளவுக்குப் பொருத்தமாகும் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். அம்மையார் அவர்களையே கேட்டபோது நான்தான் சொன்னேன் என்கிறார்கள்.

நாங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செலவு செய்யவில்லை என்கிறார்கள். 1967-68-ல் டோடல் பட்ஜெட் ப்ரொவிஷனில் நம்முடைய மாநில அரசின் செலவு 460 லட்சம். இதில்

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஆகஸ்ட் 14

சென்ட்ரலி ஸ்பான்சர்டு ஸ்கீம் 35 லட்சம்தான்—இது 7 சதவிகிதம். 1973-74-ல் மாநில அளவில் அரிசனங்களுக்காக ஒதுக்கியிருப்பது 843.53 லட்சம். சென்ட்ரலி ஸ்பான்சர்டு ஸ்கீம் 60 லட்சம்தான்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** நான் கேட்பதெல்லாம் இந்தப் பதிலையே நீங்கள் சொல்லலாமே. இந்த மன்றத்தில் சொல்கிற பதிலை—மத்திய அரசினிடத்தில் சொல்வதற்கு என்ன? அவர்களிடம் இருந்து வந்த கடிதம் முழுவதையும் படித்துக் காண்பிக்க அவகாசம் இல்லாததால் நான் படிக்கவில்லை.

The programme for welfare of backward classes is implemented in Tamil Nadu as in the rest of the country and includes not only Scheduled Castes and Scheduled Tribes but also other backward sections of the population. In addition to Scheduled Castes and Scheduled Tribes, 52 per cent of the total population of the State belong to communities which have been declared as backward and do our Plan will have to include programmes for these backward classes also. என்று எழுதியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்தப் பதிலை திட்டக் குழுவினிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** அதைத்தான் சொல்கிறேன். திட்டக் குழு ஒத்துக்கொள்ளவில்லை. நீங்கள் கேட்கிறீர்கள். நீங்கள் என்.டி.சி.யில் சண்டை போடவேண்டும், பிரதமரிடம் சண்டை போடவேண்டும். ஷெட்யூல்ட் காஸ்ட்க்குக் கொடுக்கப்படுவதைப் போல், பாக்வார்ட் காஸ்ட்டுக்குக் கொடுக்க வேண்டும் என்கிற நீங்கள் அங்கே வாங்கவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்பொழுதே பின் தங்கிய மக்களை விட அரிசனங்களுக்கு தமிழ்நாட்டில் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறதா இல்லையா?

**திருமதி சத்தியவாணிமுத்து:** இல்லை, இல்லை, இல்லை. அந்தப் பதிலைத்தான் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் புள்ளிவிவரங்களைச் சொல்கிறேன், 1967-68-லே எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறேன்—ரூ. 475 இலட்சம். இப்பொழுது ரூ. 874 இலட்சம் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இல்லை இல்லை,



1974 ஆகஸ்ட் 14] [டாக்டர் மு. கருணாநிதி]

இல்லையென்று 3 தடவைகள் சொல்லிவிட்டால் அது குறைவாக ஆகிவிடாது. பின்தங்கிய மக்களுக்குச் செய்வதைவிட அரிசனங்களுக்கு அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**திருமதி சத்தியவாணிமுத்து:** இப்பொழுது 1974-ல் பின் தங்கியவர்களுக்கு ரூ. 6½ கோடி. 1967-லே தாழ்த்தப்பட்டவர்களுக்கு 4½ கோடி—1974-ல் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 6½ கோடி. 1967-லே ரூ. 90 லட்சம் அளிக்கப்பட்ட பின்தங்கியவர்களுக்கு இப்பொழுது, 1974-ம் ஆண்டு 6½ கோடி ஆகியிருக்கும்போது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 4½ கோடியிலிருந்து 6½ கோடியாகியிருக்கிறது . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மறுபடியும் தவறான புள்ளிவிவரங்களைச் சொல்லக்கூடாது. ரூ. 10½ கோடியை ரூ. 6½ கோடி என்று சொல்லாதீர்கள்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** எனக்குத் தெரியும். நான்தான் பட்ஜெட்டை நிறைவேற்றிவிட்டுப் போனேன். அப்படி இருந்தாலும் பின்தங்கியவர்களுக்கு ரூ. 90 இலட்சத்திலிருந்து இப்பொழுது ரூ. 6 கோடியாகச் செய்யலாம். தாழ்த்தப்பட்டவர்களுக்கு ரூ. 4 கோடியிலிருந்து இப்பொழுது ரூ. 10 கோடிதான் ஆகும். இது எப்படி ப்ரப்போர்ஷனேட்டாக இருக்கும்? . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தமிழ் நாட்டில் பின்தங்கிய மக்களுடைய ஜனத்தொகை ஏறத்தாழ 2 கோடிக்கு மேல். அரிசன மக்களுடைய ஜனத்தொகை ஏறத்தாழ 1 கோடி.

**திருமதி சத்தியவாணிமுத்து:** அதைச் சொல்லுங்கள் ஒத்துக் கொள்கிறேன். அதிகமாகக் கொடுத்துவிட்டோம் என்று ஏன் சொல்ல வேண்டும்? யார் அதிகமோ அது தெரியும். ஆக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிகமாக இல்லை. பின்தங்கிய மக்களுக்கு வேண்டாமென்று சொல்லவில்லை, அதை நான் வரவேற்கிறேன்.

நீங்கள் டெப்டி சேர்மேன், பிளானிங் கமிஷனுக்குச் சொன்னதற்கு 22—1—1973-ல் எம்ஃபசைஸ் பண்ணி, அங்கேயிருந்து கடிதம் வருகிறது. This is only for Scheduled Tribes and Scheduled Castes இது எதைக் காட்டுகிறது?

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 ஆகஸ்ட் 14

இந்திய அரசியல் சட்டம் 329-ஐ எடுத்துக்கொள்வோம். நீங்கள் போட்ட இராஜமன்னார் குழு, அந்தக் குழுவின் சிபாரிசின் மீது பாராளுமன்ற உறுப்பினர்கள் மதிப்பிற்குரிய மாறனும், செழியனும் கொண்டு வந்த தீர்மானத்தில் சொன்னபடி 329(2) பிரிவை எடுத்துவிட வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள். ஷெட்யூல்ட் டிரைப்ஸுக்கு ஒதுக்குகிற பணத்தை எந்த ஸ்டேட் செலவு செய்யவில்லையோ, அந்த ஸ்டேட் மீது அதிகாரத்தைச் செலுத்தலாம் என்பதுதான் 329(2) வது பிரிவு. எனவே, நீங்கள் இலாவகமாக அந்தச் சட்டப் பிரிவை எடுத்துவிட வேண்டுமென்று . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாநிலங்களுக்கு இருக்கிற அக்கறையைவிட அதிகமான அக்கறை இந்திய அரசுக்குத்தான் இருக்கும் என்று யாரும் கொள்ளத் தேவையில்லை. ஒவ்வொரு மாநிலத்திற்கும் அரிசனங்கள் மீது, ஷெட்யூல்ட் வகுப்பினர் மீது அக்கறை உண்டு. மாநிலங்களுக்கு அரிசனங்கள் மீது அக்கறை இல்லையென்று கூறி, ஜனாதிபதி தன் கையிலே மாநிலங்களது அதிகாரத்தை எடுத்துவிட யாரும் அனுமதிக்க முடியாது. அந்தத் தீர்மானத்தில், மாநில சுயாட்சித் தீர்மானத்தில் அம்மையார் அவர்களும் ஆதரித்துக் கையெழுத்திட்டிருக்கிறார்கள் . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மேலெழுந்தவாரியாக அரிசனங்கள் மீது ஏதோ மாநில அரசாங்கத்திற்குத்தான் அக்கறை இருக்கிறது, மத்திய அரசாங்கத்திற்கு அக்கறையில்லை யென்று சொல்வது முற்றிலும் புறம்பானது, நாடு ஒத்துக் கொள்ளாது. நாட்டின் பல பாகங்களிலே இப்படிப்பட்ட தவறுகள் நடக்கும் என்றுதான் அந்த ஷரத்தை மத்திய அரசு வைத்திருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மத்திய அரசுக்கு அக்கறை இல்லையென்று சொல்லவில்லை. நான் சொல்வது, மத்திய அரசைப் போலவே மாநில அரசுக்கும் அக்கறை இருக்கிறது என்று சொல்கிறேன்.



1974 ஆகஸ்ட் 14]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அம்மையார் அவர்கள் இதுவரை 50 நிமிடங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் எவ்வளவு நேரம் அவர்களுக்குத் தேவையென்று தெரிவிப்பார்களா ?

**திருமதி சத்தியவாணிமுத்து:** அந்த 50 நிமிடத்தில், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 30 நிமிடங்கள் எடுத்துக் கொண்டார்கள். எனவே, இன்னும் அதிக நேரம் கொடுத்தால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 15 நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** மத்திய அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று சில பாதுகாப்புகள் கொடுத்திருக்கிறது. டிராக்டிவ் பிரின்சிபில்ஸ் 46-ன்படி, தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சில சலுகைகள் தரவேண்டுமென்று சட்டம் இருக்கிறது. அதை நிறைவேற்றுகிறோம். அந்தச் சட்டத்தை மீறுகிற வகையில் மாநில அரசாங்கம் ஒதுக்குகிற பணத்தைத் தாழ்த்தப்பட்ட அல்லது மலைச்சாதியினருக்குச் செலவு செய்யவில்லை என்று சொன்னால் ஜனாதிபதி தலையிட்டு, அந்த அரசைக் கவிழ்க்கவோ, அல்லது கலைக்கவோ அதிகாரம் பெற்றிருக்கிறார். நானும் உங்களோடு, இரண்டு நாள் நோய்வாய்ப்பட்டிருந்தாலும், இரவு 12 மணி வரையிலிருந்து, அதை எடுக்காதீர்கள் என்று வாதாடினேன். ஆனால், பின்னர் அதை ஒத்துக்கொண்டேன் வேறு வழியில்லாமல், அங்கே இருந்த காரணத்தால், அரசுக்காக நாம் அல்ல. மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கத்தான் அரசு இருக்கிறது. மக்களைக் காப்பாற்றித்தான் நான் ஆள வந்தேனே தவிர, அரசைக் காப்பாற்ற நான் வரவில்லை. அன்று டாக்டர் அம்பேத்கார் அவர்களால் உருவாக்கப்பட்ட சட்டப்படி, அரசியலமைப்புச் சட்டப்படி எங்களது உரிமைகள் பாதுகாக்கப் படவேண்டும். அவை தூக்கி எறியப்பட்டு, அதிகாரிகள் தங்கள் இஷ்டம்போல் ஜி.ஓ. போட்டு, அதற்கு அரசு வக்காலத்து வாங்கு கிறது, வாங்குகிறார்கள் என்றால், தாழ்த்தப்பட்ட மக்கள் நிச்சய மாக இந்த அரசுமீது நம்பிக்கை வைக்கமாட்டார்கள்.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 ஆகஸ்ட் 14

ஒருசில சம்பவங்களை வேண்டுமானால் உங்களுக்குச் சொல்கிறேன். என்னுடைய வாதத்திற்குப் பக்கபலமாக எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். இன்றைக்கு தாழ்த்தப் பட்ட சமுதாயம் அவர்களை வாழ்த்தாது, வாழ்த்தாது அன்று, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் எதற்காகப் போராடினார்களோ, அவர் எழுதிவைத்த இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள உரிமைகளுக்காகத்தான் நான் போராடினேன். அதனால் ஏற்பட்ட விளைவுதான் இது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 16 சத விகிதம் வாய்ப்பு தரவேண்டுமென்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தது. அந்த 16 சத விகிதத்தைப் பாதுகாக்க ஒரு ஹைலெவல் கமிட்டி போடப்பட்டது. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைவர். நான் அதன் செயலாளர். நானும் 7 ஆண்டுகளாக அமைச்சராக இருந்தேனே தவிர, ஒரு நாளும் அது கூடவில்லை. கூட்ட வேண்டும், கூட்ட வேண்டுமென்று கேட்டேன். முதலமைச்சர் ஒத்துக்கொள்ளவில்லை. பாக்வார்ட் கிளாசஸ் தனியாக மாறிய பிறகு, 16 சத விகிதம் என்பது 18 சத விகிதம் ஆக்கப்பட்டது. ஆனால், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 25 சத விகிதமாக இருந்தது 31 சத விகிதம் ஆகியது. இதன் விளைவாக, பின்தங்கிய மக்களுக்கு 49 சத விகிதமாக ஆகிவிட்டது. 16 சத விகிதத்தில் ப்ரமோஷன் கொடுப்பதற்கு அவர்களுக்கு இரண்டு ஆண்டு காலம் லாப்சிங் பீரியட் இருந்தது. ஒரு இலாகாவிலே ஒருவர் கிடைக்கவில்லையென்றால், அடுத்த ஆண்டு வருகிறாரா என்று பார்ப்போம், அதற்கு அடுத்த ஆண்டு பார்ப்போம். எப்படியாவது பார்த்தாக வேண்டுமென்று, யாரையெல்லாம் வசைபாடிக் கொண்டிருந்தோமோ, அந்தக் காங்கிரஸ் ஆட்சியில் இரண்டு ஆண்டுகாலம் இடைவெளி விட்டார்கள். ஆனால், நீங்கள் வந்தபிறகு, 16-ஐ 18 ஆக 25-ஐ, 31 ஆக ஆக்கிவிட்டு, 49-க்கு மேலே கொடுக்கக்கூடாது என்று சட்டத்தைக் கொண்டுவந்து, இரண்டு வருஷம் லாப்சிங் பீரியட் கூடாது என்று சொன்னீர்கள். இரண்டு ஆண்டு காலம் லாப்சிங் பீரியட் வைக்கலாமென்று சொன்னால், தாழ்த்தப்பட்ட இந்தச் சமுதாயத்தினருக்கு ப்ரமோஷன் கிடைக்கவில்லையென்றால், ஒன்று சீனியாரிட்டியை ரிலாக்ஸ் பண்ணுங்கள் அல்லது ஏஜை ரிலாக்ஸ் பண்ணுங்கள், குவாலிபிகேஷனை ரிலாக்ஸ் பண்ணுங்கள். ஒன்று தாழ்த்தப்பட்டவன்,



1974 ஆகஸ்ட் 14] [திருமதி சத்தியவாணிமுத்து]

ஒன்று பிற்படுத்தப்பட்டவன், ஒன்று முற்போக்கு இனத்தவன். எனவே, இரண்டு ஆண்டு கமிட்டியின் சிபார்சு மீது நீங்கள் சட்டம் தயாரித்துக் கொடுங்கள் என்று கேட்டேன். ஆனால், அமைச்சரவையிலே 19—2—1972-லே அது ஒத்துக்கொள்ளாமல் நிராகரிக்கப்பட்டது.

பதினெட்டு சத விகிதம் அரசுக் கல்லூரிகளில் இடம் ஒதுக்கியிருக்கிறோம். அரசாங்கக் கடனைத் தருகின்ற டிட்கோ நிறுவனம்—தனியார் நடத்துகிற கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சத விகிதம் இடம் கொடுப்பதுபோல்—அரசாங்கம் கடன் கொடுக்கிற நிறுவனங்களில் 18 சத விகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரிசர்வேஷன் ஒதுக்குங்கள் என்று கேட்டேன். அதற்கு முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை.

It is a dangerous suggestion என்றார்கள். அவன் எப்படியோ கடன் போட்டு நடத்துகிறான். அதில் போய் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்குவதா? ஏன் ஒதுக்குவது? என்றெல்லாம் கூறப்பட்டது. தனிப்பட்டவர்கள் கல்லூரி ரிசர்வேஷனுக்குச் சொல்லும்போது அரசாங்கம் கடன் கொடுக்கிற நிறுவனங்களில், அதுவும் எலிஜிபிள் கான்டிடேட்சுக்கு கொடுக்கச் சொல்கிறோம். எங்கோ தெருவிலே போகிறவனுக்கா வேலை கேட்கிறோம். படித்து, எலிஜிபிளாக இருப்பவனுக்கு 18 சத விகிதம் வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடாதா? அதைக் கொண்டு வந்தவுடனே காபினெட்டிலே எதையுமே சொல்லவில்லையென்று சொன்னார்கள்; கூடாது என்றார்கள். ஒத்துக்கொண்டோம், வெளியே வந்து விட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உங்களுக்கு மனம் புண்பட்டது அப்பொழுதெல்லாம் இல்லை. உங்களுக்கு எப்பொழுது மனம் புண்பட்டது என்பது எங்களுக்குத் தெரியும். எப்பொழுது என்று சொல்கிறேன். நீங்கள் அப்பொழுது மனம் புண்பட்டிருந்தால் அப்பொழுதே விலகி இருக்கலாம். அப்பொழுதெல்லாம் விலகவில்லை. ஓர் கடத்திற்கு ரூ. 50,000 விடுதிக்கு வேண்டுமென்று கேட்டீர்கள். அது இல்லை என்றவுடன் நீங்கள் இங்கே பேசினீர்கள். நீங்கள் கேட்டதற்கு அந்தப் ப்ரொவிஷனை கிடையாது என்று உத்தரவு போடப்பட்டது.

19 ஆம் தேதி. 21 ஆம் தேதி அதிகாரிகளைக் கண்டித்து இங்கே பேசினீர்கள். நீங்கள் மனம் புண்பட ஆரம்பமானது இதிலே தானே தவிர வேறல்ல.

1965-லே இப்படியிருந்தது, 1967-லே அப்படியிருந்தது, 1971-லே அப்படியிருந்தது என்றெல்லாம் சொல்கிறீர்கள். அப்பொழுதே அரிசனங்களுக்காகப் போராடி வெளியேறி இருக்கலாம். அப்பொழுதெல்லாம் வெளியேறவில்லை. ஓரகடத்திற்கு ரூ. 50,000 கேட்டு, முதலமைச்சர்—நான்—முடியாது என்று அறிவித்த பிறகு 21 ஆம் தேதி நீங்கள் சட்ட சபையிலே பேசினீர்கள். அதுதான் நீங்கள் வெளியேறியிதற்கு அத்தியாவசியமான காரணம்.

(பிற்பகல் 12-30)

**திருமதி சத்தியவாணிமுத்து:** இதை முதலமைச்சர் பேசுகிறார் என்றால் நிச்சயமாக பொது மக்கள் அதைக் கேட்டுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஓரகடத்திலே நான் வீடு கட்டிக்கொள்ளவா கேட்டேன்? என் மகனுக்கு வீடு கட்டிக்கொள்ளவா கேட்டேன்? என் மகளுக்கு வீடு கட்டிக்கொள்ளவா கேட்டேன்? எந்த பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று சொல்கிறீர்களோ அந்த அறிஞர் அண்ணாவின் பெயரில் ஒரு அனாதை இல்லம் இந்த தமிழகத்திலே இருக்கிறதா? அறிஞர் அண்ணாவின் பெயரைச் சொல்லி ஆட்சிக்கு வந்த நீங்கள் அவருடைய பெயராலே ஒரு இல்லத்தை—நீங்கள் ஹாண்டிகாப்டு, பின்தங்கியவர்கள், ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், அனாதைகள், கண் இழந்தவர்கள் என்றெல்லாம் சொன்னீர்களே—அதிலே ஏதாவது ஒன்றிற்கு அண்ணா அவர்களின் பெயர் இருக்கிறதா சொல்லுங்கள் பார்க்கலாம். வேறு எங்காவது இருக்கிறதா? ஓரகடத்தில் அதற்குத்தானே ரூ. 50 ஆயிரம் கேட்டேன். அது உங்களால் ஒத்துக்கொள்ளப்பட்ட ரிஜிஸ்டர்டு சொசைடி, உங்கள் ஆட்சியிலே உள்ள அதிகாரிகள் பார்த்துவிட்டு நேர்மையானது என்று சொன்னது, அதற்குத்தானே நான் கேட்டேன், வேறு யாருக்காகக் கேட்டேன்? காங்கிரஸ்காரர்கள் நடத்துகின்ற நிறுவனத்திற்குக் கொடுக்கவில்லையா? ஊர் பேர் தெரியாத



எத்தனையோ பேர்களுக்கு அப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு கட்டடம் கட்ட உதவி கொடுக்கவில்லையா? அதற்காகத்தானே நான் கேட்டேன். நான் அமைச்சராக ஏழாண்டுக் காலம் இருந்திருக்கிறேன், ஊர் பேர் தெரியாத எத்தனையோ பேர்கள் வந்து கேட்டார்கள், கொடுக்கவில்லையா? ஆனால் அண்ணாவின் பெயரால் ஓரகடத்திலே கட்டுவதற்கு வேண்டுமென்று கேட்டால் இல்லை என்று சொன்னீர்கள். நான் சின்னஞ்சிறு வயது முதல் முதலமைச்சர் அவர்களோடு வளர்ந்தவள், அரசியலைத் தெரிந்தவள், ஏன் நீங்கள் இந்த இக்கட்டான நிலைமையில் தள்ளப்பட்டிருக்கிறீர்கள், இந்த விவாதத்திலே கலந்துகொண்டு இவ்வளவு கேவலமான வாதத்தைக் கூறுகிறீர்கள்? சமூக நலத் துறைக்கு நான் பொறுப்பேற்றிருந்தபோது ஊர் பேர் தெரியாதவர்கள் எல்லாம் என்னிடம் வருவார்கள், அவர்களுக்குக் கொடுக்கவில்லையா, காங்கிரஸ்காரர்களுக்குக் கொடுத்தோம், அப்போது ஏன் ஒத்துக்கொண்டீர்கள். யார் யாருக்கு எல்லாம் கொடுத்திருக்கிறீர்கள், ஏதோ நான் . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஏதோ காங்கிரஸ்காரர்களுக்குக் கொடுத்தோம் என்று சொன்னார்கள். யார், யாருக்குக் கொடுத்தார்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** காங்கிரஸ்காரர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று ஏதாவது ரகசியமான உத்திரவு இருக்கிறதா? மக்களுக்குச் செய்ய வேண்டும் என்பதுதான் முக்கியமே தவிர, கட்சிக்குச் செய்தோம் என்பது அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோருக்கும் சேர்த்துத்தான் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள், அதை வைத்துக்கொண்டு கட்சி என்று பேச வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** காங்கிரஸ்காரர்களுக்கு முறைதவறி, கொடுக்கத்தகாத வகையில் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று சொல்ல வேண்டும்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** கட்சியல்ல, கட்சியினரால் நடத்தப்படும் ஸ்தாபனங்கள் என்றுதான் சொன்னேன், ஸ்தாபன காங்கிரஸ் அல்ல.

[1974 ஆகஸ்ட் 14

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காங்கிரஸ்காரர்களுக்கு கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். அதனுடைய விவரங்களை பழைய அமைச்சர் அவர்கள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், அம்மையார் அவர்கள் ஒரு முக்கியமான கருத்தை, பிரச்னையை தமிழ்நாட்டு மக்களுடைய பிரச்னையை,—யாராவது ஓஹோ என்று சொல்வது, நான் பேசிக்கொண்டிருக்கின்றபோது யார் கத்துவது . . . (கூச்சல், குழப்பம்) . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யார் சொல்லி யிருந்தாலும் நான் கண்டிக்கிறேன், நீங்கள் கண்டிக்கக்கூடாது. நீங்களே கண்டித்தால் அவையினுடைய ஒழுங்கு மீறப்பட்டுவிடும். என்ன பாயின்ட் ஆப் ஆர்டர், அதைச் சொல்லுங்கள்.

(ஒரே நேரத்தில் திரு. கோவை செழியன், திரு. எஸ். முருகையன் எழுந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.)

**திரு. எஸ். முருகையன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன, அதைச் சொன்னால் பரவாயில்லை . . .

**திரு. கோவை செழியன்:** எனக்குத் தெரியும், சொல்கிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோவை செழியன் பேசுவது சரியல்ல, உட்காருங்கள் . . .

(திரு. மு. வேதாசலம், திரு. மே. சி. தூயமணி, திரு. க. மு. இராசகோபால், திரு. ஈரோடு சின்னசாமி ஆகியோர் எழுந்து நின்றனர்.)

**திரு. கோவை செழியன்:** நான் பேசும்பொழுது. . . (கூச்சல், குழப்பம்) . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேதாசலம் உட்காருங்கள், திரு. தூயமணி உட்காருங்கள், திரு. சின்னசாமி உட்காருங்கள், திரு. கோவை செழியன் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதைச் சொல்லட்டும். இசை திருப்பிப்



1974 ஆகஸ்ட் 14]

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்]

போக வேண்டியதில்லை. திரு. கோவை செழியன் (திரு. கோவை செழியன் எழவில்லை) அம்மையார் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** எனக்காக நான் கேட்கவில்லை. ஒரு பொது நிறுவனத்திற்காகத்தான் கேட்டேன். பல தன்மைகளைச் செய்ய இருக்கிற நிறுவனம், கட்டட வேலைக்காகக் கேட்டேன். கொடுக்கவில்லை. இதை வைத்து முதலமைச்சர் அவர்கள் சொல்வது சரியான வாதம் அல்ல. கான்ஸ்டிட்யூஷனில் 335 ஆர்டிகிள்படி அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன.

The claims of the members of the Scheduled Castes ond Scheduled Tribes should be taken into consideratidn consistently with the maintenance of efficiency of administration in the making of appointments to services and posts in connection with the affairs of the Union or of State.

என்று இருக்கிறது. எனவே ஒரு கன்சிஸ்டன்சிட் மெயின்டெய்ன் ஆகி இருக்கிறதா என்று பார்ப்பதற்கு நான் ஒரு உத்திரவைப் போட்டேன். டிட்கோ, சிட்கோ போன்ற பல நிறுவனங்கள் இருக்கின்றன, அதிலே அரிசன நலத் துறை இயக்குநரும் போய் உட்காரலாம், Handloom Board, Textile Corporation, Steel Plant, Electricity Board இவைகள் எல்லாம் இருக்கின்றன. இவற்றில் அரிசன நலத் துறை இயக்குநரும் இடம்பெற வேண்டும் என்று உத்திரவு போட்டேன். கன்சிஸ்டன்சி இருக்கிறதா, குவாலிபிகேஷன் இருக்கிறதா, ஸ்டாண்டர்டு இருக்கிறதா என்று பார்ப்பதற்கு—தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு கிடையாது என்று மறுக்கிறார்கள். அவர்களுக்காக வாதாட நலத் துறை இயக்குநர் இருந்தால் நல்லது என்று சொன்னேன். நான் முட்டாள்தனமாக உத்திரவு போட்டிருக்கலாம். ஆனால் என்ன செய்யவேண்டும் முதலமைச்சர் அவர்கள்? காபினட்டிலே வைத்து டிஸ்கஸ் பண்ணியிருக்க வேண்டும். இல்லை, என்னிடத்திலே சொல்லியிருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் டிபார்ட்மெண்ட்களுக்கு எல்லாம் ஊர்வலம் போகிறது. அதை

யார் யார் எதிர்த்தார்கள் என்றால், புட் செக்ரட்டரி, ஆர்.டி.எல்.ஏ. செக்ரட்டரி, அக்ரிகல்சர் செக்கரட்டரி, ஹோம் செக்ரட்டரி, டிரான்ஸ்போர்ட் செக்ரட்டரி, டூரிசம் டிபார்ட்மென்ட் செக்கரட்டரி, ரெவின்யூ, இண்டஸ்ட்ரீஸ் செக்கரட்டரி ஆகியோர் எல்லாம் எதிர்த்தாலும், ஹவுசிங் செக்ரட்டரி, சமீபத்திலே மறைந்த என் இரத்தம் போன்ற திரு. சுப்பையா அவர்கள் ஆதரித்தார்கள், அவருக்குத் துணையாக பி.டபிள்யு.டி. செக்ரட்டரி பத்மநாபன் அவர்கள் இருந்தார்கள். ஆனால், சீப் செக்ரட்டரி அவர்கள், எல்லோரும் எதிர்க்கிறார்கள், ஆகவே நானும் எதிர்க்கிறேன் என்றார்கள். நான் துடித்துப்போய் முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்கிறேன், ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு, ஸ்டேட் ஹவுசிங் போர்ட் இவற்றில் எல்லாம் அரிசன நலத் துறை இயக்குநர் இடம் பெற்றிருக்கிறார்கள். இவற்றிலேயும் உட்கார்ந்தால் என்ன என்று கேட்டேன். அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை, எல்லோரும் ஒத்துக்கொள்ளவில்லை, நானும் ஒத்துக்கொள்ளவில்லை என்று கையெழுத்துப் போட்டு விட்டார்கள். நான் வேறு எங்கே போவது? யாரிடத்திலே மன்றாடுவது? வேறு வழியில்லாமல் நானும் ஒப்புக்கொண்டேன். எப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு இந்த ஆட்சியிலே ஏற்படும் என்று நான் நினைக்க முடியும்? இவைகளைத்தான் நான் போராடிக் கேட்டது, இவைகளினால்தான் என்மீது அவர்களுக்கு காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டது.

ஓரகடத்திற்கு 50,000 ரூபாய் என்பது பற்றிச் சொன்னார்கள். இதை ஏன் கொடுக்கக்கூடாது? அது அல்ல காரணம், ஒவ்வொரு திட்டத்தையும் நான் கொண்டுவரும்பொழுது அமைச்சரவையிலேயிருந்து அதை நீக்கி விடுகிறார்கள்.

அரிஜன வெல்ஃபேர் இலக்காவிலே நாங்கள் கூடை முடைதல், பாய் பின்னுதல் போன்றவற்றைச் செய்கிறோம். நாங்கள் செய்யும் அந்தச் சாமான்களை மற்ற இலாக்காக்களிலிருந்து விற்பனைக்கு எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறோம். அமைச்சர் மாதவன் அவர்கள்கூடச் சொன்னார்கள், சீனியாரிட்டி ஜெயில் டிபார்ட்மெண்ட், அதற்கடுத்தபடியாகத்தான் இன்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மென்ட் என்று. இப்படி ஜெயில் டிபார்ட்மெண்டிலிருந்தும், இன்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டிலிருந்தும் சாமான்களை மற்ற இலாக்காக்கள் வாங்கினால் ஏழை





அரிசன நல இலாக்காவிலே செய்யப்படும் சாமான்களை யார் வாங்குவது? வேறு யாரும்கூட வாங்க வேண்டாம், எங்கள் இலாக்காவிலேயே நடக்கும் இல்லங்கள், விடுதிகள் இருக்கின்றன, அவைகளுக்கு பாய் வேண்டும், அதற்கு நாங்கள் முடையும் அந்தப் பாய்களையே வாங்கிக்கொள்கிறோம், எங்கள் பள்ளிக்கூடங்களுக்கு மேசை நாற்காலிகள் வேண்டும், அவைகளையும் நாங்கள் இங்கிருந்து வாங்கிக்கொள்கிறோம் என்று கேட்டேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அம்மையார் அவர்கள் உணர்ச்சிவயப்பட்டு ஜாதியின்மேல் இந்த அரசாங்கத்திற்கு எதிர்ப்பு இருப்பதைப்போல் சொல்லி வருகிறார்கள். அது அந்தச் சமுதாயத்திற்கு நல்லதல்ல. இப்பொழுது அவர்கள் சொன்ன பிரச்னை நாமே சிந்திக்கக் கூடிய ஒன்றுதான். சில அமைப்புகளை அரசாங்கமே தன்னுடைய சொந்தப் பணத்தைப் போட்டு நடத்துகிறது. சில கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு அரசாங்கம் உதவி செய்கிறது. இதில் எந்த அமைப்புக்கு முதலிடம் கொடுப்பது என்று முடிவெடுக்கும் நேரத்தில் அரசாங்கமே சொந்தப் பணத்தைப் போட்டு நடத்தும் அமைப்புகளில் செய்யப்படும் உற்பத்தியில் அரசாங்கத்தின் தேவைக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். அடுத்தபடியாக கடன் கொடுத்து அரசாங்கம் உதவுகின்ற ஸ்தாபனங்களுக்கு, அரிஜன் கோவாப்பரேட்டிவ் சொசைட்டியோ அல்லது வேறு கோவாப்பரேட்டிவ் சொசைட்டியோ உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு இடம் கொடுக்க வேண்டும், அதற்கு இரண்டாவது ப்ரிஃபரென்ஸ் கொடுக்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. அதில் ஒன்றும் பிரச்னை இல்லை. அரசாங்கத்தின் பணம் போட்டு உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்பதே தவிர, இதிலே ஜாதியைப் புகுத்துவது நல்லதல்ல.

**திருமதி சத்தியவாணிமுத்து:** நான் ஜாதியைப் புகுத்தவில்லை. எதற்கும் அரசாங்கப் பணத்தைத்தான் போடுகிறோம். நலத் துறையில் செய்யப்படும் இதற்கும் அரசாங்கப் பணம்தான்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நலத் துறை அல்ல, நலத் துறையின் கீழுள்ள கோவாப்பரேட்டிவ் சொசைடிகளுக்கு அரசாங்கம் கொடுத்து உதவுகிறது. ஜெயில் டிபார்ட்மெண்ட் போல் இன்னும் மற்ற டிபார்ட்மெண்ட்களில் அரசாங்கமே நேரடியாகப் பணம் போட்டு உற்பத்தி செய்கிறது.

**திருமதி சத்தியவாணிமுத்து :** நான் என்ன சொன்னேன்? வேறு இலாக்காக்களுக்கு வாங்கிக்கொள்ளாவிட்டாலும் எங்கள் இலாக்காவிலே வாங்கிக்கொள்வதற்கு, நலத் துறை நடத்தும் பள்ளி, விடுதி ஆகியவைகளுக்கு பாய் வாங்குகிறோம், மரச் சாமான்களை வாங்குகிறோம் அதையாவது வாங்கிக் கொள்கிறோம் என்று சொன்னால் அதைக்கூட ஒப்புக்கொள்ளவில்லை. அப்படியானால் அரிசன காட்டேஜ்களில் செய்யப்படும் இந்தச் சாமான்கள் எங்கே விலை போவது? இப்படிச் செய்துவிட்டு கடைசியில் லாபம் இல்லை என்று சொல்லி மூடிவிடுவது. நான் ஜாதிக்காகச் சொல்லவில்லை. நீங்கள் வேண்டுமானால் ஜாதி என்று எடுத்துக்கொள்ளுங்கள். இந்த ஈர உணர்வு உங்களிடத்திலே இல்லையே என்றுதான் சொல்கிறேன். கோவாப்பரேட்டிவ் மூலம் நலத் துறையில் காரியங்கள் நடத்தப்பட்டன. கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ் ஆக்ட்-இல் செக்ஷன் 62-ன்படி விகிதாசாரத்தை எடுத்துக்கொள்வார்கள். அதுமட்டுமல்ல,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரம் அதிகமாகி விட்டது, ஐந்து நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ளுங்கள்.

**திருமதி சத்தியவாணிமுத்து :** சூப்பரெண்டெண்ட் சம்பளத்தையும் இந்த சொசைட்டிதான் கொடுக்க வேண்டும், மானேஜர் சம்பளத்தையும் சொசைட்டிதான் கொடுக்க வேண்டும், மற்றும் லீவ் சாலரியும் கொடுக்க வேண்டும், ரிடையர் ஆனதற்குப் பிறகும் பணம் கொடுக்க வேண்டும். இத்தனையும் கொடுத்தபிறகு நலத் துறையின் கீழ் நடக்கும் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி-களில் என்ன லாபம் வரும்? அப்படிப்பட்ட சொசைட்டி இருக்க வேண்டாம். ஊரிலே தாழ்த்தப்பட்டவர்களுக்காக சொசைட்டி என்று சொல்வதற்காக இருக்க வேண்டுமா? அதற்காவது எக்செம்ஷன் கொடுங்கள் என்று சொன்னேன். வெளியிலேயிருந்து ஆட்களை எடுத்துக் கொள்கிறோம் என்று சொன்னேன். இலாக்காவிலேயிருந்து அதிகாரிகளைப் போட்டு அவர்களுக்கு 600 ரூபாய்,



700 ரூபாய் என்று சம்பளம் கொடுத்து, லீவ் சாலரி, பென்ஷன் எல்லாம் கொடுப்பது என்றால் இத்தனையும் கொடுத்த பிறகு அரிசன நலத் துறையினால் நடத்தப்படும் சொசைட்டிகள் எப்படி இலாபகரமாக நடக்கும்? ஆகவே, எக்செம்ஷன் வேண்டுமென்று கேட்டோம். அதுவும் அமைச்சரவையில் விடுபட்டுப் போகிறது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, கூட்டுறவு சங்க 62 ஆவது விதியைப்பற்றிச் சொன்னார்கள். அவர்கள் சொன்னது, ஏற்கனவே பலருக்குச் சம்பளம் கொடுப்பதால் ஏதோ 62 ஆவது விதியைத் தளர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். அப்பொழுதே விளக்கம் சொல்லப்பட்டது. 62 ஆவது விதி என்பது உங்களுக்கு எல்லாச் செலவும் போக மீதி இலாபம் இருந்தால்தான் பிரிக்க வேண்டுமே தவிர, இலாபம் இல்லையென்றால் அரிசன நல இலாக்காவிலேயிருந்து ஒரு காசுகூட கொடுக்க வேண்டியதில்லை என்று விளக்கப்பட்டது.

**திருமதி சத்தியவாணிமுத்து :** எங்கே இலாபம்? உங்களுடைய இலாக்காவிலேயிருந்து போடும் அதிகாரிகளுக்குச் சம்பளம் கொடுப்பதைவிட, நாங்களே போடுவது என்றால் 150 ரூபாய், 200 ரூபாய்க்கு தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருக்கும் படித்த பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்திக்கொண்டால் இலாபம் இருக்கும்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இலாபம் இல்லையென்றால் 62 என்ற விதி அமலுக்கே வராது.

**திருமதி சத்தியவாணிமுத்து :** இலாபம் இல்லாததால்தான் சொல்கிறேன். இலாபம் இல்லாமல் ஏன் சொசைட்டிகள் இருக்க வேண்டும்? அதற்காக என் பணத்தை ஒதுக்க வேண்டும்? மக்களை ஏமாற்றுவதற்காகவா? இலாபமாக நடத்துவதற்குத்தான் எக்செம்ஷன் கேட்டேன், அதைக் கொடுத்திருக்கலாம் அல்லவா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இலாபகரமாக இல்லையென்றால் எக்செம்ஷன் என்று கேட்டால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இவர்களை சீக்கிரம் முடிக்கவிட்டால் நல்லது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இலாபம் இருந்தால்தான் பிரிக்க வேண்டும். ஒரு பகுதி எஜெண்டுகளுக்குக் கொடுக்க வேண்டுமென்றால் இலாபம் இருந்தால்தான். இல்லையென்றால், ஒரு சொசைட்டியில், ஒரு சங்கத்தில், கூட்டுறவுக் கழகத்தில் இலாபத்தைப் பிரிக்கும் காரியமே இல்லை, ஒரு காசுகூட கொடுக்க வேண்டியதில்லை.

**திருமதி சத்தியவாணிமுத்து:** இலாபம் வராததற்குக் காரணம் உங்கள் சட்டம், கோஆப்பரேடிவ் சொசைட்டீஸ் ஆக்ட் செக்ஷன் 62-ஐ நீக்குங்கள். அந்தச் சட்டத்தைப் போட்டு, அதிகாரிகளைப் போட்டு, 600 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டுமென்றால் இலாபத்தில் எப்படி நடக்கும்? எனவே, ஒரு காரியத்தைச் செய்தால், அதைப்பற்றி பரிசீலித்து இலாபமா, நஷ்டமா என்று பார்த்து இலாபமாக இருந்தால் நடத்த வேண்டுமே தவிர இலாபமே இல்லாமல் நஷ்டத்தில் ஓடுவதற்கு அரசாங்கப் பணத்தைச் செலவழிக்கிறோம் என்றால் அதற்கு நானும் ஒரு மந்திரி, கேள்வி கேட்டால் பதில் சொல்வதற்கு நான் இருக்கிறேன் என்பதற்காகவா இருக்க வேண்டும்?

காட்டேஜ் இன்டஸ்ட்ரீசை எடுத்துக்கொண்டால், வெள்ளநாடு என்ற இடத்தில் இப்படிப்பட்ட கோஆப்பரேடிவ் சொசைட்டியிலே இருக்கும் தலைவர் வேறொரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். செங்கல் சூளையை வைத்து அவர் வீடு கட்டிக் கொண்டார். தனுஷ்கோடி என்று ஒரு உறுப்பினர் இங்கே இருந்தாரே அவருக்குப் பணம் கொடுக்கவில்லை. பெயர்தான் அரிசன் கோஆப்பரேடிவ் சொசைட்டியே தவிர அரிசனங்களுக்கு நன்மையில்லை. கொள்ளையடிப்பது தான் அடிக்கிறார்கள், அதை அரிசனங்களே அடிக்கட்டுமே என்ற கருத்தில் சொன்னேன். அதை அதிகாரிகள் ஒத்துக்கொள்ள வில்லை. இவைகளையெல்லாம் சொல்கிறேன் என்பதற்காக என் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு என்னை நீக்கிவிட்டதற்காக நான் கவலைப்படவில்லை.

ஒன்றை மட்டும் நான் வருத்தத்தோடு மாண்புமிகு முதலமைச்சரவர்களை கேட்டுக்கொள்கிறேன். நம் இருவருக்கும் ஒரே வயது, அரசியலில் நான் புகுந்தபொழுதுகூட இருவருக்கும் ஏறத்தாழ ஒரே வயது இருக்கலாம். நீங்கள் எவ்வளவு



தியாகம் செய்தீர்களோ அதைப்போலவே நானும் செய்திருக்கிறேன். நீங்கள் வசதியாக வாழ்ந்திருக்கலாம். அந்த வசதி எனக்கு இல்லாமல் இருந்திருக்கலாம். என்னுடைய வீட்டைக் காலி செய்யச் சொன்னீர்கள். எத்தனை அமைச்சர்கள் பதவி போனபிறகும் அரசாங்க வீடுகளில் இருந்திருக்கிறார்கள். ஆனால் நான் இருக்கும்பொழுதே சாமான்களை எடுப்பதா? இதைச் செய்த நீங்கள் இன்னும் என்ன செய்யமாட்டீர்கள்? யாருக்கு என்ன துரோகம் செய்யமாட்டீர்கள்? சாமானை எடுத்தீர்கள். நானே வீட்டைக் காலி செய்கிறேன்.

என்னுடைய சொந்த வீட்டில் இருப்பவனைக் காலி செய்யச் சொன்னேன். அவனும் ஒத்துக்கொண்டான். பிறகு அவன் போக மறுக்கிறான். அவன் தனிப்பட்ட முறையில் வேண்டுமானால் மறுக்கட்டும், அப்பொழுது நீங்கள் சொன்னதுமாதிரி வழக்கு மன்றத்திற்குப் போகிறேன், நான்கு ஆண்டுகள் ஆனாலும் பரவாயில்லை. ஆனால் அவன் விடுகின்ற அறிக்கையானது முதலமைச்சருடைய பத்திரிகையான முரசொலியில் ஏன் வருகிறது? போலீசார் தருகின்ற விளக்கம் என்று வேண்டுமானால் முதலமைச்சரின் பத்திரிகையில் போடட்டும், விளக்கம் தருகிறார்கள் என்று அதை ஏற்றுக்கொள்கிறேன். குடித்தனக்காரனுடைய விளக்கம் என்று வந்ததால்தான் இதை நான் சொல்கிறேன். எனக்கு பெரம்பூரிலே வீடு இருக்கிறது. அண்ணா நகரிலே வீடு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை நிரூபிக்க முடியுமா? இதை எல்லாம் வெளியில் பேசினால் எங்கேயோ கேட்டு எங்கேயோ விட்டு விடுகின்றீர்கள். பெரம்பூரில் வீடு, அண்ணா நகரில் வீடு என்றால் அதை நிரூபிக்க முடியுமா?

எனக்கிருக்கிற வீடு கீழ்ப்பாக்கத்திலே இருப்பதுதான், அதுவும் ஹவுசிங் போர்டில் இருப்பது, 28,000 ரூபாய் கடன் இருக்கிறது. கொடுத்த பணத்தையெல்லாம் வட்டிக்கே எடுத்துக் கொண்டார்களே தவிர முதலுக்காக எடுத்துக்கொள்ளவில்லை. அது அந்த இலாக்காவிலே நடக்கும் அழகான ஊழல், அது எப்படியோ எனக்குத் தெரியாது, கடன் 28,000 ரூபாய் இருக்கிறது. நானும் போக முடியவில்லை. அவன் விடுகின்ற அறிக்கை முரசொலியில் வருகிறது. இப்பொழுது போக மறுக்கிறான். தமிழனா? பரவாயில்லை. நான் வேண்டாத தமிழச்சி . . .

[1974 ஆகஸ்ட் 14

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தமிழன் அல்லாத அவருக்கு ஏன் வீட்டை வாடகைக்குக் கொடுத்தீர்கள்?

**திருமதி சத்தியவாணிமுத்து:** வாடகைக்கு விட்டேன். பஞ்ச புத்தி, யார் வந்தாலும் பரவாயில்லை என்று விட்டு விட்டேன். இப்போது போக முடியவில்லை. இன்னொர் பஞ்சாயத்தனத்திலேதான் இருக்கிறேன்.

என் மகன் கடை வைத்திருக்கிறான். படிக்கவில்லை. நான் காலம் பூராவும் வெளியே சுற்றிவேனே தவிர, வீட்டைப் பார்க்கவில்லை. என் பிள்ளை பி.ஏ., எம்.ஏ., படிக்கவில்லை. நான் பெண். நான் வீட்டிலே இருந்திருந்தால் அவர்கள் பட்டதாரிகளாக ஆகி இருப்பார்கள். பெரிய பதவிகளிலே இருந்திருப்பார்கள். நான் வீட்டை மறந்தேன்; பிள்ளைகளை மறந்தேன். அவர்கள் படிக்கவில்லை. என் மகன் கடன்பட்டு ஒரு ரேடியோ கடை வைத்திருக்கிறான். அந்தக் கடையைச் சூறையாடினார்கள். * *

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அம்மையார் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் * * என்று சொல்வது சபைக் குறிப்பில் ஏறுவது அவ்வளவு நல்லதல்ல; நாகரிகம் அல்ல. அது சம்பந்தப் பட்ட அத்தனை வார்த்தைகளையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தொடர்ந்து அமைச்சர் அவர்கள் கூறியதுவரை எக்ஸ்பஞ்ச் செய்தால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லாவற்றையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். அந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள், தரம் தாழ்ந்து நடந்த அத்தனை நிகழ்ச்சிகளையும் சபைக்குறிப்பி லிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, நான் இங்கு அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டதற்கு என் மீது சுமத்திய குற்றச்சாட்டு சரியானது அல்ல, ஜனநாயகத்திற்கு விரோத

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1974 ஆகஸ்ட் 14] [திருமதி சத்தியவாணிமுத்து]

மானது. பாராளுமன்ற முறைக்கு விரோதமானது. சரியான தீர்ப்பு அல்ல. நான் சட்டப்படி எனது கடமையை ஆற்றினேன். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்காக எடுக்கிற முயற்சிகளை எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையும், அரசும் சரியாகச் செய்யவில்லை என்று தட்டிக் கேட்டதன் விளைவு, மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டைச் சரியாகச் செலவழிக்கவில்லை என்று தட்டிக் கேட்டதன் விளைவு, அதிகாரிகள் அமைச்சரின் உத்தரவுக்கு மாறாகச் செயல்படுகிறார்கள் என்பதைத் தட்டிக் கேட்டதன் விளைவு நான் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டேன். இத்தனையும் இந்த அரசின் ஒழுங்கீனங்கள். இப்படிப்பட்ட அரசு இருக்கக்கூடாது, இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கே. பி. கோபால்:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் பேரவையின் முன் கொண்டுவரப்பட்டிருக்கும் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். நமது மாநிலம் உணவு உற்பத்தியிலே தன்னிறைவு பெற்ற மாநிலம். படியரிசித் திட்டம் அமல்படுத்தப்பட்டபோது உணவு உற்பத்தி இருந்ததைக் காட்டிலும் இப்போது 20 லட்சம் டன் உணவு உற்பத்தி அதிகரித் திருக்கிறது. அப்படி இருப்பினும் எங்கு பார்த்தாலும் உணவுப் பற்றாக்குறை. கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு விலைவாசி உயர்வு. இதற்கு என்ன காரணம்? இந்த அரசாங்கத்தின் ஸ்திரமற்ற கொள்கை, விபரீதமான உத்தரவு, முன்னெச்சரிக்கை யாக நடவடிக்கை எடுக்கத் தவறியது ஆகும்.

தமிழகத்திலே விளைந்த உணவுப் பொருள்களின் பெரும்பகுதி அண்டை மாநிலங்களுக்குக் கடத்தப்பட்டுவிட்டது என்பது நான் என்னுடைய தாழ்மையான கருத்து. இந்தக் கள்ளக் கடத்தலைத் தடுக்க இந்த அரசு தவறிவிட்டது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். அரசாங்கத்திற்கு உதவிட வேண்டு மென்ற முறையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள்கூட கள்ளக் கடத்தல் நடைபெறுகிறது, அது தடுக்கப்பட வேண்டும் என்று கூறினோம். அதற்கு சம்பந்தப்பட்ட ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுக்காமல் அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று எண்ணத்தோடு ஒருசில வியாபாரிகளைப் பாதுகாக்கவேண்டு மென்ற எண்ணத்தோடு நடவடிக்கை எடுக்கவில்லை.

[திரு. கே. பி. கோபால்] [1974 ஆகஸ்ட் 14

உதாரணமாக, 4—8—1973-ம் தேதி அன்று நடந்த விவாதத்திலே மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். கம்பத்திலே பர்மிட்டுடன் வந்த லாரியை மறித்ததாகவும் அதற்காக சர்வ கட்சி உறுப்பினர்களும் வருத்தம் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்கள். இது வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள் என்று 4—8—1973-ம் தேதி அன்று பேரவையில் பேசினார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து, நான்கு தினங்கள் கழித்து நான் இந்தப் பேரவையில் பேசும்போது அன்று நடந்த சம்பவங்களைப்பற்றி விளக்கமாகப் பேசினேன். லாரிகளை நிறுத்தி சர்வ கட்சியினரும் பொதுமக்களும் பர்மிட் இருக்கின்றதா என்று கேட்டிருக்கிறார்கள். பர்மிட் இல்லை, பின்னால் வருபவர்களிடம் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த லாரி பர்மிட் இல்லாமலே போயிருக்கிறது. அதைப்பற்றி 8—8—1973-ம் தேதி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது எடுத்துக் கூறியிருக்கிறேன். 10—8—1973-ம் தேதி அன்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலும் என்னுடைய குற்றச்சாட்டுக்களை மறுக்கவில்லை.

இதை நான் சொல்லக் காரணம், அன்று அந்தச் சோதனைச் சாவடிகளில் தவறு செய்த ஒரு சில ரெவன்யூ இன்ஸ்பெக்டர்களைக் காப்பாற்றுவதற்காக அந்த வியாபாரிகள்மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தவறிவிட்டது.

(பிற்பகல் 1.00)

இரண்டாவதாக, தமிழ்நாட்டில் நிலவும் அரிசிப் பிரச்னைக்குக் காரணம் மத்திய அரசுதான், மாநில அரசு இல்லை என்று கூறுகிறார்கள். 10—8—1973-ம் தேதி அன்று நடந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது திட்டக் குழு துணைத் தலைவர் அவர்கள்—நம் முதல் அமைச்சர் அவர்கள், மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதல் அமைச்சராக இருக்க வேண்டும் என்று முன்மொழிந்த திரு. மதியழகன் அவர்கள் ஆற்றிய உரையை தயவு செய்து பரிசீலிக்க வேண்டுகிறேன். அவர்கள் அந்த உரையில் கூறியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் உணவுக் கொள்கை வர்த்தக சூதாடிகளுக்கும், பதுக்கல்காரர்களுக்கும், கடத்தல்காரர்களுக்கும் உதவி செய்வதாக இருக்கிறது.



1974 ஆகஸ்ட் 14] [திரு. கே. பி. கோபால்]

மத்திய அரசை நான் கண்டிக்கிறேன் என்று கூறிவிட்டு அதனால் நம் பொறுப்பை தட்டிக்கழிக்க முடியாது, இந்த மாநில அரசுக்குப் பொறுப்பில்லை என்ற வாதத்தை நான் முற்றிலும் நிராகரிக்கிறேன், அந்தக் கொள்கையை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறியிருக்கிறேன். அப்போது 35 லட்சம் டன் உற்பத்தி இருக்கும்போது அரசாங்கம் 10 லட்சம் டன் கொள்முதல் செய்தது. இப்போது 55 லட்சம் டன் உற்பத்தி இருக்கும்போது ஏன் அரசாங்கம் நேரடியாகக் கொள்முதல் செய்யாமல் ரைஸ் மில்காரர்கள்மூலம், வியாபாரிகள்மூலம் கொள்முதல் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்? அரிசிப் பிரச்னையைப் பொறுத்தவரையில் அரசாங்கம் எடுக்கிற கொள்கை அமைச்சருக்குத் தெரிந்து எடுக்கப்படுகிறதா அல்லது அமைச்சருக்குத் தெரியாமல் எடுக்கப்படுகிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அந்தக் கொள்கையைப்பற்றித் தெரியாமல் அமைச்சர் பணியாற்றுகிறாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மாவட்ட அளவில்கூட இதுபோன்ற கொள்கைகள் எடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். 10—8—1973 அன்று நடந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது மதிப்பிற்குரிய ப.உ.ச. அவர்கள் உணவு அமைச்சராக இருந்தார்கள். அப்போது நான் கம்பம், கூடலூர் போன்ற பகுதிகளில் அரிசி கடத்தப்படுகிறது என்று எடுத்துக்காட்டும்போது பறிமுதல் செய்யப்பட்ட அரிசியை லீஷர் பெர்மிட் ஹோல்டேர்ஸ் என்று உரிமை பெற்ற ஒரு சிலரிடம் கொடுத்து விடுவதைப்பற்றிக் குறிப்பிட்டபோது குறுக்கிட்டு அப்போது உணவு அமைச்சராக இருந்தவர் ஸ்டாக் செய்ய இடமில்லாமல் அப்படி ஒப்படைத்திருக்கலாம் என்றும் அதைப்பற்றி விசாரிக்கலாம் என்றும் சொன்னார்கள். ஒருவேளை அமைச்சருக்குத் தெரியாமல் இதுபோன்ற திட்டங்களை வகுத்திருக்கிறார்களோ என்னவோ? இன்றுள்ள நிலையில் நவதானியங்களின் மீதான தடையை, மத்திய அரசு நீக்கியிருப்பதைபற்றிக் குறிப்பிட்டார்கள் அதைக்காரணம் காட்டினார்கள். மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம், பெரியகுளம் சோதனைச் சாவடி அதிகாரிகள், அங்குள்ள ரெவின்யூ அதிகாரிகள் எங்களுக்கு இது

போன்ற ஒரு உத்தரவு கிடைக்கவில்லை, எனவே தமிழ் நாட்டிலிருந்து கேரளாவிற்கு நவதானியங்களைக் கொண்டு செல்லக் கூடாது என்று சொல்கிறார்கள்.

தமிழர்களின் நலன்களுக்காக தமிழர்களால் நடத்தப்படும் அரசு இது என்று சொல்கிறார்கள். கேரளாவில் நவதானியமான சோளம் போன்றவற்றை யாரும் சாப்பிட மாட்டார்கள். அங்குள்ள மலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தமிழ் தொழிலாளர்களுக்காக நியாயமான முறையில் சட்டத்திற்கு உட்பட்டு கேட்கிறவர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. ஆனால் இங்கே என்ன சொல்கிறார்கள் என்றால் மத்திய அரசு அப்படி ஒரு உத்தரவைப் போட்டது, அதனால் விலைவாசி ஏறியிருக்கிறது என்று சொல்கிறார்கள். மத்திய அரசின் அந்த உத்தரவின்படி பல மாநிலங்களிலிருந்தும் வியாபாரிகள் அவற்றை வாங்கிச் செல்கிறார்கள். ஆனால் தமிழ் தொழிலாளர்கள் நலனுக்காக எங்களுக்கு நவதானியங்களைக் கொடுங்கள் என்று தோட்ட உரிமையாளர்கள் கேட்டால் ஒன்று கொடுக்கமுடியாது என்று உத்தரவு வர வேண்டும் அல்லது இது பரிசீலனையில் இருக்கிறது என்று பதில் வரவேண்டும். ஏதாவது ஒரு பதில் வரவேண்டும். அப்போது தான் கோர்ட்டுக்குச் சென்று எங்கள் உரிமையைக் கேட்க முடியும். இங்கே சொல்லும்போது மத்திய அரசு என்று சொல்கிறார்கள். அங்கே இதுபோன்ற ஒரு உத்தரவு வரவில்லை என்று சொல்கிறார்கள். தமிழ் தொழிலாளர்களுக்காக அதை கேரளாவிற்கு எடுத்துச் செல்லக்கூடாது என்று அங்கே சொல்கிறார்கள். அரசாங்கத்திற்கு சரியான கொள்கைகள் இல்லையா? விபரீதமான உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. இதற்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் கூறினார்கள். மணிக்கு ஒரு உத்தரவு என்று மாண்புமிகு உறுப்பினர் வடிவேலு அவர்கள் கூறினார்கள். இரண்டு தினங்களுக்குள் மூன்று உத்தரவுகள் என்று மதிப்பிற்குரிய ஓ. என். சுந்தரம் அவர்கள் கூறினார்கள். அதைத்தான் நானும் வலியுறுத்திக் கூறுகிறேன். முதலில் 25 சத விகிதம் லெவி என்றார்கள். பின்னர் 40 சத விகிதம் லெவி என்றார்கள். பழையபடியும் 25 சத விகிதம் லெவி என்கிறார்கள்.

தஞ்சாவூரைப் பொறுத்தவரையில் தஞ்சாவூரிலிருந்து கூட்டுறவு ஸ்தாபனங்கள் மட்டும் வெளியே எடுத்துச் சொல்லலாம் என்று சொல்கிறார்கள். பின்னர் தஞ்சாவூரிலிருந்து யாரும் வெளியே





மற்ற இடங்களுக்கு எடுத்துச் செல்லலாம் என்று கூறுகிறார்கள். உடனடியாக அந்த உத்தரவு மாற்றப்படுகிறது. மூன்று மாதங்களுக்கு வேண்டியதை மட்டும்தான் விவசாயிகள் கையிருப்பு வைத்துக்கொள்ளலாம் என்று ஒரு உத்தரவு வருகிறது. தஞ்சாவூரிலும் சரி, கம்பம் உத்தமபாளையத்திலானாலும் சரி இரண்டு போகம்தான் விளைகிறதேதவிர நான்கு போகங்கள் அல்ல. முதலில் மூன்று மாதத்திற்கான கையிருப்பு வைத்திருக்கலாம் என்று உத்தரவு வருகிறது, பிறகு ஆறு மாதத்திற்கான கையிருப்பு வைத்துக்கொள்ளலாம் என்ற உத்தரவு வருகிறது. அதுகூட முறையல்ல. மீண்டும் ஒரு உத்தரவு வரவேண்டியிருக்கும்.

தமிழ் நாடு மாநில விவசாயிகள் சங்கம் சார்பில் முதல் அமைச்சர் கலைஞர் அவர்களிடம் ஒரு விண்ணப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கூலி, விதை, பண்ணையாட்களுக்கு சம்பளம் ஆகியவற்றுக்கு மூன்று மாதங்கள் தேவைக்கான கையிருப்புதான் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அடுத்த அறுவடை வரையில் தேவைப்படும் தானியங்களை வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கை நியாயமானது. பல பகுதிகளில் பலவிதங்களில் விவசாயம் நடைபெற்று வருகிறது.

இப்போது 57 கே.ஜி. கொண்ட மூட்டை ஒன்று ரூ. 80 என்று நினைக்கிறேன். ஆரம்பத்திலேயே அறிவித்திருந்தால் பல விவசாயிகள் இதனால் பயன் அடைந்திருப்பார்கள். ஆக முன் எச்சரிக்கையாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டார்கள். இப்போது சோதனைச் சாவடிகளில் டெப்டி தாசில்தார் அந்தஸ்தில் உள்ளவர்களைப் போட்டிருக்கிறார்கள். முன்பு நடந்தது என்ன? ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அந்தஸ்தில் உள்ளவர்களைத்தான் சோதனைச் சாவடி அதிகாரிகளாகப் போட்டிருந்தார்கள். சோதனைச் சாவடிகளில் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அந்தஸ்தில் உள்ளவர்கள் ஒரு வாரம் இருந்தால் போதும். கள்ளக்கடத்தல்காரர்களுக்கு உடந்தையாக இருந்தால் அவர்கள் வாழ்நாள் முழுவதும் உத்தியோகத்தில் இருந்தால் எவ்வளவு சம்பாதிக்க முடியுமோ அந்த அளவிற்குச் சம்பாதித்து விடுவார்கள்.

எனவே, ஆரம்பத்திலேயே ஏன் டெப்டி தாசில்தார் அந்தஸ்தில் உள்ளவர்களைச் சோதனைச் சாவடிகளில் பபோடவில்லை? டெப்டி தாசில்தார் என்றல்ல—தாசில்தார் அந்தஸ்தில் உள்ளவர்களைப் போட்டிருக்கலாம் சோதனைச் சாவடிகளில். பின்னர், மொத்த வியாபாரிகள் வைத்துள்ள கையிருப்பை அறிவிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த அறிவிப்பை முன்பே கொடுத்திருந்தால் என்ன? மொத்த வியாபாரிகள் 750 க்விண்டால் நெல்லும் 500 க்விண்டால் அரிசியும் வைத்துக்கொள்ளலாம் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

மதுரையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ரைஸ் மில் உரிமையாளர்கள் நெல்லை இன்ன விலைக்கு மேல் வாங்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இதுபோன்று முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்க இந்த அரசு தவறிவிட்டது.

எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில், நேற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள், பெருமளவிற்கு கள்ளக் கடத்தல் தடுக்கப்பட்டு விட்டது என்று. உத்தமபாளையத்தைப் பொறுத்தவரையிலும் பெருமளவிற்குத் தடுக்கப்பட்டு விட்டது என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். அதற்கு யார் காரணம் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆனால் கோவை போன்ற பகுதிகளில் இன்னும் அதிகமாகத்தான் இருக்கிறது அரிசியிலே அரசியல் வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் கே. எம். எஸ். குறிப்பிட்டார்கள்.

1973 ஆம் வருடம் ஜூன் மாதம் 23 ஆம் தேதி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் வைக்கப்பட்ட பொருள்களில் ஒன்று, கே. எஸ். பீர் முஹமது அவர்களிடமிருந்து 1,600 க்விண்டால் அரசாங்கத்திற்கு வரவேண்டியிருக்கிறது, அதை ஏன் காலாகாலத்தில் அவர்களிடமிருந்து வசூல் செய்யவில்லை என்று. இந்த கே. எஸ். பீர் முஹமது யார் என்று நான் சொல்லத் தேவை யில்லை. சாதாரணமாக திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் கூட்டங்கள் போடப்பட்டால் பயணிகள் விடுதியில்தான் போடுவார்கள். ஆனால் சமீப காலத்தில் தி.மு.க. நகரச் செயலாளர் தேர்தல் எங்கே நடைபெற்றது என்றால் கே.எஸ்.பி.





ரைஸ் மில்லில்தான் நடைபெற்றது. அச்சிட்ட நோட்டீஸ் இதோ இருக்கிறது. இதிலிருந்து எந்த அளவிற்கு அரசியல் தலையீடு இருக்கிறது என்பது தெரியவரும்.

இதே கே. எஸ். பீர் முஹம்மது சீஷர் லைசென்சும் வைத்து இருக்கிறார் ஹோல் சேல் டீலராகவும் இருக்கிறார். நான் பல முறை எடுத்துக்காட்டியிருக்கிறேன். ஹோல் சேல் டீலராகவும் இருக்கிறார். சீஷர் பர்மிட் ஹோல்டராகவும் இருக்கிறார். அவர் ஹோல் சேல் டீலர் என்ற முறையில் அரிசி எடுத்துவரும்போது, பறிமுதல் செய்யப்பட்ட அரிசி எவ்வளவு இருக்கிறதோ அதைக் கழிக்க வேண்டும். அது செய்யப்படுவதில்லை என்று நான் முன்பே சொன்னேன்.

கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் பல தவறுகள் நடைபெறுகின்றன. முக்கியமாக கூடலூர் கூட்டுறவு பண்டகசாலை எம். டி. ஸ்பெஷல் 21 பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். அதற்கு இப்போதிருந்தே முன்கூட்டியே எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உணவு கூட்டுறவு அமைச்சர் அவர்களுக்கும், பதிவுத் தபால்மூலம் நான் ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறேன். அங்குள்ள உறுப்பினர் களும், சர்வ கட்சித் தோழர்களும் அதே மாதிரி போட்டோ நகல்களுடன் கடிதத்தை எழுதியிருக்கிறார்கள். ஒரு டைரக்டர் 3 க்விண்டால் அரிசி அனுப்ப வேண்டுமென்று கேட்கிறார் இன்னொரு டைரக்டர் 50 கிலோ சர்க்கரை அனுப்ப வேண்டுமென்று கேட்கிறார். இங்கே மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று நாட்டிலிருக்கும் நிலைமையை மனதில் கொண்டு, நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதற்காக இந்த உணவு இலாகாவை கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரையில் உணவு அமைச்சர் வரையில், மாற்ற வேண்டுமென்று நான் சொல்லவில்லை, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரும், உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவருமான மதுரை மேயர் முத்து கூறுகிறார். எனவே,

இந்தப் பிரசிலனை செய்யுங்கள் என்று கூறி, எனக்கு இந்த அளவுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட மன்றத்திலே நான் இடம் பெற்ற இந்த 3½ ஆண்டுக் காலத்தில் பலமுறை இம்மாதிரி நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கிறது. வழக்கம்போல் இந்த நேரத்தில் சட்ட மன்றம் ஆரம்பித்தாலே இந்த மாதிரி நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறது. இன்று வந்துள்ள இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாட்டிலே எதிர்நோக்கி வந்துள்ள உணவுப் பிரச்சினையைக் குறித்ததாகும். உணவுப் பிரச்சினையில் நாம் ஒரு உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இதுவரையில் கண்டிராத வகையில் ஒரு வறுமை நிலையில் ஏழை எளிய மக்கள் துன்பப்படும் நிலை இருக்கிறது. இன்று உணவுப் பொருள்களின் விலை அதிகமாக ஏறியிருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. இது பிரத்தியட்சமான உண்மை. இந்த நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்பதை நாம் விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும். இங்கே கொடுக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள்.

எனக்கு ஒரு உதாரணம் நினைவிற்கு வருகிறது. ஒரு வீட்டில் களவு செல்கிறது. களவு சென்ற வீட்டின் சொந்தக்காரர் போலீசிற்குப் புகார் கொடுக்கிறார். போலீஸ் வந்து வீட்டை சோதனையிட்டதில், வெளியிலிருந்து வந்து யாரும் களவு செய்யவில்லை. வீட்டின் சொந்தக்காரர்தான், அதாவது யார் கம்ப்ளெயின்ட் கொடுத்தார்களோ அவர்களேதான் குற்றவாளி என்று தெரிகிறது. இப்படிப்பட்ட செய்திகள் வந்திருப்பதை நாம் பத்திரிக்கையில் பார்க்கிறோம். அதைப்போல், இன்று இந்த காங்கிரஸ்காரர்கள், இன்றுள்ள உணவு நிலைமைக்கு இந்த அமைச்சரவைதான் காரணம் என்று சொல்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், காவலர் முன்பு யார் திருட்டுக் குற்றம் சாட்டினார்களோ, அதேபோல் இருக்கிறது. மக்கள் அவர்களுடைய சிந்தனையைக் கொண்டு பார்க்கிறபோது உண்மை





நிலை என்ன, உண்மை குற்றவாளிகள் யார் என்பது அவர்களுக்குத் தெரிகிறது, எந்தக் காங்கிரஸ் கட்சியினர் இங்கு இந்தக் குற்றச் சாட்டைக் கொண்டுவந்திருக்கிறார்களோ, அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லக் கூடிய அந்தக் காங்கிரஸ்காரர்களைக் கேட்கிறேன். அவர்கள் அமைச்சரவையின் மூலமாக ஆண்டுக்கு 2 தடவைகள் இப்போது வரி போடுகிறார்கள். முன்பு ஒரு தடவை போட்டார்கள். இப்போது இங்கே தேனும், பாலும் தெருவில் ஓடுகிறது என்பதால் ஆண்டுக்கு இரண்டு தடவை வரி விதிக்கும் சூழ்நிலை உருவாகி யிருக்கிறது. அந்த அளவுக்கு வரிகளால் மக்களைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மத்திய அரசுதான் இன்றைய நிலைக்குக் காரணம் என்பதை மக்கள் உணராமல் இல்லை.

மூன்று நான்கு மாதங்களுக்கு முன்புகூட நான் எண்ணிப் பார்த்தேன். தமிழகத்தில் மாத்திரம் இந்த அளவுக்கு உணவுப் பொருள் கிடைக்கிறதே, மற்ற மாநிலங்களில் 6 ரூபாய், 8 ரூபாய் கிலோ என்று தானியங்கள் விற்கிறதே என்று. இந்த நிலையைத் தமிழகம் எத்தனை நாளைக்குக் காப்பாற்ற முடியும்? எத்தனை நாட்களுக்கு கேட்டுகளைக் காப்பாற்றிக் கொண்டிருக்க முடியும். ஏற்றமான பகுதிகளிலிருந்து பள்ளமான பகுதிகளுக்குச் செல்லும் வாய்ப்பு இருந்தால் தண்ணீர் சமநிலையை அடைந்து விடும். அதைப்போல் இந்திய திருக்கண்டத்திலேயே எல்லா மாநிலங்களிலும் ரூ. 10, 8, என்று விற்கிறபோது இங்கே எத்தனை காலத்திற்கு இப்படியிருக்கும் என்று நினைத்தேன். இந்தியா பூராவிலும் அதிகமான விலை விற்கிறபோது நம்முடைய மாநிலத்தில் மட்டும் எப்படி அது குறைவாக இருக்கும்? ஆகவே, இதற்குத் தமிழக அரசு மாத்திரம் காரணம் அல்ல. நிலைமை எக்கச்சக்கமாக இருக்கிறது. இதற்குத் தமிழக அரசு மாத்திரம் காரணம் இல்லை என்பது என்னுடைய வாதம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாக என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லாமல் குழப்புகிறார். நேரடியாக உங்கள் கருத்து என்ன என்பதைத் தயவு செய்து சொல்லுங்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** இது ஒரு குழப்ப வேண்டிய பிரச்னை; வயிற்றுப் பிரச்னை.

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 ஆகஸ்ட் 14

இங்கே பேசிய திரு. செழியன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இங்கே இம்மாதிரியான நெருக்கடி ஏற்பட்டதைப் பார்த்து இங்கே அமளி குமளி ஏற்பட்டு இருக்க வேண்டும். இங்கே ஆட்சி நடக்க விட்டிருக்கக் கூடாது. குஜராத், பீகார் மாநிலத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டதுபோல் ஏற்பட்டு இங்குள்ள அரசு கவிழ வேண்டுமென்று எதிர்பார்த்தார்கள். அங்கே அரசு கவிழ்ந்ததற்குக் காரணம் அங்கேயுள்ள அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியதால்தான். இங்கேயுள்ள அரசு எப்படி நடந்து கொண்டது, இந்த நிலைமைகளுக்குக் காரணம் என்ன என்பதைத் தமிழகத்தில் இருக்கிற மக்கள் சிந்தித்து, இங்கே உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எந்த அரசு என்பதைச் சிந்தித்துப் பார்த்து, அந்தக் காரணத்தால் இந்த அரசுக்குத் தங்களுடைய ஆதரவைத் தந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே எந்தத் தன்மை ஏற்பட்டாலும், எவ்வளவு தூண்டினாலும் அது ஏற்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடிக்கடி அண்ணா அவர்கள் கொண்டுவந்த படியரிசித் திட்டத்தைப்பற்றிச் சொல்கிறார்கள். அண்ணா அவர்கள் என்றையதினம் படியரிசித் திட்டம் கொண்டுவந்தார்களோ, அன்றையதினம் இருந்த மற்றப் பொருள்களின் விலை, அன்றைய தினம் மத்திய அரசு விதித்து வந்த வரி, ஆகியவற்றை அந்த அளவுக்குக் குறைத்துக்கொண்டு வந்தால் இன்றைக்கும்கூட அந்த படியரிசித் திட்டம் கொண்டு வரமுடியும். மற்றப் பொருள் களின் விலை மத்திய அரசாங்கத்தின் வரியால் அதிகரித்து இருக்கின்றது. அவற்றை இறக்காத நிலையில், படியரிசித் திட்டம் மட்டும் கொண்டு வரவேண்டுமென்று சொல்வது, நினைப்பது பொருளாதாரச் சித்தாந்தத்திற்கு உகந்தது அல்ல என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

என்னுடைய நண்பர் திரு. சுரேந்திரன் அவர்கள் பேசும்போது, மலையாளிகள் இங்கே 1.36 சதவிகிதம்தான் இருக்கிறார்கள். அதைப்பற்றி ஏன் தமிழ் மக்கள் அஞ்ச வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் 1.36 சத விகிதம்தான் இருக்கிறார்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். எங்களுக்கு அதனால் எந்தவித லாபமோ, பயமோ இல்லை. ஆனால் மத்திய அரசால் நடத்தப்படக் கூடிய தொழிற்சாலைகளில், தமிழக



1974 ஆகஸ்ட் 14] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

மக்களின் வறுமையைப் போக்குவதற்காகத் தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டு இருக்கும் தொழிற்சாலைகளில், மத்திய அரசிடமிருந்து போராடிப் பெற்று வந்த தொழிற்சாலைகளில் இன்று 100-க்கு 80 சதவிகிதம், 75 சதவிகிதம் மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்று இருக்கிறார்கள் என்று சொன்னால் தமிழக மக்கள் தொடர்ந்து கஷ்டப்படத்தான் வேண்டுமா? தமிழ் மக்கள் தங்கள் வேலை வாய்ப்பைப் பெருக்கிக்கொள்ள வேறு என்ன வழி இருக்கிறது, அவர்கள் வேறு எங்கே செல்ல முடியும் என்று கேட்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இந்த மாநிலத்தில் இருக்கிற மத்திய சர்க்காருடைய தொழிற்சாலைகளில் இதர மாநிலத்துக் காரர்கள் இருப்பதாகக் கூறுகிறார்கள். இதர மாநிலத்தில் இருக்கிற மத்திய சர்க்கார் தொழிற்சாலைகளில் தமிழ் நாட்டைச் சேர்ந்த வர்கள் இருக்கிறார்களா, இல்லையா?

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** இருக்கிறார்கள் என்று ஒத்துக்கொள்கிறேன். அந்த விகிதாசாரத்திற்கும், இங்கே உள்ள விகிதாசாரத்திற்கும் இருக்கும் வித்தியாசத்தை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களில் அம்மாதிரி தமிழர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்களை அங்கே இருப்பவர்கள் மனப்பூர்வமாக ஒத்துக் கொள்கிறார்களா? எத்தனையோ இன்னல்களை, இடையூறுகளைத் தமிழர்கள் சமாளிக்க வேண்டியிருக்கிறது. பம்பாயில் பார்த்தால் தெருக்களில் கீழே கிடக்கும் காகிதத்தைச் சேர்த்து, அதை விற்றுப் பிழைக்கும் தமிழர்களைப் பார்க்க முடியும். கல்கத்தாவை எடுத்துக்கொண்டால் இரவாகட்டும், பகலாகட்டும், பிளாட் பாரத்தையே வீடாகக் கொண்டு மிகுந்த வறுமை நிலையில் உழன்றுகொண்டிருக்கிற, நாள் ஒன்றுக்கு ரூ. 1 அல்லது 1½ கூட சம்பாதிக்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிற லட்சக் கணக்கான தமிழர்களைப் பார்க்க முடியும். அங்கெல்லாம் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் நிலையில் தங்களுடைய சொந்த மாநிலத்திலே தமிழகத்திலே ஏற்படுத்தப்பட்டுள்ள மிகப் பெரிய தொழிற்சாலை களிலெல்லாம் 100-க்கு 60-க்கும் அதிகமான பேர்கள் வெளி மாநிலத்தவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், அதைத்தான் தமிழகம் ஆதரிக்க வேண்டும் என்று சொன்னால்,

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 ஆகஸ்ட் 14

அதுதான் பெருந்தன்மை என்று சொன்னால், அந்தப் பெருந்தன்மையைக் காற்றிலே தூக்கி எறியவேண்டும். அந்தப் பெருந்தன்மை தேவையில்லை. தன் வயிற்றைக் காயவைத்து பட்டினி போட்டுவிட்டு, மற்றவர்களை வாழ வைக்கக்கூடிய பெருந்தன்மையை ஒரு தத்துவமாகக் கடைப்பிடிக்க வேண்டு மென்றால், அந்தத் தத்துவமும் வேண்டாம், பெருந்தன்மையும் வேண்டாம் என்று நான் கூறிக்கொள்வேன்.

மதுவிலக்கைப்பற்றி இங்கே சொன்னார்கள். முன்பு மதுவிலக்கை நிறுத்திவைத்தபோது அமைச்சர் அவையோடு சற்று மோதல் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று அவையுடன் மோதல் செய்து மதுவிலக்கை நிறுத்தக்கூடாது என்ற கருத்தை நாங்கள்தான் வற்புறுத்தினோம்.

மனிதாபிமானத்தோடு பார்த்தால் மதுவிலக்கு தேவை இந்த நாட்டிற்கு என்பதை வற்புறுத்தி, வேறு மாநிலங்களில் மதுவிலக்கு இல்லாவிட்டாலும்சரி, உலகத்தில் மற்ற நாடுகளில் மதுவிலக்கு இல்லாவிட்டாலும்சரி, அதன் மூலம் தமிழகத்தில் மாத்திரம் பொருளாதாரத் துறையில் நஷ்டம் ஏற்பட்டாலும்சரி, அது மனிதாபிமானமுள்ள திட்டம், தமிழகத்தில் இதுவரையில் அமலில் இருந்த திட்டம், அண்ணா அவர்கள் ஒப்புக்கொண்ட திட்டம், அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும் என்று கூறினோம். ஆரம்பத்தில் சிலர் எங்கள் பேரில் சந்தேகப்பட்டார்கள். பிறகு உண்மையான நண்பர்கள் தங்களுடைய நலனைக் கருதித்தான் அவ்வாறு வற்புறுத்தி யிருக்கிறார்கள் என்பதை உணர்ந்த மாத்திரத்தில் தமிழகத்தில் படிப்படியாக மதுவிலக்கை அமல்படுத்தி, வருகின்ற செப்டம்பர் முதல் தேதி முதல் பரிபூரணமாக மதுவிலக்கு அமலாக்கப்படும் என்று அறிவித்திருப்பது பெரிதும் பாராட்டத்தக்கது. உண்மையிலேயே இதை காந்திய அரசு என்று பாராட்டுகிறேன்.

இங்கே அமர்ந்துள்ள காந்தீயவாதிகளைக் கேட்கிறேன், மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களைக் கேட்கிறேன், மாண்புமிகு திருமதி அனந்தநாயகி அவர்களைக் கேட்கிறேன். காந்தியத்தில் வளர்ந்தவர்கள் நீங்கள். உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மற்ற மாநிலங்களில் ஆளுகிறார்கள். மத்திய



1974 ஆகஸ்ட் 14] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

சர்க்காரில் நீங்கள் பெரும்பான்மையாக இருக்கிறீர்கள். குஜராத்தைத் தவிர மற்ற மாநிலங்களில், விரல் விட்டு எண்ணிச் சொல்லிவிடலாம், உண்மையான காந்தீயத் தொண்டர்களாக இருக்கிறீர்களே, அவர்கள் வழி வந்தவர்களாக இருக்கிறீர்களே, அகிம்ஸா கொள்கையை ஒத்துக்கொண்டவர் வழிவந்தவர்களாக இருக்கிறீர்களே, எங்கேயாவது மதுவிலக்கு அமுல் நடத்தப் படுகிறதா ? அந்த அடிப்படையில் ஏழை எளிய மக்களை வாட்டி வதைக்கின்ற, அவர்களை அழித்து வருகிற குடிப்பழக்கத்தை ஒழிக்கிற முறையில், அண்ணா அவர்கள் வழிவந்து, மதுவிலக்கை நிறுத்தி வைத்தது தவறு என்று உணர்ந்த மாத்திரத்திலேயே அந்த மதுவிலக்கை மீண்டும் பரிபூரணமாக அமுலுக்குக் கொண்டு வந்தவர்கள் காந்தியவாதிகளா, மற்ற மாநிலங்களில் உள்ள உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் காந்தியவாதிகளா என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கண்ணியம் மிக்க காயிதே மில்லத் அவர்களும், மாண்புமிகு அண்ணா அவர்களும் ஒருசேர வற்புறுத்தி வந்தபடி, குதிரைப் பந்தயத்தை ஒழித்து விடுகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள் முதல் அமைச்சர் அவர்கள். ஏழாண்டுகளுக்கு முன்பே வற்புறுத்தி வந்தபடி தமிழக அரசு குதிரைப் பந்தயத்தை ஒழிக்க முன்வந்திருப்பது மிகவும் போற்றத்தக்கது, பாராட்டத் தக்கது. மிகப் பெரிய லட்சாதிபதிகளாக இருப்பவர்கள்கூட கெட்ட பழக்கத்தின் காரணமாகக் குதிரைப் பந்தயத்தில் ஈடுபட்டுவிட்டு, திடீரென்று மறுநாள் காலையிலே பிச்சைக்காரராக மாறக்கூடிய அவல நிலை இருந்து வந்தது. அவர்களுடைய பழக்கத்தை வேறு வழிகளில் தடுத்து நிறுத்த முடியாத சூழ்நிலை இருந்தது. ஆகவே, அரசாங்கம் குதிரைப் பந்தயத்தையே இந்த மாநிலத்தில் ஒழித்துவிட முன்வந்தது மிகவும் பாராட்டத் தக்கது. முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக அதற்காக இந்த அரசை மனமாரப் பாராட்டுகிறேன்.

அதே சமயத்தில் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த சட்ட மன்றக் கூட்டத்தில் சொன்னேன் என்று நினைக்கிறேன். நம்முடைய தலைநகரமாகிய சென்னை நகரத்தில் இருந்த கவர்ன்மெண்ட் ஆர்ட்ஸ் காலேஜை பெண்கள் கல்லூரியாக மாற்றக்கூடாது என்று நாங்கள் மிகவும் வற்புறுத்தினோம். அந்த சமயத்தில் நான் குறிப்பிட்டேன். நான்

எளியவன், அங்கே படித்தவன், அந்தக் கட்டடத்தில் இருக்கக் கூடிய ஒவ்வொரு செங்கலையும் புனிதமாகக் கருதக்கூடியவன். அது ஒரு ஆண்கள் கல்லூரியாக இருக்கட்டும், பெண்கள் வேண்டுமானால்கூடச் சேர்ந்து படிக்கட்டும் என்று சொன்னேன். அந்தக் கோரிக்கையில் ஒரு அழகான மாறுதலைச் செய்து கலைஞர் அவர்கள் நாங்களெல்லாம் அதை வரவேற்கக்கூடிய அளவிற்கு, அதை ஒரு மகளிர் கல்லூரியாக மாற்றி கண்ணியம் மிக்க காயிதே மில்லத் அவர்களின் பெயரையும் அதற்குச் சூட்டி விட்டார்கள். இந்தச் சாதனையை கலைஞர்தான் செய்ய முடியும். எங்களுக்கும் மனது நோகாமல், அதே சமயத்தில் அவர்களின் கொள்கைக்கும் விரோதம் இல்லாமல் அதை ஒரு மகளிர் கல்லூரியாக மாற்றி, நாங்கள் விரும்பியபடி அது ஒரு ஆண்கள் கல்லூரியாக இல்லாவிட்டாலும், குடும்பத் தலைவர் என்ற முறையில் மகளிர்க்கு அளிக்கும் ஸ்த்ரீதனமாக, மகளிர்க்கு முதல் இடம் கொடுத்து, நகரின் மத்தியிலுள்ள அந்தக் கல்லூரிக்குக் கண்ணியம் மிக்க காயிதே மில்லத் அவர்களின் பெயரைச் சூட்டியிருக் கிறார்கள். பல காலமாகவே ஒரு கல்லூரிக்கு எங்கள் தலைவர் பெயரை சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை கலைஞர் அவர்கள் மிக அழகாக நிறைவேற்றித் தந்துவிட்டார்கள். நகரின் மத்தியிலுள்ள கல்லூரிக்கு அந்தப் பெயர் சூட்டப்பட்டுவிட்டது. மகளிர் கல்லூரியாக இருந்தாலும் பரவாயில்லை. அதற்காக கலைஞர் அவர்களுக்கு என்னுடைய சமுதாயத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்துடன் கண்ணியம் மிக்க காயிதே மில்லத் அவர்களின் பெயரில் ஒரு தொழில் கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்று முஸ்லிம் சமுதாயத்தினர்கள் சென்னையில் முயற்சி செய்து கொண்டிருக் கிறார்கள். அதற்கு ஆவன செய்து, அதற்கு வேண்டிய ஒத்துழைப்பை அரசின் சார்பாகத் தந்திட வேண்டும் என்ற வேண்டுகோளையும் இந்தச் சந்தர்ப்பத்தில் விடுக்கிறேன்.

இறுதியாக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நம்முடைய முன்னாள் அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள்கூடச் சொன்னார்கள். இந்த மாநிலத்தில் பட்டினிச் சாவு ஏற்பட்டது என்று சொன்னார்கள். சில தினங்களுக்கு முன்பு ஒரு அமைச்சர் பதவியில் இருந்தவர் உண்மைக்கு மாறான ஒரு தகவலை இப்படிக் கொடுப்பது எனக்கு மிகவும் வேதனை தருகிறது. தமிழகத்தில் எங்கே பட்டினிச் சாவு ஏற்பட்டது? இந்த 7 ஆண்டுக் காலத்தில்



தமிழகத்தில் எங்கேயாவது பட்டினிச் சாவு ஏற்பட்டது என்று நிரூபிக்க முடியுமா? உண்மையிலேயே அதுபற்றி ஏதாவது தகவல் கொடுக்க முடியுமா என்று தங்கள் மூலமாகக் கேட்கிறேன். தாங்கள் அப்படி ஒரு உறுப்பினர் சொல்வதிலிருந்து எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் சொல்லிக்கொள்கிறேன். அதை நான் ஒரு குறையாகச் சொல்லவில்லை. நம்பிக்கையின்மை தெரிவிக்கும் தீர்மானமாக இருப்பதினால் சொல்ல விரும்புகிறேன். எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாக இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த ஆண்டு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பதவிக்குத் தேர்வு நடந்தது. 67 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதில் ஒரே ஒரு முஸ்லிமுக்குத் தான் அந்தப் பதவி கொடுக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். அந்தத் தகவல் உண்மையா, இல்லையா என்பது முதல் அமைச்சர் அவர்களுக்குத்தான் தெரியும். 67 பேர்களில் ஒரு முஸ்லிம்தான் சேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். முஸ்லிம்கள் போலீஸ் வேலைக்குக் கூட லாயக்கு இல்லாமல் இருக்கிறார்களா? தமிழகத்தில் ஒரு பழமொழி உண்டு * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பழமொழி வேண்டியதில்லை. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்தப் பழமொழியை எடுத்து விடுவது நல்லது.

**திரு. ஆலடி அருணா:** குறிப்பேட்டிலிருந்து எந்தப் பகுதி எடுக்கப்படுகிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பழமொழி மட்டும் * * நீக்கப்படும்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** அந்தப் பழமொழியை எடுத்து விடுங்கள். எங்களை போலீஸுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* * 'மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்** : முஸ்லிம் சமுதாயத்தினரின் விகிதாசாரத்தின் அடிப்படையில்தான் நான் கேட்கிறேன். அதற்கு மேல் கூடுதலாகக் கேட்பதற்கு நான் தயாராக இல்லை. எங்களுடைய விகிதாசாரத்தின் அடிப்படையில் வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்றுதான் கோருகிறேன்.

தோழமைக் கட்சி என்ற முறையில் முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். அதை விண்ணப்ப ரூபத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். கட்டடத்தை எத்தனை எஃகினால் கட்டினாலும், பசி, பட்டினி, வறுமை என்ற நெருப்புப் பற்றிக்கொண்டால் எஃகு உருகிவிடும். தமிழகத்தில் உணவு நிலைமை பயங்கரமான அபாயகரமான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறது. என்னுடைய வேண்டுகோளாகச் சொல்கிறேன். இந்தச் சூழ்நிலையை எவ்வளவு அழகாகவும், திறமையாகவும், சீக்கிரமாகவும் சமாளிக்க முடியுமோ அந்த முறையில் சமாளிக்க வேண்டும். இல்லையென்று சொன்னால், எங்களைப் போன்ற உண்மையான நண்பர்கள் 1000 பேர்கள் கோட்டைச் சுவர்கள் எழுப்பித் தடுத்து நிறுத்தினாலும், மக்கள் எழுச்சியை, கோபத்தைத் தடுத்து நிறுத்த முடியாது. கலைஞர் அவர்களுக்கு உள்ள சிறப்புத் திறமையினால் உணவுப் பிரச்னையை வெகு விரைவிலே சமாளித்துத் தமிழக மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற அசாதாரணமான நிலையை நீக்கி, அவர்களுக்கு சுக வாழ்வு அளிப்பதற்கு அனைத்தையும் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து, இந்த அளவுக்கு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் பேரவையின் இன்றைய அலுவல்கள் முடிவுற்று, 16—8—74 அன்று காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.



## 6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

76. Notification issued with G.O. Ms. No. 649, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Karur Local Planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).].

77. Notification issued with G.O. Ms. No. 625, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Theni Allinagaram Local Planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

78. Notification issued with G.O. Ms. No. 29, Agriculture, dated the 9th January 1974 in regard to amendment relating to declaration of notified market area for Sattur Market in Ramanathapuram district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).].

79. Notification issued with G.O. Ms. No. 60, Agriculture, dated the 21st January 1974 in regard to declaration of notified market area for Ammapet market in respect of paddy. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).].

80. Notification issued with G.O. Ms. No. 2273, Home, dated the 24th August 1973 in regard to amendment to rule 209 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).].

81. Notification issued with G.O. Ms. No. 2406, Home, dated the 7th September 1973 in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Act, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).].

B. *Reports, Notifications and Other Papers.*

*27 Statement of action taken on the suggestions made by the Members of the Tamil Nadu Legislature during the discussions on the Annual Financial Statement of the Tamil Nadu Electricity Board for the year 1973-74. (English and Tamil).

* Despatched to Members on 13th August 1974.



## இணைப்பு I

(266-ம் பக்கத்திலுள்ள 66 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினவிற்கான விடையைக் காண்க.)

(அ) ஆம்.

(இ) நகர்ப்புற, கிராமப்புறப் பகுதிகளுக்குத் தூ நீர் வழங்குதல், போதிய வடிகால் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவற்றின் அவசியம்பற்றி அரசு கவனம் செலுத்தி வந்துள்ளது. குடிநீர் வழங்கல், வடிகால் திட்டங்கள் தொடர்பானவற்றை இதுவரை பல துறைகள் கவனித்து வந்தன. குடிநீர் வழங்கல், வடிகால் வசதித் திட்டங்களைச் சிறந்த முறையில் ஆய்வு செய்து வகுத்து அவற்றை செவ்வையாக நிறைவேற்ற ஓரே ஒரு தனி முகவர் அமைப்பின் ஆய்வு வரம்பிற்குள் இவ்விரு திட்டங்களையும் கொண்டு வருவது இன்றியமையாததாகும் என்று அரசு கருதியது. அவ்வாறே 1971 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 14 ஆம் தேதி முதல் தமிழ்நாடு குடிநீர் வழங்கல்—வடிகால் வாரியத்தை அரசு அமைத்தது. தமிழ் நாட்டிலுள்ள நகர்ப்புற, கிராமப்புற பகுதிகள் அனைத்திற்கும் தூ நீர் வழங்கத் தமிழ்நாடு குடிநீர் வழங்கல்—வடிகால் வாரியம் முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டு வருகிறது.

2. தற்போது குடிநீர் வழங்குத் திட்டங்கள் சென்னை, மதுரை மாநகரங்களில் செயல்பட்டு வருகின்றன. 99 நகராட்சிகளில் 87 நகராட்சிகளுக்கும், 13 நகரியங்களில் 8 நகரியங்களுக்கும், 626 பேரூராட்சிகளில் 81 பேரூராட்சிகளுக்கும் இத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நகராட்சி, நகரங்கள், பேரூராட்சிகள் ஆகியவற்றைத்தவிர, வழியிலுள்ள 124 கிராமங்களுக்கு, நகர நீர் வழங்கு திட்டங்களிலிருந்து நீர் வழங்குவது நீட்டிக்கப்பட்டுள்ளது.

3. கிராமப்புற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக, தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியம் சில திட்டங்களை மேற்கொண்டுள்ளது ; அவையாவன :—

(i) யுனிசெஃப் ( (UNICEF) திட்டத்தின்கீழ் குழாய்க் கிணறுகள்.

(ii) கிராமக் குடிநீர் வழங்கு விரைவுத் திட்டம் Accelerated Programme ஆகியன.

கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கல் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது :—

(i) குடிநீர் வழங்குவதற்கான நீர் வாயில் எதுவுமில்லா கிராமங்களும், சிற்றூர்களும்.

( ) போதுமான குடிநீர் வசதியற்ற கிராமங்களும், சிற்றூர்களும்.

(iii) கொள்ளை நோய் பெருவாரியாகப் பரவக்கூடிய பகுதிகளில் குடிநீர்த் தேவையுள்ள கிராமங்களும் சிற்றூர்களும்.

இந்தப் பிரச்சினையை செவ்வையாகத் தீர்ப்பதற்கு முதற்கண் (i),(iii) ஆகிய வகைகளை எடுத்துக்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. ஏனெனில் அத்தகைய இடங்களில் குடிநீரே கிடையாது.

(a) Yes.

(b) The importance of providing protected drinking water supply and adequate drainage facilities to urban and rural areas alike had been engaging the attention of the Government. Matters connected with drinking water-supply and drainage schemes were being dealt with by several departments. The Government considered that for effective planning and execution of drinking water and drainage schemes, it was essential that these were brought under the purview of a single agency for purposes of investigation and execution of these schemes. They accordingly constituted the **Tamil Nadu Water-Supply** and Drainage Board with effect from 14th April 1971. The Tamil Nadu Water-Supply and Drainage Board is taking every step to give protected water-supply to all the urban and rural areas in the State of Tamil Nadu.

2. The water-supply schemes are now in operation in both the Madras and Madurai cities, 87 out of the 99 municipalities, 8 out of the 13 townships and 71 out of the 626 town panchayats. Besides the Municipal towns and Town Panchayats water-supply has been extended to 124 wayside village from urban water-supply.

3. As regards the provision of protected drinking water-supply to the rural population, the Tamil Nadu Water-Supply and Drainage Board has undertaken specific programmes, viz., (i) the UNICEF programme of the tube-wells and (ii) the Accelerated







**Programme of Rural Water-Supply.** The Rural Water-Supply problem has been divided into three categories as shown below on a latest review of the position :—

(i) Villages and hamlets where there is no source of drinkink water-supply;

(ii) Villages and hamlets with inadequate water-supply; and

(iii) Villages and hamlets in the endemic areas requiring water-supply.

To tackle the problem effectively it is considered that the categories (i) and (iii) be taken up initially, as these are the categories where water-supply does not exist at all.

M24 SW
27.2.76

SECRETARIAT LIBRARY
27 SEP 1976
GOVERNMENT OF TAMIL NADU

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1974 ஆகஸ்ட் 16.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### I. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Seats for girls in B.Com. course.*

*91 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :—

(*a*) whether the Government are aware of the non-availability of seats for girl students in the B.Com. course of study at Tiruchirappalli ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) ஆறு அரசு மகளிர் கல்லூரிகளில் 1974–75-ம் ஆண்டு பி.காம். வகுப்புகள் தொடங்குவதற்கான இணைப்பு கோரும் செயற்குறிப்பு பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தவிர, மூன்று தனியார் மகளிர் கல்லூரிகளும் மேற்படி வகுப்பு தொடங்க அனுமதி கேட்டுள்ளன.

திரு. என். டென்னிஸ் : துணைத் தலைவர் அவர்களே, இதன் மூலம் எத்தனை மாணவர்கள் பலன் அடைவார்கள் ? எத்தனை மாணவர்களுக்கு அட்மிஷன் கிடைக்கும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அனுமதி தரும்படியாக பல்கலைக்கழகத்தை நாம் கேட்டோம். பல்கலைக்கழகம் இந்த ஆண்டு எந்தக் கல்லூரியிலும் பி.காம். வகுப்பு துவங்க அனுமதி வழங்கவில்லை. பல்கலைக்கழகம்தான் அனுமதி வழங்க வேண்டியிருக்கிறது. பல்கலைக்கழகத்தைக் கேட்டால் பி. காம். வகுப்பு

நடத்துவதற்கு வேண்டிய எம்.காம். படித்தவர்கள் போதுமான எண்ணிக்
கையில் இல்லாததால் அனுமதி வழங்குவதற்கில்லை என்று பல்கலைக்
கழகம் கூறுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: திருச்சியில் தற்போது எந்த
எந்தக் கல்லூரிகளில் பி.காம். வகுப்புகள் இருக்கின்றன? ஹோலி
க்ராஸ் கல்லூரியில் பி. காம். வகுப்பு இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே,
திருச்சியில் செயிண்ட் ஜோசப் கல்லூரியிலும், பெரியார் ஈ. வே. ரா.
கல்லூரியிலும், ஜமால் முகைதீன் கல்லூரியிலும், தேசியக் கல்லூரி
யிலும்—ஆக நான்கு கல்லூரிகளிலும்—பி.காம். வகுப்புகள் இருக்கின்றன.
ஹோலி க்ராஸ் கல்லூரியில் இல்லை.

திரு. என். இட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் அரசினர்
பெண்கள் கல்லூரியில் தகுதி வாய்ந்தவர்கள் இருந்தும், மாணவிகளை
வகுப்பில் சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்கள். இடம் இருக்கிறது என்று
அறிவிக்கப்பட்டும் சேர்த்துக் கொள்ளாத நிலை இருப்பது அரசுக்குத்
தெரியுமா? இதை நிவர்த்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே,
அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. ஆலடி அருணா: பி.காம். படிக்க வேண்டுமென்ற விருப்பம்
பெரும்பாலான மாணவர்களுக்கு மிகுதியாக இருக்கின்ற காரணத்தால்,
எல்லாக் கல்லூரிகளிலும் பி.காம். வகுப்புகள் கண்டிப்பாக இருக்கக்
கூடிய அளவுக்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே,
பி.காம். படிக்கவேண்டும் என்ற ஆர்வம் மாணவர்களுக்கு ஏற்பட்டிருப்
பதன் காரணமாகத்தான் எல்லாக் கல்லூரிகளிலும் இப்படிப்பை வைக்க
வேண்டும் என்ற எண்ணத்தை அரசு கொண்டிருக்கிறது. அந்த
அளவுக்குத்தான் பல்கலைக்கழகத்தினிடம் சிபாரிசும் செய்திருக்கிறது.
பி. காம். வகுப்பில் சேருவதற்கு பி.யு.சி.-இல் காமர்ஸ் க்ரூப்பை விருப்பப்
பாடமாக எடுத்துப் படித்திருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு
முதல் சலுகை தரவேண்டுமென்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு
வருகிறது. அந்த முறையில் புகுமுக வகுப்புகளிலும் காமர்ஸ் பிரிவுக்கு
இடம் அளித்து, பிறகு பி.காம். வகுப்பும், எம். காம். வகுப்பும்
துவங்க வேண்டும். பி. காம். படிப்பு சொல்லிக் கொடுப்பதற்கு
எம்.காம். படித்துத் தேறியவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்ப
தால், பி.காம். வகுப்பு அனுமதி வழங்க பல்கலைக்கழகம் மறுத்து
வருகிறது. அதனால், பல்கலைக்கழகத்தைத் தூண்டி, எம்.காம்.
வகுப்புகளை அதிகமாக ஆக்கி, பயிற்சி தருகிறவர்களையும் அதிகமாக
ஆக்கும்படியாக அரசு கேட்டிருக்கிறது.



திரு. நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, அரசு தொடர்ந்து
சொன்னாலும், பி.காம்., எம்.காம். வகுப்புகளுக்கு அனுமதி வழங்குவதில்
யூனிவர்சிடி கண்டிப்பாக இருக்கிறது. செய்யாறு அரசினர் கலைக்
கல்லூரியில் இந்த ஆண்டு எப்படியும் எம்.காம். வகுப்பு துவக்குவது
என்று பல்கலைக்கழகத்தினர் அங்கு சென்று, அதற்கான வசதிகள்
இருக்கின்றனவா என்று பார்த்து, எல்லாம் முடிந்ததற்குப் பிறகும்
இந்த ஆண்டு எம். காம். வகுப்புக்கு அனுமதி கிடைக்கவில்லை. எம்.காம்.,
பி.காம். வகுப்புகளுக்கு லாபரடரி போன்ற வசதிகள் கூட தேவை
இல்லை. நாட்டிலே எம்.காம்-க்கும், பி.காம்.க்கும் டிமாண்டு அதிகமாக
இருக்கிறது. இதை மனத்திலே வைத்துக் கொண்டு அவசியம் இப்படிப்
பட்ட வசதிகளைச் செய்து தருமாறு மீண்டும் பல்கலைக்கழகத்தை அரசாங்கம்
வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற காரணங்களையெல்லாம் கூறித்தான்
அரசு பல்கலைக்கழகம் அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்
டிருக்கிறது. மதுரைப் பல்கலைக்கழகம் சிலபல கல்லூரிகளில் பி.காம்.
வகுப்பு துவங்க அனுமதி அளித்திருக்கிறது. சென்னைப் பல்கலைக்கழகம்
அனுமதி அளிக்கவில்லை. மேலும் அரசு வற்புறுத்தி வருகிறது.

**Thiru K S. KOTHANDARAMIAH**: The demand for B· Com.
course is increasing especially in Dharmapuri district, which is
a backward district. The demand is increasing such will the Hon.
Minister for Education see to it that this course is
introduced in colleges in Dharmapuri district?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே,
கூடுமான வரையில் எல்லா அரசுக் கல்லூரிகளிலும் பி.காம். வகுப்புகள்
துவங்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தைத்தான் அரசு கொண்டிருக்
கிறது. எந்த எந்தக் கல்லூரிகளில் இல்லையோ அந்தக் கல்லூரிகளில்
துவங்க வேண்டும் என்பதுதான். வரலாறு, புவியியல், பொருளா
தாரம் போன்ற பாடங்கள் துவங்க என்ன வசதிகள் வேண்டுமோ
அந்த வசதிகள்தான் பி. காம். துவங்கவும் தேவைப்படும். அந்தக்
காரணத்தைக் காட்டி, பல்கலைக்கழகத்தை அரசு வற்புறுத்தி வரு
கிறது.

திரு. குப்பம் கே. எஸ். இராமகிருஷ்ணன்: சில மாணவ மாணவிகள்
குறிப்பிட்ட க்ரூப்பில் சேர்ந்து அந்தப் பாடத்தைப் படிக்கவேண்டுமென்று
விரும்பினாலும், அவர்கள் விரும்புகிற க்ரூப்பில் இடம் கிடைக்காமல்
வேறு க்ரூப்பில் சேர்ந்துவிடுகிறார்கள். பின்னர், விரும்பி க்ரூப்பில்
இடம் கிடைத்து மாற்றிக் கொள்ள வேண்டுமானால் ஓராண்டுக்குரிய
முழுத் தொகையையும் கட்டவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில்
முழுப் பணத்தையும் வாபஸ் தரமுடியாது என்றாலும், ஐம்பது
சதவீதமாவது வாபஸ் செய்யும்படி அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், அதை நாம் கடைப்பிடிக்கலாம். ஆனால் தனியார்க் கல்லூரிகளில் அதைக் கடைப்பிடிக்க முடியவில்லை.

*Personal file system for teachers in Polytechnics.*

*92 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to discontinue the personal file system of the Non-Gazetted Teachers of Polytechnics ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) and (இ) பல்தொழிற் பயிற்சிப் பள்ளி மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் உள்ள அரசிதழ் பதிவு பெறாத ஆசிரியர்களுக்கு இரகசியக் குறிப்பு எழுதும் முறையை நீடிக்க வேண்டாம் என அரசு ஏற்கெனவே ஆணை வெளியிட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த இரகசியக் குறிப்பு எழுதும் முறை எப்பொழுது நீக்கப்பட்டது? எதனால் இது உருவாக்கப்பட்டது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முதலில் அரசிதழ் பதிவு பெறாதவர்களுக்கு இரகசியக் குறிப்பை நீக்க அரசு உத்தரவிட்டு அவர்களைப் பொறுத்து நீக்கப்பட்டது. ஆனால், பல் தொழிற் பயிற்சிப் பள்ளி மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் உள்ள அரசிதழ் பதிவு பெறாத ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு பதவி உயர்வு தருவதற்கு இப்படிப்பட்ட குறிப்புகள் இருந்தால் நல்லது என்ற கருத்தை தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அறிவித்ததன் காரணமாக இந்தத் துறையில் மட்டும் அந்த இரகசியக் குறிப்பு நீக்கப்படாமல் இருந்தது. பிறகு அரசு ஆராய்ந்து, எல்லாத் துறைகளிலும் இதை நீக்கிவிட்டு இந்தத் துறையில் மட்டும் நீக்காமலிருப்பது முறையல்ல என்று கருதி 11—4—1974-ல் அறவே நீக்க ஆணை வெளியிட்டது.

திரு எம். சுரேந்திரன்: சார், இரகசியக் குறிப்பேடுகள் குறிப்பிட்ட சில காரணங்களுக்காகவே அமைக்கப்பட்டன. அவற்றை மாற்றுகின்ற போது அதற்கு மாற்றாக வேறு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதற்கான ஏற்பாடு செய்யவேண்டுமென்ற கருத்துருவும் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இரகசியக் குறிப்பேட்டில் பெரும்பாலும் அவர்களுடைய கேடுகள், மற்றவைகளை இரகசியமாக குறிக்கும் முறை இருந்தது. இதற்கு மாறாக "பெர்ஃபார்மன்ஸ் லிஸ்ட் அல்லது மெரிட் லிஸ்ட்" அதாவது திறமை சிறப்பாக இருக்குமானால் அதற்கு வெளிப்படையாகவே சிலபல சான்றிதழ்களை வழங்கலாமா என்ற அறிவுரைகள் வழங்கப்பட்டன. ஆனால், அரசு அதுபற்றி இன்னும் முடிவு எடுக்கவில்லை.

*Wax Museum at Madras.*

***93 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :—**

**(*a*) whether there is a proposal under the consideration of the Government to set up Wax Museum in Madras ; and**

**(*b*) if so, the details thereof ?**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

(அ) ஆம்.

(இ) வெளிநாட்டு வல்லுநர்களின் உதவி தேவைப்படும் செலவு மிகுந்த திட்டமாக உள்ளதால் இத் திட்டம் நிதி நிலை சீராகும் வரையில் ஒத்திப்போடப்பட்டுள்ளது. தொழில் நுட்பக் காரணங்களுக்காக மெழுகு பயன்படுத்துவதை தவிர்க்கும்பொருட்டு ஏனைய பொருள்களைப் பயன்படுத்தி உள்நாட்டு விற்பன்னர்களின் உதவியைக் கொண்டு இத் திட்டத்தைச் செயற்படுத்த இப்போது திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, சென்னையில் மெழுகுப் பொருள்களைக் கொண்டு, அரும்பொருட்காட்சி அமைத்தால் வெளிநாடுகளிலிருந்து வருகிற பயணிகளைக் கவரவும் அத்தகைய பொருள்களின் விற்பனையைப் பெருக்கவும் முடியும். ஆகையால் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே மெழுகைப் பயன்படுத்தி மெழுகுபொருள் அரும்பொருட்காட்சி வைக்கலாமா என்று பிற நாடுகளோடு நாம் தொடர்பு கொண்டு ஆராயப்பட்டது. அதற்காக மேல்நாட்டிலிருந்து ஒருவர்கூட வரவழைக்கப்பட்டு ஆராயும்படி அவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். ஆனால், அதற்கு ஏராளமான செலவு ஆகும் என்பது மட்டுமல்லாமல் அன்னியச், செலாவணி தட்டுப்பாட்டின் காரணமாகவும் இப்பொழுது நிதிநிலை இடம் கொடுக்காததன் காரணமாகவும் வெளிநாட்டிலிருந்து வரவழைத்து மெழுகுப் பொருளைக் கொண்டு அரும்பொருட்காட்சியை அமைப்பதற்கில்லை. ஆனால்

[1974 ஆகஸ்ட் 16

உள்நாட்டில் கிடைக்கும் வேறு பல பொருள்களிலிருந்து இத்தகைய பொருள்களைச் செய்யும் முறை இருக்கிறது. அதை ஆராய்ந்து அந்த வகையில் அரும்பொருட்காட்சி அமைக்கலாம் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அண்மையில்கூட சென்ற ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற பொங்கல் சுற்றுலாப் பொருட்காட்சிசாலையில் ஓரிஸா கலைக் கூடத்தில் நம் நாட்டில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே சிறந்த முறையில் கண்காட்சி அமைத்திருந்தார்கள். அவர்களோடு தொடர்பு கொண்டு, அத்தகைய முறையில் செய்ய முடியுமானால், உள்நாட்டு விற்பன்னர்களைப் பயன்படுத்தி உள்நாட்டுப் பொருள்களைப் பயன் படுத்தி அப்படிப்பட்ட அருங்கலைப் பொருட்காட்சி அமைக்கும் எண்ணம் அரசுக்கு இருந்து வருகிறது. அதுபற்றி ஆராய்ந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 94 உடன் 95-ம் தொடர்புடையதாக இருப்பதால் இரண்டு வினாக்களையும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

## கண்ணொளி வழங்கும் திட்டம்.

*94. வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973-ம் ஆண்டு முடிய இலவசக் கண்ணொளித் திட்டத்திற்கு செலவிடப் பட்டிருக்கும் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: 1973-ம் ஆண்டு முடிய இலவசக் கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு ரூ. 34,94,084·09 செலவிடப் பட்டுள்ளது.

*95 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்ணொளி வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை வசூலான தொகை எவ்வளவு, மாவட்ட வாரியாக?

(இ) 1973 நவம்பர் வரை செலவொகியுள்ள தொகை எவ்வளவு? மாவட்டவாரியாக?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) and (இ) சட்டமன்றப் பேரவையின்முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

@ 520-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 ஆகஸ்ட் 16]

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, கண் ஆப்பரேஷன் முடிந்து பல நாட்களுக்குப் பிறகுதான் கண்ணாடி வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படும் கண்ணாடிகளிலும் தரக்குறைவு இருப்பதாகச் சொல்லப் படுகிறது, இந்தக் குறைகளைப் போக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அறுவைச் சிகிச்சை முடிந்த பின் குறைந்தது 7 அல்லது 8, 9 நாட்களுக்குப் பின்னால்தான் கண்ணாடி அணிய முடியும். அதுவரையில் அறுவைச் சிகிச்சை நடந்த நோயாளிக்கு தகுந்த பாதுகாப்பும் சிகிச்சையும் தொடர்ந்து கொடுக்கப் படவேண்டும். நோயாளி தலையை அசைக்காமல், ஆட்டாமல் பாதுகாக்கப் பட வேண்டும். பொருத்தப்படுகிற கண்ணாடி தரக்குறைவானது என்று சொல்ல முடியாது. காரணம் காட்டராக்ட் ஆப்பரேஷன் நடக்குமானால் ஒரே குறிப்பிட்ட கண்ணாடிதான் பொருத்த முடியும். பெரும்பாலும் அவை டில்லி வட்டாரத்தில் தயாரிக்கப்படுகின்றன. அங்கிருந்து ஆயிரக்கணக்கில் வரவழைக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கண்ணொளி வழங்கும் திட்டத்திற்காக வசூல் செய்யும் நேரத்தில் அதிகாரிகளும் மற்றவர்களும் வசூல் செய்கிறார்கள்: ஆகவே, முறையான கணக்கு வைக்கப்பட்டு, வசூல் செய்த பணத்திற்கு ரசீது அளிக்கப்படுவதில்லை. அதனால் பொதுமக்கள் மத்தியில் ஒரு சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இதை முறைப்படுத்தி, உரிய கணக்கு வைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். அவர்கள் கூறுகின்ற புகாரைப்பற்றி விபரங்கள் தெரிந்துக்கொள்ளாமல், பொதுவாகக் கூறப்படுகின்ற புகாரை ஒரு கேள்வி யாக்கி சட்டமன்றத்தில் கேட்பது சட்டமன்ற மரபு மீறப்படுவதாகும். கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு நிதி வசூலிக்கும் பொறுப்பை பொதுமக்களிடம் ஒப்படைக்கவில்லை. யாராவது எப்போதாவது அமைச் சர்களிடம், அதுவும் மாலைக்குப் பதிலாக இந்தத் திட்டத்திற்கு என்று 10 அல்லது 11 ரூபாய் வழங்குகிறார்கள். அதை நாங்கள் உரிய இடத்தில் ஒப்படைத்து விடுகிறோம். மற்றபடி கண்ணொளி வழங்கும் திட்டத்திற்காக கூட்டுறவுத் துறை, வேறு பல துறைகள் மூலமாக நிதி பெற்று, அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கிற டெப்டி செக்ரட்டரியிடம் வழங்கப் படுகிறது. அதற்கு உரிய ரசீதும் கொடுக்கப்படுகிறது. எங்காவது ஏதாவது குறை இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்போதே அதை அரசுக்குச் சுட்டிக்காட்டி, அதில் நடவடிக்கை எடுக்காமல் இருந் திருந்தால் அல்லது அவர்களோ அவர்களுக்குத் தெரிந்தவர்களோ இத் திட்டத்திற்கு நன்கொடை கொடுத்து, அது கணக்கில் காட்டப்படவில்லை என்று தெரிந்தால், அவர்கள் கொடுத்த நன்கொடை வந்து சேர்ந்ததா என்று கேட்கலாம். அப்படிச் செய்யாமல் பொதுவான ஒரு குற்றச்சாட்டை எழுப்புவது சரியல்ல.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த இலவசக் கண்ணொளி வழங்கும் திட்டத்தின் மூலம் லட்சக்கணக்கானவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். இன்னும் சில கிராமங்களில் கண்ணொளி வழங்கப்பட வேண்டிய மக்கள் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் சுற்றுப்பயணம் செய்யும் போது கண்டோம். அப்படிப்பட்டவர்களுக்கும் கண்ணொளி வழங்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு கண்ணொளி வழங்கப்படவேண்டியவர்கள் அதிகமாக இருக்கின்ற வட்டாரம் இருப்பதாகத் தெரியவந்தால், அந்த இடத்தில் முகாம் நடத்த ஏற்பாடு செய்யவேண்டியது அவருடைய கடமை. அதைச் செய்யாமல் சட்டமன்றத்தில் கேள்வி போடலாம் என்று இருந்தால் அவருடைய கடமையிலிருந்து தவறிவிட்டார் என்பதாகும்.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பேசும் போது கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு அதிகாரிகள் வசூல் செய்யவில்லை என்று குறிப்பிட்டார்கள். சில நேரங்களில் அதிகாரிகள் நிதி வழங்கினாலும், அவர்கள் வசூல் செய்து வழங்கவேண்டுமென்ற கட்டாயம் எதுவும் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அதிகாரிகள் வசூல் செய்வதில் கட்டாயம், நிர்ப்பந்தம் இருக்கிறது என்று மதுரை மாநகராட்சி மேயர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அத்தகைய புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா ? அவைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதிகாரிகள் என்று சொன்னாலே கட்டாயம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாக எண்ணக் கூடாது. கட்டாயமாக வசூல் செய்யும் முறை இல்லை. சில அமைப்புகளின் சார்பில் கூட்டம் நடத்தி, 2 லட்சம், 50,000 ரூபாய் என்று அந்தக் கூட்டத்திலே வழங்குகிறார்கள். மற்றும் சிலர் அந்தக் கூட்டங்களில் 100 ரூபாய், 200 ரூபாய் என்றும் கொடுக்கிறார்கள். அதற்கு முறைப்படி ரசீதும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது இப்படிப்பட்ட புகார்களைச் சொல்வதாக இருந்தால் அது சில குந்தகங்களை ஏற்படுத்தும். அது நல்லதல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தந்திருக்கின்ற விபரங்களிலிருந்து கன்னியாகுமரி ஜில்லாவில் கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு வசூலான தொகை ரூ.92,087·58 என்றும், செலவு செய்யப்பட்டது ரூ. 13,637·25 என்றும் இருக்கிறது. இந்த கண்ணொளி வழங்கு முகாம் ஜில்லா அளவில் நடைபெற்றதால் அங்கே உள்ள பலர் சிகிச்சை பெறமுடியாமல் போய்விட்டது. ஆகையால் தாலுகா அளவில் முகாம்கள் நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் 5, 6 இடங்களில்தான் முகாம்கள் நடத்தப்பட்டிருக்கின்றன என்பதை மறந்திருக்க மாட்டார்கள்



என்று நினைக்கிறேன். அப்படியிருந்தும் ஒரு முகாமில் 90, 80 பேர்கள் தான் வந்தார்கள். மேலும் ஒரு முகாமில் குறைந்தது 100 பேர்களாவது சிகிச்சைக்கு வருவதாக இருந்தால் அங்கே முகாம் நடத்த மருத்துவக் குழுவினர் தயாராக இருக்கிறார்கள். சிகிச்சைக்கு வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் அங்கே செலவு செய்கின்ற தொகையும் குறைவாக இருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : தலைவரவர்களே, கண்ணொளி முகாம் நடத்துவதில் பலவித வசூல் செய்வதாக புகார் வருவது தெரிந்ததுதான்.......

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, I don't want any assertion in this House by Members ; and if the hon. Member is aware of any irregularity, he should have written about it to me he has not done that. கண்ணொளி முகாமைப் பொறுத்த வரையில்ஒரு டெப்டி செகரட்டரி பொறுப்பு வகிக்கிறார். ஆகவே, ஒரு புகார் இருப்பதாக தெரிந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னரே அவரிடம் தெரிவித்திருக்க வேண்டும் ; அல்லது அரசாங்கத்திடம் தெரிவித்திருக்க வேண்டும். அப்படி எந்தப் புகாரும் தெரிவிக்காமல் இங்கே குற்றஞ்சாட்டுவதை எங்களுடைய கட்சி உறுப்பினராக இருந்தாலும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதோடு இது கேள்வி நேரம் என்பதையும் நினைவுபடுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தில் புகார் சொல்வதற்கு இடமில்லை. மூலக் கேள்வியை ஒட்டிய துணைக் கேள்விகளைக் கேட்பதுதான் சரியானது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்கு தொடர்பான துணைக் கேள்விகளைக் கேட்பது தான் முறை. (திருவாளர்கள் ஆலடி அருணா, பெ. சௌந்தரபாண்டியன் ஆகியோர் எழுந்தார்கள்). கேள்வி நேரத்தில் எக்ஸ்பிளனேஷனுக்கு இடமில்லை, உட்காருங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : நம்முடைய அமைச்சரவர்கள் ஏதோ அசர்ஷன் செய்து அலிகேஷன் செய்யப்போவதாக நினைத்துச் சொல்கிறார்கள்.

* * * * *

அதிகாரிகள் வசூல் செய்வதை நிறுத்திவிட்டு, அதற்கான செலவை ஏன் பட்ஜெட்டிலேயே சேர்த்து செலவிடக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. ஆலடி அருணா :                    *          *          *

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சட்டசபையில் கேள்வி போடுவதற்கு ஒரு வரன்முறை இருக்கிறது.

*          *          *          *

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றி அரசுக்கு புகார் கொடுத்திருந்தால், டெப்டி செகரட்டரி மூலம் விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்திருக்கலாம். அவர்கள் அப்படி புகார் இருக்கிறது என்று எழுதிக் கொடுத்து, அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் என்மீது கூட அவர்கள் குற்றஞ்சாட்டலாம். அதை விட்டுவிட்டு பொதுவாகக் குற்றஞ்சாட்டுவது நல்லதல்ல. இம்மாதிரியான குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை. பொதுவாக கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுக்கள் தெரிவிப்பதை ஏற்றுக்கொள்வதில்லை.

THIRU V. KRISHNAMOORTHY : I stand by my allegation.

THE HON. THIRU K. ANBAZHAGAN : We will not permit any such allegation during question hour.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

*          *          *

இது கேள்வி நேரம். இதுபோன்ற குற்றச்சாட்டுகளை, ஆதாரங்களை வைத்துக்கொண்டுதான் சொல்லவேண்டும். அதுவும் குற்றச்சாட்டுக்கு நேரம் இல்லாத நேரத்தில் இதைச் சொல்லியிருப்பது முறை அல்ல. ஆகவே அந்தப் பகுதியை நான் அவைக் குறிப்பில் இருந்து நீக்கி விட ஆணையிடுகிறேன்.

THIRU ALADI ARUNA : We object to it.

THE HON. THIRU K. ANBAZHAGAN : During question hour, we cannot permit any allegation. It may be substantiated or argued during any other debate.

MR. DEPUTY SPEAKER : I have already given my ruling. The hon. Member may proceed on his point.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பட்டது.



THIRU G. R. EDMUND : Sir, on a point of order....

MR. DEPUTY SPEAKER : During question hour, we do not permit any point of order. Therefore, the hon. Member may resume his seat.

THIRU G. R. EDMUND : As per the Assembly Rules, the point of order can be raised at any time.

MR. DEPUTY SPEAKER : During question hour, it is our convention that we do not allow any points of order. Therefore please resume your seat.

திரு. எம். சுரேந்திரன் : நீங்கள் அனுமதித்து, அமைச்சர் கேட்டு, உறுப்பினர் சொன்ன பிறகு அதை நீக்குவது என்பது சரியல்ல.

திரு. ஆலடி அருணா : மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைச் சொன்னார்கள், அது ஆளுங்கட்சிக்கு எதிரான கருத்தாக இருக்கலாம். ஜனநாயகமுறைப்படி அதுவும் பதிவு செய்யப்படவேண்டும். அதை நீக்குவது சரியல்ல.

MR. DEPUTY SPEAKER : No. No. The hon. Member cannot question the ruling of the Chair. Though the hon. Member has a right to protest against the ruling of the Chair, he cannot challenge or question the ruling of the Chair.

THIRU ALADI ARUNA : It is an allegation....

MR. DEPUTY SPEAKER : This is an allegation against the Chair. This being the first time, I do not want to take serious notice of it. The hon. Member may resume his seat.

*Madras Medical College.*

*96 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether there are proposals under the examination of the Government to upgrade the Madras Medical College into a Research Centre ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) அரசுப் பணிகளுக்கு வேண்டிய மருத்துவர்களின் தேவைக்காகவும் மருத்துவக் கல்லூரிகளுக்கு வேண்டிய தகுதியுள்ள ஆசிரியர்களின் தேவைக்காகவும், மாவட்ட, வட்ட மருத்துவ மனைகளின் சிறப்பு சிகிச்சை அளிக்கும் வல்லுநர் தேவைக்காகவும் அகில இந்திய பட்ட மேற்படிப்புக் கல்வி ஆராய்ச்சி நிலையங்களுக்குச் சமமாக சென்னை மருத்துவக் கல்லூரியை பட்ட மேற்படிப்புக் கல்வி ஆராய்ச்சி நிலையமாக உயர்த்துவதற்கு கருதப்பட்டுள்ளது. இந்நோக்கத்தை கருத்திற்கொண்டு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 150 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இது எப்போது நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வளர்ச்சிக்கு செலவிடப்பட வேண்டும். இதைப் படிப்படியாக நிறைவு செய்ய முயற்சி செய்யப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is there any proposal to upgrade the Cholera hospital in Madras City and introduce research there ?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Cholera cannot be upgraded.

THIRU K. M. SUBRAMANIAM: I mean the hospital. I only referred to the Cholera hospital.

THE HON. THIRU K. ANBAZHAGAN: The hospital need not be upgraded. Only the services have to be improved. It is under the Corporation of Madras. Whatever help, they want the Government will give at the time they want them.

*97 வினா— திருமதி த. ந. அனந்தநாயகி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை மருத்துவக் கல்லூரியில் Institute of Orthopaedic Surgery என்று ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : Institute of Orthopaedic Surgery என்கிற பெயரில் ஒரு பிரிவு இல்லை; வேறு பெயரில் இருக்கிறது.



திரு. பெ. சௌந்தரபாண்டியன் : வேறு எந்தப் பெயரில் இருக்கிறது என்று அறிந்து கொள்ளலாமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பெரிய மருத்துவமனையில் இன்ஸ்டிட்யூட் என்று தனிப்பிரிவாக அமைவதில்லை.

1. Orthopaedic Clinic.
2. Fracture Clinic
3. X-ray Department.
4. Treatment room.

என்கிற நான்கு பகுதிகளாக அமைந்து செயல்பட்டு வருகின்றன.

செங்கல்பட்டு மருத்துவ மனை.

*98 வினா திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கல்பட்டு மாவட்ட மருத்துவமனையை நகரின் மத்திய பகுதிக்கு மாற்றி அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, செங்கல்பட்டில் அமைக்கப்பட்டிருக்கிற மருத்துவமனை இந்த மாவட்டத்தின் மத்தியில் அமைக்கப்படவில்லை என்று பரவலாகப் பேசப்படுவதை அரசு அறியுமா ? அதை மாற்றி மத்தியில் அமைத்துத் தருகிற நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கத்தினர் தவறாக மாவட்டத்தின் மத்தியில் என்கிறார். நகரின் மத்தியில் அமையவேண்டும் என்கிற கருத்து தெரிவிக்கப்பட்டது. செங்கல்பட்டு நகரின் மத்தியில் அமைப்பதற்கு அங்கு எங்கேயும் இடம் கிடையாது. நகரத் தெருக்களை எல்லாம் அழித்தால்தான் இடம் கிடைக்கும். இப்போது ஏற்படுத்தப் பட்டிருக்கிற இடமே வசதியானது—பொருத்தமானது. இதை மாற்றுவது தேவையும் இல்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : திருநெல்வேலியில் திருநெல்வேலி மாவட்ட தலைமை மருத்துவமனை இயங்கிக்கொண்டிருந்தது. அங்கே வைத்தியக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தியவுடன் தலைமை மருத்துவ மனையை தூத்துக்குடிக்கு மாற்றியிருக்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தின் கீழ் செங்கல்பட்டில் மருத்துவக் கல்லூரி இருக்கிற காரணத்தினால் அங்கேயிருக்கிற மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்றுகிற உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு, க. அன்பழகன்: நீண்ட காலமாக தலைமை மருத்துவமனை காஞ்சிபுரத்தில் இருக்கிறது. செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைநகர் காஞ்சிபுரம் என்ற கருத்தை மறந்துவிட்ட காரணத்தினால்தான் இந்தக் குறை ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: செங்கல்பட்டில் இருக்கிற மருத்துவ மனையில் க்ளினிகல் பெசிலிடி போதாது என்ற குறை இருக்கிறதே, மாணவர்கள் கூட அது சம்பந்தமாக கிளர்ச்சிகள் செய்தார்களே, அதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: செங்கல்பட்டு மருத்துவ மனையில் க்ளினிகல் பெசிலிடி போதாது என்பது அல்ல, அங்குள்ள மாணவர் களுக்குத் தேவையான எல்லா வசதிகளும் இருக்கின்றன. ஆயினும் பாடப் பயிற்சிக்கு ஏற்ற வகையில் வெரைடீஸ் ஆப் பேஷண்ட்ஸ் அங்கே வருவது இல்லை என்கிற குறைதான் சொல்லப்பட்டது. அதற்காக நான்காவது ஆண்டு பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு வேறு இடத்தில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. நாளடைவில் அந்தக் குறையும் நீங்கிவிடும். அங்கே 50 மாணவர்கள்தான் இருக்கிறார் கள். அவர்களுக்குத் தேவையான க்ளினிகல் பெசிலிடீஸ் எல்லாம் இருக்கின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH: May I know, Sir, from the Hon. Minister for Health whether he has received any representation or recommendation from the Collector of Dharmapuri District to open a Medical College in Dharmapuri district ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அப்படி எந்தவிதமான தீர்மானங்களோ, வேண்டுகோளோ வரவில்லை.

## மதுரை-மண்டபம் நெடுஞ்சாலை.

*41 வின—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

ஆம்.



*42 வின—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையிலிருந்து தஞ்சாவூர் செல்லும் சாலையில் ஆவரங்காட்டுக்கு அருகில் மழை காலங்களில் கண்மாய் கரைப் பிறளி (சகதி) ரோட்டை மறைத்துக் கொள்வதால் போக்குவரத்து தடை படுவதை அகற்ற அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உண்டா?

(இ) ஆம் எனில், மாரநாட்டு கண்மாய் பிறகரையில் (பின்பிறம்) Revetment கட்டும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.

(இ) மாரநாடு கண்மாயின் புறப்பகுதி மண் சரிவினைத் தடுப்பதற் காகவும் சரிவுகள் அணைப்பு ( Revetment ) செய்வதற்காகவும் மதிப்பீடு ஒன்று ரூ. 8,500-க்கு தயாரிக்கப்பட்டு சார்நிலை அலுவலர்களின் பரிசீலனை யில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் திட்டம் எப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது ? தற்போது எந்த நிலையில் இருக்கிறது என்று அறியலாமா ?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கு துணைக் கேள்வி கேட்காவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்காகப் பதில் அளிக்கிறேன். இது, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே எடுத்துக்கொள்வதாக இருந்து, வேலைகள் முடிந்து இருக் கின்றன. இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே டெண்டர்கள் எல்லாம் விடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு பகுதி மட்டும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிக்க என்று டெண்டர் விடப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியுட்பட அனைத்தும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் பூர்த்தி செய்யப்படும்.

## *Vadamalayan Channel Scheme.*

*43 Q.—THIRU T. GANAPATHY: Will the Hon the Minister for Public Works be pleased to state the reason for the delay in the execution of the Vadamalayan Channel Scheme in Nanguneri taluk of Tirunelveli district ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரைக் கலந்து தலைமைப் பொறியாளர் (பாசனம்) இத்திட்டத் திற்கான ரூ. 11·50 இலட்ச செலவில் மதிப்பீடு ஒன்றைப் பரிசீலனை செய்து வருகிறார்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்தத் திட்டமானது நீண்ட நாட்களாக—அந்த வாய்க்கால் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அந்த வட்டாரத்திலுள்ள மக்கள் தொடர்ந்து சொல்லி வந்திருக் கிறார்கள். பல மாநாடுகளிலே தீர்மானங்களெல்லாம் போட்டுவந்திருக் கிறார்கள். அந்தப் பகுதியிலே பல குளங்கள் வெட்டப்படவும், அதிகமாக, இரு போக நஞ்சை எல்லாம் விளைவதற்கு இது ஏதுவாக இருக்கிறதே, இருந்தும் இது தள்ளிப் போடப்படக் காரணம் என்ன ? உடனடியாக இந்தத் திட்டத்தை எடுத்துச் செய்ய அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சியாளருடைய பரிந்துரைக்குப் பிறகு, வருவாய்த் துறை வாரியத்தி னுடைய பரிந்துரையும் கிடைக்குமானால், அரசாங்கம் அதுபற்றி பரிசீலிக்கும்.

## வழுக்குப்பாறை அணைத் திட்டம்.

*44 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பவானி வட்டத்தில், வழுக்குப்பாறை அணை கட்டும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்டவைகளுக்கு இத்திட்டம் வகை செய்கிறது.

(1) இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 54 லட்சமாகும்.

(2) புதிய பகுதிகளுக்கு பாசன வசதி அளித்தல் 750 ஏக்கர்.

(3) இதுவரை பாசனம் பெறாத பகுதிகளுக்குப் பாசனம் அளித்தல் 133 ஏக்கர்.



(4) தற்போது பாசனம் பெறும் பகுதிக்கு பாசன உறுதி அளித் தல் 977 ஏக்கர்.

(5) ஆண்டு ஒன்றுக்கு எதிர்பார்க்கப்படும் கூடுதல் உணவு உற்பத்தி 1,198 டன்.

## தொழிற்பேட்டைகள்.

*99 வினா— திரு. ந. சோணையா : மாண்புமிகு தொழில்துறை அமைச் சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது எத்தனை தொழிற் பேட்டைகள் உள்ளன ?

(இ) அவைகள் அனைத்திலும் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ள னவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இராமநாதபுரம் மாவட்டத் தில் தற்போது காரைக்குடி, சிவகங்கை, விருதுநகர் ஆகிய மூன்று இடங்களில் அரசினர் தொழிற்பேட்டைகளும் சிவகாசியில் ஒரு கூட்டுறவுத் தொழிற்பேட்டையும் உள்ளன.

(இ) மேற்படி மூன்று இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அரசினர் தொழிற்பேட்டைகளில் சிவகங்கை தொழிற்பேட்டையில் உள்ள ஒரு யூனிட் தவிர எல்லா யூனிட்டுகளிலும் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. சிவகாசியில் உள்ள கூட்டுறவுத் தொழிற்பேட்டையில் ஐந்து யூனிட்டுகள் தவிர மற்ற யூனிட்டுகளில் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன.

*100 வினா — திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவாரூரில் ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கான ஆய்வு வேலை கள் தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திருவாரூரில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கும் ஆய்வுப்பணி இன்னும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

*Muduvathur Cement Plant.*

*101 *Q*.—THIRU G. R. EDMUND : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the State Government have proposed to hand-over the Cement Plant at Muduvathur near Tiruchirappalli to the Cement Research Institute ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) and (இ) : முதுவத்தூரி லுள்ள முன்னோடி சிமிட்டி இயந்திரத் தொழிற்சாலையை தென் பகுதியில் ஒரு சிமிட்டி ஆராய்ச்சி நிலையமாகச் செயல்படுத்துவதற்காக இந்திய சிமிட்டி ஆராய்ச்சி நிலையத்திற்கு 6—6—1974 அன்று நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது.

தமிழக அரசு இந்திய சிமிட்டி ஆராய்ச்சி நிலையத்துடன் செய்ய வேண்டிய நன்கொடை சாசனம் தயாரிக்கப்பட்டு விரைவில் கையெழுத் திடப்படும்.

*Upgrading of sub-taluks.*

*102 *Q*.—THIRU R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(*a*) whether the Government propose to upgrade the Radhapuram sub-taluk in Tirunelveli district into a fulledged taluk ; and

(*b*) if so, when it will be given effect to ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இதுகுறித்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த சப்-தாலூக்காவை முழு தாலூகாவாக ஆக்க வேண்டுமென்று நீண்ட நெடுங் காலமாக பரிந்துரை இருந்து கொண்டிருக்கிறது. எந்தக் காலவரை யறையிலே இது சித்தியாகும் என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப் பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மொத்தமாக 40 சப்- தாலுகாக்கள் இருக்கின்றன. அந்த 40 சப் தாலூகாக்களை தாலூகாக்களாக உயர்த்தவேண்டுமென்று சிபாரிசு செய்யப்





பட்டிருக்கிறது. அவை அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றன. அந்த 40 சப்- தாலுகாக்களை 5 ஆண்டுக் காலத்திற்குள்ளாக படிப்படியாக உயர்த்துவது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. இந்த ஆண்டைப் -பொறுத்தவரையில் நான்கு சப் தாலுக்காக்களை தாலுக்காக்களாக உயர்த்தலாம் என்று அரசு முடிவு செய்து இருக்கிறது.

*103 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது உள்ள ஒட்டப்பிடாரம் துணைத் தாலூகாவை பாஞ் சாலங்குறிச்சி தாலுக்காவாக மாற்றி அமைக்க அரசு திட்ட மிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) and (இ) : ஆம், அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பாஞ்சாலங்குறிச்சி என்ற ஊர் வரலாற்றுச் சிறப்பும் புகழும் உள்ள ஊர். ஆகவே, அந்தப் பெயரில் தாலூகா அமைப்பதில் காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம்? இதைத் துரிதமாக மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பெயரை மாற்றுகிற பிரச்னை எழவில்லை. ஒட்டப்பிடாரத்தை தாலூகாவாக உயர்த்தலாம் என்ற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல் 40 சப் தாலூகாக்கள் இருக்கின்றன. அவைகளை படிப்படியாக தாலூகாக்களாக உயர்த்துவது அரசினுடைய கொள்கை யாகும்.

திரு. ஆலடி அருணா : ஒட்டப்பிடாரத்தை பாஞ்சாலங்குறிச்சியாக மாற்றுவதற்கு ஒட்டப்பிடாரம் மக்களிடத்திலே எதிர்ப்பு இருந்தது. அப்படி எதிர்ப்பு வந்ததால், அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பாஞ்சாலங் குறிச்சி ரெவினியூ வில்லேஜ் கூட மாற்றப்பட்டு விட்டது. அதை ரெவினியூ வில்லேஜ் என்று மீண்டும் மாற்றியமைக்க வேண்டுமென்றும் அந்தப் பகுதி மக்களிடமிருந்து ஒரு கோரிக்கை வந்தது ; அது பரிசீலிக்கப் பட்டு, அதை மாற்றியமைக்க அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. ஒட்டப் பிடாரம் தாலூகாவை பாஞ்சாலங்குறிச்சி என்று மாற்றவேண்டு மென்ற கருத்தும், அது ஒட்டப்பிடாரம் என்றே இருக்க வேண்டுமென்ற மற்றொரு கருத்தும் வந்திருக்கின்றன. அரசு இரண்டையும் பரிசீலித்து பொதுமக்களுடைய எண்ணத்திற்கேற்றபடிதான் முடிவு எடுக்கும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the proposal to change the name of the Ottappidaram sub-taluk into Panchalankurichi taluk is no doubt good but we have to find out whether Ottapidaram has got historical and cultural significance. If there is such significance, in changing its name we should not destroy its significance. So, will the Hon. Minister see that all these things would be considered before a new change is made ?

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> மாண்புமிகு முதலமைச்சருடைய பதிலிலேயே எல்லா விளக்கங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

*104 வினா— <u>திரு. நாஞ்சை மு. கருணாநிதி :</u> மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூரை தனித் தாலுக்காவாக பிரித்து அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> (அ) ஆம்.

(இ) இது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

கட்டிக்குளம் சாலை.

*105 வினா— <u>திரு. ந. சோனையா :</u> மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் கட்டிக்குளம் கிராமத்திற்கு தார் சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :</u> (அ) சாலை போட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(இ) ரூ. 2,37,100.

தோலம்பாளையத்தில் புதிய சாலை.

*106 வினா— <u>திரு. மே. சி. தூயமணி :</u> மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :



தோலம்பாளையம்—கோபனாரி ஆதிவாசிகள் பாதையினை அமைத்துத் தர அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :</u> அப்படி எதுவும் இல்லை.

<u>திரு. மே. சி. தூயமணி :</u> தோலம்பாளையத்திலிருந்து கோபனாரி வரையிலே ஆதி வாசிகளுக்கு ஒரு பாதை அமைக்க வேண்டுமென்று பல்லாண்டுகள் கோரிக்கை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அன்பு கூர்ந்து இந்த ஆண்டிலாவது அதைப் பரிசீலனை செய்து நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் :</u> தலைவர் அவர்களே தோலம்பாளையத்திலிருந்து கோபனாரி செல்லும் சாலை தோலம்பாளையம் ஊராட்சி சாலையாகும். இது காரமடை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். இந்தச் சாலை (1) தோலம்பாளையம் முதல் சீங்குளி வரை நீளம் 13·2 கிலோ மீட்டராகும். சீங்குளி முதல் கோபனாரி வரை 2 கிலோ மீட்டராகும். ஆக, 15·2 கிலோ மீட்டர் நீளமுள்ள இச்சாலை மண் சாலையாகும். இச்சாலையை அமைப்பதற்கு ரூ. 15 இலட்சம் செலவாகும். இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் இப்பொழுது ஒதுக்கப்பட்டிருப்பதற்கே போதுமானதாக இல்லாததால், இது எடுத்துக் கொள்ளப்படவில்லை.

தானியக் கிடங்குகள்.

*107 வினா <u>திரு பெ. சௌந்தரபாண்டியன் :</u> மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது அரசுக்கு சொந்தமாக தானியக் கிடங்குகள் தமிழகம் முழுவதும் மொத்தம் எத்தனை உள்ளன?

(இ) எவ்வளவு டன் வரை அவைகளில் தானியங்களை சேமித்து வைக்க வசதி இருக்கிறது?

<u>மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :</u> (அ) தற்பொழுது அரசின் வசம் கிடங்குகள் எதும் இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

<u>திரு. பெ. சௌந்தரபாண்டியன் :</u> தலைவரவர்களே, இனிமேல் தானியக் கிடங்கு கட்டும் உத்தேசம் ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ? அது தற்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : இது சர்க்காருக்குத் தனியாக இல்லாவிட்டாலும், தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகம் சார்பாகச் சொந்தக் கிடங்காக 21-ம், தனியாரிடம் வாடகை எடுத்தவை 98-ம், அதேபோல் தமிழ்நாடு கிடங்குகள் கழகத்தின் சார்பாக 13 சொந்த கொடவுன்களும், 22 வாடகைக் கொடவுன்களும், இந்திய உணவுக் கழகத்தின் சொந்தக் கிடங்குகள் 8-ம், தனியாரிடம் வாடகை எடுத்தவை 2-ம், மத்திய கிடங்குகள் கழகத்தின் சொந்தக் கொடவுன்கள் 11-ம் இருக்கின்றன. கூட்டுறவு பண்டக சாலைகள் மொத்தம் 1,869 இருக்கின்றன.

மேலும் திட்டமிடப்பட்டுள்ளவை, கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக் கார்ப்பரேஷன் மூலம், 3,000 டன் அளவிலே சென்னை, மன்னார்குடி இந்த இடங்களிலே கோடவுன்கள் கட்டுவது என்றும், 150 டன் கப்பாசிட்டி உள்ள அளவிலே, 500 கிராம நாணய சங்கங்களுக்குக் கொடவுன் கட்டுவது என்றும், மாநிலம் பூராவும், 1,000 டன் கப்பாசிட்டி வீதம் 15 கிடங்குகள் கட்டுவது என்றும், ஸ்டேட் வேர்ஹவுசிங் கார்ப்பரேஷன் மூலமாக, 50,000 டன் கப்பாசிட்டி உள்ளவற்றைக் கட்டுவது என்றும் 5 ஆண்டுகளிலே 24 கிடங்குகளை, 2,500 டன் கப்பாசிட்டி அளவிலே கட்டுவது என்றும் அதற்கான திட்டங்களும் ஏற்பாடுகளும் நடந்துகொண்டிருக்கின்றன.

*Supply of essential commodities to Railway employees.*

*108 *Q.*— THIRU G. R. EDMUND AND THIRU N. K. PALANI-SAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) whether any communication from the Union Railway Minister has been received by the Chief Minister in regard to the supply of essential commodities to Railwaymen in January-February 1974 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) இரயில்வே காலனிகளுக்கு உணவுப் பொருள் வழங்கும் நியாய விலைக் கடைகள், கூட்டுறவு பண்டகசாலைகள் மூலமாக இரயில்வேயில் பணி புரிபவர்களுக்கு கோதுமை, அரிசி, பருப்பு வகைகளில் ஒன்று, சமைப்பதற்குத் தேவையான டால்டா, கடுகு எண்ணெய் போன்ற வகைகளில் ஒன்று, மற்றும் எரிபொருள் ஒன்று சீரான முறையில் வழங்குவதற்கு தகுந்த ஏற்பாடு செய்யுமாறு இரயில்வே அமைச்சர் அவர்கள் கோரி இருந்தார்கள்.





இரயில்வே ஊழியர் உட்பட ரூ. 300-ம் அதற்குக் குறைவான வருமானமுள்ளவர்களுக்குச் சென்னை, கோயம்புத்தூர் நகரங்களில் அரிசி குடும்ப அட்டைகள் மூலம் வழங்கப்படுகிறதென்றும், அரிசி தட்டுப்பாடின்றி மாநிலம் முழுவதும் வெளிச்சந்தையில் கிடைக்கிறதென்றும், கோதுமை, கோதுமைப் பொருள்கள் கார்டுகள் மூலம் வழங்கப்படுகிறதென்றும் முதலமைச்சர் அவர்கள் 23—2—1974 அன்று இரயில்வே அமைச்சருக்குத் தெரிவித்துள்ளார். பருப்பு, எண்ணெய் பொருள்கள் இம்மாநிலத்தில் பற்றாக்குறையாக இருப்பதால் இப்பொருள்களை சீரான முறையில் வழங்கவேண்டுமானால் இந்திய அரசு மத்தியத் தொகுப்பின் மூலம் இப்பொருள்களை இம்மாநிலத்திற்கு வழங்கினால் தான் முடியும் என்றும் கூறியுள்ளார்.

திரு க. உரா. எட்மண்ட் : தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய இரயில்வே அமைச்சருக்கு எழுதிய பரிந்துரையில் பருப்பு முதலிய பண்டங்களை நமக்கு மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டுள்ளதற்கு மத்திய அரசு அப்படிப்பட்ட பண்டங்களை அனுப்பி வைக்கும் என்று மத்திய அமைச்சர் தகவல் அனுப்பியிருக்கிறாரா ?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : அப்படிப்பட்ட தகவல் அனுப்பப்படவில்லையென்றாலும் நம்முடைய உணவுக் கார்ப்பரேஷன் கொள்முதல் செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Social service in Slum clearance areas.*

*109 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state the details of the 'Happier Homes' training given to the residents of the tenements of the Slum Clearance Board ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில திட்டப் பகுதிகளில் வாழ்கின்ற குடியிருப்பாளர்கள் "மகிழ்ச்சியான இல்லங்கள்" அமைப்பதைப் பற்றி சமூக சேவா நிலையம் வார வகுப்புகள் நடத்தி வருகிறது. குழந்தைகள் நலம், சுகாதாரமான குடும்பம் அமைத்தல், குடும்பக் கட்டுப்பாடு, குடும்ப வரவு-செலவு திட்டம், சிறு சேமிப்பு போன்றவைகளில் பயிற்சி அளித்தல் இந்த வகுப்புகளின் பாடத் திட்டத்தில் அடங்கும்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, எந்த எந்த இடங்களில் இந்தப் பயிற்சி கொடுக்கப்படுகிறது ? எந்த அடிப்படையில் இந்த இடங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தியாகராயநகரில் உள்ள பிருந்தா வனம், மாம்பலத்தில் ஏரிக்கரையில் உள்ள வீடுகள், சுபேதார் பகுதியில் உள்ள வீடுகள், சீனிவாசபுரம், சைதாப்பேட்டை பகுதிகள், விசாலாட்சி எஸ்டேட்டில் உள்ள பகுதியில் பெண்களுக்காக இப்படிப்பட்ட பயிற்சி வகுப்புகள் இதுவரையில் நடத்தப்படுகின்றன. ஆண்களுக்காக பிருந்தா வனம் பகுதி, மாம்பலம் ஏரிக்கரையில் உள்ள பகுதி, விசாலாட்சி பகுதி, நொச்சி நகர், சிமெட்ரி ரோடு பகுதியில் உள்ள பகுதி, சீனிவாசபுரம் பகுதி, அயோத்தியா குப்பம் பகுதி, டி.பி. சத்திரம் பகுதி போன்ற பகுதிகளில் இதுவரையில் வகுப்புகள் நடந்து இருக்கின்றன.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக சென்னையிலே மகிழ்ச்சி இல்லங்கள் அமைக்கப்படுகின்ற பணியில் நம்முடைய தமிழக அரசு ஈடுபட்டிருக்கின்றது, கிராமப்புறங்களிலே தொடங்கப்படவில்லை என்று பரவலாகப் பேசப்படுகிறது, ஆகவே அந்தக் குறையைப் போக்கவும் நம்முடைய அரசு கிராமப்புறங்களிலும் இப்படிப்பட்ட மகிழ்ச்சிப் பகுதிகள் ஏற்படுத்தும் பணியை தொடங்குமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக இப்படிப்பட்ட மகிழ்ச்சி இல்லங்கள் கட்டப்படு கின்றன என்றால் அதற்குக் காரணம் அந்தப் பகுதிகளிலே உள்ள மக்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக : ஆனால் கிராமப்புறங்களிலே உள்ள மக்கள் ஏற்கெனவே மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறார்கள்.

Thiru K. M. SUBRAMANIAM : Is the Hon. Minister aware of the fact that there are many working women living in these flats and there is no sufficient number of creches in these flats to look after the children when they go for work. So, will the Government take steps to construct sufficient number of creches for these slum-dwellers ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே சில இடங்களில் அப்படிப்பட்ட ஏற்பாடுகள் இருக்கின்றன. மேலும் செய்வதற்கு குடிசை மாற்றுவாரியம், அங்கே இருக்கிற நியூ ... விடல்ஸ் சமூக சேவா நிறுவனம் போன்றவை பொறுப்புக்கொண்டு காரியங்களைச் செய்துவருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Remunerative schemes of Slum Clearance Board.*

*110 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) whether the Slum Clearance Board has undertaken any remunerative schemes in Madras City : and

(b) If so, the details thereof ?





மாண்புமிகு திரு. க. இராசாராம் : அவைமுன் ஓர் அறிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இந்தக் கடைகளைக் கொடுப்பதில் காம்பெடிடிவ் முறையிலே ஆக்ஷன்மூலம் கொடுக்கப்படுகிறது. அப்படியில்லாமல் பெட்டி ஷாப் ஓனர்கள் பயன் அடையும்படியாக அந்தக் கடைகளைக் கொடுக்க அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியப் பகுதிகளை கொஞ்ச கொஞ்சப் பகுதிகள் நமக்குக் கிடைக்கின்றன. கொஞ்சம் லாபம் தரத்தக்க இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தால் குடிசை மாற்று வாரியத்திற்குப் பயன் ஏற்படாது. குடிசை மாற்று வாரியத்தின் நிலையை உயர்த்துவதற்கு இப்படிப்பட்ட கடைகள் கட்டப்படுகின்றன. ஆகவே அப்படிப்பட்ட வாய்ப்பு தருவதற்கில்லை. ஏலத்தில் விடாவிட்டால் பல்வேறு குறைகள் வந்துவிடக்கூடும். ஆகவே தான் பகிரங்க ஏலத்திலே விடுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

Thiru K. S. KOTHANDARAMIAH : The Hon. Minister for Labour seems to be showering the blessings on slum in Madras City only. May I know from the Hon. Minister whether he would extend his sympathy to other areas also.?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியப் பணிகள் எல்லாமாவட்டங்களின் தலைநகரங்களுக்கும் விஸ்தரிக்கப் படுகின்றனவென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

Thiru K. M. SUBRAMANIAM : Will the Hon. Minister dispe' the impression that everything is being done for Madras City slum dwellers only? There are 12 lakhs of slum dwellers in the City and only for 3 lakhs of them buildings had been constructed and the rest are still living in slums. I find that there is a ι impression in the House that everything is being done for Madras City slum dwellers only and not ior those in districts. I know that some-thing is being done for slum-dwellers of Madras City but much more remains to be done for them.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அவர்களுடைய அபிப்பிராயத்திற்கு நன்றி செலுத்திக் கொள்கிறேன்.

526-529-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 ஆகஸ்ட் 16

## Road accidents in Madras City.

*111 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) the number of road accidents in the City of Madras during the first three months in 1974; and

(b) the number of fatal cases?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) சென்னை நகரில் 1974-ல் முதல் மூன்று மாதங்களில் நடந்த மொத்த சாலை விபத்துக்கள் 1,753.

(இ) 63.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, அநேகமாக இந்த போக்குவரத்து ஆக்சிடெண்டுகள் எல்லாம் லாரிகளால் ஏற்படுவதாகத்தான் இருக்கின்றன. லாரி விபத்துக்கள் எல்லாம் முக்கியமான ரோடுகளிலே ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் இரவு நேரங்களிலே ஓட்டுகிற டிரைவர்கள் கண்விழித்து ஓட்டுவது, இரவு நேரத்திலே விழித்துவிட்டு பகலிலும் ஓட்டுவது என்ற காரணங்களால்தான விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று தெரிகிறது. அதற்காக ஏற்கெனவே இதுபற்றி இந்தச் சட்டமன்றத்திலே விவாதிக்கப்பட்டபொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லாரிகளிலே இரண்டு டிரைவர்கள் போடுவதுபற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அது அமல்படுத்தப்படுகிறதா? அல்லது அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் தீவிரமாகச் செய்து கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, விபத்துக்கள் லாரிகளிலே மட்டும் அதிகமாக நடக்கின்றன என்று நினைப்பது சரியானதாகாது. பப்ளிக் சர்வீஸ் வெஹிகிள்ஸ் அதர் தேன் மோட்டார்கார்ஸ் என்று சொல்கிறபோது, ஆண்டுக்கு 15,164 விபத்துக்கள் நடைபெறுகின்றன என்று வைத்துக்கொண்டால் அதிலே 3,311 பப்ளிக் சர்வீஸ் வெகிகிள்ஸ் மூலமாக நடைபெறுகின்றன, குட்ஸ் வெகிகிள்ஸ் மூலமாக 2,445 மோட்டார் கார்கள் மூலமாக 2,941 விபத்துக்கள் நடைபெறுகின்றன என்ற நிலை ஏற்படுகிறது, இப்படி கார், பஸ், லாரி, இவைகள் மூலமாக மொத்த விபத்துக்களில் 57 சதவிகித விபத்துக்கள் ஏற்படுகின்றன என்ற நிலை இருப்பதால் இதை மூன்று முனைகளிலே நாம் தடுக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே எதற்கு எடுத்தாலும் நீதி விசாரணை, நீதி விசாரணை என்று கேட்டதுபோல், ஆனந்தவிகடன் பத்திரிகையிலே ஒரு தலையங்கம், பல்லவா கொலைவா என்று..........................



1974 ஆகஸ்ட் 18]

திரு. க. உரொ. எட்மண்ட்: நீதி விசாரணைபற்றி இங்கே இப்போது அவர்கள் சொல்லவேண்டியதில்லை..........

திரு. நா. வீராசாமி: பத்திரிகையிலே தலையங்கம் வந்திருக்கிறது.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீதி விசாரணைபற்றி இப்போது இங்கே சொல்லவேண்டாம், நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்............

திரு. நா. வீராசாமி: அதிலே பல்லவா கொல்லவா என்று தலையங்கம் போட்டு சாலை விபத்துக்களை விசாரிக்க முதலமைச்சர் அவர்கள் நீதி விசாரணை நடத்த வேண்டுமென்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நம்முடைய அரசாங்கம் இலாகாவிற்கு ஏதாவது யோசனை கூறியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தலையங்கம் இருக்கிறதோ என்னவோ அதைப்பற்றி எங்களுக்குத் தெரியாது. ஆனால் அதே நேரத்திலே அவையிலே நடைபெறுற கலெக்டர்கள் மாநாட்டிலே இதுபற்றி அமைச்சர்களும், அமைச்சரவையும் காவல் துறையினர் அவர்களோடு கலந்துபேசி—இப்படிப்பட்ட விபத்துக்களைத் தடுப்பதுபற்றி வலியுறுத்தப்பட்டு இருக்கிறது, அதோடு மட்டுமல்லாமல் இந்த விபத்துக்கள் தடுக்கப்பட்டாக வேண்டுமென்ற வகையில் 1972-ம் ஆண்டு என்றல்ல, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே நம்முடைய அரசாங்கம் மிகத் தீவிரமாக இதைப் பரிசீலனை செய்து 12 முடிவுகளை மேற்கொண்டிருக்கிறோம். அதிலே குறிப்பாக, டிரைவிங் ஸ்கூல்பற்றியது. முதலாவதாக டிரைவர்களால்தான் பெரும்பாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று கண்டுபிடித்ததன் விளைவாக யார் யார் எந்த எந்த வகையிலேயோ எல்லாம் டிரைவிங் ஸ்கூல் வைத்துக்கொண்டு ஒழுங்காக அவை நடைபெறுவதில்லை என்ற நிலையை மாற்றிட டிரைவிங் ஸ்கூல் ஏற்படுத்தி நடத்த சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்து ஒழுங்காக அவை நடத்தப்பட வேண்டிய சில வழிகளைச் செய்யவேண்டுமென்று தீர்மானித்து இருக்கிறோம். அதோடு மட்டுமல்ல, ஐ.டி.ஐ.-இல் பல்வேறு வகையில் தொழில் பயிற்சி தரப்படுகின்றது. அதோடு டிரைவிங்கும் சேர்த்து பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் முடிவெடுத்து இருக்கிறது.

இரண்டாவதாக, டிரைவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும்பொழுது, லைசென்ஸ் கொடுத்து அந்த லைசென்ஸ் ரெனியூவல் செய்ய வருவார்களே யானால் அந்த நேரத்தில் அவருக்கு மறுபடியும் கண் பார்வை சரியாக இருக்கிறதா, பிரேக் போடுவதற்கு திடமாக அந்த ரீ-ஆக்ஷன் டைம் எவ்வளவு எடுத்துக் கொள்கிறார்கள் என்ற சோதனையை மறுபடியும் மேற்கொண்ட பிறகு டிரைவர்களுக்கு லைசென்ஸை ரெனியூவல் செய்ய வேண்டுமென்றும் நாம் தீர்மானித்திருக்கிறோம்.

மூன்றாவதாக, டிரைவர்கள் தவறு செய்துகொண்டு வந்தால் ஒவ்வொரு தவறுக்கும் ஏற்றவகையில் புள்ளிகள் கொடுத்து, 1, 2, 3, என்று போட்டுக்கொண்டே வந்து, 10 அல்லது 12 புள்ளிகள் வந்துவிட்டால்

அந்தத் தனி மனிதருக்குத் தரப்பட்ட லைசென்ஸ் ரத்து செய்யப்படும். அதற்குப்பிறகு அவர் டிரைவராக இருப்பதற்குத் தகுதியற்றவர் என்று அறிவிக்கப்படும்.

நான்காவதாக, சில பழக்க வழக்கங்களின் அடிப்படையில் போதைப் பொருட்களைப் பயன்படுத்துகின்ற டிரைவர்களின் மூலமாக விபத்துகள் ஏற்பட்டு விடுகின்றன. ஆகவே, அதைத் தடுப்பதற்கு "ப்ரீத் லைசர்" போன்ற கருவிகளைப் பயன்படுத்தி அதைத் தடுக்க வேண்டுமென்ற முடிவை அரசாங்கம் எடுத்திருக்கிறது.

ஐந்தாவதாக, இரவில் வரும் வண்டிகள் நன்றாகத் தெரிய வேண்டுமென்பதற்காக மஞ்சள் நிற வண்ணத்தில் நிறம் பூச வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்கூட்டர்களில் செல்பவர்களுக்கு ஏற்படும் விபத்துக்களைத் தடுப்பதற்காக ஹெல்மெட் கட்டாயம் அணிய வேண்டுமென்று பிரசாரத்தின் மூலம் அறிவுறுத்துவது என்று ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல் இன்ஷ்யூரன்ஸ் கவரேஜ் செய்ய முடியுமா என்பதைப் பற்றியும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியிடத்தில் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு இருக்கிறோம்.

அடுத்து,

Traffic Enforcement, a fitness certificate of vehicles, standing passengers, parking of cars, road safety and publicity.

என்பதுபோன்ற பலவகையான 12 முடிவுகளை எடுத்து படிப்படியாக மேற்கொண்டிருக்கிறது. விபத்துக்கள் குறைய வேண்டுமென்பதில் ஆனந்த விகடனுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அதைவிட அதிகமான அக்கறை விபத்துக்களைத் தடுப்பதில் அரசாங்கத்திற்கும் இருக்கிறது என்பதை இந்த மன்றம் அறியும்.

திரு. ஜே. ஜேம்ஸ். : தலைவரவர்களே, அரசாங்க பஸ்களில் விபத்துக்கள் ஏற்படுவது அதிகரித்துக்கொண்டே வருகிறது. அதற்குக் காரணம் கேட்டால் எக்ஸ்பிரஸ் பஸ்கள் செல்லுகின்ற வேகம் அதிகமாக இருக்கிறது என்பது ஒன்று. அதோடு இந்த பஸ்கள் தகுந்த முறையில் ஒர்க்ஷாப்புகளில் வேலை செய்யப்படாமல் சாலைகளில் ஓடுவதால் விபத்துக்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன என்ற ஒரு குற்றச் சாட்டும் இருக்கிறது. எனவே, அரசாங்க பஸ்களிலும் கார்ப்பரேஷன் பஸ்களிலும் அதிக விபத்துக்கள் ஏற்படாத வகையில் சீர்படுத்த அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது ?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பஸ் விபத்துகளைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே புள்ளி விவரத்தைச் சொன்னேன். தனியார் துறையில் 6,500 பஸ்கள் ஓடுகின்றன, அரசுத் துறையில் 3,500 பஸ்கள்தான் ஓடுகின்றன. அதிக பஸ் விபத்துக்கள் தனியார் துறை மூலம்தான் நடக்கின்றன. இருந்தாலும் அரசு பஸ் என்றும் கண்ணை உறுத்துகிறதோ என்னவோ, எதற்கெடுத்தாலும் அரசு பஸ்களின் மூலம் ஏற்படும் விபத்துக்களைப்பற்றி மட்டும் கேட்கப்படும் கேள்வி நாம் அடையவிருக்கும் சமதர்ம சமுதாயத்திற்கு ஏற்ற கேள்வி அல்ல என்று நினைக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இரவு நேரங்களில் செல்லும் லாரிகளை பெருநகரங்களை [illegible] குறிப்பாக [illegible], உளுந்தூர் பேட்டை, தொழுதூர், சுங்குவார் சத்திரம், ஆம்பூர் போன்ற இடங்களில் சாலைகளின் இருபுறங்களிலும் நிறுத்தியிருக்கிறார்கள். இதனால் மற்ற வாகனங்கள் செல்ல முடியவில்லை. ஆகவே, பெருத்த விபத்துக்கள் ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகமாக இதனால் இருக்கின்றன. அப்படி ஏற்பட்டும் வருகிறது. இதைத் தவிர்ப்பதற்கு, இதனை ஒழுங்குபடுத்தும் திட்டத்தை அரசு வைத்திருக்கிறதா ? அதே நேரத்தில் இரவு நேரங்களில் ஓடும் லாரிகளுக்கு இரண்டு டிரைவர்களை வைத்துக்கொள்வதைப் பற்றிய ஒரு குறிப்பு இருப்பதாகச் சொல்லப்பட்டதே, அதை வலியுறுத்துவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இரண்டு டிரைவர்களைப் பொறுத்தவரையில் அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. அடுத்து, இரவு நேரங்களில் குறிப்பிட்ட சிலயிடங்களில் லாரிகளை இந்தமாதிரி அதிகமாக நிறுத்துகிறார்கள் என்பது உண்மை. நானே பலயிடங்களில் பார்த்திருக்கிறேன். குறிப்பாக திண்டிவனத்தில் அப்படி நிறுத்துவதை மேற்கொள்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு ஆங்காங்கே லாரிகளுக்கு என்று—எப்படி பேருந்துகளுக்கு என்று நிலையங்கள் அமைக்கிறோமோ அதைப்போல லாரிகளுக்கு என்று—நிலையங்கள் அமைத்து அந்த லாரிகளை ரோட்டிலே இருந்து உள்ளே செல்வதற்கேற்ற வகையில் லாரி ஷெட்டுகள் ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் யோசனை செய்துவருகிறது.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, மலைப் பகுதியில், குறிப்பாக நீலகிரி பகுதியில் இந்தப் பேருந்துகள் வேகமாக வருவதால் விபத்துக்கள் அதிகமாகி வருகின்றன. இதைத் தடுப்பதற்கு அங்கே வேக வரம்புக் கட்டுப்பாடு ஏதாவது கொண்டு வருவதற்கு அரசு உத்தேசித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, வேக வரம்புக் கட்டுப்பாடு ஏற்கெனவே இருக்கிறது. எங்கேனும் அதிக வேகத்தில் செல்வார்களேயானால் அதைப்பற்றி உறுப்பினரவர்கள் தகவல் தந்தால் நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகையாக இருக்கும்.

[1974 மார்ச்சு 18

திரு வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, விமானத்திலோ, இரயிலிலோ விபத்துகள் ஏற்பட்டால் விபத்திற்காளானவர்களுக்கு அல்லது அவர்களுடைய குடும்பத்தாருக்கு நஷ்ட ஈடுத்தொகை தருவதற்கு ஏற்பாடு இருக்கிறது. அதுபோல நம்முடைய தமிழக அரசு போக்குவரத்து பஸ்களில் விபத்து ஏற்பட்டால் விபத்திற்காளானவர்களுக்கு அல்லது அவர்களுடைய குடும்பத்தாருக்கு நஷ்ட ஈடு தருவதற்கான திட்டம் ஏதேனும் உண்டா? போகவும், இரயில் அல்லது விமானத்தில் பயணம் செய்பவர்கள் முன்கூட்டியே டிக்கட் எடுக்கும் கட்டணத்தில் இன்ஷ்யூர் செய்து கொள்வதற்கான வழிவகை உண்டு. அதுபோலவே நீண்ட தூர பிரயாணிகள் கால் ரூபாய் அல்லது அரை ரூபாய் அளவில் சிறிய கட்டணத்தைச் செலுத்தி தங்களுடைய உயிரை இன்ஷ்யூர் செய்து கொள்வதற்கு வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஏற்கனவே விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடுத்தொகை வழங்கும் திட்டம் அரசுப் போக்குவரத்து கழகத்தில் அமலில் இருக்கிறது. மோட்டார் பேருந்துகளுக்கு third party insurance ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. கி. ஆனந்தன்: தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் விபத்துகள் எவ்வாறு ஏற்படுகிறது என்பதைப்பற்றியெல்லாம் புள்ளி விவரங்களோடு தெளிவாக எடுத்துத் தெரிவித்தார்கள். ஆனாலும் அரசுத் துறையிலே புதிதாகப் பயிற்சி பெற்ற டிரைவர்களை வைத்திருப்பதால் அவர்கள் ஏறத்தாழ 20 கிலோமீட்டர் வண்டிகளை ஓட்டினால் முன்பிருந்த நிலைமைகளை வைத்து ஓட்டினால் பின்புறம் ஆக்சிடெண்ட் ஏற்படுகிறது. எனவே, ஐந்தாண்டுகளுக்கு மேல் ஹெவி வண்டிகளை ஓட்டிய டிரைவர்களுக்கு வேலை கொடுத்தால் இப்படிப்பட்ட விபத்துக்கள் நடக்காது என்று கருதுகிறேன். இல்லையென்றால் அதற்காக அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே கூறியதைப்போல் இப்பொழுது ஹெவி வெஹிகில் டிரைவிங் இன்ஸ்டிடியூட் நம்மிடத்தில் இல்லை. ஆகவே, டிரைவர்கள் நல்ல முறையில் பயிற்சி பெற ஹெவி வெஹிகில் டிரைவிங் லைசென்ஸ் ஸ்கூல் ஒன்றை அரசாங்கம் ஆரம்பிக்க இருக்கிறது.

திரு கா. கோவேந்தன்: தலைவரவர்களே, சில விபத்துக்களைத் தடுக்க டிரைவர்களுக்குத் தரப்படும் பயிற்சி முறைகளைப் பற்றிக் கூறினார்கள். ஆனால் மேலைநாடுகளைக் காட்டிலும் நம் நாட்டில் மிகுதியான சாலை விபத்துக்கள் ஏற்படுவதற்கு நடந்து செல்பவர்களின் கவனக் குறைவும் காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பழைய சிவிக்ஸ் பாடமுறையில் சாலை விதிகளைப் பற்றி இருந்தது. எனவே இப்பொழுது சோஷல் ஸ்டடீஸ் போன்ற பாடபுத்தகங்களில் சாலை விதிகளைப் பற்றிய பாடங்களைப் புகுத்த வேண்டுமென்று பாட நூல் நிறுவனத்தை அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.



1974 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பதில் நீண்டு கொண்டே போகும் என்ற காரணத்தினால் 12 யோசனைகள் என்று சொல்லிவிட்டேன். கல்வி முறையிலேயேயும் இதை உருவாக்க வேண்டுமென்று, குறிப்பாக இளம் மாணவர்கள் ஆரம்பப் பள்ளியிலேயிருந்து அந்த "டிராஃபிக் சென்ஸ்" போக்குவரத்தின் உணர்வைப் பெற வேண்டுமென்று பள்ளிகளின் பாடத்திட்டத்தில் வழிவகை செய்ய வேண்டுமென்பது அதில் எடுக்கப்பட்ட ஒரு முடிவு.

*112 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether any survey was conducted recently into traffic accidents in Madras City, hour-wise; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ and இ) தலைவரவர்களே, சர்வே எதுவும் செய்யப்படவில்லை. ஆனால் மணிவாரியான விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

(முற்பகல் 10-00)

திரு. என். டென்னிஸ்: இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது குறைந்திருக்கிறதா அல்லது அதிகரித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பொதுவாக அதிகமான விபத்துக்கள் நடைபெறுகிற நேரம் காலை 10 மணி முதல் 11 மணி வரைதான். எல்லா ஆண்டுகளிலும் இந்த நெரிசல் நேரத்தில்தான் விபத்துக்கள் நடைபெற்றிருக்கின்றன.

## புதுக்கோட்டை அரசு அச்சகத்திற்குக் கட்டடம்.

*113. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையிலுள்ள அரசினர் அச்சகத்திற்காகப் புதிதாகக் கட்டிடம் ஏதேனும் கட்டப்பட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தப் புதிய கட்டிடம் எந்த ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது? அந்தக் கட்டிடத்தை அச்சகத்திற்கு ஒப்படைக்க காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு.ச. ராமச்சந்திரன் : இந்தக் கட்டடம் கட்டுவதற்கு 1971-ம் ஆண்டிலே ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. 1972 ஜூன் திங்களில் அச்சுத்துறை உபயோகத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்டது. ஓராண்டுக்குள் கட்டி முடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பார்க்கும்போது இதில் காலதாமதம் இருக்கிறது என்று ஏற்றுக்கொள்வதற்கில்லை.

## *Employment opportunities for artisans*

*114 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the details of the steps taken to provide employment for the artisans in rural areas in this State ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தர அளிக்க தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:—

(1) பொருட்பணிக் கொட்டகைகளில் 2, 6, 12 கதிர் கைராட்டைகளை வழங்குதல்;

(2) சாயம் போடுதல், வெளுத்தல், அச்சு போடுதல் பிரிவுகளை உற்பத்தித் திட்டம் அதிகமாக்குதல்;

(3) மேற்கொண்டும் கிராமப்புற துணி நிலையங்களைத் தொடங்குதல்;

(4) பருக்கை அளிப்புகளைத் தயாரிப்பதற்காக மேற்கொண்டு நெசவாளர்களைச் சேர்த்துக் கொள்ளுதல்;

(5) 17 கிராமத் தொழில்களில்-ஐந்தாண்டுகளில் 3·75 லட்சம் கைவினைஞர்களுக்கு முழு நேர வாய்ப்பு உத்தரவாதத் திட்டம். இச்செயற் குறிப்பிற்கு இன்னும் இறுதி வடிவம் கொடுக்கப்படவில்லை.

திரு. என். டென்னிஸ் : இதன் பயன் எல்லா மாவட்டங்களுக்கும் கிடைக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தமிழ்நாட்டில் இருக்கும் எல்லா மாவட்டங்களுக்கும் சுமார் 369 பல்தொழில் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிப்பது என்றும் 17 விதமான கிராமக் கைத்தொழில்கள் வளரு வதற்கு 3-3/4 லட்சம் கைவினைஞர்கள் பயன்பெறும் வகையில் 34·65 லட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் தொடங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : இந்தக் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக் கக்கூடிய திட்டத்தில் ராட்டையின் மூலம் வேலை வாய்ப்பளிப்பதுதான் அதிகமாக இருக்கிறது. அதிலே ஊதியம் மிக மிகக் குறைவாக இருக்கிறது. அதை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.



## பனைவெல்லத் தொழில்.

*115 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பனைவெல்லத் தொழில் எந்தெந்தப் பகுதிகளில் அதிகமாக நடைபெற்று வருகிறது?

(இ) இதை நம்பி வாழும் தொழிலாளர்கள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) கன்னியாகுமரி, திருநெல் வேலி, இராமநாதபுரம், சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள்.

(இ) சுமார் 1,67,000 பேர்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தப் பனைவெல்லம் தயாரிக்கும் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்கிறதா? எந்தெந்த வகையில் உதவி புரிகிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மதுவிலக்கைத் தீவிரமாக அமல் படுத்த வேண்டுமென்று அரசு முடிவு எடுத்த பிறகு மரமேறும் தொழி லாளர்கள் ஒவ்வொருவருக்கும் 175 ரூபாய் கடனாகவும், 25 ரூபாய் மானிய மாகவும் தரவேண்டுமென்று முடிவு செய்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் பல்வேறு வகையிலும் அவர்களுக்கு உதவி செய்யப்படுகிறது. அவர்கள் உற்பத்தி செய்யும் கருப்பட்டியை விற்பனை செய்யவும், விபத்தில் இறந்து விட்டால் உதவி செய்யவும் வழிவகைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : பனை ஏறும் தொழிலாளர்கள் உற்பத்தி செய்கிற கருப்பட்டியின் விலை மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்களுக்குத் தேவையான விறகின் விலை அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்தத் தொழில் செய்பவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க அரசாங்கத்தின் மூலம் குறைந்த விலையில் அவர்களுக்கு விறகு கொடுக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படிப்பட்ட பிரச்சினைகள் எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. கருப்பட்டி, தென்னை மரம் அதிக மாக இருக்கும் பகுதிகளில் காய்ச்சுகிறார்கள். தென்னை ஓலை, மட்டை கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி அவர்கள் காய்ச்சுகிறார்கள்.

திரு. தி. பொன்னுமலை : சேலம் மாவட்டத்திலே கருப்பட்டி கூட்டுறவுச் சங்கம் பல ஆண்டுகளாகச் செயல்படவில்லை. அது உடனடியாகச் செயல் பட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஏற்கெனவே மதுவிலக்கை ரத்து செய்த நேரத்தில் கூட்டுறவுச் சம்மேளனங்கள் தேவையில்லை என்று சொல்லிக் கலைத்தோம். மேலும் மதுவிலக்கை அமல்படுத்துகிற காரணத்

தால் அந்தச் சம்மேளனங்கள் சிறந்த முறையில் செயல்பட வேண்டுமென்ற புதிய சூழ்நிலையில் சேலம் மாவட்டச் சம்மேளனமும் சிறந்த முறையில் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். வடிவேல்: பனை ஓலையால் செய்யப்பட்ட தொப்பி, பொம்மைகள் ஆகியவற்றுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி. அத்தகைய தொழில்களுக்கு ஆக்கம் அளிப்பதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு போக்கமுடியும். நெல்லை, இராமநாதபுரம், தஞ்சை மாவட்டங்களில் பனைமரங்கள் அதிகம். அத்தகைய இடங்களில் இந்தத் தொழிலுக்கு ஆக்கம் அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பனைநார், பனை ஓலை மூலமாக செய்யப்படக் கூடிய பொருள்கள் ஏற்கெனவே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. சென்ற ஆண்டு 30 லட்சம் ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறோம். எதிர்காலத்திலே $3\frac{3}{4}$ லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டத்தில் இந்தத் தொழில் மேம்பாடும் கவனிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தக் கூட்டுறவுச் சம்மேளனங்களைத் தேர்தல் முறையில் அமைக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா அல்லது அரசாங்கமே நியமனம் செய்ய இருக்கிறதா? தேர்தல் முறை சிறந்த முறை. அதனை அரசு ஏற்றுக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அரசாங்கம் நியமிக்கின்ற உத்தேசம் இல்லை.

### அரக்கம்பாக்கத்தில் அரிசனக் குடியிருப்பு.

*116 வினா—திரு. மா. வெ. நாராயணசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் ஒன்றியம், அரக்கம்பாக்கம் கிராமத்தில் அரிசனக் குடியிருப்புக்கென நிலம் கையகப்படுத்தும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

மாண்புமிகு திரு. நா. இராசாங்கம்: வில்லிவாக்கம் ஒன்றியம் அரக்கம்பாக்கம் கிராமத்தில் அரிசன குடியிருப்புக்கான நிலம் கையகப்படுத்தும் திட்டம் எதும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

திரு. மா. வெ. நாராயணசாமி: வில்லிவாக்கம் ஒன்றியத்திலுள்ள அரக்கம்பாக்கத்தில் அரிசனங்கள் ஏராளமாக வசிக்கிறார்கள். முன்பு நிலம் கையகப்படுத்தும் திட்டம் இருந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அந்த இடத்தில் மின் கம்பங்களை அகற்ற அந்த அரிசன மக்கள் பணம் தரவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதை அரிசன மக்கள் தரமுடியாத காரணத்தால் காலதாமதம் ஏற்படுகிறது. உடனடியாக நம்முடைய அரிசன நலத் துறை அமைச்சர், தனிக் கவனம் செலுத்தி மின் கம்பங்களை அகற்றக்கூடிய செலவை அரசே ஏற்றுக் கொள்ளக் கூடிய ஏற்பாட்டைச் செய்வார்களா?



மாண்புமிகு திரு. நா. இராசாங்கம்: இந்தக் கேள்விக்குப் பிறகு மாவட்ட ஆட்சியாளருக்கு ஒரு தகவல் அனுப்பப்பட்டது. இந்தக் கிராமத்தில் ஏதாவது அரிசனங்களுக்கு வீட்டு மனை கொடுக்கப்பட்டிருக்கிறதா, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்கப்பட்டது. அந்தச் சமயம் இல்லை என்றாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் தன்னுடைய தனி தாசில்தாரை அனுப்பி தகவல்களைத் தயாரித்து வருகிறார்கள். அந்தத் தகவல்கள் வந்தவுடன் நானும் நேரடியாகப் பார்த்து ஆவன செய்யத் தயாராக இருக்கிறேன்.

திரு. எஸ். வடிவேல்: மனைகட்டுக் கொடுப்பதிலே 6, 7, 8 ஆண்டுக் காலம் என்று ரொம்பக் காலதாமதம் ஆகிறது. ஆகவே, இதைத் துரிதப்படுத்த நிர்வாகத்தை எந்த அளவுக்கு முடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு முடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. நா. இராசாங்கம்: ஏற்கெனவே உள்ள நில ஆர்ஜிதச் சட்டத் திட்டங்கள் அப்படி போதுமானதாக இருக்கின்றன. இருந்தாலும் ஆர்ஜிதம் செய்வதில் தடைகள் ஏற்பட்டு நீதிமன்றங்களுக்குச் சென்றாலும் உடனடியாக அவற்றை கவனித்து நீதிமன்றங்கள் முடிவு சொல்ல வேண்டுமென்று அரசாங்கம் நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. இப்போது கூடியவரை விரைவாகக் காரியங்கள் நடக்கின்றன. இப்போது நிதி கிடைத்தவுடன் எந்தெந்த நிலங்கள் தயாராக இருக்கின்றனவோ, அவற்றைக் கொடுத்துவிடலாம் என்று முதலமைச்சர் அவர்களிடமும் கூறியுள்ளேன். அவர்களும் அதற்கு இசைவு தந்திருக்கிறார்கள். கூடிய விரைவில் நிலங்களை தடையில்லாமல் கொடுக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. நடைமுறைக் கேள்விகள்.

### (அ) கச்சத்தீவு குறித்த விவாதத்தை வேறு ஒருநாள் வைத்துக் கொள்வது குறித்து

திரு. சோ. அழகர்சாமி: ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர். முன்பு அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்தபோது இந்தத் தீர்மானங்கள் இரண்டும், டீலிமிட்டேஷன் பற்றிய தீர்மானமும், கச்சத் தீவு பற்றிய தீர்மானமும் நாளைய தினம் வருவதாகவும், இன்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெறும் என்றும் அதற்கான பதில் அளிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருந்தது. பிறகு பலபேர்கள் பேச வேண்டியிருப்பதால் கூடுதல் ஒரு நாள் அதிகரிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டு............................

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> நான் சொல்வதைத் தயவு செய்து கேளுங்கள். இது பற்றிய பிரச்னை இந்த அவையில் எழுப்பப்பட்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் கூடி ஆலோசனை செய்து இந்தத் தீர்மானங்களை எடுத்துக் கொள்வது என்றும் நாளைய தினம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றிய விவாதத்தைத் தொடர்ந்து நடத்துவது என்றும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> நான் சொன்னது என்னவென்றால் இப்போது டெலிமிட்டேஷன் பற்றிய தீர்மானத்தை எடுத்துக்கொண்டு அதை ஏகமனதாக நிறைவேற்றலாம். கச்சத் தீவு பொறுத்த வரையில் ஒவ்வொரு கட்சியினருக்கும் ஒவ்வொரு கருத்து இருப்பதால் அதை இன்றைய தினம் எடுப்பது சரியாக இருக்காது. அதை இன்னொரு நாளைக்கு வைத்துக் கொள்ளலாம். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இன்றும் நாளைய தினமும் வைத்துக் கொண்டு, இந்த டெலிமிட்டேஷன் பற்றிய தீர்மானத்தை நாம் இன்று ஏகமனதாக நிறைவேற்றலாம். கச்சத் தீவு சம்பந்தமான தீர்மானத்தின் மீதான விவாதத்தை இன்னொரு நாள் தனியாக வைத்துக்கொள்ளலாம் என்று என் கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளும்போது பரிசீலிக்கலாம்.

## (ஆ) ஓர் உறுப்பினர் கேட்ட துணை வினா நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது குறித்து.

<u>திரு. ஆலடி அருணா :</u> பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார், மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கண்ணொளி வழங்கும் திட்டம் சம்பந்தமாக சொன்ன கருத்தை பதிவேட்டில் இருந்து நீக்குவதாக தாங்கள் தீர்மானித்தீர்கள். அந்தத் தீர்ப்பு நம் சட்ட மன்ற விதிகளுக்கு முரணானது என்பதை தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

"If the Speaker is of opinion that a word or words has or have been used in debate...."

என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. டிபேட் என்பது,

"Debate is different from Question Hour."

என்பதுதான் என் கருத்து. எனவே, கேள்வி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு 33-வது விதி மிகத் தெளிவாக இருக்கிறது. சபாநாயகர் அவர்கள் கேள்வியை திருத்தலாம், மாற்றலாம், இப்படித்தான் கொடுக்க வேண்டும் என்று கூடச் சொல்லலாம். ஆனால் கேள்வியை அனுமதித்ததற்குப் பிறகு அதில் எதையும் நீக்க உரிமை இல்லை.



Speaker has no right, after the admission of the question, to expunge any portion of the question or answer. The rule is very clear about it and it deals with debate and *not* with Question Hour.

MR. DEPUTY SPEAKER : I quite follow the argument of the hon. Member, Thiru Aladi Aruna. He wants to distinguish between 'debate' and 'Question Hour'. Even though it is distinguishable as sought out by the hon. Member, since the Chair has got inherent power to maintain the dignity and decorum of the House, the ruling of the Chair is valid and is binding....

THIRU ALADI ARUNA : I want to know from the Chair, under what rule he could order expunction during Question Hour?

MR. DEPUTY SPEAKER : That is a highly debatable point. Anyway we shall consider it for the present that the ruling is binding and therefore there is no point of order.

THIRU G. R. EDMUND : I quite agree with the Chair that he was got inherent powers but the inherent powers of the Speaker can be exercised only when there is no specific provision in the rules. When there are specific provisions regarding debate and Question Hour, they have to be followed and the Speaker cannot exercise his inherent powers.

MR. DEPUTY SPEAKER : As a lawyer I know that when there is a specific provision in law, inherent power cannot be exercised. But if there is no specific provision, the inherent power could be used to cover certain contingencies which are not covered by specific provisions of law. Therefore the point raised by the hon. Member, Thiru Aladi Aruna, seems to be a debatable point. Even if I accept his point of view, I have got inherent power to expunge certain remarks.

## 3. தன்னிலை விளக்கம்

### விவசாய வருமான வரி விதிப்பு குறித்து முதலமைச்சர் தெரிவித்த கருத்து பற்றி திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்களின் விளக்கம்.

<u>திரு. பெ. சௌந்தரபாண்டியன் :</u> தலைவர் அவர்களே, நேற்றைக்கு முதல் நாள் கேள்வி நேரத்தின்போது விவசாய வருமான வரியை இந்த அரசு ஒப்புக்கொண்டதாகப் பத்திரிகைகளில் பார்த்தேன், அது உண்மையா ?

என்று நான் கேட்டநேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாய வருமான வரியை ஒப்புக்கொண்டதாக எந்தப் பத்திரிகையில் பார்த்தீர்கள் என்றுதெரிவித்தால் பிறகு அது பற்றிய கருத்தைத் தெரிவிக்கிறேன் என்று சொன்னபோது நான் நாளைய தினம் அந்தப் பத்திரிகைகளை எடுத்துக் காட்டுகிறேன் என்று சொன்னேன். அவர்களது சொந்தப் பத்திரிகையான முரசொலியில், 6—8—1974 தேதியிட்ட முரசொலியில்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் பேப்பர்களைக் கொடுத்து விடுங்கள். ஆகவே விவாதம் தேவையில்லை, ஸ்டேட்மெண்ட்டும் தேவையில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 6—8—1974-ம் தேதிய தினமணியிலும், தமிழ் முரசு 6—8—1974-லிலும் விளக்கமாக வந்திருக்கிறது. உதாரணத்திற்காக ஒரு பத்திரிகையை மட்டும் படித்துக் காட்டுகிறேன்.

விவசாய முனையில் வரி விதிப்பது பற்றிய மத்திய அரசின் கொள்கையை எல்லா மாநில அரசுகளும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை டி.பி. தார் எடுத்துச் சொன்னார். சாதாரண விவசாயிகள் பாதிக்கப்படாத அளவுக்கு அது அமையவேண்டுமென்ற கருத்தில் இந்த அரசு மத்திய அரசின் கருத்தை பரிசீலித்து வருகிறது என்பதை அவருக்கு விளக்கினோம் என்கிறார் முதலமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிருபர்கள் கேட்டு நான் ஒத்துக் கொண்டேன் என்று பத்திரிகையில் வரவில்லை. சாதாரண விவசாயிகள் பாதிக்கப்படாத அளவுக்கு எப்படி அமைய வேண்டும் என்று சொன்னேன் என்றுதான் பத்திரிகையில் வந்திருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மேலும் நிருபர் கேட்கிறார்கள் சாதாரண விவசாயி என்றால் யார் என்று? அதற்கு முதல்வர் அவர்கள் விளக்கம் தருகிறார்கள். பணப்பயிர் செய்பவர்களிலும் குறைந்த பரப்பளவில் விவசாயம் செய்கிறவர்கள் குறைந்த தொகையினர் சாதாரண விவசாயிகளாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைப் படியுங்கள், முழுதாகப் படித்து விடுங்கள். அது எனக்கும் நல்லது.

திரு. பெ. சௌந்தர பாண்டியன் : அதில் சிக்கல் இருப்பதால்தான் அது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று அவரிடம் கூறினேன் என்று சொல்லியிருக்கிறார் முதல்வர். என்ன சிக்கல் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பணப்பயிரிடுகிறவர்கள் மீது கூட பயிரின் அடிப்படையில் இந்த வரிகளை விதிக்கக்கூடாது என்று கம்யூனிஸ்ட் கட்சி உள்பட, ஆளும் காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் உள்பட எல்லா முற்போக்குக் கட்சிக்காரர்களும் விவசாயப் போராட்டம் நடைபெற்றபோது





என்னிடம் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பயிர் மீது அந்த அடிப்படையில் வரி போட்டால் கூட சில சாதாரண பயிரிடுகிறவர்கள், சாதாரண விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, பணப்பயிர் இடுகிறவர்களிலும் சாதாரண விவசாயிகள் இருக்கி றார்கள், அவர்களை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். ஆகவே, அவசரப்பட்டு இந்த வரியை இப்போது விதிப்பதாக இல்லை என்ற கருத்தைத்தான் சொல்லியிருக்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சாதாரண விவசாயி யார் என்பதில் தான் சிக்கல் இருக்கிறது. விவசாய வருமான வரி விதிப்பதில் சிக்கல் இல்லை என்று கருத்துப்படத்தான் எல்லாப் பத்திரிகைகளும் எழுதி யிருக்கின்றன. தினமணியிலும் விளக்கமாக இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைக் காட்டுங்கள் (மூன்று ஏடுகளையும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்கள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் தன்னிலை விளக்கத்தைத் தந்து விட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முரசொலியில், நிருபர் கேட் கிறார், சாதாரண விவசாயி என்றால் யார்? என்று. நான் பதில் சொல் கிறேன். பணப்பயிர் செய்பவர்களிலும் குறைந்த பரப்பளவில் விவசாயம் செய்கிறவர்கள் குறைந்த தொகையினர் சாதாரண விவசாயிகளாக இருக்கி றார்கள் என்று சொல்லியிருக்கிறேன். இதில் என்ன தவறு ?.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : விவசாய வருமான வரியை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. பிரச்னை சாதாரண விவசாயி யார் என்பதில்தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விவசாய வருமான வரி ஏற் கெனவே அமலில் இருந்து வருகிறது. இப்போது மேலும் விவசாயத் துறையில் வரி விதிக்கவேண்டுமென்று சொன்னபோது பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறேன். அதுதான் பத்திரிகையில் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, சட்ட முன் வடிவுகள்.

## (4) அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) 1974-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, 1974-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.........

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, உள்ளாட்சி மன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, உள்ளாட்சி மன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) 1974-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1974-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



(5) அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1974-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தமிழ்நாடு 1974-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு கேளிக்கை வரிகள்-உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1974-ம் ஆண்டு கேளிக்கை வரி-உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாடு 1974-ம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தமிழ் நாடு 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1974-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

(எ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1974-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(6) அரசினர் தனித் தீர்மானம்.

நாடாளுமன்ற மக்களவையில் தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்படும் இடங்களின் எண்ணிக்கையையும், தமிழ் நாடு சட்டப்பேரவை தொகுதிகளின் எண்ணிக்கையையும் உயர்த்துவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி-சுற்றுலா அமைச்சர் அவர்கள் தனது தீர்மானம் ஒன்றை முன்மொழிய இருக்கிறார்கள். அதற்கு திரு. லத்தீப் அவர்கள் கொடுத்துள்ள திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அதுவே அந்தத் திருத்தத்தையும் சேர்த்து தீர்மானத்தை முன்மொழிவதால் திருத்தம் தேவையில்லை என்று தள்ளுபடி செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் : "தமிழ் நாட்டிற்கு, நாடாளுமன்ற மக்களவையில் தற்போது 39 இடங்களும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 234 இடங்களும் உள்ளன.

1972-ம் ஆண்டு தேர்தல் தொகுதி வரையறைச் சட்டத்தின்கீழ் (மத்தியச் சட்டம் 76/1972) அமைக்கப்பட்ட தொகுதி வரையறை ஆணைக்குழு 30—7—1974-ஆம் நாளிட்ட இந்திய அரசிதழில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு, தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்படும் இடங்கள் நாடாளுமன்ற மக்களவையில் 39 எனவும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இடங்கள் 234 எனவும் நிர்ணயித்துள்ளது.

எனவே, தற்போது, தமிழ்நாட்டிற்கு நாடாளுமன்ற மக்களவையில் உள்ள இடங்களின் எண்ணிக்கையிலும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உள்ள இடங்களின் எண்ணிக்கையிலும் மாறுதல் ஏதுமில்லை.

நாடாளுமன்ற மக்களவையில் தமிழ்நாட்டிற்கு 40 இடங்கள் ஒதுக்கப்படவேண்டும் என்றும், மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவின் கீழ் நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்பட்டுள்ள இடம் ஒவ்வொன்றுக்கும் தமிழ்நாடு சட்டப் பேரவையில் தற்போதுள்ள ஆறு இடங்களை ஏழு இடங்களாக உயர்த்த வேண்டும் என்றும் தொகுதி வரையறை ஆணைக் குழுவில் உள்ள தமிழ்நாட்டு இணைநிலை உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அதே கருத்தினைத் தெரிவித்து தொகுதி வரையறை ஆணைக் குழுவிற்குத் தமிழ்நாடு அரசும் கடிதம் எழுதியுள்ளது.

மேற்சொன்ன கருத்துரையை தொகுதி வரையறை ஆணைக்குழு ஏற்றுக் கொள்ளாமல் மேலே இரண்டாவது பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவின்கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற மக்களவையில் தமிழ்நாட்டிற்கு 40 இடங்கள் ஒதுக்கப்படவேண்டும் என்றும், மக்களவை இடம் ஒவ்வொன்றுக்கும் சட்டப் பேரவையில் தற்போது உள்ள ஆறு இடங்களை ஏழு இடங்களாக உயர்த்த வேண்டும் என்ற உறுதியான கருத்து பொது மக்களிடையே நிலவுகிறது; அது நியாயமானதுமாகும்.

எனவே, மேற்சொன்ன காரணங்களை முன்னிட்டு, இவற்றை மறு பரிசீலனை செய்து, நாடாளுமன்ற மக்களவையில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்படும் இடங்களின் எண்ணிக்கையை 40 ஆகவும், மக்களவை இடம் ஒவ்வொன்றுக்கும் சட்டப் பேரவையில் தற்போதுள்ள ஆறு இடங்களை ஏழு இடங்களாகவும் உயர்த்த வேண்டும் என்றும் இந்திய அரசையும், தொகுதி வரையறை ஆணைக் குழுவையும் கேட்டுக்கொள்வதென இப்பேரவை தீர்மானிக்கிறது."

இதிலே பாரா 7-ல் whereas there is a strong public opinion என்ற இடத்தில் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் Whereas there is strong case and public opinion என்ற அளவுக்கு திருத்த வேண்டுமென்று திருத்தம் கொடுத்தார்கள். அது இதிலே பொதுமக்கள் எண்ணம் என்று மட்டுமல்லாமல், இன்னும் அதிகமாக வற்புறுத்தவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதை அரசே





ஏற்றுக்கொண்டு, தீர்மானத்தில் இணைத்து இருப்பதால் திருத்தத்திற்கு இடமில்லை. Strong case and public opinion என்ற அளவுக்கு திருத்தப்படவேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு, முன்மொழியப்படுகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 39 பாராளுமன்ற இடங்கள் இருக்கின்றன. ஒரு பாராளுமன்ற இடத்திற்கு 6 சட்டமன்ற இடங்கள் என்ற வகையில் 234 இடங்கள் இருக்கின்றன. 1971 ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் இந்த இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அரசியல் சட்டமுறைப்படி இப்போது தொகுதி வரையறை ஆணைக்குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அதன்படி பார்த்தால் இப்போது இந்தியப் பேரரசில் மொத்தமாக பாராளுமன்றத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இடங்கள் 545. இந்த 545 இடங்களில் 20 இடங்கள் யூனியன் பிரதேசங்களுக்கும், 17 இடங்கள் ஜம்மு-காஷ்மீர், இமாசலப் பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, நாகாலாந்து ஆகியவைகளுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மீதி இருக்கும் 508 இடங்களை எல்லா மாநிலங்களுக்கும் பிரித்துத் தரவேண்டும். இதிலே ஒரு இடத்தை ரிசர்வாக வைத்துக்கொண்டு 507 இடங்களை மாநிலங்களின் மக்கள் தொகை அடிப்படையிலும், இந்தியாவின் மக்கள் தொகை அடிப்படையிலும் வகுத்துத் தருகின்றனர். அந்த வகையில் பார்க்கிற போது, 507 இடங்கள் என்று வைத்துக்கொண்டால், இந்தியாவின் 1971-ம் ஆண்டு மக்கள் தொகை எண்ணிக்கையின் அடிப்படையில் வகுத்துப் பார்த்தால் ஒவ்வொரு தொகுதிக்கும் 10,43,475 மக்கள் என்று வருகிறார்கள். இந்தக் கணக்கின்படி தமிழகத்திலிருக்கிற 4,11,99,168 மக்கள் தொகைக்கு, ஒரு தொகுதிக்கு 10,43,475 என்ற விகிதத்தில் பார்க்கிறபோது 39·48 இடங்கள்தான் தமிழகத்திற்கு வருகின்றன. 39·48 இடங்கள் என்பது 39½-க்கு மேல் போகாமல் இருப்பதால் 39 இடங்கள்தான் வரும். அவர்கள் இந்தக் கணக்கைத்தான் சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் அந்த ஒரு இடத்தை ரிசர்வாக வைத்துக்கொள்ளாமல் 508 இடங்களையும் சேர்த்துக் கணக்கிட்டால், 39·56 என்று வருகிறது. இந்த முறைப்படிதான் கணக்குப் போடவேண்டுமென்று தமிழகத்தின் சார்பாக சென்ற தேர்தல் அதிகாரிகள், தமிழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தத் தொகுதி வரையறை ஆணைக்குழுவிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். 39·56 என்று வந்தால் 40 இடங்கள் ஒதுக்க வேண்டும். இதற்கு அவர்கள் சொல்லும் காரணம், 508 என்று வைத்துக்கொண்டால், 39·56 இடங்கள் தமிழகத்திற்கு வருகிறது. 42·47 ஆக இருக்கிற மேற்கு வங்காளத்திற்கு 42·54 வருகிறது. ஆக, இரண்டு இடங்கள் புதிதாக வருகிறது. அப்படித் தருவதற்கு இல்லை என்று சொல்கிறார்கள். 0·56 என்பது 0·54 என்பதை விட அதிகம். தமிழகத்தின் புள்ளி 0·02 அதிகமாக இருக்கிறது. ஆகவே, தமிழகத்திற்கு அந்த ஒரு இடத்தைத் தாருங்கள் என்று கேட்கிறோம். தமிழகத்தின் தேர்தல் அதிகாரிகளும், தமிழகத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், அந்த ஆணைக்குழுவில் இடம் பெற்று இருக்கும் உறுப்பினர்களும் 40 இடங்கள் கொடுப்பது நியாயம் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 ஆகஸ்ட் 16

அதற்குப் பிறகு, ஒரு பாராளுமன்ற இடத்திற்கு 6 சட்டமன்ற இடங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை 7 ஆக ஆக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் மக்கள் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒவ்வொரு தொகுதியிலும் சராசரி 1,76,065 மக்கள் வருகிறார்கள். மாநிலங்களில் ஒரு சில தொகுதியில் 90,000 வருகிறார்கள். சில தொகுதிகளில் 1,10,000 வருகிறார்கள். ஆகவே தான் நாம், ஒரு பாராளுமன்ற தொகுதிக்கு 7 சட்டமன்ற தொகுதி வேண்டுமென்று கேட்கிறோம். ஏற்கனவே ஒரிசாவில் 7 இடங்கள் இருக்கின்றன, குஜராத்தில் 7 இடங்கள் இருக்கின்றன, கேரளாவில் 7 இடங்கள் இருக்கின்றன, கர்நாடகத்தில் 8 இடங்கள் இருக்கின்றன, மத்திய பிரதேசத்தில் 8 இடங்கள் இருக்கின்றன. ஆகவேதான் நமக்கு 7 சட்டமன்ற இடங்கள் ஒரு பாராளுமன்ற தொகுதிக்கு ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். இந்த அடிப்படையில் பார்த்தால் நமக்கு 280 சட்டமன்ற தொகுதிகள் கிடைக்கும். ஒவ்வொரு தொகுதிக்கும் 1,47,139 மக்கள் தொகை வரும். கிட்டத்தட்ட ஒவ்வொரு தொகுதிக்கும் 70,000, 75,000, 80,000 என்ற அளவில் வாக்காளர்கள் இருக்கக்கூடும். ஆகவே தான் மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம், ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு 7 சட்ட மன்றத் தொகுதிகள் என்றும், 39 என்பதை 40 பாராளுமன்றத் தொகுதிகள் என்றும் மாற்றவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

[முற்பகல் 10-30]

ஆகவே, இப்பொழுது இருக்கும் 6 இடங்களை 7 இடங்களாக மாற்ற வேண்டும் என்று இங்கிருந்து சென்ற அதிகாரிகள் மூலமாகவும், அந்த இணைப்புக் குழுவில் இடம் பெற்றிருப்பவர்களின் மூலமாகவும் நாம் கோரிக்கை அனுப்பி வைத்தோம். சென்ற மாதம் 24-ம் தேதி ஒரு ஆணைக் குழு கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. தமிழகத்தின் சார்பாக சென்றிருந்த தேர்தல் அதிகாரிகளும், தமிழகத்தின் சார்பாக சென்றிருந்த இணைப்புக் குழுவில் இடம் பெற்றிருந்த பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் வற்புறுத்தினார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்திய அரசாங்கத்திற்கு இதிலே இருக்கிற நியாயத்தை எடுத்து விளக்கி நாடாளுமன்ற மக்கள் அவையில் 40 இடங்களும், சட்ட மன்றத்திற்கு ஒவ்வொரு இடத்திற்கும் 7 இடங்கள் கிடைக்கவேண்டும் என்று 29-ம் தேதி ஒரு தந்தி அடித்து, கடிதத்தில் இவைகளையெல்லாம் விளக்கி, எழுதி, விளக்கக் குறிப்புடன் இந்திய பிரதமர் அவர்களுக்கும் தேர்தல் குழுவுக்கும் கடிதம் எழுதினார்கள். நம்முடைய கடிதம், தந்தியைப் பெற்றுக் கொண்டு நம்முடைய கடிதத்தில் உள்ள விளக்கங்களையும் அறிந்துகொண்டு 30-ம் தேதி தந்தி மூலம் நமக்குப் பதில் தெரிவிக்கும்பொழுது, ஏற்கெனவே இருக்கிற 39 இடங்களும், ஏற்கெனவே இருக்கிற சட்டமன்றத்திற்கு 6 இடங்களும் தான் தமிழகத்திற்கு ஒதுக்கப்படும் என்று தேர்தல் குழு தீர்ப்பு அளித்திருந்தது.

அரசியல் சட்டத்தில் விதித்திருக்கிற விதியின்படி இறுதி முடிவு எடுக்க வேண்டியது தேர்தல் குழு என்று சட்டப்படி குறிப்பிட்டிருக்கிறார்கள். தேர்தல் குழுவிற்கு பாராளுமன்றம் அதிகாரம் அளித்துவிட்டது. தேர்தல்



1974 ஆகஸ்ட் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

குழு எடுக்கும் முடிவுதான் இறுதி முடிவு என்று சட்டத்தில் இருக்கிறது. அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி நம்முடைய முதல் அமைச்சர் அடித்த தந்திக்கும், எழுதிய கடிதத்திற்கும் அவர்கள் எழுதிய பதில் கடிதத்தில் ஏற்கெனவே இருந்த இடங்களைத்தான் தாங்கள் உறுதி செய்கிறோம் என்ற அளவுக்கு அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும் என்று மத்திய அரசுக்கும் தேர்தல் குழுவிற்கும் சட்டமன்றத்தினுடைய ஏகோபித்த எண்ணத்தைத் தெரிவிக்கின்ற வகையில்தான் இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.

மீண்டும் 19-ஆம் தேதி தொகுதி வரையறை ஆணைக்குழு கூட இருக்கிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை நாம் இந்த மாமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றி மத்திய அரசுக்கும், தேர்தல் குழுவிற்கும் அனுப்புவதன்மூலம் மீண்டும் அதைப் பரிசீலனை செய்யவேண்டும் என்று கோருகிறோம். வேறு பல மாநிலங்கள் 7 இடங்கள் 8 இடங்கள் அனுபவிக்கும்பொழுது, தமிழக மாநிலமும் அதே எண்ணிக்கையுள்ள இடங்களை அனுபவிப்பது தான் முறையாகும், நியாயமாகும் என்று வற்புறுத்துகிற வகையில் தான் இந்தத் தீர்மானம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை இந்த மாமன்றம் ஏகோபித்து நிறைவேற்றித் தர வேண்டும் என்று பேரவை உறுப்பினர்கள் அத்தனை பேர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. கோவை செழியன்</u>: இதில் டிஸ்கஷன் அலவ் பண்ணப் போகிறீர்களா, அல்லது அப்படியே பாஸ் பண்ணப்போகிறீர்களா ?

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: விவாதம் இல்லாமல் அப்படியே பாஸ் பண்ணலாம்.

<u>திரு. கோவை செழியன்</u>: பேரவைத் துணைதலைவர் அவர்களே, மாண்புமிகு அவையின் முன்னவர் கொண்டு வந்த தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றிவிடலாம் என்று நாங்கள் இந்த அவையிலே சொல்லியிருக்கிறோம். அதில் ஒன்றும் மாறுபாடான கருத்து வருவதற்கு இடமில்லை.

ஆனால், ஒரே ஒரு சிறு வேண்டுகோளை மாத்திரம் தங்கள் மூலமாக முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தொகுதிகள் அமைப்பு சம்பந்தமாக ஒரு குழு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கின்ற உரிமை தங்களுக்கு இருக்கிறது. அதாவது அவைத் தலைவருக்கு இருக்கிறது. அதைப்பற்றி யாரும் கேள்வி கேட்க முடியாது. என்றாலும் எங்களுடைய கட்சி எதிர்க்கட்சி வரிசையிலே அதிக எண்ணிக்கை கொண்டிருக்கிற ஒரு கட்சியாக இருந்தும், எங்களுடைய கட்சியிலிருந்து யாரையும் அந்தக் குழுவில் போடவில்லை என்பது உண்மையிலேயே வருந்தத்தக்கது. இனி அதைப்பற்றி பேசிப் பயன் இல்லையென்றாலும், மீண்டும் மத்திய அரசிடமிருந்து வருகிற குழுக்கள் தமிழகத்திற்கு வருகிறபொழுது (குறுக்கீடு)—இப்படி நடுவில் குறுக்கீடு செய்தால் நான் அவர்களுக்குத்தான் பதில் சொல்லவேண்டியிருக்கும். இனிமேலாவது

வருகிற குழுக்களோடு எங்கள் கட்சியின் சார்பிலே ஒருவரை அனுப்பி வைப்பதற்கு தாங்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்திலே வேறு எந்தவிதமான மாற்றமும் இருக்க முடியாது என்றும் கூறிக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தையும் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் நலத் துறை இலாகாவிலே ஃபாமிலி பிளானிங் மூலமாக நல்ல பணியாற்றி வருகிறார்கள். அதற்கான வாய்ப்பு இருந்தாலே போகிறது. ஜனத் தொகை குறைந்தால் அதனால் ஒரு ஸீட் போகும். ஒரு புறத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் அமல்படுத்தப் படவேண்டும் என்று சொல்கிற நோக்கில், அதை அமலாக்குகின்ற பொழுது, ஒரு ஸீட் நமக்குப் போய்விடுகிறது. இப்படி ஏற்படாத வகையில் இதற்கு ஒரு வழிவகை செய்வதற்காக மத்திய அரசுக்குத் தாங்கள் ஒரு வேண்டுகோள் விடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய கட்சியின் சார்பிலே ஒருவரை இனிமேலாவது சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையையும் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல்: நம்முடைய அவை முன்னவர் இந்தச் சபையில் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை எங்கள் கட்சிசார்பாக ஆதரிப்பதோடு, ஒரு வேண்டுகோள் விடுகிறேன். தஞ்சை, திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற இடங்களின் முன்பிருந்ததைவிட ஸீட்கள் இப்பொழுது குறைந்திருக்கிறது. குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் பார்லிமெண்டு ஸீட் ஒன்று குறைந்திருக்கிறது. நான்கு பார்லிமெண்ட் ஸீட்கள் இப்பொழுது மூன்றாகக் குறைந்திருக்கிறது. அசெம்பளிக்கு 23 ஸீட்களுக்கு இப்பொழுது 20 ஆகக் குறைந்திருக்கிறது. அதே மாதிரி திருநெல்வேலியில் 19 ஸீட்கள் 18 ஆக மாறியிருக்கிறது. இதை நாம் பார்க்கிறபொழுது நம்முடைய உரிமைகள் பாதுகாக்கக்கப்படக்கூடிய அளவுக்குநடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். மத்திய அரசுக்கு இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தரப் போகிறோம். இதிலே அரசியல் நோக்கத்தோடு பார்க்காமல், சில இடங்களில் தஞ்சை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற இடங்களில் ஸீட்கள் குறைந்திருக்கிற அடிப்படையில் பார்க்கிறபொழுது, அப்படிக் குறையக்கூடாது, என்று மத்திய அரசுக்கு சிபார்சு செய்ய வேண்டும். அப்படி ஸீட்கள் குறையாமல் இருப்பதற்கு பாதுகாப்பு அளிப்பதற்கு நமது அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஆதரித்து, முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாவட்டவாரியாக தொகுதி பிரிப்பதற்கு மக்கள் தொகை அடிப்படையில் பிரிக்கிறார்கள். புதுக்கோட்டை புதிய தனி மாவட்டமாகப் பிரிந்துவிட்ட பிறகு, தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம் ஆகியவைகளிலிருந்து எடுத்த 5 தொகுதிகள் புதுக்கோட்டை ஆகிவிட்டது. ஆகவே, தஞ்சை, திருச்சியில் எண்ணிக்கை ஓர் அளவு குறைந்திருக்கிறது.

THIRU M. A. LATHEEF: This Delimitation Commission is a body constituted under the powers vested in the Constitution by a separate Act of the parliament of India. So far as the present



Delimitation Commission is concerned, the associate members who have been nominated for this body, were nominated one year before and the Speaker of the Assembly simply exercises his rights of choosing the members from the Assembly and therefore after the constitution of the body, neither the Assembly nor Parliament has got any right or any power over this delimitation body. Therefore the question of associating any member afterwards never arises. But as a member, as one of the associated members of this Delimitation Commission representing the State of Tamil Nadu, I will take the view of the hon. Member who just expressed his view. We will also represent as far as possible the views of different parties. I will tell you that neither the State Government nor even the Union Government has got any power over the activities of the Delimitation Commission, which is an independent body.

THIRU B. VENKATASWAMI: On behalf of Swatantra party we welcome the recommendation by the Hon. Leader of the House but at the same time I want to add a few remarks regarding the Delimitation Commission. This body should consult the local M.L.A. regarding bifurcation of certain villages from one constituency to another. Because, so many different views may arise and it is better they consult the local M.L.A. before deciding the issue. It has been said that 18 per cent would be reserved for Scheduled Castes. There is reservation of constituency for them. I say we can have amendment for such reservation for Backward Classes also because there are many Backward Classes and such reservation would be useful to the Backward Classes of our State.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தை முழுமனதுடன் நான் ஆதரிக்கிறேன். மாண்புமிகு சபை முன்னவர் அவர்கள் கூறிய நியாயத்தை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். இப்பொழுது பாராளுமன்றத் தொகுதிக்கு ஆறு சட்டமன்றத் தொகுதி என்று இருப்பதை ஏழாகத் திருத்தி அமைக்க வேண்டுமென்ற கருத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

கேரளாவிலே இந்தமாதிரி மாற்றத்தை அனுமதித்திருக்கிறார்கள். ஏனைய பகுதிகளிலும் அனுமதித்திருக்கிறார்கள். ஆகையால் மற்ற பகுதிகளுக்கு வழங்கப்பட்ட நியாயத்தின் அடிப்படையில் தமிழ் நாட்டுக்கும் நியாயம் வழங்கப்பட வேண்டும். நமது சட்டமன்றத்திலே 500-க்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் இருக்க முடியும் என்ற ஒரு அமைப்பு, அரசியல் சட்டத்தின் 170-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது, அந்த அடிப்படையில்

பார்க்கும்போது நமக்கு 234தான் இப்போது இருக்கிறது. ஆகவே, பாராளுமன்றத் தொகுதிகளை 40 ஆக்கி, ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு 7 சட்டமன்ற தொகுதி என்று மாற்றி அமைக்கலாம். அப்படிச் செய்தால் சிறு சிறு தொகுதிகளாக அமையும். தேர்தலில் எல்லாக் கட்சிகளுக்கும் போதிய வாய்ப்பு கிடைக்க இது வசதியாக இருக்க முடியும் என்பதை வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் குழுவிலே இருப்பவர்கள் நீதிபதி என்ற முறையில் தீர்ப்பு கூற கடமைப்பட்டிருப்பதால், அவர்கள் ஒவ்வொரு கட்சிப் பிரதிநிதிகளையும் சந்தித்து, ஆங்காங்கே இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் தெரிந்து, கடைசி முடிவு எடுக்க வேண்டுமென்று தெரிவித்து, இந்தத் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் முழு மனதுடன் ஆதரிக்கிறேன்.

Thirumathi T. N. ANANDANAYAKI: Last time when we thought over this problem, we said seats for Parliament should not be reduced. Originally, it was 41, it came down to 39. Instead of saying that it should be kept up at 41; why has the Government now agreed to 40 ?

முதலிலே பாராளுமன்றத்திற்கு 41 சீட்டுகள் இருந்தன. அது 39 என்ற அளவில் குறைக்கப்பட்டது ஆகவே நாம் மீண்டும் 41 வேண்டுமென்று ஏன் கேட்கக்கூடாது ? நீங்கள் 41 வேண்டுமென்று கேட்காமல் 40 என்று ஏன் கேட்கிறீர்கள் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆரம்பத்திலிருந்தே குடும்ப நலத் திட்டத்திற்கு நம்முடைய அரசு முழு ஆதரவு தருகிறது என்றால் 1951-ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில் நமக்கு இடம் ஒதுக்கித் தந்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் அது குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றியதற்குத் தந்த பரிசாக அமையும். குடும்ப நலத் திட்டத்தை நாம் தீவிரமாக அமுல் படுத்தியதால் மக்கள் தொகைப் பெருக்கம் குறைந்தது. ஆகையால் நம்முடைய மாநிலத்திற்கு, பாராளுமன்றத்திற்கு 41 ஆக இருந்ததை 39 ஆக குறைத்து விட்டார்கள். இப்போது இருக்கின்ற ஒரு வகையில் 40 வரவேண்டும். அந்த நியாயத்தைத் தான் இப்போது வலியுறுத்துகிறோம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வடிவேல் அவர்கள் தன்னுடைய கருத்தைச் சொல்லும்போது, திருநெல்வேலி மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். 19 தொகுதிகளாக இருந்ததை இப்போது 18 ஆக குறைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. திருநெல்வேலி தொகுதியை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். இப்படிப் பிரிக்கப்படுவதற்கு முன்னால் தாழ்த்தப்பட்ட மக்கள் தொகுதியாக இருந்த கங்கைகொண்டான் தொகுதியை நெல்லையுடன் இணைத்தது மட்டுமல்லாமல் பெரும் பகுதியை



மேலப்பாளையம், பாளையங்கோட்டை பகுதிகளுடன் இணைத்துவிட்டார்கள். நெல்லை மாவட்டத்தில் முஸ்லீம்கள் பிரதிநிதி வரவேண்டுமானால் அந்த ஒரு இடத்திலிருந்துதான் வர முடியும். ஆகையால் மத்திய அரசு இதை மறுபரிசீலனை செய்து, அந்தப் பகுதி மக்களின் விருப்பத்தை பூர்த்தி செய்கின்ற வகையில், தொகுதிகளைக் கொஞ்சம் கூட்டி, பழைய நிலைமையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு சபை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர்கள் வடிவேல் அவர்களும் எட்மண்ட் அவர்களும் தெரிவித்த கருத்தினை பரிசீலனை செய்து திருத்தி அமைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால் தொகுதி வரையறை ஆணைக்குழு தமிழ்நாட்டில் ஒரு வாரம் சுற்றுப்பயணம் செய்யும். அப்போது அந்தந்த தொகுதியில் இருக்கின்ற நடைமுறைச் சிக்கல்களை மாற்றி அமைக்க வாய்ப்பு இருக்கும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்க வேண்டுமென்ற அடிப்படையிலும், இருக்கிற பெயர் அப்படியே இருக்கட்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்படுமானால் அந்த அடிப்படையிலும், ஒரு தொகுதி தேவையற்ற முறையில் விரிந்து-சுருங்கி இருக்குமானால் அதை மாற்றி அமைக்கின்ற அடிப்படையிலும் முடிவு செய்கின்ற அதிகாரம் தொகுதி வரையறை ஆணைக்குழுவுக்கு இருக்கிறது. ஆகையால் அந்தக் குழு சுற்றுப்பயணம் செய்யும்போது மாண்புமிகு உறுப்பினர்களும் மற்ற பிரதிநிதிகளும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தால் குழுவினர் அதைப் பரிசீலனை செய்து முடிவு செய்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

“ தமிழ்நாட்டிற்கு, நாடாளுமன்ற மக்களவையில் தற்போது 39 இடங்களும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 234 இடங்களும் உள்ளன.

1972-ம் ஆண்டு தேர்தல் தொகுதி வரையறைச் சட்டத்தின்கீழ் (மத்தியச் சட்டம் 76/1972) அமைக்கப்பட்ட தொகுதி வரையறை ஆணைக் குழு 30—7—1974-ஆம் நாளிட்ட இந்திய அரசிதழில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு, தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்படும் இடங்கள் நாடாளுமன்ற மக்களவையில் 39 எனவும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இடங்கள் 234 எனவும் நிர்ணயித்துள்ளது.

எனவே, தற்போது, தமிழ்நாட்டிற்கு நாடாளுமன்ற மக்களவையில் உள்ள இடங்களின் எண்ணிக்கையிலும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உள்ள இடங்களின் எண்ணிக்கையிலும் மாறுதல் ஏதுமில்லை.

நாடாளுமன்ற மக்களவையில் தமிழ்நாட்டிற்கு 40 இடங்கள் ஒதுக்கப்படவேண்டும் என்றும், மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவின் கீழ் நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்பட்டுள்ள இடம் ஒவ்வொன்றுக்கும் தமிழ்நாடு

சட்டப் பேரவையில் தற்போதுள்ள ஆறு இடங்களை எழு இடங்களாக உயர்த்த வேண்டும் என்றும் தொகுதி வரையறை ஆணைக் குழுவில் உள்ள தமிழ்நாட்டு இணைநிலை உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதே கருத்தினைத் தெரிவித்து தொகுதி வரையறை ஆணைக் குழுவிற்குத் தமிழ்நாடு அரசும் கடிதம் எழுதியுள்ளது.

மேற்சொன்ன கருத்துரையை தொகுதி வரையறை ஆணைக்குழு ஏற்றுக் கொள்ளாமல், மேலே இரண்டாவது பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவின் கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற மக்களவையில் தமிழ்நாட்டிற்கு 40 இடங்கள் ஒதுக்கப்படவேண்டும் என்றும், மக்களவை இடம் ஒவ்வொன்றுக்கும் சட்டப் பேரவையில் தற்போதுள்ள ஆறு இடங்களை எழு இடங்களாக உயர்த்த வேண்டும் என்ற உறுதியான கருத்து பொதுமக்களிடையே நிலவுகிறது; அது நியாயமானதுமாகும்.

எனவே, மேற்சொன்ன காரணங்களை முன்னிட்டு, இவற்றை மறு பரிசீலனை செய்து, நாடாளுமன்ற மக்களவையில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்படும் இடங்களின் எண்ணிக்கையை 40 ஆகவும், மக்களவை இடம் ஒவ்வொன்றுக்கும் சட்டப் பேரவையில் தற்போதுள்ள ஆறு இடங்களை எழு இடங்களாகவும் உயர்த்த வேண்டும் என்றும் இந்திய அரசையும் தொகுதி வரையறை ஆணைக்குழுவையும் கேட்டுக்கொள்வதென இப் பேரவை தீர்மானிக்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, கச்சத்தீவு குறித்த தீர்மானம். மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களும் மற்றும் பலரும் தெரிவித்த கருத்தின்படி 11-00 மணி அளவில் அலுவல் ஆய்வுக் குழு கூடி, இந்தத் தீர்மானம் பற்றி முடிவு செய்ய இருப்பதால், இந்தத் தீர்மானம் இன்னொரு நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## 7. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. இன்றைய தினம் கட்சித் தலைவர்கள் பேச இருப்பதால், கட்சித் தலைவர்கள் மட்டும்தான் பேச வேண்டியிருக்கும். இன்னும் 165 நிமிடங்கள் இருக்கின்றன. 8 பேர் பேச வேண்டியிருக்கிறது. ஆகையால் ஒருவருக்கு 20





நிமிடங்கள்தான் வரும். அந்த 20 நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. லத்தீப் அவர்களை பேச அழைக்கிறேன்.

திரு. எம். எ. லத்தீப் : தலைவரவர்களே, நான் இந்த நம்பிக்கை இல்லாத தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மீது இருக்கிற கச்சத்தீவு பிரச்சினையைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவிடுகிறேன்.

இன்று மாலையோ அல்லது நாளை மாலையோ இந்தத் தீர்மானத்தைப் பற்றி விவாதிப்பது நல்லது என்று கருதுகிறேன். ஏனென்றால் 19-ந் தேதி தமிழ்நாட்டிலே இருந்து பல சட்டமன்ற உறுப்பினர்கள் டில்லிக்குச் செல்ல இருக்கிறார்கள். டில்லியிலே தொகுதி வரையறைக் குழுவிலே கலந்து கொள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லவிருப்பதால், அப்போது பிரதம அமைச்சர் அவர்களையும் சந்திக்க வாய்ப்பு இருப்பதால், தமிழ் நாட்டுடைய ஒருமித்த கருத்தை அவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு, பல்வேறு கட்சிகளின் சார்பில் வலியுறுத்திச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே, அலுவல் ஆய்வுக்குழுவில் எடுக்கின்ற முடிவின்படி இன்று மாலையோ அல்லது நாளை மாலையோ கச்சத்தீவு பற்றிய விவாதத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த அவையில் 4 தினங்களாக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின்மீது விவாதம் நடத்தி வருகிறோம். பொதுவாக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்றால் ஒரு கடைசி ஆயுதமாக இருக்க வேண்டும். எதிர்க்கட்சிக்காரர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறார்கள் என்றால் ஆட்சியிலே இருப்பவர்கள் கொஞ்சம் அச்சப்பட வேண்டும். அது எப்போது இருக்கும் என்றால், இதை ஒரு கடைசி ஆயுதமாகப் பயன்படுத்தினால்தான். அப்படிச் செய்தால் அது இந்த நாட்டு மக்கள் மனதிலே ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தும். பரபரப்பு ஏற்படக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டும். அதல்லாமல் எப்போது வேண்டுமானாலும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, சம்பிரதாயத்திற்கு ஏதோ கொண்டுவந்திருக்கிறார்கள் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியிலே ஏற்படுத்துவதற்காக இந்த கடைசி ஆயுதத்தைப் பயன்படுத்தக் கூடாது. இப்போது கொண்டு வந்திருக்கிற இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஏதோ சம்பிரதாயத்திற்காக கொண்டு வந்திருக்கிற ஒரு தீர்மானமாகத்தான் நான் நினைத்துப் பார்க்கிறேன்.

இதற்குப் பதிலாக ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கலாம். இன்றைக்கு நாட்டிலே உணவுப் பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. இது சட்டசபையிலே விவாதிக்கப்படவேண்டும். பல தவறுகள் நடைபெறுகின்றன. அவற்றை சுட்டிக்காட்டக்கூடிய வகையிலே நிர்வாகத்தில் இருக்கக்கூடிய சீர்கேடுகளை செம்மைப்படுத்த தகுந்த ஆலோசனை வழங்கும் வகையிலே ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறோம் என்று கொண்டு வந்திருக்கலாம்.

ஆனால் இங்கே இருக்கின்ற நண்பர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதால் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மூலம் ஒரு பயனையும் அவர்கள் நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது என்ற காரணத்தால் அவர்களுக்காக நான் பரிதாபப்படுகிறேன்.

இன்றைக்கு நாம் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை விவாதித்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கக் கூடிய முக்கிய நோக்கம் உணவுப் பிரச்சனையை சமாளிக்க இந்த அரசு தவறி விட்டது; ஆகையால் இந்த அரசு வெளியேற வேண்டும் என்பது என்று அதனுடைய விவாதத்திலே கலந்துகொண்டு அவர்கள் சொன்னார்கள். மற்ற மற்ற பகுதிகளில் எப்படி இருந்தாலும் தமிழக மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் விளைச்சல் நன்றாக இருக்கிறது. உற்பத்தி பெருகியிருக்கிறது என்று அரசாங்கக் குறிப்புகள் சொல்கின்றன. விவசாயத் துறையில் மிகப் பெரிய மாற்றங்களைக் கண்டிருக்கிறோம் என்று சொல்லப்படுகிற இந்த நேரத்தில் தமிழ்நாட்டிலே எந்தக் காரணத்தினால் இந்த உணவு நெருக்கடி ஏற்பட்டது என்று பார்க்கும்போது இந்த அரசு பங்கீட்டு முறைகளில் கையாண்ட சில முறைகள் தவறு என்று அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

ஆனால் ஒரு வாரத்திற்கு முந்தி இந்தியப் பேரரசின் பிரதம அமைச்சர் அவர்கள்—அவர்களுடைய கட்சிக் கூட்டத்தில் பேசும்போது சொன்னார்கள், சில உள்நோக்கம் வைத்திருப்பவர்கள்—சமூக விரோத சக்திகள் இந்த நாட்டிலே ஒரு துஷ்பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இந்த நாட்டிலே போதிய அளவுக்கு உணவுப் பொருள்கள் இருக்கின்றன. போதிய கையிருப்பு இருந்தும் விநியோக முறையில் உள்ள கோளாறின் காரணமாகத்தான் உணவுப் பொருள் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்கிற துஷ்பிரச்சாரத்தைச் செய்து வருகிறார்கள் என்பதாக—இந்தியப் பிரதமர்—காங்கிரஸ் கட்சியின் கூட்டத்தில் டெல்லியில் பேசும்போது சொன்னார்கள்.

**இங்கே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் அந்தக் கருத்தை உன்னிப்பாகப் பார்க்க வேண்டும். இந்த உள்நோக்கம் கொண்டு துஷ்பிரச்சாரம் செய்கிற தீயசக்திகள் என்று யாரை இந்தியப் பிரதமர் அவர்கள் சொல்கிறார்கள்? (Interruption)**

**The observation of the Prime Minister was that certain interested parties, having been politically motivated circulate rumours in the country that whereas—they say—there is in the country sufficient production and stock, the Government has failed in its duty of effecting equitable distribution and they spread the news.**





என்று நம்முடைய பிரதம அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் பகுதியாக இந்தத் தமிழ்நாட்டில் போதிய உணவுப் பொருள் இருந்தும்—போதிய கையிருப்பு இருந்தும்—இந்த தமிழ்நாட்டிலே இருப்பவர்கள் பங்கீட்டிலே தவறு செய்து விட்டார்கள் என்று சொன்னால்—இந்தக் குற்றச்சாட்டை பிரதமர் எப்படி வருணித்து இருக்கிறார்கள் என்பதை மட்டும்—அவர்கள் யாரைக் குறிப்பிடுகிறார்கள் என்பதை மட்டும்—மதிப்பிற்குரிய மாரிமுத்து அவர்கள்—சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நாட்டிலே உணவுப் பொருள் பெருகி இருக்கிறது. தமிழ் நாட்டிலே மட்டுமல்ல—இந்தியா பூராவலும் பெருகியிருக்கிறது. இன்றைக்கு மட்டுமல்ல—சென்ற பட்ஜெட் கூட்டத்திலேயே நான் சொல்லியிருக்கிறேன். ஐந்தாண்டுத் திட்டங்களின் வாயிலாக நாம் பல முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறோம். இதிலே சந்தேகமில்லை.

ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டவர்கள்—நாட்டிலே புதிய செலவுகளுக்கு நிதி ஆதாரங்களைத் தேடியவர்கள்—அப்படிக் கிடைத்த நிதி ஆதாரங்களை எல்லாம் எந்த முன்னுரிமை வரிசையில் செலவிட்டார்கள் என்பதை எல்லாம் பார்க்கும்போது—இன்றைக்கு அல்ல—நான் பொருளாதார மாணவனாக கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோதே—இவர்களுடைய இண்டஸ்ட்ரியல் பாலிசி—அக்ரிகல்சுரல் பாலிசி நிச்சயமாக நாட்டிலே ஒரு பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்தும் என்று—பதினைந்து பதினேழு ஆண்டுகளுக்கு முன்பாகவே நாங்கள் விவாதித்தது இன்றைக்கும் நினைவு இருக்கிறது. பொருளாதாரத் துறையில் பட்டம் பெற்றவர்கள் புஸ்தகத்தில் சொல்லியுள்ளபடியே சொல்லிவிட்டார்கள்—அதை அப்படியே வைத்துச் செயல்படுத்தியதன் விளைவு என்ன? ஒவ்வொரு வருடமும் பற்றாக்குறை பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. பணம் செலாவணிக்கு வருகிறது என்றால் எல்லோருக்கும் தெரிந்த எலிமெண்டரி பிரின்சிபில் அதை மறந்ததன் காரணமாகத்தான் இன்றைக்கு நாட்டிலே பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. பத்திரிகைகளில் வருகிற குறிப்புகள்—பத்திரிகைகளில் வருகிற ஆர்டிகிள்ஸ் நமக்கு அதைத் தெளிவாகக் காட்டுகின்றன. ஒரு நாட்டில் பணம் ஒருவர் கையில் இருந்து இன்னொருவர் கைக்கு மாற வேண்டுமென்றால் எப்படி மாற வேண்டும்?

முன்பு நம் நாட்டிலே பண்டமாற்று முறை இருந்தது. நெல்லைக் கொடுத்து சோளத்தை வாங்கிக்கொள்வார்கள். துணி வேண்டுமென்றால் நெல்லைக் கொடுத்து வாங்கிக்கொள்வார்கள். பண்டமாற்று முறைகள் இருந்த காலத்தில் பொருளாதாரம் மிகச் செம்மையாக இருந்தது.

பணத்தை வைத்து மதிப்பிடுகின்ற நிலை வருகிறபோது நமக்குத் தேவையான பணத்தைப் பெற அரசு—நேரடி வரிகளைப் போட்டு வசூலித்திருக்கலாம். மறைமுக வரிகளைப் போட்டு வசூலித்திருக்கலாம். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் டெஃபிசிட் பட்ஜெட் என்று போட்டு—நாசிக்கில் நோட்டு

அடிக்கிற அச்சகம்தான் இருக்கிறது என்று —500 கோடி வரிகளின் மூலம் கிடைத்தது என்றும் 300 கோடிக்கு நோட்டை அடித்து செலாவணிக்கு விட்டதன் விளைவுதான் இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கிற பொருளாதாரச் சிக்கலுக்குக் காரணமாகும்.

என் கையில் உள்ள ஐந்து ரூபாய் இன்னொருவர் கைக்குப் போகிறது என்றால் ஐந்து ரூபாய் பெருமான சரக்கை அவர் என்னிடம் கொடுக்க வேண்டும். என் கையில் இருந்து 2 ரூபாய் ஒரு ரிக்ஷாக்காரர் கைக்குப் போகிறது என்றால் அவர் என்னை பெரியமேட்டில் இருந்து சிந்தாதிரிப்பேட்டைக்குக் கொண்டுபோய் விட்டிருப்பார். எந்தவிதமான லேபரும் இல்லாமல்—எந்தவிதமான பொருள் உற்பத்தியும் இல்லாமல்

without there being any production and any labour we have been consistently and continuously inducting circulation of money without there being any value.

பணத்தைப் புழக்கத்திற்கு விட்டதன் விளைவுதான் இன்றைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கே அடிப்படையான காரணமாகும்.

இதனால் என்ன ஆனது ? எந்த அளவுக்குப் பணம் பெருகியதோ அந்த அளவுக்கு உற்பத்தி பெருகவில்லை. எந்த அளவுக்குப் பணம் பெருகியதோ அந்த அளவுக்கு லேபர் அதிகமாகவில்லை. 1952-ல் இருந்து இன்று வரை மத்திய அரசு ஆயிரக்கணக்கான கோடிக்கு நோட்டை அச்சடித்து செலாவணிக்கு அனுப்பிய காரணத்தினால் இன்றைக்கு நாட்டிலே பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, இது டெபிசிட் பட்ஜெட் பற்றி. நாம் வகுத்த ப்ரையாரிட்டி லிஸ்ட் எப்படி ? எந்தத் துறையில் பணத்தை முதலீடு செய்தால் உற்பத்தி பெருகுமோ, எந்தத் துறையில் பணத்தை முதலீடு செய்தால்—உற்பத்திப் பெருக்கத்தோடு வேலை வாய்ப்புகள் பெருகுமோ அந்தத் துறைகளில் இன்வெஸ்டு செய்யத் தவறிவிட்டார்கள். உதாரணமாக நான் ஒன்றைச் சொல்கிறேன். தட்சிண ரெயில்வேக்காக

(முற்பகல் 11-00)

ஒரு பெரிய கட்டிடத்தை மத்திய அரசு இங்கே கட்டியிருக்கிறது. அந்தக் கட்டிடத்தை எவ்வளவு ரூபாய்க்குக் கட்டியது என்றால், அன்றிருந்த சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையில், அந்தக் கட்டிடத்தைச் சுமார் ரூ. 85 லட்சம் மதிப்பீட்டிலே கட்டியது. அந்தக் கட்டிடம் கட்டப்படும்போது எவ்வளவு தேவையான பொருள்கள் இருந்தனவோ, அவற்றிற்கு டிமாண்ட் இருந்தது. அதற்குத் தேவையான சுண்ணாம்புக்கு டிமாண்ட் இருந்தது, அதற்குத் தேவையான இரும்புக்கு டிமாண்ட் இருந்தது, அதற்குத் தேவையான செங்கல்லுக்கு டிமாண்ட் இருந்தது. அதற்குத் தேவையான வர்ணத்திற்கு டிமாண்ட் இருந்தது—அந்தக் கட்டிடம் கட்டப்படுகின்ற நேரத்தில் கட்டிடம் கட்டுவதற்காக வேலையாட்கள் தேவைப்பட்டனர். அன்றைக்கு லேபர் இருந்தது. அன்றைக்கு அந்தக் கட்டிடம்



கட்டப்படும்போது சில பொருளாதார விளைவுகளைக் கொடுத்தது. அதிகமான இன்கம் கொடுத்து, எம்ப்ளாய்மெண்ட் ஏற்படுத்தி, அதே நேரத்தில் டிமாண்டை ஏற்படுத்தியது. ஆனால் இன்று நிலை என்ன ? ரூபாய் 85 இலட்சத்தைச் செலாவணிக்கு விட்டிருக்கிறார்கள். continuity of production sources அந்த உற்பத்தியினுடைய தொடர்ச்சியை நீங்கள் ஏற்படுத்தக் கூடியவர்களாக இருந்தால், ரூபாய் 85 இலட்சத்திலே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி இருந்தால், அதனுடைய விளைவுகள் இன்றைக்குக் கூட இருந்திருக்கும். நேஷனல் இன்கம் பெருகியிருக்கும். தொடர்ந்து, மக்களுக்கு வருமானம் கிடைத்திருக்கும். ஆனால், நம்முடைய மத்திய அரசு எங்கே பார்த்தாலும் கட்டிடங்கள், பில்டிங்ஸ், அந்தக் கட்டிடங்கள் முடிந்த உடனே பணப்புழக்கத்தை—செலாவணியைத் தொடர்ந்து விட்டது. ஆனால் உற்பத்தியிலே தொடர்ச்சி இல்லை, வருமானத்திலே தொடர்ச்சி இல்லை, டிமாண்டிலே தொடர்ச்சி இல்லை. பணம் அதிகமாகியது, உற்பத்தி குறைவாகியது. அதனால் விலைவாசிகள் அன்றைக்கு நிச்சயமாக ஏறின.

அது மட்டுமல்ல, இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். நிச்சயமாக ஒத்துக்கொள்கிறோம். இப்பொழுது அண்மையில் கூட இரண்டு பட்ஜட்டுகளை, மெயின் பட்ஜட் ஒன்று, சப்ளிமெண்டரி பட்ஜெட் ஒன்று, ஆக இரண்டு பட்ஜெட்டுகளை மாண்புமிகு சவான் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். சப்ளிமெண்டரி பட்ஜெட்டில் சுமார் 250 கோடிக்கு புதிய வரிகளை போட்டிருக்கிறார்கள். இந்தப் புதிய வரிகளைப் போடுவதன் மூலமாகப் பண வீக்கத்தைத் தடுத்து விடுவோம் என்ற எண்ணத்தோடு போடவில்லை என்று மாண்புமிகு சவான் அவர்கள் ஒத்துக்கொண்டு பாராளுமன்றத்தில் சொல்கிறார்கள்.

சோப்பு விலை இன்று என்ன? 6 மாதத்திற்கு முன்பு என்ன விலை இருந்தது? 6 மாதத்திற்கு முன்பு 90 பைசாவுக்கு விற்ற சோப்பு இப்பொழுது ரூ. 1.90. சிகரட் போன 6 மாதத்திற்கு முன்பு என்ன விலை இருந்தது? இப்பொழுது அதன் விலை என்ன? செருப்பு, 6 மாதத்திற்கு முன்பு என்ன விலை இருந்தது? எண்ணெயினுடைய விலை 6 மாதத்திற்கு முன்பு என்ன இருந்தது? இன்று என்ன விலை? உலகத்திலேயுள்ள அத்தனை பொருள்களின் விலையும் ஏறிவிட்ட நிலையில், விவசாயி அவன் இப்படி உற்பத்தி செய்கிற உணவைக் குறைந்த விலைக்குக் கொடுத்துவிட்டு உயர்ந்த விலைக்கு மற்ற பொருள்களை வாங்க முடியுமா? நீங்களெல்லாம் ஏற்றிக்கொள்ளலாம், சோப்புக்காரன் ஏற்றிக்கொள்ளலாம், துணிக்காரன் ஏற்றிக்கொள்ளலாம், மற்ற வகையிலே இருக்கிற பொருள்களின் விலையை ஏற்றிக்கொள்ளலாம். ஆனால், விவசாயி? விவசாயியை இளிச்சவாயன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? விவசாயி ஏமாளியாக இருக்கிறான் என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா?

இந்த நிதர்சன உண்மைகள் எல்லாம் யாருக்கும் தெரியாது என்று நான் நிச்சயமாகச் சொல்லமாட்டேன். எல்லோருக்கும், இங்கே இருக்கிற காங்கிரஸ் தலைவர்களுக்கும் தெரியும். மற்ற நண்பர்களுக்கும் நிச்சயமாகத்

தெரியும். ஆனால், இவர்கள் என் அப்படிச் செய்கிறார்கள். அரசியல் காரணங்கள். [illegible] பெரிதாக இருக்கிறதே தவிர [illegible] இருந்தாலும், [illegible] இருந்தாலும் நாம் மிகுதி யாக, [illegible] பார்த்துக் கொண்டிருக் கிறோம். நாம் [illegible] வேண்டும். நாட்டிலே இருக்கிற மக்களைக் காப்பாற்ற வேண்டும். இன்றைக்கு மக்களைக் கவனிக்கவில்லை [illegible] கொண்டிருக்கிறார்கள். [illegible] கவிழ்க்கலாம் [illegible] இந்த நாட் டிலே [illegible] நாம் [illegible] செய்மைப் [illegible] வேண்டுமென்ற [illegible] இன்னல் [illegible] என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[புலவர் சி. பழனிச்சாமி]

இன்றைக்கு மற்ற மாநிலங்களை எடுத்துப் பாருங்கள், எல்லா மாநிலங் களிலேயும் சிக்கல்கள் இருக்கின்றன. தமிழ் மாநிலத்திலே மட்டுமல்ல, வட புலங்களிலே இருக்கிற பட்டிதொட்டிகளுக்கெல்லாம் செல்லக்கூடிய வாய்ப்பு என்னுடைய கட்சியின் மூலமாக எனக்குக் கிடைத்தது. எவ் வளவு சிக்கல்களோடு, கஷ்டத்தோடு அவர்கள் வாழ்கிறார்கள் என்பதை அங்கே பார்த்தேன். கடந்த மாதம் கொஹிமாவுக்குப் போயிருந்தேன். அம்மாநில முதலமைச்சர் திரு. ஹோ அவர்கள் ஒரு விருந்து கொடுத்தார் கள். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பொதுக் கணக்காய்வுக் குழுத் தலைவர்கள் அதில் கலந்து கொண்டார்கள். பாராளுமன்ற கணக்காய்வு குழுத் தலைவர் மதிப்பிற்குரிய ஜோதிர்மய் பாசு அவர்கள் கலந்து கொண்டார்கள். அம்மாநில முதலமைச்சர் திரு. ஹோ அவர்களும் என்னைப் போன்றவர்களும் உட்கார்ந்து விவாதித்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது தமிழ்நாட்டிலே அரிசி விலை என்ன என்று அவர்கள் கேட்டார்கள். நான் சொன்னேன், தமிழ்நாட்டிலே இப்பொழுது படி அரிசி ரூ. 3.50, ரூ. 4 என்கிற விலைக்கு விற்கப்படுகிறது என்று சொன்னேன். (மணி அடிக்கப்பட்டது).

நாங்கள் 3 பேர்தான் பேசுகிறோம். 6 பேர் இருக்கிற கட்சியினருக்கு 20 நிமிஷம் கொடுக்கிறேன் என்றால் எப்படி முடியும்?

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (புலவர் சி. பழனிச்சாமி): 20 நிமிஷம் பேசியிருக்கிறீர்கள்.

திரு. எம். எ. லத்தீப்: 20 நிமிஷம் கொடுத்தது சரியல்ல என்று சொல்கிறேன். நான் நாட்டிலே இருக்கிற மக்களுக்காகப் பேசுகிறேன் இந்த ஆட்சிக்காகவும் பேசவில்லை, மற்றவர்களுக்காகவும் பேசவில்லை. மக்களுக்காகப் பேசுகிறேன். திரு. ஹோ அவர்கள் சொன்னார்கள். என்ன சொன்னார்கள் என்றால், ரூ. 3½-க்கு ஒரு படி அரிசியா? ரூ. 3½-க்கு





ஒரு படி அரிசியா என்று கேட்டார்கள். ரூ. 4-க்கு ஒரு படி என்றால், கிலோ கணக்கில் என்ன என்று கேட்டார்கள். கிலோ கணக்கில் சொல் கிறார்களே, அதைப் போல 2 மடங்கு, 2¼ மடங்கு, மெட்ராஸ் மெஷர் என்று சொன்னேன். 1.6 அவர்கள் வைத்திருப்பது. அங்கே, ரூ. 7 ஒரு கிலோவுக்கு விற்கிறது. அசாமில் ஒரு கிலோ அரிசிக்கு மக்கள் ரூ. 7 கொடுக்க வேண்டும். எந்த அசாமிலே? தர்மபுத்திரா ஓடுகிற அசாமிலே, எந்த அசாமிலே? நெல் அதிகமாக உற்பத்தியாகிற அசாமிலே, எந்த அசாமிலே? அரிசியோடு, கோதுமை மற்றவற்றை சாப்பிடுகிற அசாமிலே கிலோ அரிசி ரூ. 7-க்கு விற்கிறது என்றும் தமிழ்நாட்டினுடைய நிலைமை எப்படி இருக்க வேண்டும்? ஆகையால் நான் தமிழ்நாட்டி னுடைய நிலைமை இப்படி உயர்ந்து விட்டது என்று யாருக்கும் வாதாடு வதற்காகச் சொல்லவில்லை.

நாட்டிலே ஒட்டுமொத்தமாகப் பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்பட்டத ற்குக் காரணம் என்ன? விவசாயி னுடைய விளைவுதான் இது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாயி னுடைய உற்பத்திப் பொருளுக்குத் தரமான, நிர்ணயித்த விலையைக் கொடுங்கள். இல்லாவிட்டால், மற்ற பொருள்களுடைய விலையைக் குறைக்க நடவடிக்கை எடுங்கள். எங்களுடைய விவசாயப் பெருமக்கள் தங்களுடைய உற்பத்தியைக் காத்து அதிகரித்துக்கொள்ள வேண்டும். அப்படியென்றால், ரூ. 2-க்கு உங்களிடத்தில் கொடுத்துவிட்டு, ரூ. 2-க்கு சோப்பு வாங்குவானா? அவன் மட்டும் இளிச்சவாயனாக இருப்பதா? அவனைப் பற்றி என்னதான் நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறேன், பொருளாதார மாணவன் என்ற முறையில் சொல்கிறேன். இதற்கு மத்திய அரசு முழுப் பொறுப்பேற்கவேண்டும். மத்திய ஆட்சியினுடைய பொருளாதாரக் கொள்கைதான் இவ்வளவு பெரிய சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது என்று நான் கூற விரும்புகிறேன்.

நேற்றிரவுதான் ஒரு செய்தியைக் கேள்வியுற்றேன். மத்திய அரசுக்கு ஞானம் பிறந்திருக்கிறது—கட்டிடங்களை கட்டக்கூடாது இனிமேல் என்று சொன்னார்கள். இவ்வளவு காலத்திற்குப் பிறகு, அடிபட்ட பிறகு மக்கள் எல்லாம் செத்துக் கொண்டிருக்கிற நிலைமை உருவான பிறகாவது அவர்களுக்குக் கொஞ்சம் ஞானம் உருவானதற்காக நான் சந்தோஷப் படுகிறேன். ஆகவே, இன்றிருக்கிற, நாட்டிலேயிருக்கிற, பொருளாதாரச் சிக்கல்களுக்கு அவர்கள்தான் காரணம் என்பதை யார் மறுக்க முடியும்? எப்படி விவசாயப் பெருமக்கள் குறைந்த விலைக்குக் கொடுக்கவேண்டு மென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

நாம் உற்பத்தி செய்கிறோம், பங்கீடு செய்கிற அதிகாரம் நம்மிடத்திலே இருக்கிறது. நான் அதைத்தான் அன்றைக்குக் கூடச் சட்டிக்காட்டினேன். சென்ற பட்ஜெட் கூட்டத்திலே பேசும்பொழுது கூடச் சொன்னேன்—பங்கீட்டு முறையிலே நாம் அனுஷ்டிக்கிற முறைகள் மிகப் பெரிய சிக்கலை ஏற்

படுத்தும், அரசாங்கம் அதில் கவனிப்பாக இருக்கவேண்டுமென்று நான் சொன்னேன். இன்று இந்த அரசாங்கம் யார் யாரால் இப்பேர்பட்ட சூழ்நிலையில் இருக்கும் என்றுதான் அன்றைக்கு அரசாங்கம் கவனத்தோடு இருக்கவேண்டுமென்று சொன்னேன். உண்மையான நண்பர்கள் என்ற முறையிலே நாங்கள் பங்கீட்டு முறையிலே இருக்கிற சிக்கல்களை குறைகளை எடுத்துச் சொன்னோம், நீங்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று சொன்னோம். உங்களிடத்திலே போலீஸ் படை இருக்கிறது, சி.ஐ.டி. இருக்கிறது. தமிழ்நாட்டிலே 3 இடங்களிலே கிளாஸ்கள் நடத்தியிருக்கிறார்கள். சிறு வியாபாரிகளை எப்படித் தாக்க வேண்டும், பெரு வியாபாரிகளை எப்படி தாக்க வேண்டுமென்று திருச்சியிலே வகுப்பு நடத்தப்பட்டிருக்கிறது, குற்றாலத்திலே நடத்தப்பட்டிருக்கிறது, சென்னையிலே நடத்தப்பட்டிருக்கிறது. எவ்வளவு காலத்திற்கு முன்பு, 4 மாதங்களுக்கு முன்பு நடத்தப்பட்டிருக்கிறது என்றால் இந்த ஆட்சியினுடைய போலீஸ் இலாகாவினுடைய, சி.ஐ.டி டிபார்ட்மெண்ட் தகவல் கொடுக்கவில்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஆகையினால், பங்கீட்டிலே சில முறைகளை நாம் கையாள வேண்டும்.

இன்றைக்கு தஞ்சாவூர் மாவட்டத்திலே நடந்தவற்றைப் பற்றி, தஞ்சாவூரின் கதவுகளைத் திறந்ததைப் பற்றி, சரியோ, தவறோ மக்கள் பலவிதமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பேச்சுக்கு அடிப்படை யார், எப்படி அந்தப் பேச்சு வந்தது, அதற்கு யார் காரணம் என்பதைக் கண்டு பிடித்து அரசாங்கம் ஒரு அறிக்கை விடுவது கூட நல்லது என்று நான் மாண்புமிகு உணவு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நான்கு மாதங்களுக்கு முன்னாலேயே ஹோல்சேல் வியாபாரிகள் என்னிடத்திலே சொன்னார்கள். அரசாங்கத்தின் கொள்கை நாட்டிலே சிக்கலை ஏற்படுத்திவிடுமோ என்று நாங்கள் அஞ்சுகிறோம் என்று சொன்னார்கள். ஹோல்சேல் வியாபாரிகளுக்கு ஒரு உரிமை கொடுத்திருக்கிறார்கள், என்ன உரிமை? ஒவ்வொரு தடவையும் அவர்கள் 5 டன் நெல்லை கொள்முதல் செய்து கொள்ளலாம் என்று கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அந்த நெல்லை அவர்களுடைய மில்லுக்குக் கொண்டுபோய் அரிசியாக்கிக் கொண்டுவந்து சிறு வியாபாரிகளுக்கு விற்பனை செய்து தங்களுடைய கணக்குகளையெல்லாம் உரிய அதிகாரிகளிடம் காட்டவேண்டும். அந்த கணக்குகளையெல்லாம் உரிய அதிகாரிகள் ஒப்புக்கொண்டால்தான் ஒப்புக் கொண்ட பிறகுதான் அவர்கள் மீண்டும் 5 டன் நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் என்ற உத்திரவு அரசாங்கத்தால் போடப்பட்டிருக்கிறது. அதன் விளைவுகள் பயங்கரமான விளைவுகளாக இருக்கும் என்பதை உணவு அமைச்சர் அவர்களிடத்திலும் உணவுத் துறைச் செயலாளர் அவர்களிடத்திலும் பலமுறை சென்று நாங்கள் தெரிவித்தோம். ஆனால் இந்த அரசாங்கம் அப்படிப்பட்ட சிக்கலைத் தீர்க்கவில்லை. ஹோல்சேல் வியாபாரிகள் சொன்னார்கள், நாங்கள் அஞ்சுகிறோம் உணவு நெருக்கடி ஏற்படும் என்று சொன்னார்கள்.......



மாண்புமிகு மாற்றுத் தலைவர் (புலவர் சி. பழனிச்சாமி): இன்னும் பல பேர்கள் பேச

5 நிமிடங்களுக்குள் முடித்துவிடுங்கள், இன்னும் வேண்டியிருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: 11-20-க்குள் முடித்துவிடுகிறேன். அத்தகைய ரெப்ரஸன்டேஷனை அரசாங்கம் பெற்றதா? பெற்றிருந்தால் அதைப்பற்றி ஆலோசனை செய்ததா? ஆலோசனை செய்யவில்லை என்றால் ஏன் ஆலோசனை செய்யவில்லை, ஏன் அதைப் பரிசீலனை செய்யவில்லை, பரிசீலனை செய்ய வேண்டுமென்று அரசு உணர்ந்ததா? அப்படி உணர்ந்திருந்தால் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? எப்படி இத்தகைய வதந்தி நாட்டிலே பரவியது? இதற்கெல்லாம் அரசாங்கத்தினுடைய விளக்கங்களை நான் எதிர்பார்க்கிறேன்.

இன்றைக்கு நாட்டிலே சிலர் ஆர்டிபிஷியல் ஸ்கேர்சிடியை இளப்பி விட்டிருக்கிறார்கள். பெருத்த வியாபாரிகள் எங்கே இருக்கிறார்கள்? ஐந்நூறு ரூபாய் அல்லது ஆயிரம் ரூபாய் முதல் போட்டு தானியத்தை வாங்கி விற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய கடையை சூறையாடுவது என்ற நிலைமை இருந்தால் அவர்கள் தங்களுடைய பொருள்கள் போய்விடுமோ என்றும் தங்களுடைய முதல் போய்விடுமோ என்றும் பயந்துகொண்டு கடைகளை மூடி விடுகிறார்கள். இதன் காரணத்தால் ஹோல்சேல் வியாபாரம் செய்கிறவர்கள் தொடர்ந்து சிறு வியாபாரிகளுக்கு விற்கக்கூடிய நிலைமை இல்லாததால் அவர்களும் நிறுத்திவிடுகிறார்கள். இதன் காரணமாக அரிசி இல்லாமல் செய்வது என்று திட்டம்போட்டு இதன் மூலமாக அரசாங்கம் ஒழிக ஒழிக என்று கோஷமிடுவது என்று நடத்திக் கொண்டிருந்தால் இதுதான் அரசியலா? இதுதான் மக்களுக்குச் செய்கிற நன்மையா? இது என்ன நீதி? இதுதான் அரசியல் என்றால் ஜனநாயகம் எதற்கு? அப்படிப்பட்ட ஜனநாயகம் தேவையில்லை, குட்டிச் சுவராகட்டும்.

இன்றைக்கு நாட்டிலே மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் அன்றாடப் பொருட்கள் தேவையான அளவுக்கு மக்களுக்குக் கிடைக்க வில்லையென்றால் ஆளுங்கட்சியாக இருக்கட்டும், எதிர்க்கட்சியாக இருக்கட்டும், செம்மையான நிர்வாகத்தை ஏற்படுத்தாவிட்டால் மக்கள் பொறுக்க மாட்டார்கள். நிர்வாகத்தை அராஜகத்தை நாட்டிலே ஏற்படுத்துவதன் மூலமாக செம்மைப்படுத்தி விடலாம் என்று நினைத்தால் அப்படிப்பட்ட வண்டி அதிக காலத்திற்கு ஓடாது. சில காலத்திற்குத்தான் ஓடும். மக்கள் எழுச்சி பெற்றுவிட்டால் பிறகு இங்கே ஆளுங்கட்சியும் இருக்காது, எதிர்க் கட்சியும் இருக்காது. சட்ட மன்றமே இருக்காது. எல்லாம் மக்களால் தூக்கியெறியப்பட்டுவிடும் என்பதை நான் உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அராஜகத்தை ஒடுக்கி தொடர்ந்து நாம் நம்மை, நம்முடைய நாட்டைத் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதை வற்புறுத்திச் சொல்கிறேன். ஆகவே இதை எல்லோரும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய ஜனாதிபதி மேதகு கிரி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நாட்டிலே இவ்வளவு பிளாக் மணி, கறுப்புப் பணம் இருக்கிறது. ஊழல் அதிகமாகிவிட்டது, லஞ்சம் அதிகமாகிவிட்டது, ஜனநாயகத்திலே மக்களுக்கு நம்பிக்கையில்லாது போய்விடுமோ என்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடுமோ என்று கூறியிருக்கிறார்கள்......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (புலவர் சி. பழனிச்சாமி) : கிட்டத்தட்ட 20 நிமிடங்களுக்கு மேல் பேசிவிட்டீர்கள், பேசவேண்டியவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது, சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் சொன்னபடியே 11-20-க்குள் முடித்துவிடுகிறேன். தங்களுடைய நிலைமை எனக்குத் தெரியும். தங்களை ரொம்ப சங்கடத்தில் மாட்டிவிடமாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய இந்துப் பத்திரிகையிலே இரண்டு தினங்களுக்கு முன்னாலே எழுதியிருக்கிறது, அக்ரிகல்சரல் செக்டாருக்கு இன்சென்டிவ்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது, என்கரேஜ்மெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆனால் அவையெல்லாம் எங்கே போய்ச் சேர்ந்தது? பண முதலாளிகளிடத்தில், பணக்காரர்களிடத்திலேதான் போய்ச் சேர்ந்திருக்கிறது அவையெல்லாம் விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

பல முறைகளில் இன்றைக்குக் காண்ட்ராக்ட் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் சொல்கிறேன், இந்த காண்ட்ராக்ட் முறைதான் இன்றைக்கு நாட்டையே குட்டிச்சுவராக்கிக் கொண்டிருக்கிறது. இந்த காண்ட்ராக்ட் முறையிலேதான் ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. மத்திய அமைச்சரின் தம்பியார் என்று சொல்லப்படுகிற லட்டு பாபு, ஜிலேபி பாபு என்பவர்கள் காண்ட்ராக்ட் எடுத்து 60 கோடி ரூபாய் அளவுக்கு சாப்பிட்டிருக்கிறார்கள் என்று அங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே மட்டும் நடக்கிறது என்று சும்மா இருக்காமல் இங்கே என்ன நடக்கிறது என்று பார்க்கவேண்டும்.

நம்முடைய பிரதம செயலாளர், சீப் செகரட்டரி ஆப் தி கவர்ன்மெண்ட் பேசினார் என்று சொன்னார்கள். கலெக்டர்கள் மாநாட்டிலே நிர்வாகம் தேங்கியிருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள் என்று சொன்னார்கள். நான் ஒத்துக்கொள்கிறேன். நிர்வாகம் தேங்கியிருக்கிறது. உண்மைதான், காரணம் ஆட்சியிலிருக்கின்றவர்கள் முறையான எதிர்ப்புக்களைச் சந்திக்கவில்லை, மிகப் பயங்கரமான சூழ்நிலையில் உருவாக்கப்படுகின்ற எதிர்ப்புகளைச் சமாளித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனையெல்லாம் அதிகமாக அந்த எதிர்ப்புகளை எப்படிச் சமாளிக்கலாம் என்பதிலேதான் இருக்கிறது. அதுதான் உண்மை, நீங்கள் அதை மறுத்தாலும் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்.

என்னைப் போன்றவர்கள், எதிர்க்கட்சியிலே பொறுப்பையேற்றுக் கொண்டிருக்கிறவர்கள்தான் அரசாங்கம் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துவதற்கான வாய்ப்பையும் வசதியையும் ஏற்படுத்தித் தரவில்லை, அப்படி



பட்ட நிலைமையிலேதான் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது, இதுவும் நாட்டிலே ஏற்பட்டிருக்கிற நிலைமைக்கு ஒரு காரணமாகும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் தங்களிடத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தி பெஸ்ட் அட்மினிஸ்ட்ரேட்டர் இன் தி கன்ட்ரி என்று நம்முடைய முதலமைச்சரைக் சொன்னார்கள். யார் சொன்னார்கள் தெரியுமா? சின்ஹா அவர்கள். தி பெஸ்ட் அட்மினிஸ்ட்ரேட்டர் இன் தி கன்ட்ரி என்று ஜோதிர்மாய் பாசு அவர்கள் பக்கத்திலே இருந்தபோது சொன்னார்கள் என்றால் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அங்கே அப்படிச் சொல்கிறார்கள். ஆனால் நாம்தான் நம்முடைய நாட்டிலே பீதியைக் கிளப்பிக் கொண்டிருக்கிறோம். நாம் தூங்கிக் கொண்டிருக்கிறோம்.

நான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்குச் சொல்லிக் கொள்வேன், முதலமைச்சர் அவர்களுக்கு, அமைச்சரவைக்குச் சொல்லிக் கொள்கிறேன். உங்களுடைய கைகள், உங்களுடைய கால்கள், உங்களுடைய தலைகள், உங்களுடைய ரோமங்கள்தான் உங்களுக்கு விரோதமாக இருக்கின்றன. ஜாக்கிரதையாக இருங்கள், உங்களுடைய கைகள் உங்களுக்கு விரோதமாக இருக்கின்றன. உங்களுடைய கால்கள் உங்களுக்கு விரோதமாக இருக்கின்றன.

இங்கே பேசியபோது சொன்னார்கள், அதிகாரிகள் சில குறிப்புகளைத் தந்தார்கள் என்று சொன்னார்கள். அது உண்மையோ பொய்யோ தெரியவில்லை. அதிகாரிகள் கொடுத்தார்களா அல்லது எதிர்க்கட்சிகள் விரோதத்தினால் சொல்கிறார்களா என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். விழித்துக் கொள்ள வேண்டும். இந்த ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்று பல்வேறு வகைகளிலே பலர் முயற்சிக்கிறார்கள். நீங்கள் எல்லாம் அமைச்சராக இருக்கிறீர்கள் உங்களுக்குத் தெரியாது. நாங்கள் எல்லாம் சாதாரண மக்கள். உலகத்திலே என்ன நடக்கிறது என்று எங்களுக்குத் தெரியும். நீங்கள் உங்களையே நம்பாத காலம் வந்துவிடும்போல் இருக்கிறது, யாரிடம் என்ன பேசுவது என்று தெரியாத நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள்.

அதிகாரிகள் செம்மையாக நடக்கவில்லை. நிர்வாகத்தைச் சீராக நடத்தவில்லையென்றால் நீங்கள் ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், நீங்கள் ஆட்சியில் உட்கார்ந்து கொண்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், நல்ல ஆட்சியாக, நீதியான ஆட்சியாக இது நிகழவேண்டுமென்றால், தங்களுடைய ஆட்சியில் இருக்கின்ற அதிகாரிகள் தாங்கள் போடுகின்ற உத்திரவுகளை நிறைவேற்றுகிறார்களா தங்களுடைய கடமையைச் சரிவரச் செய்கிறார்களா என்று பாருங்கள். உங்களுடைய உத்திரவுக்குக் கீழ்ப்படிய மறுக்கின்ற அதிகாரிகளை, தங்களுடைய கடமையைச் சரிவரச் செய்யாத அதிகாரிகளை—நான் நண்பர் என்ற முறையிலே சொல்லிக் கொள்கிறேன்—தூக்கியெறியுங்கள்.

இந்த உணவு நெருக்கடிக்கு இந்த மாநில அரசுதான் பொறுப்பு என்ற பேச்சு பொருளற்ற பேச்சு. நிதர்சனமில்லாத நாட்டிலே மத்திய அரசு செய்கிற காரியங்கள்தான் காரணம் என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிற உண்மையை மறைக்கிற பேச்சு.

அந்த [illegible] அணுகி, இராமநாதபுரம் சூழ்நிலை களில் [illegible] நடந்த முறையிலே [illegible] பணிகளைச் செய்து வருகிற இந்த ஆட்சி நடைபெற்றுக்கொண்டு பல சிக்கல்கள் வராமல், [illegible] நிலைமை [illegible] வகையில் நீங்கள் [illegible], உழவர்கள், [illegible], தொழிலாளர்கள் [illegible] கூட [illegible], வழமல் [illegible] செம்மை யாக நடந்திருக்கிறது என்று [illegible]. முன்னேற்றக் கழகத்தை அழிக்க [illegible], ஆனால் நீங்கள் [illegible] ஆவீர் கள் என்பதைச் சொல்லி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் (மனியாசிங்கையாவது) [illegible] சொல்கிறேன், எதிர்க்கிறேன் ஆதரிக்கிறேன் [illegible], இந்த நம்பிக்கையில்லாத தீர்மானம் நேரம் [illegible] நேரத்தில், [illegible] நேரத்தில், தங்களுடைய மனச்சாட்சிக்கு [illegible] ஒரு பொரு ளற்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம், இந்தச் சபையின் நேரத்தை வீணாக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம், மக்களின் பணத்தை வீணாக்கும் நம்பிக்கையில்லாத தீர்மானம் என்று சொல்லி இதைக் கண்டித்து எதிர்த்து அமர்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : [illegible], கடைசியிலே முடிக்கும்பொழுது அமைச்சர் நம்பிக்கை கூறி விட்டது, நம்பிக்கை இல்லாத தீர்மானமா, நம்பிக்கைத் தீர்மானமா என்பதில்....

திரு. எம். எ. சந்திர : நம்பிக்கை இல்லாத தீர்மானம் என்று நல்ல தமிழில் சொன்னேனே, அதை அம்மையார் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை போலும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைக் கேட்டுக்கொண்டு இருந்தேன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் என் கொண்டு வந்தது, எதற்காகக் கொண்டு வந்தது, அதுவும் ஆளும் கட்சியில் இருந்தவர் அது ஏன் கொண்டு வந்தது என்று அடுக்கிக்கொண்டே போனார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானமானது எண்ணிக்கை அளவில் பார்த்தால் வெற்றி பெற முடியாது என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எவ்வளவு வலிமை வாய்ந்தது என்பதை சட்ட மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் சற்று மக்கள் மன்றத்திலே சென்று பார்த்தால் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும் என்பதை ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் என்னதான் பண வீக்கத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தாலும், வரி உயர்வைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்தாலும் உணவுப் பிரச்னையில், வயிற்றுப் பிரச்னையில் ஆளுங்கட்சி யினர் செய்த தவறுகளுக்காக ஒரு நம்பிக்கையில்லாத தீர்மானத்தைக் கொண்டுவர முடியவில்லை என்றால், அவ்வாறு கவனத்தை ஈர்க்க முடிய





வில்லை என்றால் எதிர்க் கட்சியாக இருப்பதற்கு அருகதை இருக்கிறதா என்று மக்கள் கேட்கும் கேள்விக்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டியவர் களாக இருப்போம்.

இன்றைக்குள்ள பிரச்னையானது, பொருளாதார நெருக்கடியைப் பற்றியோ, பணம் வீங்கியிருக்கிறது என்பதைப் பற்றியோ சொல்லித் தப்பிக்கக்கூடிய பிரச்னை அல்ல. ஏழைகளின் வயிற்றில் அடிக்கும் பிரச்னை, அவர்கள் அதற்குக் கடை சென்று காத்திருக்கின்ற பிரச்னை. பெண்கள் வீட்டு வேலையையும் விட்டுவிட்டு ஒரு கையிலே குழந்தை, ஒரு கையிலே பை என்று எடுத்துக்கொண்டு அரிசி கிடைக்குமா அரிசி கிடைக்குமா என்று ஏங்குகின்ற நிலைமை வந்திருக்கிறது. நீங்கள் இப்படிச் செய்யலாமா? நீங்கள் ஆட்சிக்கு வந்ததே அரிசிப் பிரச்னையை வைத்துத்தான். அப்படி அரிசிப் பிரச்னையை வைத்து ஆட்சிக்கு வந்த நீங்களே அரிசியில் கவனம் இல்லாமல் இருந்தால் எப்படி மக்கள் உங்களை மன்னிப்பார்கள்? ஆட்சிக்கு வரும்பொழுது என்ன சொன் னீர்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு ரூபாய்க்கு 3 படி அரிசி போடுவோம் என்று சொன்னீர்கள். ஆனால் இப்பொழுது 3 படி கூட கிடைக்காமல் அரிசியின் விலை ஏறியிருக்கிறது. இதை அரசாங்கம் மறுக்க முடியாது.

இவ்வளவு அவல நிலையிலே இருந்தும் அமைச்சர் என்ன சொல்கிறார் என்றால், உணவு அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார், அறுவடை என்றும், 5½ ரூபாய்க்குத்தான் விற்கும், ஆகும் விலையில் விலை குறையாது, 5½ ரூபாய்க்குத்தான் என்று சொல்கிறார்கள். மற் [illegible] வாங்கிச் சாப்பிட வேண்டும் என்று சொல்கிறார்கள். இன்றைக்கு [illegible] அமைச்சர் அவர்களுக்கு 2½ ரூபாய்க்கு விற்றதை இன்றைக்கு [illegible] விற்க வேண்டும், ஆனால் 5½ ரூபாய்க்குக் 13½ ரூபாய் என்ற கணக்கில் விற்க வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்னால் [illegible] என்று சொல்கிறார். நிதானமாகச் சொன்னார் 3 படி [illegible] அமைச்சர் சொன்னார், இன்றைக்கு 5½ ரூபாய்க்கு அரிசி போடுவோம், என்று சொன்னார். அவல நிலையில் மக்கள் அமைதியை வாங்குகிறார்கள் என்ற நிலையில், பொறுத்திருங்கள் 3 படி இருந்து இருக்கும்பொழுது நிதானத்தோடு, குதிரை கீழே தள்ளியதும் அல்லாமல் போடுவோம் என்று சொன்னால், குழியும் பறித்ததாம் என்ற நிலையை இன்றைக்கு ஏற்படுத்தியிருக் கிறீர்கள்.

பற்றுத்துறை உள்ள பொருள்களைப் பற்றி வேண்டுமானால் விலை ஏறலாம் என்று சொல்ல முடியாது என்றால் பண வீக்கத்தினால் விலை ஏறலாம் என்று சொல்ல லாம். ஆனால் அரிசி அப்படியா? உங்கள் கணக்குப்படியே பார்த்தாலும் 57 இலட்சம் டன் உற்பத்தியாகி இருக்கிறது, இது உபரி மாகாணம், வேண்டுமானால் கேட்டால் கொடுக்கிறோம், வங்காள கெஞ்சினால் தருகிறோம், என்று சொன்னீர்களே, விவசாயத் துறையைச் சொன்னால் அனுப்புகிறோம், உற்பத்தியைப் பெருக்கி திறனாகப் பதக்கம் வேறு வாங்கியிருக்கிறோம் என்று இதே சட்டசபையில் ஒருசில மாதங்களுக்கு முன்னால் சொன்னீர்களே, அவ்வாறு உபரியாக இருக்கும் பொருள் எங்

$5\frac{1}{2}$ ரூபாய்க்கு ஏறிற்று? உபரியாக இருக்கும் பொருள் விலை ஏறுகிறது என்றால் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? உங்கள் கணக்குப்படியே $4\frac{1}{2}$ கோடி மக்களும் மூக்கைப் பிடிக்கச் சாப்பிட்டாலும் கூட 45 இலட்சம் டன்களுக்கு மேல் தேவையில்லை, மீதியுள்ள 12 இலட்சம் டன் உபரியாக இருந்தால் ஏன் இந்த அவல நிலை வருகிறது?

பக்கத்திலே இருக்கின்ற ஆந்திராவும் ஒரு உபரி மாநிலம்தான். அங்கே அரிசி என்ன விலை? $3\frac{1}{2}$ ரூபாய்க்கு ஒரு பட்டணம் படி அரிசி வாங்க முடிகிறது, $3\frac{1}{4}$ ரூபாய்க்கு பட்டணம் படி நல்ல அரிசி உங்களுக்குக் கிடைக்கிறது, சித்தூரிலே கிடைக்கிறது. அதுவும் உபரி மாநிலம். அதே போல் தமிழகமும் உபரி மாநிலம்தான். அவ்வாறு இருக்கும்பொழுது ஏன் இந்தப் பற்றாக்குறை வந்தது என்பதை அரசு சிந்திக்க வேண்டும். அதற்குக் காரணம் என்ன?

வேறு எந்தக் காரணமும் அல்ல, வர்த்தக சூதாடிகள் விரித்த வலையிலே இந்த அரசு தெரிந்தோ தெரியாமலோ விழுந்ததால்தான் இத்தகைய நெருக்கடிகளை ஏற்படுத்திவிட்டார்கள் என்பதைத்தான் மக்கள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறார்கள் என்பதை இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

36 மணி நேரத்திற்குள் 3 புது உத்தரவா? இதற்கு முன்னால் பேசிய அங்கத்தினர் மிகவும் சாமர்த்தியமாகப் பேசினார்கள். உணவுக் கொள்கை நிமிஷத்திற்கு நிமிஷம் மாறும், நிமிஷத்திற்கு நிமிஷம் உத்தரவு போடுவோம் என்று சொன்னார்கள். இப்படி நிமிஷத்திற்கு நிமிஷம் 3 உத்தரவு போட்டால் துக்ளக் மாதிரி....

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): நான் பேசும் நேரத்திலே நிமிஷத்திற்கு நிமிஷம் என்று சொல்லவில்லை. ஃப்ளெக்ஸி பிலாக என்று சொன்னேன். அம்மையார் அவர்களுக்கு நிமிஷத்தி லேயே நினைவு இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: Floxibility may be for hours.

அப்படித்தான் இருக்கும். நிமிஷம் அல்ல, மணிக்கொருமுறை போட்டால்

திரு வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): இந்திரா காந்தி அம்மையார் போட்டார்களே, கோதுமை பூராவையும் எடுத்துக்கொள் வோம் என்று சொல்லிவிட்டு பிறகு மாற்றினார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பப்ளிக் ஒபினியனை அனுசரித்து மாற்றுவது. Flexibility என்று ஒப்புக்கொள்ளலாம். ஆனால் நீங்கள் 36 மணி நேரத்தில் 3 உத்தரவுகளைப் போட்டீர்களே, காலையிலே போகக்கூடாது, மாலையிலே போகலாம், மறுநாள் போகக் கூடாது என்று போட்டீர்கள். நெற்களஞ்சியம் என்று பெருமைப் பட்டுக்கொண்டிருந்த தஞ்சை மாவட்டத்தில், நெஞ்சை அள்ளும் தஞ்சை





மாவட்டத்திலே மக்கள் அரிசிக்காகப் பஞ்சாய்ப் பறக்கின்ற அவல நிலையை ஏற்படுத்தி விட்டீர்கள், உங்கள் கொள்கைக் கோளாறினால் என்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கேட்டால் என்ன தவறு?

அன்றைக்கு தஞ்சாவூரிலே 4,000 ரூபாய் என்று ஒரு லாரிக்குக் கொடுத்து எடுத்துச் சென்றார்கள். அங்கே உள்ள அரிசி வெளி மாநிலங்களுக்கும் பறந்திருக்கிறது. அப்பொழுது நீங்கள் சற்றுப் புத்திசாலித்தனமாக யோசனை செய்திருக்க வேண்டாமா? உணவு அமைச்சர் நேட்டையிலே என்ன சொல்கிறார்—சென்னையிலே அரிசி இல்லை, ஆகவே தஞ்சாவூரிலேயிருந்து கொண்டு வரலாம் என்பதற்காகப் போட்டோம் என்கிறார்கள். சென்னைக்கு அந்த அரிசி வந்ததா? சென்னைக்கு வந்திருந்தால் படியரிசி 5 ரூபாய், $5\frac{1}{2}$ ரூபாய் என்று விற்காதே?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, சென்னைக்கு மட்டும் என்று நான் எப்பொழுது சொன்னேன்? சென்னைக்கு என்று தனியாகச் சொல்லவில்லை. மற்ற மற்ற மாவட்டங் களுக்குப் போக வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்தோம் என்றுதான் சொன்னேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: எந்த மாவட்டத்திற்கும் அந்த அரிசி வரவில்லை. அப்படி வந்திருந்தால் அரிசியின் விலை குறைந் திருக்கும். அந்த அரிசி எங்கே போய்விட்டது? மாகாணத்தை விட்டேப் பறந்து போய்விட்டது. சற்றுப் புத்திசாலித்தனமாக இருந் திருந்தால் அத்தனையையும் நீங்களே கொள்முதல் செய்திருக்க வேண்டாமா எதற்காக வியாபாரிகளுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்தீர்கள்? இப் பொழுது வர்த்தக சூதாடிகள் பஞ்சத்தை ஏற்படுத்தி விட்டார்கள். இதைத் தவிர்ப்பதற்கு நீங்கள் விழிப்போடு இருந்திருக்க வேண்டாமா?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: நாங்கள் விழிப் போடுதான் இருந்தோம். கொள்ளை வியாபாரிகளை குஜராத்திலிருந்தும், மகாராஷ்டிராவிலிருந்தும் மத்திய சர்க்கார் அனுப்பிவிட்டது, சிறுதானியக் கட்டுப்பாட்டை எடுத்ததால்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சிறுதானியக் கட்டுப்பாட்டை எடுத்து விட்டார்கள் என்ற வாதம் சரியல்ல. கேழ்வரகு, சோளம் ஆகியவை வெளியே போனதால் அரிசி சாப்பிட ஆரம்பித்து விட்டார் களா? இன்றைக்குக் கேழ்வரகு 2 ரூபாய் 80 காசுக்குக் கிடைக்கிறது. ஆனால் உங்கள் கருணை மிகுந்த ஆட்சியிலே அரிசி படி $5\frac{1}{2}$ ரூபாய்க்கு விற்கிறது. கேழ்வரகு விலை ஏறியிருந்தாலும் அது அரிசி வாங்கும் விலையைவிடக் குறைவுதான். பிரஞ்சு ரெவல்யூஷனின்போது ரொட்டி இல்லை ரொட்டி இல்லை என்று கேட்ட மக்களைப் பார்த்து மன்னன் சொன்னானாம், ரொட்டி இல்லை என்றால் கேக் சாப்பிடு என்று, அதைப் போல இருக்கிறது உணவு அமைச்சரின் வாதம்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அது எங்கே இருக்கிறது, தமிழ்நாட்டிலேயா? வேறு குஜராத்திலேயா? பீஹாரிலேயா? பிரதமர் ஆளுகின்ற இந்தியாவிலேயா?

(முற் பகல் 11.30)

திருமதி த. ந. அனந்தநாயகி: இங்கே ஒரு படி கேழ்வரகு ரூ. 2·80 காசு. வாங்கித் தரட்டுமா?

மாண்புமிகு மன்னை. திரு. ப. நாராயணசாமி: இப்போது அம்மையார் அவர்கள் சொன்ன சம்பவம் எப்போது நடந்தது? அது பிரதம அமைச்சர் அவர்கள் ஆளுகின்ற இந்தியாவில் நடைபெறுகிறதா?

திருமதி த. ந. அனந்தநாயகி: ஃப்ரெஞ்ச் ரெவல்யூஷன் என்றால் அர்த்தம் புரியவில்லை. ஃப்ரெஞ்ச் புரட்சியில் வருகிறது. ரொட்டி, ரொட்டி என்று மக்கள் அலறிய நேரத்தில் கேக் சாப்பிடு என்று சொன்னான்... ...

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி: அந்தக் கேக் சாப்பிடுகின்ற நிலை இப்போது இந்தியாவிலேதான் வந்திருக்கிறது, பிரதமர் ஆளுகின்ற மாநிலங்களிலேதான் வந்திருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: உங்கள் ஆட்சியிலே உங்கள் காலத்திலே நடக்கிறது என்பதை ஆணித்தரமாகச் சொல்லுகிறேன். ஒரு படி கேழ்வரகு ரூ. 2·80 காசு. ஒரு படி அரிசி விலை 5½ ரூபாய். எப்படி கேழ்வரகு, கம்பு, சோளம் சாப்பிடுகிறவன் அரிசி சாப்பிடமுடியும்? ஆகவே, அரிசி விலையேற்றத்திற்கு வர்த்தகச் சூதாடிகள்தான் காரணம்..

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி: கேழ்வரகு சாப்பிடுகிறவர்கள் அரிசி சாப்பிட மாட்டார்களா? அரிசி சாப்பிடுகிறவர்கள் கேழ்வரகு சாப்பிட மாட்டார்களா?

திருமதி த. ந. அனந்தநாயகி: அரிசி சாப்பிடுகிறவர்களுக்கு சர்க்கரை வியாதி இருந்தால் கேழ்வரகு சாப்பிடுவார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே. (ஒலிபெருக்கி வேலை செய்யவில்லை) இந்நேரம் எதிர்க்கட்சியில் இருந்தால் ஒரே கோஷம் போட்டிருப்பார்கள். (சிரிப்பு)

வர்த்தக சூதாடிகள்தான் இதற்குக் காரணம் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ஒத்துக் கொள்கிறேன். பதுக்கல் பேர்வழிகளும் இதற்குக் காரணம் என்பதை அம்மையார் அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். யார் யார் பதுக்கல்காரர்கள் பிடிபட்டார்கள் என்ற செய்தி அவர்கள் கவனத்தில் இருக்குமென்று கருதுகிறேன்.



திருமதி த. ந. அனந்தநாயகி: பதுக்கல்காரர்கள், கள்ள மார்க்கட்காரர்கள், வர்த்தக சூதாடிகள்தான் இதற்குக் காரணம். முதலமைச்சர் அவர்கள் மறைமுகமாக எதைச் சொல்லுகிறார்கள் என்பது புரிகிறது. எங்கள் கட்சியிலுள்ள அர்த்தநாரீசுவர கவுண்டரைப் பிடித்ததைப் பற்றிச் சொல்லுகிறார்கள். அவரைப் பிடித்ததற்காக பெருத்த மகிழ்ச்சி. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் விட்டு விடவேண்டுமென்று சொல்லவில்லை. இவரைப் பிடித்தது போல் உங்கள் கட்சியில் பதுங்கிக் கொண்டிருக்கும் பதுக்கல்காரர்களையும் பிடியுங்கள். இந்த ஒருவர் பதுக்கிய ஆயிரம் மூட்டையால் இப்போது பஞ்சம் ஏற்பட்டு விடவில்லை. எவ்வளவோ பதுக்கல்காரர்கள் உங்கள் பின்னால் பதுங்கிக் கிடக்கிறார்கள். அவர்கள் என்னென்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று புரிந்து கொள்ளுங்கள்.

12 லட்சம் டன் உபரி வெளியே போயிருக்கிறது. அரிசிப் பிரச்சினையிலே இப்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்குக் காரணம் உங்களுடைய தவறான விநியோக முறையும், கண்டிப்பு இல்லாத நிர்வாகமுந்தான். தமிழகத்தை இந்த அவல நிலைக்குக் கொண்டு வந்து விட்டீர்கள். உங்களுடைய நிர்வாகம் சரியாக இருந்திருக்குமானால் இந்த நிலைமை வந்திருக்காது. பாண்டிச்சேரியில் அரிசி விலை ஏறுகிறது என்று தெரிந்தவுடன் பாண்டிச்சேரி கவர்னர் நடவடிக்கை எடுத்து 1 ரூ. 26 காசுக்கு ஒரு கிலோ அரிசி போடவில்லையா? மத்திய அரசு கட்சியைச் சேர்ந்த நந்தினி சத்பதி ஒரிஸ்ஸாவில் ரூ. 1·25 காசுக்கு ஒரு கிலோ அரிசி போடவில்லையா? ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுகிறேன் என்று சொல்லிவிட்டு, ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி ஒரு சில ஆண்டுகள் போட்டு ஏமாற்றிவிட்டு, வங்கதேச நெருக்கடி வந்தவுடன் உங்கள் நெருக்கடியைத் தீர்த்துக்கொண்டு, நான்கு கோடி அதனால் நஷ்டம் என்று சொல்லி அதையும் நிறுத்தி விட்டு இன்றைக்கு ஒரு படி அரிசி 5½ ரூபாய்க்குப் போடுகிறீர்கள்.

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி: பாண்டிச்சேரியிலும் வெளி மார்க்கட் விலை என்ன என்று பார்க்கவேண்டும். நாங்களும் தமிழகத்தில் கோவை, சென்னை போன்ற பகுதிகளில் ஒரு கிலோ ரூ. 1·40 காசுக்குப் போடுகிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நீங்கள் யாருக்குப் போடுகிறீர்கள்? குறைந்த வருமானமுள்ள மிகக் குறைந்த எண்ணிக்கை உள்ளவர்களுக்குத்தான் போடுகிறீர்கள். பாண்டிச்சேரியில் ரூ. 1·26 காசுக்கு அரசாங்கக் கடைகளின் மூலம் எல்லோருக்கும் கிடைக்கிறது.

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி: நாங்களும் வருமானம் குறைந்தவர்களுக்கு மிக அதிகமான பேர்களுக்குத்தான் போட்டுக் கொண்டு வருகிறோம். பாண்டிச்சேரியில் எல்லோருக்குமா போடுகிறார்கள்?

திருமதி த. ந. அனந்தநாயகி : [illegible] சட்டத்தை [illegible] ஒரு [illegible] ரூ. 1·26 காசுக்குப் போட உத்தர விட்டிருக்கிறார்.

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : [illegible] போதுமா ? [illegible] மக்களுக்கும் அந்த [illegible] படுகிறதா ? இங்கு அரிசி [illegible] பகுதியில் 300 ரூபாய் மாத வருமானம் உள்ளவர்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ. 1·40 காசுக்குப் போடப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த அளவு நிலைமையைப் போக்க ஃபேர் பிரைஸ் ஷாப்ஸ் மூலமாக அரிசி கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த நியாய விலைக் கடைகளில் ஒரு கிலோ அரிசி ரூ. 3·40 காசு ஆகிறது. [illegible] படியரிசி 6 ரூபாய்க்கு வருகிறது. [illegible] இவ்வளவு விலை நியாய விலைக் கடையில் என்று தெரியவில்லை ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : அதே நிலைமைதான் பாண்டிச்சேரியிலும் இருக்கிறது. இந்தியா பூராவிலும் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : [illegible] படியரிசி 13 ரூபாய்க்கு விற்கிறதை நீங்கள் பார்த்துக் கொண்டுதான் இருப்பீர்கள். ஏன் இப்படி விலை உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்று [illegible] நீங்கள் திருத்திக் கொள்ளக்கூடிய அளவுக்கு உங்களுக்கு அக்கறை [illegible]. இனிமேல் குறைந்த விலைக்குப் போட அரிசி இருக்கிறது என்று அரிசி [illegible] உங்களுக்கு மனம் இல்லை. படியரிசி 13 ரூபாய்க்குத்தான் [illegible] என்று சொல்லு கிறீர்கள்.

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : இப்படித் திசை திருப்புவது சரியல்ல. அப்படித்தான் [illegible] என்று நாங்கள் சொல்லவில்லை. மந்திரி சர்க்காரில் இருப்பவர்கள் வேண்டுமானால் அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கலாம். [illegible] முயற்சித்து விலை யைக் குறைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். [illegible] முதலமைச்சர் அவர் களும் சொல்லியிருக்கிறார். மற்ற அமைச்சர்களும் சொல்லியிருக்கிறார்கள். 13 ரூபாய்க்குப் படியரிசி போடுகிறார்கள் என்று [illegible] வேண்டும், பத்திரிகையில் வருவதையெல்லாம் [illegible] போக வேண்டாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பத்திரிகை பற்றி நாங்கள் கவலைப்பட வில்லை. உங்களுக்குத்தான் பத்திரிகைகள் அதிகம். எங்களுக்கு ஒன்றும் பத்திரிகைகள் இல்லை. பொதுமக்கள் நிலைமையை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டுமென்று எதிர்க்கட்சியிலிருந்து பேசினால் நீங்கள் இப்படிப் பதில் கூறினால் மக்கள் மத்தியிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ள முடியாது. சட்ட மன்றத்தில் நீங்கள் தப்பித்துக் கொள்ளலாம். கை தூக்க ஆள் இருக்கிறது. மக்கள் மத்தியில் நீங்கள் தப்பித்துக் கொள்ள முடியாது. உங்களுடைய விநியோக முறையில் மிகப் பெரிய தவறுகள்



இருக்கின்றன. பக்கத்திலுள்ள கேரளாவில் 1972-ல் 11,000 நியாயவிலைக் கடைகள் திறந்திருக்கிறார்கள். கர்நாடகத்தில் 13,000 நியாய விலைக் கடைகள். உபரி மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தில் 10,157 நியாயவிலைக் கடைகள். ஆனால் உங்களுடைய ஆட்சியில் 1971–72-ல் 2,500 கடைகள் தான்.

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : தமிழ் நாட்டில் 9,000-க்கு மேற்பட்ட ஃபேர் பிரைஸ் ஷாப்புகள் திறக்கப்பட்டு அத்தியாவசிய மாகத் தேவைப்படுகிற அரிசியும் மற்ற பொருள்களும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. என்று போன பட்ஜெட் அறிக்கையிலேயே சொல்லப் பட்டிருக்கிறது. கூட்டுறவு மூலமாகவும், தனியார் மூலமாகவும் கொடுக்கப் படுகிறது. தனியாரிடம் இருப்பதைக்கூட கூட்டுறவில் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தவறாகக் கணக்குக் கொடுக்க வேண்டாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நீங்கள் சொல்லுவது 1974-ம் ஆண்டுக் கணக்கு. நான் 1972-ல் பிரைஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் கொடுத்த புள்ளி விவரத்தைக் கொடுக்கிறேன். 1974-ல் இது இதுவென்று அதிகமாக ஏற்படுத்தியிருக்கலாம்.

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : இப்போது நீங்கள் கொடுக்கவேண்டியது 1974-ம் ஆண்டுக்குக் கணக்கா அல்லது 1972-ம் ஆண்டுக் கணக்கா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : 1972-ம் ஆண்டில் உங்கள் போக்கு எப்படி இருந்தது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1972-ல் பக்கத்திலுள்ள கேரளத்திலும், உபரி மாநிலமான ஆந்திரத்திலும் ஏராள மான அளவு நியாய விலைக் கடைகளை வைத்திருந்தார்கள். இங்கே நீங்கள் வைத்திருந்தது 2,000 நியாய விலைக் கடைகள்தான். 750 ரூபாய் மாத வருமானம் உள்ளவர்களுக்கு குடும்பக் கார்டு கொடுத்து அரிசி, சர்க்கரை போன்ற பொருள்களை நியாய விலையில் கொடுக்க வேண்டும்.

இன்றைக்கு இங்கே உள்ள கூட்டுறவுக் கடைகளில் உள்ள நிலைமை என்ன ? நான் கூட கூட்டுறவுக் கடையில்தான் வாங்குகின்றேன். 1-ம் தேதி அங்கு சர்க்கரை கிடையாது. எண்ணெய் கிடையாது, பருப்பு கிடையாது. 10-ம் தேதி வரை இன்று போய் நாளை வா என்ற பதிலைத்

தான் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். விநியோக முறையை எங்கே சீர்படுத்தியிருக்கிறீர்கள்? உங்களுடைய விநியோக முறை எவ்வளவு தாறுமாறாக இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. உங்களால் அந்த விநியோக முறையில் உள்ள கோளாறை சீர்படுத்த முடியவில்லை என்று நாங்கள் ஆதாரத்தோடும் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம்; ஆணித்தரமாக எடுத்துச் சொல்லி வருகிறோம்,

பதிமூன்று நவீன அரிசி ஆலைகளை ஆரம்பித்தீர்கள். அவை அப்படியே நின்று கொண்டிருக்கின்றன. கொள்முதல் ஒழுங்கான முறையில் நடக்கவில்லை. கொள்முதல் செய்கிற பல வியாபாரிகள் என்னென்ன தவறுகளைச் செய்திருக்கிறார்கள்? சட்டசபையில் பல தடவை சொல்லியிருக்கிறோம். உங்களால் நியமிக்கப்பட்ட கொள்முதல் வியாபாரிகள் என்ன செய்கிறார்கள்? அவர்கள் ஒழுங்கானவர்களாக இல்லை. கட்சி விருப்பு—வெறுப்பு, வேண்டியவர்கள்—வேண்டாதவர்கள் என்று பார்த்ததன் காரணமாக இந்த நிலைமை. அரசாங்கமே கொள் முதல் செய்வதில்கூட எவ்வளவு இருக்கிறது என்று தெரியவில்லை. தஞ்சையிலுள்ள அரிசி ஒரே நாளில் எங்கெங்கோ வெளியே பறந்திருக்கின்றன. உணவு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது எவ்வளவு இருப்பு இருக்கிறது, எங்கெங்கு வைத்திருக்கிறார்கள்; எந்தெந்தக் கிடங்குகளில் எவ்வளவு இருக்கின்றன என்பதைப் பார்ப்பதற்கு சர்வ கட்சிப் பிரதிநிதிகளுக்கும் வசதி செய்து கொடுத்தால் உண்மையிலேயே அங்கே அரிசி இருக்கிறதா அல்லது பறந்து விட்டதா என்று பார்க்கமுடியும்.

அன்று முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் இந்த உணவுப்பிரச்சினை யின் காரணமாகத்தான், இதே நெருக்கடியின் காரணமாகத்தான் எங்கள் கட்சி வெளியே வரவேண்டிய நிலை ஏற்பட்டது. அதை பார்த்திருந்தும் நீங்கள் அக்கறை இல்லாமல் இருக்கிறீர்கள். எப்படி உங்கள்மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்க முடியும்? ஜூலை முதல் செப்டம்பர் வரை லீன் மாதங்கள்—கட்டாயமாக பற்றாக்குறையை வியாபாரிகள் ஏற்படுத்திவிடுவார் கள். இந்த மாதங்களில் இந்த பிரச்சினையை சமாளிக்க 10 லட்சம் டன் அரிசியாவது கையிருப்பு இருக்கவேண்டும். ஸ்டேட் டிரேடிங் மூலம் 1 லட்சத்தி 20 ஆயிரம் டன்தான். மத்திய அரசாங்கத்திற்குக் கொடுத்தது, கேரளத்திற்குக் கொடுத்தது, வங்கத்திற்குக் கொடுத்தது ஒரு லட்சம் டன். எட்டு லட்சம் டன் மார்க்கட்டபிள் சர்ப்ளஸ் வாங்கி வைத்திருக்க வேண்டாமா?

உங்களுக்கு அதில் அக்கறை இல்லை. நவீன ரைஸ் மில்களை எதற்காக ஏற்படுத்த வேண்டும்? நெருக்கடி ஏற்படும்போது சமாளிக்க வேண்டும் என்பதற்காகத்தான். தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை கும்பகோணம், மன்னார்குடி போன்ற இடங்களில் உள்ள அந்த மில்கள் எல்லாம் மூடிவைக்கப்பட்டன. 1970–71-ஆம் ஆண்டு கணக்குக் குழுவி



என்ன சொல்கிறார்கள்? நெல் கிடைக்கவில்லையாம், ஆகவே அறவை இல்லையாம், மூடிவிட்டார்களாம். தஞ்சை மாவட்டத்திலேயே நெல் கிடைக்கவில்லை என்றால் வேறு எந்த மாவட்டத்தில் கிடைக்கப் போகிறது? இராமநாதபுரம் மாவட்டத்திலா? எதற்காக அந்த நவீன ரைஸ்மில்களை ஆரம்பித்தோம் நெல் கிடைத்து அதை ஒழுங்காகப் பயன் படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் அவை ஆரம்பிக்கப்பட்டன.

13 நவீன ரைஸ்மில்கள் ஆரம்பிக்கப்பட்டன. பல லட்சம் ரூபாய் ஒதுக்கி அவற்றை நிறுவினோம். கூட்டுறவுத் துறையில் வைத்து நாசமாக்கி இப்போது யாரிடத்தில் தூக்கிக் கொடுப்பது? "un wanted baby must be handed over to some body" என்று யோசித்து கடைசியில் சிவில் சப்ளைஸ் கார்ப்பிரேஷனிடம் கொடுத்திருக்கிறீர்கள். அது என்ன ஒழுங்காகவா இருக்கிறது? ஐந்து லட்சம் ரூபாய் நஷ்டத்தில் ஓடுகிறது. மார்டன் ரைஸ் மில்ஸ் நஷ்டத்தில் ஓடுகின்றன. ஆனால் சாதாரண மில் காரர்கள் எப்படிச் செய்கிறார்கள் என்று பாருங்கள் அதிகாரிகள் அந்த மில்களுக்கு நெல் கொடுப்பதில்லை. கொள்முதல் செய்கிற நெல்லை தனி நபர்களுக்குக் கொடுக்கிறார்கள். ஆகவே நீங்கள் விழிப்போடு இருந்திருந்தால் அதிகாரிகளிடம் பொறுப்பை ஒப்படைத்து என் தவறு செய்தீர்கள், என் நிர்வாகம் சரியாக இல்லை என்று தவறுகளை உடனடியாகக் கண்டிக்கும் திறமை உங்களுக்கு இருக்குமானால் இத்தகைய நிலைக்கு இந்த அரிசிப் பிரச்சினை வந்திருக்காது.

<u>மாண்புமிகு திரு மன்னை, ப. நாராயணசாமி</u>: மில்களைப் பற்றிச் சொல்லும்போது புரிந்து கொண்டு சொல்லவேண்டும். இந்த மில்கள், நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்ஸிலில் இருந்து இப்படிச் செய்ய வேண்டுமென்று திட்டம் போட்டு கூட்டுறவுத் துறையில் 13 மில்களைக் கொடுத்தார்கள். நாம் சாப்பிடுவது புழுங்கல் அரிசி. தனியார் மில்களில் பச்சரிசி அரைக்கிறார்கள். புழுங்கல் அரிசி என்று வரும்போது நஷ்டம் ஏற்படுகிறதே தவிர வரவு செலவில் நிச்சயமாக நஷ்டம் இல்லை. ஆரம்ப காலத்தில் சில இயந்திரங்கள் பொருத்தப்படாமல் அது ஆரம்பிப்பதற்கு இரண்டு இடங்களில் தாமதம் ஏற்பட்டது.

<u>திருமதி தா. நா. அனந்தநாயகி</u>: பச்சரிசியை புழுங்கல் அரிசியாக மாற்றுவதில்—கன்வர்ட் செய்வதில—என்ன கஷ்டம் இருக்கிறது.

<u>மாண்புமிகு திரு மன்னை. ப. நா.ராயணசாமி</u>: மாற்றி மாற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நமக்குத் தேவை புழுங்கல் அரிசி. சாதாரண மில்களில் இரண்டு, இரண்டரை ரூபாய்க்கு அரைக்கிறார்கள் என்றால் இங்கு அது ரூ 6.50 ஆகிறது. கிட்டத்தட்ட நான்கு ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது எனவே மக்களுக்குத் தேவை என்ற முறையில் அதை ஏற்றுக்கொண்டு செயல்படுத்தி வருகிறோம்.

திருமதி க. ந. அனந்தநாயகி: இந்த நஷ்டம் ஏன் என்றுதான் நான் கேட்கிறேன். அதை எப்படி மாற்றி அமைப்பது, எப்படி நஷ்டத்தைத் தவிர்ப்பது என்பதற்கு ஏதாவது ஆராய்ச்சி நடந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: நஷ்டத்திற்குக் காரணம் சாதாரண மில்களில் [illegible] கொண்டுபோய் அரைக்கிறார்கள். இந்த மாடர்ன் [illegible] அரைக்க வேண்டுமென்றால், அதற்கு ஆயில் எஞ்சின் வேண்டியிருக்கிறது. வெளிநாட்டிலிருந்து பர்னஸ் ஆயில் வாங்கவேண்டும். அந்த சாதாரண மில்களில் சாதாரண ஆள்கள் இருக்கிறார்கள், இந்த [illegible] இருக்கிறார்கள். ஆகவே நஷ்டமாகும் [illegible]. புழுங்கல் அரிசி, பச்சரிசி என்று [illegible] மக்களுக்குத் தேவையானது ஆகவே, மக்களுக்கு எது தேவை என்று பார்த்துச் செய்யவேண்டியிருக்கிறது, செய்கிறோம். மக்களின் நன்மையைக் கருதிச் செய்கிறோம். சாதாரண மில்களில் அரைத்தால் 66 சதவிகிதம் அவுட்டேர்ன் வருகிறது, ஆனால் இங்கு 68 சதவிகிதம் வருகிறது. அதோடுகூட அரிசியோகூட கூடுதல் வருகிறது இங்கு. எனவே, அதை வைத்துத்தான் திட்டத்தைத் தயாரித்திருக்கிறோம். நிர்வாகக் கோளாறு ஒன்றும் இல்லை. இந்த நஷ்டம் இயற்கையாக ஏற்படுகிற நஷ்டம்தான்.

திருமதி க. ந. அனந்தநாயகி: நஷ்டம் ஏற்பட்டுத்தான் தீரும் என்று ஒரு அமைச்சர் பதில் சொல்கிறார் என்றால் அதற்கு நாங்கள் பதில் சொல்லவே முடியாது. நஷ்டமாகும், நஷ்டமாகிக்கொண்டுதான் இருக்க முடியும் என்றால் அதை மாற்ற முடியவே முடியாதா? முடியாது என்றால் அதற்குக் காரணம் என்னவென்று ஒரு கமிட்டி போட்டு தீவிரமாக ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியம். நஷ்டம்தான் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் என்று சொல்வது ஒரு நியாயமான வாதமா? எனக்குப் புரியவில்லை. ஒரு சர்வகட்சிக் குழு போட்டு நிலைமை என்ன என்று ஆராய்ந்து பாருங்கள். நாங்களாவது தெரிந்துகொள்ளலாம். மாடர்ன் ரைஸ் மில்லை லாபத்தில் நடத்த முடியுமா என்று கண்டு பிடித்துக்கொள்ள அது சரியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முடித்துக்கொள்ளுங்கள் 25 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திருமதி க. ந. அனந்தநாயகி: விவசாயிகளுக்கு ஏன் அதிகமாகப் பணம் கொடுக்கக்கூடாது என்று கருணையோடு தெரிவித்துக்கொண்டிருந்தார்கள். விவசாயிகளுக்கு [illegible] கொடுப்பதில் எனக்குக் கூட மகிழ்ச்சிதான். ஆனால் இது விவசாயிகளுக்குப் போகவில்லை பாவம். அப்பாவி ரூ. 40க்கு விற்று இடைத் தரகர்கள் அல்லவா ரூ. 70 என்று அடித்துக்கொண்டு போகிறார்கள். இடையில் [illegible] வர்த்தக குருகாடிகள் அல்லவா லாபத்தை அடைகிறார்கள். 480 கோடி வரை செலவில் பத்து கோடி ரூபாய் விவசாயிகளுக்கு சப்சிடைஸ் செய்தால்கூட சட்டசபை அதை ஏற்றுக்கொள்ளும். ஆனால் அந்த லாபம் விவசாயிகளை சென்றடைவதில்லை. அந்த லாபத்தை பொது மக்களும் அடையவில்லை. இடையில் உள்ள தரகர்கள் . . .





திரு எம். ஏ. லத்தீப்: இடையில் இருக்கிற இடைத் தரகர்கள்தான் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிற உற்பத்திப் பெருக்கத்தின் பலனை அனுபவித்து வருகிறார்கள். இதற்குக் காரணம் மத்திய அரசினுடைய திட்டங்கள்தான் என்று இரண்டு தினங்களுக்கு முன்புகூட பத்திரிகையில் ஒரு ஆர்டிகிள் வந்திருக்கிறது. அதை அம்மையார் அவர்கள் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

திருமதி க. ந. அனந்தநாயகி: மத்திய அரசு மத்திய அரசு? என்றால் பார்லிமெண்டில் போய் பேசுங்கள் இங்கே உள்ள நிலைமை என்ன இந்த ஹவுஸில் இருக்கிறீர்கள் மாநிலத்தில் ஓட்டு வாங்கி வந்திருக்கிறீர்கள் என்பது ஞாபகத்தில் இருக்க வேண்டும். செண்ட்ரல், செண்ட்ரல் என்று பார்லிமெண்டு மெம்பர் மாதிரி பேசிக்கொண்டிருக்கிறார்கள். இங்குள்ள பிரச்சினையை புரிந்துக்கொண்டு அதற்குப் பரிகாரம் தேட வேண்டும். அதற்காகத்தான் மக்கள் பிரதிநிதிகளாக நாம் இங்கு வந்திருக்கிறோம்.

THIRU M. A. LATHEEF: We are discharging our duties in a parliamentary democracy. This is also a State Parliament.

திருமதி க. ந. அனந்தநாயகி: ஆக, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது நான் சொல்ல முற்படுவதெல்லாம், உங்கள் கண்காணிப்புக் குறைவாக இருக்கிறது, கொள்முதலை வியாபாரிகளைக் கொண்டு செய்யச் சொல்கிறீர்கள். ஒரு லோட் எடுத்து வா என்று சொல்கிறீர்கள், அவர்கள் ஒன்பது லோட் எடுத்து வருகிறார்கள். இப்படி எவ்வளவு கடத்தப்படுகிறது என்பதை சுங்கச்சாவடிகளுக்குச் சென்று கண்டுபிடிக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் மாறுவேடத்தில் ஒரு நாளைக்கு ஒருமுறை அங்கங்கே போய்ப் பார்க்கவேண்டும், சுங்கச் சாவடிகளில் என்ன நடக்கிறது என்று. ஒழுங்காகக் கண்காணிக்கிறார்களா? அவரவர்கள் லாரிக்கு இவ்வளவு, வண்டிக்கு இவ்வளவு தலை மூட்டைக்கு இவ்வளவு என்று ரேட் வைத்துக்கொண்டு கடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த அவல நிலையில் உங்கள் நிர்வாகம் இருந்தால் பஞ்சத்தில் பறக்கவேண்டிய நிலைக்கு கொண்டு வந்து விடுவீர்கள். இன்று மக்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள். மூன்று படி அரிசி போடுகிறோம் ரூபாய்க்கு என்று சொல்லி இன்று படி அரிசி ஐந்தரை ரூபாய்க்கு விற்கிற இந்த நேரத்தில் நிலைமையை எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. அரிசி வாங்கி சோறாக்கி தண்ணீர் ஊற்றி உப்பையாவது போட்டு சாப்பிடலாம் என்றால் உப்புக்கு கூட கதியில்லாத நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அந்த அளவிற்கு உங்கள் உணவுக் கொள்கை தவறான பாதையில் போய்க்கொண்டிருக்கிறது. திருக்கோவிலூரில்கூட பார்த்தோம். எவ்வளவோ மூட்டைகள் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போனதாகச் சொன்னார்கள். என்ன நடவடிக்கைகள் எடுத்தீர்கள்? இன்ஸ்பெக்ஷன், அது இது என்று இர் மாதிரி டிலே செய்தால் யாருக்கு பயம் இருக்கும்? ஒருவருக்கும் இருக்காது பயம். திருவாரூரில் கோவாப்பரேட்டிவ் மார்க்கெட்டிங் சொஸைட்டியில் ஒன்றரைக்கோடி ரூபாய் மதிப்புள்ள சாக்குப்பைகள் காணவில்லை. என்ன பதில் சொல்கிறீர்கள்? நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. தேர்தல் வரப் போகிறது, எங்கேயோ போயே போய் விட.................

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : உங்களைப் போன்ற திறமையான வக்கீல்கள் அடடென்ட் செய்து வழக்கை இழந்துக்கொண்டு போகிறார்கள்.

திருமதி த.ந. அனந்தநாயகி: பாத்தகர்களையும் சமாளிக்க வேண்டும். வக்கீல்களையும் சமாளிக்க வேண்டும். அதுதான் நிர்வாகம். முன்னாள் அமைச்சருடைய மகள் கடையில் திருட்டு போகிறது என்றால் பாருங்கள். ஒரு எம்.எல்.ஏ. யின் அண்ணனும் அண்ணன் மகனும் கொலை செய்யப் பட்டார்கள். யார் குற்றவாளிகள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. பல முக்கியமான காரியங்கள் இருக்கும்பொழுது இந்தக் காரியங்களை எல்லாம் நீங்கள் எங்கே நிறைவேற்றப் போகிறீர்கள்? ஆக, இன்று மக்கள் உணவுப் பிரச்சினையோடு நீங்கள் விளையாடுவதை மிக மிக வேதனையோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். உணவுப் பிரச்சினையை நல்ல முறையில் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். தஞ்சையில் எப்போது நெல்போகும், குறுவை அறுவடைக்குப் பின் போகும். ஜூனில் ஏன் போகிறது? விவசாயிகளிடம் பத்து லட்சம் டன் ப்ரொக்யூர் செய்கிறீர்கள்.

Eighty per cent of the purchases are made in the open market and 60 to 70 per cent of it relate to non-food articles.

உங்கள் கூட்டுறவு அங்காடிகள் என்ன செய்கின்றன? உணவுப் பொருள் தவிர மற்ற பொருள்களில் செலவழித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் கொள்கை, உங்கள் நிர்வாகம், உங்கள் போக்கு இவைகளில் மக்கள் நம்பிக்கை இழக்கக்கூடிய அளவில் சென்று கொண்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விவசாயிகளிடத்தில் கொள்முதல் செய்வதை அம்மையார் அவர்கள் வலியுறுத்துகிறார்களா?

திருமதி த. ந. அனந்தநாயகி: நேரடியாக அறுவடை காலத்தில் விவசாயிகளிடத்தில மற்ற ஓப்பன் மார்க்கட் வியாபாரிகள் மாதிரி செய்தால் நெல் அளக்க காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: முதலமைச்சர் அவர்கள் கட்டாயக் கொள்முதல் செய்யலாமா என்று கேட்கிறார்கள்.

திருமதி த.ந. அனந்தநாயகி: அவனுக்குக் கொடுக்கவேண்டிய விலையைக் கொடுத்துவிட்டுச் செய்யலாம்.

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: தனியாருக்கு அனுமதி கொடுத்து விட்டு. இப்படி செய்கிறோம் கொடுங்கள் என்றால் கொடுப் பார்களா?





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மார்க்கெட் விலை கொடுத்து நெல் வாங்கினால், எந்த விலைக்கு அந்த நெல்லை வாங்குகிறோமோ அந்த நெல்லுக்குள்தான் அரிசி இருக்கிறது. அந்த அரிசியை என்ன விலைக்கு விற்பது?

திருமதி த. ந. அனந்தநாயகி: அதுதான் 450 கோடி செலவு செய்து விடுகிறீர்களே அதில் கொஞ்சம் கொடுத்து விடுங்கள்.

Subsidise the price of agricultural products. What are the big projects you are carrying out to-day ? Nothing.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தயவுசெய்து கணக்குப் போட்டுப் பார்த்துச் சொல்லுங்கள். தமிழ்நாடு முழுவதும் அப்படி அரிசி எல்லா மக்களுக்கும் கொடுத்தால் எத்தனை கோடியாகும் என்பதை அடுத்த சட்டமன்றக் கூட்டத்திலாவது அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: உங்களுக்குத்தான் அதிகாரிகள் இருக்கிறார்களே, அவர்களை கணக்குப் போட்டுப் பார்த்துச் சொல்லச் சொல்லுங்கள். எங்களை ஏன் கேட்கிறீர்கள்?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: நாங்கள் கணக்குப் போட்டுப் பார்த்து இருக்கிறோம். 300 கோடி ரூபாய்க்கு மேல் தேவைப்படுகிறது.

திருமதி த.ந. அனந்தநாயகி: தவறான கணக்கு. ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டபோதே ரூ. 4 கோடி, ரூ. 5 கோடி நஷ்டம் ஏற்பட்டது என்றுதான் சொன்னார்கள். நீங்கள் யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள். 500 ரூபாய்க்கு கீழே சம்பளம் வாங்குபவர்களுக்குத் தானே?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு கருத்திருமன் அவர்களும் அடிக்கடி இங்கே அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கூறிவந்தார்கள். ரூ. 35 ஆக இருந்ததை ரூ. 50 ஆக ஆக்குங்கள் என்று. இப்போது அரசாங்கம் நிர்ணயித்து இருக்கும் கொள்முதல் விலை ரூ. 73 ஆகும். ரூ. 33 என்று இருந்தபோது சென்னைக்கும், கோவைக்கும் போட்டதற்கு கிட்டத்தட்ட ரூ. 8 கோடி அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டது. ரூ. 33-க்கே அந்த நிலை என்றால், இப்போது 73 ரூபாய் என்று இருக்கிறது. அம்மையார் அவர்கள் மார்க்கெட் விலை கொடுக்க வேண்டுமென்கிறார்கள். அந்த விலையில் எவ்வளவு ஆகும் என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் கிட்டத்தட்ட உணவு அமைச்சர் சொல்கிற அளவுக்கு நமக்கு இழப்பு ஏற்பட வேண்டியிருக்கும்.

திரு ஆலடி அருணா: நாடு முழுவதற்கும் படியரிசி போடுவதற்கு ரூ. 25 கோடி செலவாகலாம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த அவையில் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: அன்று இருந்த உற்பத்தி விலை அடிப்படையில் சொல்லி இருப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ் நாட்டில் 4½ கோடி மக்கள் இருக்கிறார்கள். 10—20 லட்சம் மக்களுக்கு நாம் அளித்த போதே ரூ. 8 கோடி இழப்பு ஏற்பட்டது. அப்படியிருக்கும்போது, 4½ கோடி மக்களுக்கு ரூ. 25 கோடி செலவாகும் என்றால் எப்படி என்பதை நண்பர் அருணா அவர்கள் சொல்லவேண்டும்.

திரு ஆலடி அருணா: அந்தக் கணக்கை பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். நாட்டில் இருக்கும் 4½ கோடி மக்களும் அரிசி கடைக்கு வருபவர்கள் அல்ல.

திரு கோவை செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, 57 கிலோ கொண்ட ஒரு மூட்டை நெல் ரூ, 40 வாங்கியதை ரூ. 80-க்கு விற்கச் சொல்கிறது அரசாங்கம். இது வர்த்தக ரீதியில் செய்யும் காரியம் அல்லவா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை நாளைக்குச் சொல்லிக் கொள்ளலாம்.

திருமதி த.ந. அனந்தநாயகி: ஆகவே, ஏதோ கணக்குப் போட்டுப் பார்த்து எங்களால் முடியாது என்று சொன்னால் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது, சமாளிக்க முடியாது என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். இவ்வாறு சப்சிடைஸ் செய்து வருஷம் பூராவும் போட வேண்டுமா அல்லது அந்த "லீன்" மாதங்களில் மட்டும் போடலாமா என்பதை நீங்கள் யோசித்துப் பார்த்து, அந்த வகையில் என்ன செலவாகும் என்பதை கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டும். இப்படி அந்தப் பிரச்சினையை கவனிக்காமல், ஏதோ குத்து மதிப்பாக ரூ. 300 கோடியாகும், ரூ. 200 கோடியாகும் என்று சொல்லிவிட்டு, 5½ ரூபாய் ஒரு படியரிசி என்று நாங்கள் விற்போம் என்று சொல்வீர்களானால், நான் சொல்லவில்லை, மக்கள் சொல்வார்கள் உங்களுக்கு, நீங்கள் இங்கே இருக்கத் தேவையில்லை, வேறு வேலை பார்க்கலாம் என்று. இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : சட்டப் பேரவை துணைத் தலைவரவர்களே, எதிர்க் கட்சிகள் கொண்டுவந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வன்மையாக எதிர்த்து சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.





எனக்கு முன்னாலே பேசிய திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள், உங்களுக்குத் திறமை இருந்தால் உங்களுக்கு புத்திசாலித்தனம் இருந்தால் இதைச் செய்யக்கூடாதா, அதைச் செய்யக்கூடாதா என்று இங்கே கருத்துக்களைச் சொன்னார்கள். அந்த அம்மையாருக்கு இருக்கக் கூடிய மொத்தமான புத்திசாலித்தனத்தைக் கொஞ்சம் இந்திரா காந்திக்கு கடன் கொடுத்து அம்மையார் இந்திரா காந்தியே, நீங்கள் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டால் இந்தத் தமிழ் நாட்டில் இருக்கும் அரிசி தவிர மற்ற உணவுப் பண்டங்கள் வெளி மாநிலங்களுக்குப் போய் இருக்காது, நீங்கள் புத்திசாலித்தனமாக உத்திரவு போட்டிருப்பீர்களானால் முன்னாலே ரூ. 80 விற்ற கம்பு ரூ. 100 ஆகியிருக்குமா, நீங்கள் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டிருந்தால் ஒரு மூட்டை ரூ. 70 ஆக இருந்த கேழ்வரகு இன்றையதினம் ரூ. 140 ஆகியிருக்குமா, மக்காச்சோளம் ரூ. 80 ஆக இருந்தது ரூ. 190-க்கு உயர்ந்து இருக்காது என்று அங்கே பார்த்துச் சொல்லியிருப்பார்களானால் நான் கொஞ்சம் பாராட்டியிருப்பேன்.

அது மட்டுமல்ல, அதே இந்திரா காந்தியைப் பார்த்து, பாராளுமன்றத்திலே ஒரு மந்திரி சொன்னார்கள், மாதா மாதம் இரண்டு புள்ளிகள் விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிறது. அது தவிர்க்க முடியாது என்று சொன்ன நேரத்தில், இந்திரா காந்தியே, கொஞ்சம் புத்திசாலித்தனமாக நடந்து கொள், அந்த விலைவாசியை கட்டுப் படுத்தலாம் என்று சொல்லியிருந்தால் நான் வரவேற்று இருப்பேன்.

அதேபோல், புதிதாக 3,000 கோடி ரூபாய்க்கு நோட்டு அச்சடித்து இருக்கிறார்கள். அந்த புத்திசாலித்தனத்தை அவர்களுக்குச் சொல்லியிருந்தால் இந்த நாட்டில் கஷ்டம் ஏற்பட்டு இருக்காது.

அதேபோல், உரத்தின் விலையை 100 சதவிகிதம் உயர்த்தும்போது இந்திரா காந்தி அவர்களுக்கு அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொல்லியிருந்தால் பாராட்டி இருப்பேன். இப்படி புத்திசாலித்தனம் பஞ்சம் இருப்பவர்களிடத்தில் சொல்வதற்கு பதிலாக, புத்திசாலியான இந்த அரசாங்கத்தைப் பார்த்து இப்படி நடந்து கொள், அப்படி நடந்து கொள் என்று சொல்வது எப்படி நியாயம் என்று எனக்குப் புரியவில்லை.

அது மட்டுமல்ல, இன்றைய தினம் எதிர்க் கட்சிகள் உருப்படியான யோசனைகளை இந்த இக்கட்டான நேரத்தில் இந்த அரசாங்கத்திற்கு சொல்வார்கள், அதன் மூலம் இந்த நாட்டு மக்களை நம்மால் ஓரளவிற்குக் காப்பாற்ற முடியும் என்று நான் எண்ணிக் கொண்டு இருந்தேன். ஆனால் நண்பர் கோவை செழியன் சொன்னார்கள், உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வரும்போதே, அது நிறைவேறும் என்ற எண்ணம் இல்லை, இருந்தாலும் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். எனக்கு இருக்கும் வருத்தம் எல்லாம், எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது போல், எதிர்க் கட்சிகள் எப்படி செயல் படுகின்றன என்பதைச் சொல்வதற்காக நாங்களும் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து எங்களுடைய கருத்துக்களைச்

[திரு. நா. வீராசாமி] [1974 ஆகஸ்ட் 16

சொல்ல வாய்ப்பு இருக்க வேண்டும். அதன் மீது வேண்டுமானால் நாங்கள் வாக்களிக்காமல் இருக்கலாம். பாவம், அவர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு நாம் விரும்பவில்லை. இதற்குக் காரணம் எதிர்க்கட்சிக்காரர்களால் இந்த நாட்டில் உணவுப் பஞ்சம் எப்படி ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் முதலில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

** ** **

[நண்பகல் 12-00]

THIRU G. R. EDMUND : I have not raised any point of order. I am only requesting the Chair to expunge certain portion of the speech of the hon. Member, Thiru Veeraswamy.

நான் கேட்டுக் கொள்வது, அந்தப் பகுதியை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த அவையிலே எழுப்பப்படுகிற குற்றச்சாட்டுகள்—"லெவ்வப்பிள் அலிகேஷன்ஸ்" என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள் பொதுவான குற்றச்சாட்டுகளாக இருக்கக் கூடாது. அண்ணா தி. மு. க. வைச் சேர்ந்த கோவைச் செழியன் அவர்கள் கூட [* * * * *] என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட வாசகங்களை இந்த அவையிலே சொல்வது நல்லது அல்ல. ஆகவே, அப்படிப்பட்ட வாசகங்களை இந்த அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்திரவிடுகிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இதைத் தொடர்ந்து நான் வற்புறுத்த விரும்பவில்லை, நான் ஒன்று கேட்கிறேன். இந்த நாட்டின் மீது அக்கறை உள்ளவர்கள், விலைவாசி இறங்க வேண்டும் என்று சொல்கிறவர்கள், தங்களுடைய கடமைகளை ஆற்ற வேண்டும் என்று நினைக்கிறவர்கள், சட்ட மன்றத்தில் தன்னுடைய கடமையை சரியாக ஆற்றவில்லை என்றால், அந்த உறுப்பினரை பதவியிலிருந்து திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் பேசுகிறவர்கள்—நான் பணிவோடு கேட்கிறேன்—இந்தச் சட்ட மன்றத்திற்கு வராமல் வெளியே இருந்து கூச்சல் போடுவது முறைதானா? இதைவிட இப்பொழுது நாட்டில் பெரிய முக்கியமான பிரச்சினை என்ன இருக்கிறது? ஒரு எதிர்க் கட்சியின் பொறுப்பான தலைவர், இந்த ஆட்சியின் மீது நம்பிக்கையில்லை என்று சொல்கிறவர்கள், காரணம் அரிசிப் பிரச்சினை என்று சொல்கிறார்கள்—அதைக் கூட இங்கே எடுத்துச் சொல்வதற்கு வராமல் அப்படி இந்த நாட்டில் வேறு என்ன குடி முழுகிப்போகிறது? அப்படி ஒரு சட்ட மன்ற உறுப்பினர் இருப்பது தனிப்பட்டவருடைய உரிமையாகக் கூட இருக்கலாம். ஆனால், எதிர்க் கட்சித் தலைவர் என்ற பொறுப்பில் இருக்கும் பொழுது அப்படி வராமல் இருப்பது முறைதானா?

*மாண்புமிகுப் பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1974 ஆகஸ்ட் 16]

* * * *

ஆலடி அருணா :

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தலைவரைப் பற்றி சொல்லும்பொழுது அவரையும் சேர்த்து தான் சொல்கிறார் என்று கருதுகிறேன். அப்படிச் சொல்வது முறையல்ல. எந்த ஒரு சட்ட மன்ற உறுப்பினரையும் இழிவுபடுத்திக் கொள்கிற வகையில் ஒரு வாசகம் இருக்கக்கூடாது. ஆகவே, அந்த வாசகங்களை இந்த அவையின் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. நா. வீராசாமி : ஆலடி அருணா அவர்களுக்கு மிக்க நன்றி.

* * *

திரு. க. உரோ. எட்மண்ட் : எங்களுடைய கட்சித் தலைவர் கடந்த டிசம்பர் மாதத்தில் நடந்த சட்டமன்ற கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசும்பொழுது ஏறத்தாழ $1\frac{1}{2}$ மணி நேரத்திற்கு மேலாகப் பேசியிருக்கிறார். (ஆளும் கட்சித் தரப்பில் சிரிப்பு) எதற்காக சிரிக்க வேண்டும்? அன்றைக்கு இந்த அவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது ஏறத்தாழ $1\frac{1}{2}$ மணி நேரத்திற்கு மேலாகப் பேசியிருக்கிறார்கள். அவர் மேலும் தொடர்ந்து பேசுவதற்கு அனுமதி கொடுக்காமல் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார். அதற்குப் பிறகு அவர் இந்த மன்றத்திற்கு வருவதற்குத் தயாராக இல்லை. ஆனால் அவர்களுக்கு ஒன்றை நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் இங்கே 14 பேர்கள் உட்கார்ந்திருக்கிறோம். எங்களால் [ * ] என்ற நிலைமை ஏற்பட்டால் இந்த நேரத்தில் ஏதாவது அவசியம் ஏற்பட்டால் எங்கள் தலைவர் இந்த மன்றத்திற்கு வருவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரே ஒரு திருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சபை குறிப்பில் அவர் $1\frac{1}{2}$ மணி நேரம் பேசியதாகக் குறிப்பு இல்லை. அதிகாரப் பூர்வமாகப் பேசியதாக அவைக் குறிப்பில் இல்லை.

திரு. நா. வீராசாமி : நான் சொல்வதற்குக் காரணம் எல்லோருக்கும் பொறுப்பு இருக்கிறது. தன்னுடைய கடமையை இங்கே வந்து ஆற்றினால் நாங்கள் கூட தெரிந்துகொள்ள முடியும்; தவறு இருந்தால் திருத்திக் கொள்ள முடியும். இந்த அவையிலே பேசினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் இங்கே இருக்கிறார்கள்; அவர்கள் தக்க பதில் சொல்வார்கள்.

**மாண்புமிகுப் பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

கோவை செழியன் அவர்கள் அதிகாரிகளை கடமையாற்ற முடியாமல் திடீர், திடீர் என்று என் மாற்றுகிறீர்கள் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். இப்போது போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்கள் 1962-ல் ஒரு ரூல்லிங் எதிர்க்கட்சியாக சென்னையில் இருந்தார்கள். அவர்களை திருப்பதிக்கு ஆணையிட்டு மாற்றிவிட்டார்கள். காலை 10 மணிக்கு மாற்றினார்கள். அப்போது எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த மதியழகன் அவர்கள் என்ன இப்படி இடமாற்றம் மாற்றினீர்கள் என்று கேட்டார்கள். நாங்கள் ஆணையை மாற்றினோம், ஈரோட்டுக்கு அல்லவா மாற்றியிருக்கிறோம் என்று பதில் சொன்னார்கள். காலை 10 மணிக்கு ஆணையிட்டு மாற்றினார்கள். அதிலிருந்து 3 மணி நேரத்திற்குள் ரோட்டுக்கு மாற்றிவிட்டார்கள். மாலை 6 மணிக்கு அவர்கள் கன்னியாகுமரிக்கு மாற்றப்பட்டார்கள். இப்படி ஒரே நாளில் 3 முறை மாற்றியிருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், கோவை செழியன் அவர்கள் சினிமாப் படம் எடுப்பவர்கள். அவர்களுக்குத் தெரியும், சினிமாத் துறையில் கதாநாயகனோடு கதாநாயகி ஒத்துழைக்கவில்லை என்றால் உடனே கதாநாயகியை மாற்றிவிடுகிறார்கள். அப்படி இருக்கும்போது இந்த நாட்டினுடைய கதாநாயகனாக இருக்கின்ற கலைஞர் அவர்கள் தன்னுடன் ஒத்துழைக்காத அதிகாரிகளை மாற்றுவதில் என்ன தவறு? அதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்ல வேண்டுமா?

<u>திரு. கோவை செழியன்</u>: தலைவரவர்களே, கதாநாயகனோடு கதாநாயகி ஒத்துழைக்கவில்லை என்றால் மாற்றிவிடுகிறார்கள் என்று உதாரணம் சொன்னார்கள். மெத்த மகிழ்ச்சி. அப்படியானால் இந்த நாட்டிலே இருக்கின்ற அதிகாரிகள் நீங்கள் போடுகின்ற உத்தரவுகளை அமுல் நடத்த மறுக்கிறார்கள் என்றால், நீங்கள் போடுகின்ற உத்தரவு அப்படி இருக்கிறது; செயல்படுத்த முடியாத அளவுக்கு இருக்கிறது; செயல்படுத்த முடியாததால் நீங்கள் மாற்றிவிடுகிறீர்கள். ஒரு அதிகாரியை ஒரே நாளில் மூன்று முறை மாற்றிக்கொண்டிருக்கிறீர்கள். அதற்குப் பெயர் நிர்வாகமா? இன்னுமொரு குற்றச்சாட்டு.........

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: தனிப்பட்ட முறையில் ஒரு இளாரிபிக்கேஷன் என்று சொல்லிவிட்டு நீண்ட விளக்கம் சொல்வது சரியல்ல. ஒருவர் பேசும்போது கிளாரிபிகேஷன் என்றால் ஒரிரு வார்த்தைகளில் தன்னுடைய கருத்தைத் தெரிவித்துவிட வேண்டும். உங்களுக்குப் பேசுவதற்கு நிறைய வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது; அப்போது நிறைய பேசியிருக்கிறீர்கள். ஆகையால் இப்போது உட்காருங்கள்.

<u>திரு. எஸ். வடிவேல்</u>: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, எதிர்கட்சியிலே இருக்கிறவர்கள் அரிசி கிடைக்காததற்கு அரசாங்கத்தின் குறைபாடு என்று சொன்னார்கள். ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் அதை மறுத்து, நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று சொல்ல வேண்டும். அந்த முறையில்தான் விவாதம் இருக்க வேண்டும். அதல்லாமல் ஏதோ லாவணி கச்சேரி மாதிரி இந்தச் சபை நடக்கிறதே.





நானும் நீண்ட நாள் சட்டசபை உறுப்பினராக இருந்திருக்கிறேன். இந்த மாதிரி எப்போதும் நடப்பதில்லை. இங்கே ஒரு சிறு தவறு நடந்திருக்கிறது. வெளியை ரத்து பண்ணினார்கள்; அதனால் வந்த வினை தான் இது. இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக என்னென்னவோ பேசுகிறார்களே. "நெற்றிக் கண்ணைக்காட்டினும் குற்றம் குற்றமே" என்று உரைத்த நக்கீரன் பரம்பரையில் வந்தவர்கள் அல்லவா நாம். அதை அந்தப் பரம்பரையினர் அமைத்த சட்டமன்றம் அல்லவா இது. நிலைநிறுத்த வேண்டாமா?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: நண்பர் வீராசாமிக்கும் எனக்கும் இருக்கிற அக்கறை எல்லாம், இந்தத் தாழ்வாரத்தில் வந்திருந்து கையெழுத்துப் போட்டவர் உள்ளே வந்து கொஞ்சம் உட்கார்ந்தால் என்ன என்பதுதான்.

<u>திரு. க. உரொ. எட்மண்ட்</u>: சட்டமன்ற உறுப்பினர் கட்டாயம் சபைக்கு வந்துதான் ஆகவேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆகவே, கட்டாயம் சபைக்கு வரவேண்டுமென்று சொல்ல யாருக்கும் உரிமை இல்லை.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: வரவேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. ஒரு பண்பாடு, நாகரிகம், அரசியல் கோட்பாடு இவை களைக் கடைபிடிப்பவர்கள் சட்டமன்றத்திற்கு வந்து பணியாற்ற வேண்டும். தாழ்வாரத்திலே வந்து சம்பளம் வாங்குவதற்காகக் கையெழுத்துப் போடு கிறார்கள் என்ற நிலை இல்லாமல் சட்டமன்றத்திற்கு உள்ளே வந்து மக்களுக்குப் பணியாற்ற வேண்டும். தலைவரே அந்த முறையைக் கடைப் பிடிக்கவில்லை என்றால் தொண்டர்கள் எப்படிக் கடைப் பிடிக்க முடியும்?

<u>திரு. க. உரொ. எட்மண்ட்</u>: அதே பண்பாட்டை, நாகரீகத்தை இந்த மன்றத்திற்கு வந்து பேசிக்கொண்டிருந்தபோது நீங்கள் கடைப் பிடித்திருந் தால் அவர்கள் நிச்சயம் தொடர்ந்து வந்திருப்பார்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: அப்படியானால் நீங்கள் எல்லாம் வருகிறீர்களா? நீங்கள் வருகிறீர்களே. அதை ஒப்புக்கொண்டுதான் வருகிறீர்களா? நீங்கள் வரும்போது ஏன் அவர்கள் வரக்கூடாது?

<u>திரு. க. உரொ. எட்மண்ட்</u>: எங்கள் தலைவரைத்தான் நீங்கள் பேச விடவில்லையே தவிர எங்களை அல்ல.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u>: இப்போது சபாநாயகராக இருப்பவர் முன்னால் சபைக்கு வராமல் இருந்தாரே. அப்போது உங்கள் கட்சியிலிருந்து அவர்மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா?

<u>திரு. நா. வீராசாமி</u>: அரிசிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்த அரசு நல்லமுறையிலே சமாளித்திருக்கிறது. உண்மையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசைத் தவிர வேறு எந்த அரசாக இருந்தாலும் இன்று ஏற்பட்டிருக்கிற பிரச்சனையை நிச்சயமாகச் சமாளித்து இருக்க முடியாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பதுக்கல்காரர்கள் பற்றிச் சொன்னார்கள். இந்த அரசு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. கள்ளக் கடத்தல்காரர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. 7 மாத காலத்திலே இந்த அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் காலத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 5,738. அதிலே பதுக்கல்காரர்கள் 625 பேர். கடத்தல் வியாபாரம் செய்தவர்கள் 4,913 பேர். இந்த 7 மாத காலத்தில் கைப்பற்றப்பட்ட அரிசியின் அளவு 17,466 குவிண்டால்; நெல்லின் அளவு 27,676 குவிண்டால்; சிறு தானியங்களின் அளவு 1,176 குவிண்டால்.

அதே கால அளவில் பதுக்கல் செய்யப்பட்ட உணவு தானியத்தின் மதிப்பு 62 லட்சம்; கடத்தல் செய்யப்பட்ட உணவு தானியத்தின் மதிப்பு 11 லட்சம். இவை அல்லாமல் ரயில் மூலமாகவும் கடத்தல் நடைபெற்றதைக் கண்டுபிடித்திருக்கிறோம் என்பதை இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறவர்கள் யோசிக்க வேண்டும். லாரிகளிலே கடத்தப்படுகிறது என்றால் அது இந்த மாநிலத்தவர்களின் பொறுப்பு. ஆனால் ரயில் யாருடையது? தமிழ்நாட்டு அரசினுடையதா? அதிலே இருக்கின்ற பணியாளர்கள் தமிழ்நாட்டு அரசு ஊழியர்களா? ரயிலிலே அரிசி போகிறது 713 குவிண்டால். ரயிலிலே போன நெல் 112 குவிண்டால். அது கூட போதுமானது அல்ல. ரேட்ஸ் வண்டியிலே அரிசி போகிறது. ஏறத்தாழ 300 குவிண்டால் அரிசி ரேட்ஸ் வண்டியிலிருந்து நம்முடைய திறமையான அதிகாரிகள் கைப்பற்றியிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ரயிலிலே போனதைப்பற்றிச் சொன்னார்கள். நாகர்கோவிலிலிருந்து போலீஸ் வானில் 3,000 மூட்டை அரிசி போனதே. அதற்கு யார் பொறுப்பு ?

திரு. கோவை செழியன் : ரயில்வேயை யார் நடத்துகிறார் என்று வீராசாமி கேட்டார். மத்திய அரசு நடத்துகிறது, ரயில் போக்குவரத்தில் தவறு நடந்தால் கண்டுபிடிப்பதற்கு ரயில்வே போலீஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த ரயில்வே போலீஸ் மாநிலத்தின் கையில் இருக்கிறது. ஆகவே, ரயில் மூலம் கடத்தல் நடைபெற்றால், தவறு நடைபெற்றால் அது மாநில அரசினுடையதே அல்லாமல் டில்லி அரசினுடையதல்ல. நான் டில்லி அரசுக்கு வக்காலத்து வாங்கவில்லை. நடைபெற்ற தவறு ரயில்வே போலீசினுடையது, மாநில அரசினுடையது தான்.

திரு. நா. வீராசாமி : இங்கே இருக்கிற போலீஸ் அதிகாரிகளின் நடவடிக்கையின் காரணமாகத்தான் தவறு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ரயில் மூலம் கடத்தக்கூடிய அளவுக்கு சில அதிகாரிகள் அல்லது இந்திரா காந்தி அம்மையார் ஒத்துழைப்போடு நடந்திருக்கிறது என்றால் இந்த அரசு எப்படிப் பொறுப்பாகும் ?

திரு. எ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னென்னமோ சொல்கிறார்கள். மத்திய அரசாங்க ஊழியர்கள் இந்திரா காந்தியின் ஒத்துழைப்போடு அரிசி கடத்தினார்கள் என்ற முறையிலே பேசுகிறார்கள். இதெல்லாம் முறைதானா ?



திருமதி. த. ந. அனந்தநாயகி : போலீஸ் வானில் நாகர்கோவிலில் இருந்த அரிசி போச்சே. அதற்கு யார் பொறுப்பு ? எந்த அதிகாரி பொறுப்பு ?

திரு. நா. வீராசாமி : இதில் கட்சியே கிடையாது.

(திரு. முனு ஆதி எழுந்திருந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : இதில் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் நீங்கள் எழுப்பப் போகிறீர்கள் ?

திரு. முனு ஆதி : ஒரே ஒரு விளக்கம் கேட்கவேண்டும். ரெயில்வேயில் வந்த சரக்குகளைத் தமிழ்நாடு போலீஸ் பிடித்திருக்கிறது. யார் யாரைப் பிடித்திருக்கிறார்கள் என்கிற விவரம் இருக்கிறது என்றார்கள். இதில் தி.மு.க. காரர்கள் எத்தனை பேர் ? எத்தனை அ.தி.மு.க. காரர்கள் பேரில் வழக்கு போடப்பட்டிருக்கிறது ?

திரு. நா. வீராசாமி : கள்ளக் கடத்தலில் கட்சியே கிடையாது. காங்கிரஸ் செய்கி காரர்கள் கள்ளக் கடத்தல் செய்கிறார்கள். அ.தி.மு.க. காரர்கள் இருக் றார்கள். இந்த நாட்டிலே அப்படிச் சில சமூக விரோத சக்திகள் நடவடிக்கை கின்றன. இந்த அரசாங்கம் அவர்கள் மீது எல்லாம் எடுத்திருக் எடுக்கிறதா இல்லையா என்றால்—கடுமையான நடவடிக்கை எண்ணிப்பார்க்க கிறது. அதைப் பாராட்ட மனம் இல்லாவிட்டாலும் போகிறது. வேண்டாமா ? பெட்ரோல் வான் என்று சீல் போட்டு லாரி பிடித்திருக்கிறார் சந்தேகப்பட்டு அதிகாரிகள் மிகத் திறமையாக அதைப் லாரிகளுக்குப் கள். அதில் அரிசி இருக்கிறது. அது மட்டுமல்ல. இந்த அவை பயன்படக்கூடிய சில கருவிகள்—அதில் அரிசி கடத்துகிறார்கள். கைப்பற் கள் எல்லாவற்றையும் அரசாங்கம் தடுத்து நிறுத்தி அரிசியைக் றியிருக்கிறது என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரமாகி விட்டது. இன்னும் ஐந்து நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திரு. நா. வீராசாமி : இப்படி அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இதைப் பாராட்ட வேண்டாமா ? பாராட்டினார்களா என்றால் இல்லை. பூரண மதுவிலக்கை நவம்பர் மாதத்தில் இருந்து கொண்டு வருவது என்கிற நல்ல முடிவை அரசாங்கம் எடுத்திருக்கிறதே, அதற்காகவாவது பாராட்டினார்களா ? நான் உண்மையைச் சொல்கிறேன். இவர்கள் பூரண மதுவிலக்கைக் கொண்டு வருகிறார்களே, நாம் ஆட்சிக்கு வரப் போகிறோமே, எப்படிச் சமாளிப்பது என்கிற பயத்திலே—இந்த மதுவை அப்படியே நீடிக்கச் செய்ய என்ன செய்யலாம் என்பதாக எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் பேசியது உண்டா இல்லையா என்பதை மனச்சாட்சியோடு சொல்ல வேண்டும்.

திரு. முனு ஆதி : பேசியது உண்டு என்று சொல்கிறார்களே, அதற்கு ஆதாரம் இருந்தால் சொல்லட்டும்.

திரு. நா. வீராசாமி : உங்கள் தலைவர்கள் எல்லாம் அன்றைக்கு— மதுவைக் கொண்டு வரலாம் என்று முடிவு எடுத்தபோது அதை ஒத்துக்கொண்டுதானே இருந்தார்கள்.

திரு. முனு ஆதி : அப்படிச் செய்த தவறைத்தான் இப்போது அனுபவிக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : எங்களுக்கு எல்லாம் தெரியும். கட்சிக் கூட்டத் தில் அருமை நண்பர் சீனிவாசன் அவர்கள் பெண்கள் எல்லாம் மதுவைக் குடிக்கிறார்கள், ஆகவே, மதுவைக் கொண்டு வாருங்கள் என்று பேச வில்லையா ?

திரு. ஆலடி அருணா : திரு சீனிவாசன் அப்படிப் பேசவில்லை என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. உரோ. எட்மெண்ட் : அரசாங்கம் மதுவிலக்குச் சட்டத்தைத் திரும்ப அமல்படுத்த இருக்கிறது, அதை நீங்கள் பாராட்டினீர்களா என்று கேட்கிறார். மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்துவதை நாங்கள் எதிர்க்க வில்லை. வரவேற்கிறோம். தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு வேண்டு மென்றுதான் சொன்னோம். அப்படி இருக்க தவறான ஒரு கற்பனையில் வெளியில் உள்ள மக்கள் தவறாக உணர்ந்து கொள்ளத் தக்கவகையில் பேசவேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : உலகத்தில் குதிரைப் பந்தயத்தையே நாங்கள் தான் தைரியமாகத் தடுத்திருக்கிறோம். ஒழித்திருக்கிறோம். அதில் கூட லஞ்சம் வாங்கியிருப்பார்கள்—குதிரையிடத்தில் லஞ்சம் வாங்கி யிருப்பார்கள் என்று அவர்கள் சொல்வார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : அந்த அளவுக்கு ஆக்கிவிட்டீர்கள்.

திரு. நா. வீராசாமி : க்ளோப் தியேட்டரில் யார் யாரிடத்தில் வாங்கி கொண்டு எவ்வாறு ஒவ்வொருவரும் கையெழுத்துப்போட்டு அளித்திருக்கி றார்கள்—பின்னர் எப்படி அதைச் சொன்னார்கள் என்கிற உண்மை தெரியாதது அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : க்ளோப் தியேட்டர் விவகாரம் குற்றச் சாட்டில் ஒன்றாக இருக்கிறது. எங்கள் கட்சியின் சார்பாக திருமதி அனந்தநாயகி அவர்கள் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தது உண்மை. அதில் எந்தவிதமான உள்நோக்கமும் கற்பிக்க வேண்டியதில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உள்நோக்கம் இல்லாமல் கையெழுத்துப் போட்டார்கள், கையெழுத்துப் போட்டிருப்பதாகக் கூறு கிறார்களே, அதில் தவறு நடந்திருப்பதாக பிரதமரிடம் கொடுத்தார்களே அதைத்தான் விளக்கினோம்.



திரு. நா. வீராசாமி : எல்லாவகையிலும் ஆளுங்கட்சியின்மீது குறை காண வேண்டும், குற்றம் காணவேண்டும், மனுக் கொடுக்க வேண்டும். ஊர்வலம் போகவேண்டும்—காவலர் குடியிருப்புகளில் மறியல் செய்ய வேண்டும் என்றெல்லாம் செய்து—கடைசியாக ஒன்றுமே முடியவில்லையே— மாதக்கணக்கில் ஒருவர் இருவரைத்தானே இந்தப் பக்கமும்—அந்தப் பக்கமும் இழுக்க முடிகிறது எனச் சோர்ந்து 1976-ல் தேர்தல் வரும் என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில் விலைவாசி ஏற்றம் ஒரு வாய்ப்பாகக் கிடைத்திருக்கிறது. ஆளுங்கட்சியில் இருக்கிற எந்த உறுப்பின ரும் விலைவாசி ஏற்றத்தை வரவேற்கவில்லை. மக்களைப்பற்றியே சிந்திக்கி றோம். அதிகாரிகளிடத்தில் அடிக்கடி தொடர்பு கொண்டு விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். மக்களுக்கு அரிசி தொடர்ந்து கிடைத்துவர கடுமையான இந்த இரண்டு மாதங்களையும் சமாளிக்க தக்க நடவடிக்கைகளை மேற் கொண்டு இருக்கிறோம். இந்த ஆட்சி போடுகிற திட்டங்களைவிட, இந்த ஆட்சி எடுக்கிற நடவடிக்கைகளைவிட, இந்த ஆட்சி உருவாக்குகின்ற சட்டங்களைவிட இனி வேறு ஒரு ஆட்சி வந்து நடத்தபோவதில்லை. அதற் காக முதலமைச்சருக்குப் பாராட்டு தெரிவிக்கிறேன். இந்த நாட்டில் இருக்கிற தீய பழக்கங்களுக்கு எல்லாம் முட்டுக்கட்டை போட்டார்கள். சினிமாக் கொட்டகைக்காரர்களே ஒரு முற்றுப்புள்ளி வைத்துக் கொள் வார்கள் போல இருக்கிறது. எப்படியோ நாட்டில் தீமை ஒழிந்தால் போதும். ஆகவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கண்டித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : சினிமாவை ஒழித்துவிட வேண்டுமென்று சொல்கிறார்கள். சினிமாத் தொழிலில் யார் யார் தொடர்பு வைத்திருக்கி றார்கள் என்பது அவருக்குத் தெரியும். முதலமைச்சரின் குடும்பமே சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருப்பது. அவரைப் பழிவாங்க இவர் அப்படிச் சொல்கிறாரா ?

திரு. நா. வீராசாமி: எனக்கும் தலைவருக்கும் தகராறு வந்தது என்பதற் தற்காக நான் எப்போதும் மருத்துவமனைக்குப் போனது இடையாது.

திரு. கோவை. செழியன் : மருத்துவமனையைப்பற்றி எப்போதும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மருத்துவமனையில் இருந்து பிடித்துத்தான் வெளியே தள்ளிவிட்டீர்கள். உங்களுக்கு வேண்டியவரிடத்தில்தான் அந்த டிபார்ட்மெண்ட் இருக்கிறது. அவரையே அவமானப்படுத்த இப்படிச் சொல்கிறீர்களா ? மாதத்திற்கு ஒருமுறை இப்படி சின்சியாரிடியை மாற்றிக் கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: நீங்கள் ஒருவருக்கொருவர் இப்படிப் பேசிக்கொண்டிருப்பது சரி அல்ல.

திரு. நா. வீராசாமி : ஒரே ஒரு வேண்டுகோள். திரு கோவை செழியன் இந்த மன்றத்தில் பலவற்றுக்கும் நீதி விசாரணை வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அவர் ஆஸ்பத்திரியில் இருந்ததுபற்றி நீதி விசாரணை

[திரு. நா. வீராசாமி] [1974 ஆகஸ்ட் 16

நடத்த—தயவுசெய்து—அவர் ஏற்றுக் கொள்ளத் தயாரா என்று கேட்கிறேன்.

திரு. கோவை செழியன் : ஏற்றுக் கொள்கிறேன். நீதி விசாரணை வைக்க உங்களுக்குத் துணிவு இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருப்பது சரி அல்ல. அடுத்தாக திரு. நா.வெ. குருசாமி பேசுவார்.

[பிற்பகல் 12-30]

திரு. நா. வெ. குருசாமி : துணைத்தலைவர் அவர்களே, ஆளும் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

இன்று முக்கியமாக கடந்த 4 நாட்களாக நடந்த விவாதத்தில் இந்த நாட்டில் அரிசி விலை உயர்ந்து விட்டது. அரிசிப் பிரச்னையில் ஆளுங் கட்சியினர் ஒழுங்காக நிர்வாகம் செய்யவில்லை. அதனால் தமிழ்நாட்டிலே யுள்ள மக்களெல்லாம் மிகுந்த வேதனையுடன் மிகுந்த அதிகமான விலையில் அரிசி வாங்க வேண்டியிருக்கிறது என்றெல்லாம் கூறினார்கள். இதற்கெல்லாம் காரணம் இந்த அரசுதான் என்று திட்டவட்டமாகக் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் கூறும்போது கூடச் சொன்னார்கள், இரண்டு மாதம் பொறுத்துக் கொள்ளுங்கள், அதற்குப் பின்பு அரிசி விலை குறைந்துவிடும் என்று. இரண்டு மாதம் வரை இந்த நாட்டு மக்கள் சாக வேண்டுமா என்பதைத்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசி விநியோகத்தில் மிகவும் தவறான சூழ்நிலை இருந்து கொண்டி ருக்கிறது. அரிசி விநியோக லைசென்ஸ் கொடுக்கும்போது ஆளுங்கட்சிக் காரர் எதிர்க்கட்சிக்காரர் என்ற பாகுபாட்டுடன்தான் இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, பெல்ட் ஏரியாவில் பக்கத்தில் உள்ளவர் களுக்குக் கொடுத்துவிட்டு, அதற்கு 5 மைல்கள் இந்தப் பக்கத்திலுள்ள வர்களுக்கு மறுக்கப்படுகிறது. இதற்கு என்ன காரணம் ? ஆளுங்கட்சிக்கு ஒரு விதமாகவும், எதிர்க்கட்சிக்கு ஒரு விதமாகவும் இருந்து கொண்டி ருப்பதுதான்.

இந்த லெவி முறையில் நீங்கள் இரு உத்தரவுகளைப் போட்ட காரணத் தினால், இம்மாதிரி மக்கள் எல்லாம் கஷ்டப்பட வேண்டிய சூழ்நிலை வரு கிறது. குறிப்பாக, ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு இடத்தில் பேசும்போது முரண்பட்ட கருத்துக்களைக் கூறுகின்ற காரணத்தால் இம்மாதிரி திடீரென அரிசி விலை உயரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் நல்லமுறையில் நீங்கள் தீவிரமாக ஆராய்ச்சி செய்து நடந்திருப்பீர்களானால், இம்மாதிரி கஷ்டம் ஏற்பட்டிரு க்காது என்பதைத்தான் கூறிக்கொள்கிறேன்.



1974 ஆகஸ்ட் 16] [திரு. நா. வெ. குருசாமி]

கடந்த 3 நாட்களுக்கு முன்பாக, இந்த மன்றத்தில் ஒரு அமைச்சர் கூறினார். இன்னமும் ஒரு ரூபாய்க்கு 3 படி அரிசி போடுவோம் என்று கூறினார். எப்படி நீங்கள் போடமுடியும் என்பதை நன்குகச் சிந்தித்து இன்னும் 3 படி போடுவோம் என்று சொல்லி மக்களை வீணாக ஏமாற்ற வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் திருத்திக் கொள்கிறேன், ரூ. 1-க்கு ஒரு படி போடுவேன் என்று கூறினார்கள். இப்பொழுது ஒரு படி அரிசி ரூ. 5, ரூ. 6, என்று விற்றுக் கொண் டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் இந்த அரசுதான், சரியான முறையில் நிர்வாகம் செய்யாததுதான் என்று குற்றம் சாட்டவிரும்பு கிறேன். ஒவ்வொரு அமைச்சரும் இம்மாதிரி பேசுவது, விலைவாசியால், பஞ்சத்தால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற ஏழை மக்களைப் பார்த்து எள்ளி நகையாடுவது போலிருக்கிறது.

இரண்டு நாளைக்கு முன்பாக ஒரு அமைச்சர் சொன்னார், எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒத்துழைப்பு கொடுத்தால் ரூபாய்க்கு 3 படி போடுவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்வோம் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சிகள் விவசாயம் செய்பவர்களை ஏதாவது தடுத்தார்களா ? விவசாயம் நல்ல முறையில் ஆக்கப்பூர்வமான முறையில் இருக்கவேண்டும், செய்யவேண்டு மென்றுதான் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கொண்டிருக் கிறார்கள். ஆனால், இம்மாதிரி உங்களுடைய பேச்சுக்கள் நேரத்திற்கு ஒரு முறையாக இருந்த காரணத்தால் இன்று களையமுடியாத கட்டத் திற்கு நீங்கள் சதி செய்திருப்பதாகத் தெரிகிறது. முன்னுக்குப் பின் முரணான அறிவிப்புகளாலும், திடீர் அறிவிப்புகளாலும் நாட்டில் செயற்கை அரிசிப் பஞ்சத்தை ஏற்படுத்தியதற்கு இந்த அரசுதான் கார ணம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, முதலமைச்சர் பிறந்தநாள் வந்துவிட்டால் ஒவ்வொரு ஆண்டும் வியாபாரிகளும் விவசாயிகளும், அதிகாரிகளும் கலக்கம் அடைகிறார் கள். ஊராட்சி ஒன்றியத்திற்குச் சென்று ஒரு மூட்டை சிமெண்ட் எடுக்க வேண்டுமென்றால், ரூ. 12-க்கு மூட்டை ஒன்று எடுக்கவேண்டு மென்றால், ரூ. 5 முதலமைச்சர் நிதிக்குக் கொடுத்து விட்டுத்தான் வாங்க வேண்டுமென்ற சூழ்நிலை இருந்து வருகிறது. இம்மாதிரி கேட்டு, பட் டினிச் சூழ்நிலையை மேலும் வளர்த்து, இந்த நாட்டு மக்களை வாட்டி வதைக்கலாம் என்று எண்ணியிருக்கிறார்களா என்று அறியவிரும்பு கிறேன்.

கூட்டுறவு சங்கங்களைத் திராவிட முன்னேற்றக் கழகச் சங்கமாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இருக்கக் கூடாது ; திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் இருக்க வேண்டுமென்று நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, இம்மாதிரி நிர்வாகங்களை கட்சிப் பாகு பாடற்ற முறையில் நீங்கள் நடத்த வேண்டும்.

இனத் துவேஷத்தையும் இந்த அரசு கையாள்கிறது. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கையாள்கிறார்கள். அதன் காரணமாக, அண்டை மாநிலங்களோடு நமக்குள்ள நல்லுறவு கெட்டுப் போவதற்கு ஒரு ஏற்பாடாக இருக்கிறது. ஆகவே, இம்மாதிரி இனப் பூசல்களை ஏற்படுத்தியவர்களை நீங்கள் கைது செய்திருக்க வேண்டும்.

மேலும், வேலையில்லாத் திண்டாட்டம் நமது தமிழகத்தில் மிகவும் மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. படித்தவர்கள் எல்லாம் வீதியில் வேலை, வேலை என்று கேட்டு, ரூ. 5,000 கொடுத்தால் வேலை கிடைக்குமோ என்று அலையக் கூடிய அவல நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது.

காலேஜ் அட்மிஷனில் கூடப் பல ஊழல்கள் நடந்திருக்கின்றன. ரூ. 1,000, ரூ. 2,000 கொடுத்தால்தான் காலேஜ் அட்மிஷன் கிடைக்குமென்ற சூழ்நிலை இருக்கிறது. அதற்கு எல்லாம் இந்த அரசுதான் காரணம். உர விலை உயர்வா? மத்திய அரசு, அரிசி விலை உயர்வா? மத்திய அரசு என்று நீங்கள் மத்திய அரசுமேல் பழிபோட்டு நழுவப் பார்ப்பது அவ்வளவு சரியல்ல. ஆகவே, இதுபோன்ற விஷயங்களை நீங்கள் சரிவரப் பார்த்து, நல்லமுறையிலே ஆட்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீங்கள் அரிசிப் பிரச்னையை வைத்துத்தான் ஆட்சிக் கட்டிலில் ஏறி இருக்கிறீர்கள். இன்று நாட்டிலே இருக்கிற அரிசிப் பஞ்சத்தால் நீங்கள் அழிவது உறுதி. ஆகவே, உங்களது அரசு ராஜிநாமா செய்து மக்களுக்கு நல்ல ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. மணலி சி. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுது சபை முன்பாக விவாதிக்கப்பட்டு வரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது, எனது சில கருத்துக்களைச் சொல்வதற்கு நான் நிற்கிறேன். இந்தத் தீர்மானம், நம்பிக்கையில்லாத் தீர்மானமாக இல்லாமல், உணவு நெருக்கடியைப் பற்றி, சர்க்காருடைய கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமாக இருந்திருந்தால் இந்த வாதப் போக்கு மிக நன்றாக இருந்திருக்கும். ஒரு கட்டுக்கோப்புக்குள்ளாக, தமிழ்நாட்டைப் பாதித்திருக்கக்கூடிய ஒரு முக்கியமான பிரச்னை மீது இந்த விவாதம் சென்றிருக்க முடியும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதைப் பற்றி யாருக்கும் ஆட்சேபனை இல்லை. ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் அரிசிப் பிரச்னையில் அரசின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் வந்திருக்குமானால் உதவிகரமாக இருந்திருக்க முடியும். தமிழ் நாட்டினுடைய கொடிய பாதையினை மடக்க உதவிகரமாக இருந்திருக்கும் என்று தாழ்மையாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்திலே இரண்டுவிதமான கருத்து வந்ததை நான் கவனித்தேன். மந்திரி சபை பூராவின்மேல் நம்பிக்கையில்லையென்பது ஒரு கருத்து. நம்பிக்கையில்லா தீர்மான





மந்திரி சபையின்மீது அல்ல, கலைஞர் பின்னால் போய்விட்டால் போதும் என்ற ஒரு கருத்து வந்தது. எனக்கு ஒரு சந்தேகம் வந்திருக்கிறது. இப்பொழுது தி.மு. கழகமும், அண்ணா தி.மு. கழகமும், என்னுடைய அபிப்பிராயத்திலே அநேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். நடக்கிற பேச்சுக்களை கேட்கிற நேரத்திலே, அவர்கள் பேசுகிற தோரணையைப் பார்க்கிற நேரத்திலே, இருவரும் ஒன்றுபடக் கூடிய விதத்திலே நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் யாரும் கோபித்துக் கொள்ளக்கூடாது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய குடும்பப் பாசம் என்ற தத்துவம் நல்ல தத்துவம்தான். அந்தக் கட்சி நெடுங்காலமாக அதைக் காப்பாற்றிக் கொண்டு வந்தது. மறுபடியும் குடும்பப் பாசம் அவர்கள் முன்னால் வேலை செய்ய முடிகிறது என்பதை நான் பார்க்க முடிகிறது.

இன்றைக்கு இப்படிப்பட்ட விதத்திலே 4½ கோடி மக்களுடைய, அரிசி விலை ஏறியிருக்கிற பிரச்னையைப்பற்றி பேசுகிற நேரத்திலே, வாதத்தினுடைய தரம் திசை திருப்பிவிடப்பட்டதும். பல்வேறு தரப்புகளுக்குத் திருப்பிவிடப்படுவதும், நிச்சயமாக நாம் செய்யக்கூடிய விஷயம் அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அ.தி.மு.க. நண்பர்கள் புள்ளிவிவரத்தோடு பேசினார்கள். முடிவிற்கு வரும்போது, தனி விருப்பு வெறுப்புகளை அடிப்படையாகக் கொண்டு, பகை உணர்ச்சியை அடிப்படையாக வைத்துக்கொண்டு, தலைவருக்கும் அவர்களுக்கும் இருக்கக்கூடிய பகை உணர்ச்சியின் அடிப்படையிலே அவர்கள் ஒரு முடிவிற்கு வரக்கூடிய செயலைத்தான் நான் பார்த்தேன். அது விரும்பத்தக்கது அல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பகைமை போகவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கொள்கை அடிப்படையிலே, தத்துவார்த்த அடிப்படையிலே மோதுவது நாட்டுக்கு நல்லது, மக்களுக்கும் நல்லது. வீண் பகையை வளர்க்கிற விதத்திலே அவர்களுடைய போக்குகள், தொடர்புகள் திரும்புவது ஆளுங் கட்சிக்கும் நல்லதல்ல. அடுத்து ஆட்சிக்கு வரமுடியும் என்று இன்றைக்கு தினம் நம்பிக்கை வைத்திருக்கக்கூடிய இவர்களுக்கும் நல்லதல்ல என்ற அடிப்படையிலேதான் நான் இதனைப் பார்க்கிறேன்.

இன்றைக்கு விவாதப் போக்கிலே வருகின்ற விஷயங்கள் எல்லாம் அந்த விஷயத்தைப் புலனாக்கக்கூடிய விதத்திலே அமைந்திருக்கிறது என்ற முறையிலேதான் நான் அதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து அரிசிப் பிரச்சினைக்கு வருகிறேன். இன்றைக்கு இந்த அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்களை நான் கேட்க விரும்புகிறேன். இன்றைய தினம் நெருக்கடி இருக்கிறது. அதை யாரும் மறுக்கவில்லை. விலைவாசிகள் ஏறியிருக்கின்றன,

அதையும் யாரும் மறுக்கவில்லை, ஆனால் தேசிய ரீதியிலே ஒரு அம்சமாக உள்ள நெருக்கடியின் அம்சமாகத்தான் தமிழ் நாட்டிலேயும் இருக்கிறது என்பதை அவர்கள் மறுக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

நேற்றைய தினம் அம்மையார் அவர்கள் செங்கோட்டையிலே கொடியை ஏற்றிவைத்துப் பேசியிருக்கிறார்கள். இங்கே நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களும் பேசியிருக்கிறார்கள். நேற்றைய தினம் அந்த அம்மையார் அவர்கள் "let us di pel gloom" என்று பேசியதாக இன்பர்மேஷன் பீரோவிலிருந்து வந்திருக்கிறது. பெரிய கொடிய நெருக்கடி தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, தேசத்திலேயே ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டிலே மட்டுந்தான் நெருக்கடி இருக்கிறது என்று தனியாகப் பிரித்து வாதாடித் திருப்திப்பட்டுக்கொள்வது சரியல்ல.

இன்றைக்கு நாட்டிலே இருக்கக்கூடிய பல்வேறு அம்சங்களையும் கணக்கிலே எடுத்துக்கொண்டு பார்க்கவேண்டும். பண வீக்கம், ரூபாயின் மதிப்பு 24,25 காசு என்று வந்து விட்டது, படிக்கிறோம், அதனால் விலைவாசி ஏறத்தான் செய்யும், அது தவிர்க்க முடியாதது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 800 கோடி ரூபாய்க்கு நோட்டடிப்பு என்ற நிலைமை எல்லைக் கோடு 3,000 கோடி ரூபாய் என்ற அளவிற்குப் போய்விட்டது, அதனாலும் பணவீக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

அதுமட்டுமல்ல, திட்டக் குறிக்கோளிலே பெரிய வீழ்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது, தேசிய வருமானமும் வீழ்ச்சியடைந்திருக்கிறது. இவ்வளவையும் கணக்கிலே எடுத்துக்கொண்டு எல்லோரும் ஒற்றுமை என்ற அடிப்படையிலே ஒன்று சேர்ந்து பிரச்னைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமேயல்லாது, எப்படியாவது ஒருவரையொருவர் எதிர்த்துக்கொண்டு யார் யாரை எதிர்த்து ஓட்டை வாங்கலாம் என்று பொறுப்பான கட்சிகள் எல்லாம் செய்வது பொருத்தமல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவுத்துறை, இங்கே இருக்கின்ற துறை, செம்மையாகச் செயல்பட்டு இருக்கிறதா என்பதையும் இன்னும் சிறப்பாகச் செயல்பட்டிருக்கலாமா என்பதையும் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் சிந்தித்துப் பார்க்காமல் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் திருப்திகரமாக நடைபெற்றது போலப் பேசுவதும் சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லோரும் சேர்ந்து இன்றைக்கு ஏற்பட்ட பிரச்னைக்குத் தீர்வு காணுவதற்காக ஆய்ந்து பார்த்து இன்னும் எப்படி உஷாராக இருக்க வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் பேசி முடிவெடுக்க வேண்டும்.

உணவு அமைச்சர் மன்னை அவர்கள் எனது தம்பியைப் போன்றவர், 30, 35 வருட காலமாக எனக்கு அவரைத் தெரியும். அவர்மீது எனக்கு எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும் கிடையாது. இந்த இலாகா இன்னும் எப்படியெல்லாம் உஷாராக செயல்பட்டிருக்க வேண்டுமென்று எல்லாம் நாம் விவாதிக்க வேண்டும். செரியல்ஸ் சம்பந்தமாக இந்திய அரசாங்கம் பிடிக்கடிக்கிற கொள்கையின் காரணமாகத்தான் இந்த நெருக்கடி





ஏற்பட்டது என்று பேசப்பட்டது. அதுவும் இருக்கலாம், வியாபாரிகள் காரணமாக இருக்கலாம். மான்சூன் பெய்லியர்ஸ் இருக்கலாம், எல்லாவற்றையும் வைத்து அலசி ஆராய்ந்து பார்க்கும்போது சமுதாயத்தின் கழுத்தைப் பிடித்து நெறிக்கின்ற சமூக விரோத சக்திகள் இதில் புகுந்து கொண்டு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள், அதைத் தடுக்க இன்னும் சிறப்பாக இந்த உணவுத்துறை செயல்பட்டிருக்க வேண்டும், செயல்பட்டிருக்கலாம் என்பதை எடுத்துச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

தஞ்சை மாவட்டத்திலே நெல்லை வெளியே கொண்டுபோக அரசு உத்திரவிட்டது, அந்த முடிவிலே எனக்கும் பங்கு உண்டு, நான் மறுக்கவில்லை. நானும் சொன்னேன். கொள்ளிடக்கரையில் 40 ரூபாய், ஆனால் தஞ்சாவூரிலே 40 ரூபாய், புதுக்கோட்டையிலே 70 ரூபாய், அதே போன்று சிதம்பரத்திலே 70 ரூபாய், திருச்சியிலே 70 ரூபாய் என்று நிலைமை இருந்தது. இந்த நிலையில் அங்கேயுள்ள உற்பத்தியாளர்கள் கேட்பது நியாயமானதுதான். தமிழ்நாடு பூராவும் ஒரு மண்டலமாக இருக்க வேண்டுமே தவிர, தஞ்சையிலே ஒரு விலை, உற்பத்தி செய்கிற இடத்திலே ஒரு விலை, மற்ற இடங்களிலே வேறு விலை என்று—உணவு மண்டலத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்ற நாம்—நம்முடைய ராஜ்யத்தை ஒரே உணவு மண்டலமாகத்தான் வைத்திருக்கவேண்டுமே தவிர கொள்முதல், விற்பனை எல்லாவற்றிலும் ஒரே உணவு மண்டலமாக வைத்துச் செயல்பட்டால்தான் இப்படிப்பட்ட நெருக்கடி இருக்காது. அது இல்லாமல் மேலெழுந்தவாரியாக திருப்திப்படுத்துவதற்காகப் பேசி மார்க் வாங்கலாம் என்று நினைப்பது சரியல்ல.

நம்மிடம் உள்ள கணக்குக்கூட நமக்குத் தெரியாது. தஞ்சை மாவட்டத்திலே எவ்வளவு நெல் விளைந்தது, எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டது, எவ்வளவு விற்பனையானது, பாக்கி எவ்வளவு இருந்தது, சர்க்கார் தரப்பில் எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டது? இதற்காக அனுமதி பெற்றவர்கள் எவ்வளவு கொள்முதல் செய்தார்கள் என்ற கணக்குகளை எல்லாம் பார்த்து நம்மை நாமே தற்காத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருந்தால் இப்படிப்பட்ட பேச்சுக்கள் எல்லாம் வந்திருக்காது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

அப்படியே எல்லாம் கேரளத்திற்குப் போய்விட்டது என்று சொன்னார்கள், அதையெல்லாம் ஒத்துக்கொள்ள நான் தயாராக இல்லை. உள்நாட்டிலே நல்லமுறையிலே உஷார் நிலை இருக்க வேண்டும். நாகப்பட்டினத்திலே இருந்த எஸ்.பி. தேவாரம்தான் அங்கும் இருக்கிறார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அவர்கள் நல்லவர்கள், நாணயமானவர்கள், அவர்கள் அங்கே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள், ஆகவே எவ்வளவு நெல் பாக்கி இருக்கிறது! இன்னும் எவ்வளவு நெல் வேண்டும் என்பதையெல்லாம் பார்க்க வேண்டும்.

இனிமேல் என்ன செய்யப்போகிறோம், நடந்துவிட்டது, இனிமேல் என்ன செய்யப்போகிறோம் என்று பார்க்க வேண்டும். இந்த விலையை இப்படியே விட்டுவிடப் போகிறோமா? இப்படியே இந்த விலைகொடுத்து ஏழைகள்

வாங்கிச் சாப்பிடக்கூடிய துர்ப்பாக்கியமான நிலையில் நாட்டை விட்டுவிடப் போகிறோமா அல்லது இனிமேல் செய்யவேண்டியதைப்பற்றி யோசிக்க வேண்டுமா என்பதைப்பற்றி முடிவு செய்து இதிலே அரசியல் கட்சி என்ற வேறுபாடுகள் பார்க்காது, மாற்றுக் கட்சியாக இருந்தாலும்சரி, ஆளுங் கட்சியாக இருந்தாலும்சரி, எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்தப் பிரச்னையைப் பார்க்க வேண்டும்.

இந்த வருஷம் சாகுபடி பிந்திவிட்டது. மேட்டூரில் தண்ணீர் தாமதமாகத்தான் விடப்பட்டிருக்கிறது, ஆகவே ஆவணி, புரட்டாசி, ஐப்பசி ஆகிய மூன்று மாதங்களுக்கும் மக்களுக்கு குறைந்த விலையில், குறைந்த விலையில் என்றால் நான் அசாத்தியமான குறைந்த விலையில் என்று சொல்லவில்லை. கூடுமான வரையில் குறைந்த விலையில் ஏழை மக்கள் பாதிக்கப்படாத அளவில் குறைந்த விலையில் அவர்கள் வாங்கி சாப்பிடக்கூடிய அளவில் கொடுப்பதற்கு என்ன செய்யப் போகிறோம் என்பதைத்தான் இப்பொழுது பார்க்க வேண்டும்.

தமிழ்நாட்டினுடைய உற்பத்தி என்ன? 67 லட்சம் டன் என்று சொல்லுகிறார்கள். 53 லட்சம் டன் அரிசியும், 14 லட்சம் டன் மற்ற தானியங்களும் உற்பத்தியாகிறது என்று கணக்கு இருக்கிறது என்று நினைக்கிறேன். அடுத்து, அடுத்து வருகின்ற நிலையில் உஷார் தன்மை இருந்துகொண்டே இருக்கவேண்டும். உணவு இலாகாவில் உஷார் தன்மையில்லை, அதிகாரிகள் மேலெழுந்தவாரியாகப் பார்க்காமல் உட்பாகங்களைப் பார்ப்பதில்லை. இதனால் சர்க்கார் செய்யக்கூடிய நல்ல காரியங்களைக்கூட மக்கள் மறந்துவிட்டு ஆளுங்கட்சிக்கு எதிராக இருக்கக்கூடிய நிலைமை வந்து கொண்டிருக்கிறது. நெல் பூராவும் கேரளத்திற்குப் போனதாகச் சொல்வதை நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். சிறிதளவு போய் இருக்கலாம். இது பூராவும் மற்ற ஜில்லாக்களில்தான் இருக்கும். தஞ்சை ஜில்லாவிலோ மற்ற, மற்ற ஜில்லாக்களிலே உள்ள வியாபாரிகளைப்பற்றிக் கேட்டால் தெரியும், தஞ்சை மாவட்டத்திலே உள்ள வியாபாரிகள் யார், யார் என்ற விவரங்களைக் கேட்டால் நான் சொல்வேன், கடந்த பத்து வருஷங்களாக அவர்கள் கொள்ளையடித்து இருக்கிறார்கள். வியாபாரிகள் என்று சொல்லிக்கொண்டு அவர்களுக்காக தாமோதரன் என்பவர் தலைமை தாங்கிக்கொண்டு, ஏதோ அவர்கள் சொல்கிறபடிதான் அரசாங்கம் நடக்க வேண்டுமென்று பேசியிருக்கிறார் என்றுதான் நினைக்கிறேன். வியாபாரிகளில் நாணயஸ்தர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், நான் கேட்கிறேன்.

கஷ்டப்பட்டு உழைக்கின்றான் விவசாயி, அவனுக்குக் கிடைப்பது 40 ரூபாய். இன்றைக்கு வெளியிலே 100 ரூபாய். இடையிலே இருக்கின்ற வியாபாரி 60 ரூபாய் சம்பாதிக்கிறான் என்றால் இது கொடிய பாவம் அல்லவா ? கொடிய குற்றம் அல்லவா ? நாற்பது ரூபாய்க்கு விற்ற நெல் 100 ரூபாய்க்கு விற்கிறது, இதற்கு யார் காரணம் ? உணவுத்துறை பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. எங்கெங்கே வியாபாரிகள் இருக்கிறார்கள். சென்ற பத்து வருஷத்திலே கோடிஸ்வரனானவர்கள் பல லட்சக் கணக்கான ரூபாய்கள் சம்பாதித்தவர்கள் எல்லோரும் இருக்கிறார்கள், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல [illegible]



ஒரு வேலையும் வேண்டாம், இந்த வருஷம் 100 மூட்டைகளை வாங்கி பூட்டிவைத்தால் போதும், சில மாதம் கழித்து வெளியே விற்றுவிடலாம் நல்ல லாபத்திற்கு. இது சோதாதனமான வியாபாரம், நாணயமான வியாபாரம் அல்ல, இது வியாபாரமே அல்ல என்றுகூடச் சொல்வேன். உணவுப் பொருட்களை வைத்து கொள்ளை லாபம் அடிக்கின்றவர்களைத் தடை செய்யுங்கள். உங்களுக்குத் துணையாக நாங்கள் இருக்கிறோம். அதனால் உங்கள் ஆட்சி பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை, வெளியே போய் இருக்கிற நெல் எவ்வளவு என்று நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். நான் 40 ரூபாய்க்கு 10, 12, மூட்டைகள் விற்றிருக்கிறேன். எனக்கு 5 ஏக்கரா இருக்கிறது. சாப்பாட்டிற்குப் போக 15 மூட்டைகளை விற்கலாம். நான் 38 ரூபாய், 40 ரூபாய் என்று விற்றேன். இன்றைக்கு 100 ரூபாய் அளவிற்கு விலையேறியிருக்கிறது. இந்த 15 மூட்டைகளுக்கு சுமார் 600 ரூபாய் எனக்குப் போய் விட்டது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், துணிவாக நடவடிக்கை எடுக்க வேண்டும், வியாபாரிகளின் தாளாடிற்கு நீங்கள் தூங்க ஆரம்பித்தீர்களேயானால் அவர்கள் இன்னும் அதிக அளவில் தோன்றிவிடுவார்கள். சர்க்காரைக் கவிழ்க்கின்ற ஐந்தாம் படையாக வர்கள் இருப்பார்கள். அவர்கள் செய்த அட்டூழியங்கள்தான் இன்றைக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டிய அளவில் கொண்டு வந்து விட்டிருக்கிறது. எனவே இந்தச் சட்டசபைக் கூட்டம் முடிவதற்குள்ளாக சர்வக்கட்சிக் கூட்டத்தைக் கூட்டுங்கள், எல்லாத் தலைவர்களையும் கூப்பிட்டு இன்றைக்குள்ள நிலைமைகளை சாங்கோபாங்கமாக மனம் விட்டு விவாதியுங்கள். என்ன செய்ய வேண்டுமென்று விவாதித்து முடிவுகளைச் செய்ய நாங்கள் நிச்சயமாக ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்.

அடுத்து, ஒவ்வொரு ஒன்றிய மட்டத்திலேயும் ஒன்றியத் தலைவர்கள், பிரதேச எம்.எல்.ஏக்கள், சிவில் சப்ளை ஆபீசர்களைக் கொண்ட—சர்வ கட்சி கமிட்டி என்று சொல்ல மாட்டேன்—காரிய சாத்தியமான ஒரு கமிட்டியை போட்டு நல்ல முடிவைக் காணலாம். வருகின்ற 4 மாதங்களில் விலையேறாமல், மக்கள் கண்ணீர் சிந்தாமல் இருப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டும்.

விவசாயத் தொழிலாளர்களைப் பற்றிச் சொல்கிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்கு 6 ரூபாய் கொடுக்கிறோம். ஆனால் அரிசியின் விலை ரூ. 4 என்றால் தஞ்சை ஜில்லாவிலே அவர்களுடைய வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படும். அதனால், வேலை செய்யும் சக்தி குறையும். இது சாகுபடியைப் பாதிக்கும். இப்படிப்பட்ட பல்வேறு விஷயங்களைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, வரப்போகும் நான்கு மாதங்களில் எப்படியாவது இந்த நெருக்கடியைச் சமாளிக்க, அம்மையார் அவர்கள் கூறியதைப் போல பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஈடுபட்டால் நல்லமுறையில் செய்ய முடியுமென்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 ஆகஸ்ட் 16

கள்ள மார்க்கெட், பதுக்கி வைப்பவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், நேற்றுகூட முதலமைச்சர் அவர்கள் எலியைப் பிடிப்பதைப் போல் பிடிக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். நான் அவர்களது சாதுர்யத்தை மெச்சுகிறேன். அதோடு அவரை எச்சரிக்க விரும்புகிறேன் அவர்கள் எலிகள் அல்ல, கூட்டுக்குள் அடங்காத பெருச்சாளிகள் அவர்கள், ரொம்பவும் வளர்ந்து பெருத்திருப்பவர்கள். கூட்டையும் தூக்கிக் கொண்டு போவார்கள். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பொறுப்பில்லாமல் மேலெழுந்தவாரியாகப் பார்க்காமல், உணவுத்துறை உஷார் தன்மையில் குறைந்திருக்கிறது என்பதை கவனத்தில் எடுத்துக் கொண்டு அதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டுகோளை விடுத்து முடித்துக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, when I begin to speak on the no-confidence motion moved by the hon. Member Thiru Marimuthu, I frankly admit that this motion will fail due to the brute majority of the ruling party. However, I earnestly hope that th s Government will seriously consider our suggestions.

As already stated by our Friend, the no-confidence motion has been brought forward mainly due to the unprecedented rise in price of rice. There are so many reasons for this rise in price. But at the same time there is no scarcity. According to the statement given by the Government, we are having surplus stocks. But at the same time we are not in a position to distribute the foodgrains properly to the people. There is something wrong in the distribution. That is why our Government has now taken the food trade and that is the only reason why the Government has failed. I can give examples.

Of course, the Government and the Minister may have good intention of supplying foodgrains to the people. But the man appointed for the job is not interested in the people. For example, in certain co-operative societies there is black-marketing. There will be a long queue before the society. There is a technique which these people adopt. The Hon. Minister may not be aware of it. They say they will issue rice from 10 a.m. and it will go on from 10 a.m. to 1 p.m. They will issue for about 10 or 15 cards. Then they will close and say it is lunch time. Then they open at 3 p.m. and issue rice from 3 p.m. to 5 p.m. This time again it will be 15 cards or 25 cards and all the rest of the



1974 ஆகஸ்ட் 16] [Thiru B. Venkataswamy]

people in the queue will be asked to come ' to-morrow '. By this the Government is becoming unpopular. The Hon. Minister is not aware of all this. People get disgusted and they decide ' let us purchase in open market '. Therefore, I warn this Government. I warn this Government for, I know the good intentions of the Government. But their intention is not properly implemented. This is because of the malpractices of the Government officers and because of them all this scarcity has come.

At the same time, there are also hoarders. Every licence holder should give a declaration saying ' I am having so much stock '. If it is done honestly, there will not be any difficulty in finding out the stock. But the black-marketeers are holding a lot of stock. What is the officer doing? These officers will simply go and harass the poor ryot; they will not touch the big people. That is what is happening in the entire State. Because of this, the Government is getting unpopular. Because of the co-operative societies and mal-distribution done by them, the Government is unpopular.

Even in the matter of distribution of sugar there is trouble.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### திருப்பூர் பெண்கள் கல்லூரிக் கட்டடம்.

*117 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் எல். ஆர். ஜி. நாயுடு அரசினர் மகளிர் கல்லூரியில் 1973-ம் ஆண்டில் வகுப்பு அறைகள் போதிய அளவு இல்லாத காரணத்தால் புது வகுப்புகள் (பாடத் திட்டம்) துவக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) எல். ஆர். ஜி. நாயுடு அரசினர் மகளிர் கல்லூரியில் 1973 ஆம் ஆண்டில் புதுமுக வகுப்பில் கணக்கு கற்றுத்தரும் பிரிவு ஒன்றை தொடங்க அனுமதி கோரும் செயற்குறிப்பொன்று கல்லூரி முதல்வரால் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டது. கல்லூரிக் கமிட்டியும் மேற்கண்ட பாடம் நடத்துவதற்கு தேவையான வகுப்பறைகளைக் கட்டித் தந்து இடவசதி செய்து தருவதாக உறுதி அளித்தது. ஆனால் பல்கலைக்கழகம் இதற்கு சம்மதிக்கவில்லை. ஆகவே மேற்கண்ட கல்லூரியில் 1973 ஆம் ஆண்டு புதிய பிரிவுகள் துவக்கப்படவில்லை.

[1974 ஆகஸ்ட் 17

**திரு. ஈ. துரைசாமி:** தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலேயே பெண்களுக்காக இருக்கிற அரசினர் கல்லூரி என்பது திருப்பூரில் இருக்கிற அரசினர் மகளிர் கல்லூரிதான். வேறு எந்த அரசாங்கக் கல்லூரியும் கிடையாது. தனியார் துறைக் கல்லூரி இருக்கிறது. இந் நிலையில், திருப்பூரில் உள்ள இக் கல்லூரியில் புதிய பாடங்களைத் துவங்கவும், கட்டடத்தை விரிவுபடுத்த மேலும் நிதி ஒதுக்கி விரைவாகக் கட்டடம் கட்டும் பணியினை அரசே மேற்கொள்ளவும் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கூரையினால் வேயப்பட்ட அறைகளில் வகுப்புகளை நடத்துவதற்குப் பல்கலைக்கழகம் சம்மதிக்கவில்லை. கல்லூரி முதல்வரவர்களும், கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களும் பல்கலைக்கழகத்தை அணுகியும், இதற்குப் பல்கலைக்கழகம் அனுமதி அளிக்க மறுத்துவிட்டது. ஆனால், 1974-75 ஆம் ஆண்டில் பி.யு.சி. வகுப்பில், கணக்கு, வணிகம் ஆகிய பிரிவுகளைத் துவக்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

### அய்யம்பாளையம் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம்.

*118 வி.ஆ.—**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் வட்டம், ஆத்தூர் தொகுதி, அய்யம்பாளையத்திலுள்ள அரசு கழக உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) இப்பள்ளிக் கட்டிடக் குழுத் தலைவர் தன் சொந்தச் செலவில் ஒரு கட்டடம் கட்டி அரை குறையாக நிறுத்திவிட்டார். பள்ளிக்கு தனது தகப்பனார் பெயரிடுவதாக இருந்தால் கட்டடத்தை கட்டி முடித்துக் கொடுப்பதாகத் தெரிவித்தார். அரசு ஆணைகளின்படி விதிக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றும்படி அவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.



1974 ஆகஸ்ட் 17]

**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்:** தலைவர் அவர்களே, அய்யம்பாளையத்திலுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளி மிக மோசமான நிலையில் இருக்கிறது. தளமே போடப்படாத நிலையில் இருக்கிறது. தனியாரை எதிர்பார்ப்பதைவிட அரசாங்கமே எடுத்து வேலை செய்தால் நலம் என்று நான் கருதுகிறேன். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஒரு இலட்ச ரூபாய்க்கும் மேலாக மதிப்பீடு செய்து, கட்டடம் கட்டுவதற்கு அரசுக்கு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைக் குறித்து அரசு ஆலோசனை செய்ய முற்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அங்குள்ள கட்டடக் குழுவினர் எவ்வளவு தொகை தருகிறார்கள் என்பதைப் பொறுத்தும், மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி எவ்வளவு ஒதுக்குகிறார் என்பதைப் பொறுத்தும், தனிக் கேள்வி போட்டால் அதை அறிந்து விடை அளிக்க முடியும். கட்டிய கட்டடத்தை முடிக்காமல் பாதியிலேயே நிறுத்தி விட்டார்கள். 75,000 ரூபாய் மதிப்புக் கொண்ட கட்டடங்களையோ அல்லது வேறு சொத்துக்களையோ பள்ளிக்கூடத்தில் அளித்தால், அவர்களுடைய பெயரை பள்ளிக்கூடத்திற்கு வைக்கலாம் என்று விதி இருக்கிறது. ஆனால், அதற்குக் குறைவான மதிப்புள்ள கட்டடம் கட்டித் தந்தால், அவர்களுடைய பெயரைப் பள்ளிக்கூடத்திற்கு வைக்க முடியாது. இதைத்தான் கட்டட உரிமையாளருக்குத் தெரிவித்திருக்கிறோம். அவர்கள் எதிர்ப்புச் சொல்லாமல் இதற்கு இசைந்தால் அதன் பிறகு நாம் நடவடிக்கை எடுக்கலாம். அரசாங்கமே கட்டடம் கட்டுகிற முயற்சி மாவட்டத்தில் இதற்காக ஒதுக்குகிற நிதியைப் பொறுத்தது.

**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்:** அந்தக் கட்டடம் கட்டித் தருவதாகச் சொன்ன உரிமையாளர் தற்சமயம் இல்லை. அவர் இறந்துவிட்டார். ஆகையால், அரசாங்கமே அதற்கு ஆவன செய்ய முயற்சிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் அந்த மாவட்டத்தின் நிலைமை அறிந்து சொல்லலாம்.

சொன்னால் தரக் குறைபாடுள்ளது என்ற கருத்து ஏற்படுகிறது. தரக் குறைவான மருந்துகளையோ, பயன் குறைவாகவுள்ள மருந்துகளையோ அரசு மருத்துவ மனைகளில் வாங்குவதில்லை. ஆனால், டெண்டர் சிஸ்டம் இருப்பதால், அவரவர்களின் விலையைக் குறைக்கிறபோது, தரமுள்ள மருந்துகளை விலை குறைவாக எது இருக்கிறதோ அதை வாங்கிக்கொள்வது என்பது தான் சட்டப்படி முறையான காரியமாகும். ஏதாவது குறிப்பிட்ட மருந்து தரக் குறைவாக இருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் கருதினால் அதுகுறித்த புகாரை எழுதியனுப்பினால், உடனே அதைப்பற்றிப் பரிசீலித்து ஆவன செய்ய இயலும்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனைகளில் வாங்கப்படும் மருந்துகள் தரமுள்ளவையாக இருக்கின்றனவா என்பதை நிர்ணயிப்பது யார்? அதற்கென்று குழுக்கள் இருக்கின்றனவா? அல்லது, மருத்துவ அதிகாரிகளே நிர்ணயித்துக் கொள்ளுகிறார்களா? பொதுவாக, வெளியிலே கடைகளில் விற்கப்படுகிற மருந்துகளில் கலப்படம் செய்யப்பட்ட மருந்துகள் அதிகமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. அண்மையில் கூட இப்படிப்பட்ட மோசடிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அதைத் தீவிரமாகக் கண்டுபிடித்து, மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கான முறையில் அரசு முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மருந்துகளில் ஏதாவது தரக் குறைவு இருக்குமானால், உடனே அந்தக் குறையைக் கண்டுபிடிப்பதற்காகத் தனியாக டெபுடி ட்ரக்ஸ் கண்ட்ரோலர் என்ற அதிகாரியும் அவருக்குக் கீழ் ஏறத்தாழ 59 ட்ரக் இன்ஸ்பெக்டர்களும் இருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு இடங்களில் அவ்வப்போது பரிசோதனை செய்கிறார்கள். மருத்துவ மனைகளில் பயன்படுத்துகிற மருந்துகள் தரக் குறைவாகவோ அல்லது பயன் குறைவாகவோ உள்ளவை என்று தெரிந்தால் உடனே அந்த மருந்துகள் பரிசோதிக்கப்படுகின்றன. கடைகளில் வாங்குகிற மருந்துகளைப் பொறுத்த வரையில், எந்தக் கம்பெனியாரின் மருந்துகள் தரமுள்ளவையாக இருக்கின்றனவோ அந்தக் கம்பெனியிலிருந்து தரமுள்ள மருந்துகளைத்தான் எந்த மருத்துவ அதிகாரியும் வாங்க முடியும். ஆகவே, பெரும்பாலும் இவைகளில் தரக் குறைவு ஏற்பட இடம் இல்லை. தவறுகள் ஏற்படுகிற இடத்தில்





உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்ட செய்திகள்தான் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. ஏறத்தாழ ஆயிரம் வகை மருந்துகள் வாங்கும்போது, ஏதாவது ஒன்றிரண்டு மருந்துகள் தரம் குறைந்தது என்று காணப்பட்டால் உடனே அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, பொது மருத்துவ மனைகளுக்கு வாங்கப்படுகின்ற மருந்துகள், குறிப்பாக வைட்டமின் மருந்துகள் தரம் குறைந்ததாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா? அது எப்படி வாங்கப் படுகிறது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** வைட்டமின் மருந்துகளையும் ரெஜிஸ்டர்டு கம்பெனிகள் தான் தயாரிக்கின்றன. அன்ரெஜிஸ்டர்டு கம்பெனிகள் தயாரிக்கின்ற மருந்துகளையோ அல்லது டிரக் கன்ட்ரோலரால் பரிசோதனை செய்யப்படாத மருந்துகளையோ வாங்குவதில்லை. வாங்கப்படுகிற மருந்துகளோ அல்லது வைட்டமின் மருந்துகளோ தரக் குறைவாக இருக்கிறது என்று பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி வைட்டமின் மருந்துகள் தரக் குறைவாக இருக்கின்றன என்று இதுவரையில் புகார் எதுவும் வரவில்லை.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** தலைவரவர்களே, இப்படி தரக் குறைவான மருந்துகள் வாங்கப்படாமல் இருப்பதற்காக அரசாங்கத்திற்குச் சொந்தமான மருந்து தயாரிக்கும் நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டுமென்று சென்ற ஆண்டு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி அரசுக்குச் சொந்தமான மருந்து தயாரிக்கும் நிறுவனங்களை ஏற்படுத்தினால் நிறையப் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் வசதி ஏற்படும். ஆகவே, அந்த யோசனை இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, ஆஸ்பிட்டல் ஃபார்மஸி என்ற பெயரில் சென்னையிலும் திருச்சியிலும் அல்லது வேறு ஏதாவது இரண்டு இடங்களில் அரசாங்க மருத்துவ மனைகளுக்கு அன்றாடம் தேவைப்படும் சில மருந்துகளை தயாரிக்கும் முயற்சி இருந்தது. அது சில பரிசோதனைக் கட்டங்களில் தடைப்பட்டிருக்கிறது. அந்தத் தடைகள் நீங்கிய பின் நிறுவப்படும்.

மற்றபடி தரமான பார்மஸ்யூடிக்கல் இன்ஸ்டிடியூட் என்ற தனியார் நிறுவனத்துடன் தமிழ் நாடு அரசு கூட்டுச் சேர்ந்து, அதன் பெயரை தமிழ் நாடு தரமான பார்மஸ்யூடிக்கல் இன்ஸ்டிடியூட் என்று மாற்றி, அதில் தரமான மருந்துகளை உற்பத்தி செய்யவும், அரசுக்குத் தேவைப்படுகிற பெரும்பாலான மருந்துகளை அங்கிருந்து பெற்றுக்கொள்ளவும் ஒரு ஏற்பாடு நடைபெற்றிருக்கிறது. அங்கு தயாரிக்கப்படும் மருந்துகளை கண்காணிக்கவும், தரத்தை பரிசோதிக்கவும் ஒரு தனிக் குழு இருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, இப்போது மருத்துவ மனைகளுக்குத் தேவைப்படுகிற மருந்துகளை வாங்குவதற்கு கொட்டேஷன் பெறப்பட்டு, குறைந்த கொட்டேஷன் கொடுப்பவர்களிடமிருந்து வாங்கப்படுகிறது. அப்படியானால் அவர்கள் தரம் குறைந்த மருந்தைத்தானே குறைந்த கொட்டேஷனுக்குக் கொடுப்பார்கள். அதை நீக்கி விட்டு டாக்டர்கள் குறிப்பிடும் தரமான மருந்துகளை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியை மாற்றிக்கொள்ள வேண்டும். தரமான மருந்துகளுக்கு மட்டும் தான் கொட்டேஷன் வாங்கப்படுகிறது. முதலில் மருந்துகளின் தன்மைகளை சோதனை செய்து பார்த்து விட்டு, அதன் பிறகுதான் கொட்டேஷன் வாங்கப்படுகிறது. தயாரிக்கும் முறைகளிலே, சிக்கனமான முறைகளைத் தயாரிப்பில் கடைப் பிடிப்பதால் கம்பெனிகளின் விலைகளில் சிறிது வித்தியாசம் இருக்கிறது. ஒரு கம்பெனியில் தயாரிக்கும் மருந்துக்கும் இன்னொரு கம்பெனியில் தயாரிக்கும் அதே மருந்துக்கும் 20 காசு, 30 காசு வித்தியாசப்படும். ஆகவே, கொட்டேஷன் பெறப்பட்டு, தரம் குறையாத ஆனால் விலை குறைவாக இருக்கக் கூடிய மருந்துகளைத் தயாரிக்கும் கம்பெனிகளிலிருந்து வாங்குவதற்கு அதிகாரிகள் ஏற்பாடு செய்கிறார்கள்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவரவர்களே, பென்சிலின் போன்ற ஊசி மருந்துகள் போட்டவுடன் பலருக்கு 'ரீ ஆக்ஷன்' ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அந்த





பென்சிலின் மருந்தைப் பயன்படுத்தக் கூடாது என்று தடை விதிக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அது உலகம் முழுவதுக்கும் உள்ள பிரச்சனை. பென்சிலின் மருந்து தான் தேவை என்று நிலை ஏற்பட்டால்தான் அந்த மருந்து கொடுக்க வேண்டும். ஆனால் அதுவரையில் பென்சிலின் மருந்து கொடுக்கப்படாத நோயாளியாக இருந்தால் அவருக்கு முதலில் டெஸ்டிங் டோஸ் கொடுக்க வேண்டும். டாக்டர்கள் யாராவது பொறுப்பு இல்லாமல் நடந்து கொண்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அதனால் பென்சிலின் மருந்தையே பயன்படுத்தக் கூடாது என்று தடை விதிக்க முடியாது. அதுமட்டுமல்ல. பென்சிலின் மருந்து உபயோகிப்பதினால்தான் இன்ஸ்டன்டேனியஸ் டெத் ஏற்படுகிறது என்பதல்ல. சிலருக்கு 'பி காம்ப்ளக்ஸ்' மருந்து கொடுத்தால் கூட இன்ஸ்டன்டேனியஸ் டெத் ஏற்படுகிறது. ஆகவே, தடை செய்வது என்பது இயலாது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, சிறிய அளவில் இருக்கிற சில பார்மஸூடிக்கல் கம்பெனிகளில் போதுமான சோதனைச் சாலைகள் இல்லாததால் அங்கே தயாரிக்கப்படும் மருந்துகளின் தரம் குறைந்துவிடுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் வாங்கும்போது சோதனைச் சாலைகள் இருக்கின்ற பார்மஸ்டிடிக்கல் கம்பெனிகளிடமிருந்து தான் வாங்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சோதனை சாலைகள் இல்லாத மருந்து தயாரிக்கும் நிறுவனங்களிடமிருந்து அரசாங்கம் மருந்துகளை வாங்குவதில்லை. அப்படி ஒன்றிரண்டு இடங்கள் தான் இருக்கின்றன. எப்படி இருந்தாலும் தயாரிக்கப்படும் மருந்துகளைப் பரிசோதனை செய்யும் ஒரு முறை இருக்கிறது. அப்படிப் பரிசோதனை செய்த பின்னால்தான் தரமான மருந்து என்று பரிசோதனையில் தெரிந்தால்தான் அந்த மருந்து அதிகாரிகளால் வாங்கப்படுகிறது. குறை இருந்தால் வாங்கப் படுவதில்லை. அதையெல்லாம் அதற்கென்று நியமிக்கப்பட்ட குழு பார்த்துக்கொள்கிறது.

[1974 ஆகஸ்ட் 17

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவரவர்களே, பொதுவாக தனியார் மருத்துவ மனைகளில் சென்று தங்களுடைய நோயை போக்கிக் கொள்ள முடியாதவர்கள்தான் அரசாங்க மருத்துவ மனைகளுக்கு வருகிறார்கள். அங்கே கொடுக்கப்படுகிற மருந்துகள் சக்தி வாய்ந்ததாக இல்லை. சக்தி குறைந்ததாக இருக்கிறது. வசதியற்றவர்கள்தான் அரசாங்க மருத்துவ மனைகளுக்கு வருவதால், அவர்களுக்குச் சக்தி வாய்ந்த மருந்துகள் அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நோய்க்கு மருந்து கொடுப்பதில் இரண்டு தத்துவங்கள் இருக்கின்றன. அதிக சக்தி வாய்ந்த மருந்தைக் கொடுப்பது நோயாளிக்கு நல்லதல்ல. அதிக சக்தி வாய்ந்த மருந்தைக் கொடுத்தால் விரைவில் குணம் ஆவதாக இருந்தாலும் நாளாவட்டத்தில் அந்த நோயாளியின் உடலில் ரெசிஸ்டென்ஸ் பவர் குறைந்துவிடுகிறது. அதனால் மேலும் பல தொல்லைகள் ஏற்படும். தற்போது அமெரிக்கா போன்ற பெரிய நாடுகளில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நோயாளியின் உடலமைப்புக்கு ஏற்ப, சீரான அளவிலுள்ள மருந்தைக் கொடுப்பது தான் நல்லது. தனிப்பட்ட சில டாக்டர்கள் பிழைப்புக்காக சக்தி வாய்ந்த மருந்துகளைப் பயன்படுத்தலாம். அவர்கள் அரசாங்க மருத்துவ மனைகளில் தரம் குறைந்த மருந்துகளைக் கொடுக்கிறார்கள் என்று வேண்டுமானால் குறை சொல்லலாம். அது அவர்களுடைய குறையே அல்லாமல் அரசாங்க மருத்துவ மனைகளின் குறை அல்ல.

*Male nurses in Kilpauk Mental Hospital*

*123 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) the number of the male nurses in the Kilpauk Government Mental Hospital, Madras as on this date; and

(b) whether there is any proposal to increase the number?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) தற்போது 7 ஆண் செவிலியர்கள் உள்ளனர். அவர்களில் நான்கு பேர் உளநோயியல் செவிலியர் (Psychiatric Nursing) பயிற்சி பெற்றவர்கள் ஆவர்.

(இ) இல்லை.



1974 ஆகஸ்ட் 17]

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, சாதாரண நோயாளிக்கும் மனநோயாளிக்கும் வேறுபாடு இருக்கிறது. ஆகவே, மனநோய் மருத்துவ மனைகளில் பணியாற்றும் செவிலியர்களுக்குத் தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அவர்கள் அனுபவத்தில் பயிற்சி பெற்றுக் கொள்கிறார்கள். சிலருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தேவைக்கேற்ப அது கவனிக்கப்படும்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, பொதுவாகவே நோயாளிகளுக்கேற்ப நர்சுகளின் விகிதாச்சாரம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதா ? சில மருத்துவ மனைகளில் 40 நோயாளிகளுக்கு ஒரு நர்ஸ் என்று போடுகிறார்கள். அதனால் நோயாளிகள் சரியான முறையில் கவனிக்கப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே, நோயாளிகளின் எண்ணிக்கையைக் குறைத்து, நர்சுகளின் எண்ணிக்கையை அதிகமாக்கும் நோக்கம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, நோயாளிகளுக்கு ஏற்ற வகையில் போதிய நர்சுகள் என்ற விகிதாச்சாரம் அந்தந்த மருத்துவ மனையில் இருக்கின்ற படுக்கைகளின் எண்ணிக்கையை வைத்து நிர்ணயிக்கப்படுகிறது. இருபத்துநான்கு படுக்கைகளுக்கு 3 நர்ஸ்கள் என்று நியமிக்கப்படுகிறார்கள். அப்படிப் பார்க்கும்போது 8 படுக்கைகளுக்கு ஒரு நர்ஸ் என்று வரும். ஆனால் ரொட்டேஷனில் வருகிறபோது ஒரு நேரத்தில் ஒரு நர்ஸ்தான் இருப்பார். இடையிலே சில தவிர்க்க முடியாத காரணங்களினால் மனிதாபிமானத்தோடு கூடுதலாக ஒரு சில நோயாளிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரங்களில் நோயாளியைச் சேர்த்துக் கொள்ள முடியாது என்று சொல்ல முடியாது.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** தலைவரவர்களே, மனநோய் மருத்துவ மனைகளில் மற்ற மருத்துவ மனைகளில் உள்ளதைப் போல ஆண், பெண் செவிலியர்கள் விகிதம் பின்பற்றப்படுகிறதா ? அல்லது மன நோய் மருத்துவ மனைகளில் ஆண் செவிலியர்கள் அதிகமாக நியமிக்கப்படுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1974 ஆகஸ்ட் 17

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்தப் புள்ளிவிபரம் இல்லை. இங்கே, மனநோய் மருத்துவ மனையில் எத்தனை ஆண் செவிலியர்கள் என்பதுதான் கேள்வி. அதற்கு மட்டும்தான் விடை இருக்கிறது.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, பெரும்பாலும் நோயாளிகள் பெண் செவிலியர்களைத்தான் விரும்புகிறார்கள் என்பதை இந்த அரசு அறியுமா? அப்படி நோயாளிகள் விரும்புவதால் அனைவரையும் பெண் செவிலியர்களாக நியமிக்கின்ற ஒரு திட்டத்தை அரசு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, செவிலியர்கள் பெண்களாக இருப்பது இயல்பு. ஆனால் சில நோயாளிகள் பெண் செவிலியர்களையே விரும்புவதால், அங்கே ஆண் செவிலியர்களை நியமிக்க வேண்டியிருக்கிறது.

## ஜி.என்.டி. சாலையில் புறச்சாலை வேலைகள்

*124 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** } மாண்புமிகு
**திரு. மா. வெ. நாராயணசாமி :**
பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜி.என்.டி. தேசிய நெடுஞ்சாலையில் ரெட்ஹில்ஸ், கும்முடிப் பூண்டி, வியாசர்பாடி மற்றும் ஆரம்பாக்கம் ஆகிய ஊர்களின் அருகே புறச்சாலைகள் அமைக்கப்படுவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ரெட்ஹில்ஸ் புறச் சாலை வேலைகளுக்குத் தேவையான நிலங்களை ஆர்ஜிதம் செய்து நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கவில்லை யாதலால், புறச்சாலை வேலை தாமதப்படுகிறது. கும்முடிப்பூண்டி புறச்சாலை வேலை நடந்து வருகிறது. வியாசர்பாடியிலும் ஆரம்பாக்கத்திலும் புறச்சாலை அமைப்பதற்கான திட்டம் எதுவும் இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, சென்னையை ஒட்டியிருக்கிற வியாசர்பாடி பகுதியில் இந்தத் தேசிய நெடுஞ்சாலையில் நெருக்கடி அதிகமாக இருப்பதால், அங்கு புறச்சாலை அமைக்கிற செயற்குறிப்பு இல்லை என்றாலும், அதை



1974 ஆகஸ்ட் 17]

மீண்டும் பரிசீலனை செய்து உருவாக்கிக் கொடுப்பதோடு, மற்ற மூன்று இடங்களிலும் புறச்சாலையை விரைவுபடுத்த அரசு ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இப்போது திட்டம் இல்லையென்றுதான் சொன்னேன். எப்போதும் கிடையாது என்று பொருள் அல்ல. நிதி வசதிக்கேற்ப பின்பு யோசிக்கலாம்.

## பாலவாக்கம்-காடிபுத்தூர் சாலை

*125 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், பாலவாக்கம்-காடிபுத்தூர் பேருந்துகள் செல்லும் சாலையைப் பெருவழித் துறையில் ஏற்று மேம்படுத்தும் செயற்குறிப்பு மேலும் காலதாமதம் ஆவதின் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இச் சாலையை மேம்பாடு செய்வதற்கும் பராமரிப்பதற்கும் நெடுஞ்சாலைத் துறை 1973-74 ஆம் ஆண்டு மேற்கொள்ளுமாறு அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** நெடுஞ்சாலைத் துறையில் செல்கிற வண்டிகள் ரோடு கலனாக இருப்பதால் நின்றுவிடுகின்றன என்று சொல்லப்படுகிறது. ஆகவே இந்த ஆண்டு இதை மேம்படுத்தித் தர ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நிதிவசதிக்கேற்ப எடுத்துக் கொள்ள முடியுமானால் எடுத்துக் கொள்ளப்படும்.

## கொள்ளடம்-மாதர்பாக்கம் சாலை

*126 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டித் துணை வட்டத்தில் உள்ள பேருந்துகள் செல்லும் கொள்ளடம்-மாதர்பாக்கம் சாலையை பெருவழித்துறையில் ஏற்றுப் பராமரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், இது எப்போது நிறைவேறும்?

[1974 ஆகஸ்ட் 17

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (ஆ) இச்சாலையை பராமரிப்பதற்காக 1973-74-ம் ஆண்டு நெடுஞ்சாலைத்துறை மேற்கொள்ளுமாறு அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : இந்தச் சாலையில் ஓடுகிற பேருந்துகள் சாலை கலைந்திருக்கிற காரணத்தினால் நின்றுவிடுகின்றன. ஆகவே மழைக் காலத்திற்குள் இந்தச் சாலையை செப்பம்படுத்தித்தர நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச்சாலை நிதிநிலையைப் பொறுத்திருக்கிறது. அது சரியானால் எடுத்துக் கொள்ளப்படும்.

## *New Pier at Rameswaram*

* 127 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to construct a permanent pier at Rameswaram for easy movement of passengers from Sri Lanka?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. ஆ. தேவேந்திரன் : இராமேசுவரத்திற்குப் பக்கத்திலுள்ள கச்சத் தீவும் தற்போது பறிபோய்விட்டது. தமிழ் நாட்டின் பாதுகாப்பை எண்ணி, இந்தத் துறைமுகப் பகுதியை விரிவாக்கவும், பாதுகாப்புச் செய்யவும் தமிழக அரசின் சார்பில் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது கச்சத் தீவுக்காக ஏற்படுத்தப்படுவது அல்ல. இலங்கையில் இருந்து வருகிற பயணிகள் பத்திரமாக இறங்கி-ஏற அமைக்கப்பட்ட ரேவுத் துறையாகும். ஏற்கனவே தனுஷ்கோடியில் இருந்தது புயலால் பாதிக்கப்பட்டுவிட்டது. ஆகவே இராமேசுவரத்திற்குப் பக்கத்தில் அமைக்கலாமா என்று யோசித்து—இப்போது மரத்தோணிக்குக் கட்டியிருக்கிறோம். இது தற்காலிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இலங்கையில் இருந்து வரும் பயணிகளை ஏற்றிவர தற்போது எந்த முறை பயன்படுத்தப் படுகிறது ? கப்பல் எவ்வளவு தூரத்தில் நிற்கிறது ? இதனால் பலவிதமான சிக்கல்கள் ஏற்படவில்லையா ?



1974 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கப்பல் எவ்வளவு தூரத்தில் நிற்கிறது என்கிற குறிப்பு என்னிடத்தில் இல்லை. இராமேசுவரத்தில் தற்காலிகமாகக் கட்டியிருக்கிற மர ரேவைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இராமேசுவரத்திற்கு 2 மைல் தொலைவில் இரட்டத்தாழை என்ற இடத்தில் நிரந்தரமான ரேவுத் துறையைக் கட்ட சிபார்சு செய்திருக்கிறோம். அது பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு எடுத்துக் கொள்ளலாம்.

## *Taxi Drivers' Co-operative Societ at Dharmapuri*

* 128 Q.—Thiru R. R. MUNISAM : Will the Hon. Ithe Minister for Industries be pleased to state—

(a) whether a Co-operative Society for the Taxi Drivers has been promoted in Dharmapuri district; and

(b) if so, the details thereof?

The Hon. Thiru S. MADHAVAN : (a) & (b) An Industrial Co-operative Society has been registered for the taxi drivers in Dharmapuri District with headquarters at Dharmapuri on 3rd September 1973.

திரு. எம். சுரேந்திரன் : டாக்சி டிரைவர் கூட்டுறவு சொஸைடியை சேலத்தில் ஆரம்பித்ததில் பலவிதமான ஊழல்கள் நடந்திருப்பதாகப் பத்திரிகையில் வந்திருந்ததே, அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது தர்மபுரி மாவட்டத்தைப் பற்றியது. அந்த ஊழல் பற்றித் தனியாகக் கேள்வி கேட்கலாம். பத்திரிகைகளில் என்ன வந்தது என்பது பற்றி எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஏ. எம். இராஜா : கார்களின் விலை அதிகமாகிவிட்டது. இப்படி பெட்ரோல் விலையும் அதிகமாகிவிட்டது. இப்படி கூட்டுறவு சொஸைடிகளின் மூலம் டாக்ஸி டிரைவர்களுக்குக் கார்களைக் கொடுத்தால் மாதா மாதம் அவர்கள் கட்ட வேண்டிய தொகையைக் கூட கட்ட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறதே, இதற்கு அரசு ஏதாவது வழிவகைச் செய்ய பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மகேந்திரா அங்கத்தினர் தான் அதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு வங்கியில் இருந்து பணம் கொடுக்கும்போது—அவர்கள் திருப்பிக் கொடுக்கிற தவணைகளை அதிகமாக்கிக் கொடுக்க முடியுமா என்பதைப் பரிசீலனை செய்யலாம். அவர்களுக்கு உதவியாக இருக்கும். மேலும் ஆர். டி. ஓ. வண்டி சம்பந்தமாக இப்பொழுதுள்ள கட்டணங்களைப் பற்றி அவைகளைப் பற்றித்தான் யோசிக்க வேண்டும். இதுதான் அவர்களுக்கு உதவியாக இருக்க முடியும். எப்படியும் விலையேற்றம் இருக்கத்தான் போகிறது.

## ஓசூரில் கடிகாரத் தொழிற்சாலை.

*129 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஓசூரில் தனியார் துறையிலோ அல்லது பொதுத் துறையிலோ கடிகாரத் தொழிற்சாலை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தக் கடிகாரத் தொழிற்சாலைக்குத் தேவையான உதவியை வெளிநாட்டு நிறுவனத்திடம் இருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வெளிநாட்டு நிறுவனத்திடம் இருந்து தொழில் நுட்ப உதவி பெறுவதற்கான ஒப்பந்தம் வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அண்மையில் கிடைத்த தகவலின்படி மத்திய அரசாங்கம் இதற்கு அனுமதி தருமா என்கிற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

THIRU K. S KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Industries whether the watch making industry, will be started in private sector or public sector? If so, when the acquisition of land and other arrangements will be made by the Government?

THE HON. THIRU S. MADHAVAN : It is under private sector.



திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைக்கு மத்திய சர்க்கார் அங்கீகாரம் தருமா என்பது சந்தேகமாக இருக்கிறது என்று தெரிவித்தார்கள். அப்படி அங்கீகாரம் தரவில்லை என்றால், நமது தமிழக அரசே இதை ஏற்று நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழக அரசுக்கும் இந்தக் கதிதான் ஏற்படும். நாம் இந்தத் தொழிற்சாலையைத் துவங்க முன்வந்தாலும் வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவை—வெளிநாட்டு தொழில் நுட்ப நிறுவனத்திடம் இருந்து பெற்றாக வேண்டும். இதுபற்றித்தான் மத்திய அரசாங்கம் தங்களது ஆட்சேபணையை எழுப்பியிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் இதுபோன்ற தொழில் நுட்ப அறிவைப் பெறுவதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தால், இந்த மாநிலத்திற்கு மத்திய அரசாங்கம் ஏன் கொடுக்கக் கூடாது என்கிற கேள்வியைத்தான் நாம் எழுப்பியிருக்கிறோம்.

திரு. கே. எ. வகாப் : இப்போது பங்களூரில் ஏற்படுத்தப் பட்டிருக்கிற எச்.எம்.டி. ஸ்தாபனம் நல்ல பிரபலம் அடைந்து வருகிறது. அதுபோன்ற ஒரு தொழிற்சாலையை நமது மாநிலத்தில் நாம் ஏன் எற்படுத்தக் கூடாது. தொழில் நுட்ப உதவி வேண்டுமானால் ஜப்பான் போன்ற நாடுகளில் இருந்து தொழில் நுட்ப உதவியைப் பெற்று—இராணிப்பேட்டை போன்ற இடத்திலே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன்வரக் கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழில் நுட்ப அறிவைப் பெறுவதில் கொஞ்சங்கூட சிரமம் கிடையாது. எந்த நாடும் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் உதவி செய்யத் தயாராய் இருக்கின்றன. இதற்கும் ஸ்விட்சர்லாந்து நிறுவனம் உதவி செய்ய முன்வந்துள்ளது. மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும்தான் சில பிரச்னைகளை எழுப்பி வருகிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : மத்திய அரசாங்கம் என்னென்ன உதவிகள் நமக்குத் தேவைப்படுகின்றன என்று கேட்டு, என்னென்ன காரணங்களால் இவற்றை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்திருக்கிறார்களா ? அல்லது ஒரேயடியாக இந்தத் தொழில் இங்கே ஆரம்பிக்கப்படக் கூடாது என்று மறுத்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கேள்வி நேரத்தில் இதுபற்றி எல்லாவற்றையும் விளக்குவது சாத்தியம் இல்லை என்று கருதுகிறேன். நாம் எழுப்பியிருக்கிற பிரச்னை எல்லாம்—இது போன்ற தொழிற்சாலையை நிறுவ வெளிநாட்டு தொழில் நுட்ப உதவியைப் பெற மற்ற மாநிலங்களுக்கு அனுமதி அளித்திருந்தால்—நம்முடைய மாநிலத்திற்கும் அதுபோன்ற அனுமதியைத் தருவதில் என்ன ஆட்சேபணை என்றுதான் வாதாடுகிறோம்.

நைலான் தொழிற்சாலையை எடுத்துக் கொள்ளுங்கள். நம் அரசாங்கமே ஆரம்பிக்கிற தொழிற்சாலை. அவர்களே அதற்கு அனுமதி கொடுத்த தொழிற்சாலை. அதற்கு அந்நிய நாட்டு தொழில் நுட்ப உதவியைப் பெற அனுமதி வழங்க மறுக்கிறார்கள். இதில் தனியார் குறுக்கீடும் இருப்பதாக அறிகிறோம். பாராளு மன்றத்திலேயே பேசப்பட்டிருக்கிறது. இதை எல்லாம் கேள்வி நேரத்தில் முழுமையாக விளக்க முடியாது.

### தர்மபுரியில் எலக்ட்ரானிக் தொழிற்சாலை.

*130 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரியில் எலக்ட்ரானிக் தொழிற்சாலை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கூட்டுத் துறை நிறுவனமான தமிழ்நாடு இண்டர் நேஷனல் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் தர்மபுரி மாவட்டத்தில் ஓசூர் அருகில் தொழில் துறைக்கான மின் அணுவியல் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையை இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் அமைக்கும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இந்தத் தொழிற்சாலையை நிறுவும் திட்டம் தற்போது எந்தநிலையில் இருக்கிறது? இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த அரசாங்கம் என்ன முயற்சியை மேற்கொண்டிருக்கிறது என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அனுமதி பெற்றிருக்கிறோம். நில ஆர்ஜிதம் இப்போது தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்டிருக்கிறது.





THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister for Industries whether any other electronic factory is coming up in addition to one in public sector?

THE HON. THIRU S. MADHAVAN: There are a number of proposals for the industrial complex there.

### *Electronic Cell.*

131 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any chemical and Electronic Cell has been established in the State by the Small Industries Development Corporation; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) தமிழ்நாட்டில் மின் அணுத் தொழிற்சாலையைச் சிறுசகத் தொழில் இனத்திற்குக் கொண்டுவரும் நோக்கத்துடனும், புதிய திட்டங்கள் மற்றும் தொழில் ஆய்வு அறிக்கைகள் தயாரிப்பதற்காகவும், 1973-ம் ஆண்டு ஜனவரியில் 'மின் அணுக்குழு' ஒன்று சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ளது. இக் குழுவில் திட்ட அலுவலரும் அவருக்கான பணியாளர்களும் உள்ளனர். இரசாயன குழு எதுவும் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தில் ஏற்படுத்தப் படவில்லை.

### கள்ளுக்கடை ஏலத் தொகை வசூல்

*132 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளுக்கடைகளை ஏலம் எடுத்தவர்களில் 1973 நவம்பர் வரை வசூலிக்கப்படாமல் உள்ள பாக்கித் தொகை எவ்வளவு?

(இ) பாக்கி ஏற்பட்டதற்குரிய காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ரூ. 2.5 கோடி.

(இ) கடந்த இரு குத்தகை ஆண்டுகளில் கள், சாராயக் கடைக்காரர்கள் அரசுக்குச் சேர வேண்டிய தொகைகளைச் செலுத்துவதில் விதிமுறைகளின்படி தவறியதால், அத்

தொகைகளை வசூலிக்க வேண்டி, தமிழ்நாடு 1864 ஆம் ஆண்டு வருவாய் வசூலித்தல் சட்டத்தின் கீழ் அதிகாரிகள் எடுத்த நடவடிக்கையை எதிர்த்து அங்கடைக்காரர்கள் பலர் சென்னை உயர் நீதி மன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்தனர். உயர்நீதி மன்றம் 350-க்கு மேற்பட்ட வழக்குகள் குறித்து முடிவு எடுத்தது. ஆயத்தீர்வை வருவாய் வசூலிக்க, வருவாய் வசூலிப்புச் சட்டத்தின் விதித் துறைகள் செயல் படுத்தப்படலாம் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. வருவாய் வசூலித்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கும் முன்னர், ஒவ்வொரு நேர்விலும் அரசுக்குச் சேர வேண்டிய தொகை முதலில் முடிவு செய்யப்பட்டு அதனை ஏன் வசூல் செய்யக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு கேட்டு, சம்பந்தப்பட்டத் தரப்பினருக்கு அறிவிப்பு ஒன்று கொடுக்கப்பட வேண்டும் என்றும், முறையீடுகள் எவையும் வரப் பெற்றால் அவற்றைப் பரிசீலித்த பின்னரே இறுதி ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் அது கட்டளையிட்டது. இக் கட்டளையையொட்டி, உயர்நீதி மன்றத்தின் மேற் சொன்ன கட்டளையை நிறைவேற்றுதல் குறித்து வருவாய்த் துறை வாரியம் (ஆயத்தீர்வை-மதுவிலக்கு) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் கட்டளைகளைப் பிறப்பித் துள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற் கொண்டு தேவையான நடவடிக்கையை எடுத்து வருகிறார்கள்.

(முற்பகல் 9-30)

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, கள்ளுக் கடைகளை ஏலம் எடுத்தவர்களிடம் எத்தனை மாதத்திற்கு முன் பணம் வாங்கப்பட்டது? முன்பணத் தொகை முடிந்த பிறகு அடுத்த மாதத்திற்குரிய கட்டணத்தை வசூல் செய்யாமல் இருந் ததற்கு என்ன காரணம்? இதில் ஏன் இவ்வளவு தாமதம் ஏற்பட்டது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இது அந்தக் கள்ளுக்கடைகளுக்கான தொகையை வசூலிப்பதில் ஏற்பட்ட நிலைமையல்ல. கடைகளை அதிகமான தொகைக்கு ஏலத்திலே எடுத்து, பின்னர் நடத்த முடியாமல் மறு ஏலத்திற்குக் கொண்டு வந்தபிறகு, மறு ஏலத்தில் எடுத்த தொகைக்கும் ஏற்கனவே உள்ள தொகைக்கும் இடையேயுள்ள அந்த வித்தியாசத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மறு ஏலத்தில் எடுக்கப்பட்ட தொகைக்கும், ஏற்கனவே ஏலக்காரர் எடுத்த



தொகைக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை வசூலிக்கின்ற நடவடிக்கையாகும். கரன்ட் ரேட்டை வசூலிப்பதிலே எந்த விதமான தகராறும் இல்லை. மறு ஏலத்தை வசூலிப்பதிலும் இந்தவிதமான பிரச்னைகள் எழவில்லை.

**திரு. கு. இராசமாணிக்கம் :** கள்ளுக் கடைக்குப் பணம் கட்டாத காரணத்தால், கடை உரிமையாளர்கள் மீதும், விற்பனை யாளர்கள் மீதும் பல்வேறு வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால், பணம் கட்டிய பிறகும் அந்த வழக்குகள் வாபஸ் பெறப் படுவதில்லை. பணம் கட்டிய கடைகளுக்காவது அப்படிப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற அரசாங்கம் உத்தரவிடுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதை நான் வரவேற்கிறேன். இருக்கிற பிரச்னையே பணம் கட்டாமல் சொத்துக்கள் ஏலத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன என்பது தான். பணம் கட்டாமல் இருப்பதுதான் அதிகமாக இருக்கிறதே தவிர மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, பணம் கட்டினால் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு அந்நடவடிக்கைகளை விடலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்தக் குத்தகைக்கு விடுகின்ற நேரத்திலே ஒரு நாள் கூட இந்தக் கடையை நடத்தாதவர்கள், வலுக் கட்டாயமாக பெனால்டி கொடுக்க வேண்டும், ஒப்பந்தப்படி பணம் கொடுக்க வேண்டு மென்று நிர்பந்திக்கப்படுகிறார்கள். இதனால் பலரும் கஷ்டப்படு கிறார்கள். இந்த மாதிரி கேஸ்களுக்கு என்ன நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளப் போகிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஒப்பந்த விதி முறைகளை அரசு மீற முடியாது, சட்டத்தையும் மீற முடியாது. சட்டத்திற்குட்பட்டுத்தான், ஒப்பந்த விதிமுறைகளுக்குட்பட்டுத் தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## தென்னையிலிருந்து பதநீர்.

* 133 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் தென்னை மரத்தில் இருந்து பதனீர் இறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், இத் திட்டத்தினை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தினை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. அ. தேவேந்திரன்:** தலைவரவர்களே, பொதுவாகவே தமிழ்நாட்டில் இப்பொழுது பனை மரத்திலிருந்து பதநீர் இறக்கப்பட்டு விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. அதேபோல், தென்னையிலிருந்து பதநீர் இறக்க முன்பு அனுமதி அளித்ததுபோல், இப்பொழுது உடனடியாக அனுமதி வேண்டுமென்று கேட்டு மனு செய்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. எனவே, அதன் பேரில் விரைவாக முடிவு காணப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** சென்னையில், 1974-ம் ஆண்டு, பிப்ரவரி 5, 6 தேதிகளில் நடைபெற்ற லேபர் அட்வைசரி போர்டு மீட்டிங்கில் இதுபோன்ற அனுமதி தரவேண்டுமென்ற குறிப்பு பரிசீலிக்கப்பட்டு, அரசினுடைய கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. அரசு வருவாய் துறையினுடைய கருத்தைக் கேட்டிருக்கிறது. வருவாய்த் துறையிலிருந்து

'Tamil Nadu Khadi and Village Industries Board, Inspector-General of Police, Deputy Inspector-General of Police (Excise), Collectors'

ஆகியோர்களுடைய கருத்துக்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கருத்துக்கள் வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.





**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இப்பொழுது பரிபூரண மதுவிலக்கு அமுலாகப் போகிற இந்த நோக்கிலே பலரும் வேலை இழக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆதலால், தென்னையிலிருந்து பதநீர் இறக்க அனுமதி வழங்கும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்தப் பதநீர் இறக்கத் தமிழ்நாடு முழுவதும் அனுமதி கொடுக்கப்பட்டது. ஆனால், இதிலே தவறுகள் இருப்பதாகத் தெரிந்து, சில பகுதிகளிலே தவிர, மற்ற பகுதிகளிலே ரத்து செய்யப்பட்டது. இப்பொழுது லேபர் அட்வைசரி கமிட்டியிலே இந்த அனுமதியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எனவே, பரிபூரணமாகக் கொடுக்க வேண்டுமென்று அரசு கருதி, பரிசீலித்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதைப் போல், மிக அவசரமாக, அவசியமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Export of arecanuts.*

* 134 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether arecanuts are being exported from this State; and

(b) if so, the details of the quantity and the amount for which they were exported during the calendar years 1971 and 1972?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) ஆம்.

(இ) விவரங்களாவன:—

| ஆண்டு. | இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்பட்ட அளவு. | மதிப்பு. |
|---|---|---|
| (அ) 1971-ல் | 6,070 குவிண்டால் | 54,63,000 ரூபாய் |
| (இ) 1972-ல் | 8,714 குவிண்டால் | 78,42,600 ரூபாய் |

/1974 ஆகஸ்ட் 17

**திரு. என். டென்னிஸ்** : தலைவரவர்களே, பாக்கு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை? 1973-ம் காலண்டர் ஆண்டில் இதன் உற்பத்தி, முந்தைய ஆண்டைவிட அதிகரித்துள்ளதா, குறைந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்** : உற்பத்தியைப் பெருக்குவதற்கு எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள் பல இடங்களில் நாற்றுப் பண்ணைகள் தொடங்கி, தரமான நாற்றுகளை விவசாயிகளுக்கு விநியோகித்து வருகிறோம். கள்ளாறு, குற்றாலம், கடலூர், பெரியகுளம், கன்னியாகுமரி ஆகிய இந்த இடங்களில் இந்த நாற்றுப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அதன் மூலமாக, தரமான நாற்றுகளைப் பெருக்குவதன் மூலம் இதனுடைய உற்பத்தி பெருகிக் கொண்டு வருகிறது.

1973-ல் எவ்வளவு ஏற்றுமதி, அல்லது எவ்வளவு பெருக்கம் என்பது பற்றிய புள்ளிவிவரம் கையில் இல்லை.

## செங்கற்பட்டு மாவட்டத்தில் சூரியகாந்தி வித்துக்கள் கொள்முதல்

* 135 வினா—**திரு. கா. வேழவேந்தன்** : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் சூரியகாந்தி சாகுபடி செய்யும் உழவர்களிடமிருந்து சூரியகாந்தி வித்துக்களை கொள்முதல் செய்ய ஏற்பாடுகள் ஏதேனும் செய்யப்பட்டுள்ளனவா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்** : கட்டாயக் கொள்முதல் அல்ல. விவசாயிகளிடமிருந்து கிலோ ரூ. 2.52-க்கு—விலைக்கு —தமிழக அரசு வாங்குகிறது, விதைக்காக. இது தவிர, " Hindustan Lever, Western India Vegitable Products " போன்ற கம்பெனிகளும் விலைக்கு வாங்குகின்றார்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்** : தலைவரவர்களே, இப்பொழுது எல்லாம் டாக்டர்கள் இந்த சூரியகாந்தியிலிருந்து கிடைக்கும் எண்ணெயை 'கொலெஸ்ட்ரல்' நோயுள்ள—என் போன்றவர்



1974 ஆகஸ்ட் 17] திரு. வா. [மை. அப்துல் ஜப்பார்]

களுக்கு, சிபாரிசு செய்கிறார்கள்; ஆனால் இது போதுமான அளவு கிடைக்கவில்லை. விசாரிக்கும்போது, இந்த வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுக்க வேண்டிய ஆலைகள் நிறுவப்படவில்லை; 'சொல்வெண்ட் எக்ஸ்ட்ராக்ட் மெஷினரி' வேண்டுமென்று சொல்கிறார்கள். நவீன இயந்திரங்கள் வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொன்று என்று ஆலையை வைக்க அரசு நடவடிக்கை எடுக்கிறதா? அவ்வாலைகள் வைக்க யாரேனும் முன்வந்தால் அதற்குரிய உதவியைச் செய்ய இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்** : விதை கிடைக்காததைப் பற்றி சொன்னார்கள். விதை கிடைக்கவில்லையென்றால், அவர் களுக்குப் பக்கத்தில் டி.ஏ.ஓ. ஆபீஸில் கேட்டால் நிச்சயமாகக் கொடுப்பார்கள். ஏனென்றால், விதையை வாங்கி, விவசாயி களுக்குக் கொடுக்கின்ற அந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

அடுத்தாற்போல், ஆலைகளைப் பற்றி சொன்னார்கள். இதற்கு தனிப்பட்ட ஆலைகள் தேவையில்லை. சாதாரணமாக, நல்லெண்ணெய், கடலெண்ணெய் தயார் செய்கிறவர்கள் கூட, இதையும் சேர்ந்து ஆட்டி, அதிலிருந்து எண்ணெய் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அன்பர்—இதற்கென்று தனியாக இருந்தால், நன்றாக—எண்ணெய் தரமாக இருக்கும் என்று கருதி, இதற்காகத் தென் ஆற்காடு விருத்தாசலத்திலேயும், கோயம் புத்தூரில் ஒன்றியூர் என்ற இடத்திலும் Solvent extraction plant என்ற நவீன ஆலைகள் இப்பொழுது நிறுவப்பட்டுவருகின்றன.

**திரு. கா. வேழவேந்தன்** : சூரியகாந்திப் பயிர் செங்கற்பட்டு மாவட்ட விவசாயிகளுக்குப் புதியதானது. அங்கு அது தீவிரப் படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஒன்றியத் தலைநகரிலேயும் அப்படி உற்பத்தியாகிற வித்துக்களைக் கொள்முதல் செய்ய தனி ஏற்பாடு செய்து அந்தந்தப் பகுதி விவசாயிகளிடமிருந்து கொள் முதல் செய்து ஊக்குவிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்** : தலைவர் அவர்களே, சூரியகாந்தி விதை விற்பனையில் எந்தவிதமான கஷ்டமோ கட்டங்கலோ இல்லை, தாராளமாக வந்து வியாபாரிகள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்னாரிடத்தில் விதைகள் இருக்கின்றன என்று தெரிந்தால் போதும். வெஜிடபிள் ஆயில் அல்லது டால்டா

[மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்] [1964 ஆகஸ்ட் 17

போன்ற பொருட்கள் செய்வதற்காக வாங்கிக்கொண்டு போகிறார்கள். இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. விதை கிடைப்பது தான் அதிகமாக இருக்குமே தவிர தற்போது விற்பனையிலே வந்த விதைகளைக் குறித்து புகார் இல்லை.

*Mechanical Compost Plants*

* 136 Q.—THIRU N. R. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that the State Government propose to set up Mechanical Compost Plants in the State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, (அ) & (இ) சென்னை, மதுரை மாநகராட்சிகளில் கம்போஸ்ட், அதாவது மக்கிய உரம், செய்யும் சாதனம் ஒன்று 60 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட இருக்கின்றன. இதற்காகும் செலவில் மூன்றில் ஒரு பங்கை இந்திய அரசு மானியமாக வழங்க ஒத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, உரங்களைத் தயாரிப்பதற்காக மத்திய சர்க்கார் முன்பிருந்தே உதவித் தொகை கொடுப்பதாகச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்கள். இது வரையில் அப்படிப்பட்ட உரங்களைத் தயார் செய்வதற்கான நடவடிக்கைகள் ஏன் எடுக்காமல் இருந்தார்கள்? இரண்டு இடங்களிலே செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல இடங்களிலே இத்தகைய உரங்களைத் தயாரிப்பதற்காக முன்னாலேயே உதவித் தொகை பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் கொடுக்கப்பட்டு வந்ததே, இப்பொழுதும் அப்படிக் கொடுத்து அந்த மாதிரி உரங்களைத் தயாரிக்கவும் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கவும் அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த வினா, இயந்திரங்கள் மூலம் கம்போஸ்ட் தயார் செய்வது பற்றிய வினா. சென்னை, மதுரை ஆகிய இரண்டு இடங்களில் உடனடியாகத் தொடங்குவதற்கு வேண்டிய ஆயத்தமான வேலைகள் எல்லாம் நடைபெறுகின்றன. ஆனால் கிராமப்புறங்களிலே இப்பொழுதே



1964 ஆகஸ்ட் 17]

கம்போஸ்ட் உரம் தயாரித்துக்கொண்டு வருகிறார்கள், அவர்களுக்குச் சொல்லும் மானியம் கொடுக்கப்பட்டு வருகிறது, அதைப் பற்றிய விவரங்கள் தனிக் கேள்வி கேட்டால் தரப்படும்.

**திரு. க. உ. பொ. எட்டப்பன் :** தலைவர் அவர்களே, இயந்திரங்களால் செய்யப்படும் இந்த கம்போஸ்ட் உரம் தயார் செய்வதற்கு உற்பத்திச் செலவு குறைவானதாக இருக்கிறதா? விவசாயிகளுக்குக் கொடுக்கப்படக்கூடிய முறையில் குறைந்த விலைக்கு அது கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இயந்திரத்தைப் பயன்படுத்தி கம்போஸ்ட் உரம் தயார் செய்யப்படும்போது விரைவிலே தயார் செய்யப்படுகிறது. ஆனால் சாதாரணமாக கிராமப்புறங்களிலே குப்பைகளைப் போட்டு அதை மக்கச் செய்வதற்கு அது கம்போஸ்ட் ஆவதற்கு 7, 8, 9 மாதங்கள் வரைகூட ஆகிவிடுகின்றது, ஆனால் இயந்திரத்தின் மூலமாக செய்யப்படும்போது விரைவிலே தயாரிக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல, சத்துள்ளதாகவும் இருக்கிறது. அது மட்டுமல்ல, பவுடர் உருவத்திலே இருக்கிறது, அதன் மூலம் உற்பத்தி செய்வதற்கு உற்பத்திச் செலவு ஏறத்தாழ டன் ஒன்றுக்கு ரூபாய் 25 வரை ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : May I know when the order was placed, and what is the delay on execution of the order? Why is there delay in setting up this plant?

THE HON. THIRU SI. PA. ADITANAR : The delay in setting up the plant is not due to Central or State Government. It takes some time in order to establish an industry, which is new to the State. It takes a little time. That is all.

*மாப்படுகை-மணல்மேடு சாலை*

* 137 வினா—திரு. என். செட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை பகர்வாரா :

மாப்படுகையிலிருந்து கொற்கை, தலைச்சேரி கிராமம் வழியாக மணல்மேட்டிற்கு ஒரு பாதை அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** மாப்படுகையிலிருந்து மணல்மேடு வரை ஏற்கனவே சாலை ஒன்று 12.8 கி.மீ. நீளத்தில் உள்ளது. இச்சாலையை மேம்படுத்துவதற்கோ அல்லது அதில் குறுக்கிடும் ஆறுகளில் பாலங்கள் கட்டுவதற்கோ கருத்து ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஏற்கனவே உள்ள அந்தச் சாலை நீண்ட காலமாக வேண்டுகோள் விடுக்கப்பட்டு, இன்னும் சீர்படுத்தப்படாமல் இருக்கின்றது. எனவே, அந்தச் சாலையையும், இந்தச் சாலையையும் சீர்படுத்துவதற்கு இனியேனும் அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, இந்த 12.8 கி.மீ. சாலை ஒரே சாலையாக இல்லை.

சீர்காழி—கல்லணை சாலையில் கி.மீ. 96.8 என்னுமிடத்திலிருந்து ஒரு சாலையானது பிரிந்து வடக்கு நோக்கிச் செல்லுகிறது. இச்சாலை மாப்படுகை என்னும் ஊரின் அருகிலிருந்து பொன்னூர் என்னும் ஊர் செல்லும் வரை அரசு சாலையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் நீளம் 3 கி.மீ. ஆகும்.

பொன்னூரிலிருந்து—பாண்டூர் என்னும் ஊர் வரை செல்லும் சாலையின் நீளம் 1.2 கி.மீ. ஆகும். இது மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

பாண்டூரிலிருந்து கொற்கை, தாழஞ்சேரி, வரகடை வரை தொடர்ந்து செல்லும் இச்சாலை ஊராட்சிகளின் பராமரிப்பிலுள்ளது. இதன் நீளம் 2.6 கி.மீ. ஆகும்.

இதன் தொடர்ச்சியாக வரகடையிலிருந்து நாரணமங்கலம் என்னும் ஊர் வரை செல்லும் சாலை நீளம் 2.0 கி.மீ. இது கால்வாய்க்கரைச் சாலையாகக் கருதப்பட்டு, பொதுப்பணித் துறையினரால் பராமரிக்கப்படுகிறது.

நாரணமங்கலத்திலிருந்து மணல்மேடு வரை உள்ள சாலை மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ளது. இதன் நீளம் 4 கி.மீ. இத்திட்டம் 10 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட



வேண்டியதாக உள்ளதால், நிதி நிலைமை மற்றும் வேலையின் உடனடித் தேவை இவைகள் குறித்து ஆராய்ந்து, நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறைத் தலைமைப் பொறியாளர் இப்போது இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

**திரு. அ. தேவேந்திரன்:** அந்தப் பகுதியில் நிறைய மக்கள் வாழ்கிறார்கள் என்ற காரணத்தினாலே, போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றது என்ற காரணத்தினாலே, அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து உடனடியாக அதைச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தற்போது இல்லையென்று ஏற்கனவே சொல்லிவிட்டேன்.

## கிளியாநகர் பகுதியில் தரைப்பாலம்

* 138 வினா—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அச்சிறுபாக்கம் தொகுதியில் (மதுராந்தகம் தாலுக்கா) கிளியாநகர் பகுதியில், கிளியாறுக்குக் குறுக்கே தரைபாலம் அமைக்கும் செயற்குறிப்பு எதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இல்லை.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, அச்சிறுபாக்கம் தொகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேயே சர்க்காருக்கு ஒரு கோரிக்கை விடப்பட்டு அது முன்னாலே பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த திரு. சாதிக் பாட்சா அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது, ஆனால் அமைச்சர் அவர்கள் இல்லையென்று கூறுகிறார்கள், உண்மை நிலையை அறியலாமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, அச்சிறுபாக்கம் தொகுதியில் கிளாறுக்கும், சாலவேடு மடுக்கும் இடையில் கிளியாநகர் இருக்கிறது. பாலத்தோடு கூடிய சாலை

[1974 ஆகஸ்ட் 17

ஒன்று அமைப்பது மிகவும் அவசியமானது. இந்த சாலை உப்பிர மேரூர், கம்மாளம்பூண்டி சோப்புத் தேர்ப் பிரிகிறது. இந்தச் சாலை, அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இந்த ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்டுவதற்கு தோராயமாக ரூ. 2 லட்சம் தேவைப்படும். இதர சாலைகள் திட்டத்தின்கீழ் இந்த வேலையை எடுத்துக் கொள்ளலாம் என்று நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை தலைமைப் பொறியர் தெரிவித்துள்ளார். இதர சாலைகள் திட்டம் செயல்படுத்தப்படும்போது கவனிக்கலாமென்றும் இடையிலே எதுவும் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்ற காரணத்தினாலே இது எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, இந்த கிளியாறுக்குக் குறுக்கே தரைபாலம் கட்டினால் அச்சிறுபாக்கம் தொகுதியையும், மதுராந்தகம் தொகுதியையும் இணைக்கின்ற பாலமாக அது இருக்கும். மழைக் காலத்திலே வெள்ளம் வந்துவிடுவதால் மூன்று மாத காலத்திற்கு பயனளிக்காமல் போய்விடுகிறது. இந்த ஆண்டாவது அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, பொதுவாகவே கிராம சாலைகள் அமைக்கும் விஷயத்திலே இந்த இரண்டு தொகுதிகளும் புறக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இன்னும் தமிழ் நாட்டில் 79 பேரூராட்சி ஒன்றியங்களில் எந்தவிதமான சாலையும் எடுத்துக்கொள்ளப்படாத நிலைமை இருக்கிறது. அதைக் கவனிக்கும்பொழுது இதுவும் கவனிக்கப்படும்.

**திரு. க. மு. இராசகோபால்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்திலே பணம் இல்லாத காரணத்தினாலே நெடுஞ்சாலைத் துறையிலே இவை ஒப்படைக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். ஆனால் நெடுஞ்சாலைத் துறையைக் கேட்டால் அவர்கள் உள்ளாட்சித் துறைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிற சாலைகள் என்று சொல்கிறார்கள். இந்த மைனர் இரிகேஷனில் 100 ஏக்கருக்கு உள்ள ஏரிகளையெல்லாம் பி.டபிள்யூ.டி.யிடம் கொடுக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போன்று இந்த பாதைகளையும் ஹைவேஸ் துறையிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1974 ஆகஸ்ட் 17]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இப்போதே எடுத்துக் கொள்ளப்படுகிறது. இணைப்புச் சாலைகள் பெருவழித் துறையிலே செய்து முடிக்கப்பெற்று ஊராட்சிகளிடம் ஒப்படைப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

*Conference of Labour Ministers*

*139 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Hon. Minister had attended the Conference of Labour Ministers of States in New Delhi on 16th December 1973; and

(b) if so, the details of the decisions taken at the Conference?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று சட்டப் பேரவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, இந்த மாநாட்டிலே எடுக்கப்பட்ட முடிவுகள் எந்த அளவிற்கு அமலாக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன். எடுத்த முடிவுகளுக்குப் பின்பு பேமெண்ட் ஆப் வேஜஸ் ஆக்ட்டில், வேஜ் லிமிட் 400 லிருந்து 500-க்கு உயர்த்தப்பட வேண்டுமென்று செய்யப்பட்ட முடிவிற்குப் பிறகு விலைவாசிகள் ஏறியிருப்பதால் அந்த லிமிட்டை 1,000 ரூபாய் என்று உயர்த்துவதற்கு பரிந்துரை செய்யப்படுமா? அதைப்போன்றே இ.எஸ்.ஐ.-க்கான லிமிட்டையும் 1,000 ரூபாய் என்று உயர்த்துவதற்கு அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தொழிலாளர் நல அமைச்சர்களின் மாநாட்டில் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன. எடுக்கப்பட்ட முடிவுகளையெல்லாம் மத்தியப் பேரரசுக்கு அந்த மாநாடு பரிந்துரை செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரைகள்மீது மத்திய அரசு எடுத்துக் கொண்டதற்கான நடவடிக்கை பற்றி இதுவரையில் தகவல் இல்லை. அடுத்து,

---

@ 164-1[illegible]0-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப் பட்டுள்ளது.

நாட்டிலேயுள்ள நிலைமைகளையொட்டி அடுத்த முறை ஒரு மாநாடு கூடும்பொழுது இந்தக் கருத்துக்களை விவாதிக்கலாம் என்று கருது கிறேன்.

DR. H. V. HANDE: Sir, May I know whether under item 2 Welfare Cess Fund for Beedi Industry, the particular recommendation of the Conference that the levy could be collected by the Central Excise Department, has been adhered tob y the State Government as stipulated, whether the State Government has been able to collect enough statistics of the deplorable condition especially the working condition of beedi workers in Tamil Nadu, whether this Government has taken into cognisance the fact that something has to be done immediately without waiting for the implementation by the Central Government, whether Government is aware (the Gong was sounded) of the fact that the recent agreement had not been satisfactory to workers and whether it is possible to see that implementation is done regarding beedi workers' problem?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, பீடித் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் தற்பொழுது அவர்களுக்கு வாங்கிக் கொடுத்த கூலியில் மிகவும் திருப்தியடைந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களிலே எவ்வளவு பேர் அந்தத் தொழிலிலே இருக் கிறார்கள், எவ்வளவு பெண்கள், எவ்வளவு பேர் ஆண்கள் என்ற குறிப்புகள் எதுவுமே அந்தத் தொழிற்சங்கத்திடமும் இல்லை, ஆகவே, எல்லோரிடத்திலும் அணுகி அப்படிப்பட்ட விவரங்களைச் சேகரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. அந்த வகையில் அரசு முழு அக்கறை செலுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, அயிட்டம் எண் 8-ல் விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஒர்க்மென்ஸ் காம்பன்சேஷன் ஆக்டை அமல் படுத்த வேண்டுமென்பதை இந்த மாநாட்டில் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று இங்கே கூறப் பட்டிருக்கிறது. இந்த சிபார்சை இந்த அரசு எந்த அளவிற்குச் செயல்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களா? அதோடு, அயிட்டம் எண் 4-ல் தொழிற்சாலைகளில் விபத்துக்கள் கூடிக்கொண்டே இருக்கிறது. அவற்றைத் தடுக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், அதோடு கூடுதலாகச் செலவு



செய்ய வேண்டுமென்று அந்த சிபார்சில் காணப்படுகிறது. அதற்கான என்ன நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண் டிருக்கிறது. அடுத்து . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கேள்விதான் கேட்கலாம். வரிசையாகக் கேள்வி கேட்டால் எப்படி ஞாபகத்தில் வைத்துக் கொண்டு பதில் சொல்ல முடியும்? துணைக் கேள்வி என்றால் ஒரு கேள்விதான் கேட்கலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அயிட்டம் எண் 5-ல் எல்லா நியமனங்களும், பிரைவேட் செக்டார்கூட எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் வழி யாகத்தான் செய்ய அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டு மென்று இருக்கிறது. ஆனால் இன்றைக்கு அரசாங்க நியமனங்கள் கூட எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாகச் செய்யப்பட வில்லை. குறிப்பாக, போக்குவரத்து இலாக்காவில், கன்னியா குமாரி ஜில்லாவில், எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் வழியாக இல்லாமல் போக்குவரத்து மேனேஜிங் டைரக்டரே நேரடியாக நியமனங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அவற்றைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இந்த மாநாட்டிற்கு முன்னதாகவேகூட தமிழக முதல்வரவர்கள் பூச்சி மருந்துகள் மூலம், பூச்சி மருந்துகள் தெளிப்பதனால் ஏற்படும் விபத்துகளைத் தடுக்க உதவி செய்வதைப் பொறுத்தவரையில் ஆயிரம் ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையில் இந்தக் காரியங்களில் ஏற்கனவே தமிழகம் முன்னோடியாக இருந்து கொண்டிருக்கிறது. வேலைவாய்ப்புகளைப் பொறுத்தவரையில் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச், வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம்தான் எல்லாத் துறைகளிலும் எடுக்க வேண்டுமென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, இப்பொழுது போக்குவரத்துத் துறை உட்பட இதேமுறையில் வேலைவாய்ப்பை செய்து கொண்டு வருகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிற்சாலைகளில் பாதுகாப்பைப் பொறுத்தவரையில் சமீபத்தில்கூட சென்னையிலே மத்திய தொழிலாளர் நல அமைச்சர் திரு. இரகுநாத ரெட்டி அவர்களும், நானும் ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டு பல்வேறு

தொழிலகங்களிலே உள்ளவர்களையும், அலுவலாளர்களையும் அழைத்துப் பல கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டிருக்கிறோம். கிடீரென்று எதிர்பாராத வகையில், பெட்ரோல் ஃபெர்டிலைசர்ஸ் போன்றவைகளில் விபத்துக்கள் ஏற்பட்டு விடுகிறது. அவைகளுக்கு என்ன செய்ய வேண்டுமென்று ஆராய்ந்து, அதற்கான காரண காரியங்களை கண்டறிந்து அவைகளைத் தடுப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நாங்கள் இருவரும் அந்தக் கருத்தரங்கில் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, அயிட்டம் எண். 9-ல் லே ஆஃப் சம்பந்தமாக ஏற்கனவே 50 சதவிகிதம் இருப்பதை 60 சதவிகிதமாகவும், ஒரு வருடத்திற்கு 240 நாட்கள் என்பதை 200 நாட்கள் என்றும், தொழிலாளர்கள் 50 என்பதை 20 பேர் என்றும் செய்யவேண்டுமென்று லே-ஆஃப் சம்பந்தமாக சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அதை அமல் படுத்துவதில் அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது, இப்பொழுது மின்சார வெட்டிருப்பதால் இந்த ஆண்டிலிருந்தே அதை நடைமுறைப்படுத்த மாநாடு ஏதாவது கூட்டி நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்தக் காரியங்களைப் பொறுத்தவரையில் தமிழக அரசாங்கம் இந்தக் கருத்துக்களை மத்திய அமைச்சரிடத்தில் மாநாட்டில் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. மத்திய அமைச்சரிடத்திலிருந்து உத்தரவு வந்த பிறகுதான் நடைமுறைக்குக் கொண்டு வர முடியும்.

### *Labourers in Cashewnut factories*

* 140 Q.—THIRU N. DENNIS: Wili the Hon. the Minister for Labour be pleased to state whether prosecutions were launched during 1973 against certain proprietors of cashewnut factories in Kanyakumari district in regard to employment of children below twelve years in large numbers?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** 1973-ஆம் ஆண்டில், வேலைத் தகுதிச் சான்றிதழ் இல்லாமல் இளைஞர்களை வேலைக்கமர்த்தியதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் இரு முந்திரித் தொழிற்சாலை மேலாளர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டது.



**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பல முந்திரி தொழிற்சாலைகளில் 12 வயதிற்குக் குறைந்த சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். வறுமையின் காரணமாகப் பலர் இந்த வேலைக்குச் செல்கிறார்கள். இதனால் பலருக்கு ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கான வசதி போய்விடுகிறது. தேக ஆரோக்கியம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தக் குறைகளைப் போக்குவதற்கு அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நான் ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைச் சொன்னேன். இரண்டு முந்திரித் தொழிற்சாலைகளிலே மேலாளர்கள்மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அப்படிப்பட்ட குறைபாடுகள் எங்கேனும் இருந்து கனம் உறுப்பினர்கள் சுட்டிக் காட்டுவார்களேயானால் தகுந்த முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் ஏறத்தாழ 157 முந்திரி பருப்பு தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கே சுமார் 30,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அத்தனை முதலாளிகளும் கேரளத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சட்டப்படியான ஊதியத்தைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கவில்லை. மேலும் முந்திரிக் கொட்டையிலிருந்து பருப்புகளை உடைத்து எடுக்கும்பொழுது தொழிலாளர்களின் கைகளில் அந்த எண்ணெய் பட்டு பல நோய்களுக்கு ஏதுவாக இருக்கிறது. அதற்குப் போதுமான மருந்து வகைகள் கொடுக்கப்படவில்லை. இவற்றிற்கு அரசு போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி

*141 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு எவ்வளவு வசூல் ஆனது?

(இ) 1973 நவம்பர் வரை செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** (அ) 16—3—1974-ம் நாள் வரை பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு வசூலான மொத்தத் தொகை ரூ. 1,10,53,494.34.

(இ) 1973-ம் ஆண்டு நவம்பர் வரை தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 1,06,36,927.07.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி வசூலை யார் யார் மேற்கொண்டார்கள்? முறையான ரசீதுகள் வழங்கப்பட்டனவா? இல்லையென்றால் இனிமேலாவது முறையான ரசீதுகள் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவரவர்களே, கேள்வி பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு எவ்வளவு வசூலானது என்பதைப்பற்றியது. எப்படி எப்படி வசூலித்தார்கள் என்பதைப் பற்றிய விளக்கம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

## *Electricity Supply from Kerala.*

* 142 *Q.*—THIRU N. K. PALANISAMY:
THIRU V. BALASUNDARAM: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) Whether it is a fact that an agreement has been reached between Kerala and Tamil Nadu Governments that Kerala will supply to Tamil Nadu stipulated units of power; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) & (இ) ஆம். (1973-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5, 6-ஆம் நாட்களில்) தமிழ்நாடு அரசு—கேரள அரசு பிரதிநிதிகளிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, 23—5—1973 முதல் 22—5—1974 வரை கேரள அரசு தமிழ் நாட்டிற்கு 300 மி. யூனிட் மின்சாரம் வழங்கும். முதல் 100 மி. யூனிட்டுக்கு 7.8 காசு என்ற வீதத்திலும் எஞ்சிய மின்சாரத்திற்கு 8 காசு என்ற வீதத்திலும்



வழங்கப்படும். பிறகு 11—2—1974 அன்று மேற்கொண்டும் பேசியதன் பலனாக மேலும் 30 மி. யூனிட் மின்சாரம் வழங்க கேரள அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

(முற்பகல் 10-00)

**திரு. வை. பாலசுந்தரம்:** இந்த ஒப்பந்தம் எத்தனை ஆண்டு காலத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது? இந்த ஒப்பந்தத்தின் மூலம் மேலும் கேரளத்திலிருந்து மின்சாரம் பெற வாய்ப்புகள் இருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** ஒவ்வொரு ஆண்டும் தென்மேற்குப் பருவ மழையின் அளவையும் நீர்நிலைகளின் அளவையும் கணக்கில் கொண்டு அந்தந்த மாநிலங்களில் தேவையைக் கணக்குப் பார்த்து மீதம் இருப்பதை ஒவ்வொரு ஆண்டும் தனியாகப் பேச்சு வார்த்தை நடத்தி ஒப்பந்தம் செய்யப்படுகிறது.

## கொல்லிமலையில் காடு வளர்ப்பு

*143 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலைப் பகுதியில் காடு வளர்க்கும் திட்டம் ஏதேனும் மேற்கொள்ளப்பட இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) ஆம்.

(இ) கொல்லிமலையில் மிலாறு மற்றும் பைன் (பைன்ஸ் படுலா) மரங்களை உற்பத்தி செய்யும் திட்டம் உள்ளது. 1973–74 முதல் 1982-83 முடிய பத்தாண்டுகளில் 800 ஹெக்டர் பரப்பில் இம்மரங்கள் நடப்படும். 1973–74-ல் 40 ஹெக்டர் பரப்பளவில் இத்திட்டம் ரூ. 1,29,300 செலவில் அமுலாக்கப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** கொல்லிமலையில் காடு வளர்க்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் இருக்கிறது? என்ன மரங்களை வளர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதைத்தான் இப்போது வாசித்தேன். 800 ஹெக்டர் பரப்பில் பைன், மிலாறு போன்ற மரங்களை நடத் திட்டம் இருக்கிறது. இந்த ஆண்டு ரூ. 1,29,300 செலவில் 40 ஹெக்டர் பரப்பளவில் வளர்க்கப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: கொல்லிமலையில் காடு வளர்க்கும் திட்டம் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே இருக்கின்ற காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. அதனால் மழை பாதிக்கப்படுகிறது. வறட்சி ஏற்படுகிறது. இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: பொதுவான ஒரு விஷயத்தைச் சொல்லுகிறார்கள். இருக்கின்ற காடுகள் அழிக்கப் படக்கூடாது. மலைப் பகுதியில் இருக்கும் தரைப் பகுதிகளில் மரங்கள் வளர்க்கும் திட்டத்திற்காக ஐந்தாண்டு திட்டத்தில் தனியாகப் பணம் ஒதுக்கப்படுகிறது. ஒதுக்கப்பட்ட தொகைக்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் எந்தெந்த மரங்களை எவ்வளவு ஏக்கர்களில் நடுவது என்று முடிவு செய்து நடப் படுகிறது. காடு அழிக்கப்படுவது தடுக்கப்பட்டாக வேண்டும். குறிப்பிட்ட இடங்களைப் பற்றி அவர்கள் சொல்வார்களானால் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம்.

*Prevention of adulteration of Petrol.*

* 144 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state the steps taken by the Government to prevent adulteration of petrol?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: எரியெண்ணெய்க் கலப்படம் செய்தல் சட்டப்பூர்வமாகக் குற்றமாகையால், தலைமைக் காவலருக்குக் குறையாத காவல் அதிகாரிகளும், உதவி இயக்கூர்தி அதிகாரிக்குக் குறையாத போக்குவரத்துத்துறை அதிகாரிகளும் எரியெண்ணெய் கலப்படம் செய்யக்கூடிய இடங்களைச் சோதனை செய்ய அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றனர். 1973-ம் ஆண்டு இத்தகைய நான்கு குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.



திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பெட்ரோலில் கலப்படம் செய்வதை எளிதாகக் கண்டு பிடிக்க தற்போது இருக்கின்ற நிறத்தை மாற்ற முயற்சி செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆயில் நிறுவனங்கள் அத்தகைய ஒரு யோசனையைப் பரிசீலித்து வருகிறார்கள்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: சென்ற ஆண்டு நான்கு குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இன்னும் இந்தக் குற்றங்கள் பெருமளவில் நடப்பதாகச் சொல்லுகிறார்கள். காவல் துறையினரும் மற்ற அதிகாரிகளும் விழிப்புடன் இருந்து இந்தக் குற்றம் நிகழாமல் தடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே தகவல்கள் இருக்குமானால் தாராளமாகத் தரலாம். இலாகாபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

*Supply of diesel oil*

* 145 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether it is a fact that there is a shortage in the supply of diesel oil in the State; and

(b) if so, the steps taken by the Government to increase the supply?

மாண்புமிகு திரு. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. காசிராமன்: கோடைக்காலத்தில் மின்சாரத்தில் தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தாலும், ஆற்றிலே பாசனத்திற்கு நீர் வருவதில் காலதாமதம் ஏற்பட்ட காரணத்தாலும், தமிழ் நாட்டில் உணவு உற்பத்தியில் ஊக்கம் கொண்டுள்ள விவசாயிகள் பம்ப் செட்டுகளை வைத்து விவசாயம் செய்ய முன்வருகிறார்கள். அவர்களுக்கு இந்த டீசல் பற்றாக் குறை காரணமாகக் கிடைக்கவில்லை. லாரிக்காரர்களிடமும், மற்றவர்களிடமும் அவர்களால் போட்டி போட முடியவில்லை. ஆகவே,

விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகளுக்கு டீசலுக்காக தனியாக அடையாளச் சீட்டுகள் கொடுத்து டீசல் எண்ணெய் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** டீசல் பற்றுக் குறையைப் பொறுத்தவரை 1973-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் நமக்கு அதிகமான பற்றுக்குறை இருந்தது. மாநிலத்தில் மின் வெட்டு இருந்த காரணத்தால் டீசலைப் பயன்படுத்த விவசாயிகள் மட்டுமல்ல, தொழிலதிபர்களும் முனைந்தார்கள். அப்போது தாற்காலிகமாகத் தட்டுப்பாடு இருந்தது. அதுசம்பந்தமாக மத்திய அரசிடத்தில் எடுத்துச் சொல்லி 19,000 டன் வெளி நாட்டிலிருந்து வருகிற கப்பலின் மூலமாக நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அனுப்பினார்கள். நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கி வைக்கூடிய டீசலின் அளவு ஒரே வகையாகத்தான் இருந்து வருகிறது. எந்த விதமான குறைபாடும் இல்லை. விவசாயிகள் பயன்படுத்தும் பம்ப் செட்டுகளைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் சொன்ன யோசனையை அரசு பரிசீலிக்கலாம்.

**திரு. கே. கந்தசாமி:** டீசல் பற்றுக்குறை இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நேற்றுகூட விவசாயத்திற்காக டீசல் வேண்டுமென்று நான் பெட்ரோல் பங்கில் கேட்டபோது 'நாளை முதல் பற்றுக்குறை ஏற்படப் போகிறது, ஆகவே, இப்போதே ஸ்டாக் செய்து வைத்துக் கொள்ளுங்கள்' என்று சொன்னார்கள். அது உண்மையா? இல்லையென்றால் இப்படிப்பட்ட செய்தியைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** நம்முடைய மாநிலத்திற்கு என்று தருகிற அளவு குறையாமல் கூடிக் கொண்டே வருகிறது என்பதைத்தான் குறிப்பிட்டேன். எங்காவது இருக்கக் கூடிய பெட்ரோல் பங்கு வியாபாரி இன்றே வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருப்பது வியாபாரத் தந்திரமாக இருக்கலாமே தவிர, வேறல்ல.





**திரு. நா. வெ. குருசாமி:** அமைச்சர் அவர்கள் டீசல் பற்றுக்குறை இல்லையென்று சொன்னார்கள். கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பாக டீசல் கிடைக்காமல் ஆயிரக்கணக்கான லாரிகள் வீதியில் நின்று கொண்டிருந்தன. ஒரு லிட்டர் விலை ஒரு ரூபாய் என்றிருக்க பங்கில் 4 ரூபாய் என்று விற்றார்கள். ஆகவே, அம்மாதிரிப் பற்றுக்குறை ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** நான்கு மாதங்களுக்கு முன்பு என்றால் மார்ச் மாதம் என்று எடுத்துக்கொண்டால் 45,000 கிலோ லிட்டர்ஸ் கிடைத்தது. ஜூன் மாதக் கணக்கின்படி 73,000 கிலோ லிட்டர்ஸ் கிடைத்திருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அமைச்சர் அவர்கள் டீசல் எண்ணெய் பற்றுக்குறை இல்லையென்று சொன்னார்கள். மண்ணெண்ணெயைப் பற்றிக் கூட அப்படித்தான் சொன்னார்கள். இப்போது நாம் கஷ்டத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறோம். அம்மாதிரி நிலைமை வராமல் இருக்க தேவையான ஸ்டாடிஸ்டிக்ஸ் எடுத்து தேவையான அளவு டீசல் எண்ணெயை பெற நடவடிக்கை எடுப்பார்களா? அதோடு விவசாயத்திற்கு டீசல் எண்ணெய் பயன்படுத்தக்கூடாது என்று மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளதாக லோக் சபாவில் சொல்லப் பட்டதாகக் கேள்விப்படுகிறோம். விவசாயத்திற்கு பயன் படுத்தக்கூடாது என்ற உத்தரவு சரியான உத்தரவா? தமிழக அரசாங்கம் என்ன கருதுகிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** டீசல் எண்ணெயைப் பொறுத்தவரை பற்றுக்குறை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதில் மாநில அரசு மாத்திரமல்ல, மத்திய அரசும் கவனமாக இருந்து கொண்டிருக்கிறது, விவசாயத்திற்கு உபயோகப்படுத்தக்கூடாது என்ற உத்தரவு இருப்பதாகத் தகவல் சொன்னார்கள். அத்தகைய தகவல் எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை. அதே நேரத்தில், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று கூறுகிற பிரதம மந்திரி அவர்கள் விவசாயத்திற்கு டீசலை உபயோகப்படுத்தக்கூடாது என்று யோசனை சொல்லியிருந்தால் அது எப்படிப் பொருத்தமாக இருக்கும் என்பது மட்டும் எனக்குப் புரியவில்லை.

[1974 ஆகஸ்ட் 17

## தீண்டாமை ஒழிப்பு

*146 வினா—திரு. வ. முத்து :

திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தீண்டாமை ஒழிப்புப் பணிகளுக்கென தனிக் காவலர் பிரிவு எந்தெந்த மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. நா. இராசாங்கம் :** கோயம்புத்தூர், மதுரை, தென்னாற்காடு, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர்.

**திரு. வ. முத்து:** அரிசனங்களுடைய நலனைக் கருதி தனிக் காவல் பிரிவு இதர மாநிலங்களிலும் ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவர்களா?

**மாண்புமிகு திரு. நா. இராசாங்கம்:** இதர மாவட்டங்களிலும் அந்தக் காவலர் பிரிவை ஏற்படுத்த அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. 1975-ம் ஆண்டில் அவற்றை ஏற்படுத்தி விடலாம்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தீண்டாமை ஒழிப்புப் பணிகளில் தனிக் காவலர் பிரிவு சரியாகச் செயல்படவில்லை என்ற புகார் வந்திருக்கிறது. அப்படிப்பட்ட புகார்கள் வந்திருக்குமானால் அவை என்ன?

**மாண்புமிகு திரு. நா. இராசாங்கம்:** புகார்கள் இன்னது என்று குறிப்பிட்டு வரவில்லை. குற்றங்கள் மூவாயிரத்துக்கு மேற்பட்டு நடந்திருக்கின்றன. அவற்றிலே 75 சதவிகிதம் குற்றவாளிகளை அரசாங்கம் தண்டித்திருக்கிறது.

**திரு. அ. சின்னசாமி:** இந்தக் குழு ஆண்டுக்கு எவ்வளவு தடவை கூடுகிறது? எவ்வளவு வழக்குகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? எவ்வளவு பேர்களுக்கு தண்டனை வழங்கியிருக்கிறார்கள் ? அந்தக் குழுவைக் கூட்டுவதற்கு யாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. நா. இராசாங்கம் :** என்ன குழு ? குழுவே கிடையாது. அரசு காவல் துறைப் படையை மாவட்டத்திற்கு ஒரு படை என்று வைத்திருக்கிறார்கள். அவர்கள் தாங்களாகவே



1974 ஆகஸ்ட் 17]

குற்றத்தைத் தேடிப் பிடிக்கிறது ஒன்று. இன்னொன்று, குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சென்று முறையிடுவது. இந்த இரண்டையும் அனுசரித்து வழக்குகளைப் பதிவு செய்து அவை நீதிமன்றத்திற்குச் செல்கின்றன. அப்படி நீதிமன்றங்களுக்குச் செல்கிற வழக்குகளில் நூற்றுக்கு நூறும் தண்டனை வாங்கிக் கொடுக்கலாம். ஏன் அப்படிக் கொடுக்கவில்லை என்று கேட்டால், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் போன்றவர்கள் கூடி ஊரில் சமாதானம் இருக்கவேண்டும் என்பதற்காக ஜாதி இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையே சமாதானம் தேவை என்று நடந்த குற்றங்களை மன்னிக்கவேண்டும் என்றும், மேற்கொண்டு அவ்விதம் நிகழாமல் தடுத்து நிறுத்த முயல்கிறார்கள். நானே கூட அதுமாதிரி சமாதானம் செய்வதில் ஈடுபட்டு இரண்டு மூன்று கிராமங்களில் சமாதானம் ஏற்படுத்தி இருக்கிறேன். ஆனால் நான் மிக முக்கியமாகக் கேட்டுக் கொள்வது என்னவென்றால் ஹரிஜன முன்னேற்றம், தீண்டாமை ஒழிப்பு போன்ற விஷயங்களில் ஆங்காங்கு இருக்கிற பகுதி மக்களிடையே துவேஷம் இல்லாமல் இருக்கச் செய்வதற்கு எல்லோரும் முயற்சி எடுத்தால் இதற்காக இருக்கிற சட்டம், காவல் படை போன்றவை தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** சிலயிடங்களில் இந்தத் தீண்டாமை ஒழிப்புத் திட்டத்திற்கு விரோதமாக செயல்கள் நடந்துவருகின்றன. காவல் துறையில் இருக்கிற அதிகாரிகள் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் இப்பேர்ப்பட்ட வழக்குகளைப் பதிவு செய்வதுமில்லை. வழக்குகள் பதிவு செய்தால் அக்கறை எடுத்து அந்த வழக்குகளின்மீது குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்வதுமில்லை. ஆகவே தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பான்மையாக வாழ்கிற பகுதிகளில் காவல் ஆய்வாளர்களாகப்போடுகிறவர்களை தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களாகப் போடுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. நா. இராசாங்கம் :** அந்தக் கொள்கை சரியல்ல. தாழ்த்தப்பட்ட மக்களைக் கவனிப்பதற்கு தாழ்த்தப்பட்டவர்களைப் போடுவது என்பது உள்ளபடியே அது வெற்றி அடையாது. உயர்ஜாதி மக்கள் உத்தியோகத்தில் இருந்தாலும்

தாழ்த்தப்பட்ட மக்கள் மீது அவர்களுக்கு ஒரு நல்லெண்ணத்தை உருவாக்குவதற்கு அது ஒரு வாய்ப்பாக அமையும். ஆகவே மற்ற ஜாதிக்காரர்கள்தான் இதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாக ஆலோசனைகளைக் கூறுவதற்காக மாநில, மாவட்ட, ஒன்றிய, தாலுக்கா ரீதியில் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கமிட்டிகள் முறையாகச் செயல்படவில்லை. எனவே அவை முறையாகச் செயல்பட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. நா. இராசாங்கம்:** அந்தக் கமிட்டிகள் அமைக்கப்பட்டு ஒரு ஆண்டு காலம் அவை உள்ளபடியே நல்ல சேவை செய்த பிறகு ஏதோ அதற்கு ஆர்வம் குறைந்துவிட்டது. நான் எற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன். சமாதானம் செய்கிற வேலை அதிகமாகிவிட்டதால் கமிட்டிக்கு அதிகம் வேலை இல்லாமல் போய் விட்டது.

**திரு. அ. தேவேந்திரன்:** இந்த வினா, தீண்டாமை ஒழிப்புப் பணிகளுக்கென தனிக் காவலர் பிரிவு எந்தெந்த மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதாகும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையில் நாலைந்து மாவட்டங்களைக் குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டில் இருக்கிற பிற மாவட்டங்களிலும் அந்தக் காவலர் பிரிவு ஏற்படுத்தப்படுமா? சிலை திருடுவதைக் கண்டு பிடிக்க தனி ஸெல் ஒன்று இருக்கிறது. நக்ஸலைட்சை ஒழிப்பதற்காக ஒரு தனி செல் இருக்கிறது. அதேபோல் இதற்காக ஒரு தனி ஸெல் டி.ஐ.ஜி. கண்ட்ரோலில் அமைக்கப்படுமா? 307, 302 போன்ற வழக்குகளில் சமாதானம் செய்வதற்கு சட்டத்தில் வகை இல்லை. அதேபோல் தீண்டாமை குறித்த குற்றங்களைச் செய்தால் சமாதானம் பண்ணுவதற்கு சட்டத்தில் வகை இல்லாமல் செய்யுமளவிற்கு சட்டம் திருத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. நா. இராசாங்கம்:** நான் முதலிலேயே என் பதிலில் சொன்னேன். இரண்டாவது கட்டமாக 75–76-ல் விடுபட்டிருக்கும் இராமநாதபுரம், சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இந்தக் காவல் துறை அமைப்பு அமைய இருக்கிறது என்று குறிப்பிட்டு விட்டேன். அடுத்து, ஒரு ஸ்பெஷல் ஸெல் போடுவது பற்றி உறுப்பினர் அவர்கள்



கேட்கிறார்கள். எல்லாவற்றிற்கும் ஸ்பெஷல் ஸெல்ஸ் இருக்கின்றன. ஆனால் இந்தத் துறையைக் கவனிக்கும் இவர்கள் சரிவர நடக்கிறார்களா என்பதைக் குழுக்கள் பார்த்து உள்ளபடியே குறைபாடுகள் இருந்தால் தனி ஒரு ஸெல் தேவைதானா என்பது பற்றி அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தின் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை செழியன் அவர்கள் ஓர் அவை உரிமைப் பிரச்னை பற்றிய அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அது எனது பரிசீலனையில் இருக்கிறது.

## 2. அறிவிப்புகள்

### பேரவை அலுவல் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விபரம் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

19-8-1974. திங்கட்கிழமை. அரசினர் சட்ட முன்வடிவுகளும், தீர்மானங்களும்.

20-8-1974. செவ்வாய்க்கிழமை.

(1) 1974–75-ம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(2) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை அறிமுகம் செய்தல்.

21-8-1974. புதன்கிழமை.

(1) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.

(2) கச்சத்தீவு குறித்த தீர்மானம்.

22-8-1974-முதல் 27-8-1974 வரை நிகழ்ச்சி நிரல் ஏற்கனவே அறிவித்துள்ளபடி நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். காலை தங்களை தங்கள் அறையில் சந்தித்து . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எனது ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். அதோடு விட்டுவிடுங்கள்.

**திரு. கோவை செழியன் :** முதலில் பேசலாம் என்று சொன்னீர்கள். உரிமைப் பிரச்னை பற்றி அறிவிப்பு கொடுத்திருக்கிறேன். அது மிக முக்கியமானது. பட்ஜெட் லீக்கானது பற்றிய உரிமைப் பிரச்னை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அது எனது ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். பார்க்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அங்கு பேசினதையெல்லாம் இந்த அவையில் கொண்டுவரக்கூடாது.

**திரு. கோவை செழியன் :** ரிக்கார்ட்ஸ் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொடுத்திருக்கின்ற ரிக்கார்ட்டை நான் இல்லை என்று சொல்லிவிட்டேனா?

**திரு. கோவை செழியன் :** இன்று அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னேன், சரி என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிச் சொல்லவில்லை. அதில், 13-ம் தேதி என்பதில் கூட ஒரு சந்தேகம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். இரண்டு கொடுத்திருக்கிறீர்கள். ஒரு ஸ்டேட்மென்ட் கொடுத்து கையெழுத்து போட்டிருக்கிறீர்கள். அந்தக் கையெழுத்தில், 13-ம் தேதி என்று இருப்பதில் ஒரு சந்தேகம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன் உங்களிடம். ஆக, அது ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். அதோடு முடித்துவிடுங்கள்.



## 3. நடைமுறைக் கேள்விகள்.

### தொடர்புடைய துணை வினாக்களுக்கு அமைச்சர்கள் விடையளிக்காதது குறித்து.

**திரு. ஆலடி அருணா :** பாயின்ட் ஆப் ஆர்டர். கேள்வி நேரத்தின்போது பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி பற்றி ஒரு உறுப்பினர் கேட்டார்கள். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் ஒரு விவரத்தைச் சொன்னார்கள். மேலும் அதுபற்றிய விவரங்களை திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கேட்டார்கள். அமைச்சர் அவர்கள் அதற்கு எந்தப் பதிலும் சொல்லவில்லை. இப்படி ரெலவன்ட் க்வஸ்டினுக்கு, தொடர்புடைய வினாக்களுக்கு விடை அளிக்காவிட்டால் கேள்வி நேரத்திற்கு எந்தவிதப் பயனும் இல்லாமல் போய்விடும். எனவே எதிர்காலத்திலாவது தொடர்பு உடைய கேள்விகள் போடும்போது அமைச்சர்கள் கண்டிப்பாக விடைகள் அளிக்க வேண்டும் என்ற குறிப்பை அவர்களுக்கு தாங்கள் அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டமன்ற விதிமுறைகளிலேயே இருக்கிறது. சில கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளிக்காமல் கூட இருக்கலாம். சட்டமன்ற விதிகளில், கேள்விகளுக்கு அமைச்சர்கள் விடை அளிக்காமல் இருக்கலாம், அப்படி விடை அளிக்காமல் இருக்கும்போது பேரவைத் தலைவர் கட்டாயப் படுத்த விதிமுறைகளில் இடம் இல்லை. ஆகவே, எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

Thiru K. M. SUBRAMANIAM : Sir, the Chair has just now announced a change in the business of the House. We find that only one day has been allotted for discussion of the Supplementary Budget and Voting of Demands. I think this is vary insufficient time . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுதான் வழக்கம். துணை மதிப்பீடுகளின் மீதான விவாதத்திற்கு ஒரு நாள் கொடுப்பதுதான் முறை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள்

தங்களிடம் ஏதோ ரிக்கார்ட்ஸ் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அவைத் தலைவரிடம் கொடுக்கப்படும் ஒவ்வொரு ரிக்கார்டையும் தாங்கள் பத்திரமாக வைத்திருக்கிறீர்களா? அல்லது வேறு யாரிடமாவது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன? பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால் விதிமுறைகளுக்கு மீறிய நிகழ்ச்சி, மரபுகளை மீறிய நிகழ்ச்சிகள் இவற்றைச் சுட்டிக் காட்டுவது. என்ன மரபு மீறப்பட்டிருக்கிறது? என்ன விதிமுறை மீறப்பட்டிருக்கிறது என்று சொல்லுங்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** பேரவைத் தலைவரிடத்தில் கொடுக்கப்படும் தஸ்தாவேஜுகளை தாங்கள் பத்திரப்படுத்தி வைப்பது மரபு . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது நடைமுறைக்கு வரக்கூடிய மரபு அல்ல. இதிலே எந்த விதமான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** என்னுடைய கேள்வி, பேரவைத் தலைவரிடத்தில் மாண்புமிகு உறுப்பினர்களோ அல்லது அமைச்சர்களோ கொடுக்கிற . . . . .

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** இட்டீஸ் ஆன் இன்சினுவேஷன் சார்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இன்சினுவேஷன் இல்லை.

**திரு. முனு ஆதி:** சொல்லி முடித்து, தீர்ப்புக் கூறுவதற்கு முன்னாலே அவர் எழுந்து பேசுகிறாரா?

(கூச்சல், குழப்பம்)

**திரு. முனு ஆதி:** காட்டான் மாதிரி பேசுகிறான் பாருங்கள் என்று சொல்கிறார் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், தான் அப்படிச் சொல்கிறீர்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவரிடத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் அறையிலே கொடுக்கிற தஸ்தாவேஜுகளை தாங்கள் பத்திரப்



படுத்தி வைப்பது மரபாகும். மாண்புமிகு உறுப்பினர் செழியன் அவர்கள் என்னென்ன கொடுத்து இருக்கிறார் என்பது உங்களுக்கும் அவருக்கும் தான் தெரியும். அதே போல் தங்களுடைய அறையில் என் சம்பந்தப்பட்ட கடிதம் ஒன்று தங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அதை தாங்கள் முதலமைச்சரிடத்தில் கொடுத்து விட்டதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அதே போல் இந்தத் தஸ்தாவேஜுகளும் பத்திரப்படுத்தி வைத்து இருக்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** உண்மையை ஒளிக்கிறீர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் குறித்து இப்படிப் பேசுவது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. அது நம்பிக்கையில்லை என்ற அளவுக்கு வரும். பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டேன். உட்காருங்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** சரியான விளக்கம் தேவை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே விளக்க ஒன்றுமில்லை. பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை. என்னிடம் காகிதம் கொடுத்து இருக்கிறீர்கள். நம்பிக்கை இருந்தால் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் கொடுக்கக்கூடாது. பேரவைத் தலைவர் மீது நம்பிக்கை இருந்தால் கொடுக்க வேண்டும். அது தான் முறை.

### 4. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

**(அ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு தொழில் வளர்ச்சி (நிலங்களைக் கையகப்படுத்தலும், கையறவு செய்தலும்) சட்டமுன்வடிவு.**

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1974-ம் ஆண்டு தொழில் வளர்ச்சி (நிலங்களைக் கையகப்படுத்தலும், கையறவு செய்தலும்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.*

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### (ஆ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு மதுவிலக்கு (மீண்டும் அமல் படுத்தலும்-திருத்தலும்) சட்டமுன்வடிவு

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, தமிழ்நாடு 1974-ம் ஆண்டு மதுவிலக்கு (மீண்டும் அமல்படுத்தலும் --திருத்தலும்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### (இ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தம்--செல் திறன்) சட்ட முன்வடிவு

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, தமிழ் நாடு 1974-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தம்-செல்திறன்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



### (5) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையத் தெரிவிக்கும் தீர்மானம்—தொடர்ச்சி

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, நேற்றைய தினம் இந்த நகரத்திலே குடிநீர் எவ்வளவு தட்டுப்பாடாக இருக் கிறது என்பதைப் பற்றி பேசிக்கொண்டிருந்தேன். அரசியல் குறுக்கீடின் காரணமாக பல நல்ல காரியங்கள் செய்வதற்கு பெரும் முட்டுக்கட்டையாக ஆளும் கட்சியும், இந்த அரசாங்கமும் இருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூறுவதற்கு ஓரிரு உதாரணங்களைக் காட்டுவதற்கு முன்வருகிறேன்.

உதாரணமாக, நெல்லிக்குப்பம் என்ற முனிசிபல் நகரம் தமிழ் நாட்டில் இருக்கிறது. அதற்கு குடிநீர் வழங்குவதற்கு இந்த அரசாங்கம் பாராமுகமாக இருக்கிறது. அவர்கள் அனுப்பிய பரிந்துரை இதுகாறும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இது என்னுடைய குற்றச்சாட்டு என்று கூறவிரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு பகுதியிலும் இதே மாதிரி நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. சேலம் ஜில்லாவில் ஆத்தூர் நகரத்திற்கு குடிநீர் திட்டத்திற்காக அந்த நகராட்சி பல திட்டங்களை, மனுக்களை செய்து அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் இந்த அரசாங்கமும் பாராமுகமாக இருந்து கொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூறவிரும்புகிறேன்.

இன்னொரு குற்றச்சாட்டு, கூட்டுறவு இலாகாவில் இருக்கும் ஒரு சில அதிகாரிகளைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். அவர்கள் ஒருதலைபட்சமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, அது பரமக்குடியில் ஏற்பட்டிருக்கிறது. அந்த நிகழ்ச்சி என்ன வென்றால் ஜவஹர்லால் நேரு தேசிய கைத்தறி நெசவாளர் தொழிற்சங்கம் என்பது அந்த சங்கத்தின் பெயர். 9-2-1972-ல் கூட்டுறவு சங்கம் அமைக்கவேண்டுமென்று மனு செய்தார்கள். அதற்குப்போதிய அங்கத்தினர்களும், போதிய எல்லா வசதிகளும் இருந்தபோதிலும், அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அதற்குப் பிற்பாடு ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் ஒரு மனுப் போட்டு, அதன் பேரில் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி பாரபட்சமான முறையில், அரசியல் கண்ணோட்டத் தோடு, ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறது என்று சொன்னால்,

இந்த அரசைப் பார்த்து மக்கள் நம்பிக்கையில்லை என்று சொல்கிறார்கள். மக்கள் நம்பிக்கையை இந்த அரசு இழந்து இருக்கிறது என்று சொல்வதற்குச் சான்றாக இது அமைந்திருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இதுமட்டுமின்றி, வேறு சில கருத்துக்களையும் கூற விரும்புகிறேன். பெரியகுப்பத்தில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி ஆய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பெரியகுப்பம் சம்பவம் குறித்து அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் வந்திருக்கிறது என்று கேள்விப்படுகிறோம். இந்தச் சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிற நேரத்தில், அதிலும் குறிப்பாக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது விவாதம் நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில், அந்த பெரியகுப்பம் சம்பவம் குறித்து இருக்கும் என்கொயரி ரிப்போர்ட்டை ஏன் வைக்கக்கூடாது என்பதை நான் குற்றச்சாட்டாக கூற முற்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த அரசாங்கத்தின் உணவுக் கொள்கையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அரசாங்கத்திற்கு திட்டவட்டமான, தெளிவான கொள்கை இந்த உணவுப் பிரச்னையில் இல்லை என்று நான் கூற விரும்புகிறேன். அரசாங்கத்தின் கைவசம் இருந்த எல்லா உணவுப் பண்டங்களும் இப்போது குறைந்தபட்சமாக இருப்பதால், மத்திய அரசாங்கத்திடமிருந்து உணவைக் கடன் கேட்கும் நிலையில் இருக்கிறோம். எவ்வளவு ஸ்டாக் இப்போது இருக்கிறது, எத்தனை மாதத்திற்கு அது போதுமானது என்ற விவரங்களையெல்லாம் அமைச்சரவையிலிருந்து தருவார்களானால், பொது மக்கள் அதற்கு ஏற்றவாறு நடந்து கொள்வார்கள்.

தஞ்சையிலிருந்த அரிசியை எல்லாம் அங்கிருந்து எல்லா இடங்களுக்கும் விரட்டப்பட்டிருக்கிறது, அதே மாதிரி குடோனில் ஸ்டாக் இருந்ததை வேறு ராஜ்யங்களுக்கு அனுப்பி இருக்கிறார்கள். குறைந்த விலையில் இங்கே கொள்முதல் செய்து விட்டு அதிக விலையில் விற்று இருக்கிறார்கள். இப்போது அதிக விலை விற்று இருப்பதால் நமக்கு போதிய அளவுக்கு பப்ளிக் டிஸ்டிரிபியூஷனுக்கு ஸ்டாக் இல்லை என்று சுட்டிக்காட்டி, அதைக் குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன். ஃபேர் பிரைஸ் ஷாப்



தொடங்குவது அரசாங்கத்தின் குறிக்கோள் என்று சொல்கிறார்கள். அதன் எண்ணிக்கையைப் பார்க்கிறபோது மிகவும் குறைவாக இருக்கிறது. எல்லாப் பகுதிகளுக்கும் இன்று மலிவான விலையில் அரிசி கொடுக்க அரசு தவறிவிட்டது. இந்த மாதிரியான நிலைமை நீடிப்பது நியாயமல்ல என்ற கருத்தைக் கூற விரும்புகிறேன்.

இந்த நியாயவிலைக் கடைகள் திறப்பதற்காக பல இடங்களில் மனுசெய்திருக்கிறார்கள். இதிலும் கட்சிக் கண்ணோட்டம் பார்க்கப்படுகிறது. உதாரணமாக மாதவரத்தில் 4 இடங்களில் நியாய விலைக்கடைகள் திறக்க வேண்டுமென்று அந்தப் பகுதியில் இருக்கும் பெரியவர்கள் அத்தனைபேரும், அங்கேயிருக்கும் காங்கிரஸ் கமிட்டி உள்பட, சேர்ந்து மனு செய்தார்கள். அதை உதாசீனம் செய்து இருக்கிறார்கள். இதுவரையில் எந்த முடிவும் அதன் மீது ஏற்படவில்லை. ஒருவேளை அவர்களுக்குக் கொடுக்காவிட்டாலும், அரசாங்கம் அந்தப் பகுதியில் போய் என்ன சங்கடம் அவர்களுக்கு இருக்கிறது என்பதை கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதைக்குற்றச்சாட்டாக கூறவிரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வேறு சில காரியங்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் இப்போது புதிய முறை ஒன்றைக் கையாளுகிறார்கள். இப்போது எண்ணெய், கிரௌண்ட்நட் பொறுத்தவரையில் அரசாங்கம் இப்போது தாராளமாகக் கொள்முதல் செய்து ஸ்டாக் வைத்து இருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். எவ்வளவு கொள்முதல் செய்து இருக்கிறார்கள். இதனால் அரசாங்கத்திற்கு எவ்வளவு லாபம் ஏற்படும் என்பதை நாம் உணரவேண்டும்.

(முற்பகல் 10-30)

இந்தப் புதிய திட்டத்தினால் நமக்கு எவ்வளவு இழப்பு ஏற்படப் போகிறது என்பதற்கு ஓரிரு கருத்துக்களை நான் இங்கு கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். 25 சதவிகிதம் லெவி என்ற முறையிலே வாங்கவேண்டும் என்று உத்தரவிட்டதன் காரணமாக இந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக வியாபாரிகள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் பாண்டிச்சேரியில் பல பிரிவுகளை வைத்திருக்கிறார்கள். பாண்டிச்சேரியில்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஆகஸ்ட் 17

அவர்கள் விற்பனை வரி கட்டிவிட்டதாகவும், அங்கு விற்கப்பட்டிருப்பதாகவும் தஸ்தாவேஜுகளை சரிக்கட்டி வைத்துவிட்டு, எந்த லாரிகளில் பொருள்களை எல்லாம் ஏற்றிக்கொண்டிருக்கிறோம் என்ற விவரங்களையெல்லாம் அங்கு அவர்கள் தெரிவித்துவிட்டு, பாண்டிச்சேரியிலிருந்து சரக்குகள் செல்லவில்லை. நேர்மாறாக தமிழகத்திலிருந்து ஆந்திரா, கர்நாடகம் போன்ற பகுதிகளுக்கு சரக்குகளை எடுத்துக்கொண்டு போகிறார்கள். இதனால் நமது தமிழகத்திற்கு பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியிலிருக்கிற விவசாயிகள் பீதி அடைகிறார்கள். ஒரு சில வியாபாரிகள், வர்த்தகச் சூதாடிகள் இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமின்றி இருக்கின்ற உணவுப் பொருள்களை சரியான முறையிலே சேமித்து வைப்பதற்கு போதிய கிட்டங்கிகள் இல்லை, அதற்குப் போதிய இடவசதி இல்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்குச் சொந்தமான எண்ணெய் எல்லாம் பல மில்களின் காம்பவுண்டுகளில் இருப்பதாக அறிகிறேன். இம்மாதிரி சேமித்துவைத்த பொருள்களை அங்கே வைத்திருந்தால், பெருத்த நஷ்டம் ஏற்படும். ஒரு வேளை யாராவது விலைக்கு விற்றுவிட்டால் நிச்சயம் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டுவிடும். 'அந்தமான்சுக்கு' அண்மையிலே எண்ணெய் விற்கப்பட்டதாக நான் கேள்விப்படுகிறேன். ஒரு லிட்டர் ரூ. 6.30-க்கு வாங்கி ரூ. 7.50-க்கு விற்றதாக நான் கேள்விப்படுகிறேன். மத்திய அமைச்சர் திரு. கே. ஆர். கணேஷ் அவர்கள் இதற்குச் சாதகமாக இருந்தார்கள் என்ற புள்ளிவிவரங்கள் என்னுடைய கையிலிருக்கிறது. 10,000 லிட்டர்களுக்கு மேலாக அரசாங்கம் விற்றிருக்கிறது என்றெல்லாம் விவரங்கள் இருக்கின்றன.

கடலை எண்ணெய் உற்பத்தியாகும் வட்டாரத்திலும், எண்ணெய் வாணிபம் செய்யும் நிலைமையிலும் ஒரு இக்கட்டான நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இது அரசாங்கத்திற்கு லாபம் தான் தருமா, பெருத்த நஷ்டத்தைக் கொண்டு செல்லுமா என்று அரசாங்கம் தான் கணக்குச் சொல்ல வேண்டும். பொது மக்களுடைய பணத்தைக்கொண்டு இம்மாதிரியான வர்த்தக



1974 ஆகஸ்ட் 17] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

காரியங்களில் ஈடுபடுகிறபொழுது, அதிலே ஏற்படக்கூடிய லாப நஷ்டத்தை சரியான முறையிலே சீர்தூக்கிப் பார்க்கவில்லை. அதிலும் குறிப்பாக மேல் மட்டத்திலும், கீழ் மட்டத்திலும் இருக்கிற அதிகாரிகளின் திறமைக்குறைவின் காரணமாக இம்மாதிரி ஒரு இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்வதற்கு விரும்புகிறேன். தனிப்பட்ட முறையிலே எந்த ஒரு அதிகாரியையும் இழித்தும், பழித்தும் பேசவேண்டும் என்று நான் நினைக்கவில்லை. இந்த முக்கியமான விஷயத்திலே ஒரு திட்டவட்டமான கொள்கை இல்லாத காரணத்தினால் இம்மாதிரி சங்கடங்களெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. இதைப் பார்க்கின்ற பொழுது பொது மக்கள் அத்தனை பேர்களும் இந்தப் பிரச்னையை கவலையோடு உற்றுநோக்கிக் கொண்டிருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம்.

அடுத்தபடியாக, மாணவர்களைப் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மாணவர்கள் 'டெக்ஸ்ட் புக்'களை வாங்கமுடியாமல் பல கஷ்டங்களுக்குள்ளாகிறார்கள். இவைகளின் விலை அதிகமாக உயர்ந்திருப்பதன் காரணமாக அவர்கள் 'டெக்ஸ்ட் புக்ஸ்' வாங்குவதற்கு வசதியில்லாத நிலைமை இருக்கிறது. விலை உயர்ந்துகொண்டே போகிறது. ஆனால் கட்டாயமாக வாங்கவேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த 'டெக்ஸ்ட் புக்ஸ்' பொறுத்தவரையில் 'ஸ்கை ராக்கெட்டிங் பிரைஸ்' கொடுத்து வாங்கவேண்டிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி கேட்டால் மத்திய அரசு பேப்பர் ஒழுங்காகத் தரவில்லை என்ற குற்றச்சாட்டுகளையெல்லாம் இதிலே சம்பந்தப்பட்ட தொழில் அதிபர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ரூ. 2½ விற்ற காகிதம் இப்பொழுது ரூ. 7½-க்கு மேல் விலையாக இருக்கிறது என்ற கணக்குகளையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாகப் பார்த்தால் 'டெக்ஸ்ட் புக்ஸ்' கிடைக்காத காரணத்தினால் மாணவர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், அல்லல் உற்றுக்கொண்டிருக்கிறார்கள், அரசாங்கம் பாராமுகமாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் கூறுவதற்கு முற்படுகிறேன்.

அதுமட்டுமின்றி இன்னொரு விஷயத்தையும் பற்றி கூற வேண்டுமென்று நான் நினைக்கிறேன். இன்று அரசாங்கத்திலிருந்து பல வசூல்கள் நடந்துகொண்டிருக்கிறது. உதாரணமாக

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஆகஸ்ட் 17

அண்மையிலே புதுக்கோட்டையில் நடந்த வசூலைப்பற்றி நான் ஒரு குற்றச்சாட்டை கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். புதுக்கோட்டையிலிருக்கிற புதுக்கோட்டை மாவட்ட மில் உரிமையாளர்கள் சங்கச் செயலாளர் அவர்கள் ஒரு மனுவை என்னுடைய கையிலே கொண்டுவந்து தந்திருக்கிறார்கள். அதிலே என்ன கூறியிருக்கிறார்கள் என்றால், இந்த மாவட்டத்தில் ஒரு சில ரெவின்யூ அதிகாரிகள், தாசில்தார், டி. எஸ்.ஓ. போன்றவர்களெல்லாம் உடல் ஊனம் உற்றவர்களுக்கு நிதி வசூல் செய்வதிலே கட்டாயப்படுத்துகிறார்கள் என்பது தான். கட்டாய வசூல் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறார்கள். அங்கே இருக்கிற வியாபாரிகள் பலரும் அப்படிக் கொடுத்திருக்கிறார்கள். ரூ. 100, 200, 500 என்று கொடுத்திருக்கிறார்கள். 23—7—1974 அன்று புதுக்கோட்டையில் உள்ள தாசில்தார், புதுக்கோட்டை தாலுகா டி.எஸ்.ஓ., மற்றும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்ற அலுவலர்களெல்லாம் மக்களையும், அங்கு இருக்கிற வியாபாரிகளையும் பயமுறுத்தி கட்டாயமாக வசூல் செய்கிறார்கள். ரைஸ் மில் வைத்திருப்பவர்கள் எல்லாம் ஒரு சிலருக்கு ரூ. 200 என்றும், நெல் ஊரப்போட லைசென்ஸ் உள்ளவர்கள் ரூ. 500 என்றும் கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தி, அங்கிருந்து 'டி' ரிஜிஸ்டர்களையெல்லாம் கைப்பற்றிக்கொண்டு போயிருக்கிறார்கள் என்று புகார் வந்திருக்கிறது. இது சம்பந்தமாக முதல் அமைச்சர் அவர்களிடமும் மனு கொடுத்திருக்கிறார்கள்; அங்கிருக்கிற மாவட்ட கலெக்டரிடமும் மனு கொடுத்திருக்கிறார்கள்.

இன்னொரு பரிதாபகரமான நிகழ்ச்சி அங்கு நடந்திருக்கிறது. அது என்னவென்றால், அங்கு சிவகுரு விலாஸ் என்ற ரைஸ் மில் உரிமையாளர் திரு. முத்துகிருஷ்ணன் என்பவர் ஏற்கனவே நோய்வாய்ப்பட்ட ஒரு பெரியவர். 23—7—1974 அன்று அதிகாரிகள் மிரட்டி ரூ. 300 கொடுக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தியதாகவும், அவர் ஏதோ ரூ. 100 கொடுத்ததாகவும், அது போதாது என்று அவரைத் தாறுமாறாக அதிகாரிகள் ஏசியதன் காரணமாக அவர்களின் நோய் வலுப்பெற்று அவர்கள் திடீரென்று 4 மணிக்கு இறந்துவிட்டார்கள் என்ற செய்தியையும் தந்திருக்கிறார்கள்.



1974 ஆகஸ்ட் 17] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இம்மாதிரி நிகழ்ச்சி நடந்திருப்பதாக புகார் கூறப்படுகிற பொழுது, இன்று அரசோச்சுகிற ஆட்சி சம்பந்தப்பட்டவர்களின் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதிகாரிகளுக்கு இம்மாதிரி சுவாதீனம் அளிக்கக்கூடாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். வேலியே பயிரை மேய்வது போல் இம்மாதிரி நிகழ்ச்சிகளெல்லாம் நடந்துகொண்டிருப்பதாக பல இடங்களிலிருந்து புகார்கள் வந்திருக்கின்றன. நல்ல காரியங்களுக்கு வசூல் செய்வது பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. இம்மாதிரியான கெடுபிடி வசூல் இருக்கக்கூடாது என்பதை மட்டும் தான் நான் ஒரு குற்றச்சாட்டாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே மாதிரி பல புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. பொதுவாக, இன்று பார்த்தால் இந்த ஆட்சியிலே பல வசூல்கள் ஆண்டுதோறும் நடந்துகொண்டிருக்கிறது. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உடல் ஊனம் உற்றோர் நல்வாழ்வு நிதி, பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதி, கண் ஒளி நிதி ஆகிய நல்ல காரியங்களுக்கு வசூல் செய்வதை தான் மறுக்கவில்லை என்றும், ஆனால் அந்த வசூலில் கெடுபிடி இருப்பதாகவும் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எந்த விதமான கெடுபிடியும் இதிலே கடைப்பிடிக்கப்பட வில்லை. பொதுவாக இப்படி ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கு ஒரு மாசு ஏற்படுத்துவதற்கு யாரும் முனையக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். யாராவது அப்படி கெடுபிடி படுத்தப்பட்டு, அவரிடமிருந்து வசூலிக்கப்பட்டிருந்தால், தகவல் தருவார்களேயானால், அந்தப் பணத்தை அவர்களுக்குத் திருப்பித் தருவதோடு, அப்படி கெடுபிடி செய்த அதிகாரிகளின் மீதும் இந்த அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: என்னிடம் கடிதம் கையெழுத்துப்போடப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. 29—7—1974 என்ற தேதியில் கையெழுத்துப்போட்டு, மில் ஓனர்ஸ் அசோசியேஷன் முத்திரை பொறித்துத் தான் அவர்கள் புகார் அனுப்பி

யிருக்கிறார்கள். அதன் நகல் முதல் அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், வருவாய்த் துறை அமைச்சர் போன்ற அமைச்சர்களுக்கும் கொடுத்திருப்பதாக அதிலே விவரங்கள் இருக்கின்றன. ஆகவே, ஏதாவது அப்படி அந்தப் பகுதியிலே நிர்ப்பந்தப்படுத்தியிருந்தால், நிச்சயம் அந்த அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்ல காரியங்களுக்கு அதிகாரிகளே வசூல் செய்யக்கூடாது என்ற கருத்தை நான் துளி அளவும் கொண்டவன் அல்ல என்பதையும் இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் செய்த நல்ல காரியங்களை விமர்சிப்பதற்கு நாங்கள் எதிர்க் கட்சிகள் எதிரிக் கட்சிகளாக இருக்கவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று இருக்கிற நிலைமை மிகவும் பயங்கரமாக இருந்துகொண்டிருக்கிறது. பொதுவாக விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் தவறி இருக்கிறது. அதே மாதிரி மாணவர்களிடையே நிலவுகின்ற அமைதியின்மையை கட்டுப்படுத்தவும் இந்த அரசாங்கம் தவறியிருக்கிறது. சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கவும் இந்த அரசாங்கம் தவறியிருக்கிறது என்ற குற்றச்சாட்டுகளையும் நான் கூற முற்படுகிறேன்.

இந்த நேரத்தில் என்னுடைய கட்சியைச் சார்ந்த ஒரு தியாகி அவர்களைத் தாக்கியது சம்பந்தமாக ஓரிரு விவரங்களை இந்த மன்றத்திலே கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இராமனாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுகா வத்ராயிருப்பு என்ற ஒரு இடத்தில் பழம்பெரும் தியாகி திரு. முனுசாமிப் பிள்ளை என்பவர் இருக்கிறார். அவர் ஒரு தியாகியோடு மட்டுமின்றி அவருக்கு அரசாங்கம் பட்டயமும் அளித்திருக்கிறது. கடந்த ஜூலை மாதம் 26-ம் தேதி அவர் காலையிலே தன்னுடைய வீட்டிலிருந்து கடைவீதிக்கு வந்துகொண்டிருந்த பொழுது, வலது கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த ஒருவர் அவரை வழி மறைத்து கல் வீசியிருக்கிறார். மேலும் பலர் கூட்டமாக மிரட்டி வந்திருக்கிறார்கள். பஞ்சாயத்து உறுப்பினர் பால்ராஜ் என்பவர் வீட்டிலே புகுந்துகொண்டு, தப்பித்து இருக்கிறார். இந்த மாதிரியான வன்முறைச் சம்பவங்களை சமூகவிரோத சக்திகள்



செய்துகொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக ஏதோ ஒரு தேர்தல் நடந்ததாம். அந்தத் தேர்தலில் ஸ்தாபன காங்கிரசைச் சேர்ந்த யாரும் போட்டியிடவில்லை. ஆனால் ஆளும் கட்சிக்காரர்களும் மற்றக் கட்சிக்காரர்களும் தேர்தலில் நின்றார்கள். அதிலே இந்த தியாகிக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அவரை தாறுமாறாக அடித்து, கொல்ல வேண்டுமென்று சதி செய்துகொண்டிருக்கிறார்கள்.

இந்தமாதிரியான நிகழ்ச்சிகள் பல இடங்களிலும் நடைபெறுவதால் கட்சித் தொண்டர்களுக்கும், கட்சித் தலைவர்களுக்கும் பாதுகாப்பு இல்லாத ஒரு தன்மை இன்று நாட்டிலே ஒருசில அரசியல் கட்சிக்காரர்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான நிலைமை நீடிக்காமல், அரசாங்கம் நடுநிலைமையோடு இருந்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நாட்டில் அராஜகம் ஏற்பட்டுவிடும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எந்தக் கட்சியினராக இருந்தாலும் சிறு தவறு செய்தாலும் சட்டம், ஒழுங்கை காப்பாற்ற அவர்கள் மீது சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு அதிகாரிகளுக்கு போதிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இன்று பார்க்கும்போது தமிழ்நாட்டில் விலைவாசி அதிகமாக இருக்கிறது. அதனால் என்.ஜி.ஓ.க்கள் அரசாங்கத்திற்கு பல கோரிக்கைகளை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 30 ரூபாய் இடைக்கால நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று பல உரிமை தினங்களை எல்லாம் கொண்டாடி இருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கின்ற நிதிநிலைமையைப் பார்க்கும்போது அதனால் என்னென்ன கஷ்டங்கள் ஏற்படும் என்று அரசாங்கம் கவனிக்க வேண்டியிருக்கிறது. இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற விலைவாசியின் காரணமாக நிச்சயமாக அவர்களுக்கு பஞ்சப்படி கொடுத்தாக வேண்டியிருக்கிறது. மத்திய அரசாங்கம் எப்போது பஞ்சப்படியைக் கூட்டினாலும் அப்போது நமது மாநிலத்திலும் கொடுக்க வேண்டும். அது மட்டுமல்ல. மத்திய அரசு சிப்பந்திகளுக்கும் மாநில அரசு

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஆகஸ்ட் 17

சிப்பந்திகளுக்கும் ஒரே 'ஸ்கேல் ஆஃப் பே' கொடுப்பது சாலச் சிறந்தது. இல்லாவிட்டால் இங்கே பெரும் அமைதியின்மை ஏற்படும்.

விவசாயிகளுக்கு இன்று உரப் பற்றாக்குறை இருக்கிறது. அவர்களுக்கு போதிய அளவுக்கு உரம் கிடைக்காத நிலை இருக் கிறது. அண்மையில் மத்திய அரசிலிருந்து உரத்தின் விலையை கூட்டியிருக்கிறார்கள். ஆகையால் அதிக உணவு உற்பத்தி செய்கிற வகையில் இங்கே இருக்கிற விவசாயிகளுக்கு போனஸ் என்ற வகையிலோ அல்லது சப்சிடி என்ற வகையிலோ உதவி செய்ய வழிவகை செய்ய வேண்டும். அப்போதுதான் இன்று இருக்கிற நிலையில் உற்பத்தி பெருகும். இல்லாவிட்டால் நாட்டில் உற்பத்தி குறைந்து பெரும் பஞ்சம் ஏற்பட்டுவிடும்.

1966-ல் நமக்கு இயற்கை விளைவித்த இன்னல்களால் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. இந்த ஆண்டும் அதேமாதிரி பல இடங்களில் மழை பொய்த்திருக்கிறது. அதனால் விவசாயம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக உரம் இல்லாத காரணத் தால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாதிப்புகளைப் போக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** உரத் தட்டுப்பாடு இருப் பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தின் ஆட்சித் தலைவரிடம் இருந்து, உரம் கை இருப்பு இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. எந்த இடத்தில் நெல் உற்பத்திக்கு உரம் கிடைக்கவில்லை என்று சொன்னால் கலெக்டர் உடனே அங்கு உரம் கொடுக்க தயாராக இருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** கன்னியாகுமரி ஜில்லாவில் நானும் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன்தான். எங்களுக்கு அட்டை கொடுத்திருக்கிறார்கள். அதில் குறிப் பிட்டிருப்பதில் 2/3 பங்குதான் உரம் தந்தார்கள். அதுவும் போதிய அளவு கிடைக்கவில்லை. அதனால் வெளி மார்க்கெட்டில் இருந்து அதிக விலைகொடுத்து வாங்கவேண்டிய நிலை இருக்கிறது. இப்போது அங்கே 20,000 ஏக்கருக்கு மேல் நெல் பயிரிட முடிய



1974 ஆகஸ்ட் 17] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

வில்லை. காரணம் மழை இல்லை. பட்டணங்காலில் தண்ணீர் விடவில்லை. அதனால் அங்கு உணவு நிலைமை இன்னும் மோசமாக வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

இப்போது உரம் ஸ்டாக் இருக்கிறது என்று கலெக்டர் தெரிவித் திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அங்கே இருக் கின்ற கூட்டுறவுச் சங்கத்தில் உரம் ஸ்டாக் இல்லை. என்னுடைய ஊரான கருங்கலில் ஒரு விவசாய பாங்கு இருக்கிறது. அங்கு போதிய அளவுக்கு ஸ்டாக் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். அதே நிலைமைதான் வேறு பகுதிகளிலும் இருக்கிறது என்பதை அமைச்சரவர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் கூற விரும்புகிறேன். இன்றைக்கு படித்தவர்கள் எல்லாம் பெருத்த ஏமாற்றத்தில் இருக்கிறார்கள். பலரும் இளைஞராணியில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. அவர்கள் அதனால் அதிருப்தி அடைந்திருக் கிறார்கள். சமூகத்திலே அவர்கள் படித்தவர்களாக இருந்த போதிலும் வேலை கிடைக்கவில்லையே என்ற கவலை இருந்து கொண்டிருக்கிறது; ஒரு மாற்றம் ஏற்பட வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தேடிக் கொடுப்பதில் அரசாங்கம் முனைந்திருக்க வேண்டும். அதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுத்திருக்க வேண்டும். இன்றைக்கு வேலை கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எம்பிளாய்மென்ட் ஆபீசில் பல்லாண்டு காலமாக தங்களுடைய பெயரைப் பதிவு செய்துகொண்டிருப்பவர்களுக்கும் வேலை கிடைக்கவில்லை. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் கொஞ்சம் வேலை கொடுக்கப்படுகிறது. அதிலும் பெருத்த கஷ்டம் இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு படித்தவர்கள் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சட்டக் கல்லூரியில் அவர்களுக்கு அனுமதி கொடுப்பதற்குக் கூட இடம் இல்லை என்ற நிலை இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது வேலையில்லாத் திண்டாட்டத்தை தவிர்க்க இந்த அரசாங்கம் தவறி இருக்கிறது என்று குற்றஞ்சாட்டுகிறேன். அதே மாதிரி இந்த அரசாங்கம் உணவுப் பிரச்சனையை சமாளிக்க தவறி

விட்டது என்ற குற்றச்சாட்டையும் சுமத்துகிறேன். இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்தால் இந்த அரசாங்கம் பொதுமக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய தவறிவிட்டது. அதனால் மக்களுக்கு இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கை இல்லை. ஆகவே, பொது மக்களும், இந்த மன்றத்திலே இருக்கின்ற எங்களைப்போன்றவர்களும், தமிழ்நாட்டிலே இருக்கிற அத்தனைபேரும் இந்த அரசாங்கம் ராஜிநாமா செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகையால் இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை, நம்பிக்கை இல்லை என்று கூறி, இந்த அரசு உடனடியாக ராஜிநாமா செய்ய வேண்டுமென்று கூறி, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்து, முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இன்னும் திரு. எட்மண்ட் அவர்கள் பேசிய பின்னால் முதலமைச்சரும், உணவு அமைச்சரும் பேசவேண்டும்; அதற்குப் பின்னால் திரு. மாரிமுத்து அவர்கள் பேச வேண்டும். இப்போது மணி 10-45 ஆகிவிட்டது. இன்னும் 2-45 மணி நேரம் தான் இருக்கிறது. ஆகையால் எட்மண்ட் அவர்கள் முக்கால் மணி நேரத்தில் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. க. உரொ. எட்மண்ட்** : எனக்கு குறைந்தது ஒரு மணி நேரமாவது வேண்டும். ஒரு மணி நேரத்திற்குள் எவ்வளவு சீக்கிரமாக முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அமைச்சரவை மீது கொண்டுவரப்பட்டிருக்கின்ற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்து எங்களுடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த மன்றத்தில் எதிர்க் கட்சியைச் சேர்ந்த நாங்கள் அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லா தீர்மானத்தைக் கொண்டுவந்த பின்னால், சடந்த நாட்களாக நடைபெற்ற விவாதத்தில் எதிர்க் கட்சி வரிசையிலிருந்து குறிப்பாக ஆளும் காங்கிரஸ் கட்சியினரும், ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தி



பதற்கு முக்கிய காரணம் இன்றைய தினம் இருக்கிற உணவுப் பிரச்சனை என்று கூறினார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த மட்டில் நாட்டிலே இன்றையதினம் நாங்கள் இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு இருக்கின்ற பல்வேறு முக்கியமான காரணங்களில் இந்த உணவுப் பிரச்சனையும் ஒன்று தானே தவிர அது ஒன்று மட்டுமே காரணமல்ல என்பதை தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும், ஆளும் கட்சிக்கு துணை போகின்ற மற்ற கட்சி உறுப்பினர்களும் இங்கு பேசுகின்றபோது 6 மாதத்திற்கு ஒருமுறை அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவது என்பது இந்த அவையில் ஒரு சம்பிரதாயமாகிவிட்டது என்றும், தற்போது இந்த நாட்டிலே இருக்கின்ற நிலைமைகளுக்குக் காரணம் மத்திய அரசே தவிர மாநில அரசு அல்ல என்றும் சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தமட்டில் இந்த அமைச்சரவை மீது, இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட பின்னால், என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால் இப்போது இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மூன்றாவது முறையாக வருகிறது. மூன்றாவது முறையாக இந்த அமைச்சரவை மீது கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகின்ற நேரத்தில் அதற்கான காரணங்கள் என்ன என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

உணவுப் பிரச்சனையைப் பொறுத்த மட்டில் ஆளுகின்ற கட்சியில் இருப்பவர்களும், அவர்களுக்கு துணை போகின்ற கட்சிகளைச் சேர்ந்தவர்களும் மத்திய அரசு மீது பழியைச் சுமத்தித் தப்பித்துக்கொள்ளலாம் என்று பார்க்கிறார்கள். நான் அவர்களுடைய கவனத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சி காலத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் தமிழ்நாட்டில் அரிசி விலை எப்படி இருந்தது? அன்றையதினம் தமிழ்நாட்டில் உற்பத்தியான மொத்த அரிசியின் அளவு என்ன என்பதை ஆளும் கட்சி உறுப்

பினர்களும் அவர்களுக்கு துணை போகின்ற தோழமைக் கட்சிக்காரர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

1967 ஆம் ஆண்டு தமிழகத்தைப் பொறுத்தமட்டில் உணவுப் பண்டகங்களின் உற்பத்தி—அரிசியின் உற்பத்தி 30 லட்சம் டன்னாக இருந்தது என்பதை அன்றைய காங்கிரஸ் அரசாங்கம் கொடுத்திருக்கிற குறிப்புகளே எடுத்துக்காட்டிக்கொண்டிருக்கின்றன. அந்த நிலையில் கூட சென்னை போன்ற பகுதிகளில் தமிழ்நாட்டின் மற்ற பல்வேறு பகுதிகளில்—காங்கிரஸ் ஆட்சியில் படி அரிசி இரண்டே முக்கால் ரூபாயாகத்தான் இருந்தது.

பேரறிஞர் அண்ணா அவர்கள்—அப்போது தேர்தலிலே அவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்த நேரத்தில்—தேர்தல் சாசனத்தை மக்கள் மத்தியில் வைக்கிற நேரத்தில் கூட—நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு படி அரிசி ரூபாய்க்குக் கொடுப்போம். ஒரு படி நிச்சயம்—3 படி லட்சியம் என்று எடுத்துச் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தேர்தல் அறிக்கையில் கிடையாது.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** அன்றையதினம்—தேர்தல் பிரச்சாரத்திலே சொன்னதையும் சேர்த்துச் சொல்கிறேன். அப்போது இவருக்கு இந்தக் கட்சியோடு அவ்வளவு தொடர்பு கிடையாது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** உங்களைத் தேர்ந்தெடுத்ததே நான் தான். தேர்தல் அறிக்கையில் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று கிடையாது. அது ஒரு விளம்பரத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அப்போது நான் ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் இருந்தேன். டெலிபோனில் கேட்டேன். ஒரு படி அரிசி என்பதை போஸ்டரில் போடலாமா என்று இப்போதுள்ள முதல்வரைத்தான் கேட்டேன். போடலாம் என்றார்கள். தேர்தல் அறிக்கையில் அது இல்லை என்பதை தெளிவாக எடுத்துச் சொல்கிறேன்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** விவசாயத்துறை அமைச்சர்தான் என்னைத் தேர்ந்தெடுத்தது என்கிறார். நான் மாணவனாக இருந்த காலத்தில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்



வந்தவன். இவர் பல்வேறு கட்சியைச் சார்ந்து—கடைசியாக இதில் வந்தவர்—இவர்தான் என்னைத் தேர்ந்தெடுத்தது என்று சொல்வதைக் கேட்டுப் பரிதாபப்படுகிறேன். அவமானப்படுகிறேன். அன்றைக்கு முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஒரு படி அரிசி போடுவேன் என்றார்கள். அண்ணா அவர்கள் சொல்லாது அதை ஆதித்தனார் அவர்கள் பத்திரிகையில் போட்டிருந்தார் என்றால் குருவுக்கு மிஞ்சிய சிஷ்யனாகியிருப்பார். அப்போதே அவை பத்திரிகையில் வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** நான் சொன்னதைத் தவறாகப் புரிந்துகொள்ளவேண்டாம். தேர்தல் அறிக்கையில் இருக்கிறது என்று சொன்னார்கள். நான் அது இல்லை என்ற உண்மையைத் தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் படி அரிசி போட்டார்கள். அன்றைக்கு உற்பத்தி 30 லட்சம் டன்தான் என்கிற நிலையில்—அரிசி இரண்டே முக்கால் ரூபாயாக விற்றுக்கொண்டிருந்த நேரத்தில்—பதவிக்கு வந்த ஐந்தே மாத காலத்திற்குள்ளாக எங்கள் பகுதியிலும், மற்ற பல்வேறு பகுதிகளிலும் படி அரிசி 1¼-க்குக் கிடைக்கிற சூழ்நிலையை உருவாக்கித் தந்தார்கள். முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனே—சாக்குப் போக்குச் சொல்கிற வகையில், பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கின்ற வகையில் அவர்கள் மத்திய அரசாங்கத்தின் மீது பழியைப்போடவில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தம்மிடத்தில் இருக்கிற அதிகாரத்தை எல்லாம் பயன்படுத்தி—பதுக்கல்காரர்களையும், கடத்தல்காரர்களையும் பிடித்து—போதுமான அளவுக்குக் கொள்முதல் செய்து—சென்னையிலும், கோவையிலும் ரூபாய்க்குப் படி அரிசி வழங்கும் திட்டத்தை மேற்கொண்டதன் காரணமாக தமிழகமெங்கும் 3 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்த படி அரிசி விலையை 1¼ ரூபாய்க்குக் குறைத்துக் காட்டிய சாதனை அவரைச் சேர்ந்ததாகும்.

அன்றையதினம் இருந்த அரிசி உற்பத்தியைவிட இன்றையதினம் அரிசி உற்பத்தி பலமடங்கு அதிகமாகியிருக்கிறது. இன்றைக்கு தமிழக அரசாங்கம் கொடுத்த கணக்கின்படியே

விட்டது என்ற குற்றச்சாட்டையும் சுமத்துகிறேன். இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்தால் இந்த அரசாங்கம் பொதுமக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய தவறிவிட்டது. ஆகவே மக்களுக்கு இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கை இல்லை. ஆகவே, பொது மக்களும், இந்த மன்றத்திலே இருக்கின்ற எங்களைப்போன்றவர்களும், தமிழ்நாட்டிலே இருக்கிற அத்தனைபேரும் இந்த அரசாங்கம் ராஜிநாமா செய்ய வேண்டு மென்று விரும்புகிறார்கள். ஆகையால் இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை, நம்பிக்கை இல்லை என்று கூறி, இந்த அரசு உடனடியாக ராஜிநாமா செய்ய வேண்டுமென்று கூறி, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்து, முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் திரு. எட்மண்ட் அவர்கள் பேசிய பின்னால் முதலமைச்சரும், உணவு அமைச்சரும் பேசவேண்டும்; அதற்குப் பின்னால் திரு. மாரிமுத்து அவர்கள் பேச வேண்டும். இப்போது மணி 10-45 ஆகிவிட்டது. இன்னும் 2-45 மணி நேரம் தான் இருக்கிறது. ஆகையால் எட்மண்ட் அவர்கள் முக்கால் மணி நேரத்தில் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** எனக்கு குறைந்தது ஒரு மணி நேரமாவது வேண்டும். ஒரு மணி நேரத்திற்குள் எவ்வளவு சீக்கிரமாக முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடித்துவிடு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அமைச்சரவை மீது கொண்டுவரப்பட்டிருக்கின்ற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்து எங்களுடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் என்னுடைய கருத்துக் களை இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த மன்றத்தில் எதிர்க் கட்சியைச் சேர்ந்த நாங்கள் அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லா தீர்மானத்தைக் கொண்டுவந்த பின்னால், சடந்த 4 நாட்களாக நடைபெற்ற விவாதத்தில் எதிர்க் கட்சி வரிசை யிலிருந்து குறிப்பாக ஆளும் காங்கிரஸ் கட்சியினரும், ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்





பதற்கு முக்கிய காரணம் இன்றைய தினம் இருக்கிற உணவுப் பிரச்சனை என்று கூறினார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த மட்டில் நாட்டிலே இன்றையதினம் நாங்கள் இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு இருக்கின்ற பல்வேறு முக்கியமான காரணங்களில் இந்த உணவுப் பிரச்சனையும் ஒன்று தானே தவிர அது ஒன்று மட்டுமே காரணமல்ல என்பதை தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும், ஆளும் கட்சிக்கு துணை போகின்ற மற்ற கட்சி உறுப்பினர்களும் இங்கு பேசுகின்றபோது 6 மாதத்திற்கு ஒருமுறை அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவது என்பது இந்த அவையில் ஒரு சம்பிரதாயமாகிவிட்டது என்றும், தற்போது இந்த நாட்டிலே இருக்கின்ற நிலைமைகளுக்குக் காரணம் மத்திய அரசே தவிர மாநில அரசு அல்ல என்றும் சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தமட்டில் இந்த அமைச்சரவை மீது, இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட பின்னால், என்னுடைய நினைவு சரியாக இருக்கு மானால் இப்போது இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மூன்றாவது முறையாக வருகிறது. மூன்றாவது முறையாக இந்த அமைச்சரவை மீது கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகின்ற நேரத்தில் அதற் கான காரணங்கள் என்ன என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

உணவுப் பிரச்சனையைப் பொறுத்த மட்டில் ஆளுகின்ற கட்சியில் இருப்பவர்களும், அவர்களுக்கு துணை போகின்ற கட்சி களைச் சேர்ந்தவர்களும் மத்திய அரசு மீது பழியைச் சுமத்தித் தப்பித்துக்கொள்ளலாம் என்று பார்க்கிறார்கள். நான் அவர் களுடைய கவனத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சி காலத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் தமிழ்நாட்டில் அரிசி விலை எப்படி இருந்தது? அன்றையதினம் தமிழ்நாட்டில் உற்பத்தியான மொத்த அரிசியின் அளவு என்ன என்பதை ஆளும் கட்சி உறுப்

லட்சம் டன் அளவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். முன்பு இருந்ததைவிட ஏறத்தாழ 21 லட்சம் டன்னிற்கும் அதிகமாக உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது. இப்படி உணவு உற்பத்தி மிக அதிகமாகப் பெருகியிருக்கிற நேரத்தில் உணவுப் பண்டங்களின் விலை குறையுமா? ஏறுமா? சாதாரண பொருளாதார தத்துவத்தை அடிப்படையாக வைத்துப் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம். இன்றையதினம் நிலைமை என்ன? ஆட்சியில் இருக்கிற முதலமைச்சராக இருந்தாலும் சரி, உணவுத் துறை அமைச்சராக இருந்தாலும் சரி—விளைச்சல் கூடியிருக்கிறது—பசுமைப் புரட்சியின் மூலம் பல்வேறு சாதனைச் செய்திருப்பதன் காரணமாக தமிழகம் தன்னிறைவு பெற்றிருப்பதோடு, வெளி மாநிலங்களுக்கும் உணவுப் பொருளை அனுப்பிவைக்கிற நிலையை அடைந்திருக்கிறது என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இந்த அளவுக்கு உணவு உற்பத்தி பெருகியிருக்கிற நேரத்தில் கிராமப்புறங்களில் படி அரிசி 4 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறது என்றால்—இதற்கு அரசாங்கம் சொல்கிற ஒரே காரணம் மத்திய அரசாங்கத்தின் மீது பழிபோடுவதுதான். ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற எங்களை போதுமான உணவு தானியத்தைக் கொள்முதல் செய்யக்கூடாது என்று அவர்கள் தடுத்தார்களா? பதுக்கல்காரர்களிடம், கடத்தல்காரர்களிடம் இருக்கிற தானியத்தைப் பறிமுதல் செய்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று மத்திய அரசாங்கம் தடுத்தார்களா? இல்லை.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் அவர்கள்—1964-இல் சட்டமன்றத்தில் உறுப்பினராக எதிர்வரிசையில் இருந்த போது வெளியில் பேசியிருக்கிறார்கள். 1964-ஆம் ஆண்டு பேசியிருக்கிறார்கள். பதுக்கல் வியாபாரிகள் அரிசியைப் பதுக்குகிறார்கள். இந்த அரசாங்கம் இந்த பதுக்கல் வியாபாரிகளுக்குப் பின்னே பதுங்கிக்கொள்கிறார்கள்—பதுக்கல் வியாபாரிகள் யாரையாவது பிடித்தார்களா? பதுக்கப்பட்ட அரிசியை வெளியே ஏன் கொண்டுவரக் கூடாது என்ற கேள்வியைச் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் பொதுக்கூட்டத்தில் கேட்டிருக்கிறார்கள். இன்றைக்கு இதைத்தான் முதலமைச்சரைக் கேட்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.





பதுக்கல் இருக்கிறது, கடத்தல் இருக்கிறது என்பதை அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். எத்தனை பதுக்கல்காரர்களைப் பிடித்திருக்கிறீர்கள்? எத்தனை கடத்தல்காரர்களைப் பிடித்திருக்கிறீர்கள்? ஒரு அச்சிட்ட புத்தகத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதைத் துருவித் துருவிப் பார்க்கிறேன். ஆண்டுதோறும் எத்தனை ஆயிரம் க்விண்டால் அரிசி பிடிக்கப்பட்டிருக்கிறது என்கிற கணக்கைக் கொடுத்திருக்கிறார்களே தவிர—உண்மையாக அதுபோல கள்ளக்கடத்தல் செய்த பதுக்கல் செய்த எத்தனை வியாபாரிகள் மீது வழக்குப்போட்டிருக்கிறார்கள்? எந்தவிதமான வழக்கும்—யார் மீதும் பதிவு செய்யப்பட்டிருப்பதாக இந்தப் புத்தகத்தில் இல்லை. அந்த அளவுக்குப் பதுக்கல் காரர்களை—கள்ளக்கடத்தல்காரர்களை நாட்டில்—அவர்கள் மீது வழக்குப் போடாமல்—அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்காமல் விட்டுவைத்திருப்பதன் காரணத்தினுல்தான் இன்றைக்கு அரிசி விலை ஏறியிருக்கிறது. இதற்கு மத்திய அரசாங்கம்தான் முழுப்பொறுப்பா? இல்லை.

இதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம்தான் நூற்றுக்கு நூறு முழுப்பொறுப்பு என்று நாங்கள் சொல்ல முடியாது என்பது போலவேதான் மத்திய அரசாங்கம்தான் முழுப் பொறுப்பு என்று சொல்லி இவர்களும் இதைத் தட்டிக் கழிக்க முடியாது. மத்திய அரசுக்கு எந்த அளவுக்கு இதில் பொறுப்பு இருக்கிறதோ அந்த அளவுக்கு மாநில அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது.

இன்றைக்கு மாநில அரசாங்கம் பதுக்கல்காரர்களின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. கடத்தல்காரர்களின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்கள் அரிசியைப் பதுக்குகிறார்கள்—கடத்துகிறார்கள். அரிசி விலை ஒரேயடியாக ஏறிவிட்டது. மக்கள் பட்டினியால் தவிக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள்.

அன்றைக்கு பராசக்தி படத்திற்கு கதை வசனம் எழுதிய டாக்டர் அவர்கள் அதில் 'கல்லைத்தான் மண்ணைத்தான் கரைத்துத்தான் குடிக்கத்தான் கற்பித்தானு' என்று எழுதினார்களே, அதையேதான் இன்றைக்குச் சொல்கிறார்கள், இந்த ஆட்சியில் கல்லைத்தான், மண்ணைத்தான் கரைத்துத்தான் குடிக்கத்தான் கற்பித்தார்களா என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 ஆகஸ்ட் 17

அந்த அளவுக்கு ஆத்திரப்படுகின்ற மக்கள் பதுக்கல்காரர்களின் கடைகளில் நுழைந்து சூறையாடுகிறார்கள். பசியினால் துடிக்கின்ற மக்கள் கடத்தல் லாரிகளை மடக்கி—அந்த உணவுப் பொருளை எல்லாம் அதிகாரிகளை வைத்துக் கொண்டு—அரசாங்கம் நிர்ணயித்த விலையில் எல்லா மக்களுக்கும் அந்த இடத்திலேயே விநியோகம் செய்யச் சொல்கிறார்கள். தாங்களே எடுத்துப் போகவில்லை. எல்லோருக்கும்தான் கொடுக்கிறார்கள். இதற்காக அவர்களுக்குக் கிடைப்பது என்ன? அடி, உதை.

பராசக்தி படத்திலே ஒருவன் இரண்டு பழங்களைத் திருடுகிறான். பழத்தைத் திருடிய அவனைப் பிடித்து அடிக்கிறபோது அவன் சொல்கிற வசனம் என்ன? "நான் இரண்டு பழங்களைத் திருடினேன்—பசிக் கொடுமையினால்"—டாக்டரைப் போல அந்த இடத்தில் வரும் வசனத்தை என்னால் அப்படியே சொல்ல முடியாது. அவர்கள் அளவுக்கு வசனம் எழுதுவதில் எனக்குத் திறமை கிடையாது—அந்த இடத்தில் அவர் எழுதியுள்ள வசனத்தின் கருத்தைச் சொல்கிறேன்—"பசி தாங்காமல் இரண்டு பழங்களை எடுத்தேன்—இதற்கு எனக்குக் கிடைத்தது அடி, உதை"—என்கிறான். இன்றைக்கு நிலைமை என்ன? பசி தாங்காமல்—ஏறிப்போகிற விலையேற்றம் காரணமாக அரிசி வாங்க முடியாது தவிக்கிற மக்கள்—கடத்தல் காரர்களின் லாரியை மடக்கி—அதிகாரிகளிடம் சொல்லி—அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு அதை அங்குள்ள மக்களுக்கு எல்லாம் விநியோகம் செய்யவேண்டும் என்று சொல்கிறபோது—அவர்களுக்கு எல்லாம் நம்முடைய கலைஞர் ஆட்சியில் கிடைப்பது என்ன? அடி, உதை—அவர்கள் மீது வழக்குகள்—அந்த அளவுக்குத்தான் நிலைமைகள் இருக்கின்றன.

(முற்பகல் 11-00)

**திரு. கே. கந்தசாமி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபொழுது, பராசக்தி கதையின் நுணுக்கத்தை எடுத்துக் காட்டுவதுபோல் இன்று கடைகளிலே அடிக்கப்படுகிற கொள்ளை, அதன் மூலமாக அமைதியின்மை ஏற்படுவதற்கு வக்காலத்து வாங்கிப் பேசுவது போலவும், அந்த ஜஸ்டிஃபை



1974 ஆகஸ்ட் 17] [திரு. கே. கந்தசாமி]

பண்ணுவது போலவும் அவர்கள் செய்தது முறை என்று கூறுகிறார்களா? அப்படிச் செய்ய வேண்டுமென்று தூண்டுகிறார்களா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை. திரு. எட்மண்ட் அவர்கள் அந்த மாதிரி எண்ணத்திலே பேசமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. கே. கந்தசாமி:** தயவுசெய்து பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லையென்று சொல்லவேண்டாம், with due respect to the chair. இது மக்களைத் தவறான—இன்று பதட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உணவுப் பிரச்னை காரணமாக அரசு ராஜீநாமா செய்ய வேண்டுமென்ற முக்கியமான பிரச்னை—பாதைக்குக் கொண்டுசென்று அமைதியின்மையை உருவாக்க உறுதுணையாக அமைகிற விதத்தில் பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் நாட்டில் நடக்கிற கொள்ளை, கொலை, திருட்டுகளை ஊக்குவிக்கிற அளவுக்கு அவருடைய பேச்சு, சினிமாவைக் காண்பித்து, ஆதரிக்கிறார்போல் அமைந்திருக்கிறதே, இதை அனுமதிக்கலாமா, இது முறையா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுகின்ற உறுப்பினரே அந்தவித எண்ணத்திலே பேசவில்லை. நீங்கள் அந்தக் கருத்திலே எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படிக் கூறுவதால், அவர் என்னை அவமானப்படுத்துகிறார்கள் என்று நான் எடுத்துக்கொள்ள மாட்டேன். இந்தக் கருத்தையே ஏற்று, அன்றையதினம் பராசக்தியிலே வசனமாக எழுதிய முதல்வர் அவர்களை அவமதிக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன்.

இன்றையதினம் பதுக்கல் இருக்கிற காரணத்தாலே நாட்டிலே விலை கூடி இருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இருக்கிற பல காரணங்களிலே அதுவும் ஒரு காரணம் என்பதை நாம் நிச்சயமாக ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். அரசாங்கத் தரப்பிலே சொல்கிற காரணம், நெல் உற்பத்திக்கான செலவு கூடியிருக்கிறது, அதனாலே விலை ஏறியிருக்கிறது என்பதாகும்.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 ஆகஸ்ட் 17

அரசு என்ன விலைக்குக் கொள்முதல் செய்தார்களோ, அல்லது என்ன விலைக்கு விற்றார்களோ அதைப் பற்றி பேச நான் தயாராயில்லை. காரணம், எங்கள் கட்சியில் பலர் அதனைப் பற்றி விரிவாகப் பேசியிருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது, கடந்த ஆண்டு கொள்முதல் செய்த நெல்லை இந்த ஆண்டு விற்கிறார்கள். உற்பத்திச் செலவு கூடியிருக்கிறது என்றால், இனிமேல் வர இருக்கிற அறுவடை நெல்லுக்கும், அதன் மூலம் செய்யப்போகின்ற கொள்முதலுக்கும்தான் விலை கூட முடியுமே தவிர, முன்னால் செய்த கொள்முதலுக்கு விலை கூட நிச்சயம் நியாயம் இல்லை என்று கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். குறைந்த விலையிலே நெல்லை வாங்கி வைத்துக் கொண்டு. பதுக்கலின் காரணமாக, இருக்கிற சூழ்நிலைகளைச் சங்கடங்களைப் பயன்படுத்திக்கொண்டு, நாட்டிலே இருக்கிற பற்றாக்குறையைப் பயன்படுத்திக்கொண்டு, கூடுதல் விலைக்கு விற்கிறார்களே? ஓராண்டுக்கு முன்னாலே கொள்முதல் செய்த அரசாங்கம் கூட இன்றைக்குக் கூடுதல் விலைக்கு விற்பது எந்த அடிப்படையில் நியாயம் என்பதை நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் படி அரிசி ரூ. 4-க்கு அரசாங்கமே நியாய விலைக் கடைகளில் விற்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் ரூ. 4 என்று நிர்ணயம் செய்தால், அரசாங்கத்திற்கு அப்பாற்பட்டவர்கள் ரூ. 4-க்குக் குறைவாக விற்பார்கள் என்று எதிர்பார்ப்பது என்ன நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

உற்பத்திச் செலவு கூடியிருக்கிறது என்று சொல்கிறார்கள். யூரியா போன்றவற்றின் விலை கூடியிருக்கிறது, போதுமான யூரியா மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்குக் கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள். இன்றையதினம் யூரியா விலை கூடியிருக்கிறது, போதுமான யூரியா அரசாங்கத்திற்குக் கிடைக்கவில்லை, மத்திய அரசாங்கம் குறைவாகத்தான் கொடுக்கிறது என்று சொல்கிறார்கள். அதற்கும் இந்த அரசாங்கம்தான் பொறுப்பு. நமக்குத் தேவையான உரத்தை நாம் பெறமுடியாமல், இந்த அளவுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்றால், அதற்குக் காரணம் இந்த அரசாங்கம்தான் என்று நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டிருக்கிறது.



1974 ஆகஸ்டு 17] [திரு. க. உரொ. எட்மண்ட்]

(*G.O. Ms. No.* 1136, *dated* 16th *July* 1974.)

ORDER.

In the context of the present acute shortage of fertilisers and the consequent complaints about malpractice in procurment and distribution, the Government have been considering the possibility of ending the system of dual control in administration, that is, by the Board of Revenue (Food Production) and the Director of Agriculture, as the functions of the two agencies have been overlapping '

என்று ஒரு உத்தரவை அரசாங்கமே போட்டிருக்கிறது. நீங்கள் உரத்தை விவசாயத் துறையின் மூலமாகவும் கொடுக்கிறீர்கள். ரெவினியூ டிபார்ட்மெண்டிலே உள்ள புட் புரடக்ஷன் துறை மூலமாகவும் கொடுக்கிறீர்கள். அதனாலே வந்த கோளாறுதான் 'மால்பிராக்டிசஸ்' என்று சொல்லியிருக்கிறார்கள், அரசாங்கத்தினுடைய உத்தரவிலே. தவறான வழிகளிலே பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்களே ஒத்துக்கொண்ட பின்னால், மத்திய அரசு உங்களுக்குக் கூடுதலான உரம் தரும் என்று எதிர்பார்ப்பதில் என்ன நியாயம் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இரண்டு மூன்று திங்களுக்கு முன்னாலே, கன்னியாகுமரியிலே உள்ள நாகர்கோவிலில், திங்கள் சந்தை என்ற ஊரில் பதுக்கி வைக்கப்பட்ட 900 மூடை உரம் சிக்கி இருக்கிறது. 10 மூட்டை ரவை, சீனி, மைதா எல்லாம் கைப்பற்றியிருக்கிறார்கள். நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை இன்றைக்கு அரசாங்கம் எப்படி பங்கிடுகிறது? ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் மூலமாகத்தான் பங்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் தேவையான உரத்தை, அட்டையைக் கொடுத்து, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே பெறமுடியவில்லையென்றால், இந்த வியாபாரிக்கு 900 மூட்டை யூரியா எப்படி கிடைத்தது என்பதை அரசாங்கம் எண்ணிப் பார்க்கவேண்டாமா?

**திரு. க. மு. இராசகோபால்:** ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக கார்டுதான் கொடுக்கப்படுகிறதே தவிர, யூரியா கொடுக்கப்படவில்லை.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** ஊராட்சி ஒன்றியத்திலே கார்டுகளை விநியோகம் பண்ணுகிறார்கள். ஆனால் உரத்தைப் பெறவேண்டிய விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களின் மூலமாகப் பெறுகிறார்கள். இரண்டிலும் ஊழல் செய்து இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியம் தேவையற்றவர்களுக்குக் கார்டு கொடுத்திருக்கிறது. உண்மையான விவசாயிகளுக்கு அட்டைகள் கொடுக்கவில்லை. கண்டவர்களுக்கெல்லாம் கொடுத்திருக்கிறார்கள், வேண்டியவர் களுக்கெல்லாம் கொடுத்திருக்கிறார்கள் என்ற வாதத்தை வைக்கலாம். அல்லது கார்டின் அடிப்படையிலே உரத்தை விநியோகம் செய்கிற . . . .

**திரு. க. மு. இராசகோபால் :** தலைவரவர்களே, அந்த அட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கொடுக்கப்பட்டு ஊரிலே இருக்கிற வி.எம்.—கணக்குப்பிள்ளை அடங்கலிலே, சிட்டிலே அந்த விவசாயிக்கு எவ்வளவு நிலம் நஞ்சை, எவ்வளவு நிலம் புஞ்சை என்று எடுத்து, கிராம சேவக்குகள் மூலமாக இந்த அட்டையிலே என்னென்ன உயர்ந்த ரக நெல்களை பயிரிடுகிறார்கள், சாதாரண நெல்லைப் பயிரிடுகிறார்களா என்பதை எழுதி, அவற்றை வைத்துத் தான் கூட்டுறவு முறையிலே கொடுக்கிறார்களே தவிர, சாதாரண மானவர்களுக்கு யாரும்கொடுக்க முடியாது.

**திரு. கு. பெரியசாமி :** துணைத் தலைவரவர்களே, விவசாயி இல்லாதவர்களுக்கு அட்டைகள் விநியோகம் செய்யப்படுகின்றன என்று சொன்னார்கள். எந்த ஊரில், யாருக்கு, எப்படி என்று விவரமாகச் சொன்னால் நன்றாக இருக்கும். பொதுப்படையாக ஒரு குற்றச் சாட்டைச் சொல்லிவிட்டுப்போனால் . . .

**திரு. ஆலடி அருணா :** துணைத் தலைவரவர்களே, உரக்கார்டு விநியோகத்தில் கிராம சேவக் கொடுக்கிறார் என்பது உண்மை. ஆனால், கணக்கர்கள் தங்கள் கையிலே யிருக்கிற கணக்கிலே ஜாய்ன்ட் பட்டாவை வைத்திருக்கிறார்கள். ஒழுங்காகப் பிரித்து வைத்திருப்பதில்லை. தங்களுக்குத் தேவையானவர்களுக்கு ஜாய்ன்ட் பட்டா அடிப்படையிலே கொடுக்கப்படுவதும், தங்களுக்குத் தேவையில்லாதவர்களுக்குத் தனிப்பட்ட முறை யிலே மறுக்கப்படுவதும் உண்மை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



**திரு. க. உரொ. எட்மண்ட் :** அட்டைகளை எப்படி கொடுத் தார்கள், ஏன் கொடுத்தார்கள் என்ற கேள்விக்கு நான் போக வில்லை. அந்தக் கேள்வியை ஆளுங்கட்சியைச் சேர்ந்த நண்பர் பெரியசாமி அவர்கள் கேட்டார்கள். கேள்வி கேட்கவேண்டிய இடத்திலே நான் இருக்கிறேன். பதில் சொல்ல வேண்டிய இடத்திலே அவர்கள் இருக்கிறார்கள்.

எனக்கு இருக்கிற சந்தேகம் ஒரு விவசாயி அட்டையைக் கொடுத்துத்தான் உரம் வாங்கவேண்டுமென்ற நியதியை நீங்கள் வகுத்த பின்னர், தனிப்பட்ட முதலாளிக்கு 900 மூட்டை கிடைத் திருக்கிறது என்றால் எப்படி கிடைத்தது ? அதற்காகப் பதில் சொல்ல வேண்டியவர்கள் ஆளுங் கட்சிக்காரர்கள். அதை அலசிப் பார்க்க வேண்டாமா ? அதனைக் கண்டு பிடித்துச் சொன்னவர் ஒரு அ.தி.மு.கழகத்துக்காரர். அந்த வியாபாரியைக் காட்டிக் கொடுத்ததற்காக, பதுக்கி வைத்திருந்த அந்த வியாபாரி, ஆட்களைக் கூட்டி, இவன் காட்டிக் கொடுத்தான், அவனைத் தாக்க வேண்டுமென்று, அ.தி.மு.கழகத்துக்காரனை அடிக்க வருகிறான், மிதிக்க வருகிறான். நான் அப்பொழுது காவல் துறை அதிகாரி களைப் பார்த்தேன். . உரத்தைப் பதுக்கி வைத்திருந்த வியாபாரி, ஆத்திரம் அடைந்து, எங்களது ஆட்களைப் பழி வாங்க முயற்சிக்கிறார், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டு மென்று கேட்டேன். பாதுகாப்புக் கொடுக்க போலீஸ் அதிகாரிகள் மறுக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க மறுக்கின்ற அளவுக்கு, பதுக்கல்காரர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க முற்படுகின்ற நிலைமைகளைப் பார்க்கும்போது, பதுக்கலுக்கு யார் காரணம் என்றால், அரசாங்கம்தான் காரணம் என்று ஆணித் தரமாக நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்னாலே நடந்த விவாதத்திலேகூட ஒரு சர்ச்சை வந்தது. எங்களுடைய கட்சித் தலைவர், புரட்சித் தலைவர் அவர்களும் நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு. மாதவன் அவர்களும் எங்கோ ஓர் இடத்திலே சந்தித்தார்கள் என்ற பிரச்னை வந்த நேரத்திலே முதலமைச்சர் அவர்கள் குறுக் கிட்டுச் சொன்னார்கள், அந்தச் சந்திப்பு திட்டமிட்டு ஏற்பட்ட நிகழ்ச்சியல்ல, அகஸ்மாத்தாக ஏற்பட்ட நிகழ்ச்சி, திடீரென்று ஏற்பட்ட நிகழ்ச்சி என்று சொன்னார்கள். எங்கே சந்தித்தார்கள் என்றால், அவர்கள் சொன்னார்கள், ஒரு கடத்தல்காரர் என்று

குற்றம் சாட்டப்பட்ட ஒரு குற்றவாளியின் வீட்டில் சந்தித்தார்கள் என்று சொன்னார்கள். இன்னும் சொன்னார்கள், அந்தக் கடத்தல்காரரை வைத்துத்தான் உங்களுடைய தலைவர் படம் எடுக்கிறார், அந்தக் கடத்தல்காரர்தான் உங்களுடைய தலைவருக்கு பட விநியோகஸ்தராக இருக்கிறார், அந்தக் கடத்தல்காரர்தான் உங்களுடைய தலைவருக்கு பைனான்ஷியராக இருக்கிறார் என்று சொன்னார்கள். நான் வாதத்திற்காகச் சொல்கிறேன், அது நாடறிந்த உண்மை, எங்களுடைய தலைவர் படத்தில் நடிக்கிறார், படம் எடுக்கிறார். . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் சொன்னதினுடைய அடிப்படையையே அடியோடு மாற்றிக்கொண்டு, தவறாகச் சொல்லிவிட்டார் என்று சொல்லி பிறகு அதன்மீது வாதக் கோட்டையை எழுப்புவது மிகச் சுலபம். நான் கடத்தல்காரர் என்று சொல்லவேயில்லை. ஊழல் புகார்கள் என்று சொல்லி ஜனாதிபதியிடத்தில் உங்கள் தலைவர் எம்.ஜி.ஆர். கொண்டு போய்க் கொடுத்தாரே, அதிலே குறிப்பிடப்பட்டுள்ள நபர் காண்ட்ராக்ட் எடுத்து இந்த அரசோடு தொடர்புகொண்டு ஊழல் செய்தார் என்று கொடுத்தாரே அப்படிப்பட்டவருடைய வீட்டில்தான் உங்களுடைய தலைவர் எம்.ஜி.ஆர். சந்தித்தார் என்றுதான் சொன்னேனேயல்லாமல் வேறு அல்ல.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** அந்தக் குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவர் வீட்டிற்கு எங்கள் தலைவர் வியாபார ரீதியாகப் போய் இருக்கலாம். ஆனால், அமைச்சர் அங்கே போகவேண்டிய அவசியம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்தக் குற்றச்சாட்டுக்களை நாங்கள் தான் ஏற்றுக்கொள்ளவேயில்லையே. அந்தக் குற்றச்சாட்டுகளை எல்லாம் மறுத்து இந்தச் சட்டமன்றத்திலேயே புத்தகமாக அச்சடித்து வைத்து இருக்கிறோம். அந்தக் குற்றச்சாட்டிலே குற்றஞ் சாட்டப்பட்டவரோடுதான் உங்களுடைய தலைவர் பழகியிருக்கிறார், அவருடைய வீட்டுக்குப் போயிருக்கிறார்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** குற்றச்சாட்டை மறுத்த காரணத்தினாலேயே குற்றச்சாட்டு இல்லையென்று சொல்லிவிட முடியாது. (Interruption). I have not completed my arguments. I am still



on my legs, let me complete my argument.

அவர்மீது குற்றச்சாட்டு கொடுத்திருக்கிறோம். அப்படிக் கொடுத்த காரணத்தினாலேயே அவர் அந்தக் குற்றச்சாட்டைச் செய்திருக்கிறார் என்று முடிவுக்கு வரவும் நான் தயாராக இல்லை Interruption)

Let me completed my argument.

கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் விசாரணையில் இருக்கின்றன. அதற்கான ஆதாரங்களை மத்திய அரசாங்கம் தேடிக் கொண்டிருக்கிறது, அப்படிப்பட்ட ஒருவருடைய வீட்டிற்குக் காரணம் இல்லாமல், போவதற்கான சூழ்நிலைகள் இல்லாமல் ஒரு அமைச்சர் அதுவும் தொழில் அமைச்சர், பொறுப்பான பதவியில் உள்ள அமைச்சர், இன்னும் சொல்லப்போனால் சட்ட அமைச்சர், இன்னும்கூடச் சொல்லப்போனால் சிறைச்சாலைத் துறையின் பொறுப்பை வைத்திருக்கின்ற அமைச்சர் ஊழல் குற்றச்சாட்டுச் சாட்டப்பட்டவருடைய வீட்டிற்குப் போகவேண்டிய காரணம் என்னவென்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் நாட்டிலே பதுக்கல்காரர்கள் இருக்கிறார்கள், கடத்தல்காரர்கள் இருக்கிறார்கள் என்றால் அதற்கு முழு பொறுப்பு நீங்கள்தான், அதற்குக் காரணம் நீங்கள்தான். நம்முடைய முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். நிலக்கடலை வியாபாரிகளைக் கூப்பிட்டுப் பேசினேன், ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காக இத்தனை லட்சம் கொடுத்தார்கள் என்று. நான் கேட்கிறேன், நல்ல காரியமோ கெட்ட காரியமோ நிதி வசூல் என்று இப்படி ஆரம்பித்துவிட்டீர்களானால் பதுக்கல் செய்வதற்கு அவர்களுக்கு தைரியம் வருமா வராதா? எந்தக் காரியத்திற்காகவும் ஒரு இலட்சம் அல்லது 10 இலட்சம் என்று நன்கொடை கொடுத்தாலும் அவர்கள் என்ன நினைப்பார்கள் என்றால் நாம்தான் இலட்சக் கணக்கில் கொடுத்துவிட்டோம், இனிமேல் நாம் பதுக்கலைச் செய்யலாம், நம்முடைய வீட்டிற்கு யாரும் வரமாட்டார்கள் என்றுதான் மனிதனுடைய அபிப்ராயம் செல்லும், அப்படிப்பட்ட தைரியம் வருமா வராதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நம்முடைய காவல் துறை நல்ல காவல் துறை, பொறுப்புள்ள காவல் துறை. திறமையுள்ள காவல்துறை என்று அடிக்கடி நான் இந்தச் சட்ட மன்றத்திலே பேசியிருக்கிறேன். நம்முடைய காவல்

துறையைப் பொறுத்தவரையிலும் it has been crippled. காவல் துறையின் கைகளை முறித்துவிட்டார்கள்; முடமாக்கி விட்டார்கள். சட்டத்தின் அடிப்படையிலே சுதந்திரமாக அந்தத் துறை செயல்படவில்லை. சில காலத்திற்குள்ளாக, இன்னும் நீங்கள் ஆட்சியில் இருக்கப்போவது ஒரு ஆண்டுக் காலம்தான், அதற்குள்ளாவது இந்தக் காவல் துறை சுதந்திரமாகப் பணியாற்ற விடுங்கள், எத்தனை கடத்தல்காரர்கள் பிடிபடுகிறார்கள், எத்தனை பதுக்கல்காரர்கள் பிடிபடுகிறார்கள் என்பதைப் பார்க்கமுடியும். நிச்சயமாக பதுக்கப்பட்ட உணவுப் பண்டங்களின் விலைகள் இறங்குவதை நீங்கள் காண்பீர்கள்.

ஆனால் நடப்பது என்ன? காவல் துறை, திருடர்களைப் பிடிக்க வேண்டிய காவல் துறை, கள்ளர்களைப் பிடிக்கவேண்டிய காவல் துறை, கடத்தல்காரர்களைப் பிடிக்க வேண்டிய காவல் துறை, பதுக்கல் காரர்களை பிடிக்க வேண்டிய காவல்துறை, யார்மீது நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றால் இந்த ஆட்சிக்கு எதிராக யார் இருந்தாலும் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை எப்படி அடக்குவது யாரை ஒடுக்குவது என்பதிலேதான் சக்தியைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறதே தவிர, தேவையான காரியங்களுக்காகப் பயன்படுத்துகிறார்களா என்றால் இல்லை என்பதை மெத்தப் பணிவோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன், காரணங்கள் காட்டவேண்டுமென்றால் ஏராளமான காரணங்கள் எங்களிடம் இருக்கின்றன, ஆதாரங்கள் வைத்திருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய திரு. சீனிவாசன் அவர்களும் நம்முடைய முன்னாள் அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் அவர்களும் ஒரு காலத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தார்கள். அவர்கள் அந்தக் கட்சியிலிருந்து வெளியேறினார்கள். அப்பொழுது அவர்களுடைய வீடுகளுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அப்பொழுது போலீஸ் பாதுகாப்புக் கொடுத்தார்களா? ஆனால் எங்களுடைய



கட்சியிலிருந்து திரு. மதியழகன் அவர்கள் எங்களை விட்டுப்பிரிந்து உங்கள் பக்கத்திலே வந்தபோது, அவருக்கு என்ன ஆபத்து வருமோ, அவர்களுக்கு என்ன வந்துவிடுமோ, அவர்களைக் கெரோ செய்துவிடுவார்களோ என்ற அச்சத்திலே போலீஸ் காவல் வைத்தார்கள். அவர் அப்பொழுது அமைச்சர்கூட இல்லை, ஒரு சாதாரண சட்ட மன்ற உறுப்பினர் வீட்டிற்கு அவ்வளவு காவல், அங்கே எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்கவில்லை, எந்தவிதமான வன்முறையும் நடக்கவில்லை, எந்தவிதமான சூழ்நிலையும் ஏற்பட வில்லை, அங்கே போலீஸ் பாதுகாப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் எதிர்க்கட்சிகள் நடத்துகின்ற மாநாடுகளில் போலீஸ்காரர்களைக் காணவே இல்லை, சிறப்புக் கூட்டம் போட்டால் போலீஸ்காரர்களைக் காணவில்லை. திண்டுக்கல் தேர்தலுக்கு முன்பு திருநெல்வேலியிலே எங்களுடைய தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் சிறப்புக் கூட்டத்திற்காக வந்திருந்தபோது லட்சக் கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள், அங்கே ஒரு போலீஸ்காரர் திருஷ்டிப் பரிகாரத்திற்குக் கூட இல்லை, அங்கே என்ன என்ன செய்தார்கள் தெரியுமா? பந்தலைக் கிழித்து உள்ளே நுழைந்தார்கள், பாம்பை விட்டார்கள், பெட்ரோலை ஊற்றி எரித்தார்கள், இவ்வளவு வன்முறைகள், அராஜகங்கள் நடைபெற்றிருக்கின்றன, நான் உடனே சூப்பிரண்டெண்டெண்ட் ஆப் போலீஸிடம் வன்முறைகள் நடைபெறுகின்றன உடனே போலீஸ்காரர்களை அனுப்புங்கள் என்று சொன்னேன், அவர்கள் அதற்குச் சொன்னது, அனுப்ப முடியாது, அப்படித்தான் உத்திரவு என்று சொன்னார்கள். எங்களுக்கு அனுப்ப முடியாது. கட்சிக் காரியங்களுக்கு அனுப்ப முடியாது என்று வேண்டுமானால் அவர்கள் காரணம் சொல்லலாம், நான் ஒத்துக்கொள்கிறேன், ஆனால் பொதுமக்கள் பலர் கூடியிருக்கின்ற இடத்தில் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் இருக்க அப்படி ஏற்பட்டால் தடுத்து நிறுத்துவதற்கு காவல் துறையினர் வரவேண்டியது முறையல்லவா? வாதத்திற்காக நான் ஒத்துக் கொள்கிறேன், கட்சிக் காரியம் என்பதை.

ஆனால் திருநெல்வேலியிலே திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர் தேர்தல் நடைபெறுகிறது. திருநெல்வேலி சந்திப்பிற்குப் பக்கத்திலே உள்ள கலைஞர் கல்யாண மண்ட

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 ஆகஸ்ட் 17,

பத்திலே மாவட்டச் செயலாளர் தேர்தல் நடைபெறுகிறது. நான் காலையிலே அந்தப் பக்கத்திலே போகிறேன், நூற்றுக்கணக்கான போலீஸார் இருக்கிருர்கள், எத்தனை துப்பாக்கிகள், எத்தனை குண்டாந்தடிகள், உதவி ஆய்வாளர்கள் மட்டுமல்ல, மாவட்ட போலீஸ் அதிகாரி, மாவட்ட ஆட்சித் தலைவர் எல்லாம் அங்கே வந்திருக்கிருர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட செயலாளர் தேர்தலுக்கு போலீஸ்காரர்கள் வருகிருர்கள், மாவட்ட அளவிலே உள்ள போலீஸ் அதிகாரி, மாவட்ட ஆட்சித் தலைவர் வரவேண்டிய அவசியம் என்ன? இந்த அளவிலே நாட்டிற்கு நிலைமைகள் நடந்து கொண்டிருக்கின்றன, ஒரு பக்கத்திலே எதிர்க்கட்சிகளை அடக்குவதற்கும் மற்ருெரு பக்கத்திலே ஆளுங் கட்சிக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கும் மக்கள் கொடுத்த வரிப் பணம் தி.மு.க. ஆட்சியைக் காப்பதற்காக எதிர்க்கட்சியை அடக்குவதற்காக செலவழிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டை பயங்கரமான குற்றச்சாட்டை நான் தெரிவித்க்கொள்கிறேன்.

திருநெல்வேலியைப் பொறுத்தவரையில் ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. மத்திய கூட்டுறவு வங்கி இருக்கிறது. அந்த வங்கிக்குச் சொந்தமான கார் இருக்கிறது மத்திய கூட்டுறவு வங்கியின் வேலைக்காக மத்திய கூட்டுறவு வங்கியின் காரைப் பயன்படுத்தியிருக்கலாம். மாருக கார் இருக்கும்பொழுது கட்சிக்கு வேண்டிய ஒருவரின் மனைவியின் கார் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறது. அதற்குக்கூட ஆதாரம் கொண்டு வந்திருக்கிறேன். தலைவாவர்களின் அனுமதியோடு இதைப் படிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை முன்கூட்டியே கொடுத்து பர்மிஷன் வாங்கிவிட்டார்களா? சரி, படியுங்கள்.

THIRU G. R. EDMUND: Notice under Rule 40 of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. Present: Thiru K. R. Sambandam, B.A., Joint Registrar of Co-operative Societies, Tirunelveli Region, Tirunelveli-2.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, on a point of order . . .

THIRU G. R. EDMUND: The Speaker has given me permission and you have no business to interfere.



1974 ஆகஸ்ட் 17]

MR. DEPUTY SPEAKER: The hon. Member may refrain from using such strong words.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, I am raising on a point of order.

THIRU G. R. EDMUND: The point of order cannot be raised after Speaker's ruling.

MR. DEPUTY SPEAKER: The Hon. Minister himself was a Presiding Officer of this House. I do not think that he will raise a point of order against the ruling of the Chair.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: I am not raising a point of order against the ruling of the Chair. I am merely saying that a notice had been given and he is reading that notice. I request that reply should also be read by the hon. Member.

THIRU G. R. EDMUND: I want to know from the Hon. Minister whether he is aware of the fact that no reply has been sent for this notice. The Hon. Minister may . . . .

MR. DEPUTY SPEAKER: Please continue the reading of the Notice.

THIRU G. R. EDMUND: The subject matter of the notice is disqualification. Thiru M. P. Alagianambi, Committee member of the Tirunelveli Central Co-operative Bank Ltd., Tirunelveli,

Disqualification to continue as a Committee member-Representations called for.

Thiru M. P. Alagianambi, Chairman of the Tirunelveli Central Co-operative Bank Ltd., Tirunelveli is an elected member of the Committee of the said Central Bank from the constituency of Co-operative Farm Service Co-operative Societies, Agro-Engineering and Service Co-operative Centres, District Co-operative Agro Service Societies and District Agro Engineering and Service Co-operative Centres.' He was elected as a member of the Committee of the Tirunelveli Central Co-operative Bank Ltd., Tirunelveli on 2nd January 1974 and his present term of office will expire on 31st December 1976. The car TNT 2939 registered in the name of Thirumathi A. Subbulakshmi, wife of Thiru M. P. Alagianambi

has been engaged by the said Central Bank and a sum of Rs. 1,740 has been paid by it as hire charges in April 1974. Thiru M. P. Alagianambi is thus interested indirectly in this transaction and he has become disqualified to hold his office as a member of the Committee of the Tirunelveli Central Co-operative Bank Ltd., Tirunelveli according to clause (a) of Sub-section (2) of Section 28 of Tamil Nadu Co-operative Societies Act, 1961. In exercise of the powers delegated to the Regional Joint Registrars in G.O. Ms. No. 3177 (Co-operation) Agriculture Department, dated 20th November 1967 and under the provisions contained in rule 40 of the Tamil Nadu Co-operative Societies Rules 1963, the Joint Registrar of Co-operative Societies, Tirunelveli Region directs Thiru M. P. Alagianambi and the Committee of the Tirunelveli Central Co-operative Bank Ltd., Tirunelveli to make his/its representation within 15 days from the date of receipt of this notice as to why he (M.P. Alagianambi) should not be removed from the Committee of the Tirunelveli Central Co-operative Bank Ltd., Tirunelveli. . . . . .

I have also got another notice which has been sent by the same Joint Registrar of Co-operative Societies against the Vice-Chairman of the Tirunelveli Central Co-operative Bank Ltd., Tirunelveli. I am simply placing it before the Hon. Deputy Speaker for his persual because I have no time to read it.

(Copies of notices were handed over to the Deputy Speaker.)

இந்த அளவிற்கு ஒரு முன்னாள் மாவட்டச் செயலாளர் கூட்டுறவு வங்கியின் தலைவராக இருக்கிறார்கள். கூட்டுறவு வங்கிக்கு என்று ஒரு கார் இருக்கிறது. கூட்டுறவு வங்கியின் வேலைகளுக்காக அந்தக் காரைப் பயன்படுத்தாமல் அவருடைய மனைவியின் பெயரில் உள்ள காருக்கு மாதம் ஒன்றுக்கு 1,740 ரூபாய் வாடகை கொடுக்கிறார்கள் என்றால், அதற்காக ஒரு ஜாயிண்ட் ரெஜிஸ்தார் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்.

"Why he should not be disqualified" is a great charge. It is a great and grave charge."

அளவிற்குப் பெரிய குற்றச்சாட்டை பொறுப்புள்ள அந்த அதிகாரி





கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் சொல்கிறார், மிகவும் சாதுர்யமாக, சாதாரணமாக, இன்னும் சொல்லப்போனால் ஏளனமாகக் கூட சொல்கிறார்கள், அவர் சொல்லியிருக்கின்ற பதிலையும் படிக்க வேண்டுமாம். பதிலையும் படிக்க வேண்டுமா? எந்த குற்றவாளி ஒப்புக்கொள்வான்? 1,740 ரூபாய் என்று வங்கிக் கணக்கில் இருக்கிறது, பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது, கணக்கில் இருக்கிறது, பிறகு குற்றச்சாட்டைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் பிறகு அவர் என்ன காரணம் கொடுத்தால் என்ன? என்ன காரணத்தைக் கொடுத்தால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்? அதைத்தான் இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம். அவர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர். ஆனால் இதே தவறை எதிர்க்கட்சிக்காரர் செய்திருந்தால் போலீஸ் இயந்திரங்கள் என்ன வேகமாக வேலை செய்யும்?, ஆட்சி இயந்திரங்கள் என்ன வேகமாக வேலை செய்யும். 24 மணி நேரத்தில் அவனைக் கைது செய்வார்கள். 24 மணி நேரத்திற்குள் குற்றப் பத்திரிகையைத்தாக்கல் செய்கிறீர்கள். எவ்வளவு துரிதமாக நீதி விசாரணை நடத்த வேண்டுமோ அவ்வளவு துரிதமாக நடத்தி எவ்வளவு விரைவில் சிறைச்சாலைக்குள் தள்ள வேண்டுமோ அவ்வளவு விரைவில் தள்ள அத்தனை முயற்சிகளிலும் ஈடுபடுகிறீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆளுங்கட்சிக்காரரான அழகிய நம்பி ஒரு தவறைச் செய்தார் என்று அதிகாரிகள் உணர்ந்ததும் ஆளுங்கட்சிக்காரர் என்று பயப்படாமல் நோட்டீஸ் கொடுத்ததை திரு. எட்மண்ட் அவர்கள் பாராட்டுகிறார்களா அல்லது நோட்டீஸ் கொடுத்தது தவறு என்று சொல்கிறார்களா?

**திரு. க. உரோ. எட்மண்ட்:** தலைவரவர்களே, நான் பாராட்டுகிறேன். இதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர் கொடுத்த பதிலையும் படிக்க வேண்டுமென்று அவருக்காக வக்காலத்து வாங்கிய விவசாயத் துறை அமைச்சரவர்களுக்காகப் பரிதாபப்படுகிறேன். நான் அதைத்தான் எதிர் பார்க்கிறேன். அதிகாரிகள் தைரியமாக, சுதந்திரமாகப் பணியாற்ற வேண்டும். முதலமைச்சரை பாராட்டுகிறேன்.

**திரு. இரா. இராமலிங்கம்:** தலைவரவர்களே, ஆண்டுதோறும் கடன் வசூலிக்கின்ற நேரத்தில் இப்படி 10 அல்லது 15 கார்கள் வாடகைக்குப் பிடிப்பது வழக்கம். அதே போல் இப்பொழுது 10 கார்களை வாடகைக்குப் பிடித்திருக்கிறார்கள். டூரிஸ்ட் டாக்சி என்ற வகையில் இந்தக் காரை வாடகைக்குப் பிடித்திருக்கிறார்களே தவிர வேண்டுமென்றே ஒரு கார் இருக்கும்பொழுது இன்னொரு காரைப் பயன்படுத்துவது என்பது அல்ல.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** ஏதோ ஒரு கார் ஏதோ ஒரு நேரத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதற்காகத்தான் இன்னொரு ஆதாரத்தையும் வைத்திருக்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் இம்மாதிரி பிரச்சினையைக் கிளப்புவார்கள் என்பதற்காகத் தான் வைத்திருக்கிறேன்.

இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. அதே அழகிய நம்பியின் மீது திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட் ஊழியர் சங்கத்தில் காரியதரிசி புகாரை திருநெல்வேலி மாவட்ட மத்திய ஊழியர் சங்கத்தின் சார்பில் அனுப்பினார்கள். இன்னும் பல குற்றச்சாட்டுகளைக் கொடுத்திருக்கிறார்கள். எப்படி இந்த வங்கி பயன்படுத்தப்படுகிறது, என்னென்ன நடக்கிறது அந்த வங்கியிலே, தொலைபேசியில் எத்தனை டிரங்க்கால்கள், தூரத் தொலைபேசி பதிவு செய்யப்பட்டிருக்கிறது எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமலிங்கம் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களேயானால் அதற்குமேல் இதைப் பற்றித் தொடர்ந்து பேச நான் தயாராக இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாவட்ட வங்கியைப் பற்றி திரு. எட்மண்ட் அவர்கள் பேசியதால் அது தொடர்பான ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அழகிய நம்பி மாவட்ட செயலாளர் என்ற முறையில், நான் கட்சித் தலைவன் என்ற முறையில் எனக்கும் அவருக்கும் தொடர்பு. உற்ற நண்பர் என்ற முறையில் இருக்கும் தஞ்சை மாவட்ட வங்கியின் தலைவராக இருந்த மாணிக்கவாசகத்தின் மீது குற்றங்கள் நிரூபிக்கப்பட்ட



நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் அவர்கள் உணர்வார்கள். அதைப்போல இதிலேயும் குற்றம் நிரூபிக்கப்பட்டால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** நான் அந்த நம்பிக்கையின்மேல் தான் அவையிலே இந்தச் சம்பவங்களைக் கூறினேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்த நம்பிக்கையிலே என்று சொல்லிவிட்டு, பிறகு நம்பிக்கையில்லை என்று சொல்கிறீர்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** செய்திருக்கிற பல நூற்றுக் கணக்கான தவறுகளில் ஒன்றைத் திருத்திக் கொண்டோம் என்று சொன்னால் எப்படி நம்பிக்கையிருக்கிறது என்று சொல்வேன். ஆயிரம் குற்றச்சாட்டுகளைக் கொண்டு வந்திருக்கிறோம். ஒரு குற்றச்சாட்டிற்குச் சமாதானம் சொன்னால் வேறு குற்றச் சாட்டுகளைச் சொல்கிறோமே, அவைகளுக்கு நடவடிக்கை எடுக்கப் போகிறீர்களா? மேலும் இப்படிப்பட்ட குற்றங்கள் நடக்காமல் தடுக்கும் முறையில் உங்களுடைய திறமையைப் பயன்படுத்தவில்லை என்பதால்தான் உங்கள் மேல் நம்பிக்கை இல்லை என்று சொல்கிறேன்.

(முற்பகல் 11-30)

போலீஸ் இருக்கிறது. குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திருநெல்வேலி மாவட்ட வங்கியின் தலைவரின் துணைவியாரின் பெயரில் உள்ள கார் பயன்படுத்தப்பட்டது என்றால் அது உடனடியாக முதலமைச்சருடைய கவனத்திற்கு வந்துவிடக் கூடிய விவகாரம் அல்ல. நம்முடைய எட்மண்ட் அவர்கள் உடனடியாக என்னிடம் சொல்லியிருந்தால் நல்லெண்ணத்தோடு கவனித்திருப்பேன். அவரே சொல்லுகிறார்—அதிகாரி நடவடிக்கை எடுத்திருப்பதாக. பதில் எழுதியிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. விசாரணை முடிவில் அழகிய நம்பி மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் மாணிக்கவாசகத்தின் மீது நடவடிக்கை எடுத்தது போல் இதிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. துரை கோவிந்தராசன்:** தஞ்சை மத்திய வங்கியின் தலைவர் மாணிக்கவாசகம் அவர்கள் மீது ஏதோ குற்றம் சாட்டப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக முதலமைச்சர்

அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் அழகிய நம்பியினுடைய மனைவி பேரிலுள்ள வண்டிக்கு மத்திய வங்கியிலிருந்து பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதாகும். ஆனால் மாணிக்கவாசகத்தின் மேல் உள்ள குற்றச்சாட்டு— அவருடைய மனைவி பெயரில் மாவட்ட வங்கிகளில் பெற்ற பணத்தைக் கண்டு பிடித்த பிறகுதான் வழக்குத் தொடரப்பட்டு இன்னும் முடிவுறாமல் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** முதலமைச்சர் அவர்கள் கொடுத்த உறுதி மொழிக்காக உண்மையில் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

முன்னாள் அமைச்சர் மாண்புமிகு சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் அமைச்சரவையில் இருக்கும்போது ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அமைச்சருடைய உத்தரவைப் பல நேரங்களில் அதிகாரிகள் செயல்படுத்துவதில்லை என்றார்கள். ஒரு அமைச்சரின் கீழே பணியாற்றக் கூடிய அதிகாரிகள் அவருடைய உத்தரவை ஏற்றுச் செயல்படுத்த மறுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைப் பொறுப்புள்ள அமைச்சர் சட்டமன்றத் திலேயே சொல்லியிருக்கிறார்கள். அதைச் சொன்னதற்குப் பிறகு அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். ஏன் அவர்கள் வெளி யேற்றப்பட்டார்கள் என்ற விமர்சனங்களைச் சொல்லத் தயாராக இல்லை. அது அவர்களுடைய கட்சிக் காரியங்கள், உள் விவகாரங்கள், நான் கவலைப்படத் தயாராக இல்லை.

என்னுடைய கேள்வி எல்லாம் இப்படி ஒரு பயங்கரமான குற்றச்சாட்டை அமைச்சரவைப் பொறுப்பில் இருக்கும்போது ஒரு அமைச்சர் கூறியிருக்கிறார். அதுபற்றி முதலமைச்சர் விசாரித்தார்களா? அந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் படாமல் அதற்கு ஆதாரம் இல்லை என்று ஏற்றுக் கொண்டார்களா? என்ன விசாரணை நடந்தது? என்னென்ன குற்றச்சாட்டுகள் அதிகாரிகள் மீது கொண்டுவரப்பட்டது? அவர்கள் என்னென்ன விளக்கங்களைக் கொடுத்தார்கள்? எந்த அடிப்படையில் முடிவுகளை எடுத்தீர்கள்? அந்த முடிவுகளைச் சட்டசபையில் வைத்தார்களா? பெரிய இருட்டறையில் இருப்பது போல் இருக்கிறது. அந்த அளவுக்கு ஊழல்கள் நடந்து கொண்டிருக்கின்றன.





பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராக சித்திர பாண்டியன் என்பவர் இருக்கிறார். கட்டப்படாத ஒரு மண்ட பத்தைக் கட்டியதாகக் கோப்பு தயாரித்து 5,000 ரூபாய் கொடுத் ததாகக் கணக்கு எழுதியிருக்கிறார்கள். அது அதிகாரியால் கண்டு பிடிக்கப்பட்டு காவல் துறைக்குப் புகார் கொடுத்து அவர் மீது இ.பி.கோ. 409-ன் கீழ் கிரிமினல் மிஸ்அப்ரோபிரியேஷன் சட்டத் தின்கீழ் வழக்கு போடப்பட்டிருக்கிறது. அந்த வழக்கு எங்கே இருக்கிறது? திருநெல்வேலியில் இருக்கும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட் ரேட் கோர்ட்டில் இருக்கிறது. சம்பவம் நடந்து ஒரு வருஷம் ஆகிறது. இன்னும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட வில்லை. குற்றவாளி ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவர். அவர் நீதிமன்றத்திற்கு வருவதே இல்லை. அப்படி ஒரு சம்பவம் நடந்திருக்காது என்று மாண்புமிகு அன்பில் அவர்கள் கூட முன்பு சொன்னார்கள். நான் திரும்பப் போய் நீதிமன்றத்திலே போய்ப் பார்த்தேன். அரசாங்கத்திலிருந்து உத்தரவு வந்திருக்கிறது. அந்த வழக்கை மேற்கொண்டு நடத்தவேண்டாமென்று வந்திருக் கிறது. நீதிமன்றத்திற்கு எழுதி இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர் மீது போடப்பட்டிருக்கும் வழக்கை மேற் கொண்டு நடத்த வேண்டாம்; அரசாங்கத்திலிருந்து உத்தரவு வரும் வரை தாற்காலிகமாக நிறுத்தி வையுங்கள் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இதை நான் நிரூபிக்கத் தயாராக இருக் கிறேன். அந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்.

அதே போல் முகவை மாவட்டம் இளையாங்குடி ஆலந்தூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் 15,000 ரூபாய் கையாடல் செய்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. கையாடல் 15,000 ரூபாய் அல்ல, 5,000 ரூபாய் என்று சொல்லி கையாடல் வழக்கு பதிவு செய்யப் பட்டிருக்கிறது. இன்னும் அந்த ஆலந்தூர் மன்ற முன்னாள் ஊராட்சித் தலைவர் கைது செய்யப்படவில்லை. சுதந்திரப் பறவையாக எந்தவிதமான குற்றமும் செய்யாதவரைப் போல் நாட்டு மக்களிடையே அவரும் ஒருவராக நடமாடிக் கொண்டிருக்கிறார்.

**திரு. வீ. மலைக்கண்ணன் :** அவர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளிவந்திருக்கிறார்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** எவ்வளவு காலத்திற்குப் பிறகு? போன சட்டமன்றத்தில் பேசினேன் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் ஒரு கிளாரிபிகேஷன் கேட்கிறேன். அவர்கள் வருத்தப்படக்கூடாது. திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற வழக்கைப் பற்றிச் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் நீதிபதிக்கு ஸ்டே ஆர்டர் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஒரு ப்ரொஸீஜர் கிடையாது. அது உண்மையா, இல்லையா என்று சொன்னால் நல்லது. ஆதாரத்தோடு சொன்னால் நல்லது. வித்ட்ராயல் ஆப் ப்ராசிக்யூஷன், சஸ்பென்ஷன் எல்லாம் பப்ளிக் பிராசிக்யூட்டருக்குத் தெரிவித்து கோர்ட்டில் [illegible] தவிர, நேரடியாக ஜட்ஜுக்கு எழுதுகிற முறை தவறான முறை. அதற்குத் தகுந்த ஆதாரம் இருக்கிறதா? ஆதாரம் இல்லை என்றால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகின்ற நிலைமை வரும்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** நானும் வழக்கறிஞர் தான். அடிக்கடி நீதிமன்றத்திற்குப் போவேன். அப்படிப் போகிற நேரத்தில் அந்த ஃபைலைப் பார்த்திருக்கிறேன். கலெக்டருக்கு உத்தரவு வந்திருக்கிறது. மேற்கொண்டு வழக்கைத் தொடர்ந்து நடத்த வேண்டாமென்று அரசாங்கத்திலிருந்து உத்தரவு வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அந்த ஒன்றியத் தலைவர் மேல் கலெக்டர் அவர்கள் சரியான முகாந்தரம் காட்டாமல் அந்த அறிக்கையை அனுப்பியிருந்தார்கள். அதற்குத் தகுந்த முகாந்தரம் காட்டி அனுப்ப வேண்டுமென்றுதான் பதில் அனுப்பப்பட்டது. ஷோகாஸ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. உத்தரவு மாற்றப்படவில்லை.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** நான் கேட்க விரும்புவது கையாடல் செய்தார், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர். அவர் மீது உள்ளாட்சித் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** கையாடல் செய்ததாகக் குற்றம் சாட்டப்படவில்லை. இன்னின்ன சர்சார்ஜ் கட்டவில்லை என்றுதான் இருக்கிறது . . .





**திரு. க. உரொ. எட்மண்ட்:** கையாடல் செய்ததாக திருநெல்வேலி உதவி மாவட்ட ஆட்சித் தலைவரால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவு ஃபைலையும் நான் பார்த்தேன். ஒவ்வொரு பேப்பராகப் படித்தேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அவருக்குச் சரியான அவகாசம் கொடுக்குமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** பொறுப்புள்ள மாவட்ட துணை ஆட்சித் தலைவரால் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் ஜாமீனில் வெளியே வந்திருக்கிறார். உள்ளாட்சித் துறை மூலம் அவர் மேல் டிப்பார்ட்மெண்ட் நடவடிக்கை எடுக்கவில்லை . . .

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். எட்மண்ட் அவர்கள் கோர்ட்டில் போய் ஃபைலைப் புரட்டிப் புரட்டிப் பார்த்ததாகக் கூறுகிறார். அப்படி ஒரு ப்ரொஸீஜர் இருக்கிறதா? எப்படிப் பார்த்தீர்கள்? கோர்ட்டில் அப்படிப் போய்ப் பார்க்க எல்லோருக்கும் உரிமை இருக்கிறதா?

THIRU G. R. EDMUND: Every lawyer has got the liberty to go through any case files. Probably the hon. Member might not have gone through it. I have gone through a number of files.

MR. DEPUTY SPEAKER: That is not correct. Only the lawyer who has appeared for a particular party has get the right to inspect a particular document and he has to get the permission of the court to inspect all the documents.

**THIRU G. R. EDMUND:** I can get certified copies.

MR. DEPUTY SPEAKER: You are not entitled to get certified copies for any document.

**திரு. எம். ஏ. லத்தீப்:** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறபடி நேரடியாக வழக்கை நிறுத்தி வைக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் நீதிபதிக்கு உத்தரவு அனுப்புகின்ற முறை கிடையாது. அப்படி எந்தவிதமான உத்தரவு போடப்பட்டிருந்தாலும் அது நியாயமாகத் தெரியவில்லை. அப்படிக் குறிப்பு அனுப்பியதாக உறுதியாகத் தெரியுமானால் ஆதாரத்துடன் சொல்லவேண்டும். அப்படி அனுப்பியிருப்பார்

களானால் அது ஒரு பயங்கரமான குற்றச்சாட்டு. அதை இந்த அவை கூடப் பரிசீலிக்கலாம். அப்படிச் சொல்லியிருப்பார்களானால் அந்த டாக்குமென்டை நாம் சப்மிட் செய்யலாம். அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்களா?

This is a very serious matter, Mr. Deputy Speaker. Casting aspersion upon the executive authority, the District Collector of a particular district, directing the judicial officer to act in a particular way is a very serious allegation. He must substantiate that allegation. He should produce the concerned document and place it on the table of the House.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோர்ட்டுக்கு லெட்டர் எழுதியதாக ஒத்துக்கொள்ள வில்லை. அது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரத் தோடு சொல்லவேண்டும், இல்லை என்றால் அதை எக்ஸ்பஞ்ச் பண்ணவேண்டிய நிலை ஏற்படும்.

THIRU G. R. EDMUND : The Chair is totally confused.

MR. DEPUTY SPEAKER : The Chair is not at all confused and he is quite clear about it.

THIRU G. R. EDMUND : The Chair is totally confused.

(Thiru V. Krishnamurthy rose)

**திரு. க. உரொ. எட்மண்ட் :** அமைச்சர் அவர்கள் அதைத் தான் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் நீதிபதி அவர்களுக்கு அந்த வழக்கை மேற்கொண்டு நடத்த வேண்டா மென்று எழுதியிருக்கிறார்கள். . .

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** மாண்புமிகு உறுப்பினர் எட்மண்ட் அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர். இப்போதும் வழக்குரைஞர் தொழிலை நடத்தக்கூடியவர்கள். ஒரு அமைச்சரோ அல்லது சீப் செகரட்டரியோ அல்லது கலெக்டரோ நேரடியாக ஒரு மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கூட டயரக்ட் செய்து உத்தரவு போட முடியாது. ஒரு வழக்கை வாபஸ் வாங்குவது என்றால், அது கொலை வழக்காக இருந்தாலும் சரி,



அல்லது திருட்டு வழக்காக இருந்தாலும் சரி எந்த வழக்காக
இருந்தாலும் அதை வாபஸ் வாங்கவேண்டுமென்று முடிவு
எடுத்தால் அந்த முடிவை அங்குள்ள போலீஸ் அதிகாரிகளுக்கு
அல்லது பப்ளிக் ப்ராஸிக்யூட்டருக்கு அனுப்புவது வழக்கம்.
அப்படித்தான் அனுப்பியிருப்பார்கள். ஆனால் எதிர்கட்சித்
தலைவர் அவர்கள் கூறுவது உண்மைக்குப் புறம்பானதாகும்.
அதுதான் என்னுடைய பாயிண்ட் ஆப் ஆர்டர்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** மேற்கொண்டு அதுபற்றிய
விவாதத்தில் நான் இறங்கவில்லை.

MR. DEPUTY SPEAKER : We are on this particular aspect
of the matter. The hon. Member should understand that we should
not cast any aspersion on the judiciary. The allegation that the
Collector has written a letter to the judicial officer is an aspersion
on the judiciary. Therefore the hon. Member should make the
position quite clear on this point . . . .

**திரு. க. உரொ. எட்மண்ட் :** நீதிபதி அல்லது நீதித்துறையைப்
பற்றி நான் குறை சொல்லவில்லை.

THIRU M. A. LATHEEF : We would like to know whether
the Collector has addressed the court that the case should be with-
drawn as per the direction of the Government and whether the
judicial officer has acted upon that direction. The District Collector
has no business to address the court . . . .

MR. DEPUTY SPEAKER : Let the hon. Member resume
his seat. The hon. Member, THIRU Edmund should make the
position clear.

THIRU G. R. EDMUND : It may be a direction or even a re-
quest. You may take it that he has made a request and not a
direction.

MR. DEPUTY SPEAKER : If your assertion is right, we
have to take a serious notice of it and we went to know whether
it is correct or not.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** மாவட்ட ஆட்சித் தலைவர்
டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு ஆணை பிறப்பித்தார் என்று நான்
சொல்லவில்லை. அந்த வழக்கை மேற்கொண்டு நடத்த வேண்டா
மென்று எழுதியிருக்கிறார்கள்.

(Interruption) Shall we go to Tirunelveli ? Shall we go today? I stand by it. I am prepared to prove it.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : எப்படி ?

திரு. க. உரொ. எட்மண்ட் : நான் கண்ணால் கண்டதைச் சொல்கிறேன். உங்கள் ஆட்சியில் அப்படி நடக்கிறது.

THIRU M. A. LATHEEF : Sir, if the hon. Member stands by his word and undertakes to prove, the Chair must direct the judicial officer to send the document to the Speaker and it should be placed on the table of the House.

MR. DEPUTY SPEAKER : For the present, the speech of Thiru Edmund regarding the judicial officer and the Collector are expunged * from the records.

VOICES : No, no.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The judiciary is not independent. Why should you expunge ?

MR. DEPUTY SPEAKER : I say it is for the present.

(கூச்சல், குழப்பம்)

MR. DEPUTY SPEAKER : I said 'for the present'..........

VOICES : No, no.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நண்பர் எட்மண்ட் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் நீதிபதிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள், அதை நிரூபிக்க தான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் அத்தகைய பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக அறிவித்த பிறகு அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுக்கத் தேவையில்லை என்பதைத் தங்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* இப்பொருள் 27—8—74-ம் தேதியன்று மீண்டும் பேரவையில் எழுப்பப்பட்டு விவாதிக்கப்பட்டதால், இப்பகுதிகளை 17—8—1974-ம் தேதிய நடவடிக்கைக் குறிப்பில் மீண்டும் சேர்க்கலாம் என பேரவைத் தலைவர் அளித்த ஆணைக்கிணங்க சேர்க்கப்பட்டுள்ளது.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுப்பதா எடுக்காமல் இருப்பதா என்பதைப் பற்றிய பிரச்னை அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாய் வார்த்தையாக அந்தமாதிரியான ஒரு கடிதம் எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு கடுமையான குற்றச்சாட்டைச் சொல்லும்போது ஒரு போட்டோஸ்டெட் காப்பி கொடுத்து இந்தமாதிரி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்று சொன்னால் நல்லபடியாக இருந்திருக்கும். அதற்கு பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு, அதை நிரூபிக்கிறேன் என்று சொல்லிவிட்டு நாளை அதை நிரூபிக்காவிட்டால் இந்தக் கடுமையான குற்றச்சாட்டு என்னவாகிறது என்பதைப்பற்றி அவையினர் முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : போட்டோஸ்டெட் காப்பியை என்னால் ப்ரொட்யூஸ் பண்ண முடியாது. அந்த வழக்கு எப்.ஐ.ஆர். ஸ்டேஜில் இருக்கிறது, இன்னும் காலண்டர் கேஸ் ஆகவில்லை. நான் குற்றவாளியின் வழக்கறிஞராகவோ அல்லது ப்ராஸிக்யூஷன் வழக்கறிஞராகவோ இருந்தால்தான் காப்பி எடுக்கமுடியும். எனவே தலைவர் அவர்கள் கேட்பதை என்னால் கொடுக்க முடியாது. ஆனால் நான் சாட்டியுள்ள குற்றச்சாட்டை நிரூபிக்கிறேன், அதற்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆதாரமில்லாமல் இத்தகைய கடுமையான குற்றச்சாட்டைச் சொல்வது தவறு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீதிமன்றத்திற்குச் செல்கிற வழக்குகளை வாபஸ் வாங்க சட்டத்தில் ப்ரொவிஷன் போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, கலெக்டர் நீதிபதிக்கு ஒரு உத்தரவு இட்டு அல்லது கடிதம் எழுதி அல்லது ரிக்வஸ்ட் செய்து ஒரு கேஸை மேலே நடத்திடாதே என்று சொல்லியிருப்பார்களானால் அது பெரிய தவறு. சட்டப்படி ஒரு கலெக்டர் அப்படி செய்யவே முடியாது. அரசாங்கம் ஒரு வழக்கை வாபஸ் வாங்குவதற்கு உரிமை உண்டு. அந்த உரிமையை நாங்கள் எக்ஸர்ஸைஸ் செய்யும்போது அந்த

[திரு. செ. மாதவன்] [1974 ஆகஸ்ட் 17

மாவட்டத்தில் பணியாற்றுகிற அரசாங்க வழக்குரைஞர் மூலம் நாம் அந்தக் கோர்ட்டில் தாக்கல் செய்கிறோம். தாக்கல் செய்து வாபஸ் வாங்குகிறோம். இந்த வழக்கு எப்.ஐ.ஆர் ஸ்டேஜில் இருக்கிறது என்றால் வாபஸ் வாங்கும் பிரச்னை எங்கே எழுகிறது? சார்ஜ் ஷீட் போட்ட பிறகுதான் அதைச் செய்ய வேண்டும். எப்.ஐ.ஆர். ஸ்டேஜில் இருந்தால் மெமோ தாக்கல் செய்தாலே நின்றுவிடும். ஆகவே, அதற்கு நீதிபதிக்கு ஒரு டைரக்ஷன் கொடுக்கவேண்டிய அவசியமே கிடையாது. அப்படி ஒரு அவசியம் இல்லாதபோது எப்படி இம்மாதிரி ஒரு டைரக்ஷன் வந்தது என்று கண்டுபிடிக்கமுடியவில்லை. எனவே கலெக்டர் ஒரு நீதிபதிக்கு உத்தரவு போடுகிறார் என்ற அந்த வார்த்தைகள் சட்டமன்றக் குறிப்பில் இருக்கவேண்டாம் என்று நான் நானும் கருதுகிறேன். வழக்கை வாபஸ் வாங்கவேண்டுமென்று கலெக்டர் நீதிபதிக்கு எழுத முடியாது. அதற்கு அதிகாரம் கிடையாது. சட்டப்படி அது முடியவே முடியாது. ப்ரொஸீஜர், வழக்கு போட்டு விட்டால், சார்ஜ் ஷீட் போட்டு விட்டால் அரசாங்கம் உத்தரவு போட்டு வாபஸ் வாங்க வேண்டும். இல்லாவிட்டால், எப்.ஐ.ஆர். ஸ்டேஜ் என்றால் போலீஸ் சார்பில் மெமோ போட்டுவிடுகிறோம். எனவே, நீதிபதிக்கு கலெக்டர் உத்தரவு போட்டதாக இந்த மன்றக் குறிப்பில் இருப்பது நல்லதல்ல, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, I want to make a valid point of order for the consideration of the House. The hon. Member, Thiru Edmund while speaking about the document said that the Collector has filed it. It is impossible for him to bring the document here. Therefore, the Hon. Speaker or the Hon. Deputy Speaker could help the proceedings by summoning the document to be produced before him and till such time the document is produced, subject to the condition the document is summoned by the Speaker by an august body like this House can do it—there is no need to expunge what Mr. Edumnd has said.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: What is the guarantee that the document is there? Already it has leaked out . . . .



1974 ஆகஸ்ட் 17]

MR. DEPUTY SPEAKER: That is why I say this. The hon. Member has already made mention of it, in the belief perhaps that this document may not be summoned by the Assembly. Such possibility also is there. Therefore, I say in order to avoid any aspersion on the Judiciary in the proceedings, the particular portion of the speech should be expunged. That is my final order.

திரு. முனு ஆதி: எக்ஸ்பஞ்ச் செய்திருக்கிறீர்களா? இல்லையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எக்ஸ்பஞ்ச் பண்ணியாகிவிட்டது.

திரு. முனு ஆதி: சீப் மினிஸ்ட்டர் அவர்கள் சொல்லியிருக்கிறார்களே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீப் மினிஸ்ட்டர் அவர்கள் சொன்னால் என்ன? அதை நான் எக்ஸ்பஞ்ச் செய்தாகிவிட்டது.

THIRU M. A. LATHEEF: Sir, I am on a different point of order. We would like to know what are the portions and observations of the hon. Member which had been expunged because if the other portions will stand in the record, it will be a part of the record. As the Hon. Chair had observed nothing should interfere with the course of justice. I would like to submit with all sense of responsibility and as a lawyer and officer of Court we are here to scrupulously safeguard the rights of the Hon. Court. We would like to know under what authority the Collector has asked the Judicial Officer. We would like to know that. We want that document to be placed before this House, for the perusal of the House.

MR. DEPUTY SPEAKER: The hon. Member Thiru M. A. Latheef may understand that I appreciate the feelings of the hon. Member. That is why I have ordered expunction of that portion of the speech of the hon. Member which cast an aspersion on the judiciary—Even under Rule 67 (4) no Member has any right to make any remark or reflection on the conduct of Court of Justice. This is reflecting upon the Court of Justice. Therefore

all the portions which cast aspersion specifically or impliedly upon the conduct of Court of Justice are ordered to be expunged. That is my final order.

Thirumathi T. N. ANANDANAYAKI : I want to know whether it amounts to casting aspersion on judiciary . . . .

Thiru J. JAMES : On a oint of order. தலைவரவர்களே, இப்போது இங்கே எழுந்துள்ள பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னை என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள்

Mr. DEPUTY SPEAKER : Mr. James, I have given my final order. So please do not raise any point of order in this respect.

Thiru J. JAMES : On a point of order. தலைவரவர்களே இங்கே எழுந்துள்ள பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னை என்பதைத் தாங்களும் அறிந்து இருக்கிறீர்கள். ஆகவேதான் அதனை எக்ஸ்பஞ்ச் செய்யச் சொல்லி இருக்கிறீர்கள். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இங்கே இருக்கும் பிரச்னையானது, கலெக்டர் அவர்கள் மாஜிஸ்டிரேட். அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதம் . . .

Mr. DEPUTY SPEAKER : You should not go on repeating the same subject on which I have given a final decision.

Thiru J. JAMES : I am not speaking about that.

Mr. DEPUTY SPEAKER : Please do not repeat it. Please resume your seat.

Thirumathi T. N. ANANDANAYAKI : May I Crave your indulgence for a moment.

Thiru J. JAMES : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்; தலைவரவர்களே, இங்கே எழுந்துள்ள பிரச்னை மிகவும் முக்கியமானது. ஆகவே, அது சம்பந்தமாக ஒன்று தலைவர் விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அல்லது அந்தக் கலெக்டரை சம்மன் செய்யவேண்டும், அந்த ரிக்கார்டுகளை இந்த அவையில் வரவழைத்து, அதை விசாரித்து முடிவு செய்ய வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

Thirumathi T. N. ANANDANAYAKI : From the member's speech we feel it is not casting aspersion on the judiciary. He never said anything like that. He said there was interference



from the administration side. You must question the concerned persons from administration. It is not casting aspersion on the judiciary. You are deviating from the issue. The Hon. Minister has made the Collector do something which he ought not to do. We must question the officer on that. There is interference by the Ministry. You must take note of that.

Mr. DEPUTY SPEAKER : The hon. Lady Member being a lawyer will also understand that contempt of court includes not only conduct of judiciary but also interference in judicial conduct. Therefore, I have ruled that it is casting reflection upon the conduct of Court of Justice. Please resume your seat. Let there be no points of order on this issue.

**திரு. ஆலடி அருணா :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். எங்கள் கட்சியின் துணைத் தலைவர் நீதிபதியைப் பற்றியோ, அல்லது நீதி மன்றத்தைப் பற்றியோ எந்த வார்த்தையும் சொல்லவில்லை. தவறாக மாவட்ட ஆட்சித் தலைவர் தலையிட்டு இருக்கிறார் என்று தான் கூறினார். நீதிமன்றத்தைப் பற்றியோ, நீதிபதியைப் பற்றியோ சொல்லவில்லை. கலெக்டர் தவறாக தலையிட்டு இருக்கிறார். தலையிடுவது சட்டத்திற்கு விரோதமானது. கலெக்டருக்கு தலையிடுவதற்கு உரிமையில்லை. நியாயம் இல்லை. அதை கவனிக்காமல் கலெக்டர் இதிலே தலையிடுவதற்கு ப்ரோசிஜர் இல்லை, சட்டம் இல்லை என்று சொல்வது சரியல்ல. சட்டத்திற்கு விரோதமாக, நியாயமான முறைக்கு விரோதமாக, முறையற்ற முறையில் கலெக்டர் தலையிட்டு இருக்கிறார். அதுதான் எங்கள் குற்றச்சாட்டு. நீதிமன்றத்தைப் பற்றி நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நீதிபதிக்கு எதிரானது என்று இங்கே விமர்சிக்கப்பட்டாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் தலையிட்டு உத்தரவு அல்லது பரிந்துரை அனுப்பி வைத்தார், அதன்படி நீதிபதி நடந்து கொண்டார் என்று சொல்கிற காரணத்தால் இது நீதிமன்றத்தை பாதிக்கும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தது குற்றம். அதை நீதிபதி ஏற்றுக்கொண்டார் என்று சொன்னால் நீதிபதி மீது மறைமுகமாக மாசு கற்பிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் நிரூபிக்கிறேன் என்று ஒப்புக்கொண்ட காரணத்தால், அது நிரூபிக்கப்படுகிற வரையில் அதை சபை

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஆகஸ்ட் 17

நடவடிக்கை குறிப்பில் ஏற்காமல், அதை நிரூபித்து விட்டால்—அதற்காக நானும் ஆதாரங்களைத் தேடிப்பார்த்து, அதை விசாரித்து நிரூபணம் ஆகிவிட்டால்—அதற்கேற்ற நடவடிக்கையை நிச்சயமாக அரசு எடுக்கும். அது நிரூபிக்கப்படுகிற வரையில், இதை குறிப்பில் ஏற்றவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

Thiru Aladi Aruna rose.

Mr. DEPUTY SPEAKER: Please resume your seat. You have not followed the speech of your Deputy Leader. He has said that the Collector had written to the Magistrate not to proceed with the trial and on account of that, the proceedings are pending for a long time.

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவரவர்களே, அடுத்தபடியாக சமீபத்தில் இங்கே நாடாளுமன்றத்திற்கு தேர்தல் நடைபெற்றது. அதில் மைக்ரி ஜான் அவர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள். அந்தத் தேர்தலைப்பற்றி நான் எந்தக் கருத்தையும் சொல்லத் தயாராக இல்லை. காரணம் இப்போது அந்த வழக்கு உயர்நீதி மன்றத்தில் இருக்கிறது. அந்த வழக்கில் உள்ளே நான் போக விரும்பவில்லை. அது குறித்து விமர்சனம் செய்யத் தயாராக இல்லை, என்பதை தங்களுக்கு நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வழக்கில் அவருக்கு 30 வயது முடிந்து இருக்கவேண்டும். .

Mr. DEPUTY SPEAKER: Election petition is pending before High Court. So the matter is *sub-judice*.

THIRU G. R. EDMUND: I am not going into the merits of the case. 1946 ஆம் ஆண்டு அவர் பிறந்து இருக்கிறார் என்று. . .

Mr. DEPUTY SPEAKER: No statement should be made which would influence the decision in that case.

THIRU G. R. EDMUND: I am not speaking about the case.

Mr. DEPUTY SPEAKER: The hon. Member should know that this matter is *sub-judice*.



1974 ஆகஸ்ட் 17]

THIRU G. R. EDMUND: தலைவரவர்களே, 1946 ஆம் ஆண்டுகரைச்சுத்தி கிராமத்திலே. . . (மணியடிக்கப்பட்டது)
I am only speaking about some register, Sir.

Mr. DEPUTY SPEAKER: Even, then, it will induence the decision in that case. The entire case rests upon the register. Nothing should be spoken which would influence the decision in that case. The matter is *sub-judice*.

Mr. Edumund, you have already taken one hour and 15 minutes. You may try to finish quickly.

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவரவர்களே, அடுத்து நம்முடைய அவை மானியக்கோரிக்கையிலே வரி விதிப்பின் கீழ் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சினிமா காட்சி வரி பற்றி குறிப்பிட விரும்புகிறேன். நாட்டிலே எல்லோருக்கும் தெரியும். ஒரு சாதாரண பொது மகனுக்கு மாலை நேரத்தில் பொழுதுபோக்க சிறந்த பொழுது போக்கு சினிமா காட்சி தான். இன்றைக்கு அது கூட பொதுமக்கள் பார்க்க முடியாத நிலை இருக்கிறது. அதோடு மட்டுமல்ல, இந்த நாட்டிற்கு அதிலிருந்து பெரிய வருமானம் வந்து கொண்டிருந்தது. ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றிற்கு நல்ல வருமானத்தை இது கொடுத்துக்கொண்டிருந்தது. ஆனால் நேற்று முன்தினத்திலிருந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த வரியைப் போட்ட உடனேயே தமிழ்நாட்டில் உள்ள அத்தனை திரையரங்குகளும் மூடப்பட்டிருக்கின்றன. இதனால் இந்த நாட்டிற்கு எவ்வளவு நஷ்டம் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். சினிமா காட்சி என்பது தங்க முட்டைகள் இடுகிற வாத்துக்குச் சமம். ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு நாளும் ஒரு முட்டை இட்டுக்கொண்டிருந்ததன் கழுத்தை அறுத்து. வயிற்றைக் கீறிப் பார்த்தாலும் அதனுள்ளே ஒரு முட்டை தான் இருக்கும், நிறைய முட்டைகள் எடுத்து விட முடியாது. அப்படிச் செய்ததால் இப்போது இழப்பு தினமும் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

திரு. குப்பல் ராமகிருஷ்ணன் எழுந்திருந்தார்.

(நண்பகல் 12-00)

[1974 ஆகஸ்ட் 17

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தயவு செய்து உட்காருங்கள். எட்மண்ட் அவர்கள் இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்துவிடுங்கள். ஏற்கனவே நீங்கள் 1¼ மணி நேரம் பேசியாகி விட்டது.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** இன்னும் 15 நிமிடங்களில் முடித்து விடுகிறேன். For A.C. Theatres in the City of Madras, the present rate of tax including surcharge is Rs. 12.50 per show per day. For three shows at Rs. 37.50 per day, it comes to Rs. 1,125, for thirty days. இப்பொழுது இந்த வரி விதிப்பின் கீழ் முன்பு ஒரு மாதத்திற்கு ரூ. 1,125 வரி விதித்திருக்கிறார்கள் என்றால், இன்றைக்கு ரூ. 13,500 ஒரு மாதத்திற்கு தியேட்டர் முதலாளிகள் கட்டவேண்டும், ஏர்கண்டிஷன் தியேட்டர் முதலாளிகள். . .

**திரு. இராம அரங்கண்ணல் :** சினிமா கொட்டகைக்காரர்கள் தயாரிப்பாளர்களிடமிருந்து என்ன வாடகை வாங்குகிறார்கள்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் கேட்பது, சினிமா தியேட்டர் காரர்கள் வாரம் ஒன்றுக்கு படத் தயாரிப்பாளர்களிடமிருந்தும், விநியோகஸ்தர்களிடமிருந்தும் வசூலிக்கும் வாடகை எவ்வளவு தெரியுமா என்று கேட்கிறார்கள்?

**திரு. க. உரொ. எட்மண்ட் :** எவ்வளவு வாடகை வாங்கு கிறார்கள் என்று நான் சொல்லத் தயாராக இல்லை.

**திரு. கோவை செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நம் முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கண்ணல் ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். நான் அந்தத் தொழிலில் ஈடு பட்டிருக்கிறேன் என்ற காரணத்தினால் தங்கள் மூலம் முதல் அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இந்தத் தியேட்டர் சொந்தக் காரர்கள் வாடகை வாங்குவதற்குப் பதிலாக ஒரு மாதத்திற்கு இவ்வளவு ஷேர் என்கின்ற முறையில் டிஸ்டிரிபியூட்டர்களிடம் வாங்குவதற்கு அவர்கள் ஒத்துக்கொண்டால் இந்தப் பிரச்னையை மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1974 ஆகஸ்ட் 17]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதிலே இருந்து நண்பர் செழியன் போன்ற தயாரிப்பாளர்கள் தியேட்டர்காரர்களினால் எந்த அளவுக்கு தொல்லைப் படுகிறார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. (ஆரவாரம்) திரு. எட்மண்ட் வாதத்திற்கு செழியன் அவர்களே நல்ல பதில் அளித்திருக்கிறார்கள். தியேட்டர்களை மூடுகிறோம் என்று அறிவிப்பதற்கு முன்பே நிறைய நேரம் இருந்தது. ஆனால் உடனடியாக தியேட்டர்களை மூடிவிட்டார்கள். முதல் அமைச்சரைக் கலந்து பேச வேண்டுமென்கிறார்கள். ஆனால் ஏற்கனவே தியேட்டர்களை மூடிவிடுவதாக அறிவித்திருக்கிறார்கள். இரவோடு இரவாக முடிவெடுத்து அறிக்கை விடுத்திருக்கிறார்கள். . அதற்கிடையில் என்னை சந்தித்திருக்கலாம். இருக்கிற கஷ்டங்களை என்னிடம் சொல்லியிருக்கலாம். இந்த வரியை ஏதாவது குறைக்க வேண்டும் என்று கூறியிருக்கலாம். அப்படி எதுவும் செய்யாமல் தியேட்டர்களை மூடிவிட்டு என்னை சந்திக்க வந்தார்கள். என்னைக் கேட்டுக்கொண்டா தியேட்டர்களை மூடினீர்கள், தியேட்டர்களை திறந்த பிறகு வந்து சந்தியுங்கள் என்று சொல்லியிருக்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** மூடியே இருக் கட்டும்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தியேட்டர் உரிமையாளர்கள் எவ்வளவு வாடகை வாங்குகிறார்கள் என்பதைப்பற்றி நான் ஆராய இல்லை. என்னுடைய வாதமெல்லாம் ஒரு மாதத்திற்கு. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** செழியன் அவர்கள் சொன்னது மிகுந்த கருத்துள்ள, சத்துள்ள வாதம். சாதாரணமாக ஒரு படத்தை வெளியிட்டால், சென்னையில் வெளியிட்டால் தியேட்டர்காரர் முன்பெல்லாம் அந்தப் படத்துக்கு ஆகின்ற வசூலில் எத்தனை சதவிகிதம் தியேட்டர் சொந்தக்காரர்களுக்கு, எத்தனை சதவிகிதம் விநியோகஸ்தர்களுக்கு என்ற முறையில் கொடுத்ததினால் நீண்ட நாள் படத்தை ஓட்ட முடிந்தது. இப்பொழுதெல்லாம் பெரிய நடிகர்கள் நடிக்கக்கூடிய 100 நாள் ஓடக்கூடிய படங்களாக எல்லாப் படங்களுமே இருப்பதில்லை. சாதாரணமாக சிறிய நடிகர்கள் நடிக்கின்ற படங்கள் பல வெளி வருகின்றன. ஆகையினால் வாரம் ஒன்றுக்கு ரூ. 7,000, 8,000 என்று பிக்ஸட் டெபாஸிட் போல ரூ. 10,000 கூட கேட்கிறார்கள் தியேட்டர் சொந்தக்காரர்கள். அது மாத்திரமல்லாமல் போலீஸ் பாதுகாப்பு, வருகிற போலீஸ்காரர்களுக்கு சாப்பாட்டுச் செலவு

இவைகளையும் படவிநியோகஸ்தர்கள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். சென்னையிலிருக்கிற தியேட்டர்காரர்கள் ஏற்கனவே இருந்த தகவிகிதத்தை மாற்றி வாரவாரம் ரூ. 10,000, 12,000, ரூ. 8,000 என்று வரியை வாங்குகிறபொழுது சென்னை தியேட்டர்காரர்களுக்கு இது பெரியது இல்லை. செழியன் அவர்கள் இதைப்பற்றி மறு பரிசீலனை செய்ய ஒத்துக்கொள்வார்களா என்று கேட்டார்கள். மறு பரிசீலனை செய்வதோ, பேசுவதோ எல்லாம் தியேட்டர்களையும் திறந்த பிறகு தான்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** ஒரு மாதத்திற்கு ரூ. 1,125 வரி விதித்துவிட்டு இப்பொழுது திடீரென்று ரூ. 13,500 என்று நீங்கள் உயர்த்திவிட்டீர்கள். தியேட்டர் சொந்தக்காரர்கள் தியேட்டர்களை மூடி மூன்று நாளாகிவிட்டது. எங்களுக்கு அல்லவா சங்கடமாக இருக்கிறது. மாலை நேரத்தில் சினிமா பார்க்கலாம் என்றால் முடியவில்லை.

இன்னொன்று, தமிழர் பாதுகாப்புப் படையைப் பற்றி ஒரு சில கருத்துக்களை நான் கூற கடமைப்பட்டிருக்கிறேன். இவர்கள் எவ்வளவு பெரிய கொடுமைகளைச் செய்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் தமிழர் பாதுகாப்புப் படை நாட்டில் ஏதாவது நல்ல காரியங்களைச் செய்து இருக்கிறார்களா என்றால், செய்கின்ற காரியங்கள் எல்லாம் கடைகளை கொள்ளை அடிப்பது, சூறையாடுவது, அடிப்பது, பிடிப்பது, மிதிப்பது என்று இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள் தமிழர் பாதுகாப்புப் படையினர். நீங்கள் அதன் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? தமிழர் பாதுகாப்புப் படையினர்களை யாரையாவது நீங்கள் கைது செய்திருக்கிறீர்களா, கைது செய்து இதுவரைக்கும் வழக்குப் பதிவு செய்திருக்கிறீர்களா? அப்படி எந்தவழக்கும் பதிவு செய்த தாகத் தெரியவில்லை. அந்த அளவுக்கு அவர்களைக் கூட தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

கடைசியாக ஒன்றை மாத்திரம் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இன்றைக்கு தமிழ் நாட்டிலே நம்முடைய ஆளும் கட்சியை சார்ந்தவர்கள் சமீபத்தில் பெரிய கண்டனக் குரலை எழுப்பினார்கள். கச்சத்தீவு பிரச்சனையில் நம்





முடைய இந்திரா காந்தி அம்மையார் ஒரு பெரிய தவறான முடிவை எடுத்துவிட்டார்கள்: கச்சத் தீவு தமிழ் நாட்டிற்குச் சொந்த மானது, தமிழருக்குச் சொந்தமான இடம், இதைக் கொண்டு இலங்கை அரசுக்குக் கொடுப்பதா என்று பெரிய ஆர்ப்பாட்ட கண்டனக் கூட்டங்கள் நடத்தியிருக்கிறார்கள். ஆனால், இது முதலைக் கண்ணீர் வடிப்பது போல் இருக்கிறதே தவிர, ஆளும் கட்சியில் இருக்கிற அமைச்சர்கள், குறிப்பாக நம்முடைய முதல் அமைச்சர் அதைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத் தார்களா என்று பார்த்தால் இல்லை. முதலில் சொன்னார்கள், என்னைக் கலந்தே பேசவில்லை என்று சொன்னார்கள். ஆனால் ராஜ்ய சபையில் வெளி நாட்டு விவகார அமைச்சர் ஒரு கேள்விக்கு பதில் சொல்கின்ற நேரத்தில் சொன்னார்: ‘நான் உங்களுடைய முதல் அமைச்சரோடு இதைப்பற்றி கலந்து பேசித் தான் ஒரு முடிவுக்கு வந்தேன்’ என்றார். வெளிநாட்டு விவகார அமைச்சர் அப்படி சொன்னதற்குப் பின்னாலே தான் நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். “இரண்டு நிமிடம் பேசினேன்’ என்று சொன்னார். இப்பொழுது நான் கேட்க விரும்புவதெல்லாம் இந்தப் பிரச்சனையில் வெளி விவகார அமைச்சர் நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சரோடு பேசும்பொழுது இதில் ஒரு வாதம், பிரதிவாதம் ஏற்பட்டு, மாறு பட்ட கருத்துக்கள் ஏற்பட்டு, ‘கச்ச தீவை நான் இலங்கைக்கு கொடுக்க சம்மதிக்க மாட்டேன்’ என்று முதல் அமைச்சர் அவர்கள் அவரிடம் பதில் கொடுத்தார்களா? அந்த இரண்டு நிமிடப் பேச்சில் இதையெல்லாம் பற்றி பேசினார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் ஒவ்வொரு முறை யும் இலங்கை, இந்தியா இவைகளுக்கு இடையேயுள்ள கச்சத் தீவு பிரச்சனையைப் பற்றி டெல்லியில் பிரதமரோடு பேசியபோதும் கேவல் சிங் போன்ற அதிகாரிகளோடு பேசியபோதும் அதைப் பற்றி நிருபர்களிடம் சொல்லியிருக்கிறேன். ஆகவே கலந்து பேசவில்லை என்று நான் சொல்லவில்லை. சுவரன்சிங் அவர்கள் ராஜ்ய சபையில் கலந்து பேசியதாகக் கூறினபொழுது, உறுப் பினர் குறுக்கிட்டு கேட்கிறார். கலந்து பேசியிருக்கலாம், ஆனால் அதற்கு தமிழகம் சம்மதித்ததா என்று கேட்டிருக்கிறார். அதற்கு சுவரன்சிங் அவர்கள் தந்திரமாக பதில் சொல்லியிருக் கிறார். ‘நீங்கள் கேட்பது கலந்து பேசப்பட்டதா என்று தான்.

அவ்வளவு தான் சொல்ல முடியும்' என்று தான் பதில் அளித்திருக்கிறார். தமிழக அரசு சம்மதிக்கவில்லை என்பதையும் அவர் சொல்லவில்லை, சம்மதித்தது என்றும் சொல்லவில்லை. தந்திரமாகப் பேசி தப்பித்துக் கொண்டிருக்கிறார். கலந்து பேசியதாகச் சொன்னதை மறுக்கவில்லை. சர்வ கட்சிக் கூட்டத்தில் கூட இதைப் பற்றி பேசப்பட்டது. நான் அதை மறுப்பதற்கு விரும்பவில்லை. மறைக்கவும் தேவையில்லை. நடந்தது என்னவென்றால் ராஜ்ய சபையில் சொன்னது, கலந்து பேசியது உண்மை தான், ஆனால் தமிழக அரசு அதற்கு சம்மதம் தந்ததா என்று கேட்டதற்கு கலந்து பேசியதை மட்டும் ஒத்துக்கொண்டு, மற்றவற்றைப் பற்றி பதில் சொல்ல விரும்பவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். அதையும் கவனிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கச்சத் தீவு பற்றிய தீர்மானம் வரும்பொழுது இதைப்பற்றி பேசிக்கொள்ளலாம்.

**திரு. க. உ. ரோ. எட்மண்ட்:** வெளி விவகார அமைச்சர் கலந்து பேசியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். பத்திரிகைக்கும் அறிக்கை கொடுத்திருக்கிறார் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வெளி விவகார அமைச்சர் கலந்து பேசினார் என்று சொல்வது தவறு. வெளி விவகார அமைச்சரை நான் ஒரு விருந்தில் டெல்லியில் சந்தித்தேன். பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் வீட்டில் நடத்திய ஒரு விருந்தில் சந்தித்தேன். எல்லா முதல் அமைச்சர்களுக்கும் என். டி. ஸி. கூட்டத்தின் பொழுது நடத்தப்படுகிற விருந்து அது. அவர் என் பக்கம் வந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார். கையில் தட்டோடு நின்றுகொண்டு பேசினார். கேவல் சிங்கை சந்தித்தீர்களா என்று கேட்டார். சந்தித்தேன் என்று சொன்னேன். தமிழர்களுக்கு மாறுபட்ட எந்த ஒரு முடிவையும் எடுக்காதீர்கள் என்று சொன்னேன். அவ்வளவு தான் பேச்சு வார்த்தை.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** ஒவ்வொரு வருடம் மார்ச் மாதத்தில் கச்சத் தீவில் கிருஸ்துவர்கள் புனித அந்தோனியார் திருவிழா நடத்துகிறார்கள். இந்தத் திருவிழாவிற்கு இலங்கையிலிருந்தும் பக்தர்கள் வருகிறார்கள். தமிழ் நாட்டிலிருந்தும் பக்தர்கள் போகிறார்கள். திருவிழா நடைபெறுகின்றபொழுது



மத்திய அரசு தன்னுடைய கப்பல் படையை அனுப்பி வைக்கிறது, ராணுவத்தை அனுப்பிவைக்கிறது. அதைப்போல சட்டம், ஒழுங்கு, அமைதியை நிலைநாட்டுவதற்கு இலங்கை நாட்டிலிருந்தும், தமிழ் நாட்டிலிருந்தும் காவல் துறையினர் திருவிழாவின் போது அங்கே போய்க்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் நம்முடைய போலீஸாரும் கச்சத் தீவில் திருவிழா நடைபெறுகின்ற காலத்தில் போய்க்கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு மார்ச்சு மாதம் திருவிழா நடைபெற்ற காலத்தில் எதற்காக போலீஸாரை அங்கே அனுப்பவில்லை என்பதில் தான் எங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது. ஏற்கனவே இந்தக் கருத்துக்களை நீங்கள் பரிமாறிக்கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி பேசுகிற நேரத்தில் தமிழக மக்களுடைய எண்ணத்திற்கு விரோதமாக, அவர்களுக்கு விரோதமாக எந்தவிதமான முடிவும் எடுத்துவிடாதீர்கள் என்று கூட அறிவுரை கூறியதாகச் சொன்னார். அத்தனை பொறுப்போடு சொன்ன மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வழக்கமாக ஆண்டு தோறும் கச்சத் தீவுக்கு போலீஸ் அனுப்பிக்கொண்டிருந்தாலும், இந்த ஆண்டு காவல் துறையினரை கச்சத்தீவில் திருவிழா நடந்தபொழுது ஏன் அனுப்பவில்லை என்பதை பார்க்கும்பொழுது எனக்கு சந்தேகம் இன்னும் வலுக்கிறது. ஏற்கெனவே நீங்கள் மத்திய சர்க்காரோடு பேசியிருப்பதாக ஏதோ சொல்லியிருக்கிறார்கள். பேச்சு நடக்கின்றபோது கச்சத் தீவை இலங்கைக்குக் கொடுத்துவிட்டோம்; அது நமக்கு இருந்தால் அதனால் என்ன உபயோகம் இருக்கப்போகிறது; அதனால் நீங்கள் சும்மா இருந்துவிடுங்கள் என்று கூட சொல்லியிருக்கலாம் அல்லது உங்களுக்கு உத்தரவிட்டிருக்கலாம். அதனால் நம்முடைய போலீஸ் துறையினர் கச்சத் தீவுக்கு போகக்கூடாது என்று நீங்கள் நிறுத்தியிருக்கலாம் என்று எங்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகத்தில் நியாயம் இருக்கிறதா இல்லையா என்பதை முதலமைச்சரவர்கள் பொறுமையாக எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அளவுக்கு கச்சத் தீவை இன்றைக்கு இழந்திருக்கிறோம் என்றால் அதற்குக் கூட காரணம் இந்த ஆட்சி தான் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

உங்களால் உணவுப் பிரச்சனையை சமாளிக்க முடியவில்லை; சமாளிக்கவும் முடியாது. நேற்று ஆளும் கட்சி உறுப்பினர் யாரோ பேசினார்கள் வீராசாமி அவர்கள் என்று கருதுகிறேன்.

2½ மாதம் பொறுத்துக்கொள்ளுங்கள்; விலை இறங்கிவிடும் என்று சொன்னார்கள். எப்படி விலை இறங்கும் என்று எனக்குத் தெரியவில்லை; சந்தேகம் இருக்கிறது. ஏறியிருக்கும் விலை குறையாது. ஏழை எளிய மக்களின் கண்களிலே வழிந்துகொண்டிருக்கும் கண்ணீரை உங்களால் துடைக்க முடியாது. இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக்கொண்டு உங்களால் இந்த நாட்டிலே நடைபெறுகின்ற பதுக்கலை, கள்ளக்கடத்தலை தடுக்க முடியவில்லை. இந்த தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற நீங்கள், அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கிற நீங்கள் இவற்றையெல்லாம் செய்யவில்லை. உங்களால் செய்ய முடியவில்லை. ஆகவே, இந்த ஆட்சியை விட்டு விலகி, வெளியே வந்துவிடுங்கள் என்று உங்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, எதிர்க்கட்சிகளின் சார்பில் கொண்டு வந்திருக்கின்ற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி**: துணைத் தலைவர் அவர்களே, பல சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது பேசுகின்ற போது, உணவுப் பிரச்சனைப் பற்றிய விளக்கங்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். [illegible] அரசின் கொள்கைகளை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் [illegible] அளவுக்கு கண்டிக்க வேண்டுமோ அந்த அளவுக்கு ஒரே மாதிரியாகக் கண்டித்திருக்கிறார்கள்.

உணவுப் பிரச்சனையில் தற்போது ஏற்பட்டிருக்கிற நிலைமை [illegible] அதற்கான விளக்கங்களையும் மத்திய அரசின் [illegible] பாடான கொள்கைகளையும் அதன் காரணமாக ஏற்பட்ட [illegible] களையும் பற்றி ஆளும் கட்சியைச் சேர்ந்த [illegible] களும், இன்னும் மற்ற முஸ்லீம் லீக் கட்சி உறுப்பினர் [illegible] களும் பதில் விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். [illegible] மொத்தமாக என்னை விளக்கம் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நான் விளக்கம் அளித்த பின்னால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேச இருக்கிறார்கள். [illegible] 11¼ மணிக்கு முடிக்க வேண்டிய எட்மண்ட் [illegible] 12¼ மணிக்குத்தான் முடித்திருக்கிறார்கள். எனக்கு [illegible] நோர்—எந்த பிரச்சனை வந்தாலும் நான் கடைசியில் விளக்கமளிக்க வேண்டியிருக்கிறது. என்னதான் வேகமாகப்





பேசினாலும் முழு விளக்கமும் அளிப்பதற்கு நேரம் போதாமலிருக்கிறது. அதனால்தான் நேற்று மேல்சபையில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக இந்த உணவுப் பிரச்சனையைக் குறித்து விளக்கம் அளித்திருக்கிறேன்.

இங்கே உணவுப் பிரச்சனையைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசிய கருத்துக்களைக் கேட்டுக் கொண்டிருந்தேன். எதிர்க்கட்சிக்காரர்கள் பேசிய குற்றச்சாட்டுக் களையும் பொறுமையாக உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தேன். நீங்கள் எல்லாம் எந்த வகையிலே குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்தாலும், தெரிந்த விபரங்களை மறைத்துக்கொண்டு வேண்டுமென்றே குற்றச்சாட்டுக்களை தெரிவித்தாலும் தயவுசெய்து இனிமேலாவது நான் சொல்லும் விளக்கங்களை பொறுமையோடு கேட்டு, உள்ள நிலைமைகளைப் புரிந்து, நியாய உணர்வுகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் விளக்கங்களைச் சொல்லும்போது, இப்போது பொறுப்பிலிருந்துகொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்ற ஒருவர் என்று என்னை எண்ணாமல், நீங்கள் எல்லாம் தமிழ் நாட்டிலேதான் இருக்கிறீர்கள்; இந்தத் தமிழ் நாட்டிலே தொடர்ந்து ஒரு நல்லாட்சி நடைபெற வேண்டும் என்று எண்ணுகின்ற மக்களாக இருக்கிறீர்கள்; யார் அமைச்சரவையிலே இருந்தாலும் சரி, மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள்; அந்த மக்களிலே ஒருவனாக என்னையும் நினைத்துக்கொள்ளுங்கள். யார் பொறுப்பிலே இருந்தாலும் இந்தமாதிரியான சில நேரங்களில் இப்படிப்பட்ட நிலைமைகள் வரத்தான் செய்யும் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று தெரிவித்து, [illegible] விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[illegible] இந்த அரசு மாற்றுகிறது என்று கொள்கைகளை அடிக்கடி [illegible] எடுத்துக்கொண்டாலும் சொல்கிறார்கள். இந்தியா முழுவதற்கும் ஒரு தெளிவான எந்த மாநிலத்திலும் உணவுப் பிரச்சனையில் [illegible] இருக்கின்ற நிலைமைகளை கொள்கை வகுக்கப்படவில்லை. [illegible] மாற்றுகிறார்கள். இப்போது கூட உத்தேசித்து கொள்கைகளை [illegible] வெளிநாட்டிலிருந்து உணவுப் இந்திய பிரதம அமைச்சர் [illegible] பொருட்களைப் பெற வேண்டும் அதை மக்களுக்கு எந்தவகையிலே

[திரு. மன்னை. ப. நாராயணசாமி] [1974 ஆகஸ்ட் 17,

விநியோகம் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி விவாதிப்பதற்கு சர்வ கட்சி கூட்டம் ஒன்றை கூட்ட இருக்கிறார்கள். நானும் இந்தியாவிலிருந்துதான் பேசுகிறேன்; இந்திய நாட்டின் ஒரு பகுதியான தமிழ் நாட்டில் இருந்துதான் பேசுகிறேன். அப்படி இருந்தாலும், இங்கே பிரச்சனைகள் பல வந்தால், கஷ்டமான பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியிருந்தால், இந்த அவையிலே எங்கள் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வரும்போது மட்டும் தமிழ் நாட்டை இந்தியாவிலிருந்து நீக்கி, ஒரு சுயாட்சி கொடுத்துவிடுகிறார்கள். மற்ற நேரங்களில் எல்லாம் இந்தியாவின் ஒரு பாகம்தானே தமிழ் நாடு என்று பேசுகிறார்கள். மத்தியில் இருக்கின்ற முரண்பாடான கொள்கைகளால்தான் இத்தகைய பிரச்சனைகள் வருகின்றன என்று நாம் சொன்னால் அது பொருத்தமல்ல; அப்படிப் பேசக்கூடாது என்று சொல்கிறார்கள்.

அவர்களுக்கு எல்லாம் நான் சொல்கிறேன். இந்திய நாட்டிலே மத்திய உணவு அமைச்சர் ஒருவர் இருக்கிறார். நம்முடைய பிரதம அமைச்சர் அவர்கள் மத்திய உணவுக் கொள்கையை பல கூட்டங்களைக் கூட்டி, அடிக்கடி மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். டில்லியிலே அப்படி கூட்டம் கூடி, அடிக்கடி கொள்கைகளை மாற்றி அமைப்பது டில்லிக்கு மட்டுமல்ல; தமிழ் நாட்டுக்கும் சேர்த்துதான் அங்கே பேசுகிறார்கள். இதற்கு முன்னாலும் பல சந்தர்ப்பங்களில் அகில இந்தியாவிலும் இருக்கிற உணவு அமைச்சர்களை எல்லாம் கூப்பிட்டு பேசியிருக்கிறார்கள். அவ்வப்போது தமிழ் நாட்டில் இருக்கிற கஷ்டங்களை எல்லாம் தெரிவித்திருக்கிறோம். அப்படி இருந்தபோதிலும் தமிழ் நாட்டில் தான் அடிக்கடி கொள்கையை மாற்றிவிட்டமாதிரி இங்கே குற்றஞ்சாட்டினார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் அரிசி உற்பத்தியாவது—சாதாரணமாக தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களில் செப்டம்பர் மாத இறுதியில், தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் அக்டோபர் மாதம் தொடங்கும், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் தொடங்கும். மற்ற மாவட்டங்களில் கிணற்றுப் பாசனம் அதிகமாக இருப்பதால் எப்போது வேண்டுமானாலும் இருக்கும்.



1974 ஆகஸ்ட் 17] [திரு. மன்னை. ப. நாராயணசாமி]

பொதுவாக, செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் அறுவடை தொடங்குகிறது. ஆகவே, அந்த நேரங்களில் விலை குறையும். அறுவடை காலங்களில் நெல் மட்டுமல்ல, கேழ்வரகு ஆனாலும் அல்லது மனிதனுக்கு அதிகமாகத் தேவைப்படாத பொருட்களாக இருந்தாலும், எந்தப் பொருளுமே விலை குறையத்தான் செய்யும். அறுவடைக் காலங்களைப் பார்த்து, எந்த எந்த

(பேரவைத் தலைவர் தலைமை)

மாவட்டங்களிலிருந்து எந்த எந்த மாதங்களில் தானியங்கள் அறுவடைக்கு வரும் என்று பார்த்து, ஒரு கணக்கு நிர்ணயித்து கொள்முதல் செய்கிறோம்.

யாரோ ஒருவர் இது துக்ளக் ராஜியம் என்று சொன்னார்—அந்தமாதிரியாக நாங்கள் ஒன்றும் செய்யவில்லை. 1970-இல் இருந்தே இந்தப் பிரச்சனையை ஆராய்ந்து பார்த்து அவ்வப்போது இருக்கின்ற நிலைமைகளுக்கேற்ப கொள்கைகளை வகுத்து வருகிறோம். அந்த முறையில்தான் 1974 ஆம் ஆண்டிலும் கிட்டத்தட்ட எங்கள் நடவடிக்கைகள் இருக்கின்றன. உணவு செயலாளர் நம்முடைய மாநிலத்தில் கொள்கைகளை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். சில விபரங்களை மட்டும் உறுப்பினர்களின் தகவலுக்காக தருகிறேன். தஞ்சையைப் பொறுத்தமட்டில் 24—1—1970-இல் 550 சதவிகிதம் லெவி போட்டுவிட்டு, 16—9—1970-இல் எடுத்திருக்கிறோம். 1—1—1971-இல் 15 சத விகிதம் லெவி போட்டுவிட்டு, 15—8—1971-இல் எடுத்திருக்கிறோம். பின்னர் 16—8—1971-இல் 25 சதவிகிதம் லெவி போட்டுவிட்டு 6—10—1971-இல் எடுத்திருக்கிறோம். அதன் பின்னால் 5—11—1971-இல் போட்டுவிட்டு, 14—8—1972-இல் எடுத்திருக் கிறோம். 18—1—1973-இல் 20 சதவிகிதம் லெவி போட்டுவிட்டு 25—5—1973-இல் எடுத்திருக்கிறோம். 26—5—1973-இல் 25 சத விகிதம் லெவி போட்டுவிட்டு 17—8—1973-இல் எடுத்திருக்கிறோம். 18—8—1973-இல் 33-1/3 சதவிகிதம் லெவி போட்டுவிட்டு 6—10—1973-இல் எடுத்திருக்கிறோம். மேலும் 15—12—1973-இல் மீண்டும் லெவி போட்டிருக்கிறோம்.

இப்படி ஒவ்வொரு ஆண்டும் நாங்கள் அவ்வப்போது நிலவு கின்ற முறைகளை அனுசரித்து நடைமுறைகளை வகுத்துச் செயல் படுத்தியிருக்கிறோம். இதுபோன்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும்

[திரு. மன்னை. ப. நாராயணசாமி] [1974 ஆகஸ்ட் 17

இருக்கிறது. அதையெல்லாம் படிப்பதாக இருந்தால் நேரம் போதாது. ஆகவே, இதோடு நிறுத்தி விடுகிறேன். இந்த விபரங்களை எல்லாம் பலமுறை நாங்கள் சொல்லியிருக்கிறோம். மேற்கொண்டும் இந்த ஆண்டில் குறுவை அறுவடை ஆகும்போது லெவி போட தயாராக இருக்கிறோம்.

தஞ்சை, தென் ஆற்காடு, சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தருமபுரி, சேலம், திருச்சி மாவட்டத்தில் காவிரிக்கு வடக்கேயுள்ள வட்டங்கள் அடங்கிய பெரும்பகுதி, கன்னியா குமரி மாவட்டத்தில் ஏற்கனவே உள்ளபடி விளவங்கோடு வட்டமும் கல்குளம் வட்டத்தில் 9 கிராமங்கள் ஒரு பகுதியாகவும் எஞ்சி யுள்ளது ஒரு பகுதியாகவும்; திருச்சி மாவட்டத்தில் காவரிக்கு தென்புறமுள்ள வட்டங்கள், ராமநாதபுரம், கேரள எல்லையை ஒட்டியுள்ள வட்டங்கள் தவிர நீலகிரி, கோவை, மதுரை, திருநெல்வேலி அடங்கிய பெரும்பகுதிகள் என்று 1974-ம் ஆண்டில் நெல், அரிசி போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக்குப் பிரித்து வைத்திருக்கிறோம்.

இப்படி நாங்கள் போட்டிருக்கிற நேரத்தில் திடீரென்று— நீங்கள் எல்லாம் பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள்—டெல்லியிலி ருந்து பிப்ரவரி மாதத்தில் ஒரு செய்தி வந்தது. சிறுதானியங் களுக்கு இருக்கிற கட்டுப்பாட்டை அகற்றி இந்தியா முழுவதிலும் அது எங்கிருந்து எங்கு வேண்டுமானாலும் போகலாம் என்கிற உத்தரவைப் போடப் போவதாகச் சொன்னார்கள். அதன் காரணமாக சிறு தானியங்களின் விலை 20, 30 ரூபாய்க்கு மேல் அதிகமாகிவிட்டது. உடனே அதிகாரிகளை அழைத்து வைத்துப் பேசினோம். சிறு தானியங்களின் விலையேற்றத்தின் காரணமாக வடார்க்காடு, செங்கல்பட்டு, சேலம் போன்ற பகுதிகளில் திடீரென்று அரிசி விலையும் ஏற ஆரம்பித்துவிட்டதே, விலையேற்றத்தை எப்படித் தடுத்து நிறுத்துவது என்று ஆலோசித்தோம்.

அதன் காரணமாகத்தான் நமது மாநிலத்தை 19 மண்டலங் களாக ஆக்கி—தஞ்சை மாவட்டத்தில் 40 சதவிகிதம் லெவியைக் கொண்டு [illegible] 16-3-74-இல் மத்திய சர்க்கார் ஒரு [illegible] இருந்து இன்னொரு மாநிலத்திற்குச் செல்கிற



1974 ஆகஸ்ட் 17] [திரு. மன்னை. ப. நாராயணசாமி]

கட்டுப்பாட்டை—சிறு தானியங்களைப் பொறுத்தவரையில் எடுத்து விட்டார்கள். 40 என்று விற்றுக்கொண்டிருந்த சிறு தானியங்கள் 50, 60 என்று ஆகிவிட்டது.

மத்திய சர்க்காருக்கு நாங்கள் ஏற்கனவே வேண்டுகோளை அனுப்பியிருக்கிறோம். சிறு தானியங்களுக்கு இருக்கிற கட்டுப்பாட்டை எடுக்கக்கூடாது. இந்த மாநிலத்தில் சில இடங்களில் 40 சதவிகிதம் அல்ல—50 சதவிகிதம் அளவுக்குக் கூட சிறு தானியங்களையே சாப்பிடுகிற மக்கள் இருக்கிறார்கள்— கட்டுப்பாடு இருக்கட்டும், நாங்கள் உங்களுக்கு எவ்வளவு வேண்டுமோ அதைக் கொள்முதல் செய்து கொடுக்கிறோம் என்றெல்லாம் முன்னதாகவே சொல்லியிருக்கிறோம். அவர்கள் 4—3—1974-இல் கட்டுப்பாட்டை அகில இந்திய ரீதியில் எடுத்து விட்டார்கள். 16-3-74 அன்று டெல்லிக்குச் சென்றோம். எங்களுடன் உணவுத் துறை செயலாளர் வந்திருந்தார்— சீப் செக்ரட்டரி வந்திருந்தார். அப்போதும் வற்புறுத்திச் சொன்னோம். "எங்கள் மாநிலத்தைப் பொறுத்தவரையிலுமாவது கட்டுப்பாடு நீடிக்க உத்தரவு கொடுங்கள். நாங்கள் எங்கள் மாநிலத்தில் உற்பத்தியாவதைக் கொள்முதல் செய்து— பற்றுக்குறை உள்ள எந்த மாநிலத்திற்கு அனுப்ப வேண்டுமென்று நீங்கள் சொன்னாலும் அங்கே அனுப்பத் தயார்—எங்களுடைய தேவைக்குப் போக பாக்கியுள்ளதை நீங்கள் அனுப்பச் சொல்கிற இடத்திற்கு அனுப்பி வைக்கிறோம்," என்றெல்லாம் வற்புறுத்தினோம்.

அவர்கள் சொன்னது எல்லாம்—இந்தியா முழுவதற்கும் ஒரே கொள்கை தான்—நீங்கள் குஜராத்தில் நடந்ததைப் பாருங்கள், ஒரு பக்கம் பட்டினி—ஒரு பக்கம் துப்பாக்கிச் சூடு என்கிறபோது வளமான பகுதியில் உள்ள நீங்கள் மட்டும் தனியாக இருக்க முடியுமா என்றார்கள். இவர்கள் ஏதோ எங்கும் ஒன்றும் நடக்கவில்லைபோலச் சொல்கிறார்கள்.

நாங்கள் மத்திய அமைச்சர் ஷிண்டே அவர்களிடம் அவர்களை வீட்டில் மறுநாள் சந்தித்துப் பேச ஒரு மணி கேட்டோம். அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். அவர்களோடு ஒரு மணி நேரம் பேசினோம். இங்குள்ள நிலைமைகளை எடுத்துச் சொல்லி— கண்டிப்பாக—கட்டுப்பாட்டை எடுப்பது என்றால் நம்முடைய

[திரு. மன்னை. ப. நாராயணசாமி] [1974 ஆகஸ்ட் 17

மாநிலத் தேவைக்கான 25 சதவிகிதம் லெவியையாவது நாங்கள் விதித்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று கேட்டோம். எழுத்து மூலமே கொடுத்தோம். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு விளைவு குறைவாக இருக்கிறது. வடாற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களில் நவரை 3½ லட்சம் ஏக்கராவில் பயிரிடுவார்கள். இந்த ஆண்டு ஒரு லட்சத்து அறுபதாயிரம் ஏக்கராவில்தான் பயிரிட்டிருக்கிறார்கள். அதுவும் சரியாக வருமா என்கிற சந்தேகம் இருக்கிறது. இந்த நிலைமையில் சிறு தானியங்களுக்குள்ள கட்டுப்பாட்டை எடுத்திருப்பதால் எங்கள் மாநிலத்தில் உணவு நிலைமை மிகவும் பாதிக்கப்படும் என்றெல்லாம் விளக்கிச் சொல்லி எவ்வளவு கேட்க வேண்டுமோ அவ்வளவு கேட்டோம்.

அப்போதும் கூட அவர்கள் சொன்னது குஜராத்தின் நிலைமையைப் பாருங்கள், இந்தியா ஒரே நாடு என்கிறபோது இந்தியாவின் ஒரு பகுதி சுபீட்சமாக இருப்பது இன்னொரு பகுதி பட்டினி காரணமாக—துப்பாக்கிச் சூடு நடைபெறுவது என்றால் நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொண்டாலும் மற்றவர்கள் ஒத்துக்கொள்ளமாட்டார்களே என்றார்கள்.

அப்போதும் ஷிண்டே அவர்களிடம்—எங்களுடைய மாநில மக்களின் தேவைக்கான 25 சதவிகிதம் லெவி கொள்முதல் செய்து கொள்ளவாவது அனுமதிக்க வேண்டுமென்று எழுதிக் கொடுத்தோம். அவர்கள் பிரதமரிடம் சொல்லி தானே அதற்கு அனுமதி பெற்றுத்தர முயற்சி செய்வதாகச் சொன்னார்கள. அந்த நம்பிக்கையோடு நாங்கள் தமிழ் நாட்டிற்குத் திரும்பி வந்தாலும் கூட நாங்கள் திரும்பிய சில நாட்களுக்குள்ளாகவே இந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுவிட்டதாகக் கடிதம் வந்து விட்டது. இதுதான் நிலைமை.

திரு. மாரிமுத்து அவர்கள் கூடச் சொன்னார்கள். சிறு தானியங்களின் விலை ஏறியது உண்மை. ஆனால், அரிசியை அது பாதிக்காது என்றார்கள். ஏன் பாதிக்காது?

நாங்கள் துவரம் பருப்பு சாப்பிடுகிறோம். எங்கள் வீட்டில் வேலை செய்கிறவர்கள்—சாதாரண வருமானம் உள்ளவர்கள்—கூலி வேலை செய்பவர்கள்—அவர்கள் சாம்பார் வைத்துச் சாப்பிட



1974 ஆகஸ்ட் 17] [திரு. மன்னை. ப. நாராயணசாமி]

விரும்பினால் பயிறு வாங்கி அதைச் சாம்பார் வைத்துச் சாப்பிடுவார்கள். துவரம் பருப்பு 1 ரூபாய் என்றால் அப்போது பயிறு நாலணா—எட்டணா இருக்கும். (திருமதி த. ந. அனந்தநாயகி குறுக்கீடு.) இது உங்கள் ஆட்சியில்தான். அதை ஏன் ஒத்துக் கொள்ளமாட்டேன் என்கிறீர்கள். மத்தியிலே உங்கள் ஆட்சி தானே.

தமிழ் நாட்டின் கஷ்டம் நீங்கள் எல்லாம் இப்படிப் பேசுகிறீர்கள். நான் இருக்கிற உண்மையான நிலவரத்தைச் சொல்கிறேன். துவரம் பருப்பு 1 ரூபாய் என்கிறபோது பயிறு நாலணா—எட்டணாவாக இருந்தால் பயிறு போட்டு சாம்பார் வைத்துச் சாப்பிடுவார்கள். பயிறு விலையே 14 அணா 90 பைசா என்கிறபோது அவர்களும் துவரம் பருப்பு போட்டு சாம்பார் வைப்பார்கள். அப்படி சிறு தானியங்களின் விலை ஏறிவிட்டது என்றால் அரிசி விலை அப்படியே இருக்குமா? சென்ற ஆண்டு அரிசி விலை இறங்கிவிட்டது. இதே நேரத்தில் சிறு தானியங்களின் விலை... சட்டமன்ற உறுப்பினர்களே வந்து சொன்னார்கள். நானே 80 ரூபாய் என ஒரு விலையை நிர்ணயித்து தமிழ் நாடு விற்பனைச் சங்கத்தின் சார்பாக அவற்றை வாங்கச் சொன்னேன். சென்ற ஆண்டு நிலைமை அது. நாங்களே ரூ. 80 என்று கொள்முதல் செய்தோம். இதுதான் உண்மை. இன்றைக்கு நிலைமை என்ன? 80 ரூபாய்க்கு விற்கப்பட்ட சோளம் இன்றைக்கு 200 ரூபாய். (திரு. ஆலடி அருணா குறுக்கீடு.) தஞ்சையிலே 57 கிலோ ஒரு மூட்டை என்பார்கள். ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு கணக்கு. என்னவோ விலை அதிகமாகி இருக்கிறது.

(பிற்பகல் 12.30)

திரு. ஆலடி அருணா எழுந்தார்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தயவுசெய்து நான் பேசிவிடுகிறேன். பிறகு நீங்கள் பேசலாம். மொத்தமாக எல்லாவற்றையும் பிறகு சொல்லலாம்.

திரு. ஆலடி அருணா: ஒரு சின்ன சந்தேகம். அமைச்சரவர்கள் சிறு தானியங்களுக்குக் கட்டுப்பாட்டை நீக்கியதால் மாநில அளவில் விலை ஏறிவிட்டது என்று கூறினார்கள். அந்த வாதத்தை ஒத்துக்கொள்கிறேன். அந்தக் கட்டுப்பாட்டை நீக்கியதை

எதிர்த்து, இந்த மாநில சர்க்கார் என்ன தீவிரமான நடவடிக்கை எடுத்தது? கடந்த ஆண்டு 15 இலட்சம் டன் சிறு தானியங்கள் இருந்தது என்று சொன்னார்கள். நாங்களாகவே மொத்தமாக, ப்ரொக்யூர் பண்ணி, நாங்களாகவே மத்திய அரசுக்குத் தேவையானதைத் தந்திருக்கிறோம், நீங்கள் கட்டுப்பாட்டை நீக்கி விடாதீர்கள் என்று மத்திய அரசிடம் கூறி, கட்டுப்பாட்டை எதிர்த்துப் போராடினார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் இப்பொழுது சொன்னார்கள். அவர்கள் மந்திரியான பிறகு என்னென்ன செய்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இதை நீக்கியதற்காகப் போராடினீர்களா என்று கேட்கிறார்கள். அதைப் பற்றிய விளக்கங்களைச் சட்டமன்றத்தில் அருணா அவர்கள், மாநில சுயாட்சி பற்றி பேசும்போது கூறியிருக்கிறார்கள். அது வந்தால் எல்லாம் சரியாகி விடும். இந்த ஒரு பிரச்னை மட்டுமல்ல, சிமெண்ட்டை எடுத்துக்கொண்டாலும், சீனியை எடுத்துக் கொண்டாலும், தமிழ் நாட்டிலே உற்பத்தியாகிற பொருள்களிலே மூன்றில் ஒரு பங்குதான் நமக்குக் கிடைக்கிறது. ஆகவே, ஒட்டு மொத்தமாகச் சேர்த்துத்தான் அதிகாரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

நாம் டெல்லிக்கு உணவு அமைச்சர்கள் மாநாட்டிற்குப் போயிருக்கிறோம். அந்த அந்த மாநிலத்துக்காரர்கள் அவரவர்களது தேவைகளைச் சொல்லியிருக்கிறார்கள், நானும் சொல்லியிருக்கிறேன். அத்துடன் மத்திய உணவு அமைச்சரை அவரது இல்லத்திலேயே சந்தித்துப் பேசியிருக்கிறோம். நான் போய் வந்தபிறகு, செயலாளர் அவர்கள் போயிருக்கிறார்கள். இவ்வளவு விளக்கம் சொன்ன பிறகு எப்படிப் போராட்டம் நடத்துவது? ஒட்டுமொத்தமாகத்தான் நடத்த வேண்டும். சீனி, மண்ணெண்ணெய், சிமெண்ட் என்று எல்லாவற்றுக்கும் ஒட்டுமொத்தமாகத்தான் போராட்டம் நடத்த வேண்டும். அதற்குப் பெயர்தான் மாநில சுயாட்சி. நான் மாநில சுயாட்சி என்று சொல்லிவிட்டேன். அதைப் பற்றி அருணா அவர்கள் விளக்கமாகப் பேசி விட்டார்கள்.



இந்தக் கட்டுப்பாட்டை எடுத்தபிறகு எந்த அளவிற்கு வேகமாக விலை ஏறமுடியுமோ அந்த அளவுக்குக் கொடுமையாக விலை ஏறிவிட்டது. சாதாரணமாக, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு மூன்றும் உபரி மாவட்டங்கள். அங்கிருந்து, கிட்டத்தட்ட மே, ஜூன் மாதங்களில் நவரை என்ற தானியம் வரும். தென்னாற்காடு, வடாற்காடு மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இங்கிருக்கிறார்கள். வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திடீர் என்று விலை ஏறிவிட்டது என்று கூறினார். அங்கு விலை ஏறியவுடனேயே, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம் ஆகிய 4 மாவட்ட ஆட்சித் தலைவர்களை சென்னையிலே கூப்பிட்டு என்ன நிலைமை என்று விசாரித்தேன். அப்பொழுது அவர்கள் சொன்னார்கள், எங்கள் மூன்று மாவட்டங்களிலும் சேர்ந்து, இந்த இந்த ஆண்டுகளிலே 3½ இலட்சம் ஏக்கரிலே நவரை சாகுபடி செய்திருக்கிறார்கள். ஆனால், இந்த ஆண்டு 1.06 இலட்சம் ஏக்கரிலேதான் சாகுபடி செய்திருக்கிறார்கள் என்று. காரணம், மழையில்லாத தன்மை, கேணியிலே தண்ணீர் இல்லாத நிலைமை. நாற்று, நடவுகளைச் சரியான முறையிலே பாதுகாக்க முடியவில்லை, தண்ணீர் இல்லாத நிலைமையால். (பேரவையில் சத்தம். மணி அடிக்கப்பட்டது.) அவர்களுக்கு நோக்கம் இருக்க வேண்டுமென்று கருதுகிறேன். அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன். நான் சொல்வது மக்களுக்குப் போய் சேர வேண்டாமென்று நினைக்கிறார்களென்று நினைக்கிறேன். தயவுசெய்து, மக்களுடைய பிரச்னை என்ற முறையில் எல்லோரும் நல்லமுறையிலே கேட்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (திரு. முனு ஆதி குறுக்கீடு) நான் ஏதோ சத்தம் கேட்டது என்று சொல்கிறேன். யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**திரு. முனு ஆதி:** நான் பேசிய உடனே சபாநாயகர் அவர்கள் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்பான முறையிலே பேச வேண்டுமென்றும், கேட்க வேண்டுமென்றும் தவறாகச் சொல்லக் கூடாது. நாங்கள் பேச எழுந்தால்: பேசி முடித்துவிட்ட பிறகு பேசுங்கள் என்று சொல்கிறீர்கள், கடைசியிலே பேசுங்கள் என்று சொல்கிறீர்கள். அதனாலேதான் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம் பேசாமல்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நான் யாரையும் பார்க்கவில்லை. எங்கிருந்தோ சத்தம் வந்ததால் டிஸ்டர்ப் பண்ணுகிற மாதிரி நோக்கம் இருக்கக்கூடாது என்று சொன்னேன். எந்தக் கட்சியாக இருந்தாலும், எல்லோரும் கவனிக்க வேண்டுமென்றுதான் சொன்னேன்.

நவரை தானிய விளைச்சல் சரியாக இல்லை, அதனால் விலை ஏறிவிட்டது என்று ஒவ்வொரு மாவட்ட கலெக்டரும் சென்னையிலே சொன்னபொழுது, தென் மாநிலம் முழுவதற்கும் விலையைக் குறைப்பதற்காக, தஞ்சாவூர் தவிர எல்லா மாவட்டங்களிலும் லெவி 25 சதவிகிதம் என்று இருந்ததை 15 சதவிகிதமாகக் குறைத்தோம். அந்தப் பிரச்னையிலே யாரும் வேண்டுமென்று செய்வதல்ல. ஆண்டுதோறும் 2 மாதத்திற்கு ஒரு தரம் லெவியைக் குறைப்பதும், லெவியைச் சேர்ப்பதுமென்று சில நிலைகளை வைத்திருக்கிறோம். நான்காவது மாதத்திலே மீண்டும் லெவியைக் குறைக்கப் பார்த்தோம். அப்பொழுதும் விலை குறையவில்லை. அந்த விலையேற்றம் மீறிக்கொண்டே போனது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டத்திற்கேற்றவாறு, அந்தந்த மாவட்ட சிறு தானியத் தேவைகளுக்கேற்றவாறு, சிறு தானியத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த மக்கள் அரிசிக்கு வரவேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. பொதுவாக, உபரி மாவட்டங்களாக இருந்த அந்த மூன்று மாவட்டங்களிலும் நவரைத் தானியம் விளைச்சல் குறைவாகப் போன காரணத்தினாலே, அதுவும் சேர்ந்த காரணத்தினாலே திடீரென்று விலை ஏறிவிட்டது. அதற்குப் பிறகு தஞ்சை மாவட்டத்தைத் திறந்து விடவேண்டுமென்ற கொள்கையை வகுத்தோம். தஞ்சை மாவட்டத்திலே எப்பொழுதும் பத்தாவது மாதத்திலே திறப்பது வழக்கம். இந்த ஆண்டு ஆறாவது மாதத்திலேயே திறந்தோம். 4 மாதங்களுக்கு முன்னாலேயே திறந்து விட்டோம். இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டதற்குக் காரணம் நிச்சயமாக நான் இல்லை. அந்தச் சூழ்நிலை ஏற்பட்டதற்குக் காரணம் சிறு தானியங்கள் விலை ஏற்றம் அதிகமாகப் போன காரணத்தினாலே, அதை நிறுத்த வேண்டுமென்பதற்காக, தஞ்சை மாவட்டத்திலே திறந்து வைத்தால், மாநிலத்திலே மற்றப் பகுதிகளிலே விலை இறங்கும் என்று செய்தது அது. ஒவ்வொரு ஆண்டும் செய்வதுதான்;



வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கெல்லாம் தெரியும். தை மாதம் ரூ. 10 என்றால், ஆடி மாதத்திலே ரூ. 15 ஆக இருக்கும். ஒவ்வொரு ஆண்டும் இப்படித்தான் இருக்கும். சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டுகூட, தஞ்சை மாவட்டத்திலே இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது. ஆடி, ஆவணி மாதங்களிலே தமிழ் நாடு பூராவும் கிட்டத்தட்ட 60-லிருந்து 70 சதவிகிதம் உற்பத்தி இல்லாத காரணத்தாலே விலையேற்றம் வந்திருக்கிறது. இந்த ஆண்டும் அந்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதே வகையிலே விலை ஏற்றம் இருந்தபொழுது தஞ்சை மாவட்டத்திலே திறந்து விட்டிருக்கிறோம். இருந்தும் இந்த ஆண்டு விலை ஏறிவிட்டது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** நம்முடைய மாநிலத்திற்கு போதுமான அரிசி தமிழ் நாட்டிலே விளைந்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள். அந்த அரிசி வெளியிலே போகக்கூடாது, விலையும் ஏறக்கூடாது. அந்த அரிசி வெளியே போகாமல் தடுக்கவோ, அல்லது விலை நிர்ணயம் செய்யவோ மாநில அரசாங்கத்திற்கு உரிமையிருக்கிறது. ஆடி மாதத்திலே விலை எப்படியிருக்குமென்று நமக்குத் தெரியும். இதைத் தெரிந்துதான் சொல்லுகிறேன். இதைத் தெரிந்த அரசாங்கமே கொள்முதல் செய்து வைத்து, விலை ஏறினால் பார்த்துக் கொண்டு, விலை ஏறுகிற நேரத்தில் இதனை விட்டிருக்க வேண்டுமென்று கூறுகிறோம்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** போன வருஷம் காப்பாற்றினோம். இந்த ஆண்டு அந்தக் கொள்கையை எடுத்து விட்டார்கள். செக் போஸ்டிலே அதிகாரிகளுக்குச் சொல்லி வைத்திருக்கிறோம். அரிசி போனால் தடுக்கிறோம். (குறுக்கீடு) சொல்கிறேனே. சொல்வதற்குள் டயார் என்றால் எப்படிச் சொல்வது? உத்தரவு அனுப்பியிருக்கிறோம். அங்கேயிருக்கிற அதிகாரிகள் மறிக்கிறார்கள், அரிசி இருந்தால்—எதுவாக இருந்தாலும் மறிக்கிறார்கள். எல்லாவற்றையும் சேர்த்து மறிக்கிறார்கள். கேழ்வரகு போனால் மறிக்க முடியவில்லை. சோளம் போனால் மறிக்க முடியவில்லை. அவர்கள் அதிகாரம் எடுக்கப்பட்டு விட்டது.

சோளத்தை ரூ. 40-க்கு மேல் விற்கக்கூடாது என்று சொல்கிறார் சிவில் சப்ளைஸ் அதிகாரி. அங்கிருந்து ஒரு சேட் வருகிறார், ரூ. 60-க்குக் கொடு என்று சொல்கிறார். இந்தக் கட்டுப்பாட்டை நீக்கியதால் இந்த நிலைமை. இங்கே விளைகின்ற சோளத்தை ரூ. 40-க்கு மேல் விற்கக்கூடாது என்று சொல்கிறோம். பைஜாமா போட்டுக்கொண்டு, மார்வாரி வருகிறார். மகாராஷ்டிராவிலே, குஜராத்திலேயிருந்து வருகிறார்கள். ரூ. 5, ரூ. 10 கூடக் கொடுத்துக் கேட்கிறார். இதனை யார் தடுப்பது? கேழ்வரகுக்கு ரூ. 90 இருக்கும்போது அரிசி விற்கிறவன் என்ன செய்வான்? நியாயமாகச் சொல்லுங்கள். அவர்கள் கட்டுப்பாட்டை எடுத்ததால் இந்த நிலைமை. குஜராத்திலே அவர்கள் கொள்கை வகுத்துச் செய்கிறார்கள். குஜராத்திலே கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது சிறு தானியங்கள் நடமாட்டத்திற்கு. ஒரே மண்டலமாக இருக்க வலியுறுத்தியிருக்கிறோம், தமிழ் நாட்டு மக்கள் ஒத்தாசை செய்யுங்கள், இந்திய மக்கள் என்ற முறையிலே குஜராத் மக்களுக்காக உங்களைக் கொஞ்சம் வருத்திக் கொள்ளுங்கள், நீங்களும் பஞ்சத்தைக் கொஞ்சம் ஏற்றுக் கொள்ளுங்கள், இருக்கிற கஷ்டத்தைப் பரிமாறிக்கொள்வோம் என்று அவர்கள் கட்சித் தலைவர் சொல்கிறார்கள். செங்கற்பட்டு, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் இருக்கின்ற விலையேற்றத்தைக் குறைப்பதற்காக தஞ்சை மாவட்டத்தைத் திறந்துவிட்டால், உடனே கேரளாவிற்குப் போய்விட்டது, கேரளாவிற்குப் போய்விட்டது என்றும்—ஒருவர் ஆயிரம் லாரிகள் என்கிறார், இன்னொருவர் பத்தாயிரம் லாரிகள் என்கிறார். எப்பொழுதும்போல் இந்த வருடமும் திறந்துவிடப்பட்டது. ஆனால் கேரளாவிற்குப் போய்விட்டது என்று சொல்கிறார்கள். மாமியார் உடைத்தால் மண்சட்டி, மாமியார் உடைத்தால் பொன் சட்டி, மருமகள் உடைத்தால் மண்சட்டி என்ற நிலைமையிலே . . .

திருமதி த. ந. அனந்தநாயகி: மாமியார் உடைத்தால் மண் சட்டி மருமகள் உடைத்தால் பொன் சட்டி என்பதையே தலை கீழாக மாற்றிச் சொல்கிறார்கள் . . .

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நான் முதலிலே சரியாகத்தான் எடுத்தேன், நீங்கள் குறுக்கிட்டு விளக்கம் சொல்வீர்கள் என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். இந்த



நிலைமையிலேதான் உங்கள் பேச்சு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணம் என்ன? 40 ரூபாய் என்று நாங்கள் விலை நிர்ணயித்தோம். ஒரு குவிண்டாலுக்கு 70 ரூபாய் என்றும், 75 ரூபாய் 78 ரூபாய் என்று ஒவ்வொரு ரக நெல்லுக்கும் தனியாக நிர்ணயித்து இருக்கிறோம். விவசாயிகளுக்கு விலை குறையாமல் கிடைக்கக்கூடிய நிலைமையைத்தான் நாங்கள் பார்த்துக்கொள்ளமுடியும். நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேகமாகக் கருத்துக்களைக் கூறி எந்த அளவிற்கு வேளாண்மையைப் பெருக்க முடியுமோ அந்த அளவிற்கு வேளாண்மையைப் பெருக்கியிருக்கிறோம். உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். வேளாண்மை செய்த சரக்கை விவசாயிகள் வெளியே கொண்டுவருகிறபோது குறையாமல் விற்க வேண்டும் என்ற அளவிலே விலைகளை நிர்ணயித்து இருக்கிறோம்.

தஞ்சாவூரில் உள்ள நிலைமை பற்றி ஏ. ஆர். மாரிமுத்து அவர்களுக்குத் தெரியும். குறுவை அறுத்தால் யார் கொள்ளையடிப்பார்கள் என்றும் தெரியும். வியாபாரிகள் கொள்ளையடிப்பதைத் தடுக்கவேண்டுமென்ற முறையிலேதான் இந்த ஆண்டு 90 ஆயிரம் டன் கொள்முதல் செய்திருக்கிறோம். திரு. மணலி அவர்கள்கூட சொன்னார்கள், 40 ரூபாய்க்கு விற்றேன் என்று. எங்கள் மேல் தவறில்லை. விவசாயிகளுக்கு குறைத்துக் கொடுத்துவிட்டு வியாபாரிகள் கொள்ளையடிக்கிறார்கள், நீங்கள் பார்க்கவில்லையென்று எங்களைச் சொன்னால் குற்றமாகும். விவசாயிகளுக்கு நல்ல விலை குறையாமல் நிர்ணயித்து இருக்கிறோம். உயர்வான விலையைக் கொடுத்து மகாராட்டிராக்காரனும் குஜராத்காரனும் வாங்கிக்கொண்டு போய்விட்டான் என்றால் யார் அதற்குப் பொறுப்பு? சென்ற ஆண்டு இருந்த முறையே இந்த ஆண்டும் இருந்து நீதான் காரணம் என்று குற்றம்சாட்டினால் நான் அதை ஒத்துக்கொள்கிறேன் ஆனால் சென்ற ஆண்டு இருந்த நிலைமையை நீங்கள் மாற்றிவிட்டீர்களே.

அம்மையார் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், கூட பத்து லட்சம் உற்பத்தி செய்தாலும் உன்னை விநியோகிக்கவிட மாட்டேன் என்று. அவ்வளவு தைரியம் இருக்கிறது அவர்களுக்கு. என்னுடைய அதிகாரத்தைப் பிடுங்கி மேலே உட்கார்ந்திருக்கின்றவர்களுக்குக் கொடுக்கப் பாடுபடுகிறார்கள், உண்மை

நிலைமைப் பார்ப்பதில்லை. அம்மையார் அவர்கள் பேசியிருக் கிருர்கள், மந்திரிகள் பெண்டாட்டிகளை யெல்லாம் தெருவிலே க்யூவிலே நிறுத்திவைக்கப் போகிருர்களாம், மண்ணெண் ணெய்க்காக. மண்ணெண்ணெய் கிடைக்கவில்லையென்ருல் யார் பொறுப்பு? அவர்கள் கொடுக்கவில்லை, மண்ணெண்ணெய் உடனே வேண்டும் என்று மத்திய அமைச்சருக்கு முதலமைச்சர் அவர்கள் தந்தி கொடுத்தவுடன் மறுநாள் வருகிறது. இடையிலே இருந்த ஒரு நாளைக்குள் மந்திரி மனைவிகள் க்யூவில் நிற்க வேண்டுமென்று பேசி அரசியல் வேஷம் ஆடுகிருர்கள். ஏமாந்த மக்களிடத்திலே என்ன வேண்டுமானுலும் பேசி விடலாமா? என்ன செய்வது, மண்ணெண்ணெய் அங்கேயிருந்து வாங்க வேண்டியிருக்கிறது. அந்த அமைச்சர் கொடுக்கவில்லை. நம் முடைய முதலமைச்சர் தந்தி கொடுத்தவுடன் மறுநாள் வருகிறது.

ஆகவே மக்களைக் குழப்புவது பெரிய காரியமல்ல. யார் வேண்டு மானுலும் பதவியிலே இருக்கலாம். நீங்கள் சொல்லிவிட்டீர்கள், ஒரு ஆண்டுக்காலத்திற்குத்தானே இருக்கப் போகிறீர்கள் என்று. குடுகுடுப்பைக்காரன் சொல்வானும், அப்படியே போருன், அப்படியே போருன் என்று சொல்வான். எவ்வளவு ஆசையோடு இந்தப் பதவிக்கு வரவேண்டுமென்று நீங்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள், நீங்கள் வந்தபிறகு நீங்கள் விலை நிர்ணயிப்பதற்கு உங்களுக்கு அதிகாரம் வேண்டுமா வேண்டாமா? அதைச் சிந்தித்து பாருங்கள். உணவு இலாகா முன்னுல் திரு. ப. உ. ச. விடம் இருந்தது, அதற்குப் பிறகு கூட்டுறவுத் துறை அமைச்சராக பார் அட்லா படித்த ஆதித்தனுர் அவர்களிடம் இருந்து என் கைக்கு வந்தது. இப்படி மாறலாம். யார் எந்த இலாகா வைத்திருந்தாலும் மக்களுடைய நன்மையைத் தான் கருத்தில் கொள்ள வேண்டும். தமிழ் நாடு, நாம் தமிழர்கள், தமிழ் மக்களுக்கு உணவு வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு வருக்கும் இருக்கக்கூடிய வகையில் எல்லோரும் சிந்திக்க பார்க்க வேண்டும். மத்திய அரசு கட்டுப்பாடு எடுத்தவுடனைப்பற்றி



யாராவது பேசுவார்களா என்று எதிர்பார்த்தேன், பேசவே இல்லை. நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் நியாயமாக அதைப் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். மூன்று மாதங்களுக்கு முன்னுல் என்ருல் பேசியிருப்பார்கள். இப்பொழுது கட்சியின் கட்டுப்பாட்டிற்காக பேசாமல் இருக்கிருர்களோ என்னவோ தெரியவில்லை. நியாயத்தைப் பேச மறந்து விட்டார் . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, எந்த விதமான ரகசிய ஒப்பந்தமும் இல்லையென்பதை பகிரங்கமாக நான் அறிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** ரொம்ப மகிழ்ச்சி. அப்படியானுல் தமிழ் நாட்டிற்கு ஒரு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று நம்புகிறேன்.

உள்ளபடியே மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சங்கடத்திற்கு யார் காரணம்? இதிலே அரசியல் பார்க்கக்கூடாது. ஆளுவது எந்தக் கட்சி என்று பார்க்கக் கூடாது. அரிசியை வைத்தே வந்தாய், அரிசியை வைத்தே தொலைவாய் என்று உடனே சொல் கிருர்கள். இப்படிச் சொல்லி சில பேர்கள் பிள்ளையார் கோயி லுக்குப் போய் அரிசிப் பஞ்சம் நீடிக்கவேண்டுமென்று வேண்டு கிருர்கள். இன்னும் சில பேர் அண்டர்க்ரவுண்ட் கூட்டம், ரகசியக் கூட்டம் போட்டு லாரியை மறி, கொள்ளையடி என்று சொல்லித் தருகிருர்கள். முன்பு அரிசிப் பஞ்சம் வந்தபோது நாங்கள் என்ன செய்தோம். தஞ்சையிலே உண்ணுவிரதம் இருந்தோம். அவர்களையும் சேர்த்துக்கொண்டு ஹர்த்தால் செய்து காண்பித் தோம். ஆனுல் இவர்கள் என்ன செய்கிருர்கள். சைதாப் பேட்டையிலே கடையை உடைத்து அரிசியைக் கொடுத்திருக் கிருர்கள். அரிசி போடுகிருர்கள், வாருங்கள் என்று சொல்லி அப்படிச் செய்து இருக்கிருர்கள். கடையை உடைத்து அள்ளிக் கொண்டுபோய் இருக்கிருர்கள். பக்கத்துக் கடையையும் கூட உடைத்திருக்கிருர்கள். மதுரையிலே பெண்களையெல்லாம் அரிசி போடுகிருர்கள் என்று வரச்சொல்லி அரிசியை அள்ளிக் கொண்டு போயிருக்கிருர்கள். இப்படிப்பட்ட செயல்களை வேண்டுமென்றே தமிழ்நாட்டிலே ஏராளமாகச் செய்வதால் சில நிலைமைகளை தயவு

செய்து ஏற்படுத்தவேண்டாம், அதனால் உங்களுக்குக் கஷ்டம் இல்லை, நாட்டு மக்களுக்குத்தான் கஷ்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டு நிலைமையை உணர்ந்து நாம் எல்லாம் தமிழ்நாட்டிலே பிறந்திருக்கிறோம், தமிழ் நாட்டு மக்களுக்கு உணவு வேண்டும், நாமும் தமிழ்நாட்டிலே ஆட்சி நடத்த வேண்டுமென்ற முறையிலே உணவு நிலைமையை ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இதை ஆரம்பித்து வைத்த திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் ரொம்ப வருத்தத்தோடு பேசினார்கள். தொடர்ந்து பேசிய திரு. வடிவேல் அவர்கள் மிகவும் ஆக்ரோஷமாகப் பேசினார்கள். தஞ்சை மாவட்ட மக்களைப்பற்றிச் சொன்னார்கள். அவர்கள் இங்கு இப் போது இல்லை. தஞ்சை மாவட்ட மக்களுக்கு நாங்கள் எங்கள் ஆட்சிக் காலத்திலே என்ன என்ன செய்யவேண்டுமோ அவற்றை யெல்லாம் நூற்றுக்கு நூறு செய்துவருகிறோம். நாங்கள் அவர் களுக்கு என்ன என்ன செய்ய வேண்டுமென்று நவம் இருந்தோமோ அவையெல்லாவற்றையும் செய்துவிட்டோம். இந்த நிலையில் இப்படி ஒரு கஷ்டம் வந்துவிட்டதே என்று உள்ளபடியே நான் ஏங்குகிறேன். இந்த ஐந்தாண்டுக் காலத்திலே அந்த மக்களுக்கு என்ன என்ன நன்மைகள் செய்யமுடியுமோ அவற்றை யெல்லாம் செய்து முடித்து இருக்கிறோம், இப்படி ஒரு கஷ்டம் வந்ததைப்பற்றி நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன்.

எல்லோரும் சேர்ந்து கேரளாவிற்குப் போய்விட்டது, கேரளா விற்குப் போய்விட்டது என்று சொல்கிறார்கள். அப்படி நினைப்பது தவறு. நான் உண்மையிலேயே சொல்கிறேன். திரு. எட்மண்ட் அவர்கள்கூடச் சொன்னார்கள், அதிகாரிகளை சரியாகப் பயன் படுத்தவில்லை என்று சொன்னார்கள். ஆனால் பிறகு சொன்னார்கள், அதிகாரிகள் கேட்கவில்லையென்றால் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். முன்னுக்குப் பின் முரணாகச் சொல்கிறார்கள். முதலிலே அதிகாரிகளைச் சரியாகப் பயன் படுத்தவில்லை, தப்பான வழியில் உத்தரவு போடுகிறோம் என்று சொன்னார்கள். நல்ல சுப்பீரியர் அதிகாரிகளை, போலீஸ் அதிகாரி களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். பிறகு அம்மையாரைப்



பற்றிச் சொன்னார்கள். சட்டமன்றத்தில் அம்மையார் அவர்கள் பேசிய பிறகு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அது உண்மை என்று சொல்ல முடியாது.

இன்றையதினம் ஃபுட் செல்லில், உணவுப் புலனாய்வுத் துறையில் இருக்கின்ற அதிகாரிகள் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள். நேற்று திரு. கோபால் கூடச் சொன்னார்கள். அங்குள்ள அதிகாரி களைப்பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் யார் தவறாகச் சொன்னாலும் அதைக் கேட்க மாட்டார்கள். நம்மைப் போன்ற அரசியல்வாதிகளைவிட மக்கள்மீது நம்பிக்கை கொண்டு பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். நான் அமைச்சர் என்ற அளவில் அவர்களைப் பாராட்டுகின்ற அளவில் சொல்கிறேன்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூடச் சொன்னார்கள். போட்டில் சென்றவர்களைப் பிடிக்கும்பொழுது அவர்களும் துப்பாக்கியால் சுட இவர்களும் துப்பாக்கியால் சுட்டு சண்டை போட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 20 மைல் தூரம் சென்றிருக் கிறார்கள். மலையிலே நடந்து செல்கிறார்கள். தலைச்சுமையாகக் கொண்டு செல்பவர்களிடமிருந்து கைப்பற்றி இவர்கள் தலை யிலேயே சுமந்துகொண்டு கீழே இறங்குகிறார்கள். இரண்டு நாட்கள் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் கூடப் பாடுபடுகிறார்கள். அந்த அதிகாரிகளைப் பார்த்து நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களைப் பிடிப்பதில்லை என்றும், யார் யாரையோ விட்டுவிடுகிறார்கள் என்றும் சொல்லி திசைதிருப்புவது இந்த நாட்டிற்கு நல்லது அல்ல.

எங்களுக்கு கெடுதல் பண்ண வேண்டுமென்று தனிப்பட்ட முறையிலே இருக்கின்ற கோபத்தினால் தனிப்பட்ட முறையிலே கொண்டுபோய் இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடத்திலே கொடுத்திருக்கின்றீர்கள். குற்றச்சாட்டுகள், பேழைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. டெல்லியைப்பற்றி தமிழகத்திலே என்ன பேச்சு என்று கேட்கிறீர்கள்? ஆனால் தமிழ்நாட்டைப் பற்றி எதற்காக மர்மப்பேழை டெல்லிக்குப் போக வேண்டும்? ஏன் போகவேண்டும்? அதிலே வேண்டாம், இதிலே வேண்டும் என்று சொல்வதில் நியாயமில்லை.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 ஆகஸ்ட் 17

இன்றைக்கு அந்தப் புலனாய்வுத் துறையில் பணிபுரிபவர்கள்
என்னென்ன செயல்களைச் செய்திருக்கிறார்கள் என்று விளக்கம்
கொடுத்திருக்கிறேன். திரு. எட்மண்ட் அவர்கள் வழக்குகள்
போடவில்லை என்று சொன்னார்கள். சட்டப்படி யார் யார் மேல்
என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ—என்ன சட்டம் இருக்
கிறதோ அதற்கு மாறாக யார் நடந்திருந்தாலும் அந்தச் சட்டங்
களை அமுல்படுத்தி இருக்கிறோம். வேண்டுமானால் விளக்கமாக
எந்தெந்த வழக்குகள் என்று கேட்டால் அதைப்பற்றிச் சொல்
வதற்கு வசதியாக இருக்கும். ஆனால் முழுவதையும் படிப்பதற்கு
நேரம் இல்லை என்பதால் அச்சடித்து உங்கள் கையில் கொடுத்திருக்
கிறோம். தயவு செய்து அவைகளை நீங்கள் பார்க்க வேண்டும்.
திரம்பப் பதில் சொல்ல வேண்டுமென்று நான் ஒதுக்கியிருந்தேன்
என்றாலும் டயம் ஆகிவிட்டது என்று சொல்கிறார்கள்

திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, அரசாங்க அதிகாரிகள்
கைப்பற்றும் அந்த உணவுப் பண்டங்களுக்கு அவர்கள் ரசீது
கொடுப்பதில்லை. மூட்டை மூட்டையாகக் கண்டுபிடிக்கும்
எந்தப் பொருளாக இருந்தாலும் அவைகளுக்கு ரசீது கொடுப்ப
தில்லை. —ஆகவே கைப்பற்றப்பட்ட பொருள்கள் எவ்வளவு என்ற
கணக்கு அரசாங்க அதிகாரிகளிடத்தில் இல்லை. எனவே கைப்
பற்றும் அரிசிக்கும், நெல்லுக்கும் ரசீதுகளை உடனடியாகக்
கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே,
சுமையாகக் கொண்டு செல்லும் பொருட்களைப் பிடிக்கப்போனால்
அவைகளைப் போட்டுவிட்டு அவர்கள் ஓடிவிடுகிறார்கள். லாரிகளில்
செல்வதைப் பிடித்தால் இத்தனை மூட்டை என்று போலீசாரிடத்
தில் கொடுத்துவிடுகிறார்கள். சட்டப்படி 75-டன் வைத்துக்
கொள்ளலாம், 50 டன் அரிசிதான் வைத்துக்கொள்ளலாம் என்று
போடுகிறோம். வியாபாரிகள் அந்த உத்தரவை மீறினால் தடை
போடுகிறோம். அதற்குமேல் வியாபாரிகளிடமிருந்து எடுத்தால்
ரசீது கொடுத்திருக்கிறோம். இரயில்களில் போவதைப் பிடித்
தால் போட்டுவிட்டு ஓடிவிடுகிறார்கள், அதை 'க்ளெய்ம்' செய்
வதற்கு ஆள் இல்லை. எனவே இதில் இரண்டு துறை அதிகாரிகள்
இருக்கிறார்கள். சிவில் சப்ளைஸ் அதிகாரிகளும், அதே நேரத்தில்



1974 ஆகஸ்ட் 17] [திரு. மன்னை. ப. நாராயணசாமி]

போலீஸ் அதிகாரிகளும் இருக்கிறார்கள். அந்த முறையில்
நடந்திருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைத் திறந்தவுடன் லாரி
லாரியாக கேரளாவிற்குப் போகிறது என்று சொல்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கழுதைமீது அரிசியை ஏற்றிச்
செல்லும்பொழுது பிடித்தால், ரசீது கொடுக்கும்பொழுது
கழுதை ரசீதைத் தின்றுவிடுமே எனவே, ரசீது கொடுப்பதில்
வேறு ஏதாவது ஒரு முறையை ஏற்படுத்த வேண்டும்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கழுதையிடம்
நான் பழகியது இல்லை. அது எதைத் தின்னும் என்று எனக்குத்
தெரியாது.

கேரளா
தஞ்சை மாவட்டத்தைத் திறந்து விட்டதால்
விற்குப் போய்விட்டது என்று ஒட்டுமொத்தமாகச் சொல்கிறார்கள்.
ஆனால் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் மட்டும், திரு.
கோபால் அவர்கள் மட்டும் சொல்லவில்லை. எல்லை ஓரத்தில் இருப்
பதால் இங்கே சொல்லவில்லை என்று கருதுகிறேன். ஆனால்
பத்திரிகைகளில் பார்த்தேன். இவ்வளவு போனது என்று பேசிய
தாகப் பார்த்தேன். அந்தப் பத்திரிகையில் ஒன்று என்றால்
இரண்டாக வரும். 11—6—1974-ல் எடுத்தோம். அப்படி
எடுத்தவுடன் உணவுச் செயலாளர் அவர்கள் தஞ்சை மாவட்ட
கலெக்டரிடத்தில் சொல்லி, அஃபிஷியலாக நாம் செக் போஸ்ட்
வைத்திருந்தால் எடுக்க வேண்டுமென்று, ஆனால் ஆளை எடுக்க
வேண்டாம் என்றும் சொன்னார்கள். மார்க்கெட் கமிட்டி என்று
இருக்கிறது; அரிசி, நெல்லுக்கு டாக்ஸ் கொடுக்க வேண்டும்.
அந்தத் தொகையைக் கொடுப்பதற்கு பரிசோதிக்கும் முறையில்
எந்தெந்த லாரிகள் எங்கெங்கே செல்ல வேண்டுமென்று கணக்கிட
வேண்டுமென்று தஞ்சை கலெக்டருக்கு சொன்னார்கள். மற்ற
மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தஞ்சை மாவட்டத்தில்
வைத்த கணக்குப்படி ஆங்காங்கே போய்ச் சேருகிறதா என்று
பார்க்க வேண்டும் என்ற நிலைமை உருவாக்கப்பட்டது. பாதுகாப்பு
சரியாக இருக்க வேண்டாமா என்று கேட்டார்கள். 6 ஆயுத
போலீஸ் படை இருக்கிறது. அதைத் தவிர ஃபுட் செல்லைச்
சேர்ந்த தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். இதற்குமேல் கிட்டத்
தட்ட 60, 70 பேர் டி.எஸ்.பி.-க்கள், இன்ஸ்பெக்டர்களை எல்லாம்
போட்டு எல்லைக்குப் போகச் சொல்வது மட்டுமல்ல, மற்ற

மாவட்டங்களுக்கு உள்ள கட்டுப்பாட்டை எடுத்துவிட்டதால் அந்த ஃபுட் செல் அதிகாரிகளையெல்லாம் எல்லையோரங்களுக்குப் போகச் சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், ஜில்லா போலீஸ் சூப்பிரண்டெண்டுகளிடம் சொல்லி ரிசர்வ் படையின் ஒத்தாசையோடு பாதுகாப்பைச் செய்திருக்கிறோம். எனவே நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்ல முடியாது. இப்படியிருக்க இலட்சமாக, கோடியாக எப்படிப் போகும்? அந்த அளவிற்கு நிலைமைகள் இல்லை. கிட்டத்தட்ட 19,862 டன் அளவில் தான் போயிருக்கிறது என்ற கணக்கு எங்களிடத்தில் இருக்கிறது. கணக்கு எடுத்து வைத்திருக்கிறோம். மறுநாள் மறுநாள் போய் கண்டுபிடித்த விவரங்கள் இருக்கின்றன. வேண்டுமானால் பிறகு அவைகளைப்பற்றி பத்திரிகைகளில் விளக்கம் கொடுக்கிறேன். பெயர்ப்பட்டியல் வைத்திருக்கிறேன். கேட்டால் அவைகளைச் சொல்கிறேன்.

அந்த அளவில் மாவட்டத்தில் யார் யார் செய்கிறார்களோ—அந்தந்தப் பகுதிகளிலே உள்ள கலெக்டர்களெல்லாம் ஆங்காங்கே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். சென்னையிலே 1,807.5 குவிண்டால் நெல். அன்றைக்குப் பிறகு சொல்கிறேன், அரிசி 30,373.92. கைப்பற்றியது 750. இது முடக்கப்பட்டது. அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் உத்தரவில்லாமல் வெளியே போகக்கூடாது. எப்பொழுது விற்கலாம் என்று அவர்கள் சொல்கிறார்களோ அப்பொழுதுதான் விற்கலாம். தர்மபுரியில் 137 டன், அதே நேரத்தில் அரிசி 19 டன் கைப்பற்றப்பட்டது. 240.75 குவிண்டால். தஞ்சையில் 1,770 குவிண்டால். வரம்பு மீறி இருந்ததை முடக்கி வைத்திருந்தது. திருச்சியிலே 74,318 டன் நெல், மணச்சநல்லூரில் 19 ஆம் தேதி நிறுத்தி வைத்து, 75 டன்னுக்குமேல் வைத்துக் கொள்ளக்கூடாது என்றதற்குப் பிறகு இருந்த இருப்பை கலெக்டர் தடை செய்து எங்கள் உத்தரவு இல்லாமல் போகக்கூடாது என்று திருச்சியிலே செய்திருக்கிறார்கள். அங்கே 868 டன் அரிசி. புதுக்கோட்டையிலே 1,175 டன் நெல். இதுவெல்லாம் தஞ்சையிலே கட்டுப்பாட்டை எடுத்த பிறகு. திருநெல்வேலியில் 4,522, இராமநாதபுரத்தில் 6,400. இது கட்டுப்பாடு. இன்னும் சீஸ் பண்ணியதைப்பற்றிய மற்ற விளக்கங்களெல்லாம் நிரம்ப இருக்கின்றன.

(பிற்பகல் 1-00)





இந்த நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில் நம்முடைய அதிகாரிகள் பாடுபட்டுச் செயலாற்றியிருக்கிறார்கள். உங்களுக்கும் இதெல்லாம் தெரியும். தெரிந்திருந்தும் எங்கள் மீது உள்ள கோபத்தால் குற்றம் சாட்டுகிறீர்கள்.

அருணா அவர்கள் புள்ளிவிவரம் சொன்னார்கள். 1,500 கடைகள் தான் இருப்பதாகச் சொன்னார்கள். நான் கடந்த உணவு மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போதே புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். மொத்தம் 9,842 சில்லரை விற்பனைக் கடைகள் இருக்கின்றன. இப்போது தனியாரிடமிருந்து பெரும்பகுதி கடைகள் எடுக்கப்பட்டு விட்டன. தமிழ்நாடு உணவுக் கழகத்தின் மூலம் நடைபெறும் கடைகள் 102; கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடைபெறுபவை 4,753; தனியார் அமைப்பில் 4,987. இந்த விளக்கத்தை நான் ஏற்கனவே அறிக்கையில் கொடுத்திருக்கிறேன். அவர்கள் எந்தப் புள்ளி விவரத்தைக் கொடுத்தார்களோ தெரியாது. அம்மையார் அவர்கள் கூட இரண்டாயிரம் கடைகள் என்றுதான் புள்ளி விவரம் கொடுத்தார்கள். அது சரியல்ல. தனியாரிடமிருந்த நாலாயிரத்துக்கு மேற்பட்ட கடைகள் இப்போது ஆயிரம் என்ற அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆலடி அருணா:** நான் படிக்கும்போதே சொன்னேன்—1972-ம் வருஷத்திற்கு உரிய கணக்கைப் படிக்கிறேன், அது சரியல்ல என்று விவரத்தைக் கூறினால் ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று அன்றே சொன்னேன். இப்போது கூட மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய மாநிலத்தில் குறைவுதான்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தேவைக்கேற்ற படிதான் வியாபாரம் செய்ய வேண்டுமே தவிர, மற்ற மாநிலங்களில் இவ்வளவு கடைகள் இருக்கின்றன என்பதற்காக நாம் கடைகளை வைக்க வேண்டிய அவசியமில்லை. எங்கெங்கு பற்றாக் குறை இருக்கிறதோ, அரிசி மற்றப் பொருள்கள் தேவையோ அந்தப் பகுதிகளுக்குக் கொடுப்பதற்காக கடைகள் ஏற்படுத்தப் படுகின்றன. சென்னை, கோவை, கன்னியாகுமரியிலுள்ள பகுதிகளில் உள்ள மக்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 1.40 காசுக்கு

கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பாண்டிச்சேரியிலும் சரி, ஆந்திராவிலும் சரி இதே முறையில் பற்றுக்குறை இருக்கும் பகுதிகளில்தான் கொடுக்கப்படுகிறது. வெளி மார்க்கெட் விலையைப் பார்க்கும்போது அங்கும் தமிழ் நாட்டை விடக் குறைவாக இருப்பதாகத் தெரியவில்லை. இப்போது கூட்டுறவுத் துறையில் 6,702 கடைகள் இருக்கின்றன; பஞ்சாயத்து மூலம் 726 கடைகள்; சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் 125 கடைகள்; தனியார் மூலம் 1,516 கடைகள். தனியாரிடத்திலிருந்த கடைகளை எடுத்ததன் காரணமாகத்தான் அவர்கள் மிகுந்த தொல்லை கொடுத்தார்கள். திருச்சியில் மாநாடு எல்லாம் போட்டு ரொம்பத் தொல்லை கொடுக்கிறார்கள். மதுரையில் சென்ற மாதம் 136 தனியார் சில்லறை விற்பனைக் கடைகளை அப்படியே மாற்றினோம். அந்தக் கடைகள் மூலம் கார்டு கூட இல்லாமல் கொடுத்துவந்தார்கள். திரு. அழகர்சாமியிடம் பல முறை சொல்லியிருக்கிறேன். கொள்கை உங்களுக்கும் நமக்கும் ஒன்றுதான்.

திரு. சோ. அழகர்சாமி: கொள்கை இருக்கிறதே தவிர, அந்தக் கடைகளில் பொருள்கள் விநியோகிக்கப்படுவதில்லை. இத்தனை ஊர்களில் எத்தனை கடைகளில் அரிசி விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கடையை சும்மா வைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லக் கூடாது. 90 லட்சம் குடும்பங்களுக்கு அட்டை கொடுத்திருக்கிறோம். அவர்கள் சீனி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். சீனி கொடுக்கவில்லை என்றால் எந்த இடத்தில் கொடுக்கவில்லை என்று சொல்லவேண்டும். பொத்தாம் பொதுவாகச் சொல்வது சரியல்ல.

திரு. சோ. அழகர்சாமி: அநேக கிராமங்களில் வெறும் கார்டு இருக்கிறதே தவிர, சீனி இல்லை. அதை நான் நிரூபிக்கத் தயார்.

திரு. ஆலடி அருணா: அமைச்சர் அவர்கள் சொல்லுவது போல் கார்டு வழங்கப்பட்ட இடங்களில் அரிசி கொடுப்பதாகச் சொல்லுவது முற்றிலும் தவறு. நகரப்புறங்களிலும் கொடுக்கவில்லை. கிராமப்புறங்களில் அறவே இல்லை.



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நீதி மன்றத்திலே வக்காலத்து வாங்குவது போல் பேசுவது சரியல்ல. ஒன்பதாயிரத்துக்கு மேற்பட்ட கடைகள் இருக்கின்றன. அரிசி எங்கெங்கு தேவையோ அங்கு கொடுக்கிறார்கள்.

திரு. ஆலடி அருணா: அரிசி எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் கொடுக்கப்படவில்லை. நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கூறி என்னுடைய பகுதியில் இன்னின்ன பகுதியில் அரிசி கொடுக்கவேண்டுமென்று மகஜர் கொடுத்திருக்கிறேன். அந்தப் பகுதிகளில் எங்கும் கொடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா இடங்களிலும் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை.

திரு. ஆலடி அருணா: அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்— நாங்கள் எல்லா மக்களுக்கும் கொடுக்கவில்லை; தேவையான இடங்களில் கொடுக்கிறோம் என்று. இந்த இந்த இடங்களில் தேவை என்று சொல்லி நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையாக மனுச் செய்தோமே அந்த இடங்களில் கொடுக்கப்படவில்லை என்றுதான் கூறுகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 1,500 கடைகள் என்று அவர்கள் சொன்னார்கள். 9,000-க்கு மேற்பட்ட கடைகள் இருக்கின்றன என்று சொன்னேன். அவற்றின் மூலம் தேவையான இடங்களுக்கு அரிசி கொடுக்கப்படுகிறது. திரு. அழகர்சாமி அவர்கள் தனியார் வசம் இருக்கும்போது கொடுத்ததைப் போல் இப்போது ஒழுங்காக இல்லை என்று சொல்லுவது போல் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: நான் அப்படிச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: எந்தெந்த இடங்களில் அரிசி இல்லையோ அந்தப் பகுதிகளில் கொடுக்கிறோம். மதுரையில் 136 தனியார் கடைகளை இலாகாவுக்கு மாற்றினோம். உடனே, எனக்கு திறமை இல்லையென்று சொல்லுகிறார்கள். (குறுக்கீடு) இப்போது நாம் அர்த்தநாரீசுவரர் மாதிரி இருக்கிறோம். என்ன செய்வது? இப்போது நான் யாரையும் குற்றம் சொல்லவில்லை. எங்கள் மீது குற்றம் சொல்லுபவர்கள்

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 ஆகஸ்ட் 17

குறிப்பிட்டு இன்னின்ன இடத்திலே இப்படி நடந்திருக்கிறது என்று சொல்லவில்லை. ஒட்டுமொத்தமாகக் கூறுகிறார்கள். புள்ளி விவரங்களோடு குற்றம் சாட்டவில்லை. நாங்கள் தனியாரை வளர்க்கவில்லை. தனியார் துறையில் இருந்த கடைகளை எல்லாம் எடுத்து தேசியமயமாக்கியிருக்கிறோம். அதனால் நாங்கள் பல எதிர்ப்புகளுக்கு உள்ளானோம். அந்த எதிர்ப்பை நாங்கள் மக்களுடைய நல்வாழ்வுக்காகத் தாங்கிக் கொள்கிறோம். நாங்கள் மக்கள் நலத்திற்காக வாழ்கிறோமே தவிர, இந்த மந்திரி சபையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பதற்காக இல்லை.

திண்டுக்கல் போயிற்று, கோவை போயிற்று என்று சொல்லும் போது நான் ஒன்றை நினைக்கிறேன். ரெடிமேட் கடையில் சட்டை வாங்குவது போல் அரசியல் நிலைமை போய்க் கொண்டிருக்கிறது. மக்கள் உங்கள் பக்கம் இல்லை, உங்கள் பக்கம் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இல்லாத நேரத்திலே தான் அவர்கள் இங்கே இருந்திருக்க வேண்டும். அவர்கள் சௌகரியமாக இருக்கவேண்டுமென்று இங்கிருந்து போய்விட்டார்கள். பழைய நிலையை எல்லாம் மறந்துவிடக் கூடாது.

தமிழ்நாட்டிலே மனிதாபிமானம் ரொம்ப சிறப்புடையது. 'தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவர்க்கோர் குணமுண்டு'. தமிழ்நாட்டிலுள்ள அந்த நாகரிகத்தை தயவு செய்து போக்கவேண்டாம். சொல்லப்பட்ட குற்றச்சாட்டிலே 60 சதவிகிதம் காரணங்களைக் காட்டிச் சொன்னால் பரவாயில்லை. இல்லாததை எல்லாம் சொல்லிவிட்டு எல்லோரும் சேர்ந்து கை தட்டுவதில் பயன் இல்லை. அதனால் இந்த அமைச்சரவைக்கு ஆபத்து ஒன்றுமில்லை; அதனால் இந்த நாட்டின் எதிர்காலத்திற்குத் தான் ஆபத்து என்பதை உணரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் முதலமைச்சர் அவர்கள் பேசவேண்டும். நான் ஒரு மணி நேரம் பேசியிருக்கிறேன். மற்ற விளக்கங்களை மற்ற மற்ற நேரங்களில் கொடுக்கிறேன். உண்மையை மறைக்காதீர்கள். மாநில சர்க்கார் செய்கிற காரியங்களில் எல்லாம் மத்திய சர்க்கார் தலையிடுகிறது; இப்படிப்பட்ட தலையீடுகள், தொல்லைகள் குறைந்தாலே தமிழ்நாட்டு உணவு நிலையை மேலும் நல்ல முறையில் சீர்படுத்த முடியும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1974 ஆகஸ்ட் 17]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் நண்பர் மாரிமுத்து அவர்கள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தேவையற்றது என்பதை எடுத்துக் கூறுகிற அளவில் நான் சில கருத்துக்களை மிகச் சுருக்கமாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த நண்பர் மாரிமுத்து அவர்களும் அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் இன்றைக்கு தமிழ்நாட்டில் நிலவுகிற உணவுப் பிரச்னையைப் பற்றி விவாதிப்பதற்கு நாங்கள் இந்தப் பேரவையை ஒரு வாய்ப்பாகக் கொள்கிறோம் என்று எடுத்துச் சொன்ன கருத்தை நான் வரவேற்கிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் எடுத்துக் காட்டப் பெற்ற குறைபாடுகள், குற்றச்சாட்டுகள் இவைகளுக்கு எல்லாம் நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இவ்வளவு நேரம் விளக்கமான பதில்களை இங்கே கூறியிருக்கின்றார்கள். நேரம் அதிகம் இல்லாத காரணத்தாலும் நான் பேசிய பிறகு தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ள நண்பர் மாரிமுத்து அவர்கள் மீண்டும் உரையாற்றுவதற்கான நியதியிருக்கிற காரணத்தாலும் விரைவிலேயே என்னுடைய உரையை நான் முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

அது மட்டுமல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய பல பிரச்னைகளுக்கு இந்த மாமன்றத்திலே நான் தொடர்ந்து அமர்ந்திருந்து அந்தந்த நேரத்திலேயே குறுக்கிட்டு பல விளக்கங்களை அளித்திருக்கிற காரணத்தால் அவைகளை எல்லாம் திரும்பத் திரும்ப இங்கே எடுத்துக் கூற வேண்டிய அவசியமில்லை என்றே நான் கருதுகிறேன்.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற உணவுப் பிரச்னை உள்ளபடியே நாம் அனைவரும் சேர்ந்து வேதனைப்படத்தக்க ஒரு நிகழ்ச்சி என்பதை நான் மறுக்கவில்லை. அதற்கான நல்ல வழிவகைகளை, எப்படி இந்தப் பிரச்னையிலிருந்து தமிழ்நாட்டைக் காப்பாற்றுவது என்பதற்கான அறிவுரைகளை இந்த மாமன்றத்திலே நான் எதிர்

பார்த்த அளவிற்கு பல கட்சிகளினுடைய தலைவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள் என்பதை எண்ணி நான் அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குற்றச்சாட்டுக்களைக் கூறுவது என்பது ஒன்று, குறைகளைச் சுட்டிக்காட்டுவது என்பது மற்றொன்று. குறைகள் குற்றங்கள் இரண்டுக்கும் இடையில் பெருந்த இடைவெளி இருக்கிற என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. குற்றங்கள் பெரும்பாலும் தெரிந்து செய்யப்படுகின்றவை. குறைகள் சில நேரங்களில் தெரியாமலே விளைந்துவிடுகிறவைகள். அவைகளை எடுத்துச் சொல்கிற நேரத்தில் திருத்திக் கொள்கிற மனப்பான்மை ஆளும் கட்சியில் இருந்தாலும் எதிர்க்கட்சியில் இருந்தாலும் அவர்களுக்கு அது மிகமிகத் தேவைப்படுகின்ற ஒரு சிறந்த பண்பு என்பதை நான் உணராமல் இல்லை. அந்த வகையில் இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட குறைபாடுகள் எதுவாக இருந்தாலும் தனித்தனியாக, பகுதி பகுதியாக, மாவட்ட ரீதியாக எடுத்துச் சொல்லப்பட்ட எந்தக் குறைபாடுகளாக இருந்தாலும் அவைகளை நிச்சயமாக நான் அவ்வப்போது குறுக்கிட்டு உறுதி அளித்ததைப் போல் களைவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்ற திடமான உறுதியை இந்த மன்றத்தில் நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே மற்ற மாநிலங்களை விட உணவு நிலைமையில் ஒரு தன்னிறைவும் நாம் அனைவரும் மகிழத்தக்க ஒரு சூழ்நிலையும் இருந்தது திடீரென்று இரண்டொரு நாட்களில் மாறிவிட்டது என்று கூறுவது அவ்வளவு பொருத்தமான வாதமாகாது. இப்படி மாறக்கூடும் என்கின்ற எச்சரிக்கையை நான் 16—3—1974-ம் நாள் அன்று சட்டமன்ற மேலவையில் உரையாற்றியபோதே தமிழ் நாட்டுக்கு ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

16—3—1974-ல் நான் மேலவையில் பேசும்போது குறிப் பிட்டது, தமிழ்நாட்டிலுள்ள சிறுதானியங்களை மற்ற மாநிலங் களுக்கு எடுத்துச் செல்ல எந்தத் தடையும் கிடையாது என்கின்ற மத்திய அரசினுடைய ஆணையின் காரணமாக ஏற்பட இருக்கின்ற நெருக்கடியை நான் உணர்த்தினேன். நான் பேசிய வாசகங்களைக் கூட இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்வது என் கடமை என்று நான் கருதுகிறேன். "நம்முடைய கோரிக்கையை ஏற்



கொள்ளாமல் மாநிலத்திற்கு மாநிலம் சிறுதானியங்களின் போக்கு வரத்தை திறந்துவிட்டது விட்டதுதான், இதை மாற்றுவதற் கில்லை என்று மத்திய சர்க்கார் சொல்லிவிடுமேயானால், நாம் புதியதொரு உணவு நெருக்கடியை நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் எதிர்பார்க்கும் நிலைமை வரும் என்பதையும் இப்போதே மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று அன்றே சொன்னேன். சொன்னதோடு நின்றுவிடவில்லை. மத்திய அரசோடு வாதங்களை நடத்தினோம். மத்திய அரசிலுள்ள பொறுப்புள்ள அமைச்சர்களுக்கு அதைப்பற்றி எழுதினோம். தந்திகள் மூலம் தெரிவித்தோம். நேரடியாகச் சென்று பேசினோம். லெவியாவது நாங்கள் பெற்றுக்கொள்வதற்கு எங்களுக்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்டோம். இவ்வளவு முறையீடும் மறுக்கப்பட்ட பிறகு சிறுதானியங்கள் எல்லா மாநிலங்களுக்கும் கொண்டு செல்லலாம் என்கின்ற உத்தரவு நிலைப்படுத்தப்பட்டது. அது திரும்பப் பெறமாட்டாது என்று மத்திய அரசால் நமக்குத் தெரிவிக்கப்பட்டு விட்டது.

நம்முடைய மாநிலத்தினுடைய அரிசி உற்பத்தி, அதே நேரத்தில் சிறு தானியங்களினுடைய உற்பத்தி இரண்டையும் கணக்கிட்டால் 1973-ம் ஆண்டு நம் மாநிலத்தில் அரிசி உற்பத்தி 55 லட்சம் டன்னாகவும் சிறு தானியங்களினுடைய உற்பத்தி 14 லட்சம் டன் ஆகவும் இருந்தது.

1974-ம் ஆண்டு அரிசி உற்பத்தி 53 லட்சம் டன்னாகவும் சிறு தானியங்களினுடைய உற்பத்தி 13 லட்சம் டன்னாகவும் மதிப்பிடப் பட்டிருக்கிறது.

1974-ம் ஆண்டு மக்கள்தொகையைக் கணக்கிட்டதில் நம் தமிழ் மாநிலத்தினுடைய மக்கள் தொகை 4½ கோடியாகும். ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 400 கிராம் அரிசி தேவை என்று கணக்கு வைத்துக்கொண்டால் ஆண்டு ஒன்றுக்கு 146 கிலோகிராம் அரிசி ஒரு நபருக்கு தேவைப்படுகிறது. இதன்படி நம் மக்கள் தொகைக்கு, மொத்தத் தொகைக்கு, அதற்கான தேவை ஆண்டு ஒன்றுக்கு 65.7 லட்சம் டன். நம்முடைய அரிசி உற்பத்தி 53 லட்சம் டன்னையும் சிறுதானிய உற்பத்தி 13 லட்சம் டன்னையும்

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஆகஸ்ட் 17

சேர்த்தால் கிட்டத்தட்ட 66 லட்சம் டன் நமக்குக் கிடைத்து மாநிலம் தன்னிறைவு பெற்ற மாநிலமாக இப்போதும் திகழ்ந் திருக்க முடியும்.

ஆனால், மத்திய அரசு 6—3—1974 அன்று பிறப்பித்த மாநிலக் கட்டுப்பாடுகள் பற்றிய தடைகள் நீக்கப்படுகின்றன, கட்டுப்பாடு கிடையாது என்கின்ற அந்த உத்தரவிற்குப் பிறகு ஏற்பட்ட சூழ் நிலையை நான் இங்கே சில எடுத்துக்காட்டுகளின் மூலம் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கட்டுப்பாட்டை எடுப்பதற்கு முன்பு 1974 சனவரியில் கோவை மாவட்டத்தில் கம்பின் விலை ஒரு க்வின்டால் 89 ரூபாய். அதேநேரத்தில் பம்பாயில் ஒரு க்வின்டால் விலை ரூ. 150-ல் இருந்து ரூ. 155. கோவையில் ரூ. 89 ஆக இருக்கும் போது பம்பாயில் ஒரு க்வின்டால் கம்பின் விலை ரூ. 150-ல் இருந்து ரூ. 155 வரை. கட்டுப்பாடு எடுக்கப்பட்ட மார்ச் மாதத்தில் கோவை மாவட்டத்தில் கம்பின் விலை ரூ. 129. ரூ. 89 ஆக இருந்த கம்பின் விலை ரூ. 129 ஆக உயருகிறது. அதேநேரத்தில் பம்பாயில் ரூ. 155 ஆக இருந்த விலை ரூ. 135 முதல் ரூ. 145 என்கின்ற அளவிற்கு குறைகிறது. ஏப்ரல் மாதத்தில் கோவையில் கம்பு ஒரு க்வின்டாலுக்கு விலை ரூ. 136 ஆக உயருகிறது. அந்த நேரத்தில் பம்பாயில் 145 ஆக இருந்த கம்பு விலை 135 ஆக குறைகிறது. மே மாதத்தில் தமிழ்நாட்டிலும், பம்பாயிலும் ஒரே சீரான விலை, அதாவது ரூ. 145 ஆக ஆகிறது. ஆக, 89 ரூபாயாக இருந்த கம்பு விலை பம்பாயோடு சேர்ந்து 145 ஆக சிறு தானியங் களின் விலை இங்கே ஏறுகிறது. இப்படி கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற சிறு தானியங்களின் விலை ஏறுகிற நேரத்தில் அரிசி விலை—அதை உற்பத்தி செய்யும் விவசாயிகள்—அந்த விலை— இயல்பாக ஏறவேண்டுமென்று எண்ணுவதில் தவறு இல்லை என்பதும் நம் வாதத்தில் புறக்கணித்து விடக்கூடாது. இப்படி கம்பு, சோளம், இந்த விலைகள் ஏறின என்பதற்கான ஆதாரத்தை நான் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து இருக்கின்ற ஆளும் காங்கிரஸ் கட்சிகள் பத்திரிகையான 'சுதேசமித்திரன்' பத்திரிகைச் செய்தியிலிருந்து எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"21—5—1974 மித்திரன் பத்திரிகை. அப்போதெல்லாம் தடைநீக்கப்பட்டு விட்டது, சிறு தானியங்களுக்கு. 'விலை [illegible] மக்கள் கொதிப்பு கடையில் புகுந்து தானியம்



1974 ஆகஸ்ட் 17] [டாக்டர் மு. கருணாநிதி]

சூறை. திருச்செங்கோடு மே 20—அரிசி, கேழ்வரகு, சோளம்
போன்ற தானியங்களின் விலை இங்கு பயங்கரமாக ஏறிவிட்டதால்
ஏழைகள் விலை கொடுத்து வாங்க முடியாமல் அவதிப்படுகிறார்கள்.
இம்மாதம் 15-ந் தேதி சந்தையிலும், 17-ம் தேதி கடைகளிலும்
புகுந்து கிராம மக்கள் உணவு தானியங்களைச் சூறையாடினார்கள்.
அரிசி, ராகி, சோளம் போன்ற உணவு தானியங்களின் விலை
என்றும் காணாத அளவுக்கு உயர்ந்து விட்டது. இம்மாதம் 15-ந்
தேதி மாலையில் இடைப்பாடி வாராந்தர சந்தையில் தொழிலாளர்
களும், கிராம மக்களும் சேர்ந்த ஒரு பெரும் கூட்டம் சந்தையி
லிருந்த அரிசி, மற்றும் உணவு தானியங்களை சூறையாடி எடுத்துக்
கொண்டு சென்று விட்டார்கள். இதைத் தொடர்ந்து இந்தத்
தாலுக்காவில் வியாபாரிகள் இடையே ஒரு பீதி ஏற்பட்டுள்ளது.
17-ந் தேதி பள்ளிப் பாளையத்தில் சந்தை கூடியது. ஆனால்,
இடைப்பாடி சம்பவங்களினால் பெரும்பாலான வியாபாரிகள்
சந்தைக்கு அரிசி, கம்பு, சோளம் போன்ற தானியங்களைக் கொண்டு
வரவில்லை. தானியங்கள் வந்து கொண்டிருந்த வண்டியையும்
வழியில் திருப்பி வீட்டிற்கே சிலர் அனுப்பி விட்டார்கள்.
சந்தையில் அரிசி, கம்பு போன்ற உணவு தானியங்கள்
இல்லாததனால் ஏமாற்றம் அடைந்து கூலியாட்களும், கிராம
மக்களும் அடுத்துள்ள கடைகளில் புகுந்து உணவு தானியங்களை
சூறையாடிவிட்டார்கள்." இது சுதேசமித்திரனில் வந்த செய்தி.

எப்படித் தட்டுப்பாடு ஏற்பட்டது? என்னென்ன காரணங்களால்
ஏற்பட்டது? இது போன்ற சூறை, கொள்ளை, திடீரென்று கடை
களில் நுழைந்து பொருள்களைக் கொள்ளையடித்தல், பறிமுதல்
செய்தல், வினியோகம் செய்தல் ஆகிய காரியங்களால் போக்கு
வரத்து தடைப்பட்டு உணவு தானியங்களை ஒரு இடத்திலிருந்து
ஒரு இடத்திற்குக்கொண்டு செல்ல வியாபாரிகளும், விவசாயி
களும் பயந்த காரணத்தாலே இந்த நெருக்கடி நிலைமை செயற்கை
யாக உருவாக்கப்பட்டுவிட்டது என்று நான் ஏற்கனவே எடுத்துச்
சொன்ன அந்த வாதத்தை இப்போதும் வலியுறுத்தவே
விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர் எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள்
இல்லாதவன் திருடுவது குற்றமா என்று ஒரு கேள்வியைக் கேட்டு
விட்டு, பராசக்தி படத்தில் அன்று வசனகர்த்தாவாக இருந்திருக்கி
றீர்கள், குணசேகரன் இரண்டு பழங்கள் திருடியதற்காக,

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஆகஸ்ட் 17

இரண்டு பழம் தானே திருடினேன், இதற்காக இப்படி அடிக்க லாமா, உதைக்கலாமா என்று அவனை வசனம் பேச வைத்த அந்த முதலமைச்சர் இப்போது கடைகளிலும், மற்ற விடுதிகளிலும், வழியிலும், லாரிகளிலும் சூறையாடுபவர்களைப் பிடித்து, அவர்களை தடுக்கலாமா, அடிக்கலாமா, உதைக்கலாமா, கைது செய்யலாமா, தண்டிக்கலாமா என்று கேட்டார்கள். பராசக்தி படம் அவர் பார்த்து 10-15 ஆண்டுகாலம் ஆகியிருக்கும் என்று நினைக்கிறேன். எழுதியவன் என்ற காரணத்தால் எனக்கு ஒரு காட்சி நினைவில் இருக்கிறது. அதிலே வருகிற குணசேகரன் பராசக்தி படத்தின் கதாநாயகன். பசிக்கொடுமையால் பழங்களைத் திருடுகிறான். அடி படுகிறான். அவன் இப்படிப் பல காரியங்களைச் செய்கிறான். ஆனால் அப்படிச் செய்கிற காரியங்களெல்லாம் தவறு என்று கண்டிப்ப தற்கு அந்தப் படத்தில் ஒரு புதிய படைப்பு, விமலா என்ற பெண் பாத்திரம் படைக்கப்பட்டது.

பராசக்தி நாடகமாக இருந்தது. நண்பர் பாவலர் பாலசுந்தரம் எழுதினார்கள். அதைத்தான் திரைப்படமாக நான் எழுதினேன். அப்போது இல்லாத பாத்திரம், விமலா என்ற பெண் பாத்திரம், திரைப்படத்தில் சேர்க்கப்பட்டு, விமலா என்ற பெண் பாத்திரம் சொல்லுவாள், 'என்னதான் சமுதாயத்தில் கஷ்டம் இருந்தாலும் திருடக்கூடாது, இன்னின்ன காரியங்களைச் செய்யக்கூடாது' என்று சொல்வாள். கதாபாத்திரங்கள் பேசும் வசனங்கள் அத்தனையும் கதாசிரியர் கொள்கை அல்ல. பல பேர் சொன்னார்கள். மந்திரி குமாரி படத்தில் கொலைபுரிதல், கொள்ளையடித்தல் போன்ற பாத்திரப்படைப்பு இருந்தது. அதை வைத்துக் கொண்டு, கருணாநிதி, கொள்ளையடிப்பவன், கொலை செய்பவன் என்று சொன்னபோது, அதை எதிர்த்து எட்மண்ட் போன்ற வர்கள் இப்படிப் பதில் சொன்னது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அப்படிக் கொள்ளை அடித்தவன், கொலை செய்தவனுடைய இறுதி முடிவு என்ன? அது தான் கதையின் சிறப்பு அம்சம். ஆசிரியரின் கருத்து. அதே போல், பராசக்தி படத்தில் குணசேகரன் பசியால் பழத்தை திருடியது தவறு இல்லை என்று சொன்னாலும், தவறு என்று சொல்லும் பெண் பாத்திரம் வந்ததே அது தான் ஆசிரியர் கருத்து. அந்தக் கருத்து தான் இன்றைய முதலமைச்சரின் கருத்து என்பதை எட்மண்ட் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். படம் பார்த்து நாளாகி இருக்கும். புதிய காப்பி



1974 ஆகஸ்ட் 17] [டாக்டர் மு. கருணாநிதி]

இருப்பதாகக் கேள்வி. தியேட்டர்கள் திறந்த பிறகு அந்த சினிமாவைப் பார்த்து அந்தக் கருத்தை திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

பொதுவாகவே, நம்முடைய உணவு அமைச்சர் எடுத்துக் காட்டியதுபோல், இந்நிலையில் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்து ஒரு நல்ல முடிவுக்குக் கொண்டு வந்து இருக்கலாம். ஆனால் எதிர்க் கட்சிக்காரர்கள் கேட்பார்கள், ஒரு ஆளும் கட்சிக்கு விரோதமாக இப்படிப்பட்ட பிரச்சனைகள் வருவதை எதிர்க்கட்சிகள் பயன்படுத்திக்கொள்வது தானே முறை என்று. நியாயமான கேள்வி கேட்பார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு காலத் தில் எதிர்க்கட்சியாக இருந்தது. இந்த உணவுப் பிரச்சனையில் அப்போது இருந்த ஆளும் கட்சி சரியாக நடத்தாத காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்துப் போராடி இருக்கிறது. ஆனால் அந்தப் போராட்டம் திட்டமிட்டு யார், யார் எந்தெந்த இடத்தில் யார் யாருடைய தலைமையில் மறியல் செய்வது. கலெக்டர் அலுவலகத்திற்கு முன்னால் அல்லது வேறு ஒரு அலுவலகத்திற்கு முன்னால் மறியல் செய்வது, இத்தனை மணிக்குச் சென்று மறியல் செய்வது, கைது செய்யப்பட்டால் எதிர்க்காமல் சிறைச்சாலை செல்வது என்றும் ஒவ்வொரு நாளைக்கும் 50 பேர் என்றால் அந்த 50 பேருக்கு மேல் செல்லக் கூடாது என்று இவ்வளவு வரையறை, இவ்வளவு கட்டுதிட்டங்கள் பேரறிஞர் அண்ணா அவர்களால் வகுக்கப்பட்டு திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது அரிசிப் பிரச்சினையில் போராட்டம் நடத்தி இருக்கிறது. அப்படி நடத்தப் படுகிற அறப்போராட்டங்கள் மூலம் மெல்ல மெல்ல எதிர்க் கட்சிகள் வலிவு ஏற்று, மக்கள் ஜனநாயகத்தின் அடிப்படையில் தீர்ப்பளிக்கும் வரையில், அந்த எதிர்க்கட்சியை ஆளும் கட்சியாகக் கொண்டு வந்து வைக்கும் வலிமையை எதிர்க்கட்சிகள் பெறுவது தான் சாலச்சிறந்த, சிறப்பான, வரவேற்கத்தக்க, வன்முறை அற்ற எதிர்க்கட்சிகளுடைய போராட்ட முறைகளாக இருந்திட வேண்டும். அதைவிடுத்து இதையே ஒரு பெரிய பிரச்சனையாக்கி, அதை மேலும் சிக்கலாக்கி வன்முறையைத் தூண்டவேண்டுமென்ற அளவுக்குப் பத்திரிகையில் தலையங்கம் போட்டு, அதை இந்த அளவுக்குக் கொண்டுவந்து விட்டது தமிழகத்திலே இருக்கிற சில எதிர்கட்சிகளின் பணியாக ஆகிவிட்டது என்பதை நான் மிகுந்த மனவேதனையோடு சொல்லாமல் இருக்க முடியாது.

பத்திரிக்கைத் தலைப்பைப் பார்த்தால், ஆளும் காங்கிரஸ் பத்திரிக்கை மித்திரன்—"பல இடங்களில் அரிசிக் கடைகள் சூறை"—சொன்னார்கள். சூறையிடவில்லை, எடுத்துத்தான் பங்கிட்டுக்கொடுத்தோம் என்று இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள். ஆளும் காங்கிரஸ் பத்திரிக்கையில் வந்திருக்கும் செய்தியே "பல இடங்களிலும் அரிசிக் கடைகள் சூறை, கிளர்ச்சி முற்றுகிறது, நகரில் பலர் கைது" என்கிற அளவுக்குத்தான் அந்தப் பத்திரிக்கையில் செய்தி வந்தது.

அதைப்போலவே அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் அதிகாரபூர்வமான பத்திரிக்கையில் இதைப்போன்ற செய்தி வந்தது. திருவொற்றியூரில் "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, உழைக்கும் மக்கள் மாமன்றம் ஆகிய கட்சிகள் இணைந்து வழி காட்டுகின்றன. கையாலாகாத கருணாநிதியை எதிர்த்து மக்களே அரிசி விலையைக் குறைத்தார்கள். தமிழகம் எங்கும் இயக்கம் சூடு பிடிக்கிறது" என்று செய்தி வந்தது. இப்படிப்பட்ட பிரச்சனைகளில் அரசு தவறான சில முடிவுகளை எடுத்துவிட்டது, குறைபாடான முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது என்றால், அவைகளை மக்கள் மன்றத்தில் எடுத்து சுட்டிக்காட்டும் முழுப் பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கு உண்டு. முழு உரிமை எதிர்க்கட்சிகளுக்கு உண்டு. அந்த ஜனநாயகத் தத்துவத்தின் குறுக்கே நான் நிற்க விரும்பவில்லை. அதை எதிர்த்து கிளர்ச்சிகள் நடத்துகிற அளவுக்கு எதிர்க்கட்சிகளுக்கு உரிமை உண்டு. ஆகவே, நான் அவைகளில் எந்தவிதமான குறைபாடும் சொல்லவிரும்பவில்லை.

(பிற்பகல் 1-30)

ஆனால் இதுவரையிலே சமுதாயத்தில் கடைகளில் புகுந்து கொள்ளை அடித்தல், லாரிகளை வழி மறித்தல் என்ற இந்தக் காரியங்கள் வேறு மாநிலங்களில் நடைபெற்றபொழுது எந்த அளவுக்கு அந்த அரசுகள் நடந்துகொண்டிருக்கின்றன? இங்கே உணவுப் பிரச்சினை தமிழகத்தில் இரண்டொரு நாள் மிக முக்கியமான உச்ச கட்டத்தை அடைந்த நேரத்தில் தான் பங்களூரில் சிக்மகளூர் என்ற இடத்தில் ஒரு உணவுக் கடையிலே புகுந்து சூறையாட எண்ணிய பொது மக்கள் மீது போலீசார்



துப்பாக்கிப் பிரயோகம் செய்து, இந்திரா காங்கிரஸ், ஆளும் காங்கிரஸ் ஆளுகின்ற மைசூரில் இரண்டு பேர்கள் கொல்லப்பட்டார்கள் என்கின்ற செய்தி வந்திருக்கிறது.

ஆளும் காங்கிரஸ் கொடுத்த தீர்மானத்தை வழி மொழிந்து பேசிய கம்யூனிஸ்டு கட்சி ஆண்டுகொண்டிருக்கிற கேரளத்தில் 'உணவுக் கிடங்குகளில், எதிர்க்கட்சியினர் முற்றுகை, போலீஸ் தடியடி, 3 எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.-க்கள் உள்பட 18 பேர்கள் காயம் அடைந்தார்கள், ஒருவர் நிலை கவலைக்கிடம்' என்கின்ற யு.என்.ஐ. செய்தியாக—பாலக்காட்டில் நடைபெற்றது —ஜூலை 10-ம் தேதி அன்று வெளி வந்திருக்கிறது. ஆகவே, சமுதாயத்தில் கொள்ளை அடித்தல் போன்ற காரியங்களைச் செய்ய மக்கள் என்னதான் நியாய வாதங்கள் பேசினாலும், சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக்கொள்ள அவர்களைத் தூண்டிவிடுவது அல்லது மக்களை மிகச் சுலபமாக ஒரு போராட்டத்திற்கு அவர்களுக்கு ஏதாவது வசதி வாய்ப்பு கிடைக்கிறது என்ற அளவுக்குத் தூண்டிவிடுவது சுலபம்.

திடீரென்று சினிமா தியேட்டர் வாசலில் நின்றுகொண்டு 'எல்லோரும் வாருங்கள், இன்றைக்கு இனாமாக சினிமா பார்க்கலாம்' என்றால் தடதடவென்று ஒரு கூட்டம், மக்கள் ஓடித்தான் வருவார்கள். ஒரு ஜவுளிக் கடையில் நின்றுகொண்டு 'எல்லோரும் வாருங்கள், துணிமணியை இனாமாக எடுத்துச் செல்லுங்கள்' என்றால், அதற்குக்கூட ஆயிரம் பேர்கள் வரத்தான் வருவார்கள். ஆனால் அந்த முறைகளை நமது போராட்ட முறைகளாக ஆக்கக்கூடாது. அது பீகாரில் நடைபெற்றாலும் சரி, குஜராத்தில் நடைபெற்றாலும் சரி, கேரளாவில் நடைபெற்றாலும் சரி, மைசூரில் நடைபெற்றாலும் சரி, அந்தப் போராட்ட முறைகளை இன்றைக்கு நாங்கள் ஆளும் கட்சியாக இருக்கிறோம் என்பதற்காக அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த அந்தக் காலத்திலேயே அப்படிப்பட்ட போராட்ட முறைகளை நாங்கள் விரும்பியதும் இல்லை, அந்தப் போராட்ட முறைகளை யார் மீதும் திணித்ததுமில்லை.

சுற்றறிக்கை பற்றியெல்லாம் கூடச் சொன்னார்கள். கம்யூனிஸ்டு கட்சி கூட, அதன் மாநில நிர்வாகக் குழு ஒரு சுற்றறிக்கை அனுப்பியது. அந்தச் சுற்றறிக்கையிலே என்ன எழுதப்பட்டது? "அன்பார்ந்த தோழர்களே, நியாய அரிசி விலை எதிர்ப்புப் போராட்டம் தமிழகம் முழுமையும் நடைபெற்று விட்டது." வாசகங்கள் எப்படி அமைந்து இருக்க வேண்டும். தமிழகத்தில் உணவுப் பிரச்னை மிக மோசமாக ஆகிவிட்டது என்று வாசகம் அமைவதற்குப் பதிலாக மிக நாசூக்கோடு வாசகம் அமைந்து இருக்கிறது. "நியாய அரிசி விலை எதிர்ப்புப் போராட்டம் தமிழகம் முழுமையும் நடைபெற்று விட்டது. தஞ்சை மாவட்டத்தில் நமது கட்சி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது." வரவேற்கிறேன். மறியல், சிறைபிடித்தல், தண்டனை வழங்குதல், ஏற்றுக்கொள்ளுதல். அவைகளை வரவேற்கிறேன். அடுத்து "வேறு பல மாவட்டங்களில் நமது கட்சி இந்தப் போராட்டத்தில் பல்வேறு வடிவங்களில் ஈடுபட்டுள்ளது." பல்வேறு வடிவங்கள் தான் ஆபத்தான வடிவங்கள். அந்த வடிவங்களினால் வந்த விளைவுகள் தான். "ஆங்காங்கே உள்ள மக்களின் உணர்விற்கேற்ப இந்தப் போராட்டத்தை வெற்றிகாமாக நடத்தித் தலைமை தாங்க நம் கட்சி அமைப்புகள் முழு பொறுப்பு ஏற்க வேண்டும்"—கம்யூனிஸ்ட் கட்சி அமைப்புகள் முழு பொறுப்பு எடுக்கவேண்டும். எவ்வளவு கூட்டணியாக இருக்கிறார்கள் பாருங்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தார் கட்சி அமைப்புகள் தலைமை தாங்கவேண்டும் என்று அதிலேயே பெயரைத் தட்டிக்கொண்டு போக கம்யூனிஸ்ட் கட்சி திட்டமிட்டு இருக்கிறது.

"1974 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 10 ஆம் தேதி நடத்துவதற்கு திட்டமிட்டு இருந்த இனவெறி-மொழிவெறி எதிர்ப்புக் கூட்டங்களை நியாய அரிசி விலை எதிர்ப்புக் கூட்டங்களாக இயக்கத்திற்கு உந்து சக்தியாக—இது தான் முக்கியமான வார்த்தை—இயக்கத்திற்கு உந்து சக்தியாக விளங்கும் வகையில் நடத்துமாறு எல்லா மாவட்ட குழுக்களையும் கேட்டுக் கொள்கிறேன்."

தமிழ்நாட்டில் இந்தப் பிரச்சினையை ஒரு நிலைக்குக் கொண்டுவருவதற்கு இந்தப் போராட்டம் பயன்படவேண்டும் என்று சொல்லியிருந்தால், மகிழ்ச்சி அடைந்திருப்பேன்;





வரவேற்றிருப்பேன். ஆனால் இயக்கத்திற்கு ஒரு உந்து சக்தியாக, அந்த இயக்கம் வளர அந்தக் கட்சிக்கு ஒரு உந்து சக்தியாக இந்தப் போராட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் இந்த சுற்றறிக்கையை அனுப்புகிறார்கள்.

இதன் தொடர்பாக பல மாவட்டங்களில், மாநிலம் முழுமையும் பல கிளர்ச்சிகள் நடைபெற்றன. அந்தக் கிளர்ச்சிகளையெல்லாம் போலீஸார் மிகுந்த பொறுப்பு உணர்ச்சியோடு, கடமை உணர்ச்சியோடு இன்றைக்கு அடக்கியிருக்கிறார்கள். மேலும் இப்படிப்பட்ட நிலைமைகள் வராமல்—நான் அரசியல் கட்சிகள் மாத்திரம் இதைச் செய்கின்றன என்று சொல்லவில்லை. சில பேர் இதைச் செய்ய துணிந்தார்கள். இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டது போல வர்த்தக சூதாடிகளானாலும் சரி, பதுக்கல் பேர்வழிகளானாலும் சரி அல்லது விவசாயிகள் சில பேர் அதைப் பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்கவேண்டும் என்று கருதுகிறவர்களானாலும் சரி, யார் மீதும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்ற அந்த மும்முரமான, நம்முடைய தீவிரமான அந்தப் பணிகளின் காரணமாக தடுக்கப்பட்டிருக்கிறது.

நான் இங்கே ஒரே ஒரு பட்டியலை மாத்திரம் இந்த மன்றத்தின் முன்னால் வைக்கவேண்டும் என்று கருதுகிறேன். அந்தப் பட்டியலை உணவு அமைச்சர் அவர்கள் தயாரித்துக் கொடுத்திருக்கிறார். மேஜையின் மீது வைக்கப்பட்டிருக்கிற அந்தப் பட்டியலில் மொத்தம் எத்தனை பேர்கள் பதுக்கல் வியாபாரிகள் பிடிக்கப்பட்டார்கள் என்கின்ற கணக்கும், எத்தனை வழக்குகள் என்ற கணக்கும் தரப்பட்டிருக்கிறது.

ஜனவரியில் 42, பிப்ரவரியில் 38, மார்ச்சில் 66, எப்ரலில் 82, மேயில் 132, ஜூனில் 150, ஜூலையில் 155 ஆக வழக்குகளின் எண்ணிக்கை 665 என்று தரப்பட்டிருக்கிறது.

நாம் 2—8—1974-ல் இந்த நிலைமை கொஞ்சம் உச்ச கட்டத்திற்கு வந்த நேரத்தில், 2—8—1974-ல் விவசாயிகளுடைய முனையை எப்பொழுதும் சர்வ ஜாக்கிரதையாக நாம் அணுகிட

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஆகஸ்ட் 17

வேண்டும், நாம் அதிகாரிகளைக் கொண்டு பதுக்கலைக் கண்டு
பிடியுங்கள் என்று சொல்கிற நேரத்தில் சில அதிகாரிகள்
விவசாயிகளிடம் கொஞ்சம் அதிக்கிரமமாக நடந்துகொள்கிற
காரணத்தினால் விவசாயிகள் மிகுந்த மன வேதனை அடைகிறார்கள்
என்பதினாலும், அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்த
காலத்தில் கூட அப்பொழுது சேலம் இருந்த காரணத்தினால்,
உணவுக் கட்டுப்பாடு இருந்த காரணத்தினால் விவசாயிகள்
பதுக்கி வைப்பதை எடுப்பதற்குச் சென்ற போலீஸார் பூஜை
அறையில் பூட்ஸ் காலோடு நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டும்,
கோவை மாவட்டத்தில் சில கவுண்டர்மார்கள் வாழ்கின்ற
பகுதிகளில் சில கவுண்டர் பெருமக்கள் மரியாதைக் குறைவாக
நடத்தப்பட்டார்கள் என்ற குற்றச் சாட்டும் இந்த மன்றத்தில்
வந்ததை யாரும் மறந்துவிடுவதற்கில்லை.

ஆகவேதான் விவசாயிகளை
எச்சரிக்கையாக இருக்க வேண்டும் அணுகுவதில் மிகுந்த
பொறுத்துப் பார்த்து கடைசியில் என்று கொஞ்ச காலம்
அறிக்கையை நான் வெளியிட்டேன். 2—8—74 அன்று ஒரு
காலத்திற்குள்ளாக தங்களிடம் விவசாயிகள் ஒரு வார
டிருக்கிற நெல்லையோ, தேக்கி வைக்கப்பட்
இல்லாவிட்டால் அவர்களெல்லாம் அரிசியையோ தந்துவிட வேண்டும்,
சொன்னேன். பிடிக்கப்படுவார்கள் என்று
3—8—1974, 6—8—1974, அந்த ஒரு வாரத்திற்குள்ளாக கிட்டத்தட்ட
பிடிக்கப்பட்டிருக்கிற நெல் மாத்திரம் 13—8—1974 என்கின்ற வகையிலே
மூட்டைகள் அரிசியும், சுமார் 24,431 மூட்டைகள்; 4,358
தானியங்கள் பிடிக்கப்பட்டன. 2,20,000 பெறுமானமுள்ள உணவு
இருக்கிறதே, எவ்வளவு பேர் கேட்கலாம். இது குறைந்ததாக
பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று.

இவர்களைப் பிடித்த காரணத்தினால் மற்றவர்கள் தங்களையும்
பிடிப்பார்கள் அல்லது அரசாங்க சார்பில் அறிவிக்கப்பட்டிருக்கிற
பாதுகாப்புச் சட்டம் தங்கள் மீது பாயும் என்ற அச்சத்தின்
காரணமாக பதுக்கி வைத்திருந்தவர்கள் சில பேர், மக்கள் சமூக
விரோதச் செயல்களில் ஈடுபடக்கூடாது என்று மனம் தெளிந்து,
திருந்தியவர்களெல்லாம் உடனே அரிசியையும் நெல்லையும்
சந்தைக்குக் கொண்டுவந்துவிட்டார்கள். அதன் மூலமாக
இன்றைக்கு சுலபமாக அரிசி கிடைக்கிற சூழ்நிலை உருவாகியிருக்
கிறது.



1974 ஆகஸ்ட் 17] [டாக்டர் மு. கருணாநிதி]

நீங்கள் கொஞ்சம் எண்ணிப் பார்த்தால், அரிசிப் பஞ்சத்திற்காக
போராட்டம் என்று ஆரம்பிக்கப்பட்டு, பிறகு கூடிப் பேசி அரிசிப்
பஞ்சம் என்றால் அவ்வளவாக ஏடுபடாது என்று அரிசி அநியாய
விலையைக் கண்டித்துப் போராட்டம் என்கின்ற அளவுக்கு
மாற்றிக்கொண்டதிலிருந்து அரிசி இருக்கிறது. விலை அதிகமாக
இருக்கிறது என்பதை எதிர்க்கட்சியினர்கள் ஒத்துக்கொண்டிருக்
கிறார்கள் என்று தான் பொருள். நானும் ஒத்துக்கொள்கிறேன்.
விலை அதிகமாக இருக்கிறது.

இங்கே சில உறுப்பினர்கள் கேட்டார்கள். 'ஏன் நீங்கள்
குறைந்த விலைக்கு அரிசியை வாங்கி அதிக விலைக்கு விற்கிறீர்கள்?'
என்று கூட கேட்டார்கள். அது வியாபார நோக்கம் அல்லவா?
என்று கூட நண்பர் செழியன் அவர்கள் நேற்றையதினம் கூட
கேட்டார்கள். மாரிமுத்து அவர்கள், நம்முடைய காங்கிரஸ்
கட்சியினுடைய தலைவர் அவர்கள், நேற்றையதினமும், இன்றைய
தினமும் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் ஒரே ஒரு
விளக்கத்தை மீண்டும் சொல்ல விரும்புகிறேன்.

1974 ஆம் வருடம் சனவரி திங்கள் 1 ஆம் நாள் அரிசி
கையிருப்பு 28,654 டன் நம்மிடத்திலே இருந்தது. சம்பா
அறுவடை காலத்தில் அரிசி குவிண்டால் ரூ. 140-லிருந்து
148 வரை, அதாவது மூட்டைக்கு ரூ. 70 கொடுத்து,
1,80,440 டன்கள் நாம் இந்திய உணவு வர்த்தகக் கழகம்
மூலமாகவும், தமிழ்நாடு உணவு வழங்கு கழகம் மூலமாகவும்
கொள்முதல் செய்திருக்கிறோம். ஆக, 2,09,000 டன் நம்மிடம்
கைவசம் இருந்தது.

நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற சென்னை, கோவை
நகரங்களிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லையோரப்
பகுதிகளிலும் பொது விநியோகத்தின்கீழ் ஜூலை மாதம் இறுதி
வரையில் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற 'கமிட்மென்ட்' 90,746
டன்கள். ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை கன்னியாகுமரி,
கோவை, சென்னை ஆகிய பகுதிகளின் தேவை 70,000 டன்கள்
வேறு மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டது 7,019 டன்கள். ஆக
மொத்தம் 1,67,765 டன்கள் இந்தக் கணக்குப் போக மீதி
இருந்தது 41,325 டன்கள்.

இதுகூட நம்மிடம் இருக்காது என்று கருதித்தான் ஆங்காங்கு சூறை, கொள்ளை, மறியல் என்று ஆரம்பித்தார்கள். இந்தப் பெரிய சிக்கலில் தமிழகம் சிக்கிக்கொள்ளும் என்று எண்ணினார்கள். ஆனால் அந்த இருப்பு 41,000 டன் அளவுக்கு இருந்தது.

பிறகு சந்தை மார்க்கெட்டில் வர்த்தகர்களிடம் குவிண்டால் ஒன்றுக்கு நடுத்தரம் ரூ. 168 வீதம், சன்ன ரகம் 177 வீதம் வாங்கியவகையில் 7,917 டன் வாங்கியிருக்கிறோம்.

இந்திய உணவு வர்த்தகக் கழகத்திலிருந்து குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 145 வீதம், அதாவது மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 72 வீதம் 17,000 டன் வாங்கியிருக்கிறோம். ஆக மொத்தம் அரிசி இருப்பு 66,000 டன் இருக்கிறது. குறுவை அறுவடை வரையில் தொடர்ந்து அரிசி நியாய விலைக் கடைகள் மூலம் வழங்க இப்போது 25,000 டன் மேலும் தேவைப்படுகிறது. இவற்றைக் கூட்டுறவுத் துறையில் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் தனிப்பட்டவர்களிடமிருந்து குவிண்டால் அரிசி 280 ரூபாய் வீதம் அதாவது மூட்டை 140 ரூபாய் வீதம் கொள்முதல் செய்ய உத்தேசித்திருக்கிறோம். ஆங்காங்கு இருந்து வருகின்ற சிறு அறுவடையில் இருந்தும் கொள்முதல் செய்ய உத்தேசித்திருக்கிறோம். இந்த விலையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால், நாம் குறிப்பிடுகின்ற விலையைப் பார்த்தால் குவிண்டால் ஒன்றுக்கு அடக்க விலை 225 ரூபாய் ஆகிறது. ஆகவே, கிலோ ஒன்றுக்கு 2.25 ரூபாய் வருகிறது.

இப்போது நியாய விலைக் கடைகள் மூலமாக நடுத்தர அரிசி கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் வீதமும், சன்ன ரகம் 2.30 வீதமும், மிகச் சன்ன ரகம் 2.50 வீதமும் என்று விற்பனை செய்கிறோம். ஆகவே, வியாபார நோக்கத்தோடு விற்கப்படவில்லை என்பதை இந்தப் புள்ளி விவரத்தின் மூலம் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் ஜனநாயக ரீதியில் அனைவரும் கலந்து அரசோடு ஒத்துழைத்து தீர்க்க வேண்டுமேயல்லாமல், இதைப் பெரிய பிரச்னையாக ஆக்கி, இந்த அரசை ஒரே வாரத்திலே ஒரே மாதத்திலே கவிழ்த்துவிட வேண்டும், அல்லது ராஜினாமா செய்ய அறிவுறுத்த வேண்டும்





என்ற அளவுக்கு இதைக்கொண்டு செல்வது நல்ல மரபாகாது. நீங்களே சொல்கிறீர்கள். இன்னும் ஓராண்டு காலம் இருக்கிறது. திடீரென்று நாங்கள் ராஜினாமா செய்வதாகவே வைத்துக்கொள்ளுங்கள். தேர்தல் வேலைகள் எல்லாம் செய்ய உங்களுக்கு நேரம் வேண்டாமா? நம்பிக்கையில்லாத் தீர்மானத் தின்மீது பேச அன்றைக்கு ஒப்புக்கொண்டதைபோல ஒப்புக் கொண்டால் எப்படி நேரம் வீணாகி விட்டதோ அதைப்போல இப்போது திடீரென்று ராஜினாமா செய்ய ஒப்புக்கொண்டால் ஓராண்டு காலத்துக்கு நீங்கள் செய்ய வேண்டிய தேர்தல் தயாரிப்புகள் எவ்வளவோ இருக்கின்றன.

ஆகவே, இப்போது தொகுதி நிர்ணயம் எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய கருத்துக்களை எல்லாம் சொல்ல வேண்டியிருக்கிறது. நாடாளுமன்றத்தில் 39 இருப்பதை 40 ஆகவும், சட்ட மன்றத்தில் 234 இருப்பதை 280 ஆகவும் ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். பாராளுமன்றத் திலும் இந்தப் பிரச்சனையைப் பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதிலிருந்து தொகுதி களெல்லாம் நிர்ணயமாகித்தான் தேர்தல் நடக்கும் என்பது தெரிகிறது. இருந்தாலும் அவசரப்பட்டு இடையிலேயே 'ஓடிவிடு, ஓடிவிடு' என்று சொன்னால் எங்கே ஓடுவது? ஆகவே அந்தக் குறை கொஞ்ச நாளைக்கு ஒத்தி வைத்துவிட்டு, இருக்கவே இருக்கிறது தேர்தல் என்று பொறுத்துக்கொண்டு, தேர்தலிலே ஜனநாயக முறையில் யாருக்கு மக்கள் தீர்ப்பு அளிக்கிறார்களோ அவர்கள் இங்கே வந்து உட்காரட்டும் என்று எல்லாக் கட்சி யினரும் கட்சி சார்பற்ற முறையிலே தோழமைக் கட்சியாக இருந்து இந்த ஒரு விஷயத்திலே பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியவர் மணலி அவர்கள் சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி யோசனை கேளுங்கள் என்று சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் அட்டியின்றி இம்மாதிரியான கருத்துக்களை எப்போதும் ஏற்றுச் செய்வதில் மறுப்புக் கிடையாது என்று கூறி, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தேவையற்றது என்று தெரிவித்துக்கொண்டு, மாரிமுத்து அவர்கள்—உணவுப் பிரச்னை—

மணி ஒன்றே முக்கால் ஆகிவிட்டது—இதை வலியுறுத்தாமல் இந்தப் பிரச்னைக்கு ஒத்துழைத்து, ஆக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் கம்யூனிஸ்டு கட்சியைப் பற்றி ஒரு சர்க்குலரை வாசித்தார்கள். அந்த சர்க்குலர் ரகசியமானதல்ல. ஏற்கெனவே பத்திரிகைகளில் எல்லாம் அது வந்திருக்கிறது. இந்தப் பிரச்னைக்கு மூல காரணம் இந்த ஆட்சியிலே இருக்கின்ற முதலமைச்சர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தனியாக ஒரு பிரசங்கம் செய்யக்கூடாது.

**திரு. சோ. அழகர்சாமி :** அரிசி விலை உயர்ந்ததற்குக் காரணம் 40 ரூபாய்க்கு வாங்கி வைத்திருக்கின்ற கொள்ளை லாபக் காரர்களுக்கு இந்த ஆட்சி உதவியாக இருந்ததுதான். நியாயவிலைக்கு வாங்கி வைத்துவிட்டு, இப்போது கொள்ளை லாபத்திற்கு விற்கின்ற கள்ள மார்க்கெட்காரர்கள் எங்கே இருந்தாலும் அவர்களை எதிர்த்துப் போராடுவோம். அங்கே எல்லாம் மறியல் செய்வோம். நியாய விலையில் மக்களுக்கு அரிசி கிடைக்கவில்லை என்றால் பதுக்கல்காரர் களிடமிருந்து பறிமுதல் செய்வோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சட்டத்தை யார் கையில் எடுத்துக்கொண்டாலும் இந்த அரசு சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது.

**திரு. சோ. அழகர்சாமி :** நியாயவிலையில் மக்களுக்கு அரிசி தாராளமாக கிடைக்கும் வரையில் நாங்கள் சும்மா இருக்க மாட்டோம்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, ஒரு சின்ன விளக்கத்தை உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். 'ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா' ஒரு குவிண்டால் நெல்லை 70 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். ஆனால் ஸ்டேட் கவர்ன் மெண்ட் அவர்களிடமிருந்து குவிண்டால் ஒன்றுக்கு 122 ரூபாய் என்ற அளவுக்கு வாங்கி, அதை 200 ரூபாய்க்கு விற்றார்கள். அதிலே 10 சதவிகிதம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கமிஷன் தர வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இதுதான்





அரசாங்கம் கொள்ளை லாபம் அடிப்பதுமாதிரி இருக்கிறது என்று நான் நேற்று சொன்னேன். இவ்வளவு லாபம் 68 ரூபாய் அதிகம் வைத்து விற்பது கொள்ளை லாபம் இல்லையா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஏதோ ஒரு பிரிவை மட்டும் எடுத்துக்கொண்டு பார்த்தால் லாபம் இருப்பதுபோல் தெரியும். மொத்தமாகப் பார்த்தால் மாநிலத்திலிருந்து குறைந்த விலைக்கு வாங்கியது, அதிக விலைக்கு வாங்கியது எல்லாம் சேர்த்துப் பார்த்தால் குவிண்டால் 225 ரூபாய் வருகிறது. அந்த விலையைத்தான் சொன்னேன்.

**திரு. ஆலடி அருணா :** மத்திய அரசு கோர்ஸ் க்ரெய்ன்ஸ் 125, சூப்பர் ஃபைன் 160 என்று நிர்ணயித்திருக்கிறது. அதே நேரத்தில் மாநில அரசு தற்போது குவிண்டாலுக்கு கோர்ஸ் 200 மீடியம் 230, ஃபைன் 250 என்று வைத்திருக்கிறது. கோர்ஸ் 125 என்று மத்திய அரசு வைத்திருக்கும்போது மாநில அரசு 200 என்று அதிகமாக நிர்ணயித்திருப்பது மிட்டா மிராசுதாரர் களுக்கு உதவி செய்யும் செயல் அல்லவா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மாரிமுத்து, நீங்கள் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்வீர்கள்? நேரம் ஆகிவிட்டது. அரை மணி நேரத்திற்குள் முடித்துக்கொள்ளுங்கள்.

*** திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, குறைந்தது ஒரு மணி நேரமாவது எனக்கு வேண்டும். அப்படியானால்தான் நான் எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல முடியும். (பல உறுப்பினர்கள் : இப்போது பசி வேளை, நாளை வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்.) எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத் தில் முடித்துக்கொள்கிறேன்.

தலைவரவர்களே, இப்போது தமிழ்நாட்டில் இருக்கிற உணவுப் பிரச்னையைப் பற்றி வெகுவாகப் பேசப்பட்டது. எங்கள் தரப்பிலே நாங்கள் கூறிய குற்றச்சாட்டு இந்த அரசு விழிப்புணர்ச் சியோடு இருந்து தமிழ்நாட்டிலே செயல்பட்டிருக்குமானால் இந்த நெருக்கடியைத் தடுத்திருக்க முடியும்; அதிலே இந்த அரசு தவறி விட்டது என்பதுதான். அந்த அளவுக்கு உணவு நிலைமை மோசமாக இருக்கிறது. திறமையாகச் செயல்பட்டிருந்தால்

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1974 ஆகஸ்ட் 17

இந்த நிலைமை வந்திருக்க முடியாது. இதைத் தடுத்து நிறுத்தி யிருக்க முடியும். ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக்குத் தெளிவான பதிலை அரசு தரப்பிலே யாரும் கூறவில்லை.

மாண்புமிகு முதலமைச்சரவர்களும் உணவு அமைச்சரவர் களும் பேசியபோது கூட இருக்கின்ற பாரத்தை எல்லாம் மத்திய அரசு தலையிலே போட்டு, அவர்கள்தான் இதற்குக் காரணம் என்று வாதிட்டார்களே தவிர, தங்கள் தரப்பிலே இருக்கின்ற தவறு என்ன என்பதை ஒத்துக்கொள்ளவில்லை. இது நீண்ட நாளாக நாம் எல்லாம் அறிந்த ஒரு உண்மை; இந்தச் சபை அறிந்த உண்மை; மக்கள் அறிந்த உண்மை. எதற்கு எடுத்தாலும் மத்திய அரசுதான். மழை இல்லையா அதற்கும் மத்திய அரசுதான் காரணம். மேகத்திடம் சொல்லி மழையைப் பெய்யச் சொல்லத் தவறிவிட்டது மத்திய அரசு என்று கூடச் சொல்லக்கூடும். மத்திய அரசின் மீது பழியைச் சொல்லக்கூடிய இந்த அரசு, மத்திய சர்க்காரைத்தான் சாடுவார்கள் என்பது நாங்கள் ஆரம்பத்திலே எதிர்பார்த்ததுதான். ஆனால் மத்திய சர்க்காருக்கு இதில் எந்த அளவு பொறுப்பு என்பதை இந்தச் சபையில் இருக்கிற நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முதலிலேயே நான் சொன்னேன். பொறுப்புணர்வோடு இந்த அரசு செயல்படவில்லை. ஒன்றை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். இந்தியா ஒரு பரந்த நாடு, ஒரு பெரிய நாடு. இந்த நாட்டிலே உணவுப் பிரச்சினை என்று எடுத்துக்கொண்டால் நாடு பூராவிலும் ஒரே நிலையிலே விளைந்து எங்கும் சரியாக உணவு நிலைமை இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஒரு மாநிலம் உபரியாக இருக்கலாம். அதே சந்தர்ப்பத்தில் இன்னொரு மாநிலத் தில் பல்வேறு கோளாறுகள் ஏற்பட்டு—புயல் காரணமாக, வறட்சி காரணமாக, வெள்ளம் காரணமாக உணவு நிலைமையில் பாதிப்பு ஏற்படலாம். ஆக ஆண்டுதோறும் ஏதாவது ஒரு பகுதி பாதிக்கப்பட்டுத்தான் வருகிறது என்பதை வெகு நீண்ட கால மாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். இந்தியா ஒரு நாடு என்கிறபோது இதர மாநிலங்களில் ஏற்படுகிற விளைவு நம்மைப் பாதிக்காது என்று எதிர்பார்க்க முடியாது.

மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் பேசும்போதே குறிப் பிட்டார்கள். குஜராத்து மாநிலத்தில் வம்புகள்—கிளர்ச்சிகள் ஏற்பட்டு துப்பாக்கிச் சூடுகள் ஏற்பட்டது பற்றிக்



1974 ஆகஸ்ட் 17] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

குறிப்பிட்டார்கள். அங்கு ஏற்பட்டது வறட்சியின் காரணம். அங்கு ஏற்பட்டது உணவுப் பற்றுக்குறை அதிகரித்துப்போய் விட்டதன் காரணம். ஆரம்பத்திலேயே அது பற்றுக்குறை மாநிலம். நம் மாநிலம் போன்று உபரி மாநிலம் அல்ல. இயற்கை நன்றாக இருந்து விளைந்தது என்றாலே கூட—அந்த மாநிலம் பற்றுக்குறை மாநிலமாதலால் அங்குள்ளவர்களுக்கு அங்கு விளைகிற தானியங்களே போதாது. பற்றுக்குறை மாநிலத்தில் வறட்சி ஏற்பட்டால் மேலும் பற்றுக்குறை அதிகரிக்கத்தான் செய்யும்.

இப்படிப் பல்வேறு இடங்களில்—இந்த ஆண்டு எடுத்துக் கொண்டு பார்த்தால்—குஜராத்தில் பற்றுக்குறை வறட்சி ஏற்பட் டிருக்கிறது. ஒரிசாவில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. மத்தியப் பிரதேசத்தில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி பல்வேறு மாநிலங்களில் வறட்சி ஏற்பட்டு ஆங்காங்கு உணவு நிலைமை மிகக் கடுமையாகியிருக்கிற நிலைமையில்—நாடு பூராவும் இருக்கிற நிலைமையை ஒட்டுமொத்தமாகக் கருத்தில்கொண்டு நம் மாநிலத்தை எப்படிப் பாதுகாத்துக்கொள்வது—அவற்றின் பிரதி பலிப்பான விளைவுகள் நம் மாநிலத்தை தாக்காதவாறு எப்படிப் பாதுகாத்துக்கொள்வது என்கிற விழிப்புணர்ச்சியோடு இருக்க வில்லை இந்த அரசு என்பதுதான் எங்கள் தரப்பில் இருந்து சாட்டப்பட்டிருக்கிற குற்றச்சாட்டு. இவ்வளவு மோசமான நிலைமைகள்—அரசு பொறுப்புணர்வோடு—தீர்க்கதரிசனத்தோடு —மனிதாபிமான உணர்ச்சியோடு செயல்படத் தவறிவிட்டார்கள் என்பதுதான் நாங்கள் சொல்கிற குற்றச்சாட்டு.

இதற்குக் காரணம் மத்திய அரசுதான்—மத்திய அரசின் கொள்கைதான் இன்பிளேஷனை ஏற்படுத்திவிட்டது என்று சிலர் சொன்னார்கள். முதலமைச்சரோ, உணவு அமைச்சரோ அதைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. உண்மையைப் புரிந்துகொண்டு தான் அதைக் குறிப்பிடவில்லை. ஆகவே இவர்கள் குறிப்பிட் டிருப்பது—கட்டுப்பாடின்றி புஞ்சை தானியங்களை வெளி மாநிலங்களுக்குக் கொண்டுபோக அனுமதித்துவிட்டார்கள். அதனால் இந்த விளைவு ஏற்பட்டது என்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது கூட தமிழகத்திற்கு வேண்டிய அரிசி இருக்கிறது. விலைதான் ஏறியிருக்கிறதே தவிர, அரிசிப் பஞ்சம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஆகையால்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஆகஸ்ட் 17

தமிழகத்திற்குத் தேவையான அரிசி இங்கே இருக்கிறது
என்று பொருள். நமது மாநிலத்திற்குத் தேவையான அரிசி
கையிருப்பில் இருக்கிறது. மார்க்கெட்டிலும் வந்துகொண்டிருக்
கிறது என்கிறார்கள். அப்படியிருந்தும் அரிசி விலை ஏன் உயர்ந்து
விட்டது? புஞ்சை தானியத்தின் விலை கட்டுப்பாட்டை நீக்கியதன்
காரணமாக விலை உயர்ந்துவிட்டதால் புஞ்சை தானியத்தை
வாங்கிச் சாப்பிட்டவர்கள் அரிசி வாங்கிச் சாப்பிட ஆரம்பித்து
விட்டார்கள். அதனால் அரிசி விலை உயர்ந்துவிட்டது என்கிறார்கள்.
நான், மாண்புமிகு உணவு அமைச்சரைத் கேட்கிறேன்.
புள்ளிவிவரத்தைக் கொடுங்கள். புஞ்சை தானியத்தின் விலை
அரிசியைவிட அதிகமாக இருந்தால் புஞ்சை தானியம் சாப்பிட்ட
வர்கள் அரிசி சாப்பிட ஆரம்பித்துவிட்டார்கள் என்கிற வாதத்தை
ஒத்துக்கொள்ள முடியும். அரிசி விலையைவிடப் புஞ்சை தானியங்
களின் விலை எந்த இடத்திலும் உயரவில்லை. இன்றைக்கும் அரிசி
விலையைவிட புஞ்சைதானியங்களின் விலை குறைவாகவே இருக்கிற
காரணத்தினால் புஞ்சை தானியங்கள் சாப்பிட்டவர்கள் அரிசி
சாப்பிட ஆரம்பித்த காரணத்தினால் அரிசி விலை ஏறிவிட்டது
என்கிற வாதத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இவர்
களுக்கு அரிசி வாங்கிச் சாப்பிடுகிற சந்தர்ப்பமே கிடையாது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** புஞ்சை
தானியங்கள் சாப்பிடுகிறவர்கள் அரிசி சாப்பிடமாட்டார்களா?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** புஞ்சை தானியங்கள் சாப்பிட்ட
வர்கள் அரிசியே சாப்பிடமாட்டார்கள் என்று நான் சொன்னது
கிடையாது. புஞ்சை தானியங்களைவிட அரிசி விலை குறைவாக
இருந்ததால் அரிசி வாங்கிச் சாப்பிட ஆரம்பித்துவிட்டார்கள்
என்று சொன்னால் ஏற்றுக்கொள்ளலாம். அரிசி விலையைவிட
புஞ்சை தானியங்களின் விலை இன்னமும் குறைவாகத்தான்
இருக்கின்றது. அரசாங்கக் கணக்கையே எடுத்துப் பாருங்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** புஞ்சை தானியங்
களைவிட அரிசி விலை குறைவு என்று நான் சொல்லவில்லை. புஞ்சை
தானியங்களுக்குக் கட்டுப்பாட்டை நீக்கிய காரணத்தினால் நல்ல
விலை கிடைத்த காரணத்தினால் அரிசியை வாங்கிச் சாப்பிட்டுக்
கொள்ளலாம் என்பதாக கையில் இருந்த புஞ்சை தானியங்களை
எல்லாம் விற்றுவிட்டார்கள். 60 ரூபாய்க்கு 150 ரூபாய் கிடைக்
கிறது என்ற காரணத்தினால்,



1974 ஆகஸ்ட் 17]

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** புஞ்சை தானியங்களின் கட்டுப்
பாட்டை நீக்கிய காரணத்தினால் அரிசி விலை உயர்ந்துவிட்டது
என்பது சரியான வாதம் அல்ல என்பது என்னுடைய கருத்து.

அடுத்து, முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது
நம் மாநிலம் தன்னிறைவு பெற்றது என்று குறிப்பிட்டார்கள்.
இதுவரை உபரி மாநிலம் என்றே குறிப்பிட்டு வந்திருக்கிறார்கள்.
இன்றைக்கு அரிசிப் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்ட காரணத்தினால்
இப்படி தன்னிறைவு பெற்றது என்று, இன்றைக்குச் சொல்
கிறார்கள். அவர்களது பழைய பட்ஜெட் பேச்சுக்களை எல்லாம்
எடுத்துப் பார்த்தால் இதுவரை உபரி மாநிலம் என்றே குறிப்
பிட்டு வந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு 83 லட்சம் டன் உணவு
தானியங்களை எதிர்பார்ப்பதாகவும் அதில் 59 லட்சம் டன்
அரிசியை எதிர்பார்ப்பதாகவும் முன்பு குறிப்பிட்டிருக்கிறார்கள்.
பின்னர் கொடுத்த அறிக்கையிலும் 56 லட்சம் டன் அரிசி
கிடைக்கும் என்று அரசாங்கக் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்
கிறது. இன்றையதினம் எல்லாவற்றையும் மாற்றி 53 லட்சம்
டன் அரிசி என்று குறிப்பிடுகிறார்கள். ஆகஸ்டுக்கு ஆகஸ்டு தான்
அரிசிக் கணக்கை எடுப்பது—59 லட்சம் டன் எதிர்பார்ப்பதாகச்
சொல்லி 56 லட்சம் டன் கிடைக்கும் என்று ஆகஸ்டு
அறிக்கையிலே சொன்னவர்கள்—இன்றையதினம் 53 லட்சம் டன்
என்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** எதிர்பார்ப்
பதாகத்தான் அதைச் சொன்னோம். இந்த ஆண்டு நவரை
தானிய விளைச்சல் இல்லை. தாளடி குறைவு—பொன்னி போன்ற
ரகம் கூட தஞ்சை மாவட்டத்தில் விளைச்சல் குறைவு.
ஆக்சுவலாக அதைக் கொடுக்கவில்லை. எதிர்பார்ப்பதாகத்தான்
சொன்னோம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** நீங்கள் எதிர்பார்த்தது 59 லட்சம்
டன். கிடைக்கும் என்று சொன்னது 56 லட்சம் டன். புள்ளி
விவரத்தை நினைத்தபோது நினைத்தபடி மாற்றிக்கொண்டு சொல்
கிறீர்களா? எனக்கு ஒன்றும் புரியவில்லை. எப்படிப் பார்த்தாலும்
நம் மாநிலம் உபரி மாநிலம். உபரி மாநிலத்தில் அரிசி இந்த
விலைக்கு வந்துவிட்டது என்றால் அதற்குப் பொறுப்பு மாநில
அரசுதான்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஆகஸ்ட் 17

நமது பக்கத்து ஆந்திர மாநிலமும் உபரி மாநிலம்தான் அங்கே கூட இவ்வளவு மோசம் இல்லை. படி அரிசி 3 ரூபாய்க்குக் கிடைக்கிறது. நம்மைவிட கொஞ்சம் அதிக உபரி மாநிலமாக அது இருக்கலாம்.

அடுத்து இந்தியாவிலேயே எப்போதும் ஒரு சாதகமான சூழ் நிலையில் இருந்துவருவது நம்முடைய மாநிலம்தான். பூகோள ரீதியிலும் சரி, கலாச்சார ரீதியிலும் சரி, அரசியல் ரீதியாகப் பார்த்தாலும் சரி—பெரும் வெள்ளம்—பெரும் வறட்சி என்பது போன்ற பாதகமான விளைவுகள் இல்லாமல்—ஒரிசாவில் 3 ஆண்டு வறட்சி. குஜராத்தில் 5 ஆண்டு வறட்சி—என்பனபோல இல்லாமல் ஒரே நிலையில் இருப்பது தமிழகம்தான். அதே அளவிலே அரசியல் ரீதியாகப் பார்த்தாலும் கூட, இங்கே

(பிற்பகல் 2-00)

யிருக்கிற அரசியல் கட்சிகள், இங்கேயிருக்கிற ஆட்சி எடுக்கின்ற முற்போக்கான நடவடிக்கைகளை ஆதரிக்கின்ற அளவில், ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவில் இருக்கிறார்களே தவிர, செய்யக் கூடாது என்று சொல்வதாக எனக்குத் தெரியவில்லை. உணவு தானியத்தைப் பொறுத்தவரையிலே இன்றிருக்கிற நிலைமையிலே 5 இலட்சம் டன்னுவது பஃப்பர் ஸ்டாக் வைத்திருக்கவில்லை என்றால், எதிர்காலத்திலே சமாளிக்க முடியாது.

போன தடவை சொன்னார்கள், அடுத்து உணவு தானிய வர்த்தகத்தை அரசு எடுத்து நடத்தும் என்று. அரசு ஏற்று நடத்தினால்தான் அந்த நிலையை நாம் போக்கமுடியும், கட்டுப் படுத்த முடியும். இன்றைக்கு பதுக்குகிறார்கள். என் பதுக்கு கிறார்கள்? ஆரம்ப விலைக்கும் கடைசி விலைக்கும் பெரிய வித்தி யாசம் இருக்கிற காரணத்தால்தான் பதுக்குகிறார்கள் ஆகவே, ஆரம்ப விலையும், கடைசி விலையும் ஒரே மாதிரி இருக்க நாம் நடவடிக்கை எடுத்தால், பதுக்கலுக்கு வேலையே. வாய்ப்பே கிடையாது. ஆகவே, ஆரம்ப விலையையும், கடைசி விலையையும் ஒரு சீராக, ஒரே நிலையில் இருக்கச் செய்வதானால், அரசு மொத்த வர்த்தகத்தை எடுத்துக்கொள்வதைத் தவிர வேறு வழியே இல்லை.



1974 ஆகஸ்ட் 17] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

குஜராத்திலே பெரிய போராட்டம் நடந்து அரசு கவிழ்ந்து விட்டது. மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் உணவு அமைச்சராக இருந்தாரா, அல்லது அதை விட்டு விட்டாரா அவ் வமயம் என்று தெரியாது; அவர்கள் பேசியதாக பத்திரிகையிலே பார்த்தேன். 'எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் எங்களை ஏமாந்த வர்கள் என்று எண்ணிக்கொண்டு, உணவு வர்த்தகத்தை எடு எடு என்று சொல்கிறார்கள். நாங்கள் ஏமாந்தவர்கள் என்று எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் கணித்துவிடலாம். நாங்கள் உணவு வர்த்தகத்தை எடுத்து, அதன் மூலம் அரசைக் கவிழ்த்துவிடலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள். அப்படி அதில் அரசு மாட்டிக் கொள்ளாது. ஆகவே, அரசு உணவு வர்த்தகத்தை எடுக்காது' என்று பேசியிருக்கிறார்கள். பத்திரிகையிலே வந்தது. குஜராத் திலே அதை எடுத்து நடத்தியதால் ஏற்பட்ட விளைவைப்பார்த்து, அதை எடுக்காதது புத்திசாலித்தனம் என்று நம்முடைய அமைச்சர்கள் எல்லாம் கருதுகிறார்கள். உணவு வர்த்தகத்தை அரசு எடுத்து நடத்தியிருந்தால் . . .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** எடுத்து நடத்துகிறோம். எல்லா உணவுதானியங்களையும் கட்டுப்படுத்தி வைக்கிற அதிகாரம் எங்களிடம் இருந்தால்தானே அதனை எடுத்து நடத்துவதில். . .

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** உணவு வர்த்தகத்தை நாங்களே செய்கிறோம், எங்களிடம் இன்னின்ன அதிகாரங்கள் கொடுங்கள் என்று கேட்டால் நிச்சயம் மத்திய அரசினர் கொடுப்பார்கள். ஒரே மண்டலமாக உணவு மண்டலத்தை ஆக்க மத்திய அரசு உத்தேசித்து, அதை நீங்கள் எதிர்த்தவுடன், உங்களது கருத்தை ஒத்துக்கொண்டார்கள். நீங்கள் கூடாது என்று சொன்னவுடன் அதை ஏற்றுக்கொண்டார்களா, இல்லையா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** வேர்க்கடலைக்கு நாங்களா லெவி போடுகிறோம்? நாங்கள் போடவில்லை, வியாபாரி களாகவே நாங்கள் லெவி கொடுக்கிறோம் என்று ஒத்துக் கொண்டார்கள். அதனால், அவர்களாகவே ஒத்துக்கொண்டு கொடுத்ததால், ரூ. 9 என்றிருந்த கடலை எண்ணெய் விலையைக் குறைத்திருக்கிறோம். அதுபோல் சிறுதானியங்களுக்கு

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 ஆகஸ்ட் 17

25 சதவிகிதம் லெவி போட்டு, அதை அவர்கள் ஒத்துக் கொண்டிருந்தால் நிச்சயமாக விலை ஏறியிருக்காது. கேட்டோம், அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. லெவி ஏன் போடக் கூடாது என்று நீங்கள் கேட்கிறீர்கள்? கடலையில், வியாபாரிகளாகவே ஒத்துக்கொண்டார்கள். அதனால்தான் சமாளிக்க முடிந்தது. மாநில சர்க்கார் உத்தரவு போட்டு மத்திய சர்க்கார், இதைத்தான் செய்ய வேண்டுமென்று அவர்களாகவே சொல்லி, இந்தச் சிறுதானிய வியாபாரிகளும் சரண்டர் செய்ய முடியாது என்று சொன்ன காரணத்தால், இந்நிலை ஏற்பட்டது. கடலையிலே எங்களிடம் பொறுப்பு இருந்த காரணத்தால், விலையைக் குறைத்து இருக்கிறோம். சிறு தானியங்களுக்கும் அந்த விலையைக் கொடுத்திருந்தால். . .

**திரு. ஆலடி அருணா:** பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த சமயத்தில், வெல்லத்தின் விலை ஏறியது. உடனே அண்ணா அவர்கள் மத்திய அரசின் ஆணையை எதிர்த்து, வெல்லத்தைத் தமிழ்நாட்டிலிருந்து வெளியேற்றக் கூடாது என்று சொன்னார்கள். அந்த மாதிரி உத்தரவு போடுவதற்கு என்ன?

**மாண்புமி டாக்டர் மு. கருணாநிதி:** அந்த உத்தரவு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் செல்லாது என்று ஆகிவிட்டது. சொன்னால் முழுவதும் சொல்ல வேண்டும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இன்றைக்கு இருக்கிற நிலைமையைப் பார்க்கும் நாம் அடுத்து வரும் ஆண்டுகளிலே நல்ல நிலைமை இருக்கச் செய்ய வேண்டுமானால், துணிந்து மொத்த வர்த்தகத்தையும் எடுத்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. நீங்கள் அப்படி முடிவெடுத்தால், நிச்சயமாக மத்திய அரசு அதற்குத் தயாராக இருக்குமே தவிர . . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இந்த வியாபாரத்தை அரசு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று திரு. மாரிமுத்து அவர்கள் பேசுகிறார்கள். மத்திய அரசாங்கம் கோதுமையை எடுத்துவிட்டு, கைவிட்டு விட்டதே அதற்கு என்ன காரணம்?



1974 ஆகஸ்ட் 17]

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** அங்கேயிருக்கிற பிற்போக்காளர்கள். இங்கே பிற்போக்காளர்கள் இல்லை. அரசியல் ரீதியிலே எதிர்க்கட்சிகள் பயம் இங்கே கிடையாது, அதற்காகப் போராட்டம் கிடையாது. எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் . . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பாராளுமன்றத்திலே 500 பேரில் கிட்டத்தட்ட 400 பேரை தன் பக்கத்திலே வைத்துக் கொண்டிருக்கிற சோஷலிசப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எந்தப் பிற்போக்காளர்களுக்காகப் பயந்தார்கள்? ஆக, பாராளுமன்றத்திலே இருப்பவர்கள் எல்லாம் பிற்போக்காளர்களா? அல்லது இந்திரா காங்கிரஸ் கட்சியிலே பிற்போக்காளர்களா? அல்லது இந்திரா காங்கிரஸ் கட்சி வேறு பிற்போக்காளர்களுக்காகப் பயந்ததா?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேச்சை திசைதிருப்ப வேண்டாம். இந்திரா காங்கிரசிலே இருக்கிற பிற்போக்காளர்கள் என்று சொல்லவேண்டாம். அந்த மாநிலங்களிலே அரசியல் ரீதியிலே எதிர்க்கிற எதிர்க்கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள், தமிழ்நாட்டிலே இல்லை. இங்கே நல்ல சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே, இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இங்கே பேசியபொழுது, தங்கள் கையிலே போதிய உணவு இருக்கிறது, 62,000 டன் இருக்கிறது, இதைவிடப் பயப்படத் தேவையில்லையென்று கூறியிருக்கிறார்கள். இதைவிடப் புத்திசாலித்தனமாக அன்றையதினமே தஞ்சை மாவட்டத்திலே யுள்ள கட்டுப்பாட்டைத் தளர்த்தியபொழுது யோசித்திருந்தால், இவ்வளவு பெரிய சிரமம் வந்திருக்காது. முன்னாலே பேசியதை இங்கே பேசவில்லை. உணவுத் துறையினுடைய கருத்து, தஞ்சையிலேயிருந்து வெளியிலே போனது 19,000 டன் என்பதாகும். அது சரியானது அல்ல. இதற்குப் பதில் சொல்லவேண்டும் உணவு அமைச்சரவர்கள். தஞ்சை மாவட்டத்திலே 13 இலட்சம் ஏக்கர் நஞ்சை உள்ளது. அங்கே விளையக்கூடிய விளைச்சல், கன்சர்வேடிவாக எடுத்தால்கூட, 15 இலட்சம் டன்னாகும். அதில் மார்க்கெட்டபிள் அரிசி 6 இலட்சம் டன்; நெல்லாக இருந்தால்

9 இலட்சம் டன். இது வெளியே போகாமல் கட்டுப்படுத்தி செய்து வைத்திருந்தோம், எல்லோருக்கும் தெரியும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** வெளியே போகக்கூடாது என்று தடுக்கப்படவேண்டும் என்ற தடையே கிடையாது. லெவி கொடுத்துவிட்டு வெளியே போகலாம் என்பது உத்தரவு.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** போட்ட 1 இலட்சம் லெவிக்காக 25 சதவிகிதம் வாங்கியதும்—வெளியே போனதற்காக வந்த லெவி.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** அது நல்லது என்று சொல்கிறேன். கோவாபரேடிவ் சொஸைட்டிகளுக்கு இன்றைக்கு பர்மிட் கொடுத்திருக்கிறோம். அப்படியே அதிகம் கொடுத்தோம் என்று சொன்னால் 1 இலட்சம் டன். பாக்கி 8 இலட்சம் டன் அங்கே தானே இருந்திருக்கவேண்டும். இல்லை 7 இலட்சம் டன் என்றால் கூட, அதாவது அங்கேதானே இருந்திருக்க வேண்டும். அரசு கொள்முதல் செய்தது 2 இலட்சம் டன்—இதர மாவட்டங்களில் லெவி வைத்ததோடு சேர்த்து. அந்த 2 இலட்சம் டன்னையும் அந்த மாவட்டத்திலேயே கொள்முதல் செய்ததாக வைத்துக் கொண்டாலும் 7 இலட்சம் டன்னிலே 2 இலட்சம் போக மீதி 5 இலட்சம் இருக்கிறது. அதிலே 2 இலட்சம் போனாலும், மீதி 3 இலட்சமாவது அங்கே மீதம் இருந்திருக்கவேண்டுமே. அதிலே 1 இலட்சம் வேறு எதற்காவது போனாலும், மீதம் 2 இலட்சம் டன்னாவது இருந்திருக்க வேண்டாமா? கொள்முதல் போக, மற்ற எல்லாவற்றுக்கும் ஒதுக்கியது போக, கட்டுப்பாட்டைத் தளர்த்திய நேரத்தில், மிகக் குறைந்தபட்சம் 2 இலட்சம் டன் இருந்திருக்க வேண்டாமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நீங்கள் புள்ளி விவரத்தோடு பேசவேண்டும். நாங்கள் மார்க்கெட்டிங் கமிட்டி எடுத்திருக்கிற புள்ளி விவரத்தைக் கொடுக்கிறோம். இருக்க வேண்டுமே, போக வேண்டுமே என்று சொல்வது தப்பு. புள்ளி விவரத்தோடு சொல்ல வேண்டும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** நான் புள்ளி விவரத்தோடுதான் சொல்கிறேன். 15 இலட்சம் டன் விளைந்தது. அதில் மார்க்கெட்டின் சர்பிளஸ் 9 இலட்சம் டன். 1 இலட்சம் டன் விலைக்



குப்போனாலும் மீதி 8 இலட்சம் டன் உள்ளது. அதிலே பிளாக் மார்க்கெட்டில் 1 இலட்சம் டன் போனால், மீதி 7 இலட்சம் டன் இருக்கிறது. அதில் கொள்முதல் 2 இலட்சம் டன் இருக்கிறது. மீதி 5 இலட்சம் டன் இருக்கிறது. அதிலும் 3 இலட்சம் டன் போனாலும் மீதி 2 இலட்சம் டன்னாவது இருக்கவேண்டாமா? 2 இலட்சம் டன் இருக்க வேண்டிய நேரத்தில், 19,000 டன்தான் என்றால், எந்தவிதமான கருத்துக்கும் ஒத்துவராதது அது. லெவி மூலம் சர்க்கார் கணக்கை எடுத்துக் கொள்ளுங்களேன். வியாபாரிகள் உங்களை மோசடி செய்ததைச் சொல்லுங்களேன். கள்ளக் கடத்தல்காரர்கள் மோசடி செய்து விட்டார்கள். அரசாங்கத்தை ஏமாற்றி விட்டார்கள். பல பேர் வெளி மாநிலத்திற்குப் போய் விட்டன என்று சொன்னார்கள். நானும் அப்படித்தான் கருதினேன். ஆனால், மதிப்பிற்குரிய மனலி அவர்கள் வியாபாரிகள் கையில்தான் இருக்கிறது என்று சொன்னார்கள். நான் அதில் உண்மை இருக்குமென்று இப்பொழுது நினைக்கிறேன். புகுந்து எடுங்களேன், யார் உங்கள் கைகளைப் பிடிக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** புகுந்து எடுக்க வேண்டிய இடங்களிலெல்லாம் எடுத்திருக்கிறேன். எங்கே புகுந்து எடுக்க வேண்டும்? இருந்தால், தெரிந்த இடத்தைச் சொல்லுங்கள்.

'நாங்கள் இருக்கிறது என்கிறோம், நீங்கள் இல்லையென்று சொல்கிறீர்கள்' என்று சொல்வதை விட, எங்கெங்கு இருக்கிறதோ, யார், யாரிடம் இருக்கிறதோ அதைச் சொல்லுங்கள். யார், யார் வியாபாரிகளோ அவர்கள் இவ்வளவுதான் வைத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு போட்டு, 15 நாளைக்கு இவ்வளவு தான் வைத்திருக்க வேண்டுமென்று உத்தரவு போட்டு, 75 டன்னுக்கு மேல் ஒருவரும் வைத்திருக்கக் கூடாது என்று சட்டம் போட்டு, அதிகாரிகள் எல்லாம் பணிபுரிந்து வருகிறார்கள். நீங்கள் குத்துமதிப்பாகச் சொல்லாதீர்கள்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** குத்துமதிப்பாகச் சொல்லவில்லை, கணக்குக் காட்டித்தான் சொல்கிறேன், உணவு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அவர்கள் எந்தக் கணக்கைக் காட்டியிருக்கிறார்கள்? விளைந்த நேரத்திலே கிடைக்கும், விளையாத நேரத்திலே கிடைக்கவில்லை . . . .

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** அமைச்சர் அவர்கள் இரண்டில் ஒன்றை ஒத்துக் கொள்ளவேண்டும், ஒன்று கேரளத்திற்குப் போய் விட்டது என்று ஒத்துக்கொள்ள வேண்டும், இல்லையென்றால் பதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல வேண்டும். வெளியேயும் போகவில்லை, இங்கேயும் இல்லை என்றால் ஆகாயத்திலா போய் விட்டது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இல்லை, இல்லை என்று ஏன் அவர்கள் கற்பனையில் சொல்லவேண்டுமென்று தெரியவில்லை. அவர்கள் வியாபாரிகளுக்குச் சாதகமாகப் பேச வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** நான் வியாபாரிகளுக்குச் சாதகமாகப் பேசவில்லை. தவறு என்று தெரிந்தவுடனே அந்தத் தவறை உணர்ந்து அமைச்சர் வருத்தம் தெரிவித்து இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நாங்கள் ஏன் வருத்தம் தெரிவிக்கவேண்டும்? நாங்கள் எந்தத் தவறையும் செய்யவில்லை, நீங்கள் பண்ணின தவறை மறைக்க அநியாயமாக எங்கள்மீது குறைசொல்கிறீர்கள். . . .

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** நான் அநியாயமாக குறை சொல்வதில்லை; அடிக்கடி இங்கேயே சொல்லியிருக்கிறேன், அமைச்சர் அவர்கள் மிக யோக்கியமானவர்கள் என்று. நான் எழுப்பிய விவாதத்திற்குப் பதில் சொல்லவில்லை என்றால் என்ன செய்வது? அரிசி விலை மிகவும் அதிகமாக ஏறியிருக்கிறது. . . .

**திரு. கோவை செழியன்:** எனக்கு ஒரு சந்தேகம் . . . .

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** முடித்துவிடுகிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மாரிமுத்து அவர்கள் இங்கே பார்த்து பேசவேண்டும், பின்னாலே பார்த்தால் பலரும் எழுந்து நிற்பார்கள், இங்கே பார்த்துப் பேசுங்கள்.



**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இந்த அரசு தவறு செய்துவிட்டது என்ற உண்மையை மறைக்கமுடியாது. இப்பொழுது இருக்கிற 62 ஆயிரம் டன்னை வைத்து இந்த அரசாங்கம் சமாளித்தால் எங்களுக்கு மகிழ்ச்சிதான். அதற்கு உணவு அமைச்சர் முயற்சி யெடுக்கவேண்டும். ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களிலேயே நிலைமை மோசமாக இருக்கிறது, இருக்கும் என்பது தெரியும் என்று முதலமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறையின் மூலமாக லேண்ட் டெவலப்மெண்ட் பேங்க் மூலமாக 17 கோடி ரூபாய் கொடுக்க வேண்டிய கடன்கள் பயன்படுத்தப்படவில்லை. 16 கோடி அப்படியே இருக்கிறது, ஒரு கோடிதான் கொடுத்திருக்கிறீர்கள், அதை முன்னாலேயே கொடுத்திருந்தால் 3 மாதத்திலே நெல் வந்திருக்குமே, 5 மாதம் 6 மாதங்களிலே கேணியை வெட்டி மகசூல் வந்திருக்குமே, நெல் வந்து சேர்ந்திருக்குமே. . . .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** காலம் இல்லை, பிரச்னைகளைக் கிளப்பியிருக்கிறார்கள். அதற்காக ரூல் 41-ன் கீழ் நோட்டீஸ் கொடுத்தால் நான் விளக்கமாகப் பதில் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** எந்த அளவிற்கு அரசு விழிப் புணர்ச்சியோடு இருந்திருக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். பற்றாக்குறையாக உள்ள பகுதிகளில் நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எந்தப் பகுதி பற்றாக்குறை பகுதியில்லை? தமிழ்நாடு பூராவும் பற்றாக்குறைதான், ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர் களும், உணவு அமைச்சர் அவர்களும் தமிழ்நாடு பூராவும் பற்றாக் குறையாக இருக்கும் நிலை இருப்பதால் எல்லா இடங்களிலும் நியாய விலைக் கடைகளைத் திறந்து குறைந்த வருமானக்காரர் களுக்கும் கூலிவேலை செய்கிறவர்களுக்கும் அரிசி கிடைக்கச் செய்ய வேண்டும். ஏதோ திறந்து வைத்து 10 மூட்டை போடுவது பிறகு மூடுவது என்று இல்லாமல் இப்போது 3 அவுன்ஸ் என்று போடுகிறார்கள். 3 அவுன்ஸ் என்று உங்களுக்குப் பெயர் வரக் கூடாது. ஆகவே போதுமான அளவுக்குப் போடுவதற்கு ஏற்பாடு களைச் செய்யவேண்டும். பதுக்கல் இருக்கிறது என்று சொல்கி றார்கள், அதை வெளியே கொண்டுவரவேண்டும்.

உர விநியோகத்தைப்பற்றிப் பேசுவதற்கு நிறைய விஷயங்கள் இருந்தாலும் உறுப்பினர்கள் எல்லாம் பசிக்கிறது பசிக்கிறது என்று சொல்வதால் அவர்களுடைய சாபத்தை நான் வாங்கிக் கொள்ள விரும்பவில்லை, விரைவில் சுருக்கமாகச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

உர விநியோகம் தனியார் துறையினருக்கும் அரசுத் துறையினருக்கும் இரண்டுக்கும் கொடுக்கப்பட்டிருப்பது ஒன்றாக்கப்பட வேண்டுமென்பது என்னுடைய கருத்து, நீங்களே அதில் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் இருப்பதால் நான் அதற்கு மேலே ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. கார்டுதாரர்களுக்குக் கொடுக்க தனியார் துறையில் உள்ளவர்கள் மறுக்கிறார்கள், அவரவர்கள் இஷ்டப்போல் தருகிறார்கள் என்ற குறையைப் போக்க வேண்டுமென்றால் யார் யார் லைசென்ஸ் வைத்திருக்கிறார்களோ அவர்கள் இத்தனை பேர்களுக்குக் கட்டாயம் கொடுத்தாக வேண்டுமென்ற முறையிலே ஒரு உத்தரவைப் போட்டுவிட்டால் தவறு செய்வதற்கு வழி இருக்காது என்று கூறி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் என்னுடைய கருத்துக்களை நீங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையிலும், நீங்கள் உணரத்தக்க வகையிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன் என்று கருதுகிறேன். ஆகவே, சபையில் உள்ள எல்லோரும் எந்தக் கட்சித் தரப்பினராலும் சரி, மனச்சாட்சி எல்லோருக்கும் இருக்கிறது, இல்லையென்று நான் சொல்லவில்லை, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. பேரவை முன்னுள்ள கேள்வி:

"உணவுப் பிரச்சினையைச் சமாளிக்க அரசு தவறியதால் மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் இயங்கும் அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையை இப் பேரவை தெரிவிக்கிறது."

**தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டது.**



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று 19—8—1974 ஆம் நாள் திங்கட்கிழமையன்று காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-16 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

86. Notification issued with G.O. Ms. No. 630, Rural Development and Local Administration, dated the 16th March 1974, in regard to declaration of the areas forming the Thiruvarur Local Planning Area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

87. Notification issued with G.O. Ms. No. 154, Labour and Employment, dated the 7th March 1974, in regard to permanent exemption of the factory 'South India Viscose Limited, Sirumugai, Coimbatore district, from the provision of sub-clause (i) of clause (*a*) of sub-section (2) of section 5 of the Tamil Nadu Industrial Establishments (National and Festival) Holidays Act, 1958. [Laid on the table of the House under section 12 (3) of Tamil Nadu Industrial Establishments (National and Festival) Holidays Act, 1958 (Tamil Nadu Act XXXIII of 1958).]

88. Notification issued with Memo. No. 37807/AMI/73-4, Agriculture, dated the 6th September 1973, in regard to appointment of member to the Thanjavur Market Committee. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

### *B. Reports, Notifications and Other Papers.*

* 35. Annexure to the Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Third Amendment Bill, 1974 (L.A. Bill No. 28 of 1974).

* 36. Annexure to the Madurai City Municipal Corporation (Amendment and Extension of Term of Office) Second Amendment Bill, 1974 (L.A. Bill No. 29 of 1974).

* 37. Annexure to the Madras City Municipal Corporation (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 30 of 1974).

* 38. Annexure to the Tamil Nadu Local Authorities' Laws (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 31 of 1974).

* 39. Annexure to the Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 36 of 1974).

* 40. Annexure to the Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1974 (L.A. Bill No. 32 of 1974).

* 41. Annexure to the Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 33 of 1974).

* 42. Annexure to the Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1974 (L.A. Bill No. 35 of 1974).

*43. Annexure to the Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 34 of 1974).

---

* Despatched to Members on 14th August 1974.



## இணைப்பு.

(561-ம் பக்கத்தில் 139 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

(a) Minister for Labour attended the meeting of the Labour Ministers' Conference at New Delhi on the 24th November 1973, accompanied by the Secretary to Government, Labour and Employment Department and the Commissioner of Labour. After discussing some subjects, the meeting was adjourned to the 16th and the 17th December 1973. Minister for Labour could not attend this adjourned meeting of the Labour Ministers' Conference. The Secretary to Government, Labour and Employment Department and the Commissioner of Labour attended the meeting.

(b) the details of the decisions taken at the conference are as follows :—

*Item 1.—Report of the Committee on Automation—*

The Conference recommended acceptance of the recommendations of the Committee on Automation with the following modifications :—

(i) Where there is disagreement between the management and the employees' representatives on the issue of automation at the establishment level, the matter would be referred to the appropriate Government instead of a National Bipartite as suggested by the Committee.

(ii) Where there is agreement between the parties, the agreement would be communicated to the appropriate Government. If the Government does not raise any issue relating to the agreement within a period of three months, the parties would be free to proceed with the implementation of the terms of the agreement.

(iii) In the case of introduction of automation in multi-unit establishments spread over more than one State the Central Government would be the appropriate Government.

(iv) The Central Government would draw up guidelines as regards the areas in which automation could be introduced and the procedure to be adopted.

*Item 2.—Welfare Cess Fund for Beedi Industry—*

(i) The principle of setting up of a Welfare Cess Fund for Beedi Workers was accepted. Cigar workers will be excluded.

(ii) It was agreed that, to begin with the Welfare Cess Fund should be financed by the levy of a welfare cess of 25 paise per kilogram of tobacco issued by the Central Excise authorities for the manufacture of beedies.

(iii) The levy could be collected by the Central Excise Department and the amount distributed to various States on the basis of the number of beedi workers employed in each State. As a number of State Labour Ministers doubted the accuracy of the estimates of the number of workers employed in the Beedi industry, it was agreed that the Ministry of Labour will collect the necessary information on the employment of beedi workers and circulate the same to the State Governments.

(iv) As regards the utilisation of moneys from the Fund for the provision of various amenities, it was decided that each State Government will determine its own priorities.

*Item 3.—Machinery for the determination of wages—*

(i) As there was dissatisfaction over the working of Wage Boards, it was agreed that it would be better to settle wage disputes through bipartite or tripartite wage negotiation committees rather than through Wage Boards.

(ii) It was agreed that the Payment of Wages Act, 1936, should be amended to raise the existing wage limit for the Act to be applicable from Rs. 400 per mensem to Rs. 500 per mensem.

(iii) It was agreed that a small Committee of officials may be set up to study the all-India pattern of wages in the smaller units of engineering industry.

*Item 4.—Safety in Industry (Factories)—*

The Conference expressed concern at the growing rate of accidents in industrial units and supported the need for taking urgent preventive and remedial measures suggested in paragraph 2 of the Memorandum. Particular mention was made of the need for presentation of annual review to the State Assembly by the State Labour Minister and for stepping up the expenditure on safety to atleast the level of the licensing fees collected.



*Item 5.—Maximum utilisation of employment service by the State Governments in the matter of recruitment of staff :—*

(i) Some State Governments had already issued instructions that all recruitment by Offices under them including local bodies, quasi Government Institutions and Statutory Bodies under their control should made through Employment Exchanges except where it was made through Public Service Commissions. A State Government had even instructed its Treasury Officers not to pass the first salary bill of new employees unless it was certified by the Head of Office that recruitment had been made through the Employment Exchange. It was agreed that those State Governments who had not yet issued instructions in this regard should do so as early as possible.

(ii) It was urged that the Central Government should issue similar instructions to the nationalised Banks, P. & T. Department, L.I.C. and other similar Corporate bodies.

(iii) It was generally agreed that, in order to eliminate the element of favouritism and patronage, recruitment through Employment Exchanges should be made compulsory in the private sector also by amending the Employment Exchanges (Compulsory Notification of Vacancies) Act, 1959. If this was interpreted to impinge on the fundamental rights of the private employer, the Conference felt that the liberty enjoyed by the private sector in this regard eroded democratic justice and that the matter should be examined in detail in consultation with the Ministry of Law with a view to bringing the private sector on par with the public sector through an amendment of the Constitution, if necessary.

(iv) In order to make compulsory recruitment through Employment Exchanges possible both in the public and private sectors :—

(*a*) an Employment Exchange should be set up in every district of the country;

(*b*) every Employment Exchange should be equipped to test the aptitude suitability of the job seekers ;

(*c*) a job seeker should have the right to get himself registered in any Employment Exchange in the country irrespective of his residence ;

(*d*) a large percentage of those on Live Register of Employment Exchanges were those who were already employed

er were students. There were cases of multiple registrations also. Live Register statistics did not, therefore, reflect the unemployment situation in the country. It was, therefore, suggested that in each State some of the Employment Exchanges could be reserved for the registration of persons who registered themselves for better jobs or atleast separate registers could be maintained for them. The Employment Exchange Manual also required to be revised;

(v) The Special Employment Exchanges for the handicapped were not functioning well. Some formula or scheme should be evolved to examine the cases of such persons and suitable jobs given to them on a preferential basis. There was also need for giving preference to Scheduled Castes/Scheduled Tribes and other economically backward or weaker sections of the community and minorities in the matter of registration and placings. The matter should be examined and necessary steps taken to fulfil this need.

(vi) The practice followed by some States of giving overriding preference to the "sons-of-the soil" in the matter of employment also came up for discussion. This discussion was, however, not conclusive.

*Item 6.—Extension of Employees' State Insurance Scheme —Recommendations of the Committee on perspective planning.—*

(i) The recommendations of the Committee on Perspective Planning, which was set up by Government to formulate the prespective plan for the future development of the Employees' State Insurance Scheme, were considered. It was agreed that in the last phase, the Employees' State Insurance Scheme should be extended to smaller factories and shops, commercial and allied establishments and that State Governments would collaborate with the Employees' State Insurance Corporation in this limited extension. Some Labour Ministers, while welcoming the extension, did not agree with the Corporation's contention that such extension would not entail additional expenditure for the State Governments towards the cost of medical benefits and suggested that any additional expenditure on this account should be borne by the Central Government.

(ii) The second phase of the extension of the Scheme to mines and plantations was agreed in principle though it was



recognised that extension of the Scheme to these sectors which were widely scattered would take time. As workers concerned were already entitled to some form of medical care under other enactments, the Scheme would require certain modifications in consultation with the State Governments and other interests.

(iii) With regard to the recommendation of the Committee to enhance the scale of benefits under the Scheme by raising the yardstick for hospital accommodation from 4 to 7 beds per 1000 family units and the duration of sickness benefit from 8 to 13 weeks, and financing of these additional benefits through a recurring subsidy from the Central Government and enhancement of the State's share of the cost of medical benefits from 1/8th to 1/4th, most of the State Labour Ministers expressed their inability to accept increased financial responsibility and suggested that the money needed for the purpose should be provided by the Central Government atleast for the Fifth Plan period. As the objective was a desirable one, it was agreed that the State Labour Ministers would hold consultations with their respective Finance Departments and the State Planning Cells with a view to examining the possibility of making provision for this modest development of health insurance Scheme in Fifth Plan.

*Item 7.—Setting up of a Central Gratuity Fund.—*

Several suggestions were made during discussions such as :—

(i) a Central Gratuity Fund should be set up ;

(ii) a Gratuity Fund should be set up at the State level;

(iii) a Scheme of Insurance should be introduced for the purpose ; and

(iv) the employer should be required to credit the amounts to the credit of the employees in the Scheduled banks.

After further discussion it was agreed that a Committee of Experts, the Composition of which would be announced by the Ministry of Labour, should be set up to examine the various proposals and recommend a suitable scheme.

*Items 8.—Extension of the workmen's compensation Act to Agricultural Labour.—*

(i) The extension of the Workmen's Compensation Act to hazardous work in agriculture was accepted in principle.

இணைப்பு

(ii) It was agreed that a standard list of employments of hazardous nature in agriculture should be drawn up by the Ministry of Labour in consultation with the Ministry of Agriculture and the State Governments and that the State Governments would extend the provisions of the Act to such employments.

(iii) It was agreed that the definition of " workman " in the Act may have to be amended so as to cover all types of workers and ensure payment of compensation to any person working during and in the course of employment.

(iv) While some Ministers suggested that all workers should be compensated for fatal cases due to accidents and poisoning caused by pesticides, etc., others suggested that the interests of small farmers might have to be protected in cases of snake bites and other poisoning.

*Item 9.—Shortage of supply of Electricity and its consequent effect on lay-off and loss in production.—*

(i) Because of the frequent lay-off and the consequent harship caused to workmen by the power cut in various States, there have been representations from the workers in recent months that the rate of lay-off compensation under the Industrial Disputes Act, 1947, which is at present equal to 50 per cent of the total of the basic wages and dearness allowance, should be enhanced. The Conference agreed that the Industrial Disputes Act, 1947, should be amended to raise the rate of compensation from 50 per cent to 60 per cent in all cases of lay-off.

(ii) At prsent the lay-off compensation is payable to those workers who have actually worked under the employer for not less than 240 days during a period of twelve calendar months preceding the date with reference to which the calculation is to be made. It was agreed that it would now be made available to those workers who had worked for 200 days, not necessarily continuous, during a period of preceding twelve calendar months.

(iii) For the purpose of lay-off compensation the Industrial Disputes Act, 1947 applies to industrial establishments employing 50 or more workmen on an average per working day in the preceding calendar month. It was agreed that the scope of the Act should be widened by bringing within its purview factories and establishments (including Plantations) employing 20 or more workmen.



*How to use the Index.*

The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc. are consolidated under the said main headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the main heading " Papers laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the main heading " Chair ".

A list of abbreviations used in tht Index is given below :—

| | | |
|---|---|---|
| A.M.\|Ad. Motion | | Adjournment Motion. |
| C.A.St. | .. | Announcement. |
| B.O.H. | .. | Business of the House. |
| C.A. | .. | Calling Attention to a matter of urgent public importance. |
| C.A. (St.) | .. | Calling Attention Statement. |
| Consid. | .. | Consideration stage of a Bill. This stage includes— |

(i) Motion to refer to Select|Joint Select Committee.

(ii) Amendment to refer to Select|Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select|Joint Select Committee.

(v) Amendment to recommit to Select|Joint Select Committee, etc.

| | | |
|---|---|---|
| Consid. Cl. | .. | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | .. | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | .. | Discussion for short duration on an urgent matter of administration. |
| D.S.G. | .. | Demands for Supplementary Grants. |
| G.A. | .. | Governor's Address. |
| G.D. | .. | General Discussion. |
| H.A.H. Dis.\|H.H.D. | .. | Half-hour Discussion. |
| Int., | .. | Introduction stage of a Bill. |
| L.A. | .. | Legislative Assembly. |
| L.C. | .. | Legislative Council. |
| M. | .. | Motion. |
| P.M. | .. | Privilege Motion. |
| R\|Res. | .. | Resolution |
| St. | .. | Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

ELEVENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

12th, 13th, 14th, 16th and 17th August 1974.

VOLUME LVII (Nos. 1 to 5)


PAGES

ABDUL JABBAR, Thiru V. M.—

No Confidence Motion against the Ministry (M) .. 394—402

ACCIDENTS—

Madras City, number of road ... ... ... 434—439

Traffic accidents in Madras City, Survey ... ... 439

ACTS—

Motor Vehicles Act, amendment ... ... 39—40

ADITANAR Thiru Si. Pa.—

No Confidence Motion against the Ministry (M) .. 383, 384, 590, 594, 595

AGRICULTURE—

Tenancy rights. registration in Ambasamudram Taluk 141-142

ALAGAMUTHU Thiru T. P.—

